மறைந்த காட்சிகள்

அனைத்திந்திய நூல் வரிசை

மறைந்த காட்சிகள்

பகவதிசரண் வர்மா

தமிழாக்கம் :

டாக்டர் ந. வீ. ராஜகோபாலன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
புது தில்லி

பிப்ரவரி 1972 (மாகா 1893)

விலை : 8-50

விநியோகிப்பாளர் :
பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1

Original Title : BHOOLE BISRE CHITRA *(Hindi)*

வெளியிட்டவர் : டைரக்டர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா,
ஏ-5, கிரீன் பார்க், புது தில்லி—16
அச்சிட்டவர் : சுதேசமித்திரன் ஜாப் பிரஸ், சென்னை-2

*

முகவுரை

இந்தியா ஒரு விசாலமான நாடாகும். இந்நாடு பண்பாட்டினால் ஒன்றாக இருந்தபோதிலும், இதனை முன்னேற்றமடைந்த சக்தியுள்ளதொரு நாடாக ஆக்கக் கூடிய ஒற்றுமைத் தளைகளை இன்னும் வலிமைப்படுத்த வேண்டியிருக்கின்றது.

நம்முடைய பாரத நாட்டில் பல மொழிகள் பேசப் படுகின்றன. நம்முடைய நாட்டைப்போல உலகத்தின் மற்றெந்த நாட்டிலும் மொழிகளுடைய எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இல்லை. ஆனால், நமது அண்டையிலுள்ள பகுதியில் வழங்கும் மொழிகளைப் பற்றி நாம் அதிகம் அக்கறைகொள்ளுவதில்லை. அப்பகுதிகளில் இலக்கியம், கலாசாரம்—இவற்றின் செழிப்பைப் பற்றிய அறிவும் நாம் அதிகமாகப் பெற்றிருக்கவில்லை. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய ஐரோப்பிய மொழிகளின் இலக்கியத்தைப் பற்றியும், அம்மொழிகள் வழங்கும் சமுதாயங்களைப் பற்றியும் நமக்குள்ள அறிவை விட நமது நாட்டின் மொழிகளில் உள்ள இலக்கியங்களைப் பற்றிய அறிவு குறைவாயுள்ளது.

நாட்டின் உணர்ச்சி—பண்பாடு ஒருமைப்பாட்டிற்கு நமது நாட்டினர் தேசத்தின் பல மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியப் படைப்புக்களைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அவற்றின் வாயிலாகப் பல்வேறு பகுதிகளில் வழங்கும் வாழ்க்கை முறைகள், மக்களது எண்ணங்கள், நம்பிக்கைகள், நடை—உடை

பாவனைகள் ஆகியவை பற்றியும் அறியவேண்டும்.

உலகத்தின் மேற்குப் பகுதியில் சுதந்திரமான பல நாடுகள் உள்ளன. ஒவ்வொரு நாட்டுக்கும் தனிப்பட்ட மொழி உண்டு. ஆயினும் ஒவ்வொரு நாட்டினரும் மற்ற நாட்டினருடைய இலக்கியத்தைப் பற்றியும், சிந்தனையைப் பற்றியும் அறிந்து வைத்திருக்கிறார்கள். அவ்வாறு நாம் நமது நாட்டு மொழிகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஐரோப்பிய மொழியொன்றில் வெளியாகும் எந்தச் சிறந்த நூலும் உடனடியாக மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகின்றது. இந்தியா ஒரே நாடாகும். ஆனால் நமக்கு நமது அண்டை மொழிகளில் என்ன நடைபெறுகின்றது என்பதைப் பற்றித் தெரிந்துகொள்வதில் அவ்வளவு ஆவல் கிடையாது. இந்நிலைமை மாறிக்கொண்டு வருகிறது என்பது உண்மையே. ஆனால், இந்த மாறுதல் மிகவும் மெதுவாக நடைபெற்று வருகிறது.

இந் நிலையை உத்தேசித்தே, இந்திய அரசு ஒவ்வொரு இந்திய மொழியிலிருந்தும் தற்காலத்திய இலக்கியத்திலிருந்தும் தெரிந்தெடுத்த நூல்களை மற்ற மொழிகளில் மொழி பெயர்ப்பதற்கான திட்டம் ஒன்றை வரைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சாதாரண மக்கள் படித்து மகிழக்கூடிய நூல்கள்—அதாவது கதைகள், புதினங்கள், இன்பமளிக்கும் பயண வரலாறுகள், சுய சரிதைகள் போன்றவை தெரிந்தெடுக்கப்படும். மிகச் சிறந்தவையும், மக்களிடையே பிரபலமடைந்தவையும், அந்தந்த மொழிப்பகுதியில் வாழும் மக்களுடைய நடை உடை பாவனைகளையும், வாழ்க்கை முறைகளையும் சமூக நிலைமையையும் கண்ணாடிபோல பிரதிபலித்துக் காட்டக் கூடியவையுமான நூல்களே இத்தொடரில் தெரிந்தெடுக்கப்படும். இத்திட்டத்தின் வாயிலாக பல வேறு

மொழிகள் பேசுவோரிடையே பரஸ்பரப் பரிவுணர்வும் ஒற்றுமையும் வளருமென நம்புகிறோம்.

வெவ்வேறு மொழிகளின் சிறந்த படைப்புக்களைத் தெரிந்தெடுப்பதும், அவற்றை மொழிபெயர்ப்பதும் எளிய காரியமல்ல. இப்பணியில் எங்களுடைய ஆலோசனைக் குழுவினருக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் நாங்கள் கடமைப்பட்டவராவோம். அவர்கள் வழிகாட்டி, உதவி செய்து, ஒத்துழைப்புத் தராவிடில் இந்த திட்டத்தை வெற்றிப் பலனுடன் செயலாக்குவது முடியாது.

—பாலகிருஷ்ண கேஸ்கர்

சிந்தனைக்கு

ஒரு பெரிய கைத்தடி. அதில் ஒரு வாசகம் பொறிக்கப் பட்டிருந்தது. "இது எதையும் உடைக்கும்." 19-ம் நூற்றாண்டில் ஃபிரான்ஸ் நாட்டுப் புகழ் பெற்ற நாவலாசிரியர் ஹென்றிபால்ஜக் அந்தக் கைத்தடியின் சொந்தக்காரர். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஜெர்மன் நாவலாசிரியர் ஃப்ரான்ஜ் காஃப்கா என்பவர் பால்ஜக்கின் தடியைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவர் ஒரு சிறிய தடியைக் கொண்டுவரச்சொல்லி அதன்மீது 'இந்தத் தடியை எதுவும் உடைத்துவிடும்' என்று செதுக்கச் செய்தார். ஐரோப்பிய நாவலின் பரிணாமத்தை விளக்கும் இரு சின்னங்கள் அந்தக் கைத்தடிகள் என்று திறனாய்வாளர் கூறுகின்றனர். பால்ஜக்கினுடைய நாவல் அந்தப் பெரிய தடி போன்றது. அந்தக் காலத்து மூட நம்பிக்கைகளையும் மலின விகாரங்களையும் தாக்கி உடைத்தெறிந்தது பால்ஜக்கின் நாவல். உண்மையில், இலக்கியத்தின் ஒரு வடிவமாகிய நாவல், எழுச்சி பெற்ற நடுத்தர வகுப்பு மக்கள்தம் இலக்கிய வெளியீட்டிற்குரிய கருவியாக அமைந்ததால், ஆரம்பத்திலிருந்தே சமுதாயத் திற்கும் தனி மனிதனுக்குமிடையேயுள்ள உறவு நிலைகள் பிணக்குகள் பிரச்னைகள் இவைபற்றிப் பேசுவதாக அமைந்துவிட்டது. இதனை நாவலாசிரியர் ஸெர்வாண்டிஸ் கால முதற்கொண்டே நன்கு காணலாம். அதிர்ஷ்டவச மாக ஹிந்தி மொழியில் தோன்றிய முதல் நாவல் "பரீக்ஷா குரு" (லாலா ஸ்ரீநிவாஸ தாஸ் என்பவரால் எழுதப்பெற்றது) விலும் இந்த விழிப்பு நன்கு புலப்படு கின்றது.

II

கதை என்பது பொழுதுபோக்காகப் படிப்பதற்கு மட்டுமே தோன்றியதல்ல. முற்காலத்தில் நன்னெறிகளைப் புகட்டுவதற்கும் கதையைப் பயன்படுத்தினர். ஆனால், தற்கால வாழ்க்கையின் வலிமையை ஏற்றுக்கொண்டு, யதார்த்த நிலையைச் சித்திரிக்கும் அடிப்படையில் சமுதாயத்தின் பல்வித தொடர்புகளின் சூழலில் பிரச்னைகளை நன்கு உணரவும், அலசி ஆராயவும் "நாவல்" வாயிலாகத்தான் முயற்சி செய்ய முடியும். நாவலைப் படிக்கும்போது சுவாரஸ்யமாகவும் இன்பகரமாகவும் இருக்கவே செய்கிறது. எப்போதோ முடிவு கட்டிவிட்ட உபதேசக் கொள்கைகளை இன்றைய நாவல் வலியுறுத்துவதில்லை. மாறாக, பிரச்னைகளை எழுப்பி ஆராயும் தன்மை காணப்படுகிறது. நாவலின் சக்தியினால் கதை ஆசிரியரின் விவேகம், விழிப்பு, நுண்ணிய ஆய்வுத் திறன் இவற்றை நாம் நன்கு காண முடிகிறது. உயிரோட்டமுள்ள பாத்திரப் படைப்பும், நம்பத்தக்க நிகழ்ச்சிக் கட்டமைப்பும், சூழ்நிலை விளக்கமும் இந்தப் புதிய கதை இலக்கியத்தில் இருக்கின்றன. இவற்றிற்கு மையமாக இருக்கின்ற "கருப்பொருள்" நாவல்களை வெறும் கதை நூல்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. "அப்புறம் என்ன நடந்தது?" என்பதிலிருந்து முன்னேறி "ஏன் நடந்தது?", "எப்படி நடக்கிறது?", "எப்படி நடக்கப்போகிறது?" என்ற கேள்விகள் நாவல்களில் முக்கியத்துவம் பெற்றன. இந்த மூன்று கேள்விகளிலும் நடுக் கேள்விதான் அடிப்படையானது என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

ஹிந்தி நாவல் இலக்கியம் ஆரம்பத்திலிருந்தே மேலே குறிப்பிட்ட மூல தத்துவத்தைத் தன்னகத்தே பெற்றிருந்தது. பாரதேந்து ஹரிச்சந்திரர் பிரதாப் நாராயண் முதலியோர் தம் கட்டுரைகளிலும், நாடகங்

களிலும், தாக்கி வந்த மூட நம்பிக்கைகளையும் சமூக மலினங்களையும் குறித்தே லாலா ஸ்ரீநிவாஸதாஸ், பாலகிருஷ்ண பட் போன்ற நாவலாசிரியர்களும் தமது நாவல்களைத் தீட்டி வந்தனர். பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்குப் பரிகாரம் காணப் போராடும் விருப்பம் இவர்களிடமும் உள்ளது. நான் சொல்லுவது சிறிது ஆச்சரியமளிக்கக்கூடியதாக இருக்கும்; ஆயினும், உண்மையில் 'சந்திரகாந்தா ஸந்ததி'யில் வந்துள்ள மிகை வர்ணனைகளின், விசித்திர நிகழ்ச்சிகளின் ஆழத்தில் மனித இயல்போடு ஒத்த, பிரத்தியட்ச நோக்கோடு கூடிய போக்கே தோன்றுகிறது. அந்நூலில், தகர்ந்துகொண்டிருக்கும் "நிலப்பிரபுத்துவம்" பற்றியும், புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் "முதலாளித்துவ"த்தைப் பற்றியும், அந்த விசித்திரக் கற்பனை மூலமாக, மறைபொருளாகக் குறிப்பிடும் குறியீட்டு வாயிலாக மொழி விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

பாரதேந்து யுகத்தில் தோன்றிய ஆதிகால நவீனங்களைப் புகழும்போது, நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், அந்த நவீனங்களின் கண்ணோட்டம் தூலமானது மேலெழுந்தவாரியானது என்பதே. அந்த நவீனங்களின் பாத்திரங்களையும், நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து வார்ப்படம் செய்யப்பெறவில்லை. பிரச்னைகளை முன்னே வைத்துக்கொண்டு, அவற்றிற்கேற்ப பாத்திரப் பண்புகளும் நிகழ்ச்சிகளின் போக்கும் வருவித்துக்கொள்ளப் பெற்றன. மேலும், அவற்றில் ஆழ்ந்த சூட்சும திருஷ்டி இல்லை. இந்தக் குறையை பிரேம்சந்த் அகற்றினார். பிரேம்சந்த் நவீனங்களில் பிரச்னைகள் நேரே நவீனத்திலிருந்தே முளைத்தெழுகின்றன. பிரேம்சந்த் செய்த உண்மையான ஆராய்ச்சி பிரச்னைகளுக்கு என்ன

சமாதானம் கிடைக்கும் என்பதைப்பற்றியதல்ல. (இது அவருடைய கதைகளில் மேலெழுந்தவாறு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே கலையுணர்ச்சி அல்லது கட்டுக்கோப்புக்கு ஏற்றதல்ல) நவீனங்களில் பாத்திரப் படைப்பு, சூழ்நிலை, கதை அமைப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக கதைக்கேற்ற மொழி நடை—இவற்றைப் பற்றியதே ஆகும். ஆழமான பிரத்தியட்சக் கண்ணோட்டம், பரந்த மனிதாபிமானம் கொண்ட பரிவுணர்ச்சி, கதை கேட்பவர் பற்றிய நட்புறவு மற்றும் புதிய இலக்கியத் துறைகளில் படைப்பாற்றல் கொண்ட மொழிநடை—இவையனைத்துமே பிரேம்சந்திடம் காணப் படும் தனிப்பட்ட திறனாகும். அவருடைய நவீனங்கள், தனி மனிதனுடைய உளப்பாங்கும், சமூக வரலாறும் சந்திக்கும் களம் மட்டுமல்ல; அவை ஒன்றையொன்று தாண்டிச் செல்லும் நாற்சந்தியுமாகும். அவருடைய நவீனங்களில் தனி மனிதன் முக்கியத்துவம் பெறுகிறானா அல்லது சமூகம் முக்கியத்துவம் பெறுகிறதா என்ற கேள்விக்கு 'ஆம்', 'இல்லை' என்று யாதொரு விடையும் விளக்கமாகக் கொடுக்க இயலாது. தனி மனிதனும் சமூகமும் ஒன்றை மற்றொன்று கடந்து செல்லுகின்ற, வெட்டிச் செல்லுகின்ற இடத்தை அடிப் படையாகக் கொண்டுதான் அவருடைய நவீனங்களின் கட்டடம் எழுந்து நிற்கின்றது. பிரேம்சந்தின் மனத் தத்துவக் கொள்கை இயல்பாகவும், நடைமுறை உலக வாழ்க்கையை அனுசரித்ததாகவும் அமைந்தது. தோல்வி யுற்ற உறுதிப்பாடும், அழிவுறாத நம்பிக்கையும் அவருடைய ஆரம்ப நவீனங்களில் காணப்படுகின்றன. இது தேசிய இயக்கத்தின் முதற் கட்டத்தில் காணப் பட்ட நம்பிக்கைக்கும் உறுதிக்கும் அறிகுறியாகும். ஆனால், 1930-ம் ஆண்டு நெருங்க நெருங்க இந்த

இயக்கத்தில் தோன்றிய தோல்விகள், உணர்வுகொண்ட உள்ளங்களை வாட்டத் தொடங்கின. ஒளிவு மறைவில்லாத கலைஞன் என்ற முறையில் பிரேம்சந்த் இந்தக் கசப்பான உண்மையையும் நம் முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

தோல்வி நிராசை நிரம்பிய தேசீயச் சூழ்நிலையில் தான் 1930-ம் ஆண்டு வாக்கில் புதிய எழுத்தாளர் தலைமுறை உருவெடுத்தது. 19-ம் நூற்றாண்டில் தோன்றிய நடுத்தர வகுப்பும் இப்போது தன் உருவத்தை மட்டுமன்றி, தனது நியதியையும் கண்டுகொள்ளத் தொடங்கியது. நாட்டில் கல்வி, விஞ்ஞானம் முதலியவற்றின் பெருக்கத்தோடுகூட விழிப்பும், எதிலும் நிபுணத்துவம் பெறும் மனப்பான்மையும் வளரத் தொடங்கியது. மார்க்ஸ், ஃப்ராய்டு, டார்வின்—இவர்கள் காரணமாக, சூழ்நிலையில் மேலும் புழுக்கம் உண்டாகிவிட்டது. இந்தப் பெரும் சிந்தனையாளர்களெல்லாரும் இதுவரை வேரூன்றிக் கிடந்த பல யுகங்களாக நிலைபெற்றிருந்த கொள்கைகளை அடியோடு அசைத்துவிட்டனர். இவ்வகையான மின் வேகம் கொண்ட ஆவேசச் சூழ்நிலையில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பது தொடங்கிய வருடங்களில் இந்தப் புதிய தலைமுறை தலையெடுத்தது. ஒருபுறம் இத்தலைமுறையினருடைய உள்ளத்தில் நடுத்தர வர்க்கத்தினருக்கியல்பான தனி நபர் கொள்கையும், கட்டற்ற விடுதலை மனப்போக்கும் கொண்ட கொள்கை நிலைத்திருந்தது. மற்றொருபுறம் உண்மை வாழ்க்கையில் (அது காதல் விஷயமாயினும் சரி, அல்லது அரசியல் விஷயமாயினும் சரி) தோல்வி உணர்வு குடிகொண்டிருந்தது. இவர்களுடைய கொந்தளிக்கும் அகந்தை சுற்றி வளைத்து சூழ்நிலையின் மீது பழி சுமத்தி வந்தது. புதிய கருத்துக்களின் வெளிச்

சத்தில் இவர்கள், நீதி—அநீதி, பாவம்-புண்ணியம், காதல்-சிற்றின்ப விழைவு—இவைகளையும்கூட மீண்டும் அலசி ஆராய்ந்து புது வகையில் கொள்கையை அமைத்துக்கொள்ள விரும்பினர். இந்த எழுத்தாளர்களில் சிலர் பரந்த சமுதாயத்தினின்று துண்டிக்கப்பட்டுத் தனித்துக் கிடந்த நபருடைய அளவிடற்கரிய ஆழங்களைக் கணித்துப் பார்க்க விரும்பினர். மற்றும் சிலர், வேகமாக மாறிச் சென்று முடிவாகத் தோல்வியில் சாட விரைந்துகொண்டிருந்த வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் சுவைக்க முற்பட்டனர். வாழ்க்கையைச் சுவைக்க வேண்டும் என்கின்ற இந்தப் பதற்றத்தில்தான் அடிக்கடி அவர்கள் முன் நீதி-அநீதி, பாவம்-புண்ணியம் என்ற பிரச்னைகள் தோன்றலாயின. மற்றும் சில எழுத்தாளர்களோ, குழப்பமடைந்தவராய் எல்லாவற்றையும் அடியோடு அழித்துவிட வேண்டும் என்ற இச்சை நிறைந்த அராஜகக் கொள்கையை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டனர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுக்குப் பின்னர் தோன்றிய ஒரு சிறந்த பிரதிநிதித் தன்மை கொண்ட எழுத்தாளராவார் பகவதிசரண் வர்மா. அந்தக் காலத்தில். வாழ்க்கையின் கடலலைகள் விளையாட வருக என அழைப்பு விடுக்க, அவற்றுடன் கைகலக்க விருப்பம் இருந்தபோதிலும் அவற்றின் பெரும் பரப்பைக் கண்டு அஞ்சி, தமக்கு அழிவு நிச்சயம் என நினைத்திருக்கும் இளைஞர் சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்கியவர் பகவதிசரண் வர்மா. அந்த வாலிப வர்க்கத்தின் அகந்தை தனிமை நாட்டம் கொண்டது. கொதித்துக் கொந்தளித்து, காலத்தாலும் இடத்தாலும் பெரும் பரவலாக வியாபித்த இந்தக் கடலலைகள் தன்னைவிடப் பெரியவையென உணருகின்றது. சமூக வாழ்க்கையில்

தோல்வியைத் தழுவிய மனிதனின் வேதனையை அதன் மகிமையைக் கருத்தாகக் கொண்ட பாடல்கள் தாம் அக்காலத்திய இலக்கியப் படைப்புகளாகப் போற்றப் பெற்றன. இதற்கு யாரும் விதிவிலக்கு இல்லை; வங்க இலக்கியத்தின் சரத்சந்திரரோ, ஹிந்தியின் ஜைனேந்திரரோ, இலாசந்திரஜோஷியோ அல்லது பகவதி சரண் வர்மாவோ விலக்கானவர்களல்ல. 'பச்சன்', 'அஞ்சல்' அல்லது நரேந்திர சர்மாவின் பாடல்களுக்கும் இதே பின்னணிதான் அமைந்துள்ளது. ஆனால் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். அதாவது இந்தத் தோல்வியினுடைய ஆக்கிரமிப்பிற் கிடையிலேயும் எதிர்ப்பின் ஓங்காரம் இடையின்றி ஒலித்துக்கொண்டே இருந்தது. இந்த எதிர்ப்பு முடிவில் பயனற்றதாகவே தோன்றுகிற தென்பது வேறு விஷயம். இந்தப் பின்னணியை மனத்தில் கொண்டு படிப்போமானால், பகவதி சரண் வர்மாவின் நவீனங்களினுடைய பொருளும் கருத்தைக் குறிப்பிடும் விசேஷப் பண்பும் தெற்றென விளங்கும். 'சித்ரலேகா', 'மூன்று வருடம்', 'கோணல் பாதைகள்'—முதற் கட்டத்து இந்த மூன்று நவீனங்களிலும் முக்கிய பாத்திரங்கள் ஒரு தனித்தன்மை கொண்ட ஒரு விசேஷமான அகந்தைப் பாங்கு கொண்டுள்ளன. ஒவ்வொரு பாத்திரமும் ஏதோ ஒரு கட்டத்தில் தோல்வியடைவதைக் காண்கிறோம். 'சித்ரலேகா'வில் கடந்த காலமெனும் பலகையில் பாவம்-புண்ணியம் என்பவற்றின் பிரச்னை தீட்டப் பெற்றுள்ளது. 'மூன்று வருட'த்தில் நிகழ்காலத்தை நிலமாக்கி திருமணம், காதல், காமப்பித்து என்பவற்றின் பிரச்னை சித்திரிக்கப் பெற்றுள்ளது. 'கோணல் பாதை'களில் சமகாலத்திய அரசியல் கொள்கைகளைப் பற்றிய கேள்விக்குறி எழுகிறது. இவை எல்லாவற்றிலும்

அடிப்படையான கொள்கை ஒன்றே—அதாவது 'மனிதன், சூழ்நிலைக்கு அடிமை' என்பதுதான். இவை அனைத்திலும் பழமைக் கொள்கைகள் தாக்கப்பட்டுள்ளன. பாவியென்று ஒருவனும் இல்லை; புண்ணியாத்மாவென்றும் ஒருவனும் இல்லை; நற்குலத்துப் பெண்ணைவிட வேசி ஒருத்தி சிறந்த பண்பு கொண்டவளாக இருக்கக்கூடும்; அரசியல் நம்பிக்கைகள்—கொள்கைகள்—அனைத்தும் பொய்யானவை. இதனை, தேய்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையின் தத்துவம் எனக் கூறலாம். ஆனால், அந்தக் காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கு இந்த தத்துவம்தான் வலிமையளிப்பதாக இருந்தது. 1959 இல் வெளியான "மறைந்த காட்சிகளில்" கூட ஜ்வாலா பிரஸாத் என்ன சொல்லி மனத்திற்குச் சமாதானம் தேடிக்கொள்ளுகிறார்? "மனிதன் கையில் ஒன்றும் இல்லை. வள்ளிசாக ஒன்றும் இல்லை. எனவே எதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டும்? நடக்க வேண்டியது எதுவோ, நடந்துவிட்டது. அதைத் தடுக்க முடியாது."

பகவதி பாபு தமது தலைமுறையில் தோன்றிய சமகாலத்து எழுத்தாளர்களை விட ஒரு விதத்தில் தனிச் சிறப்புப் பெற்றவர். ஜைனேந்திரரும், இலாசந்திர ஜோஷியும் மிஞ்சி மிஞ்சிப் போனால் தனி மனிதனுடைய மனத்தை அலசி ஆராய்வதில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் பகவதி பாபுவோ சமூக உண்மைகளை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தார். அவருடைய சித்திரங்களின் எல்லை பிரேம்சந்தினுடையதுபோலப் பரந்ததல்ல. ஆனால் நடுத்தர வர்க்கத்தின் வெவ்வேறு உறவுகளுக்கிடையேதோன்றும் பிணக்குகள், செயல்கள், விளைவுச் செயல்கள்—இவற்றிலிருந்துதான் அவர் தமது பாத்திரங்களையும், பிரச்னைகளையும் உருவாக்கியிருக்கிறார். அவருடைய நவீனங்களின்

ஆதாரக் கட்டுக்கோப்பு பெரும்பாலும் குடும்ப வாழ்வை மையமாகக் கொண்டுள்ளது. இந்த விஷயத்தில் அவர் பிரேம்சந்துக்கு மற்றவர்களைவிட அதிகம் நெருங்கியவர். கதை சொல்லும் கவர்ச்சிகரமான பாணியும் பிரேம் சந்தைப் போன்றதேயாகும்; அவருக்குச் சம காலத்திய நாவலாசிரியர்களைவிட இந்தப் பண்பு அவரிடம் அதிகமாகக் காணப்படுகிறது. மற்றொரு விஷயம்: கருத்து, தத்துவம் இவற்றைப்பற்றி அவருக்கிருந்த ஈடுபாடு குறைந்துகொண்டே வந்துள்ளது. இதே நேரத்தில் மற்ற நாவலாசிரியர்களிடத்தில் இந்த நோய் பெருகிக் கொண்டிருந்தது. ஒரு வேளை, பகவதி பாபு மேற்கொண்ட தத்துவத்திலிருந்து எதிர்பார்க்கக்கூடிய விளைவு, நிகழ்ச்சிகளின் நெருக்கமேயாகும்.

மேற் குறிப்பிட்ட மூன்று நவீனங்களுக்குப் பிறகு பகவதி பாபுவின் கலையில் சிறிது தொய்வு காணப்பட்டது. "கடைசிப் பந்தயம்" அவருடைய நவீனங்களில் பலமற்றதொன்றாகும். ஆனால், மீண்டும் 'மறைந்த காட்சிகள்', 'திறமையும் வரம்பும்' என்ற நவீனங்களில் நிறைந்த திறமையும் சக்தியும் தலைதூக்கி நிற்கின்றன. 'மறைந்த காட்சிகள்' என்ற படைப்புக்காக அவருக்கு 'ஸாஹித்ய அகாதம்', 'ஹிந்துஸ்தான் அகாதம்' பரிசுகள் கிடைத்துள்ளன.

மறைந்த காட்சிகள்

'மறைந்த காட்சிகள்' முழு நவீனம் மிக நீண்டது. 700-750 பக்கங்கள் கொண்ட அந்த நவீனத்தின் சுருக்கமே இந்த நூல். மூலத்தின் முக்கிய கதைப் போக்கை கருத்திற் கொண்டே இந்தச் சுருக்கம் செய்யப் பட்டுள்ளது. இவ்வாறு சுருக்குவதில் நூலின் பல//

ரஸமான வாழ்க்கைச் சித்திரப் பகுதிகள் மறைந்து விட்டன என்பது உண்மையே. ஆயினும் நவீனம் இந்தச் சுருங்கிய வடிவில் அதிகத் தெளிவும், நல்ல கட்டமைப்பும், கலையழகும் கொண்டு விளங்குகின்றது என்பது உண்மை.

ஒரு குடும்பத்தின் நான்கு தலைமைக் காலத்து வரலாறு இதில் அடங்கியுள்ளது. அந்தத் தலைமுறைகள் தம்தம் காலத்திய போராட்டங்கள் சூழ்நிலைகளினுடைய பிணைக்கிலிருந்துதான் எழுச்சியும் வீழ்ச்சியும் அடைகின்றன. அந்தக் குடும்பமும், அந்தச் சமூகமும் இப்போது ஏறக்குறைய கடந்த கால வரலாருக மாறி விட்டிருக்கிறது. இவ்வாறு, தனி மனிதன், குடும்பம், சமூகம்—இவை கடந்த கால வரலாற்றின் அரங்கில் ஒடுங்கிவிட்டன. இதை ஒருவகையான "கால கட்ட நாவல்" எனக் கூறலாம். கதையின் காலம் 1880-ம் ஆண்டிலிருந்து 1930-ம் ஆண்டுவரை நீடித்திருக்கிறது. ஐம்பது வருடங்களின் காலப் பலகையில் தோற்ற மளித்த சமூகச் சித்திரத்தை அரசியல் சூழ்நிலையிட்டு விளக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. வரலாற்றைப் பற்றி நடுநிலைமை கொண்ட பார்வை வேண்டும் என்பதற்காகவேபோலும் பகவதி சரண் வர்மா 1930 ஆண்டுவரைதான் நடத்தியிருக்கிருர். ஏனெனில். அதன் பிறகு வந்த காலத்தை வர்மா தாமும் ஒரு பாத்திரமாக இருந்து அனுபவித்தவர். ஆகவே, இந்தக் காலத்தைப் பற்றி அவர் கூறப்புகின், தம் சொந்த உணர்ச்சி நிரம்பிய பட்சபாதம் கொண்ட கருத்து தோன்றக்கூடும். வர்மா 1930-ம் ஆண்டு வாக்கில்தான் எழுதத் தொடங்கினர் என்பதைக் கவனிக்க வேண்டும். நான்காவது தலை முறையில் வரும் பாத்திரம் 'நவல்' வர்மா அவர்களுடைய தலைமுறையைச் சேர்ந்தவன் என்றே கொள்ளலாகும்.

அவனைப் போராட்டத்தில் இறக்கிவிட்டு ஆசிரியர் கதையை நிறுத்திவிடுகிறார். தமது தீர்ப்பைக் கொடுக்க விரும்பவில்லை.

கூட்டுக் குடும்ப முறை மறைதல், நடுத்தர வர்க்கம் தோன்றுதல், முதலாளித்துவத்தினால் "நிலப்பிரபுத்துவ" வாழ்முறை தோல்வியுறுதல், தேசீய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைதல்—இந்த நான்கு அடிப்படைகளைக் கொண்டுதான் முழு நாவலின் கதை அமைந்துள்ளது. இந்த நான்கினுடைய செயல் விளைவுச் செயல் பின்னலைக் கருவியாகக் கொண்டே நாவலின் கட்டுக்கோப்பு முழுவதும் அமைந்துள்ளது. முதல் தலைமுறையில் முன்ஷி சிவலால் வருகிறார். அவர் கச்சேரி வாசலில் உட்கார்ந்துகொண்டு கட்சிக்காரர்களுக்கு மனு எழுதிக் கொடுத்துப் பிழைக்கிறார். ஆனால் அவருடைய மகன் ஆங்கிலம் படிக்கிறான்; வெள்ளைக்காரக் கலெக்டருடைய தயவினால் உதவி தாசில்தாரராக நியமிக்கப்படுகிறான். இது நடுத்தர வர்க்கம் தோன்றிய முறையாகும். இதன் விளைவு, உடனே முன்ஷி சிவலாலின் கூட்டுக் குடும்பத்தைப் பாதிக்கின்றது. பிள்ளையுடன் மருமகளும் செல்வது என்பது இந்தக் கூட்டுக் குடும்ப முறையில் தோன்றிய முதல் பிளவாகும். பின்னர் முன்ஷி சிவலாலின் தம்பி பலவகையில் முயற்சி செய்தும் கூட்டுக் குடும்பம் நிலைக்கவில்லை; உடைந்தே போய்விடுகிறது. இதே பிரச்னை பிறகும் வந்திருக்கக் கூடும். ஒருவேளை இப் பிரச்னையிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காகவே போலும், ஆசிரியர் ஜ்வாலா பிரஸாத், கங்கா பிரஸாத், நவல்—மூவரையும் அவர் தந்தையருக்கு ஒரே பிள்ளைகளாகக் காட்டியிருக்கிறார்.

முன்னுரையில், 1930—ம் ஆண்டு நெருங்க நெருங்க நடுத்தர வர்க்கத்தின் சங்கடமான நிலை தெளிவாகத்

தோன்றிவிட்டதெனக் குறிப்பிட்டோம். முதலாளித்துவம், ஏகாதிபத்தியக் கொள்கை—இவற்றின் நிழலில் நடுத்தர வர்க்கம் வளர்ச்சி அடைந்தது. ஆனல் மெள்ள மெள்ளப் பொருளாதார நெருக்கடி வளரவே, இந்த வர்க்கம் விடுதலையை விரும்பத் தொடங்கியது. 'மறைந்த காட்சி'களில் அதுதான் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. ஜ்வாலா பிரஸாதும், கங்காபிரஸாதும் நடுத்தர வர்க்கத்தினுடைய, அதிகார வர்க்கத்தினுடைய பிரதிநிதிகள். கங்கா பிரஸாத் கலெக்டராகிவிடுகிருர். இதுதான் நடுத்தர வர்க்க வளர்ச்சியின் உச்ச கட்டமாகும். ஆனல் திடீரென்று கங்கா பிரஸாத் இறந்துவிட்டபோது நவல் ஏறத்தாழ அவனுடைய தாத்தா-ஜ்வாலா பிரஸாத்—வாழ்க்கையைத் தொடங்கியபோது இருந்த பழைய நிலையையே அடைகிருன். ஆனல் அவனது கொந்தளிப்படைந்த அகந்தை ஒருவருடைய தயவை ஏற்க இசையவில்லை. அவன் வாழ்க்கைக் கடலில் பொங்கும் அலைகளில் சிக்குண்டு அடித்துச் செல்லவே, முழு ஆவேசத்தோடு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்துவிடுகிருன். உண்மையில், நான்காம் தலைமுறையில் வரும் நாவலில் இந்த வர்க்கத்தின் குணப் பண்பும், நியதியும் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எல்லாம் சேர்ந்து நான்கு தலைமுறைகளாக இந்தக் குடும்பத்தின் அரங்கத்திலேயே இயங்கி இந்த நாவல் நல்ல வெற்றியடைந்துள்ளது.

கதையின் முதற் பகுதியிலேயே நாவலுடைய கதையின் இரண்டாம் பகுதியும் புலப்படுகின்றது: அதாவது "நிலப்பிரபுத்துவம்" முதலாளித்துவம் — இவற்றின் மோதல் காணப்படுகிறது. காடம்பூர் தாசிலில் உதவித் தாசில்தார் வந்து சேர்ந்தபோதே டாகுர் கஜராஜ் சிங், டாகுர் பர்ஜோர் சிங் மற்றும் லாலா பிரபுதயாள்—இவர்

களுடைய பூசல் போராட்டம் முன்னே வருகின்றது. ஒரு சாதாரண வணிகருடைய மகன் பிரபு தயாள் மெள்ள மெள்ள வளர்ச்சி பெற்று, குல ஆணவத்திலும் பழம் பெருமை பாடும் "நிலப்பிரபுத்துவ" ஆடம்பர வாழ்க்கையிலும் மூழ்கிக் கிடந்த இரண்டு டாகுர்களையும் தலை குனிய வைக்கிறான். தனக்குச் சாதகமான தருணத்தைக் கண்டுகொள்வதில் தவறு செய்யாத கண்ணோட்டம் அவனுக்கு இருக்கிறது. குமாஸ்தா அரசாங்கத்தைத் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். குமாஸ்தா—அரசாங்கத்தின் அடையாளச் சின்னமாகிய ஜ்வாலா பிரஸாத் அவனுக்குத் துணை புரிய வேண்டிய கட்டாயம் உண்டாகிறது — நியாயத்தினுடைய சட்டத்தினுடைய பெயரில். இவ்வாறு முதலாளித்துவம், குமாஸ்தா—அரசாங்கம்—இவற்றின் பிணைப்பினால் நிலப்பிரபுத்துவக் கொள்கை தோல்வியுறுவதை வரலாற்றின் சித்திரமாக எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். பிறகு, முதலாளித்துவத்தின் கோரமான உருவத்தை மூடியிருக்கும் முகமூடியை ஆசிரியர் மீண்டும் மீண்டும் திறந்து விடுகிறார். இந்த முதலாளித்துவம் ஒத்துழையாமை இயக்கத்திற்கு உதவி அளிக்கிறது. ஏனெனில், வெளிநாட்டு முதலாளித்துவத்திற்கு எதிராக தன்னை நிலை நாட்டிக்கொள்ள இது அதற்குத் துணை புரிகிறது. ஆனால் தன் காரியம் ஆனதும் அது ஒரேயடியாக முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறது. இந்த முதலாளித்துவம் வெளிநாட்டாரின் ஏகாதிபத்தியக் கொள்கைக்கும் உதவியளிக்கிறது. அதற்குப் பிரதியாக 'ஸர்' பட்டம் பெற்று சமுதாயத்தில் உயர் குடிப் பதவியும் பெறுகின்றது. பிறருடைய பணத்தை விழுங்கி ஏப்பமிடும் நம்பிக்கைத் துரோகம் செய்வதில் அதற்கு எவ்வித

தயக்கமும் இல்லை; அது எந்த அளவுக்குச் செல்லக் கூடும் என்றால், மரணப் படுக்கையில் கிடக்கும் அன்னையைத் தூற்றவும் செய்யும் பணத்திற்காக: ஞான பிரகாஷ் கூறும் இந்த உரை முதலாளித்துவத்தின் நிலைக்கு உண்மையான விளக்கமாகும்.

"ஆனால் கங்கா, இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இந்த முதலாளி வலிந்து பலாத்காரமாக லாபம் சம்பாதிப்பான். அந்த லாபத்தில் ஒரு பகுதியை சர்க் காருக்குக் கொடுக்கிறான். ஏனெனில், அதனால் சர்க்காரிட மிருந்து அவனுக்கு எல்லா வகையான உதவியும் கிடைக்கும். இந்த லாபத்தில் ஒரு சிறு பகுதியைக் காங்கிரஸுக்கும் கொடுக்கிறான். ஏனெனில், இதனால் சுதேசி இயக்கம் வலிமை பெறும், அவனுடைய சாமான்கள் நன்கு விற்பனையாகும். இந்த லாபத்தில் ஒரு சிறு பகுதியை அவன் கங்கா பிரஸாத், ஜாயின்ட் மேஜிஸ்டிரேட் அவர்களுக்குக் கொடுக்கிறான். ஏனெனில், லட்சுமீசந்த் செய்கிற கொள்ளை, ஏமாற்று, இதைப் பார்த்தும் பாராமல், சர்க்கார் உத்தியோ கஸ்தர்கள் கண்ணை மூடிக்கொள்ளுவார்கள். இந்த யுகத்தில் எல்லாவற்றையும் விட பெரிய சக்தி பணம் தான்."

பொருளாதார மேம்பாட்டை நோக்கி முன்னேறும் போது, அரசியல் குறுக்கே தோன்றுவது இயற்கையே. நாவலுடைய இரண்டாம் பாகத்தில் அரசியல் சூழ்நிலைச் சித்திரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தப் பாகத்தின் முதல் அத்தியாயத்திலேயே வெளிநாட்டார் அரசாட்சி, அதன் விளைவுகள். மதத்தினுடைய சாதி குலம் — இவற்றினுடைய வேறுபாடுகள் மிகுதல் இவற்றைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. பிறகு, ரௌலட் சட்டம், ஒத்துழையாமை இயக்கம், சௌரீ சௌரா

படுகொலை, மதச் சண்டைகள், வேலை நிறுத்தம், டாண்டி உப்பு யாத்திரை, உப்பு சத்தியாக்கிரஹம் முதலியன எல்லாம் வருகின்றன. நாவலுடைய முடிவே அரசியல் சம்பந்தமான நிகழ்ச்சியில் அமைந்துள்ளது.

இந்த நாவலில் எடுத்துக்கூறப்பட்டுள்ள வெவ்வேறு பொருள் நிலைகள் தனித்தனியே துண்டிக்கப்பட்டுள்ள நிலைகள் அல்ல. அவை அனைத்துமே ஒன்றோடு மற்றொன்று பிணைக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று ஆதாரமாக அமைந்துள்ளன. ஒன்றிலிருந்து மற்றொன்று தோற்றம் பெறுகின்றது. ஆக, எல்லா பொருள் நிலைகளுடைய அடிப்படையில் இருக்கும் ஆணி வேரான கருத்தைத் தேடிப் பார்த்தால், பழைய உலகத்தை—அதன் நம்பிக்கைகள் பண்பாட்டுக் கொள்கைகள் அனைத்துடன்—உடைத்தெறிந்து, அதன் இடத்தில் தோன்றியுள்ள புதிய உலகத்தின் உருவத்தையும் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுவதுதான் முக்கியமான "கருப்பொருள்" என்பது நன்கு விளங்கும்.

ஜ்வாலா பிரஸாத், நிலப்பிரபுத்துவக் கொள்கைக் காலத்திய உயர்குலப் பெருமையின் மதிப்புகளை எதிர்த்து நிற்கும் முதலாளித்துவத்தை ஏற்று மொழிகின்ற வகையில் கூறுகிறார். "அப்பா இது புதிய காலம். தச்சு வேலையை அவனே செய்யப்போகிறானா என்ன? அவன் (லட்சுமீசந்த்) மரத் தொழிற்சாலை அமைக்கப்போகிறான். புதிய புதிய மோஸ்தர் கொண்ட சாமான்கள் தயார் செய்யப்படும். இலட்சக்கணக்கில் வியாபாரம் நடைபெறும். புது உலகத்தின் புது உருவம் அமையப்பெறும்." முன்ஷி சிவலாலுடைய மூளைக்கு இந்தக் கருத்து எட்டவே இல்லை. ஆயினும், இதைச் சொன்னது அவருடைய பிள்ளை — 'புதுயுகத்தின் மனிதன்'—ஆகவே, அவர் இதனை ஏற்றுக்கொண்டார்.

இதே போல, இலட்சுமீ சந்த் (முதலாளி), ஜ்வாலா பிரஸாத் (குமாஸ்தா அரசாங்கம்; நடுத்தர வர்க்கம்) புது யுகத்தின் மனிதர்கள். இந்தப் புதுமை குடும்பத்திற் குள்ளேயும் நுழைந்துகொண்டிருந்தது. "சிவலால் யோசிக்கத் தொடங்கினர்—அதிகாரமும் சக்தியும் தம் இடத்தை மாற்றிக்கொள்ளத் தொடங்கி இருக்கின்றன. ஓரிடத்தை விட்டு வேறிடந்திற்குப் போய்க் கொண்டுள்ளன. குடும்பத்தின் பரம்பரை உடைந்து கொண்டிருக்கின்றது.

ஆனல் ஜ்வாலா பிரஸாதின் உலகமும் மாறுகின்றது. அவரும் பின்னடைந்துவிடுகிறார். டிப்டி கலெக்டர் ஸோமேசுவரதத் கங்கா பிரஸாதைப்பற்றிக் கூறுகிறார். "நல்ல உள்ளமும் உற்சாகமும்கொண்டவன், மீர்ஸாஹப், இதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்." புது யுகத்தின் மனிதன். இந்தப் புதிய உலகத்தில் இவன் மிக மிக முன்னேறுவான். இந்தப் புதிய யுகத்தின் புது மனிதன் ஆகையால் அவன் துணிவு படைத்தவன். முகஸ்துதி செய்பவன் அல்ல. வெள்ளைக்காரர்களுடன் கூட சமமாகப் பழகுகின்றவன். உள்ளும் புறமும் ஒன்று போன்றவன். அதாவது நடுத்தர வர்க்கம் இப்போது தன்னம்பிக்கையோடு முன்னேறிச் செல்லும் அளவுக்கு சக்தி நிரம்பிவிட்டது. ஆனல் இந்த தன்னம்பிக்கை இப்போதும்கூட தன் நலன்கள் தற்காப்பு, உத்தியோகம் என்ற பிரச்னை வரும்போது மறைந்துவிடுகின்றது. அதனுள் குடிகொண்டிருக்கும் கோழைத்தனமே அதனை உடைத்துவிடுகின்றது. ஒத்துழையாமை இயக்கத்தில் அனுதாபம் கொண்டிருந்தும்கூட அவமதிக்கப்பெற்ற கங்கா பிரஸாத் உத்தியோகத்தைத் துறக்க இயல வில்லை. இவ்வாறான சக்தி அதற்கு அடுத்த தலைமுறைக் குத்தான் கிடைக்க வேண்டி இருந்தது. நோய்வாய்ப்

பட்டுள்ள தந்தையின் சிகிச்சைக்காக 'பூவாலீ' போக முற்பட்ட தன் பிள்ளை நவலைப் பார்த்தார். கங்கா பிரஸாத்—அவருடைய திறமை மிக்க, தன்னம்பிக்கை கொண்ட பிள்ளை, வருங்காலத்தின் சின்னம்; புதிய யுகத்தின் இந்த சின்னம் பெண்ணின் சுதந்திரத்தைப் போற்றக்கூடியது. அதன் பிரகாரம், பெண் உத்தியோகத்திற்குப் போகலாமா என்ற பிரச்னையைப் பற்றி, புதிய உலகத்தின் மக்கள் தான் சரியாக அறிந்து கொள்ளக்கூடும். அவன் வக்கீல் தொழில் செய்ய மறுத்துவிடுகிறான். ஏனெனில், பொய், முகஸ்துதி, மோசடி இவை அவனுக்கு ஆகாது. அவன் கூறுகிறான்:-

"நான் நிராசை அடைந்து ஜெயிலுக்குப் போகவில்லை. நான் ஏற்றுக்கொண்ட பாதையின் முடிவே இதுதான். போராட்டம் — போராட்டம் — போராட்டம். வாழ்க்கை முழுவதும் போராட்டம். இந்தப் போராட்டம் என்னுடைய உள்ளத்திலிருந்து எழுந்த குரலாகும்...." அவன் அமைக்க முற்பட்ட புதுமை மிக்க கஷ்டமும் தியாகமும் ஏற்றுச் செய்யக்கூடியதென்று அவன் உணருகிறான். "பழைமையனைத்தையும் மிகக் கொடூரமாக அழிக்கவேண்டி யிருக்கிறது."

அதிவேகமாக மாறுகின்ற இந்தப் புதிய உலகத்தை மிகவும் தெளிவாகக் காட்டக்கூடிய சித்திரம் நாவலில் அமைந்துள்ளது. தொடக்கத்தில் ஜ்வாலா பிரஸாத் புது யுக மனிதராகக் காட்டப்பெற்றுள்ளார். அதே ஜ்வாலா பிரஸாத் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு நாவலின் முடிவில் தம் தலைமுறையை விட அதிகப் புதுமை கொண்டதோர் உலகத்தின் முன்னால் செயலிழந்து நிற்கிறார். "ஒன்றும் புரியவில்லை பீக்கூ, இப்படியெல்லாம் என்ன நடக்கிறது? ஏன் நடக்கிறது? இந்த விதவிதமான காட்சிகள் தாமே உண்டாகின்றன, தாமே

மறைந்துவிடுகின்றன. இது ஏன்?" கீழ்வரும் ஆசிரியர் கூற்றுடன் நாவல் நிறைவு பெறுகின்றது.

"இரண்டு கிழவர்கள். காலங் கண்ட கிழவர்கள். வாழ்க்கையின் பல ஏற்றத் தாழ்வுகளையும் மேடு பள்ளங்களையும் பார்த்தவர்கள்; அனுபவங்களின் களஞ்சியம் அவர்கள். அத்தகையோர் இப்போது பேச்சற்றுச் செயலற்று நின்றிருந்தனர். மற்றும், தூரத்தில், ஆயிரம் இலட்சம் மனிதர்கள். கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்க்கையும், செயலாற்றலும் பிடரி பிடித்து உந்த, புதிய உற்சாகமும் உல்லாசமும் கொண்டு புதியதோருலகை நிர்மாணித்திடச் சென்றுகொண்டிருந்தனர்."

பரந்த கால தூர எல்லைகளைக் கொண்ட இந்த நாவலின் கட்டுக்கோப்பைப் பற்றியும் நுணுக்கமாக ஆராய்தல் அவசியமாகும். முதன் முதலில் நமது கவனம் கதையைச் சொல்லுகின்ற கண்ணோட்டம் பற்றித் திரும்புகிறது. ஆசிரியர் தமது ஓவியத்திற்குப் பொருளாகத் தெரிந்தெடுத்துக்கொண்டுள்ள வாழ்க்கை பற்றி விருப்பு வெறுப்பற்ற நடுநிலை நோக்குடன் ஆராய வேண்டும். இராக துவேஷமற்ற நிலையிலிருந்து கொண்டு தான் நீண்டு பரந்த காலத்தையும் தூரத்தையும் கணிக்க முடியும். ஆனால் ஆசிரியர் இந்த நடுநிலைக் கண்ணோட்டத்தை உப்புச் சப்பற்றதாகச் செய்து சலிப்பு ஏற்படுத்திவிடவில்லை. நாடகம் போன்ற காட்சி மாற்றங்களைப் புகுத்தியிருக்கிறார். சுவை தரும் உரையாடல்கள் இந்த நாடகப் பண்பைக் காக்கின்றன. நடுநிலை நோக்கர் என்ற முறையில் நின்று வரலாற்று பாணியை மேற்கொண்டதால், ஆசிரியருக்கு கதையை தட்டிவிட்டுக் கொண்டு போகவும் அல்லது தாமே விளக்கம் செய்து ஒரு பாத்திரப் பண்பில் அல்லது நிகழ்ச்சியில் பொதிந்துள்ள மருமங்களை எடுத்துரைக்கவும் போதிய வாய்ப்பு

கிடைக்கிறது. ஆயினும் இந்த வசதியிருந்தும், கதையின் கட்டுக்கோப்பில் சில குறைபாடுகள் உண்டாகி இருக்கின்றன. காரணமற்று எதிர்பாராது தோன்றும் நிகழ்ச்சிகளை உதவியாகக் கொண்டு கதையை ஓட்டுதல் அவற்றில் ஒன்று. புத்தூ, ஐக்கூ ஆகியோர் திடீரெனச் சந்தித்தல் கிளைக்கதையாக வந்ததென்றே கூற வேண்டும்.

(ஆயினும் விஷன்லாலைப் பற்றிய கட்டங்கள் நாவலினுடைய முக்கிய கதைப் போக்கிற்கு எவ்விதத்திலும் தொடர்பு கொண்டதாக அமையவில்லை) கங்கா பிரஸாத் திடீரென நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிகழ்ச்சியை ஏன் கொண்டு வந்தார்? அந்தப் பாத்திரத்தை அகற்றி விட முயலுகிறாரோ ஆசிரியர் என்றே தோன்றுகிறது. "கங்கா பிரஸாத்" பாத்திரத்தின் முழுப் பயனையும் ஆசிரியர் எடுத்துக்கொண்டதாகத் தோன்றவில்லை. பர்ஜோர் சிங் தற்கொலை செய்துகொண்டதைப் பற்றியும் இவ்வாறே கூறலாம். இத்தகைய குறைகள் இருந்தபோதிலும், கதைக் கட்டுக்கோப்பு ஆசிரியரின் திறத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. நான்கு தலைமுறைகளின் கதையைச் சொல்லும்போது ஒன்றுபோலக் கோவைப்படுத்திச் சொல்ல ஏதோ ஒரு பாத்திரத்தை இணைக்கும் சரடு போல் வைத்துக்கொள்ளுதல் அவசியம். வர்மா எடுத்துக்கொண்ட இணைப்பு—பாத்திரம் ஜ்வாலா பிரஸாத் அவருக்கு அவருடைய தந்தை சிவலாலின் தலைமுறை பிறப்பு உரிமையாகக் கிடைத்து விட்டது. அந்தத் தலைமுறை அவிபக்த குடும்ப முறையின் பிரச்னையை ஒப்படைத்துச் சென்றது. மூன்றாம் தலைமுறை அவருடைய மகன் கங்கா பிரஸாதின் தலைமுறையாகும். அதுவும் அவருடைய தலைமுறையின் விளைவாகத் தோன்றிய வளர்ச்சி பெற்றதொரு உருவமே

யாகும். அவர் தம்முடைய, தம் பிள்ளையினுடைய தலைமுறைகளைப்பற்றி நன்கு உணர்ந்துகொள்கின்றார். நான்காம் தலைமுறை இவருடைய பேரன் நவலுடையது. அதனை அவர் வெறுமே பார்த்துக்கொண்டு இருக்கிறாரே தவிர புரிந்துகொள்ளவில்லை. இவ்வாறு நாவலினுடைய தொடக்கத்திலிருந்து முடிவு வரை ஜ்வாலா பிரஸாதே முதுகெலும்புபோல் அமைந்திருக்கிறார். அவர் கதையில் செயல்படுகின்ற ஒரு பாத்திரமாக இல்லாதபோதும்கூட இணைப்புப் பணி புரியும் ஒரு பார்வையாளராக விளங்குகிறார். இவ்வாறு அந்தப் பாத்திரத்தின் அனைத்துத் திறமையையும், அதனின்று தோன்றக்கூடிய அனைத்து விளைவுகளையும் ஆசிரியர் ஏறத்தாழ முற்றிலும் பயன்படுத்தியுள்ளார்.

பாத்திரங்களின் திறமையைப்பற்றிப் பேசும்போது ஒருண்மை இடைவிடாது நம் கவனத்தை ஈர்க்கிறது. அதாவது பாத்திரங்களில் போதிய ஆழமும் முழுமையும் தோன்றவில்லை என்பதே. ஒரு வேளை மிகப்பெரிய கால தூர எல்லைகளில் படர்ந்துள்ள சமூக வாழ்க்கையைத் தீட்டவேண்டும் என்ற நோக்கமே இக்குறைபாட்டிற்குக் காரணம் ஆகலாம். இன்றேல், 'சித்ரலேகா', 'மூன்று வருடம்' 'கோணல் பாதைகள்' இவற்றில் ஆசிரியர் தமது பாத்திரப் படைப்பின் திறமையை நன்கு புலப்படுத்தியுள்ளார். 'கோணல் பாதைகளின்' பண்டித் ராமநாத் மறக்க முடியாத கதாநாயகர்களது வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவர். ஆனால் இந்த நாவலிலோ, பாத்திரங்கள் பெரும்பாலும் தெளிவு வளைவுகளற்று தனித்தன்மையற்று ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாகவும் அமைந்துவிட்டன. அவற்றின் தனித்தன்மை எந்த அளவுக்கு மறைந்துவிட்டது என்றால் பாத்திரங்களின் மிக அந்தரங்கமான தொடர்புகளிலும் கூடப் போதிய

அளவு நெருக்கமும் பிணைப்பும் காணப்படவில்லை. அறநெறிக்கு ஏற்ற அல்லது ஏற்காத காதல் நிகழ்ச்சிகளாயினும் சரி அல்லது குழந்தையிடத்து அன்பாகிலும் சரி, எங்குமே மிக ஆழமாகப் படிந்த ஓர் உணர்ச்சி வேகம் இல்லை. தருக்கம், சிந்தனை, காரண காரியம் என்ற தொடர்பை மீறித் தனி மனிதனை அவனது உறவுகளில் சிறப்பித்துக் காட்டக்கூடிய உணர்ச்சிப் பெருக்கு காணப்படவில்லை. மேல்வாரியான இந்த சித்திரிப்பு, குடும்பப் பிணைப்புகளில் மட்டுமல்ல, அதிகாரிகள், முதலாளிகள், அரசியல் செயலாளர்கள் முதலியவர்களது விஷயத்திலும் பெரும்பாலும் வெறும் தகவல்கள் கிடைக்கின்றனவே ஒழிய அவர்களது வாழ்க்கையின் முழு உருவம் பிரதிபலிக்கவில்லை. சின்கீ அல்லது பீக்கூ போன்ற பாத்திரங்கள் மிகவும் தனிச் சிறப்பு வாய்ந்தும், வளர்ச்சி பெற்றும், மனிதப் பண்பு கொண்டும் காண்கின்றன. ஆனால் கதையினிடையே அவற்றிற்கு அதிக மலர்ச்சி உண்டாகவில்லை. ஒருவேளை ஆசிரியருடைய திட்டத்தில் இதற்கான வாய்ப்பே இருக்கவில்லை போலும். பாத்திரங்கள், சாதிப் பொதுப் பிரதிநிதிகளாகத் தோன்றுவதைப் பொருத்தமட்டில், வர்மா ஏறத்தாழ பிரேம்சந்தின் நிலையையே அடைகிறார். பலவகையான மோசடி செய்தும், கைவரிசை காட்டியும் ஏமாற்றி தன்னலத்தைப் பூர்த்தி செய்கின்ற பட்டாமணியக்காரர், மனு எழுதுகின்றவர் போன்றோருடைய காரியஸ்த மனப் போக்கிற்கு ஒரு வடிவமான முன்ஷி சிவலால், தம் பிள்ளையே தம் வழி முறைகளை ஏற்க மறுத்தபோது ஆவேசம் கொண்டு தற்கொலை செய்துகொள்ளுகிறார். முன்ஷி ராதேலால் தம் அண்ணனுக்குத் துணையானவர். ஜ்வாலா பிரஸாத், தன் சொந்தத் தகுதி, நம்பிக்கையான

உழைப்பு, மற்றும் நீதி நியாயங்களை மீருத தன்மையினுல் சர்க்கார் உத்தியோகத்தில் உயர்வு பெறுகின்ற நடுத்தர வர்க்கத்தின் பிரதிநிதி. இதனுடைய மலர்ச்சியே கங்கா பிரஸாத். ஆனுல் ஒரு வித்தியாசம். கங்கா பிரஸாதுக்குத் தம் சூழ்நிலையோடு போராடவேண்டி யிருக்கவில்லை. அவருடைய சூழ்நிலை அவருடைய உயர்வுக்கு வழிவகுக்கின்றது. அவர் தம் பிள்ளையைவிட அதிக சுலபமான பாதையில் முன்னேறிச் செல்கிருர். ஆகவேதான் அவர் எளிதாகக் கெட்ட பழக்கங்களில் சிக்குண்டு முடிவில் உடைந்துபோகின்ருர். நவல், வாலிபத் தலைமுறையின் பிரதிநிதி. அவர்கள் உயிரின் குரலே போராட்டம். ஒருவகை உருவத் தெளிவற்ற போராட்டம். மற்ற பாத்திரங்களில் கஜராஜ் சிங், பர்ஜோர் சிங், ஸரோஹன் ராஜா முதலியவர்கள் சிதைந்துகொண்டிருக்கும் "நிலப் பிரபுத்துவ" வர்க்கத்தின் பிரதிநிதிகள், பிரபுதயாள் மற்றும் லட்சுமீசந்த் வளர்ந்துவரும் முதலாளித்துவத்தின் பிரதிநிதிகள். ஞான பிரகாஷ் அரசியல் உணர்ச்சியின் சின்னம். வித்யா புதிய புரட்சிப் பெண்களின் பிரதிநிதி. மீர்ஸாஹப் ஆசிரியருடைய அறிவாற்றலின் ஒரு பகுதிக்கும், மற்றும் பழைய மதக் கொள்கை, நீதி— இவற்றின் நற்பகுதிகளுக்குச் சின்னம். ஆனுல் அவர் புது வாழ்க்கைக்கு அதிகம் தகுந்தவராக இல்லாததால் ஆசிரியர் அவரை விரைவாகவே கதை மேடையிலிருந்து அகற்றிவிடுகிருர். பாத்திரப் படைப்பை ஆராயும்போது மற்றென்றையும் நினைவுகொள்ள வேண்டும். ஆசிரியர் எடுத்துக்கொண்ட நிகழ்ச்சி நிரம்பிய கதையின் போக்குக்கிடையே, வர்க்கத்தின் பிரதிநிதிகளாக, அமையும் பாத்திரங்களது செயலமைப்பே அதிகமாக இருக்கக்கூடும். நிகழ்ச்சிகளுக்கும் பாத்திரங்களுக்கும் தகுந்ததொரு சூழ்நிலைப் பின்னணியை அமைப்பதில்

ஆசிரியர் தமது பிழையற்ற காட்சித் திறமையைக் காட்டியுள்ளார். ஜ்வாலா பிரஸாத் உதவி தாசில்தாரராக நியமிக்கப்படும் நிகழ்ச்சியாகட்டும், அல்லது அல்லாமாவஹ்சீ மற்றும் ஸ்வாமி ஜடிலாநந்தர்—இவர் தம் வாதப் போராகட்டும், நவல் ஜெயிலுக்குப் போகும் ஊர்வலமோ கோஷங்களோ ஆகட்டும்—எல்லா இடங்களிலும் ஆசிரியர் அந்தந்தச் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு கதையையும் பாத்திரங்களையும் நிறைவுபடுத்தியிருக்கிறார். அதே நேரத்தில் ஆசிரியர் சூழ்நிலையில் மிகையான ஈடுபாடும் காட்டவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். படிப்பவர் கவனத்தைக் கதையிலிருந்து விலக்கி வேறொன்றில் சிக்க வைத்திடுகிறார் என்ற எண்ணமே தோன்றவிடாமல் பார்த்துக் கொண்டுள்ளார். சூழ்நிலையைச் சித்தரிப்பதில் ஆசிரியருக்கு மிகப் பெரிய வெற்றியாகும்.

நாவலுடைய மொழி நடையில் நமக்கு பிரேம்சந்தில் காணப்படுகின்ற இயற்கை—எளிமை கொண்ட குரலே கேட்கின்றது. ஆசிரியர் மிகையான கொண்ட அணிச் சுமையோ, அல்லது அளவுக்கு மீறிய உணர்ச்சி வேகமோ நிரம்பிய மொழியைக் கையாளாது நாவலை மிகவும் சுவை கொண்ட பயனுள்ள வல்லமை படைத்த மொழியாட்சியும் சொற் பண்பும்கொண்டு இயற்றியிருக்கிறார். உண்மையில் கடந்த அரை நூற்றாண்டில் மறைந்து மறந்த காட்சிகளே மீண்டும் நம் கண்முன் வருகின்றன; சுவை மிகுந்தவையாகி நம்மை ஈர்க்கின்றன. சுதந்திரத்திற்குப் பின்னர் தோன்றிய ஹிந்தி இலக்கியத்தில் இந்த நாவல் ஒரு வெற்றி பொருந்திய படைப்பாகும். தன் முறையில் தூண்டுதலளிப்பதாகவும் விளக்கந் தருவதாகவும் அமைந்துள்ளது "மறைந்த காட்சிகள்."

—தேவீ சங்கர் அவஸ்தி

முதல் பகுதி

1

முன்ஷி சிவலால் மனுப்பத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். "உமக்கு என்னமாதிரி மனு தயார் செய்து கொடுத்திருக்கிறேன் தெரியுமா டாகுர்! அந்த 'மைக்கூ' பயல் சரியாக அஞ்சு வருஷத்துக்கு கம்பி எண்ணப் போகிறான் பாரும்."

மனுவின் வாசகத்தைக் கேட்டு டாகுர் பூப் சிங் துள்ளிக் குதித்தார். "பலே! முன்ஷி! ஒப்புக்கொண்டேன் உம்ம சாமர்த்தியத்தை! என்ன பிரமாதமாக எழுதியிருக்கிறீரு! ஆகா!" இவ்வாறு கூறிக்கொண்டே டாகுர் பூப் சிங் ஒரு எட்டணைக் காசை எடுத்து முன்ஷி சிவலாலுக்குக் காணிக்கை இட்டார்.

சிவலால் முன்ஷிக்கு முகம் கோணிப்போயிற்று. "டாகுர்! ஒரு ரூபாய்க்கு பைசா குறைஞ்சால்கூட நான் வாங்கிக்கமாட்டேன். சின்ன வக்கீல் எவன்கிட்டே யாவது மாட்டிக்கிட்டிருந்தீரானா சரியா ரெண்டு ரூபா கீழே வைக்கச்சொல்லி யிருப்பான். அதுமட்டுமில்லாமே உன் கேஸையும் கெடுத்துவிட்டிருப்பான்!"

நீண்டதொரு சர்ச்சைக்குப் பின் டாகுர் பூப் சிங் ஒரு நாலணாவை எடுத்துக் கொடுத்தார். அந்த நாலணா வையும் வாங்கிக்கொண்ட பின் முன்ஷி சிவலால் மனுவை டாகுர் பூப் சிங்கின் கையில் வைத்தார்.

"கேள்வி போடப்போறுங்க, டாகுர்; நீர் நேரே கலெக்டர் துரை கச்சேரிக்குப்போம். ஆமா, மனுவோடே நாலணு துட்டையும் பேஷ்கார் கையிலே வைக்க மறந்து விடாதேயும், புரிஞ்சுதா ?"

முன்ஷி நடுத்தர உயரமுள்ள மெலிந்த மனிதர். வயது ஏறத்தாழ ஐம்பது ஐம்பத்தைந்து இருக்கும். சிறிய மீசை ஒழுங்காக வெட்டிவிடப்பட்டு, கருப்பும் வெளுப்புமாகத் தோன்றியது. அம்மை வடு இல்லாமல் இருந்திருந்தால் முகவெட்டு அழகியதென்றே சொல்லி யிருக்கலாம். மாநிறமாயினும் முகம் அம்மை வடு காரணமாகக் கறுத்துத் தோன்றியது.

டாகுர் பூப் சிங்கை அனுப்பிவிட்டு முன்ஷி சிவலால் வெற்றிலை பாக்குப் பையை எடுத்தார். வெற்றிலை பீடா தயார் செய்துகொண்டே குரல் கொடுத்தார் "அடே களீடே!"

பதஹ்புர் ஜில்லா கலெக்டர் கச்சேரி காம்பவுண்டில் இருந்த அந்தப் பழைய பெரிய ஆலமரத்தின் நிழலில் மண் பானைகளை வைத்துக்கொண்டு 'களீடே' கச்சேரிக்கு வந்துபோகும் ஜனங்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் ஓய்ந்து தூங்கி வழிந்துகொண்டிருந்தான். முன்ஷி சிவலாலின் குரலைக் கேட்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். கண்களைக் கசக்கியவாறு அங்கிருந்தே சொன்னுன் "என்னத்துக்கு முன்ஷி! ஏதுக்குக் கூப்பிடறீங்க ?"

"அடே! வாடா கொஞ்சம் இப்படி!"

களீடே பல்லக்குத் தூக்குவதும் தண்ணீர் நிரப்புவதும் தொழிலாகக் கொண்ட 'கஹார்' சாதியைச் சேர்ந்தவன். சிவலாலுடைய வீட்டிற்கு அருகிலேயே குடியிருந்தான். களீடேவின் மனைவி 'சின்கீ'. அவள் சிவலாலின் வீட்டில் வேலைசெய்து வந்தாள். களீடே கச்சேரிக்கு வருகிறவர்

களுக்குத் தண்ணீர் கொடுத்துவந்தான். முன்ஷி கஸீடே யின் முன்னால் ஒரு நாலணா காசை விட்டெறிந்தார். "சாயங்காலம் கச்சேரியிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது நாலணாவுக்கு சாராயம் வாங்கிக்கிட்டு வா."

கஸீடே வியப்புடன் முன்ஷியைப் பார்த்தான். "ராம ராம! என்ன முன்ஷி ஒங்களுக்கு வெட்கமாக இல்லே? கழுத்திலே வேறே ஜப மாலே! குடிக்க ஆரம்பிச்சிட்டீங் களே இண்ணேலேருந்து?"

சிவலால் சிறிதுநேரம் பேசாமல் யோசித்துக்கொண் டிருந்தார். "நீ சொல்றதும் சரிதான்!...........அடி சக்கை! பலே யோசனை. இதோ பாரு; வீட்டிலே ஒரு பாட்டில் கங்கா ஜலம் இருக்குது. அதிலே நாலு சொட்டு சாரா யத்துலே விட்டாப் போச்சு! கங்கா ஜலம் பட்டா எல் லாமே சுத்தமாய்விடும். அப்புறம் ஏது தோஷம்?"

கஸீடே சிரித்தான். "பலே! முன்ஷி! ஒப்புக்கொண் டேன் உம்முடைய மூளையை!" நாலணாக்காசை எடுத்துக் கொண்டு கஸீடே ஆலமரத்தடியில் கூடியிருந்த நான் கைந்து பேர்களுக்குத் தண்ணீர் ஊற்றப் போய் விட்டான்.

சிவலால் பீடாவை வாயில் போட்டுக்கொண்டார். இனி கட்சிக்காரர்களைத் தேடித்திரிய வேண்டியதுதான். அப்போது கலெக்டரின் சேவகன் சந்தன் சிங் ஓடோடி யும் வந்தான். "முன்ஷிஜீ! உங்களை எவ்வளவு நேர மாத் தேடிக்கிட்டிருக்கிறேன்! துரை உங்களை இப்பவே வரச்சொன்னாரு".

முன்ஷிக்கு முகம் வெளுத்துவிட்டது! டாகுர் பூப் சிங்கின் பத்திரத்தில் தான் காட்டியிருந்த கைவரிசை யைப் பார்த்துவிட்டுத்தான் ஒருவேளை துரை கோப மடைந்துவிட்டாரோ? சந்தன் சிங் முன்ஷி சிவலாலுக்கு உதறல் எடுத்ததைக் கவனித்துவிட்டான். அவருக்குத்

தைரியம் ஊட்டியவண்ணம் சொன்னான் "பயப்படும் படியா ஒண்ணுமில்லே முன்ஷி, துரையும் பேஷ்காரும் சிரிச்சுப் பேசிக்கிட்டு இருக்காங்க. உங்ககிட்டே கோபம் ஒண்ணுமில்லே".

முன்ஷி வீறாப்பை விடவில்லை. "கோவிச்சுக்கிட்டா மாத்திரம் என்னவாம்! என்னை என்ன செய்துவிட முடியும்? நியாயமா உழைச்சுப் பிழைக்கிறவங்க நாங்க! ராம நாமத்தை ஜபம் செய்கிறவங்க!"

கலெக்டர் தம்முடைய "சேம்பரி"ல் அமர்ந்து அன்றைய மனுக்களைப்பற்றி பேஷ்கார் கூறும் விவரங்களைக் கேட்டு தக்கவாறு ஆணைகள் பிறப்பித்துக்கொண்டிருந்தார். முன்ஷி சிவலால் உள்ளே நுழைந்தார். "வெல்.... முன்ஷி. நீ பெரிய கைக்காரன் அப்பா!"

"எல்லாம் துரையோட தயவுங்க! நம்மாலே ஏதாச்சும் தப்புத்தண்டா நேர்ந்து போச்சுதுங்களா?"

கலெக்டர் பேஷ்காரிடம் பூப் சிங்கின் மனுவை எடுக்கச்சொன்னார்.

"டாகுரை அந்த பனியா அடிச்சுட்டான்! பொதி மாடு ஒண்ணு வந்து அந்தப் பனியாவை முட்டித் தள்ளிவிட்டது! நல்ல கதை அப்பா! இவையெல்லாம் அப்படியே நாங்கள் நம்பிவிடுவோம் என்று நீ நினைக்கிறே! நிசத்தைச் சொல்லு! என்ன விஷயம்? நான் போலீஸ் விசாரணை நடத்த ஆர்டர் போட்டிருக்கிறேன்."

கனைத்துத் தொண்டையைச் சரிசெய்துகொண்டு சிவலால் கூறினார். "துரை என் உயிரைக் காப்பாத்துகிறதா உறுதி சொன்னால் உண்மையைச் சொல்லிவிடுகிறேனுங்க!"

கலெக்டருக்கு அன்று நல்ல 'மூடு'. இலேசாகச்சிரித்துக் கொண்டே "சரி போ! உன்னை மன்னிச்சுட்டேன்! ஆனால் நிசத்தை சொல்லிவிடு. ஒரு பொய் வார்த்தை

இருக்கக்கூடாது!'' என்ருர்.

"இந்த மைக்கூலால் இருக்கிருனே பெரிய கசவாளிப் பய, துரை! நூற்றுக்கணக்கான குடியானவங்களை இவன் அழிச்சுப்போட்டானுங்க! இவன்கிட்ட கடன் வாங்கினவன் எவனும் கடனைத் தீர்த்துக்கொண்டதே கிடையாது".

"ஓ! அதாவது இந்த மைக்கூலால் "லேவாதேவி" செய்கிற ஒரு பனியா! இப்போ புரிஞ்சுது! அப்படியானுல் நிசமாகவே இவன் ஒரு ஏமாற்றுக்காரனுகவே இருப்பான்! சரி, மேலே சொல்லு".

"பூப் சிங் ஒரு யோக்கியமான குடியானவன். ஆனுல் அனுபவம் இல்லாதவன். இவன் போய் மைக்கூலாலிடம் சிக்கிக்கொண்டான். இதுவரை மைக்கூலால் இவன்கிட்டே அசலைப்போல மூணுமடங்கு வசூல் செய்தாச்சு. ஆனுலும் கடன் தீர்ந்தபாடில்லை! மைக்கூலால் இப்போ, இவனுடைய வீட்டுமேலேயும் நிலத்து மேலேயும் கண் வெச்சிருக்கான். பூப் சிங்குக்கு கோபம் வந்ததுன்னு அதிலே ஆச்சரியம் என்னங்க?''

"அப்படியானுல் இந்த மனுவில் எழுதியிருப்பதெல்லாம் பொய்தானே?'' கலெக்டர் கேட்டார்.

"துரை! நிசம், பொய் என்பது சாட்சியத்தைப் பொறுத்ததுங்க! துரை அவர்கள் என்னை ஒரு பொது மனுஷன்னு நினைச்சுக் கேட்டதிலுலே சொன்னேன். துரை! துஷ்டப் பயலோடே துஷ்டத்தனமாக நடந்து கொண்டால்தான், அவனுக்குப் புரியும்!''

கலெக்டர் சிரித்தார். "முன்ஷி, நீயும் பெரிய கசவாளி தானே! ஆனுல் உங்கிட்டே எனக்கு சந்தோஷம்தான். ஆமாம், உன்னுடைய பிள்ளை ஜ்வாலா பிரஸாதைப் பற்றிச் சொல்லியிருந்தியே நீ".

"துரைதான் இந்த ஏழைக்கு இரங்கி காப்பாத்த

வேணும். ரெவின்யூ இலாகாவில் ஒரு குமாஸ்தா வேலை போட்டுக்கொடுத்தால் நாங்க பொழைச்சிகிடுவோம் துரை!''

கலெக்டர் இந்தத்தடவை உரக்கச் சிரித்தார். "வெல் முன்ஷி! என்ன சொல்றேப்பா நீ! உன் பிள்ளையை உதவி தாசில்தாராக நியமனம் செய்யத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்!''

முன்ஷிக்கு தம் காதுகளையே நம்ப முடியவில்லை. கண்களை அகல விழித்து கலெக்டரைப் பார்த்தார். "துரை! என்ன சொன்னீங்க? ஜ்வாலா பிரஸாதை உதவி தாசில்தார் பதவிக்குத் தேர்ந்தெடுத்திருக்கீங்களா? நான் காதாலே கேட்கிறது நெசந்தானுங்களா?''

கலெக்டர் சர்க்கார் ஆர்டரை சிவலாலின் கையில் கொடுத்துச் சொன்னார் "இந்தா ஆர்டர்! இன்னும் பதினைந்து நாளில் ஜ்வாலா பிரஸாத் கான்பூர் ஜில்லாவில் உள்ள காடம்புர் தாசீலில் போய் வேலையில் சேர வேண்டும். அவனை சீக்கிரமாக என்னை வந்து பார்க்கச் சொல். அவனுக்கு நான் எல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன்''.

முன்ஷி சிவலால், சரேலென்று கலெக்டருடைய கால்களில் விழுந்து பிடித்துக்கொண்டார். "துரைதான் எங்களுக்குத் தந்தையும் தாயும்! தலைமுறை தலைமுறைக்கும் நாங்க உங்களுக்கு நன்றிக் கடன் பட்டவங்க''. சிவலால் எழுந்து பேஷ்காருக்கும் நீண்டதொரு சலாம் போட்டார்.

கச்சேரியில் உட்கார்ந்து மனு எழுதிக் கொடுத்துப் பிழைக்கும் சிவலாலுடைய மகன் ஜ்வாலா பிரஸாத் உதவி தாசில்தார் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் என்ற செய்தி பதஹ்பூர் எங்கும் மின்னல் வேகத்தில் பரவிவிட்டது. முன்ஷி சிவலால், வீட்டுக்குப்போய்

அனைவருக்கும் இந்த சந்தோஷச் செய்தியை இன்னும் தெரியப்படுத்தவில்லை. ஆனால் அதற்குள்ளேயே செய்தி அவர் வீட்டை எட்டிவிட்டது. முன்ஷி சிவலாலுடைய தம்பி முன்ஷி ராதேலால் அக்கம்பக்கத்தார் சூழ்ந்திருக்க விவரம் சொல்லிக்கொண்டிருந்தார். "எங்க குடும்பத்தை என்னன்னு எண்ணிக்கிட்டீங்க? சிப்பாய்க் கலகம் நடந்ததே, அதுக்கும் முன்னே எங்க குடும்பத்துடைய பெருமை எப்படி இருந்ததுன்னு பாக்கணும்! நம் நாட்டுச் சரித்திரத்திலே, எங்க குடும்பத்தோட பெரும் பலத்தைக் கொண்டுதான் நவாபுகள் எல்லாம் அரசாட்சி நடத்த முடிஞ்சுதுன்னு எழுதியிருக்கு! அந்த கலெக்டருக்கு இதெல்லாம் நல்லாத் தெரியும்! பார்த்தீங்களா, நாங்க கேட்காமலேயே எப்படி ஜ்வாலா பிரஸாதுக்கு உதவி தாசில்தார் உத்தியோகம் கொடுத்தாருன்னு?

அக்கம்பக்கத்தாருக்கெல்லாம் ராதேலாலின் குடும்பத்தைப்பற்றி மூன்று தலைமுறைகளாகவே நன்கு தெரியும். ராதேலாலுடைய தாத்தா முன்ஷி குந்தன்லால் பதல்பூருக்கு முதன் முதலில் கிராமப் பட்டாமணியம் செய்ய வந்தார். ஏமாற்று வித்தையிலும், களவாளித்தனத்திலும், சூதுவாது வேலைகளிலும் பெயர் வாங்கியவர்! குந்தன்லால் செங்கல் கட்டடமாக ஒரு நல்ல வீட்டை விரைவிலேயே கட்டிக்கொண்டார். ஆயிரம் ஆயிரமாக ரொக்கப் பணம் சேர்த்து வைத்தார். நிலம் நீச்சு வாங்கி ஜமீன்தார் ஆகிவிட வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென்று அவருக்கு டாகுர் சூமர்சிங்குடன் சச்சரவு உண்டாகிவிட்டது. டாகுர் சூமர்சிங் வெறும் ஜமீன்தார் மட்டும் அல்ல பெரிய கொள்ளைக்காரனும் கூட. ஆகவே ஒருநாள் இரவு முன்ஷி குந்தன்லால் வீட்டில் கொள்ளை நடந்தது.

கொள்ளைக்காரர் புகுந்து முன்ஷி குந்தன்லாலுடைய கை கால்களைக் கட்டிப்போட்டு வீட்டிலிருந்த நகை நட்டு பணம் எல்லாவற்றையும் சூறையாடி விட்டார்கள். போகும்போது அவர்கள் குந்தன்லாலிடம் ஏதாவது கூச்சல்போட்டு அமர்க்களம் செய்தால் குடும்பத்தையே பூண்டோடு ஒழித்து விடுவோம் என்று எச்சரித்து விட்டுப் போனார்கள்.

குந்தன்லால் சம்பாதித்த சொத்தில் வீடு ஒன்று மட்டுமே அவருடைய பிள்ளை பன்வாரீலாலுக்குக் கிட்டியது. பன்வாரீலால் ஒரே பிள்ளை; எழுத்து வாசனையே இல்லாதவன். தறுதலையாகத் திரிந்தான். வாழ் நாள் முழுவதும் பெரும் ஆடம்பரத்துடன் வாழ்ந்தான். இந்த "டம்பாச்சாரி" வாழ்க்கை எப்படி சாத்திய மாயிற்று என்று ஒருவருக்கும் தெரியாது. பன்வாரீ லாலுக்கு இரண்டு பிள்ளைகள். முன்ஷி சிவலாலும், முன்ஷி ராதேலாலும். சிவலால் கோர்ட்டில் மனு எழுதிக் கொடுக்கும் தொழில் செய்து பிழைத்து வந்தார். முன்ஷி ராதேலால் கோர்ட் விவகாரம் செய்பவர்களுக்கு உதவி செய்தும் வக்கீல்களுக்குத் தரகு வேலை செய்தும் காலந் தள்ளி வந்தார்.

முன்ஷி ராதேலாலுடைய பீற்றல்களைக் கேட்டு ஏதா வது வியாக்யானம் செய்வதற்கோ அல்லது மறுத்துக் கூறுவதற்கோ ஒருவருக்கும் துணிவில்லை. அக்கம்பக்கத் தாருக்கு முன்ஷி ராதேலாலிடம் மிகுந்தபயம். எப்போது யாரை எந்தவிதமான சங்கடத்தில் மாட்டிவைப்பார் என்று யாருக்கும் தெரியாது. சிவலால் வீடு வந்து சேர்ந்ததும் எல்லாருமாகச் சூழ்ந்துகொண்டு பாராட் டுரை வழங்க ஆரம்பித்தனர். "முன்ஷிஜீ, விருந்து என் றைக்கு வைக்கப் போறீங்க?"

சிவலால் புன்முறுவல் பூத்தார். "உங்க எல்லாருக்

டைய தயவும் ஆசீர்வாதமும்தான் இது! பகவான் எங்க பிரார்த்தனைக்கு மனமிரங்கி விட்டான். மூன்று நான்கு நாளில் சத்திய நாராயணர் கதை புராண காலக்ஷேபத் திற்கு ஏற்பாடு செய்யப்போகிறேன். ஜ்வாலாவும் வந்து விடுவான். அன்றைக்கே விருந்து வெச்சிக்கலாம்''

அக்கம்பக்கத்தாரை அனுப்பி வைத்துவிட்டு முன்ஷி வீட்டிற்குள் தன் அறைக்குச் சென்று ஆடைகளை மாற்றிக்கொண்டார். அந்த சமயம் பார்த்து சின்கீ அறைக்குள் நுழைந்தாள். கஹார் சாதியைச் சேர்ந்த சின்கீக்கு ஏறத்தாழ முப்பது வயது இருக்கும். கட்டான உடலமைப்பு. கருத்த நிறம். முகத்தில் எப்போதும் நாட்டியமாடும் துடுக்குச் சிரிப்பு. கஸீடேவுக்கு அவள் இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டவள். முதல் தாரம் ரதியா. சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் தன் எட்டு வயது மகன் 'பிகூ'வை கஸீடே கையில் ஒப்படைத்து விட்டு கண்ணை மூடிவிட்டாள். ''சின்கீ''க்கு குழந்தை குட்டி பிறக்கவில்லை; இனிப்பிறக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. கஸீடேவுக்கு வயது அறுபதை எட்டிவிட்டது.

முறுவல் பூத்தவாறு சின்கீ சொன்னாள். ''இந்தத் தடவை எனக்கு வெள்ளிச் சங்கிலி பண்ணிக் கொடுக்கணும்! பிள்ளைதான் உதவி தாசில்தார் ஆயிட்டானே!''

ஒத்துக்கொண்டார் முன்ஷி. ''நாளைக்கே தட்டானிடம சங்கிலி பண்ணச் சொல்லிவிடுகிறேன். ஆமாம். மருமகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்?''

முன்ஷிக்கு மனைவிபோய் சுமார் எட்டு ஆண்டு ஆகி விட்டது. தாய் இறக்கும்போது ஜ்வாலா பிரஸாதுக்கு பதினாறு வயது. அதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே ஜ்வாலா பிரஸாதுக்கு திருமணம் ஆகிவிட்டது. சிவலால் மீண்டும் திருமணம் செய்து கொள்ளவில்லை.

உறவினர்கள் மிகவும் கட்டாயப்படுத்தினர். ஆயினும் ஒன்றும் பலிக்கவில்லை. "பிள்ளை இருக்கிருன்; மருமகள் இருக்கிருள்; தம்பி இருக்கிருன், அவன் குடும்பம் இருக்கிறது. இவ்வளவும் இருக்க எனக்கு மறுபடியும் கல்யாணம் எதுக்கு? இனிமேலே ராமா ராமான்னு இருக்கவேண்டியது"

ஆறு மாதங்களுக்குமுன் ஜ்வாலா பிரஸாதுக்கு சாந்தி கல்யாணம் நடைபெற்றது. அவனுடைய மனைவி யமுனை புக்ககம் வந்துவிட்டாள். ஆயினும் வீட்டில் ராதேலாலுடைய மனைவியின் ஆட்சிதான் நடைபெற்று வந்தது யமுனை மருமகள் மட்டுமே. அப்போது அவளுக்கு வயது பதினறு.

சின்கீ சிறிது சிணுங்கிக் கொண்டும், சிறிது காரியமார்த்தமாகவும் பேசத் தொடங்கினள். "யமுனை சமையல் செய்துகொண்டிருக்கு; சின்ன எசமானியம்மா மருமகளை ரொம்பப்படுத்துருங்க, ஐயோ பாவம்! அந்தச் சின்னஞ் சிறிசை ராவும் பகலுமா வேலை வாங்குருங்க. நான்தான் கேக்கிறேன். நீங்க ஏன் சின்ன எசமானியம்மாளை ஒரு வார்த்தை கேக்க மாட்டேங்கிறீங்க?"

"அட, விட்டுத்தள்ளு, சின்கீ ராதேலாலுடைய மனைவி அன்னியப்பட்டவளா என்ன? அவ வீட்டுக்கு எஜமானி! அவள் எது சரின்னு நினைக்கிருளோ அதைச் செய்யரா!"

இதைக் கேட்டு சின்கீ பிரமை பிடித்தவள்போல் ஆனள். பிறகு கூறுவாள் "ஆமாம்! நான்தான் கேட்கிறேன்....சரி! நான் போய் கொஞ்சம் மருமகளுக்கு ரொட்டி இட்டுக் கொடுக்கறேன். பாவம்! அதுக்கு ஏதோ உதவியா இருக்கும்."

பதஹ்பூரில் ஜ்வாலா பிரஸாத் மிகச் சந்தோஷமாக நாட்களைக் கழித்தான். சிவலால் தாமே அவனை ஒவ்

வொரு பெரிய அதிகாரியிடமும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார். உள்ளூர் காயஸ்த சாதியினரும் இதர வகுப்பினர்களும் ஜ்வாலா பிரஸாதுக்கு விருந்து அளித்தனர். முன்ஷி சிவலால் வெகு தாராளமாக ஒரு நடனக் கச்சேரிக்கும் ஏற்பாடு செய்தார். ஜ்வாலா பிரஸாத் பதற்பூரிலிருந்து காடம்பூருக்குக் கிளம்புவதற்கு இரண்டு நாள் முன்னால், சின்கீ யமுனையைக் கேட்டாள் "உன் மாமியாரு உன்னையும் காடம்பூர் அழைப்பவேண்டும் என்று எழுதியிருக்காங்களாமே? ஆனா நீ ஊருக்குப் போற ஏற்பாடு ஒண்ணும் செய்யக் காணோமே? ஜ்வாலாகிட்ட சொன்னியா நீ இதைப் பத்தி?"

யமுனா வருத்தத்துடன் விடையளித்தாள். "என்ன செய்வது சின்கீ சித்தி, நான் அவருகிட்டே சொல்லியாச்சு ஒண்ணும் காதிலே போட்டுக்க மாட்டேங்கிறாரு! அப்பா எது சரின்னு நினைக்கிறாரோ அதையே செய்வேன்னு சொல்றாரு!"

"அப்படின்னா ஜ்வாலா மட்டும் தனியா போவப் போவுதா? சின்ன எசமானியம்மா கூட ஒண்ணும் ஏற்பாடு செய்யறதா காணோமே?"

"தனியாத்தான் போகப் போறாரு போலிருக்கு! எங்கிட்டேதான் அவர் ஒண்ணும் சொல்லறது இல்லையே! அதுவுமில்லாமே, நாங்க ரெண்டுபேரும் ஒரு வார்த்தை பேசிக்கிட நேரம் எங்கே இருக்கு? ராவும் பகலும் விருந்து அழைப்புன்னு போய்க்கிட்டிருக்காரே?

சின்கீ சிறிது யோசித்துவிட்டுச் சொன்னாள் "சரி, கொஞ்சம் இரு! நான் போய் பெரிய முன்ஷிகிட்டே பேசிப் பாக்கறேன்! புருஷனோடே நீயும் போகவேண்டிய அவசியம் இருக்குது. இல்லாட்டி ஜ்வாலாவைப் பாத்துக்கிறது யாரு?"

சின்கீயின் வார்த்தையைக் கேட்டு யமுனு அச்சம் அடைந்தாள். சின்கீயின் கையைப் பற்றிக்கொண்டு "உன்னை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன், சின்கீ சித்தி. இதையெல்லாம் நீ இந்த சமயத்திலே கிளப்பாதே! எல்லாம் நான் செஞ்ச வேலைதான்னு சித்தி நினைப்பா அப்புறம் என்னை விடமாட்டா. உனக்குத்தான் அவ சுபாவம் தெரியுமே!"

சின்கீ தன் கையை விடுவித்துக்கொண்டு "இவ்வளவு பயப்பட்டா ஒண்ணும் நடக்காது பொண்ணே! ஆனாலும் என்ன, நான் போய் பெரிய முன்ஷிகிட்டே சொன்ன தாக இதெல்லாம் சொல்வேனு? நான் எப்படியாவது ஜ்வாலாவோடுகூட உன்னையும் அனுப்புறதுக்கு அவரை சம்மதிக்க வெக்கறேன் பாரு! நீ கவலைப்படாதே" என்றாள்.

முன்ஷி சிவலால் ஸ்நானம் செய்துவிட்டு பூசைக்கு உட்காரப் போனார். இதற்குள் சின்கீ அவருடைய அறைக்குள் நுழைந்தாள். கண்ணால் அவளைப் பார்த்து ஒரு கேள்விக் குறி போட்டார். சின்கீ சொன்னாள், "ரொம்ப முக்கியமான ஒரு சமாசாரம்!" "உன் சமா சாரம் பூசை முடியறவரைக்கும் நிற்காதா?" சிறிது சிடு சிடுப்புடன் சிவலால் கேட்டார்.

"அதுவரைக்கும் பொறுத்துக்கிடற சமாசாரமா இருந்தா நான் வந்து உங்க பூசையிலே தடங்கல் செய் வேனு? எப்போதாவது நான் இந்தமாதிரி புத்திகெட்ட வேலை செய்தது உண்டா?"

முன்ஷி அமைதியாகக் கூறினார். "சரி சரி! சீக்கிரமா சொல்லு உன் சமாசாரத்தை! எனக்கு இன்னிக்கு நிறைய வேலை. ஜ்வாலாவுக்காக ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கு"

சின்கீ ஆரம்பித்தாள். "எனக்கு உங்க வீட்டிலே ஒரு

உரிமையும் இல்லேங்கிறது எனக்கு நல்லா தெரியும். அதைப்பத்தி நான் ஒண்ணும் குறைபட்டுக்கிடல்லே. ஆனா, ஒரு விசயம். ஜ்வாலா தனியாகத்தான் ஊருக்குப் போகப் போவுதா?''

"ஆமாம். ராமு சம்சாரத்துக்கு பிரசவம் ஆகப் போறதில்லையா? அதனால் சின்ன மச்சினி போவதை நான் தடுத்துவிட்டேன். அவன் என்னமோ தானும் போவேன்னு தயாராகத்தான் இருந்தா."

"அப்படின்னா ஜ்வாலா சாப்பாட்டுக்கு என்ன செய்வாரு?" "அட, அங்கே எவனேயாவது சமையல்காரனே வெச்சுக்கிட்டு போறான். பெரிய ஆபீஸர் உத்யோகம் செய்ய போகிறான். வேலையாளுக்குப் பஞ்சமா? ஜ்வாலா கிட்டே எல்லாம் சொல்லி இருக்கிறேன். நீ அதைப்பத்தி கவலைப்பட வேண்டாம்.''

"யோசனையைப் பாருங்க யோசனையை!'' சின்னீ முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள். "வேலைக்காரங்களை நம்பிக்கிட்டு யாராவது குடும்பம் நடத்தியிருக்காங்களா? அது என்னமா முடியும்? வெளியூர் சமாசாரம். அதிகாரம் வேறே கையிலே கிடைச்சிருக்குது. ரெண்டுங்கெட்டான் வயசு"

முன்ஷி சிவலால் அவளை ஒரு அதட்டு அதட்டினார், "என்ன, இது எதெதையோ பேத்திக்கிட்டு". கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் யோசனை செய்தார். சின்னீயை அவர் அதட்டி விட்டாரே தவிர, அவள் கூறிய வார்த்தையைக் கேட்டு அவரும் சிறிது அயர்ந்துதான் போனார். இந்தக் கோணத்தில் அவர் யோசித்துப்பார்க்கவே இல்லை. வாழ்க்கையில், எல்லாவற்றையும் விட மிகச் சாதாரணமானதும், இயற்கையானதுமான கோணம் அல்லவா இது.

சிவலாலின் மனதில் அலையாடும் எண்ணங்களை

உணர்ந்துகொண்டுவிட்டாள் சின்கீ. தான் போட்ட அம்பு குறி தவருது இலட்சியத்தில் போய் தைத்துவிட்ட தென்று உணர்ந்து கொண்டாள். மேலும் தொடர்ந் தாள்.

"நான் நினைக்கிறது என்னென்னு கேட்டா, ஜ்வாலா வைப்போல நல்ல குணமுள்ள பிள்ளை வேறொருத்தன் இருக்கமாட்டான். ரொம்ப சாது. நேர்மையானவன். ஜ்வாலாவை வேலைக்காரங்க அன்போடும் ஆசையோடும் கவனிச்சுக்குவாங்களா? நீங்களே யோசிச்சுப் பாருங்க! உடம்புக்கு ஒண்ணும் வராம இருக்கணுமே"

சிவலால் கண்களைத் திறந்தார். சின்கீ பக்கம் வைத்த கண் வாங்காமல் சிறிதுநேரம் பார்த்தார். பிறகு கேட் டார். "சரி, அப்படின்னு உன் மனசிலே என்ன இருக் குது என்று சொல்லு"

சின்கீ சிறிது மிடுக்குடன் சொன்னள் "உங்களோடே பேசறதுக்கே பயமா இருக்குது, தவரு நினைக்கலேன்னு சொல்லிடறேன். ஆனாலும் என் வார்த்தையை நீங்க ஒத்துக்கணும்னு என்ன இருக்குது!"

"அட சொல்லேன். ஒத்துக்கத் தகுந்ததா இருந்தா கட்டாயம் ஒத்துக்குவேன்"

"அப்படின்னு கேளுங்க, நான் என்ன சொல்றேன்னு, ஜ்வாலாவோடே பெஞ்சாதியையும் கூட அனுப்புங்க"

"முன்ஷி ராம்சகாயம் இதைத்தான் எழுதியிருந்தார். ஆனல் மருமகளை எப்படித் தனியா அனுப்பறது? தனி யாக அவளால் சமாளிக்க முடியுமா?"

"தனி என்ன தனி? அதுதான் ஜ்வாலா கூட இருக் கிருனுங்களே"

"அது சரிதான். ஆனாலும் பாரு, மருமகளுக்கு உதவி செய்யறதுக்கு யாராவது துணை வேணுமே"

"அப்படின்னு நான் ஒண்ணு சொல்லறேன். ஜ்வாலா

பெரிய ஆபீஸரா உத்தியோகம் செய்யப் போருனுல்லே! அப்போ ஒரு சேவகனும் கூடவே இருக்கவேணுமே. நீங்க சரின்னு சொன்ஞ, பீக்கூவை அவன்கூட அனுப்பி வைக்கிறேனுங்க"

பீக்கூ உடன் போகமுடியும் என்று சின்கியே சொல்லக்கேட்டு சிவலால் சிறிது அசைந்து கொடுத்தார். சின்கீ சொன்னது சரிதான். உதவி தாசில்தாராகப் போகிருன் ஜ்வாலா! வேருென்றும் இல்லையென்ருலும் பார்க்கிறவர்கள் மதிக்கிற வகையில், கூட ஒரு தனிப் பட்ட சேவகள் இருப்பது நல்லதுதான். பீக்கூ எப்போதும் வீட்டிலேயே இருப்பவன். சிவலால் வீட்டுக்கு அருகிலேயே பிறந்து, அவருடைய வீட்டிலேயே வளர்ந்தவன். பீக்கூவும் கூட இருந்தால் ஜ்வாலாவின் மனைவிக்கு வேற்றூரில் எவ்விதக்கஷ்டமும் உண்டாகாது. இது நிச்சயம்."

"சரி, ஜ்வாலாவினுடைய பெண் ஜாதி கிட்டே சொல்லு போ. அவளும் போவதற்கு ஏற்பாடு செய்யட்டும். இங்கிருந்து நாளன்னைக்கு மத்தியானம் கிளம்பிப் போகணும். நான் சின்னவ கிட்டேயும் சொல்லிடறேன். இதோ பார், பீக்கூவும் கூடப்போகணும்! வேண்டிய ஏற்பாடு செய்யச் சொல்லு."

2

ஜ்வாலாவுடன் பீக்குவை அனுப்பவேண்டும் என்ருல், முதலில் கஸீடே அதற்கு சம்மதிக்க வேண்டும். இது சின்கீக்கு மிக எளிதான காரியம்.

தாசில்தார் அல்லது உதவி தாசில்தாரிடத்தில் வேலை என்பது, மகாராஜா அரண்மனையில் வேலை செய்வதற்கு சமானம் என்று கஸீடே அறிவான். மேலும் முன்சீ சிவலால் வீட்டில் பீக்கூவும் வீட்டுப் பிள்ளைகளில் ஒருவனுகவே பாவிக்கப்பட்டு வளர்ந்தவன். ஆகவே கஸீடே சின்கீயின் யோசனையைக் கேட்டு முழு மனத்துடன் அதனை ஏற்றுக்கொண்டான். கஸீடே பீக்குவைக் கூப்பிட்டு, அவனை ஜ்வாலாபிரஸாதுடன் காடம்புருக்குப் போகச் சொன்னுன். அதைக் கேட்டு பீக்கூ சந்தோஷம் தாங்காமல் துள்ளிக் குதித்தான். புதிய இடத்துக்குப் போகிருேம், தானே சம்பாதித்தும்பிழைக்கப்போகிருேம் என்ற மகிழ்ச்சியில் தாய் தந்தையரைப் பிரியப் போகிருேம் என்ற பிரிவாற்ருமையை உணரவில்லை.

ஜ்வாலா—யமுனு இவர்களோடு பீக்கூ காடம்பூர் போய்ச் சேர்ந்தான். திடுதிப்பென்று ஏதோ பெரும் பதவி வந்துவிட்டது போன்றதொரு அனுபவம் உண்டாயிற்று. ஜ்வாலாபிரஸாதின் வீட்டுப் பொறுப்பு பீக்கூ கையில்தான். சர்க்கார் வேலை காரணமாக ஜ்வாலாவுக்கு ஓய்வே கிடைப்பதில்லை. யமுனுவோ, ஒரு பெரிய ஆபீஸரின் மனைவி என்ற நிலையில் தன் கடமைகளைக் கவனித்தவாறு வீட்டுக்குள்ளேயே பர்தாவில் இருக்க வேண்டியிருந்தது, அரியணையில் அமர்ந்து ஆணையிட்டு அதிகாரம்புரிந்தாள். வீட்டின் வரவு செலவுக் கணக்குகளெல்லாம் பீக்கூவின் கையில் இருந்தது. சாமான் அறைச் சாவியும் அவனிடம்தான். ஒருவகையில் யமுனுவுக்கும் ஜ்வாலாபிரஸாதுக்கும் இடையே 'நடுவன்' என்ற நிலையை அவன் ஏற்றிருந்தான்.

குளிர்காலம் கழிந்துகொண்டிருந்தது. பீக்கு வீட்டு வெளிப்புறத் தாழ்வாரத்தில் உட்கார்ந்துகொண்டு 'சிலும்பி'யில் புகைபிடித்துக்கொண்டிருந்தான். ஜ்வாலா

பிரஸாத் அன்று சுற்றுப் பயணம் சென்றிருந்தார். யமுனை ஜமீன்தாரிணியைப் பார்க்கப்போயிருந்தாள். அப்போது வீட்டு எஜமான் பீக்கூதான். மிகுந்த மகிழ்ச்சியோடும் பெரும் திருப்தியோடும் சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான் அவன். திடீரென்று அவனுடைய கற்பனை உலகம் கலைந்தது. அவன் எதிரே சிவபுரா நம்பர்தார் நின்றிருப்பதை உணர்ந்தான். "என்னப்பா! உதவி தாசில்தார் வீட்டிலே இருக்காரா?"

"இல்லீங்க; ஐயா, சுற்றுப்பயணத்துக்குப் போயிருக்காங்க. நாளைக்கு வருவாங்கபோலத் தெரியுது", பீக்கூ எழுந்து நின்றுகொண்டு பதில் சொன்னான். நம்பர்தார் தனியாக வரவில்லை. அவருடன் ஒரு ஆள். அந்த ஆளின் தலையில் ஒரு பெரிய கூடை. அவர் பீக்கூவிடம் சொன்னார், "உதவி தாசில்தார் வந்ததும் அவரிடம், சிவபுராவிலிருந்து லாலா பிரபுதயாள் வந்திருந்ததாகச் சொல்லு. நாலைந்து நாளில் மறுபடியும் நான் வந்து பார்க்கிறேன். இந்தா. இந்த சாமானை எசமானி அம்மா கிட்டே கொண்டு கொடு."

லாலா பிரபுதயாள் தன்னுடன் வந்திருந்த ஆளின் தலைச்சுமையை இறக்கி பீக்கூவின் எதிரில் வைக்கச் செய்தார். பீக்கூ ஒரு முறை அந்தக் கூடையின்மீது ஆவலோடு பார்வையைச் செலுத்தினான். பிறகு சிறிது தயக்கத்துடன் சொன்னான், "அம்மா வீட்டிலே இல்லீங்க. ஐயாவும் யாராச்சும் ஏதாவது கொண்டாந்து கொடுத்தா, அவங்க உத்தரவு இல்லாமெ வாங்கிக்கக்கூடாது அப்படின்னு உத்தரவு போட்டிருக்காங்க."

"அடே, நாங்க இந்தக் கூடையை உங்க ஐயாவுக்காக கொண்டுவரவில்லை. இது நம்பர்தாரிணி அம்மா தாசில்தாரிணி அம்மாவுக்காக அனுப்பியிருக்காங்க. வரப் போகிற 'ஹோலி' பண்டிகையை முன்னிட்டு அனுப்பிய

பரிசு இது. இதோடே, அவங்களை ஹோலிக்கு சிவபுரா வுக்கு வரச்சொல்லி அழைப்பும் அனுப்பியிருக்காங்க. தெரிஞ்சுதா!'' லாலா பிரபுதயாள் இடுப்பிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து பீக்கூவிடம் நீட்டினார். ''இந்தா உனக்கு இனம். வாங்கிக்க!''

பீக்கூவுக்கு அந்த ரூபாயைப் பார்த்ததும் தர்ம சங்கடமாகிவிட்டது. கூடையை வாங்கிக்கொள்ளுவதா, வேண்டாமா என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் இப்போது அந்த ரூபாய் நாணயம் அவனுடைய சிந்தனை யின் போக்கைத் திசை மாற்றிவிட்டது. லட்சுமி வரும் போது மறுக்கக்கூடாது என்ற சாஸ்திரம் நினைவுக்கு வந்தது. ''சரிங்க, நம்பர்தார் ஐயா! ஆனா ஒண்ணு, நான் உங்ககிட்ட இனம் வாங்கிக்கொண்ட விஷயத்தை மட்டும் ஐயாகிட்ட சொல்லிடாதீங்க! ரொம்ப கோவிச் சுக்குவாரு!''

பிரபுதயாள் போய்விட்டார். பிறகு பீக்கூ அந்தக் கூடையைத் திறந்து பார்த்தான். அவன் மனம் துணுக் குற்றது. கூடையில் விதம்விதமான விலையுயர்ந்த உயர்ந்த பருப்பு வகைகள் இருந்தன. பிஸ்தா, பாதம், முந்திரி, அக்கரோட்டு முதலியவை. இவற்றோடு 'மக்மல்' துணி ஒரு 'தானு'ம், பட்டுத்துணி ஒரு 'தான்' அளவும் ஒரு வெள்ளித் தட்டில் பட்டுத்துணியில் முடிந்த நூறு ரூபாய்களும் இருந்தன. பீக்கூ அவற்றையெல்லாம் முன்போலவே வைத்து பண்டக அறையில் கொண்டு வைத்தான். பிறகு மீண்டும் தாழ்வாரத்தில் வந்து உட் கார்ந்துகொண்டு புகைபிடிக்கத் தொடங்கினான். இப் போது மனத்தில் ஏதோ ஒரு சுமை. கூடையை வாங்கி வைத்தது ஒரு வேளை தவறோ என்ற சந்தேகம் அவனை வாட்டியது.

மாலையில் யமுனா வீட்டுக்குத் திரும்பிவந்தாள். பீக்கூ

அவள் எதிரில் தான் வாங்கி வைத்த கூடையை எடுத்துக்கொண்டு வந்து வைத்தான். "அம்மா! சிவபுராவின் நம்பர்தாரிணி உங்களுக்காக இதையெல்லாம் அனுப்பிச்சிருக்காங்க. நம்பர்தார் பிரபுதயாள் நேரில் இதைக் கொண்டுவந்து கொடுத்தாரு. நம்பர்தாரிணி ஹோலி பண்டிகைக்கு வரச்சொல்லி அழைப்பு கொடுத்திருக்காங்களாம். முதல்லே நான் ஐயாகிட்டே சொல்லாமே இதை வாங்கக்கூடாதுன்னுதான் நெனைச்சேன். நம்பர்தார் கிட்டேகூட ஒண்ணும் வாங்கிக்கமாட்டேன்தான் சொன்னேன். ஆனா, நம்பர்தார் பிடிவாதமா - இந்தப் பரிசுகளை நம்பர்தாரிணி அம்மா உங்க எசமானி அம்மாவுக்காக அனுப்பிச்சிருக்காங்கன்னு சொன்னாரு. மேலே தடுத்து ஒண்ணும் சொல்ல முடியல்லே, வாங்கி வெச்சுட்டேன்."

யமுனா கூடையைத் திறக்கச் சொன்னாள். வெல்வெட்டு 'கீன்காப்' போன்ற உயர்தர துணிகளைக் கண்டதும் அவளுடைய கண்களில் புத்தொளி வீசியது. அந்த "தான்"களைப் பிரிக்கச்சொல்லி அவற்றை உன்னிப்பாகப் பார்த்தாள்; இப்படியும் அப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். மகிழ்ச்சியினால் அவளுடைய முகம் மலர்ச்சி பெற்றது. பிறகு அவளுடைய பார்வை வெள்ளித் தட்டில் வைத்திருந்த பணமுடிச்சில் விழுந்தது. அந்தப் பணத்தைக் கண்டு அவள் முகம் கறுத்துவிட்டது. பீக்கூவைப் பார்த்து "பீக்கூ, பரிசு என்றால் பழமும் துணியும் சரிதான். ஆனால் இந்த ரூபாய் எதற்கு அனுப்பி இருக்காங்க?" "எனக்கென்ன தெரியுமுங்க? எனக்கு என்ன தோணுதுன்னா, நகை நட்டுன்னா அவங்க அவங்க இஷ்டப்படித்தான் செஞ்சுக்கணும்னு நெனச்சு, உங்க பிரியம்போல நகை செஞ்சிக்க இந்தப் பணத்தை அனுப்பிச்சிருக்காங்க நம்பர்தாரிணி அம்மா."

பீக்கூவினுடைய இந்த வாதத்தினுல் யமுனைவுக்கு முழு சமாதானம் உண்டாகவில்லை. அவள் இனி செய்வது ஒன்றுமில்லை. எது சரி, எது தவறு என ஜ்வாலா பிர ஸாத் தான் தீர்மானம் செய்ய முடியும். பீக்கூவிடம் அவள் சொன்னாள்: "நல்லது! இந்த சாமானையெல்லாம் இப்போதைக்குப் பண்டக அறையில் கொண்டுபோய் அப்படியே வை. முன் இருந்தது போலவே கட்டி வெச்சுடு. அவங்க வந்து எது சரின்னு நினைக்கிறாங் களோ அப்படிச் செய்யட்டும்."

மறுநாள் ஜ்வாலா பிரஸாத் சுற்றுப் பயணத்தை முடித் துக்கொண்டு வந்தார். அவர் வந்ததும் யமுனை பீக்கூவை விட்டு அந்தச் சாமான்களைக் கொண்டுவரச் சொன்னாள். பீக்கூ வெள்ளித் தட்டையும், பணமுடிச்சையும் பண்டக அறையிலேயே எடுத்து வைத்துவிட்டு மற்ற சாமான்களை மட்டும் வெளியே எடுத்துவந்தான். அவற்றைப் பார்த்து விட்டு ஜ்வாலாபிரஸாத் புன்முறுவலுடன் யமுனைவிடம் சொன்னார்: 'மக்மலும்', 'கீன்காபு'மா! அன்றைக்கு ராஜபுராவிலிருந்து திரும்பி வந்தபோது நீ மக்மல் பாவாடை ஒன்று தைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னாய் அல்லவா? இதோ! உன் ஆசை நிறைவேறி விட்டது. ஒரு பாவாடை மக்மலில்! ஒன்று "கீன்காபில்!"

ஜ்வாலா பிரஸாத் பரிசுகளை ஏற்றுக்கொண்டுவிட்டார் என்பதைக் கவனித்த பீக்கூ உள்ளேபோய் வெள்ளித் தட்டையும் பணமுடிச்சையும் எடுத்து வந்து அவர் எதிரில் வைத்தான். ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். "இந்தத் தட்டும் ரூபாயும் எப்படி வந்தது?". "இதுவும் இந்தக் கூடையில்தான் இருந்தது. இதைத் தனியா எடுத்து வெச்சிருந்தேன்". "ம்! இது பண்டிகைப் பரிசு இல்லை. அப்பட்டமான லஞ்சம்! இப்போ புரிந்தது. லாலா பிரபு தயாளிடமிருந்து இதை நீ ஏன் வாங்கினே

பீக்கூ?'' ஜ்வாலா பிரஸாத் குரலில் கடுமை தொனித்தது.

பீக்கூ தன்கட்சி வலுத்திருப்பதை இப்போது உணர்ந்திருந்தான். அவன் சொன்னான். "இந்த கீன்காப், மக்மல், பிஸ்தா, பாதம், பழங்கள் எல்லாம் பரிசுதான்னு சொன்னு இந்தத் தட்டும் பணமும்கூடப் பரிசுதானுங்க. வித்தியாசம் என்னன்னு கேட்டா, நம்பர்தாரிணி அம்மா, நகையா அனுப்பாமே, நம்ப அம்மா இஷ்டப்படறது போல நகை செஞ்சிக்கட்டும்னு பணமா அனுப்பிச்சிருக்காங்க!''

பீக்கூ சொன்னது மறுக்க இயலாத வார்த்தை. "நீ சொல்றது சரி. ஆனல்....சரி! விட்டுத்தள்ளு! ஆமாம்: லாலா பிரபுதயாள் ஏதாவது வேலையா வந்தாரா?''

பீக்கூ பெருமிதப் புன்சிரிப்போடு சொன்னான்: "நீங்க கோவப்படுவீங்கன்னு நான் அவருகிட்டே சொன்னேன். அம்மாவுக்காகன்னு சொல்லாட்டி நான் இதே வாங்கியே இருக்கமாட்டேன். நம்பர்தாரிணி அம்மாதான் இதையெல்லாம் நம்ப அம்மாவுக்கு அனுப்பிச்சு இருக்காங்கன்னு அவரு சொன்னரு. அப்புறம் நான் எப்படி மறுத்து பேசறது? வாங்கி வெச்சுட்டேன்!''

ஜ்வாலா பிரஸாத் யமுனவிடம் கூறினர்: "தையற்காரனை அழைத்து பாவாடை தைத்துக்கொள். பாவாடைக்கு வேண்டிய "லேலைஸ"' நான் கான்பூரிலிருந்து வரவழைத்துக் கொடுக்கிறேன். தட்டானையும் வரவழைத்து, உன் இஷ்டம்போல நகையும் செய்துகொள்.''

லாலா பிரபுதயாள் ஜமீன்தார்தான். ஆனல் பெரிய ஜமீன்தார் அல்ல. இருப்பினும் அவருக்கு நல்ல மதிப்பும் கௌரவமும் இருந்தது. நிலங்களை அவர் வரிசை வரிசையாக வாங்கிக்கொண்டே இருந்தார். சாதியில் அவர் வைசியர். அவருடைய தந்தை பலசரக்குக் கடை வைத்திருந்தவர். பிரபு தயாள் வட்டிக்குப் பணம் கொடுத்து

வாங்க ஆரம்பித்தார். அவரிடம் ஒரு முறை கடன் வாங்கியவன் தன் ஆயுள் முழுவதும் மட்டுமின்றி, தலை முறை தலைமுறை வரை அவருக்குக் கடனாளியாகவே இருப்பான் என்று கூறுவார்கள். அப்படியிருந்தும் அவரிடம் எவருக்கும் வெறுப்போ, கோபமோ கிடையாது. அவர் மாளிகை வாசலிலேயே ராதாகிருஷ்ணன் கோவில் ஒன்று பெரிதாகக் கட்டப்பட்டிருந்தது.

இது ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. கோவிலில் நித்திய நைமித்திக பூஜையும் நடைபெற்று வந்தது. வீட்டில் ராமாயணம், பாகவதம் என்று ஏதாவதொரு காலட்சேபம் நடைபெற்றுக்கொண்டிருக்கும். அதைக் கேட்கத் தூரத்திலிருந்தும் மக்கள் திரண்டு வருவார்கள். பெரிய ஆபீஸர்களுக்கு அவருடைய வீட்டில் அடிக்கடி விருந்து நடைபெறும்.

காடம்பூர் வந்த பிறகு ஜ்வாலா பிரஸாத், லாலா பிரபு தயாளைப்பற்றி நிறைய கேள்விப்பட்டிருந்தார். ஆனால் இதுவரை அவருடன் நெருங்கிப் பழகியதில்லை. சில வேளைகளில் அவரைச் சந்தித்ததுண்டு. அவர்கள் காடம்பூருக்கு வந்த சில நாட்களிலேயே லாலா பிரபு தயாளுடைய மனைவி ஜயதேயீ தானே யமுனாவின் வீட்டிற்கு வந்து சிவபுராவில் தாங்கள் கட்டியுள்ள கோயிலுக்கு வரவேண்டுமென பிடிவாதமாகக்கூறி அவர்களை அழைத்துச் சென்றாள். தன் வீட்டிலேயே யமுனாவை இரண்டு நாள் தங்கும்படி செய்துவிட்டாள். இந்த இரண்டு நாட்களில் யமுனாவுக்கும் நம்பர்தாரிணிக்கும் நெருங்கிய நட்பு உண்டாகிவிட்டது. அங்கிருந்து புறப்படும்போது லாலா பிரபுதயாள் ஜ்வாலா பிரஸாதுக்கு ஏதோ பரிசு கொடுக்க முற்பட்டார். ஆனால் ஜ்வாலா பிரஸாத் ஏற்க மறுத்துவிட்டார்.

யமுனா தையற்காரனை வரவழைத்து அன்றே பாவாடை

தைப்பதற்காக கீன்காப், மக்மல் துணிகளைக் கொடுத்து விட்டாள். தட்டானை வரவழைத்து ஐந்து தோலாவில் தங்கக் காப்பு செய்யவும் சொல்லிவிட்டாள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலேயே காடம்பூர் ஜமீன்தார் டாக்குர் கஜராஜ் சிங்கின் பெண்ணுக்குத் திருமணம் நடக்கவிருந்தது. டாகுர் கஜராஜ் சிங் இலாகாதார்களில் ஒருவராகக் கருதப்பட்டவர். அவருடைய பெண்ணுக்கு 'அவத்' பிராந்தியத்திலிருக்கும் ஒரு தாலூக்காதாருடைய பிள்ளையை வரன் பார்த்திருக்கிறார்கள். கல்யாணத்திற்குப் பிள்ளைவீட்டார் ஆயிரம்பேர் வருவார்கள் என்று பேச்சு அடிபட்டது. திருமணத்திற்கு இவ்வளவு பெரிய 'பராத்' வரக்கூடுமானால் அவரது உறவினர்களும் ஓரிரு மாதம் முன்னரே கல்யாணத்திற்காக வந்துவிடுவது இயற்கைதானே!

டாகுர் கஜராஜ் சிங் வயதில் ஜ்வாலா பிரஸாதை விட மிகவும் பெரியவர். ஆயினும் ஜ்வாலா பிரஸாதுடன் ஒரு நண்பன் போல பழகினார். இதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஜ்வாலா பிரஸாதின் மாமனாராகிய முன்ஷி ராம சகாயும், டாகுர் கஜராஜ் சிங்கும் குடும்ப நண்பர்கள். குடும்பங்களிடையே நெருங்கிய நட்பும், தொடர்பும் பல காலமாக இருந்துவந்தது. அதனால் டாகுர் கஜராஜ் சிங். ஜ்வாலா பிரஸாதை ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் என்ற முறையிலன்றி, தம்மோடு சமானமான நண்பனைப் பாவித்து சமூகத்தில் அவருக்கு மதிப்பு உண்டாக்கினார். யமுனைவுக்கு கஜராஜ் சிங்கின் குடும்பத்தில் வீட்டு மருமகள்போல மதிப்பும் அன்பும் அளித்தனர்.

டாகுர் கஜராஜ் சிங்கின் மனைவி ராணி தேவகுவர் யமுனையை விட வயதில் மிகவும் பெரியவள். தன் பெண்ணின் திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்யும்போது

விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பை ராணி தேவகுவர் யமுனைவிடம் விட்டிருந்தாள். பெரிய மனிதர்களை வரவேற்று உபசரிக்கவேண்டும் என்றால் அதற்கு ஏற்றவாறு தானும் கௌரவமாக இருக்க வேண்டுமல்லவா! அதற்கு யமுனையினிடத்தில் ஆடம்பர ஆடைகளோ, விலையுயர்ந்த ஆபரணங்களோ இல்லை. நகைகள் என்றால், அவள் தன் மாமியிடமிருந்து இரவலாக வாங்கிக்கொள்ள முடியும். ஆனால் ஆடைகளைப் பற்றிய சிக்கலைத் தீர்க்க வழியில்லாமல் இருந்தது. சில விலையுயர்ந்த ஆடைகள் அவள் தைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஜ்வாலா பிரஸாதை அடிக்கடி கேட்டுக் கேட்டுத் தொளைத்துவிட்டாள். துணிகள் வாங்கப் பணம் வேண்டும். ஜ்வாலா பிரஸாதிடம் பணக் குறை இருந்துவந்தது. சம்பளத்தில் கால் பங்கை அவர் தன் தகப்பனாருக்கு அனுப்பிவிடுவார். மிகுதியை தம் பதவி மரியாதையை உத்தேசித்துச் செலவழிக்கவேண்டியிருந்தது. அவருக்கு மேல் வரும்படி கிடைக்கக்கூடும். ஆனால் அதிலெல்லாம் அவருக்கு நம்பிக்கை இல்லை.

லாலா பிரபுதயாள் கொடுத்த அந்தப் பரிசு வெகு சுளுவாக ஜ்வாலா பிரஸாதின் ஒரு சிக்கலைத் தீர்த்து விட்டது. அந்த திருப்தி காரணமாக உண்டாகிய எக்களிப்பில் அதில் அடங்கி இருந்த அழகற்ற உண்மை அவருக்குப் புலப்படவில்லை. அந்த உண்மை எப்படிப் பட்டதென்று ஏறத்தாழ மூன்று மாதங்களுக்குப் பிறகு முதன்முதலாக சிறிது மங்கலாகவே அவருக்குத் தென் பட்டது. அதாவது கஜராஜ் சிங்கின் வீட்டில் திருமணத் திற்காகப்போய்க்கொண்டிருந்த நம்பர்தாரிணி ஜயதேயீ யின் பல்லக்கு உதவி தாசில்தார் வீட்டின்முன் வந்துநின் றது. பிரபுதயாள், கஜராஜ் சிங்கின் வீட்டிற்கு அழைக் கப்பட்டிருந்தார். பிரபுதயாளுடைய மனைவி ஜயதேயீ

பல்லக்கில் வந்து இறங்கியபோது யமுனை கஜராஜ் சிங்கின் வீட்டுக்குப் போக ஆயத்தம் செய்துகொண்டிருந்தாள். லாலா பிரபுதயாள் ஜ்வாலா பிரஸாதிடம் நட்பின் உரிமையோடு ஜயதேயீ தன் தோழியாகிய யமுனையுடன் தங்கியிருக்கப்போகிறாள் என்று தெரிவித்தார். இதனால் யமுனைக்கு ஒருவிதத்தில் மகிழ்ச்சி உண்டாகியது. ஆனால் ஜ்வாலா பிரஸாதுக்கு இது சரியெனப் படவில்லை. ஆயினும் பிரபு தயாளுடைய நட்புரிமையை மறுத்துவிடும் அளவுக்கு ஜ்வாலா பிரஸாத் தாட்சிண்யமற்றவராக இப்போது இல்லை. மேலுக்காவது நட்பைக் காட்டி பிரபு தயாளையும், ஜயதேயீயையும் வரவேற்கத்தான் வேண்டியிருந்தது.

அன்றுதான் கஜராஜ் சிங் வீட்டுக்குப் பிள்ளை வீட்டாரின் 'பராத்' வந்து சேர்ந்தது. இதற்குமுன் காடம்பூரில் இவ்வளவு சிறப்பாக மாப்பிள்ளை ஊர்கோலம் எப்போதும் வந்ததில்லை என்று மக்கள் பேசிக்கொண்டனர். "பராத்"தில் விருந்தினரோடு கூட பதினொரு யானைகளும், ஐம்பத்தோரு ஒட்டகங்களும், நூற்றியொரு குதிரைகளும், முன்னூறு ஜதை எருதுகளும் வந்தன. விருந்தினரையும் யானை குதிரை முதலியவற்றையும் கவனித்துக்கொள்ள எண்ணூறு வேலையாட்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இவ்வளவு பெரிய 'பராத்' தங்குவதற்காக கஜராஜ் சிங் ஐம்பது 'பீகா' பரப்புள்ள தம் மாந்தோப்பில் ஏற்பாடு செய்திருந்தார். வெகு தொலைவிலிருந்து 'டேரா'க்களும் 'பர்தா'க்களும் பலவித விரிப்புத் துணிகளும் வரவழைக்கப்பட்டன.

யக்ஞ்புரத்தின் தாலூகாதார் ராஜா சந்திரபூஷண் சிங். அவருடைய ஜ்யேஷ்ட குமாரன் லாலா இந்திரபூஷண் சிங்குக்குத் தன் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதில் டாகுர் கஜராஜ் சிங்குக்கு ஏகப்பட்ட பணச்செலவு

உண்டாகிவிட்டது. பார்க்கப்போனால் வரதட்சிணை என்று பேசிக்கொள்ளவேயில்லை. ஆயினும் டாகுர் கஜராஜ் சிங் ராஜதோரணையில் படாடோபமாகத் தம்முடைய அந்தஸ்தைக் காட்டினார். கடன் வாங்கவேண்டி வந்துவிட்டது. இந்தக் கடனை அவர் லாலா பிரபுதயாளிடம் தமக்குரிய ஐந்து கிராமங்களை அடமானம் வைத்துப் பெற்றுக்கொண்டார்.

யமுனாவுடன் நம்பர்தாரிணி ஜயதேயீ காலை பத்து மணிக்கே கஜராஜ் சிங்கின் வீட்டுக்குப் போய்விட்டாள். மத்தியானம் ஜ்வாலா பிரஸாத் லாலா பிரபுதயாளுடன் அங்கு சென்றார். கஜராஜ் சிங் தம்முடைய வரவேற்பறையில் உறவினரும், அலுவலர்களும், அக்கம்பக்கத்து ஜமீன்தார்களும் சூழ அமர்ந்துகொண்டு பிள்ளை வீட்டாரின் "வசதி"களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். பிள்ளை வீட்டாரின் கூட்டம் பெரியதாக இருக்குமென்று முன்னரே அவருக்குத் தெரிந்ததுதான். அதற்கேற்றவாறுதான் ஏற்பாடுகளையும் அவர் செய்துவைத்திருந்தார். ஆனபோதிலும், இவ்வளவு பெரிய கூட்டம் வரும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கச் செய்துவைத்திருந்த ஆயத்தங்களெல்லாம் போதவில்லை. ஒரு விசித்திரமான தர்ம சங்கடத்தில் அவர் மாட்டிக்கொண்டார். மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்யும் வகையில் தம் ஆட்களை இங்குமங்கும் விரட்டிக்கொண்டு அவர்களுடைய வருகையை எதிர்பார்த்த வண்ணம் வீற்றிருந்தார்.

ஜ்வாலா பிரஸாதைப் பார்த்ததும், "கேட்டீர்களா, உதவி தாசில்தார் அவர்களே! இந்தத் தடிப்பசங்க "பராத்"துக்கு வரவில்லை; கொள்ளை அடிக்க வந்திருக்கிறார்கள்! உங்களுடைய இரண்டு ரிவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் சில ஏற்பாடுகளைச் செய்யச்சொல்லி அனுப்பி

இருக்கிறேன். நான்கு பட்டாமணியக்காரர்களையும் நீங்கள் சொன்னதாகச் சொல்லி கூப்பிட்டுவிட்டிருக்கிறேன். உங்ககிட்டே சொல்லியாச்சு!" என்றார். இதில் என்ன வந்துவிட்டது? அவர்களை உங்களுடைய அலுவலர்களாகவே நினைத்துக்கொள்ளுங்கள் டாகுர் ஸாஹப்! நான்கூட தங்களுக்குப் பணிபுரியக் காத்திருக்கிறேன்! ஜ்வாலா பிரஸாத் சிரித்துக் கொண்டே சொன்னார். "பெரிய மனிதர்களுடைய விஷயம் எல்லாம் பெரியதாகத்தான் இருக்கும்!"

"என்னத்திற்கு என் மானத்தை வாங்குகிறீர்கள் உதவி தாசில்தார் ஸாஹப்!" டாகுர் கஜராஜ் சிங் சிரித்தார். அவர் லாலா பிரபுதயாளின் பக்கம் திரும்பினார். "உட்காருங்கள், லாலா பிரபுதயாள்! இங்கே நீங்கள் எப்போது வந்தீர்கள்?"

"காலையிலேயே வந்துவிட்டோம் நாங்கள்." பிரபுதயாள் கூறினார் "கூடவே நம்பர்தாரிணியும் வந்தாள். ஆனால் அவளை தாசில்தார் வீட்டு அம்மாள் கட்டாயப்படுத்தி தன் வீட்டில் இறங்கும்படி செய்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் இதற்குள் இங்கே வந்திருக்க வேண்டும். டாகுர் ஸாஹப்! அவர்கள் இருவருக்குள் என்ன நட்பு! என்ன ஒற்றுமை! தாசில்தாரிணி அம்மாவின் பெருந்தன்மையைப் பற்றி நான் என்ன சொல்ல! அடேயப்பா! என்ன அன்பு! என்ன தாராள மனம் அவர்களுக்கு! நம்முடைய பாபூ ஜ்வாலா பிரஸாத் எப்படி நேர்மையும், பெருந்தன்மையும் கொண்டவரோ அப்படியேதான் அவருடைய மனைவியாரும்! இறைவன் எவ்வளவு அழகாகப் பொருத்தம் சேர்த்திருக்கிறான்! ஆகா!"

"சந்தேகம் என்ன, லாலா பிரபுதயாள் ஸாஹப்!" டாகுர் கஜராஜ் சிங் முறுவல் பூத்துக் கூறினார். "உங்க

ளுக்கு என் வீடு எப்படியோ, அப்படித்தான் உதவி தாசில்தார் அவர்களுடைய வீடும்! அங்கு தங்கிவிட்டீர்கள், நல்லதாகப் போய்விட்டது. இங்கே பார்த்தீர்களல்லவா ஒரே சத்தம், சந்தடி, ஓட்டசாட்டம்! பெண்ணுக்குக் கல்யாணம் என்றாலே பெரிய கவலைக்கிடமான காரியமாகப் போய்விட்டது லாலாஜீ. தாங்கள்தான் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே! எனக்கு மூச்சுவிட நேரமில்லை. நான் முன்னமேயே யக்ஞபுரத்து ராஜா ஸாஹபிடம் இவ்வளவு பெரிய "பராத்" அழைத்துவர வேண்டாம் என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருந்தேன். கேட்டாரா மனுஷன்? அதுதான் சொல்லியிருக்கிறீர்களே-ராஜ பிடிவாதம் என்று! பெரிய பிடிவாதக்காரர் ஐயா! ஆயிரத்திருநூறு பேரை அழைத்துக்கொண்டு கிளம்பி இருக்கிறார்! அதுமட்டுமல்ல, அத்தனை பேருக்கும் தங்கவும் சாப்பிடவும் வேண்டிய அத்தனை பண்டங்களையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்! எங்கேயோ படை எடுத்துப்போவது போலதான்! லாலா பிரபு தயாள்! எனக்குக் கெட்ட கோபம் வந்துவிட்டது! நான் அவரிடம் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டேன் — நீங்கள் இப்படிச் செய்ததனால் எனக்குப் பெருத்த அவமானம் உண்டாகிவிட்டது என்று. ஆனால், ஜ்வாலா பாபூ, இவ்வளவு பெரிய மனிதராச்சே, இருந்தாலும் எவ்வளவு அடக்கம், என்ன அப்பாவித்தனம்! என் வார்த்தையைக் கேட்டு அவர் கண்கலங்கியே விட்டார். உன் மரியாதை போலதான் என் மரியாதையும். நீ இவ்வளவு தவறாக நினைத்துக்கொண்டுவிடுவாய் என்று எனக்குத் தெரியாது" என்றார்!.

கஜராஜ் சிங்கின் மைத்துனர் டாகுர் பர்ஜோர் சிங் அங்கேதான் இருந்தார். அவர் ஆவேசத்தோடு கூறலானார். "என்ன சொல்கிறது மாமா! ராஜா ஸாஹப்

என்ன மனிதராட்டமாவா இருக்காரு? தெய்வம்னு தெய்வம்! ராஜா ஸாஹபை சம்பந்தியாகப் பெற்றதால் நீங்க பெருமை அடைஞ்சுட்டீங்க".

கஜராஜ் சிங்கின் மார்பு பெருமிதத்தினால் விம்மியது. அங்கு இருந்தவர்கள் எவ்வாறு இதை ஏற்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்காக அவர் தமது பார்வையை நாற்புறமும் செலுத்தினார். லாலா பிரபுதயாள் புன்முறுவல் செய்துகொண்டிருப்பதை அவர் கவனித்தார். அந்தப் புன்முறுவலில் இனிமை இல்லாததுபோல் டாகுர் கஜராஜ் சிங்குக்குத் தோன்றியது. அந்தப் புன்முறுவலில் ஏளனம் நிழலாடுவதை அவர் விளக்கமாகக் கண்டுகொண்டார். சில நாட்களுக்கு முன்தானே அவர் லாலா பிரபுதயாளிடம் ஐந்து கிராமங்களை அடமானம் வைத்து இருபதாயிரம் ரூபாய் கடனை வாங்கிக்கொண்டார்!

டாகுர் கஜராஜ் சிங் ஒரு பெரிய ஜமீன்தார். வருடத்திற்கு இருபதினாயிரம் வருவாய் கிடைத்துவந்தது அவர் இலாக்காவில். இருந்தபோதிலும் அவருடைய செலவுகளும் அதேபோல வளர்ந்துகொண்டிருந்தன. அவரிடம் ஒன்றல்ல, இரண்டல்ல, எண்ணற்ற கெட்ட பழக்கங்கள் குடிகொண்டிருந்தன. ஆகவே அவரால் பணம் சேமித்து வைக்க இயலவில்லை. சிக்கனம் என்பது அவருடைய பார்வையில் ஒரு குறைபாடாகும். கடவுள் வரவு என்பதை செலவு செய்யத்தானே உண்டாக்கி இருக்கிறார். ஒருவேளை அதனால்தானோ என்னமோ அவர் லாலா பிரபுதயாளை ஒருவிதத் தாழ்ந்த நிலையில் வைத்துப் பார்த்தார்.

இருபது வருடங்களுக்குமுன் லாலா பிரபுதயாளுடைய தந்தைக்கு ஒரு சிறிய பலசரக்குக் கடைதான் இருந்தது என்பது அவருக்கு நினைவிருந்தது. இந்த இருபது வரு

டங்களுக்குள்ளேயே லாலா பிரபு தயாள் ஆறு கிராமங்களை வாங்கிவிட்டார். வட்டிக்கடை வியாபாரமும் லட்சக் கணக்கில் செய்யலானார். காடம்பூர் தாசிலில் லாலா பிரபு தயாளிடம் இருந்த அளவு பணம் வேறெவரிடமும் இல்லை

கஜராஜ் தன்னுடைய ஊகத்தைத் திடப்படுத்திக் கொள்ளுவதற்காக லாலா பிரபு தயாளைப் பார்த்துக் கேட்டார்.

"என்ன லாலா பிரபு தயாள்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் இந்த 'பராத்'தைப்பற்றி?"

பிரபு தயாள் முன்போலவே புன்னகை செய்தவாறு கூறினார், "என்னவென்று வருணிப்பது? இலாக்காதார், ராஜாக்கள் போன்றவர்களுடைய விஷயம்! பெரிய எடுப்பு பெரிய படாடோபம், பெரிய ஆடம்பரம்! பெருந்தன்மை!" பிறகு சிறிது பொறுத்து மீண்டும் சொன்னார். 'யக்ஞபுரத்து ராஜா ஸாஹபுக்கு வருடத்துக்கு மூன்று, லட்சம் வருமானம் என்று கேள்விப்பட்டேன்."

லாலா பிரபு தயாள் யக்ஞபுரத்து ராஜா ஸாஹபின் வருமானத்தைப் பற்றி ஏன் பேச்செடுத்தார் என்றும், அதன் உள்நோக்கத்தைப் பற்றியும் அங்கிருந்தவர்களில் ஜ்வாலா பிரஸாத்தைத் தவிர வேறு ஒருவரும் அறிந்து கொள்ளவில்லை.

லாலா பிரபு தயாள் கூறியதைக்கேட்டு கஜராஜ சிங் திருப்தியடைந்துவிட்டார். அவர் கூறினார் "ஆனால் அவருடைய செலவுகளும் அதேபோல அதிகமானவை. அவர் வீட்டில் பணம் தண்ணீர் பட்டபாடுதான். மஸூரியில் ஒரு பங்களா, ஒரு பங்களா இலாகாபாதில், வருடத்தில் ஆறு மாதம் கல்கத்தா போய் தங்குகிறார்."

அப்போது டாகுர் பர்ஜோர் சிங் அவருடைய வார்த்தையோடு ஒரு பின்குறிப்பையும் சேர்த்தார். "அது அப்படித்தான் இருக்கும்? ராஜ குடும்பமாச்சே!

பனியா கினியாவா என்ன ?''

பிரபு தயாளுடைய முகத்தில் புன்னகை என்னவோ மாறவில்லை. "சரியாகக் கூறினீர்கள் டாகுர் பர்ஜோர் சிங்! எங்களைப் போன்ற பனியாக்கள் உங்களைப் போன்ற ராஜாக்களின் பிரஜை அல்லவா? நாங்கள் எப்படி உங்களுக்குச் சமானமான அந்தஸ்துடன் வாழ முடியும்?''

டாகுர் பர்ஜோர் சிங்கின் தந்தை ஒருகாலத்தில் பெரும் ஜமீன்தாராக வாழ்ந்தவர். ஆனால் காலகதியின் வேறுபாட்டினால் பர்ஜோர் சிங்கின் ஆஸ்தி சிறுகச் சிறுகக் கரைந்து கடைசியில் ஒரு சிறிய கிராமம் மட்டும் மிஞ்சியிருந்தது. அதிலும் முக்கால்வாசி நிலம் தரிசாகக் கிடந்தது. அந்தக் கிராமத்தில் அவருக்குக் கிடைக்கும் வருமானம் வருடத்திற்குச் சுமார் இருநூற்றைம்பது ரூபாய். ஆயினும் பர்ஜோர் சிங் ஒரு ஜமீன்தார்போலவே வாழ்ந்தார். அவரது ஊர் காடம்பூரிலிருந்து சுமார் ஐந்து மைல் தொலையில் இருந்தது. 'சுனௌடா' என்ற பெயர் கொண்டது. அங்கு அவருக்கு ஒரு பெரிய மாளிகை. அந்த மாளிகையின் முற்றத்தில் இன்னும் அவருடைய தந்தை வளர்த்த யானை ஒன்று ஆடி அசைந்து நின்று கொண்டிருக்கும். அந்த மாளிகை செப்பனிடப்படாததால் ஆங்காங்கு பழுதடைந்து விட்டது. பர்ஜோர் சிங்கினிடம் சுமார் நூறு 'பீகா' நிலம் சொந்தச் சாகுபடியில் இருந்தது. அந்த நிலம் ஒன்றுதான் அவருக்குக் காலந்தள்ள ஆதாரமாக அமைந்திருந்தது. யமுனை நதியின் பாய்ச்சலில் இருந்த சாரமான பூமி. ஆனால் ஐந்து வருடங்களுக்கு முன், அவருடைய பிள்ளைக்குத் "தலைமுடி" எடுத்த விழாவின்போது ஒரேயடியாய் அவர் தன் எல்லையை மீறிச்செலவு செய்து, தானே மொட்டையடித்துக்கொள்ள எண்ணம் கொண்டுவிட்டபடியால் தமது

சொந்த சாகுபடி நிலத்தையும் லாலா பிரபு தயாளிடம் அடமானம் வைத்துவிட்டார். அந்த ஆயிரம் ரூபாய் வட்டி மேல் வட்டி சேர்ந்து இப்போது இரண்டாயிரத்துக்கும் அதிகமாக வளர்ந்துவிட்டது. கடந்த ஓராண்டு காலமாக லாலா பிரபுதயாள் பர்ஜோர் சிங்கிடம் சிறிது வற்புறுத்திப் பணம் கேட்கத் தொடங்கினார். ஓரிரு தடவை, சிறிது சச்சரவும் ஏற்பட்டுவிட்டது. மூன்று மாதங்களுக்கு முன் இவ்விதச் சச்சரவில் சூடு பிறந்து லாலா பிரபுதயாள் பர்ஜோர் சிங்கின்மேல் வழக்குத் தொடர்வதாக பயமுறுத்தவேண்டி வந்தது.

பிரபுதயாள் பர்ஜோர் சிங்கின் குத்தல் பேச்சை ஒரு சாதாரண வேடிக்கைபோல் எடுத்துக்கொண்டதாகக் காட்டிக்கொண்டார்; அவரிடம் எவ்விதத் தவறான எண்ணமும் கொள்ளாததுபோல் மிகவும் நாசூக்காகப் பதில் அளித்தார். ஆயினும் உண்மையில் அந்தக் கணத்திலேயே, அவர் மனதில் பர்ஜோர் சிங்கைப் பழிவாங்க வேண்டும் என்ற பயங்கரமானதொரு எண்ணம் உண்டாகிவிட்டது.

கஜராஜ் சிங்கின் வீட்டை விட்டு ஜ்வாலா பிரஸாதுடன் கிளம்பிவிட்டார். அப்போது அவர் முகம் ஒளியற்றிருந்தது. பிரபு தயாளுடைய இந்த ஆழ்ந்த சிந்தனை நிலையைக் கண்டு ஜ்வாலா பிரஸாத் சகஜமாக விசாரித்தார் "என்ன, லாலா பிரபு தயாள்ஜீ, என்ன இப்படித் திடீரென்று சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள் ?"

பிரபு தயாள் விடையளித்தார். "யோசனை செய்துகொண்டிருக்கிறேன் தாசில்தார் ஸாஹப்! பொய்ப்பெருமையும், வெளிப்பகட்டும் வேண்டி, தவறான நோக்கம் கொண்டு, மனிதன் தனது நன்மை தீமைகளைக்கூட அறியாத அளவுக்கு ஏன் குருடனாகி விடுகிறானோ ?"

"ஆம், நானும் அதைதான் யோசித்துக்கொண்டிருக்

கிறேன். டாகுர் கஜராஜ் சிங் தம்முடைய நிலையையும் மீறிப் பெண் திருமணத்தில் பணத்தை விட்டுக் கொண்டிருக்கிருர்." ஜ்வாலா பிரஸாத் சாதாரணமாகக் கூறிஞர்.

" அது இல்லை ஜ்வாலா பாபூ! நான் கஜ்ராஜ் சிங்கைப் பற்றி யோசிக்கவில்லை. பர்ஜோர் சிங்கைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன். அவன் சுற்றி வளைத்து எப்படி என்னை அவமதிக்கும் வகையில் பேசினன் என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இப்படியெல்லாம் ஏன் நடக்கிறது என்றுதான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், நான் ஒரு நொடியில் அவனை அழித்துவிட முடியும். அவனுடைய நிலம் என் வசமுள்ளது. அதன்மேல் இப்போது கடன் இரண்டாயிரமாக வளர்ந்துவிட்டது. இன்றைக்கு ஐந்து வருஷம் ஆகிவிட்டது. மேன்மேலும் கடன் வளர்ந்துகொண்டே போகிறது. இனியும் நான் எத்தனை நாள் பொறுப்பது? அவன்பேரில் வழக்கு தொடரத்தான் வேண்டும். காரணமின்றி அவன் என்னை அவமதித்ததற்குப் பழி வாங்கியே ஆகவேண்டும். ஜ்வாலா பாபூ, நீங்களே சாட்சி. இதில் என்னுடைய குற்றம் ஒன்றுமே இல்லை."

ஜ்வாலா பிரஸாத் பர்ஜோர் சிங்கைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். பர்ஜோர் சிங் பார்க்கப்போனல் நேர்மையுள்ளவர்தான். மற்றவருடன் கலந்து பழகக் கூடியவர்தான். மற்றவர்களுடைய கஷ்டத்தில் உதவி செய்யக்கூடியவர்தான். ஆனலும், பிடிவாதமான சுபாவம் கொண்டவர். அடங்காதவர். பர்ஜோரிடம் ஜ்வாலா பிரஸாதுக்கு அனுதாபம் உண்டாகி இருந்தது. அவர் கவலைகொண்டு கூறிஞர். "இரண்டாயிரமா கடனகி உள்ளது? நீங்கள் சொல்வது மிகவும் கவலை தருகிறது. அவரிடம் இருப்பதே இந்த சொந்த உழவு

நிலம்தானே ? அவருடைய கிராமத்திலிருந்து வரக்கூடிய வருமானம்தான் என்ன ?

பிரபு தயாள் சிரித்தார். "நானும்தான் அவன்பேரில் வழக்கு தொடரவேண்டாம் என்று நினைத்தேன். ஆயினும் என்ன செய்வது ? இன்று என்னை அவன் கட்டாயப்படுத்திவிட்டான். சிறிய தொகை அல்லவே ? இரண்டு ஆயிரம் ரூபாய். அது தவிர, எவன் எவன் எப்படி நடக்கிறானே அப்படியே தானே அனுபவித்தாக வேண்டும். மற்றவர் இதில் என்ன செய்யக்கூடும் ?

ஜ்ாவாலா பிரஸாதுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பதில் ஏதும் கூறாதிருந்துவிட்டார். பிரபு தயாள் சொல்லும் வார்த்தையிலோ, அவரது செய்கையிலோ, அவருடைய நடத்தையிலோ, வேறு எந்த வகையிலும் ஜ்வாலா பிரஸாதுக்கு அருவருப்பு உண்டாகக்கூடியதாக ஒன்றும் காணப்படவில்லை. ஆயினும் ஏனோ, ஜ்வாலா பிரஸாதுக்கு தம்முடன் நடந்து வரும் அந்த நபரிடம் ஒருவித வெறுப்புணர்ச்சி உண்டாகியது.

பிரபு தயாளும், ஜயதேயீயும் ஜ்வாலா பிரஸாத் வீட்டில் மூன்று நாள் தங்கி இருந்தனர். இந்த மூன்று நாட்களில் ஜயதேயீயும், யமுனாவும் நெருங்கிய நட்புக் கொண்டுவிட்டனர். இதுமட்டுமல்ல, ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதுடன் மைத்துனன் முறை கொண்டாடத் தொடங்கிவிட்டாள். ஆனால் பிரபுதயாளிடம் ஜ்வாலா பிரஸாதுக்கு ஒருவித மனக்கசப்புத்தான் ஏற்பட்டு இருந்தது.

3

மீர் ஸகாவத் ஹுஸேன்—நண்பர்கள் கூப்பிடுவது? மீர்ஸாஹப் என்று—துறவு உள்ளம் படைத்தவர். நல்ல உயரம். கம்பீரமும் அழகும் பொருந்திய தோற்றம். சிறிதாகக் கத்தரித்து விடப்பட்ட தாடி. அந்தத் தாடிக்கு ஏற்ற சிறிய மீசை. முகத்தில் சிந்தனை ஆழ்ந்த நிலை. மீர்ஸாஹிபினுடைய உருவமே மக்கள் அவரை மதிக்குமாறு அமைந்திருந்தது.

மீர் ஸகாவத் ஹுஸேன் காடம்பூருக்குத் தாசில்தார். ஆனால் அவர் உத்தியோகத்தின் எல்லா பொறுப்புக்களையும் ஜ்வாலா பிரஸாதிடமே விட்டிருந்தார். மீர் ஸாஹபுக்கு வயது ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டது. மதத்திலும் தொழுகையிலும் அதிக பற்றுக்கொண்டு இருந்தார். அவருக்குப் பெரும்பாலும் நேரம் எல்லாம் கடவுள் தியானத்தில் கழியும். மிகுதி நேரம் சதுரங்க ஆட்டத்தில் கழியும். அவருடைய ஒரே மகன் பதினைந்து ஆண்டுகளுக்கு முன உலகிலிருந்து மறைந்துவிட்டான். அதிலிருந்து அவருடைய மனம் உலகப்பற்றை விட்டு விலகியது. ஐந்து வருடங்களுக்கு முன் அவருடைய "பீவி"யும் இறந்துவிட்டாள். பிறகு அவர் ஒருவகையில் "பக்கீர்" ஆகவே மாறிவிட்டார். வீட்டிலிருந்து வெளியே போவதே அரிது. பிறருடன் கலந்து அளவளாவுவதைக் கூட அநேகமாக விட்டுவிட்டார். ஜ்வாலா பிரஸாத் அவருடைய வீட்டுக்குச் சென்று யோசனைகள் கேட்பதுடன் அவசியமான சர்க்கார் தஸ்தாவேஜுகளில் கையொப்பமும் பெற்றுக்கொண்டு போவார்.

மீர் ஸாஹப் ஆண்டு தவறாமல் கோடை காலத்தில் லக்னோ போய்விடுவார். அவருக்கு அங்கே சொந்த வீடு

இருந்தது. இவ்வருடமும் கோடையில் இரண்டு மாதங்கள் லக்னோவில் கழித்து விட்டுத் திரும்பி வந்திருந்தார் அவர். ஜ்வாலா பிரஸாத் சர்க்கார் பைல்களை எடுத்துக்கொண்டு அவரைப் பார்க்கச் சென்றார்.

"என்ன ஜ்வாலா பாபூ! நன்றாக இருக்கிறீர்களா? வேலைகளெல்லாம் நல்லவிதமாக நடைபெற்று வருவதைக் காண்கிறேன். யாரும் எந்தவிதமான குறையும் சொல்லவில்லை. ஆமாம், டாகுர் கஜராஜ் சிங்கின் பெண்ணுக்கு மிகவும் ஆடம்பரமாகத் திருமணம் நடைபெற்றதாமே? கேள்விப்பட்டேன். 'பராத்' மிகப் பெரியதாக இருந்ததோ?"

"ஹுஜூர்! இவ்வளவு பெரிய 'பராத்' நான் என் வாழ்விலே பார்த்ததே கிடையாது. நீங்கள் அந்தத் திருமணத்திற்கு வரவில்லையே என்று கஜராஜ் சிங்குக்கு மிகவும் குறை."

"என்னத்தைச் சொல்ல! எனக்கும் உண்மையில் ரொம்ப வருத்தம்தான். ஆனால் வருஷந்தோறும் கோடைக்கு நான் லக்னோ போய்விடுகிற சங்கதி எல்லாருக்கும் தெரிந்ததுதானே. என்னுடைய அந்த மாமூலில் மட்டும் எந்த வகையிலும் தடை ஏற்படக் கூடாது பாருங்கள்" மீர் ஸாஹப் ஆழ்ந்த சிந்தனையோடு கூறினார்!"

"ஆனாலும் தம்பி, கடன் சுமை வளரும்படியாக இது என்ன கல்யாணமோ? ஒரு கல்யாணம் செய்வதற்கு ரூபாய் இருபதாயிரம் கடனா? உமக்குத்தான் கஜராஜ்சிங் நல்ல பழக்கம் ஆயிற்றே? நீர் ஏன் அவரைத் தடுக்கவில்லை.

"ஹுஜூர்! அவர் கடன் வாங்கியிருக்கிறார் என்று விஷயம் அடமானப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட அன்றுதான் எனக்குத் தெரியவந்தது. இல்லையானால்

நான் அதைக் கட்டாயம் தடுத்து நிறுத்தியிருப்பேனே? அவரைத் தடுக்க முடியுமா என்பது சந்தேகம்தான்! ஆயினும் முயற்சியாவது செய்திருப்பேன். அவர் எவ்வளவு பிடிவாதக்காரர், உங்களுக்குத் தெரியுமே!"

"பெரிய உடும்புப் பிடிவாதக்காரர்! ஆனாலும் பெருந்தன்மையும் நேர்மையும் கொண்டவர். ஆமாம் தம்பி! நான் இன்னொரு விஷயமும் கேள்விப்பட்டேன். அவர் லாலா பிரபு தயாளிடம் கடன் வாங்கினாராமே?" மீர் ஸாஹப் கேட்டார்.

"நீங்கள் கேள்விப்பட்டது சரிதான் ஹுஜூர்! ஐந்து கிராமங்களை அடமானம் வைத்திருக்கிறார் கஜராஜ் சிங்!"

"அப்படியானால் இந்த ஐந்து கிராமமும் போச்சு! பிரபு தயாளுடைய சொந்தச் சொத்து ஆகிவிட்டது போலத்தான்" மீர்ஸாஹப் சிரித்தார்.

"பிரபு தயாளினுடைய கெட்டிக்காரத்தனத்தை ஒப்புக் கொள்ளவேண்டும் தம்பி! பார்த்துக் கொண்டிருக்கும் போதே இவ்வளவு பெரிய பணக்காரனாகிவிட்டானே! சரி, இந்த பிரபு தயாள் உம் வீட்டில் வந்து தங்கியிருந்ததாகக் கேள்விப்பட்டேனே?" மீர் ஸாஹப் பொருள் பொதிந்த பார்வையோடு ஜ்வாலா பிரஸாதை நோக்கினார்.

அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொள்ள ஜ்வாலா பிரஸாதுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அவர் சொன்னார்: "ஆமாம் ஹுஜூர். அவர்கள் என் வீட்டிலே தான் வந்து தங்கியிருந்தார்கள். ஆனால் வந்து தங்கும்படி நான் அவர்களை அழைக்கவில்லை. இது உண்மை, வலுக்கட்டாயமாக அவர்கள் வந்து உட்கார்ந்து விட்டார்கள். எனக்கு ஒன்றும் செய்ய முடியாத நிர்ப்பந்தம். என்ன செய்வது? பேசாமல் இருந்து விட்டேன்."

மீர் ஸாஹப் ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டவராகக் கூறினார்: "தம்பி! பாவம் என்பது வலுக்கட்டாயமாகத் தான் வந்து சேரும். பெரியவர்கள் சொல்வது தவருகாது. பாபத்தைத் எப்போதும் தூரத்திலேயே வைத்திருக்கவேண்டும். இது நமக்குத் தெரியும். ஒவ்வொருவனுக்கும் செல்வம், சொத்து, சுகம் என்று ஆசை உண்டாவது சகஜம். விளைவு என்ன? செல்வத்தைக் கும்பிடக் கும்பிட, அது நமது உண்மையான தெய்வத்தைச் சாப்பிட்டுவிடும். இதற்கு உதாரணம் காட்ட வேறு எங்கேயும் போக வேண்டியதில்லை. இந்த பிரபு தயாளையே எடுத்துக்கொள்ளுவோம். இவன் கோவில் கட்டிவைத்திருக்கிறான். மது, மாமிசம் தொடமாட்டான். இருந்தும் இவனுக்கு கடவுள், மதம் என்பதெல்லாம் பணம் ஒன்றுதான். என்ன நினைக்கிறீர்கள்?"

"ஹுஜூர், நீங்கள் சொல்லுவது சரியே" ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "மனிதன் மிகவும் மட்டம்."

"தான் மட்டமாக இருப்பினும் அவ்வளவு கெடுதல் இல்லை. ஆனால் இவன் எப்படிப்பட்டவன் என்றால், இவனோடு சேருகிறவன்கூட தாழ்ச்சி அடைவான். அதனால்தான் தம்பி! உமக்கு இவ்வளவும் எடுத்துச் சொல்லவேண்டி வந்தது. பணத்தை வழிபடும் மனிதர்களுக்கு ஒரு சமயம் அல்லது மதம் உண்டு. அந்த மதம் தானாகவே பரவக்கூடியது. பிறரையும் கவர்ந்து தன்வசமாக்கிவிடும். இந்தப் பணம் என்னும் மதத்தைத் தழுவுகிறவனால் மிகவும் ஆபத்து உண்டு. அவன் உம்முடைய கட்டுக்கோப்பையே மாற்ற முற்படுவான்."

மீர் ஸாஹப் இதைச் சொல்லும்போது பெரிதாகச் சிரித்தார்.

ஜ்வாலா பிரஸாத் மீர் ஸாஹபின் வீட்டிலிருந்து

திரும்பி வந்தபோது, வரவேற்பறையில் டாகுர் கஜராஜ் சிங் அமர்ந்து ஜ்வாலா பிரஸாதின் வருகையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். என்றுமில்லாதபடி ஒரு ஆழ்ந்த கவலையில் இருந்தார்.

ஜ்வாலா பிரஸாத் உடை மாற்றிக்கொண்டு டாகுரின் அருகே வந்து அமர்ந்தார்.

"டாகுர் ஸாஹப், இந்த வருஷம் மழை சக்கைப்போடு போட்டிருக்கிறது. மேகங்களைப் பாருங்களேன் எவ்வளவு அழகு!"

கஜ்ராஜ் சிங் சிந்தனை கலையவில்லை. "மேகம் தவழ்ந்து வருவது உண்மைதான். ஆனால் அது அழகாக இருக்கிறதா என்பதில் எனக்கு சந்தேகம்." அவருடைய முகத்தில் ஏளனம் நிறைந்த புன்னகை மின்னியது.

ஜ்வாலா பிரஸாத் மௌனமாக இருந்தார். கஜராஜ் சிங் ஏதோ உணர்ச்சி வேகத்தில் இருப்பது புலனாயிற்று. ஆனால் காரணம் விளங்கவில்லை. தாம் பேசாமல் கஜராஜ் சிங் மேலே என்ன சொல்லப்போகிறாரோ என்று பார்த்துக்கொண்டிருந்தார்.

"மேகம் திரண்டு வந்தால் மழை பெய்துதான் தீரும். ஆனால் இந்த மழை எப்படி இருக்கும் என்று எனக்குக் கூற இயலாது ஜ்வாலா பாபூ!"

ஜ்வாலா பாபூ புன்னகையோடு, "எந்த மழை? நீங்கள் ஏதோ புதிர் போடுகிறீர்கள்! டாகுர் ஸாஹப்! என்ன சமாசாரம்? என்ன நடந்தது?"

"விசேஷம் இல்லையென்றால் நான் இப்படிப்பட்ட மழை சமயத்தில் வீட்டை விட்டே கிளம்பியிருக்கமாட்டேன். டாகுர் கஜ்ராஜ் சிங் மத்தியானத்திற்கு முன் குளிக்காமலும், பூசை செய்யாமலும் வீட்டை விட்டுக் கிளம்பினார் என்றால் ஏதோ பிரமாதம் நிகழ்ந்திருக்கிற தென்றுதான் அர்த்தம். அதுவும் ரொம்ப கவலைக்குரிய

செய்தியாகத்தான் இருக்கும்."

மீர்ஸாஹுப்பைச் சந்தித்த பிறகு ஜ்வாலா பிரஸாதுக்கு மனதிலே ஒரு களைப்பு தட்டியிருந்தது. இப்பொழுது கஜராஜ் சிங் போடுகிற பீடிகை அவருக்குப் பிடிக்கவில்லை. இதற்குள் மழை பெய்யத் தொடங்கி கீழ்க்காற்றின் குளிர்ந்த அலை அறைக்குள் புகுந்தது. பெரிய பெரிய மழைத் துளிகள் சடார் சடாரென்று விழுகின்ற ஒலி ஒரு முரட்டு சங்கீதமாக உருவெடுத்தது. சிறிது நேரம் மழை பெய்வதைப் பார்த்துக்கொண்டிருந் தார். பிறகு சொன்னார் :

"டாகுர் ஸாஹப்! நீங்கள் மனதில் எதையோ அடக்கிக்கொண்டிருக்கிறீர்கள். என்ன விஷயம் என்று விட்டுச் சொல்லுங்களேன்?"

தொண்டையைக் கனைத்துச் சரிசெய்துகொண்டு கஜ்ராஜ் சிங் சொல்லலானார்.

"உதவி தாசில்தார் அவர்களே, பணியாப் பயல் இப்போது ராஜா ஆகவேண்டும் என்று ஆசைப்படு கிறான்!"

ஜ்வாலா பிரஸாத் விஷயம் புரிந்தது. "இதில் ஆச்சரியப்பட என்ன? அதிகாரம் என்பது இந்தக் காலத்தில் தோள் வலிமையில் இல்லை. அது பணத்தில் இருக்கிறது. பார்க்கப்போனால், வெள்ளைக்காரன் கூட பனியாதானே?" ஏழு சமுத்திரம் தாண்டிச் சீமையிலிருந்து இங்கே வந்தார்கள் வியாபாரம் செய்ய வேண்டுமென்று! ஆனால் இன்று இந்த பாரத நாட்டில் ஆட்சி செய்கிறார்கள்!"

கஜராஜ் சிங் மனத்தாங்கல் அடைந்தார். வெள்ளைக் காரனை பனியா என்று உங்களுக்கு யார் சொன்னது? வெள்ளைக்காரன் பெரிய அறிவாளி. நம்முடைய பிராமணன்தான் அறிவில் வெள்ளையனுக்குச் சமானமாக

முடியுமா? வெள்ளையன் ஆட்சியில் புலியும் ஆடும் ஒரே துறையிலே நீர் குடிக்கின்றன. எங்களைப் போன்ற க்ஷத்திரியர்கள்தான் எப்படி அவனுக்குச் சமானமாக முடியும்? அது இல்லை உதவி தாசில்தார் ஸாஹப்; நான் வேறொரு விஷயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். பிரபு தயாள் பர்ஜோர் சிங்கின்மேல் வழக்குப் பதிவு செய்திருக்கிருன். பர்ஜோர் சிங்கின் சொந்த சாகுபடி நிலம் அவனிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது!''

இரண்டு மாதங்களுக்கு முன் பிரபு தயாள் அவரிடம் சொன்ன விஷயம் நினைவு வந்தது. அப்போது ஜ்வாலா பிரஸாத் அந்தப் பேச்சை ஏதோ ஒரு ஆவேசம் கணத்தில் மறந்துபோகும் என்று நினைத்தார். ஆனல் அது எவ்வளவு ஆழத்திலிருந்து தோன்றியதென்பதை இப்போதுதான் உணர்ந்தார். கடைசியில் பிரபு தயாள் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துவிட்டார்! ஜ்வாலா பிரஸாத் தணிந்த குரலில் சொன்னர்:

"பர்ஜோர் சிங், பிரபு தயாளுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறதுபோலும்!"

கஜராஜ் சிங் சொன்னர்: "ஓ உங்களுக்கும் தெரியுமா சங்கதி. என்னுடைய யூகம் சரிதான். இதைப்பற்றி முன்னமேயே உங்களிடம் பிரபு தயாள் சொல்லி இருப்பார். ஆனல் உதவி தாசில்தார் ஸாஹப்! பர்ஜோர் சிங் வாங்கியது வெறும் ஆயிரம்தான். பிரபு தயாளுக்கு அவன் இது வரை ஆயிரத்திருநூறு ரூபாய் கொடுத்து இருக்கிருன்!''

"கடன் என்பது ஒரு கொடிய ஆபத்து. அதுவும் வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் வாங்குவது மிகவும் கெடுதல். இந்தக் கடன் எத்தனை குடும்பங்களை அழித்திருக்கிறது? ம்....இனி என்ன செய்வது?"

"பிரச்னை இதுதான். இந்தப் பிரச்னைக்கு ஒரு வழி காண

வேண்டும். அதற்குத்தான் நான் உங்களிடம் வந்திருக்கிறேன். பர்ஜோரிடம் ஒரு பைசாகூட கிடையாது. எனக்கும் பெண் திருமணத்தின் பளு இன்னும் குறைந்தபாடில்லை. இருந்தாலும் நான் ஒரு நானூறு ஐந்நூறுக்கு ஏற்பாடு செய்ய முடியும். லாலா பிரபு தயாள் உங்கள் வார்த்தையை மதிப்பார். நீங்கள் மத்தியஸ்தம் செய்து எப்படியோ சமாதானம் செய்து வையுங்கள். இல்லாவிட்டால்....''

''கஜராஜ் சிங் ஏதோ சொல்ல வாயெடுத்து நின்றுவிட்டார்.''

''இல்லாவிட்டால்...?'' ஜ்வாலா பிரஸாத் திருப்பிக் கேட்டார்: ''ஆமாம் இந்த விவகாரத்தைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டியதுதான். ஆனல் எனக்கு என்ன தோன்றுகிறது என்ருல், பிரபு தயாளை பர்ஜோர் அவமானம் செய்துவிட்டபடியால்தான், இவ்வளவும் நடந்துவிட்டது. உங்களுடைய பெண் திருமணம் நடந்த அன்று என்ன நிகழ்ந்தது தெரியுமா? ஒருவேளை நீங்கள் மறந்துபோயிருக்கலாம். ஒரு காரணமுமில்லாமலே அன்றைக்கு பர்ஜோர் பிரபு தயாளை அவமதித்துவிட்டார். பர்ஜோர் நாலு பேர் முன்னிலையில் ஒரு காரணமுமின்றி ஏன் அவரை அவமதிக்க வேண்டும்?''

''எனக்கு ஒன்றுமே நினைவில்லையே! கஜராஜ் சிங் யோசித்தவாறு கூறினர். பிரபு தயாள் உங்கள் வீட்டில் அல்லவா தங்கியிருந்தார். பர்ஜோருக்கும் பிரபு தயாளுக்கும் எவ்வித வாக்குவாதமும் ஏற்படவே இல்லையே!''

ஜ்வாலா பிரஸாத் ஒரு வறண்ட சிரிப்புடன் கூறினர். ''ஆம் அப்படி எல்லோருடைய கவனத்தையும் கவரும் வகையில் காரசாரமான தாவா ஒன்றும் நிகழவில்லை. பிரபு தயாளும்கூட அந்த அவமானத்தை அப்போது பொறுத்துக்கொண்டு பேசாதிருந்துவிட்டார். உங்களைப்

பார்த்து பர்ஜோர் "உங்களுடைய சம்பந்தி, ராஜகுலம்! பனியா கினியாவா?" என்று சொன்னரே. அந்த வார்த்தை பிரபு தயாளை மனத்தில் வைத்துத்தான் சொல்லப்பட்டது."

கஜராஜ் சிங்கின் முகத்தில் புன்னகை வரியிட்டது. "இப்போது கொஞ்சம் நினைவிற்கு வருகிறது. ஆனால் உதவி தாசில்தார் ஸாஹெப், பர்ஜோர் சொன்னது அப்படித் தவறு ஒன்றுமில்லையே? பிரபு தயாள் எவ்வளவு நீசன் என்று உங்களுக்கெல்லாம் தெரிந்ததே. பர்ஜோர் உண்மையைத்தான் சொன்னன். உண்மையைச் சொன்னல் தவருக எடுத்துக்கொள்ளுவார்களா?"

ஜ்வாலா பிரஸாத் கூறினர்: "டாகுர் ஸாஹப்! ஒருவருக்குப் பிடிக்காத உண்மையைச் சொல்லக் கூடாது என்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதே."

"ஆமாம். சாஸ்திரம் சரி...என்னவோ நடந்தது நடந்து விட்டது. வில்லிலிருந்து தெறித்த அம்பும், நாவிலிருந்து தெறித்த வார்த்தையும் திரும்புமா?"

கஜராஜ் சிங்கின் முகத்தில் புன்னகை மறைந்து விட்டது. "இப்போது இருக்கும் நிலை என்னவென்ருல், இந்த வழக்குக்காக கோர்ட்டிலிருந்து 'சம்மன்' வந்திருக்கிறது. அதைக் கண்டதுமே பர்ஜோர் சிங் பிசாசு பிடித்தவன்போல் ஆகிவிட்டான். நிலத்தில் உழவைக் கவனிக்காமல் கோர்ட்டு, கச்சேரி என்று யார் அலைய விரும்புவார்கள்? இன்று காலையிலேயே அவன் லாலா பிரபுதயாளிடம் போனன்; ஆனல் பிரபு தயாள் கேட்கப் போகிருன? காலை 7 மணிக்கே சிவபுரா போனவன் இதுவரை திரும்பி வரவில்லை. பிரபு தயாளுடைய வீடு இங்கிருந்து ஆறு மைல் தொலைவு தான். என்ன நடந்ததோ ஒன்றும் புரியவில்லை!"

"இதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?

திரும்பி வந்துகொண்டிருப்பார். மழை கூடத்தான் கொட்டு கொட்டென்று கொட்டிக்கொண்டிருக்கிறது. இப்போது அப்படியொன்றும் பொழுதாகிவிட வில்லையே ?"

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். வெளியே பெய்யும் மழையைப் பார்த்துக்கொண்டு ஏதோ இனந்தெரியாத சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். கஜராஜ்சிங் சொன்னார் "பர்ஜோர் வருவதுபோலத் தெரிகிறது. அதோ! யானைமேல் அவன் வருகிறான்."

ஜ்வாலா பிரஸாத் வெளியே பார்த்தார். சிவபுரா திசையிலிருந்து ஒரு யானை வந்துகொண்டிருந்தது. அதன்மேல் பர்ஜோர்சிங் உட்கார்ந்திருந்தார். மழையில் நனைந்து தெப்பமாகிவிட்டார். தலையில் முண்டாசு. கச்சம் வைத்துக் கட்டிய வேட்டி இடுப்பில். தலைமுறை தலைமுறையாக வந்த வளமைப்படி பட்டாக் கத்தியும் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்தது. யானை கஜராஜ் சிங்கின் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. கஜராஜ்சிங் குரல்கொடுத்தார். "பர்ஜோர், பர்ஜோர். நான் இங்கே இருக்கிறேன்."

பர்ஜோர் சிங் யானையை ஜ்வாலா பிரஸாதின் வீட்டுப் பக்கமாகத் திருப்பினார். சிறிது நேரத்தில் யானையை விட்டு இறங்கி பர்ஜோர் சிங் ஜ்வாலா பிரஸாதின் அறைக்கு முன் மழையில் நனைந்தபடியே நின்றார்.

"அவர் இந்த யானையை வாங்கிக்கொள்ளவில்லை மாமா! அவருக்கு வேண்டியது நிலம்தான்! என்னுடைய நூறு 'பீகா' நிலம்!"

இதைச்சொல்லி பைத்தியம் பிடித்துவிட்டது போலச் சிரித்தார் பர்ஜோர் சிங்.

அவருடைய குரல் கேட்பவர் உள்ளத்தைத் தொட்டது. பைத்தியம் பிடித்தது போன்ற சிரிப்பில் எவ்வளவு

நிர்ப்பந்தம் குடிகொண்டிருந்தது; எவ்வளவு குமைச்சல் ஊடுருவி நின்றது என்பதை ஜ்வாலா பிரஸாத் உணர்ந்தார்.

அவர் கேட்டார்: "நீர் கொடுக்க வேண்டிய கடனுக்காக யானையை பிரபு தயாளுக்குக் கொடுக்கப் போனீரா?"

"ஆமாம் உதவி தாசில்தார் ஸாஹெப்! என் நிலத்தைத் தக்கவைத்துக்கொள்ள இன்று இந்த யானையைக்கூட கைவிட முனைஞ்சுட்டேன்."

பிரபு தயாள் சொல்கிறான்: "யானையைக் கட்டி யார் தீனி போடுவது? பெரிய கஷ்டமாச்சே என்கிறான்! அந்தப் பனியாப் பயலுக்கு யானை வளர்க்கிற விஷயம் என்ன தெரியும்! திரும்பி வந்துட்டேன்."

இதைச் சொல்லிவிட்டு பர்ஜோர் சிங் 'ஹோ' என்று சிரித்தார். "மாமா! என்னாலே பொறுத்துக்கொண்டு இருக்க முடியவில்லை. நான் அவன் வாசற்படியிலே காறித் துப்பிட்டு சொன்னேன். "பனியாப் பயல் யானையை எங்கே வளப்பான். யானை எங்க ராஜ வம்சத்தில்தான் வளரும் இன்னு."

ஜ்வாலா பிரஸாத் கஜராஜ் சிங்கை அர்த்தபுஷ்டியோடு பார்த்தார். அதை கஜராஜ் உடனே புரிந்துகொண்டு விட்டார்.

"பர்ஜோர், இந்தமாதிரி வசவு பேசவேண்டிய அவசியம் என்னப்பா உனக்கு? இந்தப் பேச்சினால் தானே அவன் உன் மேலே வழக்கு தொடர்ந்திருக் கிறான்? நீ அந்த பிரபு தயாளிடம் போய் திட்டியதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டால் விவகாரம் எல்லாம் சுளுவாக முடிந்துவிடும். நானும் உதவி தாசில்தாரும் இப்படித்தான் நினைக்கிறோம்.

"என்ன சொன்னீர்கள்? மன்னிப்பு நான் கேட்பதா? அந்தப் பனியாப்பய கிட்டப்போயா? என்ன, உதவி

தாசில்தார் ஸாஹப்! இது உங்க யோசனைதானு?" பர்ஜோர் சிங் ஒரு பெருமூச்சு விட்டார். "காலம் மாறி விட்டது தாசில்தார் ஸாஹப். இல்லாவிட்டா, இந்தப் பிரபு தயாள் வீட்டை ராவோட ராவா நான் கொள்ளை யடிக்க ஏற்பாடு செஞ்சிருப்பேன்!"

பேச்சை மாற்றியபடியே பர்ஜோர் சிங் மீண்டும் சொன்னுர், "சரிதான், விட்டுத் தள்ளுங்கள் தாசில்தார் ஸாஹப்! நீங்களும் மாமாவும் இந்த விவகாரத்தைப் பற்றி வீணு கவலைப்படாதீங்க. இது எங்க சொந்த விவகாரம். இதைப்பத்தி தனியாகவே நான் பிரபு தயாள் கிட்ட தீத்துக்கறேன். மத்தவங்க இதிலே தலையிட வேண்டிய அவசியமே இல்லே." இதைச் சொல்லும் போது பர்ஜோர் சிங்கின் கை தானுகவே அவனுடைய வாளின் பிடிமேல் வந்து நின்றது.

பர்ஜோர் சிங் யானையின் மேல் ஏறி உட்கார்ந்தார். கஜராஜ் சிங்கும் எழுந்தார்.

"நல்லது ஜ்வாலா பாபு! இனி நான் போகிறேன். மழை நிற்பதாக இல்லை. நான் குளித்துப் பூஜை முடிக்க வேண்டும். நேரம் ஆகிவிட்டது. வீடுபோய் சேருவதற்குள் இந்தப் பருவத்து முதல் மழையில் நான் குளித்தாகி விடும். நீங்கள் பிரபு தயாளைச் சந்தித்து சீக்கிரமாக இந்த விவகாரத்துக்கு ஒரு முடிவு காண முயற்சி செய்யுங்கள். பர்ஜோர் சிங் தன் யானையை விற்றுவிடச் சித்தமாக இருக்கிருன். நானும் கொஞ்சம் பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்!"

பிரபு தயாளைப்பற்றி இப்போது ஜ்வாலா பிரஸாதுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது. அவர் விரும்பாதபோதிலும் பிரபு தயாளுடைய குடும்பத்துக்கும் அவருடைய குடும்பத்துக்கும் சொந்தம் கொண்டாடும் அளவிற்கு உறவு வளர்ந்துகொண்டே போயிற்று.

இவ்வாறு வளர்ந்தது ஜயதேயியினால்தான். லாலா பிரபுதயாளுடைய மனைவி ஜயதேயீ அதாவது நம்பர்தாரிணி—எப்போதும் கலகலப்பாக சிரித்த முகத்தோடு கலந்து பழகும் குணவதி. ஜ்வாலாபிரஸாதை மைத்துனன் முறைவைத்துப் பேசுவாள். ஜ்வாலா பிரஸாதும் அவள் அண்ணி என்று கூப்பிடும்படி ஆகிவிட்டது. கணவனுடைய குணத்திற்கு மாறாக அவளுக்கு நல்ல தாராள குணம். அன்பு, நல்லுணர்ச்சி முதலிய மனிதப் பண்புகள் அவளிடம் நிறைந்திருந்தன. ஜயதேயீயிக்கும், யமுனாவுக்கும் வயதில் பெரும் ஏற்றத் தாழ்வு இருந்தபோதிலும் அது வெளியில் தெரியவில்லை. நம்பர் தாரிணி ஜயதேயீக்கு வயது சுமார் முப்பத்தைந்து. ஆனால் தோற்றத்தில் பத்தொன்பது, இருபது வயதுப் பெண்போல் இருந்தாள். யமுனாவுக்குத் தோழிபோலவே தோன்றினாள். ஜயதேயீக்கு ஒரே ஒரு குழந்தைதான். பிறகு குழந்தைகள் இல்லை. அந்த முதற் குழந்தைதான் லட்சுமீசந்த்.

தாய் தந்தையருக்கு ஒரே செல்லக் குழந்தை ஆதலால் லட்சுமீசந்த் கர்வம் பிடித்தவனாகவும், அடங்காதவனாகவும் இருந்தான். தந்தையின் குணங்கள் அனைத்தும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அவனுக்கு வயது பதினாறு. ஆனால் பெரிய தைரியசாலி. அக்கம் பக்கமே அவனைக் கண்டால் அஞ்சும். வைசியக் குடும்பத்துப் பிள்ளையாக இருந்தும் அவனுக்கு இவ்வளவு தைரியம், வலிமை உண்டானதற்குக் காரணம் உண்டு, முதற் காரணம், லாலா பிரபு தயாள் பெரிய ஜமீந்தார். பணக்காரர். ஆள், மாகாணம், அதிகாரம் எல்லாம் இருந்தன. இரண்டாவது காரணம், லட்சுமீசந்த் கான்பூரில் மாமா வீட்டில் இருந்துகொண்டு இங்கிலீஷ் படித்துவந்தான். பட்டண வாழ்க்கைக் காரணமாக

அவனிடம் தைரியம் நிறைய இருந்தது.

உணவு அருந்தியபின் ஜ்வாலா பிரஸாத் சிவபுராவுக்கு கிளம்பினார். லாலா பிரபு தயாளின் மாளிகைக்கு அருகில் சென்றதும் வழக்கம்போல ஜ்வாலா பிரஸாத் வாசலில் இருந்த இராதாகிருஷ்ணன் கோயில் முன் நின்று கைகூப்பினார். பிறகு மாளிகையின் வாயிலைக் கடந்து உள்ளே சென்றார். படிகள் ஏறியதும் உயரமான தாழ்வாரத்தில் லாலா பிரபுதயாளுடைய அறை. அதையொட்டி மிகப் பெரிய வராந்தா. அந்த வராந்தாவில் லாலா பிரபுதயாள் ஒரு பலகையில் மேல் திண்டுகளில் சாய்ந்துகொண்டு பாதி படுத்தும் பாதி உட்கார்ந்தபடியுமாகக் காட்சியளித்தார். கீழே தரையில் ஜமக்காளம் விரித்திருந்தது. அதில் குமாஸ்தா லச்சீராமும் "சுனௌடா" கிராமத்தின் பட்டாமணியம் சீதள் பிரஸாதும் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்னால் சில காகிதங்கள் விரிந்து கிடந்தன. பலகைக்கு வலது புறம் சிறிது தள்ளி ஒரு சாய்வு நாற்காலியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலி காலைப் பரப்பிக்கொண்டு சாய்ந்தவாறு வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அருகில் வைத்திருந்த மது பாட்டிலிலிருந்து வெள்ளிக் கோப்பையில் மது ஊற்றுவதும், வாயருகில் கொண்டு போவதும், கோப்பையில் மது தீர்ந்ததும் மீண்டும் மது நிரப்புவதுமாக அவருடைய கை இயந்திரம்போல் வேலை செய்துகொண்டிருந்தது. லட்சுமீ சந்த் தாழ்வாரத்திலிருந்தே உரத்த குரலில் "சித்தப்பா வந்திருக்கிறாங்க" என்று அறிவித்தான். அதைக் கேட்டு பிரபு தயாள் நிமிர்ந்து பார்த்தார். ஜ்வாலா பிரஸாத் வருவதைக் கண்டு எழுந்து நின்றார். குமாஸ்தாவும் பட்டாமணியக் காரரும் தஸ்தாவேஜுகளை மூடிவிட்டனர். பட்டாமணி சீதள் பிரஸாத் கைகளை கட்டிக்கொண்டு சிறிது

தொலைவாக நகர்ந்து நின்றான். இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலி தன் இருக்கையில் உட்கார்ந்தபடியே கூறினார். "நல்ல சமயத்தில் வந்தீர்கள், உதவி தாசில்தார் ஸாஹப்! லாலா பிரபுதயாள், இன்னொரு கப் வேணுமே, ஆகா.... என்ன மனோகரமான நேரம்! நாள் பூராவும் குடித்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது. உடல் நினைவே இல்லாதபடி குடிக்கலாம்"— இதைச் சொல்லி அம்ஜத் அலி சிரித்தார்.

ஆனால் ஜ்வாலா பிரஸாதின் உள்ளத்தில் மழை காலத்தில் தோன்றக்கூடிய உவகை இல்லை. சிறிது வெறுப்புடன் சொன்னார்: "உங்களுக்குத்தான் தெரியுமே இன்ஸ்பெக்டர் ஸாஹப்! எனக்கு மதுப் பழக்கம் கிடையாது. அதுவும் மத்தியான நேரத்திலா? இந்த மழைக்காலத்தில் நான் காடம்பூரிலிருந்து நடந்தே வந்திருக்கிறேன். வெகு முக்கியமான காரியம் இல்லாமல் நான் வந்திருக்க முடியாது". இதைக் கூறி அவர் பட்டா மணியம் சீதள் பிரஸாத் பக்கம் திரும்பினார். "என்ன சீதள் பிரஸாத்! இந்த வேளையில் நீர் உமது வட்டாரத்தில் ஆஜராக இல்லாமல் இங்கு எப்படி வந்திருக்கிறீர்?"

"ஹுஜூர், நம்பர்தார் அவர்கள் சொல்லி அனுப்பினாரு. ஐயாவுக்கு இவங்க நண்பராச்சே, நான் இவங்க ஆணையை அசட்டை செய்ய முடியுமா?" சீதள்பிரஸாத் சிறிது மிடுக்காகவே பதில் சொன்னான். அவன் இப்படிப் பேசுவது ஜ்வாலா பிரஸாதுக்குப் பிடிக்க வில்லை. ஆயினும், அவன் தவறாக ஒன்றும் சொல்லிவிட வில்லை என்பதை உணர்ந்தார். குடித்துக்கொண்டிருக்கும் அம்ஜத் அலியை அவர் பார்த்தார். சீதல்பிரஸாதையும், லச்சீ ராமையும் பார்த்து "நல்லது, நீங்க ரெண்டு பேரும் வெளியில் இருங்கள். நான் லாலா பிரபுதயாளிடம் சில முக்கிய விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது.

பேசி முடிந்து கூப்பிடுகிறேன்.''

சீதள் பிரஸாதும் லச்சீ ராமும் அங்கிருந்து நகர்ந்து விட்டனர். ஆனல் அம்ஜத் அலி சிரித்தார். ''உதவி தாசில்தார் ஸாஹப், நான் இந்த பாட்டிலைக் காலி பண்ணமல் இங்கிருந்து நகரும் நிலையில் இல்லை. இந்த போதையில் உங்கள் பேச்சு என் காதில் விழாது. விழுந் தாலும் எனக்குப் புரியாது. ஆகவே நீங்கள் தாராள மாக எதுவும் பேசிக்கொள்ளலாம்.''

ஜ்வாலா பிரஸாதின் மனதில் தோன்றிய வெறுப் புணர்ச்சி இப்போது சிறிது குறையத் தொடங்கியது. அவர் புன்னகை செய்துகொண்டு சொன்னர்: ''நான் உங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இன்ஸ்பெக்டர் ஸாஹப்! அதுமட்டுமல்ல. நீங்களும் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவேண்டும். கலந்துகொண்டால் எனக்கு மிகுந்த சந்தோஷம்தான் உண்டாகும். விவகாரம் ஒரே சிக்கல். உங்கள் ஆலோசனை உதவியாகத்தான் இருக்கும்.''

''அடியேன் தயார்'' என்று சொல்லி அம்ஜத் அலி நாற்காலியை ஜ்வாலா பிரஸாத் வீற்றிருந்த பலகைக்கு அருகில் இழுத்துக்கொண்டார். ஜ்வாலா பிரஸாத் பிரபுதயாளுக்குப் பக்கத்திலேயே பலகையில் அமர்ந்து கொண்டிருந்தார். சிறிது நேரம் மௌனம். பிறகு அவர் சொன்னர்: ''பிரபுதயாள் ஸாஹப்! இந்த பர்ஜோர் சிங்கு விவகாரம் மோசமாகப் போய்க்கொண்டிருக் கிறது.''

பிரபு தயாள் புன்முறுவல் செய்தார். ''விஷயம் உங்கள் வரைக்கும் எட்டிவிட்டதா! பேஷ்! இது சம்பந்தாகத் தான் நான் இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலி ஸாஹபுக்கும் சிரமம் கொடுத்தேன். உங்களோடு பிறகு எப்போ தாவது சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம் என்றிருந்

தேன். இன்று அவன் காலங்கார்த்தாலேயே வந்து பயமுறுத்திவிட்டுப் போனன். நானும் கூடத்தானே தற்காப்புக்கு ஏதாவது ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்? இங்கிலீஷ்காரன் சர்க்காரா நடக்கிறது; போலீஸ் இருக்கு. ராணுவம் இருக்கு. இனி என்ன பயம்?'' "ஆனலும் பாருங்க", ஜ்வாலா பிரஸாத் ஏதோ சொல்ல வாயெடுத்து நிறுத்திவிட்டார். தம் உள்ளத்தில் இருப்பதை எவ்விதமாக பிரபு தயாளிடம் சொல்லுவதென்று அவருக்குப் புரியவில்லை. இங்கு அவரெதிரில் நிகழும் நாடகத்தின்படி, பர்ஜோர் சிங் தான் குற்றவாளி; அவன் சட்டத்தை மீறியவன்; குற்ற மிழைத்தவன். பிறரைத் துன்புறுத்துகிறவன். இப்போது அவனிடமிருந்து லாலா பிரபு தயாளைக் காப்பாற்ற வேண்டும். அவருக்கு உதவி தேவையாக இருக்கிறது. லாலா பிரபுதயாள் பிறருக்குத் தம்மிடம் பரிதாபம் உண்டாகும்படியானதொரு விசித்திர முக பாவத்தோடு உட்கார்ந்திருந்தார்.''

"நீங்கள் ஏதோ சொல்ல வந்தீர்களே?'' அம்ஜத் அலி கேட்டார்.

"இன்ஸ்பெக்டர் ஸாஹப், பர்ஜோர் சிங்கிடம் இருப்பது மொத்தம் நூறு பீகா நிலம்தான். அந்த நிலத்தை நம்பித்தான் இருக்கிறது அவன் பிழைப்பு என்று லாலா பிரபு தயாளிடம் சொல்லலாம் என்றுதான் புறப்பட்டு வந்தேன். எப்படியாவது நிலம் அவனிடமே இருக்கும்படி ஏற்பாடு செய்யலாகாதா?'' ஜ்வாலா பிரஸாத் லாலா பிரபுதயாளைப் பார்த்துக் கூறினர்.

"உதவி தாசில்தார் ஸாஹப்! கடன் என்பது திருப்பிப் பெறத்தானே கொடுக்கப்படுகிறது? ஏதோ தானம், தட்சிணை என்பதல்லவே? நீங்களே அந்தக் கடனை நான் எப்படி வசூலிக்கலாம் என்று சொல்லுங்

கள். இன்று யானையை வைத்துக்கொள் என்று சொல்ல வந்தான். அவன் சொன்னதும் சரிதானே! யானை என்பது ராஜவம்சத்தார் வளர்க்கக்கூடியதே தவிர என்னைப்போன்ற பனியாக்கள் எல்லாம் யானையை எங்கே வளர்க்க முடியும்? ஆகவே நான் உங்களைக் கேட்கிறேன். இந்த மாதிரி தற்பெருமை பற்றிக் கொண்டு என்னை ஏசுகிறபோது தான் ஒரு பிச்சைக் காரன் என்கிற உண்மையை ஏன் உணர்வதில்லை? அப்போ தன் வினைத் தன்னைச் சுடும், இதுதானே விதிமுறை!''

''அடியோடு அழிந்துவிடுவான் லாலா பிரபுதயாள் ஸாஹப்! இதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!'' ஜ்வாலா பிரஸாத் அநுதாபம் நிறைந்த உணர்ச்சிக் குரலில் சொன்னார்.

பிரபுதயாள் சிரித்தார். ''உதவி தாசில்தார் ஸாஹப்! மற்றவங்க கெட்டுப்போறதைப் பத்தி நான் சிந்திக்கத் தொடங்கினால் இனிமேல் இந்தக் கொடுத்தல் வாங்கல் வியாபாரத்தைக் கட்டிவைத்து விடவேண்டியதுதான்! ஒருவன் அழிகிறான். அவனது அழிவால் மற்றொருவன் வளர்கிறான். அயோக்கியன், தகுதியற்றவன், அறிவற்றவன் தன்னடக்கம் இல்லாதவன், அவன் அழிந்துதான் போகவேண்டும். அவனை அழியாமல் யார்தான் காப்பாற்றமுடியும்? இதைப்பற்றி எல்லாம் சிந்தனை செய்வதை விடுங்கள். நியதி என்பது ஒரு விசித்திர ரீதியிலே தான் சென்றுகொண்டிருக்கும். இந்த உலகத்திலே சாமர்த்தியசாலிதான் வாழமுடியும்!''

பிரபுதயாள் சொன்னதைக் கேட்டு ஜ்வாலா பிரஸாதுக்குக் கோபம் பொங்கியது. ஆனால் அது ஊமைக் குமுறலாக மாறி அடங்கிவிட்டது. அவர் முயற்சியைக் கைவிடவில்லை. ''லாலா பிரபுதயாள்! எந்த

விவகாரமும் மனிதனைப் பார்த்துச் செய்யவேண்டும். நான் நினைப்பது என்னவென்றால், பர்ஜோர்சிங் பயமுறுத்திவிட்டுப் போனானே, அது வெறும் பயமுறுத்தலல்ல. மனிதர்களைப் புரிந்துகொள்ளும் சக்தி என்னிடம் சிறிதளவேனும் இருக்கிறது என்று நீங்கள் நம்பினால் நான் சொல்வதைக் கேளுங்கள். அவன் சொன்னபடி செய்யக்கூடியவன். இல்லையா இன்ஸ்பெக்டர் ஸாஹப்? நீங்கள்தான் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் ஆயிற்றே? தினந்தோறும் பலவகைப்பட்ட மனிதர்களோடு தொடர்புகொள்கிறவராயிற்றே? நான் சொல்லுவது சரியா தப்பா?

அம்ஜத் அலி இம்முறை சிறிது கவனமாகப் பேசினார். "நீங்கள் சொல்லுவது ரொம்பச் சரி, உதவி தாசில்தார் ஸாஹப்! எனக்கும் தெரியும். இந்த பர்ஜோர்சிங்கிட்டே எப்போதுமே ஒரு பெருந்தன்மை உண்டு. ஒரு வார்த்தை சொன்னால் சொன்னதுதான். கோழைத்தனம் என்பது அவன்கிட்டே கடுகளவும் கிடையாது. நாங்கள் எங்களால் முடிஞ்ச அளவு லாலா பிரபு தயாளுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாப்போம். ஆனால் இவரும் தன்னளவில் விழிப்புடன்தான் இருக்க வேண்டும். நான் இந்த பர்ஜோர்சிங்கை "லாக் அப்"பில் தள்ளிப் போட்டிருப்பேன். ஆனால் பாருங்க, டாகுர் கஜராஜ்சிங் அவனுக்கு மாமா. டாகுர் கஜராஜ்சிங் சாதாரண மனுஷர் இல்லை. கலெக்டரிடமும், கேப்டன் அவர்களிடமும் அவருக்கு செல்வாக்கு உண்டு."

லாலா பிரபு தயாள் தன் திண்டுக்கு அடியிலிருந்து ஒரு ரிவால்வரை எடுத்துத் தன் முன் வைத்துக்கொள்வதை ஜ்வாலா பிரஸாத் ஆச்சரியத்தோடு கவனித்தார் "ஜமீந்தாராக இருப்பதென்றால் ஒன்றும் விளையாட்டுக் காரியமில்லை. உதவி தாசில்தார் ஸாஹப்! எனக்குத் தெரி

யாதா? சாவுடன் அஞ்சாமல் விளையாடக்கூடியவன்தான் வாழ முடியும். நான் பழங்காலத்து பயங்காளி பனியா இல்லை. பர்ஜோர்சிங் போன்றவர்களுடைய பயமுறுத்தல்களைக் கேட்டு பயந்துவிட்டால் அப்புறம் என்ன இருக்கிறது? இவனுக்கே பயந்துவிட்டால் அப்புறம் டாகுர் கஜராஜ்சிங்கின் ஐந்து கிராமங்கள் என்னிடம் அடமானம் வைத்திருக்கிருரே! அவைகளை என்றைக்காவது சுவாதீனப்படுத்திவிட வேண்டும் என்று நான் கனவு காண்பதையும் விட்டுவிட வேண்டியதுதான். நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்படாதீங்க உதவி தாசில்தார் ஸாஹப்! ஒருவேளை என்மேல் அவன் கிரிமினல் வழக்கு தொடர்ந்தாலும் சரி, நான் அவனை ஒரு கை பார்க்கவே போகிறேன்.''

ஜ்வாலாபிரஸாத் லாலா பிரபுதயாளுடைய சுய உருவத்தைக் கண்கூடாகக் கண்டார். இப்படி அவர் கற்பனையும் செய்ததில்லை. எதிரில் உட்கார்ந்திருக்கும் ஆசாமி ஒரு பெரிய ராட்சதனகவே அவருக்குப்பட்டது. அந்த ராட்சதப் பிறவியிடம் பயம் இல்லை. உணர்ச்சி இல்லை. அச்சம்—சங்கோசம் ஒன்றுமே இல்லை. அந்த அரக்கனைவிடத் தான் சிறியவனுக, குள்ளமாக, மிகவும் பலவீனமாக இருப்பதை ஜ்வாலாபிரசாத் உணர்ந்தார். அதுமட்டுமல்ல, அந்த அரக்கனுடைய காலடியில் எண்ணற்ற மக்கள் விழுந்து புரளுகின்றனர். அவ்வரக்கனுடைய கட்டளைகளைச் சிரமேற் கொண்டு ஆடுகின்றனர் என்பதையும் அவர் உணர்ந்துகொண்டார்.

ஒரு பயங்கரக் கனவு போன்றது இந்தக் காட்சி! ஜ்வாலாபிரஸாத் ஒரு முறை பலமாகத் தலையை அசைத்தார். அந்தக் காட்சி மறைந்தது. இப்போது அவருக்கெதிரில் கிழடுதட்டிய மெலிந்த மனிதன் ஒருவன் அமைதியற்ற நிலையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.

அவனுடைய முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. அவன் கை ரிவால்வரை வைத்துக்கொண்டு அதன் பளுவினால் நடுங்கிக்கொண்டிருந்தது. ஆனால் இவற்றோடுகூட அவனுடைய முகத்தில் குரூபமான ஒரு பயங்கர அரக்கத்தனம் குடிகொண்டிருந்தது. அதோடு கொடுமையும், உறுதியும் கூடிக் காட்சி அளித்தன.

ஜ்வாலாபிரஸாத் எழுந்துவிட்டார். "லாலாபிரபுதயாள்! நான் எனது கடமையைச் செய்துவிட்டேன். மனசுக்கு ஒரு நிம்மதியாச்சு. ஆனால் ஒரு விஷயம். உங்களுடைய பேச்சு எனக்குப்புரியவே இல்லை. ஆதலால் நான் சொன்னதும் உங்களுக்குப் புரிந்திருக்காது என்றே நான் யூகிக்கிறேன். நாம் இருவரும் பார்க்கிற கோணம் வேறு வேறானது. சரி, உத்தரவு கொடுங்கள். போய் வருகிறேன்."

அப்பொழுது லட்சுமீ சந்த் வந்து சொன்னான்: "சித்தப்பா, அம்மா, பலகாரமாவது சாப்பிடாமல் நீங்கள் போகக்கூடாதென்று சொன்னாங்க, உங்களை உள்ளே வரச்சொன்னாங்க."

4

லாலாபிரபுதயாள் பர்ஜோர் சிங்குக்கு எதிரான வழக்கில் வெற்றிபெற்றுவிட்டார். இரண்டாயிரம் ரூபாய்க்கு 'டிக்ரி' ஆயிற்று. பணத்தை வசூலிக்க பர்ஜோர்சிங்கின் நிலம் நூறு பீகாவையும் ஜப்தி செய்ய வேண்டியதாயிற்று. நிலத்தை ஏலம் போட்ட அன்று ஏலம் எடுக்க ஒருவரும் முன்வரவில்லை. ஆகவே லாலாபிரபு

தயாள் தமக்கு வரவேண்டிய பணத்திற்கு அந்த நிலத்தைத் தாமே ஏலம் எடுத்துக்கொண்டுவிட்டார்.

கோர்ட்டிலிருந்து நிலத்தை ஏலம் எடுத்துவிட்டு லாலாபிரபுதயாள் வீடு திரும்புகையில் பொழுது சாய்ந்துவிட்டது. தம்முடைய 'கோச்' வண்டியில் ஏறி அவர் காடம்பூரிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டார்.

ஜனவரி மாதத்து முதல் வாரம். வானத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. லாலா பிரபுதயாளுடன் அவருடைய குமாஸ்தா லச்சீராமும், பட்டாமணியம் சிதள்பிரஸாதும் இருந்தனர். காடம்பூரிலிருந்து சிவபுரா போகும் மண்பாதையில் வண்டி திரும்பியது. அப்போது பர்ஜோர் சிங்கின் குரல் அவர் காதில் விழுந்தது. "லாலா பிரபுதயாள், கொஞ்சம் நில்!"

வண்டி நின்றது. லாலாபிரபுதயாள் தம் ரிவால்வரை எடுத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். இதற்குள் பர்ஜோர் சிங் அவருடைய வண்டிக்கு எதிரில்வந்து விட்டான். அவன் கையில் ஆயுதம் ஏதுமில்லை. ஆனால் அவனுடைய முகம் கோபத்தினால் சிவந்திருந்தது. "ஆக, நிலத்தையெல்லாம் ஜப்தி செய்துகிட்டு வந்துட்டே லாலா பிரபுதயாள்! உனக்கு சாவும் வந்தாச் சின்னு தோணுது!"

"என்னடா உளறுகிறே? கொஞ்சம் ஜாக்கிரதையாப் பேசு!" லாலா பிரபுதயாள் கடுமையான குரலில் சொன்னார்.

பர்ஜோர் சிங்கின் பார்வை பிரபுதயாளுடைய கையிலிருந்த ரிவால்வரில் விழுந்தது. அவன் உரக்கச் சிரித்தான். "சரிதான், துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு சுத்திகிட்டு இருக்கியா? ஆனா, லாலா பிரபுதயாள், இந்தத் துப்பாக்கி உன்னைப்போல பனியாப் பயலுக்கு அடங்கல்லே." இவ்வாறு சொல்லிக்கொண்டே பர்ஜோர்

சிங் சிறிதும் பயமில்லாமல் அவர் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்தான். பிரபுதயாள் பயத்தினல் கத்தியே விட்டார். அவருடைய முகம் வெளிறிப் போயிற்று. சீதள்பிரஸாதும் லச்சீராமும் கையைக் கட்டிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தனர். "பயப்படாதே லாலா! நான் உன்னைக் கொல்லமாட்டேன். ஆனா உனக்கு ஒண்ணு சொல்லறேன். நீ உசிரோட என்னுடைய நிலத்தே சுவாதீனம் செஞ்சிக்க முடியாது. நீ செத்த பிறகு நிலம் சுவாதீனம் ஆகிறதிலே பயனில்லே-ஆனதுனலே, என் நிலத்தே சுவாதீனம் செஞ்சுக்கணும்னு ஏதானும் முட்டாள் தனமா செஞ்சுடாதே!" பர்ஜோர் சிங் ரிவால்வரை பிரபுதயாளுக்கெதிரில் விட்டெறிந்தான். பிறகு வெகு விரைவாக காடம்பூரை நோக்கிச் சென்றுவிட்டான்.

பிரபுதயாள் கோச்சுவண்டியை சிவபுராவுக்குச் செலுத்துவதற்குப் பதிலாக ஜ்வாலா பிரஸாத் வீட்டை நோக்கித் திருப்பினர். அவருடைய மனதில் ஒரு விசித்திரமான பயம் குடிகொண்டுவிட்டது.

இரண்டு மூன்று நாட்களாக ஜ்வாலாபிரஸாதின் உடல் நலம் குன்றியிருந்தது. கடுமையான ஜலதோஷம். யமுனா முன்ஷி ராமசகாயின் வீட்டுக்கு ராஜபுரா சென்றிருந்தாள். ஜ்வாலா பிரஸாத் தனியாக வீட்டில் இருந்தார். அவர் வீட்டிற்குள் போர்வையைப் போர்த்துக்கொண்டு படுத்திருந்தார். பீக்கூ வெளியில் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு நெருப்புக் காய்ந்துகொண்டும் 'சிலும்பி' பிடித்துக்கொண்டுமிருந்தான். பிரபுதயாளைக் கண்டதும், பீக்கூ எழுந்து நின்றான். "ஐயாவுக்கு சுரம் இருமல், படுத்திருக்காரு. ஏதாச்சும் ரொம்ப அவசியமான வேலேன்னா அவுங்களை எழுப்பறேன்."

சிறிது சிடுசிடுப்பாக பிரபுதயாள் சொன்னார்: "ஆமாம் ரொம்ப அவசியமானவேலை. இப்பவே எழுப்புஅவங்களை. நாங்க வந்திருப்பதாகச் சொல்லு. உயிருக்கே ஆபத்து வந்திருக்குதுண்ணு சொல்லு." "அடி ஆத்தே" பீக்கூ கத்தினான். "அப்படின்னா நீங்க உள்ளே இப்படி வந்து உட்காருங்க. அறையைத் திறந்துவிடறேன்!" என்று சொல்லி பீக்கூ அறையின் கதவைத் திறந்துவிட்டு ஜ்வாலா பிரஸாதை எழுப்ப உள்ளே போனான்.

"ஐயா உங்களே உள்ளே அவங்க அறைக்கே வரச் சொன்னாங்க. தனியாத்தான் இருக்காருங்க. அம்மா ராஜபுரா போயிருக்காங்க. வாங்க உள்ளே."

ஜ்வாலா பிரஸாத் கட்டில்மேல் தலையணையில் சாய்ந்து பிரபுதயாளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். "வாருங்கள், லாலா பிரபுதயாள் ஸாஹப்! இரண்டு மூன்று நாட்களாக கடுமையான ஜலதோஷம், ஜுரம் வீட்டிலே அவளும் ஊருக்குப் போயிருக்கிறாள். சிறிது அசதியாகப் படுத்துவிட்டேன். உட்காருங்கள்! அட! என்ன விஷயம்? ரொம்ப கலங்கிப்போயிருக்கிறீர்களே என்ன நடந்தது?"

எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தவாறு பிரபு தயாள் சொன்னார்: "உதவி தாசில்தார் ஸாஹப்! இன்று நான் பர்ஜோர்சிங்கின் நிலத்தை ஜப்தி செய்வித்து விட்டு சிவபுராவுக்குத் திரும்பிக்கொண்டிருந்தேன்...."

ஜ்வாலா பிரஸாத் குறுக்கே கேட்டார், "அப்படி யென்றால் நீங்கள் பர்ஜோர்சிங்கின் நிலத்தை வாங்கிவிட்டீர்களா?"

"உங்களுக்கு அது தெரியாதா? என்ன செய்வது? அவனிடத்தில் பயந்துகொண்டு ஒருவரும் நிலத்தை ஏலம் எடுக்க முன்வரவில்லை. வேறு வழியின்றி நானே ஏலம் எடுக்கவேண்டி வந்துவிட்டது".

"ம்..." ஜ்வாலா பிரஸாத் யோசனையில் ஆழ்ந்து விட்டார். பிறகு கவலை தோய்ந்த முகத்தோடு பிரபு தயாளைப் பார்த்தார். "எனக்கு இதைப்பற்றி எல்லாம் ஒன்றும் தெரியாதே! இடையில் எனக்குப் பல வேலை. உடல்நலம் வேறு சரியில்லை." அவர் ஒரு பெருமூச்சு விட்டார். "அப்போது...நீங்கள் நிலத்தை வாங்கி விட்டீர்கள்! உங்கள் பேரில் நிலத்தைப் பதிவும் செய்து கொண்டுவிட்டீர்கள்! அப்படித்தானே?"

"ஆமாம் இன்றுதான் டிப்டி அவர்களுடைய அலுவலகத்தில் பத்திரம் பதிவுசெய்துவிட்டு கான்பூரி லிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கிறேன். பர்ஜோர் சிங்கின் பிள்ளைகள் சார்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் கோர்ட்டில் அவர்கள் பக்கமாக வாதாடுவதற்கு ஒருவரும் வரவில்லை." சொல்லிக் கொண்டே வரும்போது திடீரென்று அவருடைய குரல் ஒருவித பயத்தினால் கம்மிவிட்டது. "உதவி தாசில்தார் ஸாஹப்! சிறிது நேரத்திற்கு முன் என் வண்டி சிவபுராவை நோக்கித் திரும்பியபோது அங்கே பர்ஜோர் சிங் வந்து வண்டியை வழிமறித்து நிறுத்தினான். அவன் முகத்தில் பித்துப் பிடித்தவன் போன்ற வேகம் தென் பட்டது. என் உயிரை வாங்கப்போவதாக பயமுறுத்தி விட்டுப் போய்விட்டான்!? ஜ்வாலா பிரஸாதின் எதிரில் அமர்ந்திருக்கும் அந்த நபரிடம் ஒரு கடும் வெறுப்பு தோன்றியது. "லாலா பிரபு தயாள்! உங்களுக்குத்தான் முன்பே தெரியுமே? அவன் முதல் தடவையாகப் பயமுறுத்தவில்லையே? நீங்கள் என்று அவன்பேரில் வழக்குத் தொடர்ந்தீர்களோ அவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டது. ஆகையால் இதில் எனக்கொன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் உங்களிடம்தான் எப்போதும் ரிவால்வர் இருக்குமே? இன்ஸ்பெக்டர்

அம்ஜத்அலியும் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிருர். இனி உங்களுக்கு பயம் ஏன்?''

சிறிது தயக்கத்தோடு பிரபுதயாள் சொன்னுர், "அது சரி. பயப்பட ஒன்றுமில்லே. ஆனலும் பாருங்கள் நடக்கக்கூடாதது எதுவோ ஒன்று நடந்துவிடுமோ என்று அச்சம் உண்டாகிறது. நான் நாளைக்கே அவனுடைய நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ளவேண்டும்."

ஜ்வாலா பிரஸாத் பதில் கூறினர், "ஆம், சட்டப்படி உங்களுக்கு அந்த நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ள முழு உரிமை உண்டு. இருந்தபோதிலும், நீங்கள் இம் முறை, அறுவடை ஆகிறவரை தாமதிப்பது நல்லது.'

"அந்த நிலம் என்னுடையது. பயிர் நிலத்தில் இருப்பதால் அந்தப் பயிரும் என்னுடையதுதான். உதவி தாசில்தார் ஸாஹேப்! அந்த நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ளுவதில் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும். இதைச் சொல்லுவதற்காகவே நான் உங்களிடம் வந்துள்ளேன்.''

ஜ்வாலா பிரஸாத் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். பிறகு தன் சக்தியனைத்தையும் திரட்டிக்கொண்டதுபோல் திடீரெனப் பேசத் தொடங்கினர். "என்னை மன்னித்து விடுங்கள் பிரபுதயாள்! நான் இந்த விவகாரத்தில் தலையிடச் சித்தமாக இல்லை. சட்டம் உங்கள் பக்கம் இருக்கிறது. இது எனக்குத் தெரியும். ஆனல், தருமம் உங்கள் பக்கம் இல்லை. இதுவும் எனக்குத் தெரிகிறது. நீங்களே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், என் உடல் நிலை சரியில்லை என்று. இப்போது கூட எனக்கு ஜுர வேகம் இருக்கிறது."

லாலா பிரபுதயாளுடைய முகம் சிவந்துவிட்டது. "என்ன சொன்னீர்கள்? தருமம் என் பக்கம் இல்லையா?

யார் பக்கம்தான் தருமம் இருக்கிறது? யாராவது வந்து சொல்லட்டும். நான் உங்களை நம்முடைய ஆளாக நினைத்து வந்தேன். உங்களுடைய உதவியை நாடினேன். ஆனால் உங்களுக்கு டாகுர் கஜராஜ் சிங்கோடு நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை மறந்தேவிட்டேன்! பார்க்கப் போனால் பர்ஜோர்சிங் கஜராஜ்சிங்கின் மைத்துனன் தானே! நல்லது; வருகிறேன். நான் உங்களுக்குச் சிரமம் கொடுத்துவிட்டேன்!" தலையைக் குனிந்து கொண்டு பிரபு தயாள் சென்றுவிட்டார்,

ஜ்வாலா பிரஸாதின் மனதில் அமைதியைக் கலைத்து விட்டு ஒரு பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது இந்த சம்பவம்.

ஜ்வாலா பிரஸாதுக்கு இரண்டு மணி நேரம்வரை புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் வரவில்லை. எழுந்து உட்கார்ந்தார். பிறகு எழுந்து ஆடைகளை மாற்றிக் கொண்டு பிக்கூவைக் கூப்பிட்டுச் சொன்னார்: "பிக்கூ: நான் கொஞ்சம் டாகுர் கஜராஜ் சிங் வீடுவரை போய் வருகிறேன். ஒரு மணி நேரத்துக்குள் திரும்பிவிடுவேன்."

அப்போது கஜராஜ் சிங் வீட்டில் இசைக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அன்று காலையில்தான் கஜராஜ் சிங்கின் சம்பந்தி ராஜா சந்திரபூஷண் சிங் வந்திருந்தார். அவருக்கு வரவேற்பு உபசரணை செய்யும் வகையில் கச்சேரி நடைபெற்றது. விருந்து, கச்சேரிக்காக ஜ்வாலா பிரஸாதுக்கும் அழைப்பு வந்திருந்தது; உடல் நலக் குறைவினால் ஜ்வாலா பிரஸாத் வர இயலாதென்று சொல்லி அனுப்பிவிட்டார். ஜ்வாலா பிரஸாத் நிறையப் போர்த்துக்கொண்டு வருவதைப் பார்த்து கஜ்ராஜ் சிங் ஆச்சரியம் அடைந்தார். "வாருங்கள், வாருங்கள், ஜ்வாலா பாபூ! வீட்டில் தனியாக இருப்புக்கொள்ள வில்லை போலிருக்கிறது! இந்த ஜலதோஷமெல்லாம் ஒரு

வியாதியா என்ன? வாருங்கள், உங்களுக்கும் சிறிது சூடுபிடிக்கட்டுமே!...பர்ஜோர்! கொஞ்சம் இப்படி உதவி தாசில்தார் ஸாஹபுக்கும் ஒரு கிளாஸ் நிரப்பிக் கொண்டுவா!"

வெள்ளிக் கோப்பையில் மதுவை ஊற்றி பர்ஜோர் சிங் ஜ்வாலா பிரஸாதிடம் கொடுத்தான். ஜ்வாலா பிரஸாதும் ஒரு வாய் குடித்துவிட்டுக் கோப்பையைக் கீழே வைத்தார். பிறகு நான்கு புறமும் நோக்கினர். அறையில் மிகச் சிலரே இருந்தனர். கான்பூரிலிருந்து வந்த ஒரு பாடகி பாடிக்கொண்டிருந்தாள். ராஜா சந்திரபூஷண் சிங் கண்ணை மூடிக்கொண்டு திண்டுத் தலையணையில் சாய்ந்து படுத்திருந்தார். ஜ்வாலா பிரஸாத் அவர் தூங்குகிறார் என்றுதான் நினைத்தார். ஆனல் கவனித்துப் பார்த்ததில் ராஜா ஸாஹப் தூங்கவில்லை என்று தெரிந்தது. கை அடிக்கடி அருகிலிருக்கும் வெள்ளிக் கோப்பையை எடுப்பதும், உதட்டுக்கருகில் கொண்டுசெல்வதும், மீண்டும் கீழே வைப்பதுமாக இறங்கிக்கொண்டிருந்தது. அவருக்குப் பக்கத்தில் பர்ஜோர் சிங் உட்கார்ந்துகொண்டிருந்தார். பர்ஜோர் சிங்கின் கண்கள் நெருப்பாக ஜொலித்துக் கொண்டிருந்தன. ராஜா சந்திரபூஷண் சிங்கின் கோப்பையை நிரப்பும் வேகத்தைப்போல் இரண்டு மடங்கு வேகத்தில் தன் கோப்பையை நிரப்பிக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் வேறு இரண்டு மூன்று பேர் இருந்தனர். இதற்கு முன் ஜ்வாலா பிரஸாத் அவர்களைப் பார்த்ததில்லை. அவர்கள் ராஜா சந்திர பூஷணுடன் வந்தவர்கள் போலும்.

எதிரில் நடனம் நடந்துகொண்டிருந்தது. ஆட்டத்தை ராஜா சந்திரபூஷண்சிங் கவனிக்கவே இல்லை. கூட்டத்தில் மகிழ்ச்சியோ, உல்லாசமோ இல்லை என்று ஜ்வாலா

பிரஸாதுக்குத் தோன்றியது சிறிது நேரம் ஜ்வாலா பிரஸாத் பாட்டையும் நடனத்தையும் ரதித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் மெல்ல கஜராஜ் சிங்கின் காதோடு சொன்னார், "டாகுர் ஸாஹப்! உங்களோடு ஒரு விஷயம் பேச வேண்டும். அதற்குத்தான் வந்தேன் இந்த ஜுரத்தோடு."

"ஓ! அப்படியானால் பக்கத்து அறைக்குப் போகலாமா"?

"வேண்டாம். இங்கேயே ஒரு ஓரமாக நகர்ந்து உட்கார்ந்துகொள்ளுங்கள். பர்ஜோர் சிங்கையும் இங்கே கொஞ்சம் கூப்பிடுங்கள். விஷயம் அவரைப் பற்றியதுதான்."

கஜராஜ் சிங் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

"ஜ்வாலா பாபூ! நடக்கவேண்டியதென்னவோ நடந்து விட்டது! இனி நடக்கப்போவது நம்முடைய கையில் இல்லை. அதை யாராலும் தடுக்க இயலாது. நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். பிரபு தயாள் நாளைக்கே பர்ஜோரின் நிலத்தை சுவாதீனம் செய்துகொள்ளப் போகிறான் என்றுதானே சொல்லவந்தீர்கள்?"

ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். "உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா? மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே?"

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? பிரபு தயாளைப் பற்றி அறிந்தவர்கள், அவன் அந்த நிலத்தைத் தன் பெயரில் பதிவு செய்துகொண்ட பிறகு சும்மா உட்கார்ந்திருக்கமாட்டான் என்றுதான் சொல்லு வார்கள். நிலத்தில் பயிர் வளர்ந்து நிற்கிறது. ஈசுவர கிருபையால், இந்த வருஷம் நல்ல மகசூல் இருக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. குறைந்த பட்சம் பீகாவுக்குப்

பத்து மணிக்குக் குறையாது. பிரபு தயாள் இதை விட்டுவிடுவானா? நாளைக்கே பர்ஜோரின் நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்வான்!"

"நாளைக்கே என்று எப்படிச் சொல்ல முடியும்?"

"உதவி தாசில்தார் ஸாஹப்! இன்று சாயங்காலம் அவன் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தானா இல்லையா? உங்களிடம் அவனுக்குப் பிடித்தமான விடை கிடைக்கவில்லைபோலிருக்கிறது. ஆகவே இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலியை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போயிருக்கிறான்; தக்க படை பரிவாரங்களோடு வந்து நாளைக்கே நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ளப் போகிறான். நமக்குப் போதாத காலம், சர்க்காருடைய பலமும் அவனுக்கு உதவியாக இருக்கிறது. சர்க்காரும், சட்டமும், போலீசும் இல்லாமல் அவன் வருவானானால் நாங்கள் ஒரு கை பார்த்துவிடுவோம்!"

"அப்படியானால் என்ன நடக்கும்?" நிராசையோடு ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

'பகவான் நினைத்தபடி நடக்கும்!' என்ற கருத்துக் கொண்ட துளஸி தாஸருடைய பாட்டை கஜராஜ் சிங் சொன்னார். "இனி நீங்கள் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். ஜ்வாலா பாபூ! இந்த ஜுரத்திலும் நீங்கள் எங்களைப் பற்றிக் கவலை கொண்டு ஓடிவந்திருக்கிறீர்கள். இதற்காக நன்றி! ஆனால் நீங்கள் கவலைப்பட்டு ஒன்றும் நடக்கப்போவது கிடையாது. இதை நீங்களே பார்த்துவிட்டீர்கள். விதியை யாரால் தடுக்க முடியும்?"

"என்னய்யா அது, 'கசமுச'ன்னு பேசுகிறீங்க? கொஞ்சம் நாங்களும்தான் கேட்கலாமே? பர்ஜோர் சிங் தன்னிடத்தில் உட்கார்ந்தபடியே கூறினான். அதே நேரத்தில் ராஜா சந்திரபூஷண் சிங்கும் நிமிர்ந்து

உட்கார்ந்தார்.

கஜராஜ் சிங் "ஒன்றுமில்லை, உதவி தாசில்தார் லாலா பிரபுதயாளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்!"

பர்ஜோர் சிங் சிரித்தான். "அந்தப் பயலைப் பற்றி நடத்துங்க உங்க பேச்சை! ஆனா அதிலே பர்ஜோர் சிங்கை மட்டும் இழுக்காதீங்க! பர்ஜோர் சிங்கைப் பொறுத்தவரை அவன் தனியாவே பிரபு தயாளைப் பார்த்துக்கிடுவான்."

பர்ஜோர் சிங்கின் குரல் ஜ்வாலாபிரஸாதுக்கு ஒருவிதமாகப்பட்டது. இதற்குள் ராஜா சந்திரபூஷண் பேசத் தொடங்கினார். "நீ அசைஞ்சு குடுக்காமல் திடமா நில்லுடா பர்ஜோர்! நான் இருக்கேன். நம்ம ராஜ வம்சம் கோழையாக உட்கார்ந்திருக்கும் அளவுக்கு இன்னும் கெட்டுப் போயிடலை; இந்த பனியாப் பயலுக்கு நம்மை அவமானப்படுத்த இவ்வளவு துணிச்சலா?"

ஜ்வாலாபிரஸாத் மருமத்தில் அடிபட்டவர்போலானார். எழுந்தார். அவருடைய மனதில் ஒருவகையான பயம். சந்தேகமும் அச்சமும் ஏற்பட்டன. நிராசை ததும்பும் குரலில் கஜராஜ் சிங்கிடம் சொன்னார்: "நல்லது, எனக்கு விடை கொடுங்கள்! வீட்டுக்குப் போய் தூங்குகிறேன். ஒருவகையான கவலை என்னை வாட்டிக்கொண்டிருந்தது அதனால் வந்தேன். இனிமேல் நடக்கப்போவது உங்கள் கையில் இருக்கிறது!"

கஜராஜ்சிங் ஜ்வாலாபிரஸாதுக்கு விடை கொடுத்தனுப்ப அவருடன் சிறிது தூரம் நடந்து வந்தார். "இது எங்களுடைய விவகாரம். நாங்கள் ஏதோ ஒரு வகையில் இதற்குப் பரிகாரம் தேடிக்கொள்வோம். ஆம்! உங்களை ஒரு விஷயம் நான் அவசியம் கேட்டுக் கொள்ளவேணும். இனிமேல் நீங்கள் இந்த விஷயத்தில் தலையிடாமல் விலகியே இருங்கள். உங்களுக்கு ஒன்றும்

தெரியாததுபோல தெரிந்துகொள்ள விரும்பாததுபோல இருந்துவிடுங்கள். உங்களால் தீர்க்க முடியாத விவகாரம் தானுக நல்லவகையிலோ, கெட்ட வகையிலோ ஒரு முடிவுக்கு வரும்படி விட்டுவிடுங்கள் ஜ்வாலாபாபூ."

ஜ்வாலாபிரஸாத் வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்டார். அவருடைய மனதிலும், உடலிலும், ஆத்மாவிலும் ஒரு பெருங்களைப்பு மேலிட்டிருந்தது.

எவ்வளவு நேரம் தூங்கினுர் என்று தெரியாது. குமாஸ்தா லச்சீராம் வந்து எழுப்பியபோதுதான் அவருடைய தூக்கம் கலைந்தது. கண்ணைக் கசக்கிய வண்ணம் அவர், "என்ன விஷயம்" என்று கேட்டார். லச்சீராம் மிகுந்த பரபரப்போடு சொன்னுன் :

"நம்பர் தாரிணி அம்மா உங்களை உடனே கையோட அழைத்துவரச் சொன்னுங்க. நம்பர்தார் ஸாஹப் இப்ப இந்த உலகத்திலே இல்லே. கொஞ்ச நேரத்துக்கு முன்னுடி எவனே வந்து அவரைச் சுட்டுக் கொன்னு போட்டுட்டான். இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலியை சிவபுராவுக்கு அனுப்பி வெச்சிட்டு நாங்க உங்க கிட்டே வந்திருக்கோம்."

ஜ்வாலா பிரஸாத் துணுக்குற்றுவிட்டார். "எவன் கொன்றது? எப்படிக் கொன்ருன்?"

"எல்லாம் நம்பர்தாரிணி அம்மா விவரமாச் சொல்லு வாங்க. வேலையாட்கள் சொன்னது என்னன்னு கேட்டால், சுமார் பத்துப் பதினேரு மணி ராத்திரியிலே, நம்பர்தார் ஸாஹப் அப்பத்தான் இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலியை வாசலுக்கு வந்து வழியனுப்பி வைத்துவிட்டு வெளித்தாழ்வாரத்தண்டே படி ஏறும்போது திடீரென்று கூச்சல் போட்டிருக்காரு. 'காப்பாத்து, காப்பாத்து, என்னைக் கொன்னுட்டான்!' அப்பிடீன்னு. அவருடைய கூச்சலைக் கேட்டு வேலையாளுங்க எல்லாரும் ஓடி

வந்தாங்க. வந்து பார்க்கும்போது அவர் தலைக்குப்புற விழுந்து கிடக்கிருரு. அவருடைய முதுகிலிருந்து குபு குபுவென்று ரத்தம் பீறிட்டுக்கொண்டு வெள்ளமா ஓடிக்கொண்டிருக்குதாம். இதைப் பார்த்து நம்பர் தாரிணி அம்மா மூர்ச்சையா விழுந்துவிட்டாங்க. அப்போதுதான் ஒரு வேலைக்காரன் வந்து என்னைக் கூப்பிட்டான். நானும் அங்கே ஓடினேன். நம்பர் தாரிணி அம்மாவுக்கு நினைவு வந்ததும் உங்களையும், இன்ஸ்பெக்டரையும் அழைச்சிவரச் சொன்னுங்க.''

ஏதோ ஒரு பயங்கரமான நிகழ்ச்சி நடக்கப்போகிறது என்று ஜ்வாலா பிரஸாதுக்கு மனத்தில் சந்தேகம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அது இவ்வளவு விரைவில் இப்படி நடக்கக்கூடும் என அவர் நினைக்கவே இல்லை. ஜ்வாலா பிரஸாத் எழுந்து சீக்கிரம் சீக்கிரமாக ஆடை அணிந்துகொண்டார். டாகுர் கஜராஜ் சிங்குக்குக் கொலையைப் பற்றிச் செய்தி அனுப்பலாமா என்ற எண்ணம் ஒரு விநாடி தோன்றியது. ஆனால் மறுகணமே அதெல்லாம் வீண் எனத் தோன்றியது. அதே நேரத்தில் அவர் மனதில் விளங்காத ஏதோ ஒரு வகையில், இந்தக் கொலையைப் பற்றி டாகுர் கஜராஜ் சிங்குக்குத் தெரியும் என்ற எண்ணமும் உதித்தது. லச்சீராமும் மற்ற வேலையாட்களும் தொடர்ந்து வர, அவர் ஒரு 'இக்கா' வண்டியில் சிவபுராவுக்குக் கிளம்பினர்.

பிரபு தயாளுடைய ஈமச் சடங்குகளனைத்தையும் முடித்துவிட்டு ஜ்வாலா பிரஸாத் வீடு திரும்பியபோது அவருக்கு ஜுரம் அதிகமாக இருந்தது. மூன்று நாள் வரை நினைவு தப்பிக் கட்டிலில் கிடந்தார். பீக்கூ ஆட்கள் மூலம் ராஜபுராவுக்கு அவருடைய உடல் நிலையைப் பற்றிச் செய்தி அனுப்பினன். முன்ஷிராம் சகாய் ராஜபுராவிலிருந்து ஜ்வாலா பிரஸாதைப் பார்க்க

வந்துவிட்டார். நான்காம் நாள் ஜவாலா பிரஸாதின் ஜுரம் குறைந்தது. முன்ஷிராம் சகாய் காடம்பூரிலேயே தங்கிவிட்டார்.

ஜ்வாலா பிரஸாதுடைய உடம்பு குணமடைந்து முன்ஷி ராம் சகாயினிடம் பிரபு தயாள் கொலையைப் பற்றிய கதையைச் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டு ராம் சகாய் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

"தம்பி ஜ்வாலா, நீ இந்த விவகாரத்திலிருந்து விலகியிருந்தது நல்லதாகப் போய்விட்டது. பிரபு தயாளுக்கு இப்பொழுது இல்லையென்றால் எப்போதாயினும் இந்தக் கதி ஏற்படத்தான் இருந்தது. கொடுமையும் சூதும் வெகுநாட்கள் தலையெடுத்து வாழ முடியாது."

"ஆனால் மாமா, இந்தச் சட்டம், இந்தச் சமுதாயம், அரசாங்கம் இதெல்லாம் எதற்கு?" ஜ்வாலா பிரஸாத் பலவீனமான குரலில் கேட்டார். பிறகு அவருக்கு ஏதோ திடீரென நினைவுக்கு வரவே, "மாமா, உங்களுக்கு ஏதாவது செய்தி தெரிந்ததா? அந்த பர்ஜோர் சிங் கைது செய்யப்பட்டாரா?"

"பர்ஜோர் சிங் கைதாகவில்லை. அவர் காடம்பூரில் இல்லை. அவருடைய மனைவியும் மக்களும் கஜராஜ் சிங் வீட்டில் இருக்கின்றனர். பிரபு தயாளுடைய கொலைக்கு ஒரு வாரம் முன்னரே அவர்கள் சுனௌடாவிலிருந்து இங்கு வந்துவிட்டனர். கொலை நடைபெற்ற அன்று சாயங்காலமே ராஜா சந்திரபூஷண் சிங்குடன் பர்ஜோர் சிங்கும் கான்பூருக்குச் சென்றுவிட்டதாக கஜராஜ் சிங் சொல்லுகிறாராம்."

"இது பொய், முழு பொய்". ஜ்வாலா பிரஸாத் ஆவேசத்தோடு கூறினார்: "அன்று இரவு கஜராஜ் சிங்கின் வீட்டில் கச்சேரி நடைபெற்றது. மது வழங்கப் பட்டது. இதையெல்லாம் நான் நேரில் பார்த்தேனே.

நான் அன்றைக்கு இரவு ஒன்பது மணிக்கு அவர்கள் வீட்டிலிருந்து திரும்பி வந்தேன். நான் அந்தக் கச்சேரியின்போது அங்கு இருந்தேன்."

"கஜராஜ் சிங் சொல்லுவது என்னவென்றால், நீ கிளம்பி வந்த உடனேயே கச்சேரி முடிவடைந்து விட்டதாம். மழையும் நின்றுவிட்டதாம். மழை காரண மாகவே அவர்கள் ஊருக்குக் கிளம்ப சிறிது நேரமாகி விட்டதாம். ராம் சகாய் குரலைத் தாழ்த்திக்கொண்டு சொன்னார்: "கஜராஜ் சிங் என்னிடம் உன்னை இந்த விவகாரத்தில் தலையிடாமல் தடுக்கச் சொல்லி வேண்டிக் கொண்டார்."

ஜ்வாலா பிரஸாத் பேசாமல் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தார். "மாமா, நான் உங்களைக் கேட்கிறேன். நான் இந்த விஷயத்தில் பேசாமல் இருப்பது தகுமா? நான் மௌனம் சாதித்து ஒரு கொலைக்காரனைக் காப்பாற்றுவதா? சட்டத்தையும், நியாயத்தையும் கைவிடுவதா? உங்களுக்குத்தான் தெரியுமே? இந்தப் பிரிட்டிஷ் அரசாங்கம் நியாயம், சட்டம் என்ற அஸ்திவாரத்தின் மேல்தான் நிலைத்திருக்கிறது. சர்க்கார் பொறுப்புள்ள ஒரு பதவியை எனக்களித்து என்மேல் நம்பிக்கை வைத்துள்ளது. நியாயத்தின் வழியில் நான் தடங்கலாக இருப்பதா? சர்க்காருக்கு நான் நம்பிக்கை துரோகம் செய்வதா?"

ஜ்வாலா பிரஸாதின் கேள்விகளுக்கு முன்ஷிராம் சகாயினிடம் விடை இல்லை. அவர் பேசாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு பெருமூச் செறிந்தவாறு சொன்னார்: "நீ சொல்வதெல்லாம் சரிதான் தம்பி, ஒருவன் தன்னுடைய கடமையை விட்டு விலகுவது தவறுதான். நான்கூட என்ன நினைக்கிறேன் என்றால், சட்டத்தைக் காட்டிச் சொல்கின்ற அளவுக்கு

பர்ஜோருடைய குற்றம் அவ்வளவொன்றும் பெரிதல்ல. சட்டத்தின்படி என்னவோ அவன் கொலையாளிதான். பிரபு தயாளுக்கு நேர்ந்த கதியைப் பற்றி எனக்கு வருத்தமே இல்லை. இதுதான் அப்படிப்பட்டவனுக்குத் தகுந்த தண்டனையோ என்னமோ! ஆனால் பிரபு தயாளைத் தன்னிஷ்டம்போல் தண்டிக்க பர்ஜோருக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. உனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதையே செய். நான் உன்னைத் தடுக்கவில்லை.''

அன்று மாலையே முன்ஷிராம் சகாய் ராஜபுராவுக்குப் புறப்பட்டுவிட்டார். விடைபெறுகையில் அவர் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னார்: "தம்பி, கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜாக்கிரதையாகப் பிறரிடம் வேலை வாங்க வேண்டும். நீயோ ஒரு பெரிய ஆபீஸர். உனக்குத் தீங்கிழைக்க ஒருவனும் துணிய மாட்டான். இருந்தாலும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. விழிப்புடன் நடந்துகொள்கின்றவனுக்கு அழிவில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது.''

எட்டு நாட்களுக்குப் பிறகு மாஜிஸ்திரேட்டின் முன்னிலையில் சென்று ஜ்வாலா பிரஸாத் தன்னுடைய வாக்குமூலத்தைக் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தின் படிக்கு பர்ஜோரின் பேரில் வாரண்ட் பிறப்பிக்கப் பட்டது.

பிரபு தயாள் இறந்து பதின்மூன்றும் நாள் சடங்குகள் நடைபெற்றன. ஜ்வாலா பிரஸாத் அதில் கலந்து கொள்ளவில்லை. அந்தச் சடங்கு நடந்து பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஜயதேயீ தனது மகன் லட்சுமீசந்துடன் ஜ்வாலா பிரஸாதின் வீட்டுக்கு வந்தாள். பதின்மூன்றும் நாள் சடங்கிற்கு வரவில்லையே என்று குறை கூறினாள். "மைத்துனரே! விதிதான் எங்களிடம்

விளையாடிவிட்டதென்ருல், நீங்களுமா எங்களுடன் கோபம் கொள்ளவேண்டும்? நான் அன்று உங்களை எவ்வளவு தூரம் எதிர்பார்த்திருந்தேன் தெரியுமா? ஆனல் அவர் போன பிறகு நீங்கள் அங்கு வரவே இல்லை. இன்று நான் இந்த அனுதைப் பையனையும் அழைத்துக்கொண்டு நீங்களே தஞ்சமென்று வந்திருக்கிறேன்."

ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயைப் பார்த்தார். அவளுடைய முகம் வாடி ஒளியற்றிருந்தது. அவர் பரிவு தோய்ந்த குரலில் சொன்னார்: "அண்ணி உனக்குத் தான் தெரியுமே! நான் பர்ஜோர் சிங்குக்கு எதிராக சாட்சியம் கொடுத்துள்ளேன். என் சாட்சியத்தை ஆதாரமாகக் கொண்டுதான் அவன் பேருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பபட்டிருக்கிறது. இந்த நிலையில் நான் உங்கள் வீட்டுக்கு வருவது உசிதமல்லவே."

"ஆமாம் மைத்துனரே! எங்களுக்கு நீங்கள்தான் பெருந்துணை. இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலியோ, அவர்களுக்கு வேண்டியவராகிவிட்டார். இந்த விவகாரத்தையே ஒருவாறு மறைத்துவிடலாம் என்று வேலை செய்துகொண்டிருக்கிருராம்." ஜயதேயீ கண்ணில் நீர் ததும்பியது.

"மைத்துனரே! இந்த காடம்பூரில் எனக்கென்று இனி யாரும் கிடையாது. என் அண்ணு கான்பூரிலிருந்து வந்திருக்கிருர். நாங்கள் இங்கே இருப்பது தகாது என்றும், நாங்களும் கான்பூருக்கே போக வேண்டும் என்றும் சொல்லுகிருர். அதனலேதான் உங்களைக் கலந்து யோசனை செய்ய நான் வந்தேன்."

"நான் உனக்கு என்ன ஆலோசனை சொல்லுவது அண்ணி? எது உசிதமாகப்படுகிறதோ அப்படியே செய். ஆம், ஒரு விஷயம் பற்றி மட்டும் நான் உனக்கு

நம்பிக்கை அளிக்க இயலும். சிவபுராவில் உனக்கு எதிராக ஒருவனும் எவ்விதத் தீங்கும் செய்ய முடியாது. சர்க்கார் இருக்கிறது, சட்டம் இருக்கிறது."

ஜயதேயீ ஒரு பையை ஜ்வாலா பிரஸாதிடம் நீட்டினாள். "மைத்துனரே! நான் என் அண்ணாவிடம் லட்சுமீசந்தைக் கான்பூருக்கு அழைத்துப்போகச் சொல்லிவிட்டேன். கான்பூரில் இவன் படிப்பை முடிக்க வேண்டும். நான் இங்கே சிவபுராவில் இருந்துகொண்டு நிலபுலன்களைக் கவனித்துக்கொள்ளுவேன். அவருடைய கொடுக்கல் வாங்கல் வியாபாரம் பரவிக் கிடக்கிறது. அதை எல்லாம் கவனித்துச் சிறுக சிறுகத் திரட்டிக் கொள்ள வேண்டும். மைத்துனரே! நீங்கள் எங்களுக்கு உதவி செய்திருக்கிறீர்கள். அதற்கு நன்றியாக இந்த நூறு தங்கக் காசுகளைக் கொண்டுவந்திருக்கிறேன்."

அந்தப் பையைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத் புன்னகை செய்தார். "அண்ணி, நான் செய்ததெல்லாம் எனது கடமை என்ற நினைப்பில்தான். அன்பும், நியாயமும் விலைச்சரக்கல்ல. இந்த ரூபாயும் காசும்தான் வாழ்க்கையில் அத்தனை கெடுதிகளுக்கும் அடிப்படை. ஆகவே அண்ணி, என்னை ஒருபோதும் இந்த ஆசையில் தள்ள முயற்சிக்க வேண்டாம். கூடிய மட்டும் நீயும் இந்த ஆசையில் விழாமல் தப்பித்துக்கொள்."

ஜ்வாலா பிரஸாதின் இந்தச் செயலைக் கண்டு ஜயதேயீ பேச்சற்று நின்றுவிட்டாள். அவள் பிறந்து வளர்ந்த பரம்பரையில் எந்தப் பொருளும் விற்பனையாகும், வாங்கப்படும். அவள் கூறினாள்: "நீங்கள் ஒரு மனிதன் அல்ல, தெய்வம். மைத்துனரே! கடவுள் உங்களுக்கு எல்லாவித நலனும் அளிப்பாராக!" அவள் உணர்ச்சி வசப்பட்டு சடக்கென ஜ்வாலா பிரஸாதினுடைய கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள்.

ஜ்வாலா பிரஸாத் அன்று பைல்களை எடுத்துக் கொண்டு மீர்ஸாஹபிடம் போகவேண்டி இருந்தது. அவர் ஜயதேயீயிடம் சொன்னார்: "அண்ணி, சாப்பிட்டு விட்டுப் போ!" பிறகு அவர் பீக்கூவைக் கூப்பிட்டு, "நம்பர்தாரிணி அம்மா இங்கேதான் சாப்பிடப் போகிறார்கள். நீ இவர்களோடு பேசிக்கொண்டிரு. நான் கொஞ்சம் தாசில்தார் வீடு வரை போய் வருகிறேன். ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரத்தில் திரும்பி வந்துவிடுவேன்."

ஜ்வாலா பிரஸாத் மீர்ஸாஹபின் வீட்டுக்குப் போன போது அங்கு கஜராஜ் சிங் மீர்ஸாஹபுடன் பேசிக் கொண்டிருந்தார். மீர்ஸாஹப் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்துச் சொன்னார்: "வா அப்பா....உனக்கு நூறு ஆயுசு! உன்னைப் பற்றித்தான் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம்!"

கஜராஜ் சிங்கின் முகம் வாடிப்போய் விகாரமாகத் தொங்கிப்போயிருந்தது. தலைகுனிந்து பார்வையைத் தரையில் பதித்தபடி உட்கார்ந்திருந்தார். ஜ்வாலா பிரஸாதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மீர் சகாவத் ஹுஸேன் சொன்னார்: 'ஜ்வாலா பாபூ! பர்ஜோர் சிங்கின் சாவுக்கு நீதான் பொறுப்பாகப் போகிறாய் என்று கஜராஜ் சிங் சொல்லுகிறார். நீ பர்ஜோர் சிங்குக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்திராவிட்டால் அவர் பேரில் வாரண்ட் போயிருக்காதாம்."

குரலைத் தாழ்த்திக்கொண்டு ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "ஆமாம் ஹுஜூர்! நான் அந்த வாக்கு மூலம் கொடுத்திராவிட்டால் பர்ஜோர் சிங்கின் பேரில் வாரண்ட் பிறந்திருக்காது. ஆனால் ஒரு கொலையைப் பற்றிய விஷயம் அமுங்கிப்போயிருக்கும் என்றுதான் நானும் நினைக்கிறேன். ஆனால் ஹுஜூர், சர்க்கார்

உத்தியோகம் செய்துகொண்டு நான் சட்டம், நியாயம் இவற்றின் கழுத்தை முறித்துப் போடுவது எப்படி சாத்தியமாகும்? ஆனால் இப்போது என்ன நடந்து விட்டது? வழக்குத்தான் நடைபெறுமே?"

இப்போது கஜராஜ் சிங் தலையை நிமிர்த்தி ஜ்வாலா பிரஸாதின் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினார். அவருடைய முகம் கவலை நிறைந்திருந்தது. கண்கள் கலங்கியிருந்தன. "பிணத்தின் மேல் வழக்குத் தொடரப் படாது ஜ்வாலா பாபூ! பர்ஜோர் சிங் இந்த உலகத்தை விட்டே போய்விட்டான். தான் செய்த குற்றத்திற்குத் தானே தண்டனையும் விதித்துக்கொண்டுவிட்டான். முந்தாநாள் இரவு 'வித்னூ' கிராமத்தில் யக்ஞபுரத்தி லிருந்து அவன் திரும்பி வரும் வழியில் இந்த வாரண்டைப் பெற்றுக்கொண்டான். பிறகு அவன் தற்கொலை செய்துகொண்டுவிட்டான். நேற்று காலை நான் அவனுடைய மனைவி மக்களை அழைத்துக்கொண்டு வித்னூவுக்குப் போயிருந்தேன். அங்கு ஈமச் சடங்குகளை முடித்துவிட்டு நேற்று இரவே திரும்பிவிட்டேன்" இதைச் சொல்லிவிட்டு அவர் வறண்ட சிரிப்பு சிரித்தார். "சரி, இந்தக் காண்டமும் முடிவடைந்துவிட்டது போங்கள்! பர்ஜோர் சிங்கே இல்லாதபோது இனி யார் அவனுக்கு என்ன தீங்கு செய்யக்கூடும்?" அவருடைய கண்களில் திடீரெனக் கண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது. "ஆனால், ஜ்வாலா பாபூ! எவ்வளவு தான் இருந்தாலும் பர்ஜோர் சிங் நல்ல மனிதன். அதோடு துரதிர்ஷ்டம் பிடித்தவன் என்றும் சொல்ல வேண்டும். அவன் உலகத்துக்கு ஒருபோதும் ஒரு தீங்கும் இழைத்ததில்லை. முடிந்த மட்டும் அவன் பிறருக்குத் தாராளமாக உதவி செய்தான். ஆனால் இதற்கெல்லாம் ஈடாக அவனுக்குக் கிடைத்த பரிசு

என்னவென்றால், அவனுடைய நிலம் பறிபோய்விட்டது. அவனுடைய உயிரும் போய்விட்டது. அவனுடைய குழந்தைகள் அநாதைகளாகிவிட்டார்கள். அவனுடைய மனைவி விதவையாகிவிட்டாள். அவனுடைய மனைவிக்குப் பிறந்தகம் 'விதனா' தான். அங்கே அவள் புலம்பிக் கொண்டிருக்கிறாள். இரண்டு பிள்ளைகள் அவளுக்கு. ஒருவனுக்கு வயது பதினாலு. இன்னொருவனுக்கு வயது பத்து. பன்னிரண்டு பதின்மூன்று வயதில் ஒரு பெண்ணும் இருக்கிறாள். அவளுக்குத் திருமணம் செய்யும் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் எல்லாம் என்ன ஆவார்கள்? கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்!"

மீர்ஸாஹப் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தார். "கேட்டுக்கொண்டிருக்கிறாயா தம்பி! உன்னுடைய நியாயம், தருமம் இவற்றின் விளைவு என்ன ஆகிய தென்று? ஆனால் நான் டாகுர் கஜராஜ்சிங்குக்கு சமாதானம் அளிக்கும் வகையில் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன் என்றால்—நியாயம், கடமை இவற்றிற்கும், தருமம், தயை இவற்றிற்கும் முரண் ஏற்படும்போது, நியாயத்துக்கும், கடமைக்கும்தான் மதிப்பளிக்க வேண்டும். இப்படிப் பார்த்தால் நீ செய்தது உசிதமே!"

பர்ஜோர் சிங் தற்கொலை செய்துகொள்ளக்கூடும் என்று ஜ்வாலா பிரஸாத் நினைத்துப் பார்க்கவில்லை. அவர் பர்ஜோர் சிங்குக்கு என்ன ஆகும் என்றே யோசித்துப் பார்க்கவில்லை. அவர் செய்ததனைத்தும் சேதனமற்றதொரு நிலையிலேயே செய்துவிட்டார். குற்றவாளியானவன் தண்டனை அடையவேண்டுமென்ற ஒரு தர்க்கவாதத்தினால் உந்தப்பட்டார். பர்ஜோர் சிங் தற்கொலை செய்துகொண்டார் என்று கேட்டு ஒரேயடியாக அதிர்ச்சியடைந்துவிட்டார். சிறிது நேரம் பேச்சற்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பர்ஜோர் சிங்கின்

சாவுக்குப் பொறுப்பு தானே என்று அவருக்குப் பட்டது. திடீரென்று முகத்தை நிமிர்த்தி மீர்ஸாஹபிடம் கூறினார் : "ஹுஜூர், நான் உங்களை ஒன்று கேட்கிறேன். நீங்கள் தவருக நினைக்கக்கூடாது!"

"தவருக நினைப்பதற்கு என்ன இருக்கிறது? சந்தோஷமாகக் கேள்."

"ஹுஜூர், நீங்கள் என்னுடைய நிலையில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?"

மீர்ஸாஹபினுடைய முகத்திலிருந்த புன்னகை மறைந்துவிட்டது. "மிகவும் சிக்கலான கேள்வி இது ஜ்வாலா பாபூ! நான் என்ன செய்திருக்கக்கூடும் என்று சொல்வது இயலாது. அநேகமாக நீ செய்ததுபோல் செய்திருக்கமாட்டேன். நான்தான் சொன்னேனே, இது மிகவும் சிக்கலான கேள்வி என்று?"

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "இல்லை ஹுஜூர், இப்போது தெரிந்துவிட்டது; நீங்கள் என்னைப்போல நடந்திருக்கமாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. என்னுடைய மாமா முன்ஷிராம் சகாய்கூட இப்படித்தான் எனக்கு யோசனைக் கூறினார். நான் செய்தது தவறே எனத் தோன்றுகிறது." ஜ்வாலா பிரஸாதின் குரல் கம்மிவிட்டது. "நியாயத்துக்கும் சத்தியத்துக்கும் எல்லை—வரையறை இல்லை என்றே நான் இதுவரை நினைத்திருந்தேன். அதில் உணர்ச்சிக்கு இடமே இல்லை என்றுதான் நான் செய்தது தவறென்று எனக்கு இப்போது புரிகிறது."

ஜ்வாலா பிரஸாதின் வருத்தக் குரலைக் கேட்டு மீர்ஸாஹப் உருகிவிட்டார். "அப்படி அல்ல, ஜ்வாலா பாபூ! நான் சொன்னதற்குப் பொருள் உள்ளத்து உணர்ச்சிகளைப் பொருட்படுத்த வேண்டும் என்பதல்ல. இவ்வாருன பலவீனத்திலிருந்து விடுபட்டு ஒருவன்

அந்நீ மீறிவிட்டால் அவனை மிக உயர்ந்தவனாக நான் கருதுவேன். ஆனால் இவ்வாறு உணர்ச்சிகளை மீறுமளவுக்கு ஒருவன் உயர்ந்துவிடக்கூடுமா என்பதே என் சந்தேகம்.''

இந்தப் பேச்சை முடிக்கும் வகையில் மீர்ஸாஹப் சொன்னார் : '' சரி, விடு தம்பி! நடந்தது நடந்துவிட்டது; அப்படி நடக்கவேண்டியிருந்தது. அதை யாராலும் தடுத்திருக்க முடியாது. ஆகவே அதைப் பற்றி பேசுவது வீண். சரி, கொண்டுவா அந்த பைல்களை. கையெழுத்துப் போடுகிறேன்.''

ஜ்வாலா பிரஸாத் வீடு திரும்பி வந்தபோது ஜயதேயீ கேட்டாள்: '' என்ன மைத்துனரே! முகம் ஏன் இப்படி வாடி இருக்கிறது? என்ன நடந்தது? இங்கிருந்து போகும்போது இப்படியில்லையே?''

ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: '' அண்ணி, தாசில்தார் வீட்டில் கஜராஜ் சிங்கின் மூலமாக ஒரு செய்தி தெரிந்தது. முந்தாநாள் இரவு 'விதனூ' கிராமத்தில் பர்ஜோர் சிங் தற்கொலை செய்துகொண்டுவிட்டாராம்''

'' தற்கொலை செய்துகொண்டாரா? பர்ஜோரா?'' ஜயதேயீ ஆச்சரியத்தோடுகேட்டாள். பிறகு சொன்னாள்: '' சரி போங்கள்! அவர் தன் குற்றத்திற்குத் தாமே தண்டனை விதித்துக்கொண்டுவிட்டார். ஆனால், மைத்துனரே, நான் இழந்தது இழந்ததுதான். அது எனக்கு மீண்டும் கிடைக்கப்போகிறதா ? ''

ஜ்வாலா பிரஸாத் பதில் சொல்லவில்லை. அவள் கேட்டதற்குப் பதிலே இல்லைபோலும். ஜ்வாலா பிரஸாத் தன்னுடைய உள்ளத்தின் சிக்கலிலேயே உழன்று பர்ஜோர் சிங்கின் மனைவி மக்களைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். ஜயதேயீ இழந்தது சொற்பமே!

அவளிடத்தில் லட்சக்கணக்கில் சொத்து இருக்கிறது. அந்த சொத்து அவளுக்கே முழு உரிமை. அவள் நூறு தங்கக் காசுகளைக் கொண்டுவந்து கொடுக்க இயலும். ஆனால் பர்ஜோர் சிங்கின் மனைவி? அவள் தன் அண்ணனிடத்தில் அடைக்கலம் அடைந்துவிட்டாள். அவளுடைய குழந்தைகள் அனாதைகள் ஆகிவிட்டன!

5

ஜ்வாலா பிரஸாத் மனைவியைப் பிரஸவத்திற்காக தகப்பனாரும் சிற்றப்பாவும் இருக்கும் பதஹ்பூருக்கு அனுப்பாமல் மாமனார் வீட்டிற்கு அனுப்பியிருந்தார். இதில் முன்ஷி சிவலாலுக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. ஆனால் முன்ஷி ராதேலால் இதைப் பற்றி அமர்க்களம் செய்துவிட்டார். "அண்ணா, மருமகளுக்குக் குழந்தை பிறந்ததென்றால், அதற்காக நம் பாட்டனார்—தகப்பனார் காலத்திலிருந்து வந்த வீட்டில் ஏற்பாடு செய்யக்கூடாதா? ஊரில் என்ன நினைப்பார்கள்? பிள்ளை பெரிய ஆபீஸர் ஆகிவிட்டான் என்றால், அதற்காகத் தன்னுடைய தகப்பனார், சிற்றப்பா, குடும்பம் எல்லாவற்றையும் மறந்துவிடவேண்டும் என்று அர்த்தமா என்ன?"

முன்ஷி சிவலால் அந்தப் பேச்சைத் தள்ளிவிடும் முறையில் சொன்னார்: "இல்லை ராதே, உண்மையில் காடம்பூரிலிருந்து ராஜபுரா வெகு சமீபம். அதுமட்டுமல்லாமல், முன்ஷி ராம்சகாய் தாமே வந்து பெண்ணை அழைத்துப் போயிருக்கிறார். அங்கே ஏவலுக்கு நூற்றுக் கணக்கில் வேலைக்காரர்கள்! இதில் எனக்கு ஒன்றும்

தகாததாகத் தோன்றவில்லை.''

ராதேலாலின் பெரிய பிள்ளை ராமலால் சொன்னான்: ''சரிதான் பெரியப்பா! ஆனால் நாங்கள் செய்ய முடியாதா அந்த வேலையை? வெறும் வேலையாட்கள் என்ன சேவையும் பணியும் செய்துவிட முடியும்?''

இந்த வார்த்தை சிவலாலுக்குப் பிடிக்கவில்லை. ராதேலால் இதனை உணர்ந்துகொண்டார். பேச்சைத் திருப்புவதற்காக, சிவலால் ''நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இப்போது இல்லை என்றால் குழந்தை பிறந்த பிறகு நாலைந்து மாதங்களுக்கு மருமகளை இங்கே அழைத்து வரலாம்!'' என்றார்.

சின்கீ, முன்ஷி சிவலாலின் ஹுக்காவைத் தயார் செய்து எடுத்து வந்தாள். அங்கேயே நின்றுகொண்டு இந்தப் பேச்சைக் கவனித்தாள். அவள் சொன்னாள்: ''ஆமாம், மருமகள் இங்கிருந்து போய் இரண்டு வருஷமாச்சு. நாலஞ்சு மாசத்துக்கு இங்கே அழைச்சிட்டுவாங்களேன்!'' பிறகு எதோ யோசித்தவாறு கூறினாள்: ''நான் சொல்றேன். நீங்கதான் ஒரு தடவை காடம்பூர் போய் வர்ரதுதானே? ஒரேயடியாக அன்பு, பாசம் எல்லாம் மறந்துட்டீங்களா? அங்கேபோய் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வரும்போது மருமகளையும் அழைத்துவாங்க!''

முன்ஷி சிவலால் ஒருமுறை ஹுக்காவில் புகையை உறிஞ்சிவிட்டுச் சொன்னார்: ''ஆமாம், நீ சொல்வதுதான் சரி. ரொம்ப நாளாச்சு ஜ்வாலாவைப் பார்த்து! அடுத்த மாதம் காடம்பூருக்கும், ராஜாபூருக்கும் போய் வருகிறேன்.'' பிறகு அவர் சின்கீயைப் பார்த்து, ''என்னடீ! களீடேவுக்கு உடம்பு எப்படி இருக்கு?'' என்று கேட்டார்.

பேச்சு திசைமாறிவிட்டது. முன்ஷி ராதேலாலும், ராமலாலும் அங்கிருந்து போய்விட்டனர். அவர்கள் சென்ற

பிறகு சின்கீ கண்ணீர் சிந்திக்கொண்டு சொன்னாள்: "என்ன சொல்லறது? இப்போ அவரு கட்டிலே விட்டு எழுந்திருப்பதே இல்லே. மூணு நாளா சுரம் அதிகமாயிடுச்சு. பகவான் அவரை அழைச்சுக் கிட்டாருன்னா நல்லது. இப்படி வாழறதைவிடப் போயிடறது நல்லது. அவரோடே கஸ்டத்தே பார்க்க முடியல்லே. நேத்து உங்களைப் பத்திக் கேட்டாரு."

"அப்படியா, சரி. இதோ கொஞ்ச நேரத்தில் போறேன்; நீ வீட்டிற்குப் போ. நான் வைத்தியரை அழைத்து வருகிறேன்."

"உன் வைத்தியரைக் கொண்டுபோய் நெருப்பிலே போடு! பத்து தடவை மருந்தை மாத்திவிட்டாரு. ஆனாலும் உடம்பு அதிகமாய்க்கிட்டே போகுது. முந்தாநாளிலேந்து அவரு மருந்தையே விட்டுட்டாரு." இதைச் சொல்லிவிட்டு சின்கீ அங்கிருந்து மறைந்தாள்.

சிவலால் சிறிது நேரம் சூழ்ந்துகொண்டிருக்கும் இருட்டைப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு சிரமப்பட்டு மெள்ள எழுந்து நின்றார். சில நாட்களாக அவருடைய உடல்நலமும் குன்றிக்கொண்டிருந்தது. கஸீடே நீண்ட நாளாக நோய்வாய்ப்பட்டிருந்தபடியால் அவருடைய நித்யானுஷ்டான காரியங்களே முறைமாறிவிட்டன. அவர் இப்போது மாலே நேரத்தில் தனியாகவே மது அருந்தவேண்டியிருந்தது. இதனால் மதுவின் அளவு அதிகமாகி வந்தது. அடிக்கடி அவர் குடித்து நினைவற்று விடுவதும் உண்டு. முன்ஷி சிவலால் இப்போது ஒருவகை பலவீனத்தை உணர்ந்துவந்தார். சின்கீ தன்னால் இயன்ற அளவு அவருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டுதான் இருந்தாள். ஆயினும் கஸீடேவின் நோய் காரணமாக சின்கீ தன் நேரத்தை அதிகமாக கஸீடேவின் பணிவிடையிலேயே கழிக்கவேண்டி

யிருந்தது.

பிறகு ஒரு நாள் கஸீடே மரணமடைந்துவிட்டான். எதிர்பாராதவிதமாக இந்த சம்பவம் நிகழ்ந்துவிட்டதனால் முன்ஷி சிவலாலுடைய வாழ்க்கையும் மாறுபட்டது. இதுவரை அவர் சாவினைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தது கிடையாது. ஆனால் அன்று முதல் அவர் உள்ளத்தில் சாவைக் குறித்து பெரும் பீதி குடிகொண்டுவிட்டது. அவருக்குத் தன் உடல் சிதைந்து குலைவுற்று வருவது போன்றதொரு உணர்வு உண்டாகியது. இந்த பயத்திலிருந்து விடுபட அவர் சீக்கிரமாகவே காடம்பூருக்குப் போக நினைத்து, புறப்படப்போகும் நாளை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

சின்கீ கஸீடேவைப் பறிகொடுத்துவிட்டு, இங்கு முன்ஷி சிவலாலின் உடல்நலம் குன்றி வருவதால் மேலும் கவலை அடைந்தாள். கஸீடேவினுடைய ஈமச் சடங்குகளை முறைப்படி செய்து முடித்தாள். பிறகு சிவலாலின் வீட்டிலேயே இருக்கத் தொடங்கிவிட்டாள். ஒரு நாள் அவள் சிவலாலைப் பார்த்துக் கேட்டாள்: "என்னங்க, ஜ்வாலா கிட்டே எப்ப போறுப்போல? மருமகளுக்குத் தான் ஆண் குழந்தை பொறந்திருக்குது. இனிமேலாவது அவ காடம்பூருக்கு வந்து சேரலாமில்லே?"

"ஆமாம், கடிதம் வந்திருக்கு. மருமகள் ராஜாபூரிலிருந்து ஒரு வாரத்துக்குள் காடம்பூர் வரப் போகிறாளாம். அடுத்த திங்கட்கிழமையோ, செவ்வாய்க் கிழமையோ இங்கிருந்து புறப்படலாம் என்று யோசிக்கிறேன்."

"நானுந்தானே உங்ககிட்டே இங்கேருந்து சீக்கிரமே புறப்படுங்கன்னு சொல்லிக்கிட்டிருக்கேன். நீங்க கேக்கிறதா இருந்தா ஒரு வார்த்தை சொல்றேன். என்னையும் அழைச்சுக்கிட்டு போங்களேன் காடம்

6

பூருக்கு?"

சிவலால் வியப்புடன் கேட்டார்: "நீகூட காடம்பூர் வரப்போகிருயா? எதற்கு?"

"இங்கே இருந்துகிட்டு என்ன செய்யறதுங்க? அவரு போயிட்டாரு. நீங்க காடம்பூர் போயிடறீங்க. நீங்க காடம்பூரிலேயே இருங்க. இங்கே திரும்பி வர வேண்டிய அவசியம் ஒண்ணும் இல்லே. பிள்ளே கிட்டேயே இருங்க. அதனுல்தான் நானும் உங்களோடேயே வர்ரேன்னு சொன்னேன். நான் என்ன யோசனை பண்ணறேன்னு கேட்டா, எனக்கு ரெண்டு கொழுந்தீங்க. ஒண்ணு ஜ்வாலா, ரெண்டாவது பீக்கூ. இந்த ரெண்டு பேருங்க இருப்பதனுலேதான் என் உசிரு இருந்துக்கிட்டு இருக்கு. இங்கே சொந்த பந்தமுன்னு எனக்கு யாரு இருக்காங்க?"

சின்கீ கூறுவதில் உண்மை இருந்தது.

"நீ சொல்லுவது சரிதான் சின்கீ. நீயும் புறப்படுவதற்கு ஆயத்தம் செய். நாம் திங்கட்கிழமை போகலாம்."

சிவலாலுடன் சின்கீயும் போகப்போகிருள் என்று கேட்டு ராதேலாலுடைய மனதில் ஒரு சந்தேகம் உண்டாகியது. சிவலால் இனிமேல் தன் பிள்ளை யோடேயே இருக்க எண்ணிவிட்டார் போலும். இந்த சமாசாரத்தினுல் ராதேலாலின் குடும்பத்தில் ஒரு பெரிய கொந்தளிப்பு உண்டாகியது. சனிக்கிழமையன்று மாலை தக்க சமயம் பார்த்து ராதேலால் சிவலாலிடம் பேச்செடுத்தார். "அண்ணு! சின்கீ போய்விட்டால் வீட்டு வேலைகள் கெட்டுவிடும். நீங்கள் இவளை எதற்காக அழைத்துக்கொண்டு போகிறீர்கள்? ஒரு மாதமோ, இரண்டு மாதமோ காடம்பூரில் இருந்துவிட்டு மருமகளுடன் நீங்கள் திரும்பி வரத்தானே போகிறீர்கள்?"

சிவலால் சிறிது அசுவாரஸ்யமாக பதில் சொன்னார்: "ஏன்? வீட்டை கவனித்துக்கொள்ள சிறியவன் இருக்கிறானே? ராமுவின் மனைவியும் இருக்கிறாள். எனக்குப் பணிவிடைகளைச் செய்ய ஓராள் வேண்டியிருக்கிறதல்லவா? அதனால்தான் நான் சின்னியை அழைத்துக்கொண்டு போகிறேன்."

"அங்கேதான் ஜ்வாலாவின் மனைவி இருக்கிறாளே? மேலும், நீங்கள் ஓரிரு மாதங்களுக்காகப் போகிறீர்கள். மருமகளை அழைத்துக்கொண்டு இங்கு திரும்பி வரவும் வேண்டும். இந்த சில தினங்களுக்கு ஜ்வாலாவின் மனைவி உங்களுக்குப் பணிவிடை செய்வாள்."

சிவலால் ஓரிரு மாதங்களுக்கே போகிறார் என்றும், மருமகளை அழைத்துக்கொண்டு வருவார் என்றும் ராதேலால் இரண்டு முறை குறிப்பிட்டதன்மேல் சிவலால் சிறிது ஆத்திரம் கொண்டார். "ஜ்வாலாவின் மனைவி ஒரு பெரிய ஆபீஸரின் மனைவி; மேலும் கைப்பிள்ளைக்காரி. நன்றாக இருக்கிறது! கடவுள் எனக்குப் பணிவிடை செய்வதற்காகவா அவளைத் தாசில்தாருடைய மனைவியாகப் படைத்தார்? இல்லை ராதே! நான் அவளிடம் வேலை வாங்கமாட்டேன். பகவான் அருளால் இப்போது ஜ்வாலா பெரிய பதவியில் இருக்கிறான். அவனுடைய கௌரவம், அவன் மனைவியினுடைய கௌரவம் வளரவேண்டும். எனக்கோ வயதாயிற்று. காடம்பூர் பிடித்துவிட்டால் அங்கேயே ஒரு வருடமோ, ஆறு மாதமோ தங்க நேரும். ஆனாலும், என்னுடைய எண்ணம் என்னவோ ஓரிரு மாதங்களில் திரும்பி வந்துவிட வேண்டும் என்பதே. அங்கு போன பிறகுதான் இதைப் பற்றி நிச்சயம் செய்வேன். நம்முடைய பையன் வீடுதானே, யாரோ பிறத்தியார் அல்லவே!"

சிவலாலுடைய எண்ணம் பதஷ்பூர் திரும்பி வருவ

தாக இல்லை என்று ராதேலாலுக்குப் பட்டது. ராதேலாலுடைய குடும்பம் பெரியது. அவருக்குச் செலவும் அதிகம். அவருக்கு நான்கு பிள்ளைகள். ராம்லால், சியாம் லால், கிஷன்லால், விஷன்லால். ராம்லாலும், சியாம் லாலும் படிப்பை நிறுத்திவிட்டனர். ராம்லாலுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. கிஷன்லாலும், விஷன்லாலும் இன்னும் படித்துக்கொண்டிருந்தனர். ராம்லால் உருது மொழி எடுத்துக்கொண்டு மிடில் பரீட்சை பாஸ் செய்து விட்டு இப்போது கிராமத்தின் பட்டாமணிய வேலைக்காக முயற்சி செய்துகொண்டிருந்தான். சியாம்லால் உருது மிடில் பரீட்சையில் மூன்று தடவை தோல்வி அடைந்த பிறகு ஊர்சுற்றத் தொடங்கிவிட்டான். முன்ஷி சிவலால் சிறிது பணம் சேமித்து பத்து பீகா நிலம் வாங்கிப் போட்டிருந்தார். அதை சியாம்லாலிடம் உழுது பயிர் செய்வதற்காக ஒப்படைத்திருந்தார். ஆனால் சியாம் லால் உழைப்பாளி அல்ல. அந்த நிலத்தில் மிகவும் சிரமப் பட்டு வரிக்கான பணம் மட்டும் வந்துகொண்டிருந்தது.

ராதேலால் முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு கூறினார்: "அண்ணா! வீட்டு நிலை என்ன என்று நீங்கள் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள்? நீங்கள் இங்கிருந்து சென்றுவிட்டால், ஜ்வாலா மாதா மாதம் அனுப்பிக்கொண்டிருக்கும் இருபது ரூபாயை நிறுத்தி விடுவானே?"

முன்ஷி சிவலால் புன்னகையுடன் சொன்னார்:

"இல்லை ராதே! நீ கவலைப்படாதே! நான் அவன் மாதாமாதம் பத்து ரூபாய் அனுப்பும்படி செய்கிறேன். மேலும் ஏதாவது எப்போதாவது அவசியமானால் நீ எனக்கு செய்தி அனுப்பு. முடிந்த அளவு அனுப்பி வைக்கிறேன். ஆம், ராமுவிடம், பட்டாமணியம் கிடைக்காவிட்டால் ஜில்லா பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்

வேலையாவது ஏற்றுக்கொள்ளச் சொல்லு. மௌலவீ சலாமத்துல்லாவிடம் நான் சொல்லி இருக்கிறேன். மேலும், சியாமுவுக்கு நன்ருக புத்தி சொல்ல வேண்டும். அவன் உழைத்து வேலை செய்யவேண்டும்.

நம்முடைய நிலத்துக்குப் பக்கத்திலேயே அந்தப் பறையனுடைய நிலம் ஐந்து பீகா விலைக்கு வருகிறது. அவனேடு பேசி அதை விலைக்கு வாங்கிக்கொள். அதற்காகும் ரூபாய்க்கு ஏதாவது ஏற்பாடு செய்கிறேன். இன்னும், இதோ பார், முடியுமானல் சியாமுவுக்கு அடுத்த கோடை காலத்துக்குள் கல்யாணம் செய்துவிடு கல்யாணம் ஆகிவிட்டால் ஒருவேளை அவன் சீர்திருந்தக் கூடும்.

சிவலால் இவ்வகையில் தேற்றியதால் ராதேலால் மனம் சிறிது சமாதானம் அடைந்தது. ஆனாலும் அவருக்கு வாழ்க்கை முறையில் ஏதோ ஒரு மாற்றம் வரப்போவதாகத் தோன்றியது. அவருக்குத் தம் பிள்ளைகளுடைய துர்புத்தியைப் பற்றியும், சோம்பேறித் தனத்தைப் பற்றியும் கோபம் வந்துகொண்டிருந்தது. ஆனல் அதைவிட அவருக்கு ஜ்வாலா, மற்றும் அவனுடைய மனைவி—இவர்களது அதிர்ஷ்டத்தை நினைத்துப் பொருமை உண்டாகிக்கொண்டிருந்தது. முன்ஷி சிவலாலை அதிகமாகக் கட்டாயப்படுத்துவது வீண் என்று அவருக்குத் தெரியும். தன்னுடைய அண்ணனைப் பற்றி அவருக்கு ஒருவித வெறுப்புக்கூட உண்டாகிக்கொண்டிருந்தது. அந்த வெறுப்புணர்ச்சியை அவருடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த பயம் மூடிக் கொண்டிருந்தது.

முன்ஷி சிவலால் காடம்பூர் போய்ச் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஏதோ சுவர்க்கத்திற்கே வந்து சேர்ந்து விட்டது போன்ற உணர்வு உண்டாகியது. ஜ்வாலா

பிரஸாத் பெயருக்குத்தான் உதவி தாசில்தாரே தவிர, உண்மையில் அவனுக்கிருந்த அதிகாரமும், செல்வாக்கும் ஒரு தாசில்தாருக்குப் போலவே இருந்தது. ஜ்வாலா பிரஸாதின் தந்தை என்ற முறையில் அவருக்கு எங்கும் மரியாதையும் கௌரவமும் கிடைத்தது. அவர் ஆணை இட்டபடி எல்லாம் நடந்தது. அங்கிருக்கும் மக்கள் அவரிடம் ஆலோசனை கேட்க வந்தார்கள். அவருடைய வீடு நிறைவு பெற்றிருந்தது. எந்தப் பொருளுக்கும் குறைவில்லை. அவர் அடிக்கடி மீர்ஸாஹபின் வீட்டுக்குச் சதுரங்கம் ஆடுவதற்காகப் போவார். மீர்ஸாஹபுடன் அவருக்கு நல்ல நட்பு உண்டாகியது.

ஆயினும் அவருக்கு ஒரு விஷயத்தைப் பற்றிய சிறிது குறை உண்டாகியது. இது அவருக்குச் சிறிது வருத்தமளித்த போதிலும், அதனால் ஆன்மீகமான திருப்தியும், சிறிது பெருமிதமும் கூட உண்டாயின. அதாவது ஜ்வாலாபிரஸாத் தன்னுடைய கடமையை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாய் உண்மையாக நடந்து வந்தான்; நம்பிக்கை தவறாதவனாக இருந்தான். இது சிறிது குறையாக சிவலாலுக்குப் பட்டது. தம்மிடத்தில் நடத்தைக் குறைபாடு இருந்தபோதிலும், நல்ல நடத்தையைப் பற்றி மதிப்பு கொள்ளும் தன்மை அவரிடம் இருந்தபடியால், ஓரளவு திருப்தியும் இருந்தது. அதோடு, சூழ்நிலை மாறியதனால், தளர்ந்து போய்க்கொண்டிருந்த அவருடைய உடல் சிறிது தேற ஆரம்பித்தது. இந்த உணர்வினால் அவருக்கு வாழ்க்கையைப் பற்றிய ஒரு புதிய தெம்பும், உற்சாகமும் உண்டாயின. குடும்பம் தழைத்துப் பெருகிக்கொண்டிருந்தது. செல்வமும் செழிப்பும் வளர்ந்துகொண்டிருந்தன.

குளிர்காலம் முடிந்தது. இனி பயிர் அறுவடை ஆரம்பமாகும். மத்தியான நேரம். முன்ஷி சிவலால்

வரவேற்பறையில் உட்கார்ந்துகொண்டு ஹுக்கா பிடித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒருவர் வந்து குரல் கொடுத்தார் 'ஜ்வாலாபாபூ!'

முன்ஷி சிவலால் வெளியே பார்வையைச்செலுத்தினர்: அங்கே டாகுர் கஜராஜ்சிங் நின்றுகொண்டிருந்தார். முன்ஷிசிவலாலுக்கு டாகுர் கஜராஜ் சிங்கைப்பற்றி பரிச்யம் இல்லை. இதுவரை அவரைப் பார்த்தது கிடையாது. பர்ஜோர்சிங்கின் விவகாரத்தின் காரண மாக ஜ்வாலாபிரஸாதுக்கும் டாகுர் கஜராஜ்சிங்குக்கும் ஏற்பட்டிருந்த மனத்தாங்கல் இன்னும் போகவில்லை. ஆயினும், முன்ஷி சிவலாலுடைய அனுபவம் நிறைந்த பார்வை, எதிரில் நிற்பவர் ஒரு சிறப்புள்ள பெரிய மனிதர் என்பதை அறிந்துகொண்டு விட்டது. "வாருங் கள், உட்காருங்கள். ஜ்வாலா சுற்றுப் பயணமாகப் போயிருக்கிறன். நாளை மாலைக்குள் திரும்பி வருவ தாகச் சொன்னன். நீங்கள் விஷயத்தை என்னிடம் சொன்னல் அவனுக்கு நான் தெரிவிக்கிறேன்."

"டாகுர் கஜராஜ் சிங் ஒரு முக்கியமான வேலையாக வந்திருந்ததாக அவரிடம் சொல்லுங்கள். நான் மீண்டும் நாளை நின்று மறுநாள் அவரைச் சந்திக்க வருகிறேன். இவ்வளவுதான் சொல்ல வேண்டும்." இதனைச் சொல்லி விட்டு டாகுர் கஜராஜ்சிங் திரும்பிப்போக அடி எடுத்து வைத்தார். ஆனல் அவருடைய கால்கள் தாமே நின்று விட்டன. மறுபடியும் திரும்பிவந்து சிவலாலை உன்னிப் பாகப் பார்த்தார். உங்களை நான் முதல் முறையாகப் பார்க்கிறேன். நீங்கள் ஜ்வாலாபாபூவின் தகப்பனரோ?"

முன்ஷி சிவலால் புன்னகை பூத்துச் சொன்னர்: "ஆமாம். நான் ஜ்வாலா பிரஸாதின் தந்தை. ஏதாகிலும் முக்கியமான சமாச்சாரம் இருந்தால் என்னிடம் நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். நான் அவனிடம் சொல்லு

கிறேன்.

"உங்களுக்கு எதற்குச் சிரமம். நானே அவரை வந்து பார்க்கிறேன்." பிறகு சிறிது நின்று அவர் மீண்டும் கூறினர்:

"நீங்கள் அனுபவம் மிக்கவர். உங்களிடம் கதை முழுவதையும் சொல்லுவதில் குந்தகம் ஏற்படாது. நான் ஒரு பெரிய தர்மசங்கடமான நிலையில் இருக்கிறேன். ஒருவேளை நீங்கள் ஏதாவது வழி காட்டலாம்."

கஜராஜ் சிங் சொன்ன கதை முழுவதையும் கேட்டுச் சிவலாலின் மனதில் பர்ஜோர் சிங்கின் குடும்பத்தைக் குறித்து இரக்கம் உண்டாகியது. "நீங்கள் நம்பிக்கை யோடு இருங்கள், டாகுர் ஸாஹப்! நான் ஜ்வாலாவுக்கு எல்லாவற்றையும் சொல்லுகிறேன். அவனல் செய்யக் கூடியதை அவன் கட்டாயம் நிறைவேற்றுவான் என்று நான் உங்களுக்கு உறுதியாக வாக்களிக்கிறேன். இந்த விஷயத்தில் நீங்கள் என்னிடம் நம்பிக்கை வைக்கலாம்."

அடுத்த நாள் ஜ்வாலா பிரஸாத் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு வந்தார். அவரிடம் சிவலால் சொன்னர்: "நேற்று மத்தியானம் உன்னைப் பார்க்க டாகுர் கஜராஜ் சிங் வந்திருந்தார்."

ஜ்வாலா பிரஸாத் ஆச்சரியத்துடன் கேட்டார்: "டாகுர் கஜராஜ் சிங்கா வந்தார்? என்னைச் சந்திக்கவா? ஏதாவது சொல்லிவிட்டுப் போனரா?"

ஆமாம். பர்ஜோர் சிங்கின் நிலத்தைப் பற்றிச் சொல்லவே வந்தார். பயிர் விளைந்துவிட்டதாம். விதவை யாகிய ஜயதேயீயின் பெயரில் நிலம் பதிவாகியுள்ளது. அவளுடைய குமாஸ்தா லச்சீராம் நிலத்தைச் சுவாதீன மாக்கிக்கொள்ள மனு போட்டிருப்பதாக அவர் சொல்லிக்கொண்டிருந்தார். நிலத்தில் நிற்கும் பயிரை

அறுவடை செய்துகொள்ளவேண்டி உன் உதவியை நாடுகிறார்.''

ஜ்வாலா பிரஸாதின் நெற்றியில் புகைபோல் படிந்தது. இரக்கமும் அவசத்தன்மையும் கொண்ட குரலில் சொன்னார்: "நான் என்ன செய்யக்கூடும் அப்பா. நம்பர்தாரிணியின் பெயரில் நிலம் பதிவாகிவிட்டதென்றால் அது அவளுக்குச் சுவாதீனமாக வேண்டியது தானே? நீங்களே சொல்லுங்கள், நான் என்ன உதவி செய்யக்கூடும் இவர்களுக்கு.''

"ஒன்று இருக்கிறது. நம்பர்தாரிணிக்கு பர்ஜோர் சிங்கின் மனைவி தானாகவே நிலத்தைச் சுவாதீனம் செய்து கொடுக்கும்படி செய்யலாம். ஆனால் ஒரு ஷரத்தின்பேரில். அதாவது பர்ஜோர் சிங்கின் மனைவி பயிரை அறுவடை செய்துகொள்ள வேண்டும். இந்த ஷரத்தின்பேரில் விஷயம் சுலுவாக முடிவடையும் என்று நான் நினைக்கிறேன்.''

"பர்ஜோர் சிங்கின் மனைவி காடம்பூருக்கு வந்திருக்கிறாளாமா?'' ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

"ஆமாம். அவள் தன் குழந்தைகளோடுகூட கஜராஜ் சிங்கின் வீட்டுக்கு வந்திருக்கிறாளாம். நாளைக் காலை அவர் மீண்டும் வருவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.'' சிறிது இருந்து மீண்டும் சிவலால் சொன்னார்: "உன்னால் செய்யக்கூடியதைக் கட்டாயம் செய் மகனே! ஒரு விதவைக்கு உதவி செய்வதாகும்!''

ஜ்வாலா பிரஸாத் கவலையோடு பதில் கூறினார்: "பார்க்கலாம். ஏதாவது செய்ய முயற்சி செய்கிறேன். ஒருவேளை நீங்கள் சொன்ன வழியை நம்பர்தாரிணி ஏற்கக்கூடும்.''

சாயங்காலத்துக்குச் சிறிது முன்னரே ஜ்வாலா பிரஸாத் சிவபுராவுக்குக் கிளம்பினார். அவர் சிவபுரா

போய்ச் சேர்ந்தபோது இருள் சூழத் தொடங்கியது. பிரபு தயாளுடைய மாளிகைக்கு முன்னிருந்த ராதா கிருஷ்ணர் கோயிலில் ஆரத்தி நடந்துகொண்டிருந்தது. அங்கு முன்போலவே ஆரவாரமாக இருந்தது. அவரை நம்பர்தாரிணியின் வேலையாட்கள் வணக்கத்துடன் வரவேற்று வரவேற்பறையில் அமரச் செய்தனர். நம்பர் தாரிணிக்கு அவருடைய வருகையை அறிவித்தனர். அவருடைய வருகையைப் பற்றிய செய்தி குமாஸ்தா லச்சிராமுக்கும் அனுப்பப்பட்டது. அவன் வீட்டுக்குப் போயிருந்தான்.

ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதை மாளிகையின் உட்புறத்து அறைக்கே வரும்படி சொல்லியனுப்பினுள். அவள் எழுந்து ஜ்வாலா பிரஸாதை வரவேற்ருன்.

"ஏதோ நான் செய்த பெரிய பாக்கியம், நீர் இன்று வந்தீர் மைத்துனரே! உங்களுக்கு நான் நாலைந்து முறை சொல்லியனுப்பினேன். ஆனுல், நீங்கள்தான் பெரிய ஆபீஸர் ஆயிற்றே! எப்போதும் சுற்றுப் பயணத்திலேயே இருக்கிறீர்கள்." இதைக் கூறி அவள் முறுவலித்தாள்.

ஜ்வாலா பிரஸாத் புன்னகை செய்து சொன்னுர்: "என்ன செய்வது அண்ணி? இந்த வேலையினுல் பெரிய தொல்லை. நம்மிஷ்டப்படி வீட்டில் உட்கார ஒழிவதில்லை. என்னுடைய வேலையுடன் மீர் ஸாஹபின் வேலையையும் சமாளிக்கவேண்டி யிருக்கிறது. நேற்று இரவுதான் சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பி வந்தேன். இன்று காலையில் திடீரென நினைத்துக்கொண்டேன் வெகு நாளாக அண்ணியைப் பார்க்கவில்லையே என்று. இப்போது ஒருவாறு ஒழிவுபெற்றுக் கிளம்பி வந்தேன்."

"உமக்கு என்னிடம் ரொம்ப இரக்கம்! மைத்துனரே. இங்கே உங்கள் ஒருவருடைய உதவிதானே எனக்கு?

கூட்டிக்கொண்டு வந்தேன்! ஏன் நிற்கிறீர்கள்? நான் உங்கள் வீட்டுக்குக்கூட வந்தேன். உங்கள் பிள்ளை எவ்வளவு அழகாக இருக்கிறான்! என் தோழி எப்படி இருக்கிறாள்?"

யமுனையை ஜயதேயீ தோழி என்று குறிப்பிடுவாள். இதை ஜ்வாலா பிரஸாத் அறிந்திருந்தார். அவர் சொன்னார்: "ஆமாம் அண்ணி, அவள் உனக்கு 'ராம் ராம்' சொல்லி அனுப்பினாள்.

பிறகு சிறிது இருந்து அவர் தொடர்ந்தார். "அண்ணி. ஒரு முக்கியமான வேலையை வைத்துக்கொண்டுதான் வந்திருக்கிறேன். உன்னை ஒன்று கேட்டுக்கொள்ள வேண்டும்."

"அண்ணி, பர்ஜோரின் நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளப்போகிறாய் என்று கேள்விப்பட்டேன்."

"ஆம் மைத்துனரே! லச்சீராம் நடவடிக்கைகளைச் செய்து முடித்திருக்கிறான். இரண்டு மூன்று நாளில் அந்த நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ளவேண்டும். இந்த விவகாரம் ரொம்ப நாளாக அப்படியே கிடக்கிறது."

"அண்ணி, நான் உன்னிடம் என்ன சொல்ல வந்தேன் என்றால், பர்ஜோர்சிங்கின் மனைவியும் குழந்தைகளும் இங்கே வந்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு பைசாவுக்கும் மற்றொருவருடைய தயவை எதிர் பார்க்கும் அளவுக்கு ஏழைகள் ஆகிவிட்டார்கள். இந்த முறை அவர்களை நீ பயிர் அறுவடை செய்துகொள்ள விட்டுவிடு. அதன் பிறகு அவர்கள் தாமாகவே நிலத்தை உன் சுவாதீனத்துக்கு விட்டுவிடுவார்கள். இப்போது சுவாதீனம் செய்துகொள்ள எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று லச்சீராமிடம் சொல்ல வேண்டும்."

ஜயதேயியின் முகம் ஆழ்ந்த சிந்தனை கொண்டு விட்டது. அவள் தன்னுடைய பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். "மைத்துனரே, ஒவ்வொருவருக்கும் அவரவரது தலைஎழுத்து என்று ஒன்றிருக்கிறது. யார் யாருடைய வருத்தத்தைப் போக்கக்கூடும்? உலகத்தில் ஏழைகள் எண்ணற்று இருக்கின்றனர். அந்த நிலத்தில் எனக்கு உரிமை உண்டு என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்கள் அல்லவா?"

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "நீ சொல்வது சரிதான், அண்ணி. நிலத்தில் மட்டுமின்றி அதில் விளைந்திருக்கும் பயிரிலும் உனக்கு உரிமையுண்டு. ஆனால், அந்தப் பயிர் பர்ஜோர் சிங்தான் உழைத்து வளர்த்தது. இதெல்லாம் சட்டப் பேச்சு. நான் கூறுவது மனிதாபிமானம், உபகாரம் என்பதைப் பற்றியது."

"ஜயதேயியின் முகத்தில் மீண்டும் புன்னகை தவழ்ந்தோடியது. "மைத்துனரே! நீர் எவ்வளவு நல்லவர்! எவ்வளவு உத்தமர்! இந்த நடவடிக்கையை நிறுத்தச் சொல்லுங்கள் லச்சீராமிடம். நான் உங்களுடைய வார்த்தையைத் தட்ட முடியுமா?" பிறகு அவள் சொன்னாள்: "மைத்துனரே, சாப்பிட்டுவிட்டுப் போங்கள். இதோ, நானே உமக்காக நொடியில் சமையல் செய்துவிடுகிறேன். அதுவரை நீங்கள் சிறிது இளைப்பாறுங்கள்."

"இந்த முறை என்னை மன்னித்துவிடு அண்ணி. நான் அப்பாவிடம் சொல்லாமல் வந்துவிட்டேன். அவர் சாப்பாட்டிற்காக என்னை எதிர்பார்த்துக்கொண்டிருப் பார். மற்றொரு தடவை வரும்போது சொல்லிவிட்டு வருகிறேன். அப்போது உன் சமையலைச் சாப்பிட்டு விட்டுத்தான் திரும்பிச் செல்வேன்."

"சரி, மைத்துனரே! அப்படியானால் கொஞ்சம்

சிற்றுண்டியாவது சாப்பிட வேண்டும்.''

சிற்றுண்டியயை முடித்துவிட்டு ஜ்வாலா பிரஸாத் வெளியே வந்தார். அங்கே லச்சீராம் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தான். அவரைக் கண்டதும் அவன் எழுந்து நின்றான். "நீங்கள் ஏது இவ்வளவு தூரம் வந்தது?'' ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "நல்ல சமயத்தில் நீ வந்தாய் லச்சீராம்! பர்ஜோர் சிங்கின் நிலத்தை இரண்டு மூன்று நாளில் சுவாதீனம் செய்துகொள்ளப்போகிறாய் என்று கேள்விப் பட்டேன்.''

"ஆமாம், உதவி தாசில்தார் ஸாஹப்! நம்பர்தாரிணி அம்மாவின் கட்டளை. மேலும், சுவாதீனம் செய்து கொள்ளாமலே வெகு நாட்கள் கழிந்துவிட்டன. பயிர் அறுவடை நெருங்கிவிட்டதே.''

"அறுவடைக்குக் காலம் நெருங்கிவிட்டது லச்சீராம்! அதனால்தான் அவர்கள் அறுவடை செய்துகொள்ளும் வரை நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ள வேண்டாம் என்று சொல்லவே நான் இப்போது வந்தேன். அறுவடை ஆனதும் பர்ஜோர் சிங்கின் மனைவி தானாகவே நிலத்தைச் சுவாதீனம் செய்து கொடுத்து விடுவாள். நம்பர்தாரிணி அம்மாவுடன் நான் இதைப் பற்றிப் பேசிவிட்டேன். அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். உன்னிடம் சொல்லும்படி அவர்கள் கூறினார்கள்.''

லச்சீராமுக்கு அவர் சொன்னது பிடிக்கவில்லை. அவன் சொன்னான்: "நம்பர்தாரிணி அம்மா எசமானி. அவர்கள் இஷ்டப்படியே நடக்கும். ஆனால் உதவி தாசில்தார் ஸாஹப்! நிலம், சொத்து என்ற விவகாரத்தில் தயைக்கும் தருமத்துக்கும் இடம் ஏது? இதிலே தானே எசமானருடைய உயிரே போய்விட்டது? நம்பர்தாரிணி அம்மா இதற்கு எப்படி ஒப்புக்கொண்டார்கள்?''

ஜ்வாலா பிரஸாதுக்கு லச்சீராமின் இந்தப் புகார் நிரம்பிய பேச்சு உறுத்தியது. அவர் சிறிது கடுமையான குரலில் சொன்னார்: "இதையெல்லாம் நீ உன் எசமானி அம்மாளிடம் கேட்டுக்கொள். லாலா பிரபு தயாளுக்கும் நம்பர்தாரிணி அம்மாவுக்கும் மிக்க வித்தியாசம் உண்டு என்று மட்டும் எனக்குத் தெரியும். இப்போது உனக்கு நான் சொல்ல வேண்டியது இவ்வளவே! தற்சமயம் நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளும் நடவடிக்கை நடக்காது. தெரிந்ததா?"

லச்சீராம் கூறும் பதிலுக்காகக் காத்திராமல் அவர் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்.

லச்சீராம் ஜயதேயியினிடம் சென்றான். அவள் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு கனவு காண்பதில் லயித்திருந்தாள். லச்சீராமின் காலடிச் சத்தத்தைக் கேட்டு அவள் கண்விழித்தாள். அவளுடைய கனவு திரும்பிப் போய்விட்டதுபோலும். எதிரில் லச்சீராம் நிற்பதைக் கண்டு சொன்னாள்: "என்ன லச்சீராம்? என்ன விஷயம்?"

லச்சீராம் ஆவேசம் கொண்டு சொன்னான்: "என்ன எசமானி அம்மா! இந்த வீட்டில் இனிமேலே உதவி தாசில்தாருடைய அதிகாரம்தான் நடக்குமா?"

லச்சீராமின் இந்த சொரூபம் ஜயதேயிக்குப் பிடிக்கவில்லை. ஆனால் தன்னை அடக்கிக்கொண்டு இயல்பான முறுவலோடு அவள் சொன்னாள்: "இல்லை லச்சீ. நான் உதவி தாசில்தாரிடம் உன்னிடம் கேட்கும்படி சொன்னேன். சின்ன விஷயம்; இதில் போய் கோபமடைவது வீண்."

லச்சீராம் சொன்னான்: "ஆனால், எசமானி அம்மா! முதலில் நீங்களல்லவா என்னிடம் பேசியிருக்க வேண்டும்? என்னைத்தானே இந்த வீட்டின் வேலைகளைக்

கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?"

ஜயதேயீ இப்போது உரக்கச் சிரித்தாள். "ஆமாம் லச்சீ. நான்தான் உன்னை இந்த வீட்டில் எல்லா வேலைகளையும் கவனித்துக்கொள்ள நியமித்திருக்கிறேன். ஆனல், உனக்குத்தான் தெரியுமே? உதவி தாசில்தார் தெய்வம் போன்றவர். நமக்கெல்லாம் அவர் எவ்வளவு உதவியாக இருக்கிறார்!"

"ஆனல் எசமானி அம்மா, எப்படியிருந்தாலும் நிலத்தை நாம் சுவாதீனம் செய்துகொண்டுதான் ஆக வேண்டும் என்று நான் நினைக்கிறேன்."

ஜயதேயீ சிறிது உணர்ச்சியில் ஆழ்ந்து கூறினாள்: "லச்சீ, இந்த நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ளப் போய்தான் எசமானருடைய உயிர் போயிற்று. இப்போது நீதான் துணையாக இருக்கிறாய்! ஆனல் உன்னையும் நான் இழந்துவிட வேண்டும் என்பது உன் விருப்பமா?"

லச்சீராமுடைய குரலில் திடீரென பரபரப்புத் தோன்றியது. "அப்படியென்றால், இம்மாதிரி பயம் ஏற்படக் காரணம் இருக்கிறதா என்ன? உதவி தாசில்தார் இதைத்தான் சொல்ல வந்தாரா?"

லச்சீராமுக்கு பயம் உண்டாக்குவதில் இப்போது ஜயதேயீக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "ஏதோ அப்படித் தான் கேள்விப்பட்டாராம் மைத்துனர்! டாகுர் கஜராஜ் சிங் வீட்டில் அவர்களுடைய சம்பந்தியின் ஊரிலிருந்து ஏழெட்டு லாட்டி சுற்றும் தடியன்கள் வந்திருக்கிறார் களாம். இப்போதுகூட உதவி தாசில்தார் இங்கு வரும் போது இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் வழியில் துப்பாக்கி வைத்துக்கொண்டிருக்கும் இரண்டுபேர்கள் தென்பட்டார்களாம். உதவி தாசில்தார் அவர்களிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாராம்! அவர்கள்

சொன்னார்களாம்: "கஜராஜ் சிங்கினுடைய உறவினர்கள் நாங்கள். வேட்டையாட வந்திருக்கிறோம்" என்று.

லச்சீராமுக்கு வியர்த்துக்கொட்டியது. "எசமானியம்மா, இதையெல்லாம் போலீசும், சர்க்காரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கப் போகிறார்களாமா?"

"நான் என்ன கண்டேன், அதையெல்லாம்? உனக்குத் தான் தெரியுமே? இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலி சமயம் வந்தபோது நம்மை ஏமாற்றிவிட்டான். இந்த உதவி தாசில்தார் அவர்களுடைய உதவி மட்டும் நமக்கிருக்கிறது. ஆனால், உனக்குத்தான் அவர் சொல்லுவது பிடிக்கவில்லை. நம்மை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்."

"அப்படி இல்லை, அப்படி இல்லை. உதவி தாசில்தார் அவர்கள் எப்படிச் சொல்லுகிறாரோ, அப்படியே நடைபெறும். அதிலே கொஞ்சம் கூட பிசகு உண்டாகாது!" லச்சீராம் சொன்னான்.

ஜயதேயீ உடம்பை முறித்துக்கொண்டாள். "எனக்கு உடம்பு சரியில்லை லச்சீ! இப்போது நீ வீட்டுக்குப் போ; சாப்பிட நேரமாகிவிட்டது. இதோ பார், கொஞ்சம் விழிப்போடு இரு! உதவி தாசில்தார் எல்லாவற்றையும் சரிப்படுத்திவிடுகிறேன் என்று வாக்களித்திருக்கிறார்."

லச்சீராம் மாளிகைக்கு வெளியே வந்தான். இப்போது அவனுக்குத் தன் வீட்டுவரை தனியாகப் போகத் துணிச்சல் இல்லை. ஒரு வேலையாளைத் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

6

முன்ஷி ராமசகாய், ஹோலி பண்டிகையின்போது சிவலால், ஜ்வாலா பிரஸாத் மற்றும் யமுனையையும் ராஜபுராவுக்கு வரச்சொல்லி அழைப்பு விட்டிருந்தார். அவருடைய கடிதத்தைப் பார்த்து சிவலால் ஜ்வாலா பிரஸாதுக்குச் சொன்னார்: "குழந்தே! நாம் அவசியம் போகவேண்டுமப்பா! ரொம்பப் பிரியமாக உன் மாமா நம்மை அழைத்திருக்கிறார். கொஞ்சநாள் ராஜபுராவிலே போய் இருக்கவேண்டுமென்று எனக்கு விருப்பம். இனிமேல் எனக்கு இம்மாதிரி ஊர் சுற்றவேண்டிய நாள் வந்துவிட்டது என்று நினைத்துக்கொள்."

"ஆனால் அப்பா, இதற்காக நான் விடுமுறை வாங்கிக் கொள்ளவேண்டி யிருக்கும். இம்மாதிரி க்ஷேத்திரங் களுக்கு யாத்திரை செல்லுதல், பண்டிகைகளுக்குப் போவது என்பதெல்லாம் உயர் பதவியிலிருக்கும் ஆபீஸர்களுக்கு முடியாது. இப்போது எனக்கு வேலையும் மிகுதியாக உள்ளது. நீங்கள் உங்களுடைய மருமகளை அழைத்துக்கொண்டு போய்வாருங்கள். சின்கீ சித்தியையும் கூட அழைத்துக்கொண்டு போங்கள். பீக்கூ மட்டும் இங்கிருந்தால் போதும்!"

சின்கீ அங்கே அருகிலேயே நின்றுகொண்டிருந்தாள். அவள் சொன்னாள்: "மருமக இப்போதான் இத்தினி நாள் அங்கிருந்துட்டு வந்திருக்குது. அவ எப்படி போறது? ஹோலியை சொந்த வீட்டிலேதானே நடத்தணும்? பெரிய ஆபீஸர் வீட்டு வாசல்லே, ரொம்ப

பேர் வருவாங்க. ஆட்டம் பாட்டு எல்லாம் நடக்கும். வரவங்களுக்கு உபசரணை செய்யத்தான் எல்லாரும் ஆசைப்படுவாங்க! நீங்க மட்டும் போயிட்டு வாங்க. அங்கேயே இருக்கவேண்டியா போறீங்க?''

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: ''நானும் உங்களோடு ஒரு நாள் ராஜபுரா வந்திருக்கக்கூடும். அந்தப் பக்கம் சுற்றுப்பயணமும் செய்து முடித்துக்கொள்ளலாம். உங்களை அங்கே கொண்டுபோய் விட்டுவிட்டு பிறகு நான் திரும்பிவிடுகிறேன்.''

முன்ஷி சிவலாலை ராஜபுரா கொண்டுபோய் விட்டு விட்டு ஜ்வாலா பிரஸாத் திரும்பி வந்தார். அப்போது அவர் வீட்டில் கஜராஜ் சிங் அவருக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஜ்வாலா பிரஸாத் 'இக்கா' வண்டியில் வரும்போதே கஜராஜ் சிங் தன் வீட்டிலிருந்தபடியே கவனித்துவிட்டார். அவர் வீடு வந்து சேருவதற்குள் கஜராஜ் சிங் அங்கு வந்துவிட்டார். ஏனெனில், ஜ்வாலா பிரஸாத் வரும்போது ஆபீஸில் சிறிது நேரம் தங்கிவிட்டார்.

''மன்னியுங்கள், உதவி தாசில்தார் ஸாஹப்! அன்றைக்குப் பிறகு நான் உங்களைச் சந்திக்க முடியவில்லை. சம்பந்தி வீட்டுக்குப் போயிருந்தேன், பெண்ணைக் கொண்டு விட! நான் போயிருக்கக் கூடாது; ஆனால் என்ன செய்வது? நிர்பந்தமாகிவிட்டது. வீட்டில் இப்போது உதவிக்கு ஒருவரும் இல்லை. பர்ஜோர் சிங் ஒருவன் உதவியாக இருந்தான். அவனும் போய் விட்டான். பெண்ணைக் கொண்டுபோய் விட்டுவிட்டு நேற்றுதான் திரும்பி வந்தேன். தலை ஹோலி பண்டிகை அல்லவா? உங்களைப் பற்றி விசாரித்தேன். நீங்கள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று காலையில் வருவீர்கள் என்று தெரிந்தது.''

ஜ்வாலா பிரஸாத் வெற்றிலை பீடா கொண்டுவர பீக்கூவை அனுப்பினார். பிறகு கஜராஜ் சிங்கிடம் சொன்னார்: "டாகுர் ஸாஹப்! நீங்கள் பர்ஜோரின் நிலத்தைப்பற்றி எப்படிச் செய்யக் கேட்டுக் கொண்டீர்களோ, அப்படியே செய்துவிட்டேன். நம்பர்தாரிணி அம்மாவின் சார்பில் தற்சமயம் நிலத்தைச் சுவாதீனம் செய்துகொள்ள எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பெறாது. நீங்கள் பயிரை அறுவடை செய்து கொண்டு அதற்குப் பிறகு நீங்களாகவே நிலத்தை அவளுக்குச் சுவாதீனம் செய்து கொடுத்துவிடுங்கள். இந்தக் கோர்ட்டு விவகாரமெல்லாம் எதற்கு? நான் நம்பர்தாரிணி அம்மா அவர்களிடம் அன்றைக்கே இதை யெல்லாம் சொல்லிவிட்டேன்."

"பெரிய உபகாரம் செய்திருக்கிறீர்கள் அந்த அனாதைகளுக்கு, ஜ்வாலா பாபூ! பகவான் உங்களுக்கு நன்மையே செய்யவேணும். நான் பர்ஜோரின் மனைவிக்கு இந்த செய்தியைச் சொல்லி அனுப்புகிறேன். அவள் 'சுனௌடா'வில் தன் வீட்டுக்குப் போய்விட்டாள். பூமியை நம்பர்தாரிணிக்குச் சுவாதீனம் செய்து கொடுக்கும் விஷயம் என் பொறுப்பில் விடுங்கள்." டாகுர் கஜராஜ் சிங் மகிழ்ச்சியோடு வீட்டுக்குத் திரும்பினார்.

அடுத்த நாள் மாலை டாகுர் கஜராஜ் சிங் ஜ்வாலா பிரஸாதின் வீட்டுக்கு வந்தார். அப்போது அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். எங்கு பார்த்தாலும் ஹோலியின் ஆரவாரம். சூழ்நிலையில் ஒருவிதப் புதிய ஆனந்தமும் உல்லாசமும் இருந்தது. உணவருந்துவதற்குத் தன் வீட்டுக்கு வரவேண்டும் என்று அவர் ஜ்வாலா பிரஸாதை அழைக்க வந்திருந்தார். "ஜ்வாலா பாபூ! நடந்தது நடந்து

விட்டது. நீங்கள் செய்ததெல்லாம் சட்டப்படிக்கு உசிதமாகவே செய்தீர்கள். நான் உங்களிடம் பகைமை கொண்டேன். அது என்னுடைய தவறுதான். என் மனமே நான் குற்றம் செய்ததாகச் சொல்லுகிறது. நீங்கள் என் வீட்டிற்கு வந்து உணவருந்தினால்தான் நீங்கள் என்னை மன்னித்துவிட்டீர்கள் என்று நான் நினைப்பேன். தாசில்தாரிணி அம்மாவுக்கும் ராணி அவர்கள் தனிப்பட்ட முறையில் அழைப்புக் கொடுத்திருக்கிறார்கள்."

அவருடைய அழைப்பில் இருந்த அன்பை ஜ்வாலா பிரஸாத் ஏற்காது மறுக்க முடியவில்லை. "கட்டாயம் வருகிறேன் டாகுர் ஸாஹப்! நன்மையும் தீமையும் உலகத்தில் நடந்துகொண்டுதான் இருக்கும். நாம் தவறு செய்கிறோம். அதன் பலனையும் அனுபவிக்கிறோம். உலகத்தில் தங்கள் உணர்ச்சிகளை மீறி உயர்ந்து போகக் கூடியவர்கள் மிகக் குறைவு. மனித உணர்ச்சி சில சமயம் வழி தவறிப் போகிறது. ஆனால் வழி தவறிய பிறகு மீண்டும் சரியான பாதைக்கு வருகிறதென்றால், அதைப்பற்றிக் குறை சொல்ல என்ன இருக்கிறது?"

ஹோலி பண்டிகையின்போது இரவில் தெருவில் நாற்சந்தியில் குவித்து வைத்த கட்டை முட்டைகளைக் கொளுத்தவேண்டிய சடங்கு செய்யப்பட்டது. அதற்கு அடுத்த நாள் மக்கள் சந்தோஷமாக ஒருவர் மேல் ஒருவர் வர்ணத் தண்ணீரை இறைத்து வாழ்த்துக் கூறி நட்பை அறிவிக்கும் முறையில் தழுவிக்கொண்டனர். ஜ்வாலா பிரஸாதைக் கண்டு "வர்ணம்" அளிக்க அன்று அனேகமாக காடம்பூரிலிருக்கும் மக்கள் அனைவருமே வந்தனர். வந்தவர்களுக்கு வரவேற்பும் மரியாதையும் கொடுக்கப்பட்டது. காலையிலிருந்தே மதுவும் வழங்கப் படலாயிற்று. ஜ்வாலா பிரஸாதும் தன்

விருந்தினர்களோடு சேர்ந்துகொண்டு மது அருந்த வேண்டியதாயிற்று.

மத்தியான நேரத்தில் அவர் யமுனையை அழைத்துக் கொண்டு டாகுர் கஜராஜ் சிங்கின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். யமுனை, ராணி இருக்கும் அந்தப்புரத்துக்குள் சென்றுவிட்டாள். கஜராஜ் சிங்கின் தர்பார் அறையில் ஆடல் பாடல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கிராமத்துப் பாடகிகள் கூட்டமாகச் சேர்ந்து பாடிக் கொண்டிருந்தனர். மக்கள் மதுவைக் குடித்துக் கொண்டிருந்தனர்.

சுமார் இரண்டு மணிக்கு ஆடலும் பாடலும் முடிவடைந்தது. எல்லாரும் உணவருந்துவதற்கு அமர்ந்தனர். கஜராஜ் சிங் ஜ்வாலா பிரஸாதைத் தன் பக்கத்திலேயே அமர்த்திக்கொண்டார். பர்ஜோர் சிங்கின் பிள்ளைகள் இருவரும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தனர். கஜராஜ் சிங் சொன்னார் : "இந்தப் பிள்ளைகளுடைய வீட்டில் ஹோலி கொண்டாடப் படவில்லை, ஜ்வாலா பாபூ! ஆகவே நான் இவர்களை இங்கே வரவழைத்தேன். இந்த அப்பாவிகளுக்கு இவர்கள் இழந்துவிட்டது என்னவென்று எப்படித் தெரியும்? இவர்களுடைய தாய் 'சுனௌடா' கிராமத்தில் தனியாகக் கிடந்து அழுதுகொண்டிருக்கிறாள். ஸாட்சாத் லட்சுமீதான் அவள்! கடவுள் எந்த பாபத்திற்காகத் தான் அவளுக்கு இந்த தண்டனை அளித்தாரோ? நீங்கள் அவர்களுக்குப் பெரிய உபகாரம் செய்தீர்கள், ஜ்வாலா பாபூ! இவர்கள் மீண்டும் தங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போகவாவது முடிந்ததே!"

ஜ்வாலா பிரஸாதின் கண்கள் மயக்கத்தினால் மங்கிக் கொண்டிருந்தன. இரக்கத்திற்குரிய இக்கதையைக் கேட்டு அவருடைய உள்ளத்தில் பரிவு பொங்கியது.

மிகவும் இரக்கம் தோய்ந்த குரலில் அவர் சொன்னார்: "அறியாமல் நான் இவர்களுக்குத் தீங்குசெய்துவிட்டேன். அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் செய்த உபகாரம் மிகச் சிறியது."

கஜராஜ் சிங் அனுபவம் நிறைந்த மனிதர். அவர் தருணத்தை அறிந்து சொல்லலானார்: "உதவி தாசில்தார் ஸாஹப்! உங்களுக்குத்தான் நம்பர்தாரிணி அம்மா பெருமதிப்புக் கொடுக்கிறார்கள். பர்ஜோர் சிங்கின் இந்த நூறு பீகா நிலத்தையும் அவனுடைய பிள்ளைகளின் பேரில் குத்தகையாக வாங்கிக் கொடுக்க முடியுமா?"

சிறிது யோசனை செய்துவிட்டு, ஜ்வாலா பிரஸாத் கூறினார்: "ஆமாம், இதற்கு ஆட்சேபம் சொல்லக் காரணம் எதுவும் தெரியவில்லை. கடைசியில் இந்த நிலத்தை யார் பேரிலாவது குத்தகைக்கு விடத்தானே வேண்டியிருக்கும்? ஆனால் பிரச்னை பணத் தொகை கொடுப்பதைப்பற்றியது. நூறு, இருநூறு ரூபாய் கொடுக்க நான் ஏற்பாடு செய்ய இயலும். வேண்டுமானால் நான் அவர்களிடம் பேசிப் பார்க்கிறேன்."

ஒரு பெருமூச்சு விட்டு கஜராஜ் சிங் சொன்னார்: "ராஜகுலத்தவர் உழவுத் தொழில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது! இது மிகவும் துரதிர்ஷ்டம் கொண்ட நிலை! ஆனால் என்ன செய்வது? காலம் என்பது எதையும் ஆக்கக்கூடியது, அழிக்கக்கூடியது. தலை எழுத்தை யாரால் மாற்ற முடியும்? பட்டினி கிடந்து சாவதை விட உழுது சாகுபடி செய்வது நல்லதல்லவா? ஜ்வாலா பாபூ! நீங்கள் இவ்வளவு செய்து கொடுத்தால் பெருத்த உபகாரமாகும். இவர்களுக்கு வாழ்வு கிடைக்கும்."

கஜராஜ் சிங்கின் குரல் ஒருவகையான நிர்பந்தம் காட்டியது. அத்துடன்கூட குறை கூறும் குரலும் அடங்கி

யிருந்தது. ஜ்வாலா பிரஸாதின் மனம் சிறுகச் சிறுக வியாகூலமடைந்து வந்தது. அவரால் சாப்பிட முடியவில்லை. இது இரக்க மிகுதியினலா அல்லது அதிகமாக மதுவைக் குடித்துவிட்டதனலா என்று கூற முடியாது. உணவை ஒருவாறு முடித்துக்கொண்டு உள்ளத்தில் சுமையை ஏற்று அவர் வீடு திரும்பினர். ராணி தேவகுவர் யமுனையையும் சின்கீயையும் தன் வீட்டிலேயே நிறுத்தி வைத்துக்கொண்டுவிட்டாள். பீக்கூ ஹோலியில் வேஷம் போட்டுக்கொண்டு ஆடவும், பாடவும் தன் இனத்தார்களாகிய 'கஹார்'களைத் தேடிப் போய்விட்டான்.

வீட்டையடைந்து ஜ்வாலா பிரஸாத் படுக்கையில் போய் படுத்தார். அவர் பர்ஜோர் சிங்கின் மனைவி மக்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். பலவாறு முயன்றும் அவருக்குத் தூக்கமே வரவில்லை. அரை மணி நேரம் இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டிருந்தார். ஊரில் நாலு புறமும் பாட்டுச் சத்தமும், வாத்தியங்களின் சத்தமும் நிரம்பியிருந்தது. எங்கும் மக்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்துகொண்டிருந்தனர். ஆனல் அவரோ கவலையில் ஆழ்ந்திருந்தார்.

அந்தக் கவலையோடு போராடுவதற்கோ என்னவோ அவர் தன் முழு வலிமையையும் வரவழைத்துக்கொண்டு எழுந்து நின்றார். ஆடை அணிந்துகொண்டு 'இக்கா' வண்டியைக் கட்டச் செய்தார். ஏதோ ஒரு அசேதன நிலையில் அவர் 'இக்கா'வை சிவபுரானை நோக்கிச் செலுத்தினர்.

கடுமையான வெய்யில் காய்ந்துகொண்டிருந்தது. எங்கும் தூசிப்படலம் எழும்பிக்கொண்டிருந்தது. சாயப் பொடி வீச்சுகள் நின்றுவிட்டன. ஆனல் ஆங்காங்கு

டோலக், கஞ்சீரா போன்ற வாத்தியங்களின் ஒலியோடு ஹோலி பண்டிகையின் மயக்கந்தரும் மகிழ்ச்சிக் கீதங்கள் பாடப்பட்டுக்கொண்டிருந்தன. ஜ்வாலா பிரஸாதின் மனதிலிருந்து கவலையும் சிறுகச் சிறுக ஓய்ந்துவிட்டது. அவருடைய 'இக்கா' சிவபுராவை அடைந்து லாலா பிரபுதயாளின் மாளிகை வாசலில் போய் நின்றது.

பிரபுதயாளுடைய மாளிகைக்கு அக்கம் பக்கத்தில் எல்லாமே அமைதி நிறைந்திருந்தது. ராதாகிருஷ்ணர் கோயிலில் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. மாளிகையின் வாசலில் காவல்காரர்களைத் தவிர வேறொருவரும் இல்லை. சிவபுராவில் பிரபுதயாளின் வீட்டில் இந்த தடவை ஹோலி கிடையாது. வேலையாட்களில் அநேகம் பேர் விடுமுறை பெற்று தம்தம் உறவினர்கள் வீட்டிற்கு ஹோலி கொண்டாடப் போய்விட்டனர். ஓரிரண்டு பேர்கள் மட்டும் ஆங்காங்கே உட்கார்ந்துகொண்டு தூங்கி வழிந்துகொண்டிருந்தனர். ஜ்வாலா பிரஸாத் திரும்பிப் போய்விடலாமா என்று நினைத்தார். ஹோலி பண்டிகை அன்று அவர் ஜயதேயீயின் வீட்டுக்கு வந்தது தவறுபோலும். ஆனால் அடுத்த கணமே அவருடைய உள்ளத்தில் யாரோ சொல்வதுபோலிருந்தது: "ஆனல், நீ ஹோலி கொண்டாட வரவில்லையே? பர்ஜோர் சிங்கின் மனைவி மக்களுடைய சிக்கலைப் போக்க அல்லவா நீ வந்திருக்கிருய்?"

ஜ்வாலா பிரஸாத் தாம் வந்திருக்கும் செய்தியை ஜயதேயீக்குச் சொல்லியனுப்பினர்.

ஜயதேயீ தன் அமளியில் படுத்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்துக்கு முன்தான் அவள் தூக்கம் விழித்தாள். ஆனல் அவளுடைய உடலில் தூக்க மயக்கம்

இன்னும் அகலவில்லை. ஜ்வாலா பிரஸாத் வந்திருக்கிருர் என்ற தகவலைக் கேட்டு அவளுடைய தூக்க மயக்கம் எங்கோ பறந்துவிட்டது. ஒருவகை உல்லாச உணர்ச்சியோடு அவள் எழுந்தாள். வேலைக்காரனை விட்டு அவள் ஜ்வாலா பிரஸாதை மாளிகையின் உட்புற அறையில் அமரச் செய்தாள். பின்னர் ஆடைகளைச் சீர்படுத்திக்கொண்டு ஜ்வாலா பிரஸாதின் முன் போய்த் தோன்றினாள். சலவை செய்த வெண்ணிறச் சேலை உடுத்து, எவ்வித ஆபரணமோ, அலங்கரிப்போ இல்லாமல் இருந்தாள். அவள் முகத்தில் புன்னகையைத் தேக்கிச் சொன்னாள்: "ராம், ராம் மைத்துனரே! உங்களுக்கு எவ்வளவு கருணை. ஹோலி அன்று உங்கள் அண்ணியை மறக்கவில்லை." அவள் ஜ்வாலா பிரஸாதுக்கு எதிரில் சிறிது தள்ளி உட்கார்ந்துகொண்டாள்.

ஜயதேயீ எளிய உடையில் எவ்வளவு கவர்ச்சிகரமாகத் தோற்றமளித்தாள்! அதிலும் அவளுடைய அந்த மோகனப் புன்னகை எவ்வளவு வசீகரமாக விளங்கியது. ஜ்வாலா பிரஸாத் பேசுவார் என்று சிறிது எதிர் பார்த்திருந்துவிட்டு, ஜயதேயீ மேலே தொடர்ந்தாள்: "என்ன மைத்துனரே! ஏன் இந்தமாதிரி என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? பெரும் சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே? ஹோலி கொண்டாட்டக் களிப்பு நன்ருக உறைந்துவிட்டது போலும்?" அவள் உரக்கச் சிரித்தாள். "என்ன செய்வது? இந்தத் தடவை இங்கே ஹோலி கொண்டாட்டம் கிடையாது. இல்லாவிடில் நான் உமக்குக் குடிக்க மது கொடுத்திருப்பேன்!"

இப்போது ஜ்வாலா பிரஸாதின் மௌனம் கலைந்தது. "வேண்டாம் அண்ணி. நான் குடிப்பதற்காக வரவில்லை. அப்படிப் பார்க்கப்போனல் நான் இன்று நாள்

முழுவதும் மது குடித்துக்கொண்டே இருந்தேன். இப்போது உன்னிடம் நான் ஒரு காரியமாகவே வந்திருக்கிறேன்."

ஜயதேயீ சிறிது ஊடல் கொண்டு கூறினாள்: "மைத்துனரே! நீர் வந்தபோதெல்லாம் இந்த வேலையின் ரோதனைதானா? அப்படியானால் இங்கு வரவேண்டிய அவசியம்தான் என்ன? சொல்லியனுப்பினால் போதுமே, எல்லாம் நடந்துவிடுகிறது! நான்தான் சொல்லி விட்டேன், நீர் சொல்வது எனக்குத் தடுக்க முடியாத தென்று. சரி, சொல்லுங்கள் என்னவென்று. ஆனால் சிரித்துச் சொல்லுங்கள்! இம்மாதிரி ஆழ்ந்த சிந்தனையில் அல்ல!"

ஜ்வாலா பிரஸாதுக்கு இப்போதுதான் சற்று அதிகப் படியாக ஆழ்ந்த சிந்தனை கொண்டிருந்ததாகத் தோன்றியது. புன்னகை செய்ய முயன்றுகொண்டே சொன்னார்: "அண்ணி! நான் பர்ஜோர் சிங்கின் நிலத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். அந்த நிலம் அவனுடைய குழந்தைகளுக்குக் கிடைக்காதா? அவர்கள் முற்றிலும் அனாதைகள் ஆகிவிட்டார்கள்!"

ஜயதேயீ கூறினாள்: "உமக்குத்தான் சட்டம் என்ன என்று தெரியுமே மைத்துனரே! நான் எப்படி அந்த நிலத்தைக் கொடுப்பது? அவர்கள் கடன் தொகையைக் கொடுத்துவிட்டால், ஒருவேளை.... இந்தச் சட்டமெல்லாம் உமக்குத்தான் விளக்கம்! ஒருவேளை இப்போதுகூட அவர்களுக்கு நிலம் கிடைத்துவிடக்கூடும். ஏனென்றால், நான் இன்னும் அதைச் சுவாதீனம் செய்துகொள்ள வில்லை."

"ஆனால் அண்ணி, அவர்களிடம் இந்தக் கடனை அடைக்க அவ்வளவு பணம் ஏது? என்னிடமும் இல்லை. இருந்தால் நானே அவர்களுக்குப் பணத்தைக்

கொடுத்திருப்பேன்."

ஜ்வாலா சிறிது உணர்ச்சி ததும்பச் சொன்னார்.

ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தாள். அவளுடைய கண்கள் ஜ்வாலா பிரஸாதின் கண்களோடு சில விநாடிகள் வரை பிணைந்து கிடந்தன. பிறகு திடீரென ஜயதேயீ எழுந்து நின்றாள். "இதோ வந்து விட்டேன் மைத்துனரே!" என்று கூறி விரைவாக அவள் அங்கிருந்து அகன்றாள்.

ஜ்வாலா பிரஸாதுக்கு ஜயதேயீயின் இந்தச் செயல் ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஜ்வாலா பிரஸாத் முழு விவரத்தைச் சொல்லவே இல்லை. அதற்கு அவள் அவகாசமே அளிக்கவில்லை. அவளிடம் விஷயத்தை எப்படி விளக்கமாகச் சொல்லுவது என்று அவர் சிந்தனை செய்யலானார். இதற்குள் ஜயதேயீயின் பணிப் பெண் வந்து சொன்னாள்: "எசமான்! நம்பர் தாரிணி உங்களை அவங்க அறைக்கு வரச் சொல்லுறாங்க!"

ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயின் அறைக்குச் சென்றார். இதற்குள் பணிப் பெண் அங்கிருந்து சென்றுவிட்டாள். ஜ்வாலா பிரஸாத் கண்டது என்ன? ஜயதேயீயின் தோற்றமே மாறியிருந்தது. அவள் உடலில் ஆபரணங்கள் அழகுகொண்டு விளங்கின. விலையுயர்ந்த சரிகை வேலைப்பாடு கொண்ட பாவாடையொன்றை அணிந்திருந்தாள். மேலே பட்டுத் தாவணி போட்டுக் கொண்டிருந்தாள். அவள் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்துச் சொன்னாள்: "மைத்துனரே! சரியாக ஹோலி அன்று நீர் ஹோலி பற்றவைக்க வந்தீர்கள். அப்படியானால் நீர் உம் அண்ணியோடு ஹோலி விளையாடவும் வேண்டும், அண்ணியிடம் விளையாட்டைப் பெறவும் வேண்டும்." இதைச் சொல்லிவிட்டு அவள் ஜ்வாலா

பிரஸாதின் எதிரே தங்க நாணயங்கள் நிறைந்த ஒரு பையை வைத்தாள். "மைத்துனரே! இந்த நூறு தங்கக் காசுகளை எடுத்துக்கொண்டு நான் ஒரு முறை உம்முடைய வீட்டுக்கு வந்திருந்தேன். அப்போது நீர் ஒரு ஆபீஸர். நீர் இதை 'லஞ்சம்' என்று நினைத்து வாங்க மறுத்தீர். இன்று நான் உமக்கு நூறு தங்கக் காசுகள் கொடுக்கிறேன். ஆபீஸருக்கல்ல, என் மைத்துனருக்கு! இன்று நீர் மறுக்க முடியாது. இனி மேல் எப்போதும் உம்மிடம் பணம் கிடையாது என்று சொல்ல வேண்டாம். என்னிடம் இருப்பதெல்லாம் உம்முடைய உடமை! இதைச் சொல்லி அவள் கைப்பிடி நிறைய 'குலாலே'—சிவந்த வர்ணப் பொடியை அள்ளி ஜ்வாலா பிரஸாதின் முகத்தில் பூசினாள்.

தங்க நாணயங்கள் நிறைந்த பையைக் கையில் தாங்கி ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயின் அறையினின்று வெளிப் பட்டார். அப்போது மாலை நேரம் ஆகிவிட்டிருந்தது. சந்திரன் உதயமாகிக்கொண்டிருந்தான். மாளிகையின் வாயிற்புறத்தில் மக்கள் ஹோலிப் பாட்டுகளும், ஹோலி பண்டிகையில் வழக்கமாகப் பாடும் வசவுப் பாட்டுகளும் பாடியவண்ணம் போய்க்கொண்டிருந்தனர். ஜயதேயீயின் பணியாள் அவரை மாளிகையின் தலைவாசல்வரை கொண்டுவந்து விட்டான். தலைவாசலில் ராதாகிருஷ்ணர் கோயிலின் கதவுகள் திறக்கப்பட்டுவிட்டன. ஆரத்தி ஆகிக்கொண்டிருந்தது. ஜ்வாலா பிரஸாதுக்கு ஸ்வாமியைத் தரிசிக்கும் துணிவு இல்லாமல் போய் விட்டது. அந்தப் பணியாள் அவரைப் பார்த்துச் சிரித்தது ஏளனம் செய்வதுபோல அவருக்குத் தோன்றியது. அவர் கையில் காசுப் பை இருந்தது. கால்கள் தள்ளாடின. அவருடைய மனதில், கண்களில், உடலில் ஒருவகையான எரிச்சல் தோன்றியிருந்தது.

அவர் சீக்கிரமாகத் தன் 'இக்கா' வண்டியில் ஏறி உட்கார்ந்தார். காடம்பூரை நோக்கி 'இக்கா' விரைந்தது!

7

மீர் சகாவத் ஹுஸேன் டாகுர் கஜராஜ் சிங்கின் வீட்டில் நடைபெற்ற விருந்துக்கு வந்தது ஜ்வாலா பிரஸாதுக்கு வியப்பையளித்தது. அவர் மீர் ஸாஹபை நோக்கிக் குனிந்து 'சலாம்' தெரிவித்தார். "ஹுஜூர். நீங்கள் இன்று உங்களுடைய நியமத்தை விட்டு விட்டாற்போல் இருக்கிறது. டாகுர் கஜராஜ் சிங்கினுடைய பெரும் பாக்கியம்தான் ஹுஜூர், விருந்தில் கலந்துகொள்ள வந்தீர்கள்."

மீர்ஸாஹப் புன்சிரிப்புடன் சொன்னார்: "தம்பி, நியமம், விரதம் என்பதெல்லாம் மீறவேண்டும் என்றே எடுத்துக் கொள்ளப்படுபவை! கஜராஜ் சிங்கினுடைய சம்பந்தி ராஜா சந்திரபூஷண் அவர்கள் அன்பழைப்பு விடுத்த போது அதை நான் எப்படி மறுக்க முடியும்? இந்த கஜராஜ் சிங்கின் மதிப்புப்போலத்தானே என் மதிப்பும்?" பிறகு அவர் ராஜா சந்திரபூஷண் சிங்கின் பக்கம் திரும்பினார். "ராஜா ஸாஹப்! இவன் நல்ல குணமான பிள்ளை! இங்கு இவன் உதவி தாசில்தாராகி வந்துள்ளான். எனக்கு வலது கை போன்றவன், புத்திசாலி. பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்தவன். இந்த இலாக்காவின் எல்லா வேலைகளையும் இவன் பொறுப்பில் விட்டு வைத்திருக்கிறேன். எங்கிருந்தும்

எந்தவிதமான புகாரும் வரவில்லை.

நவம்பர் மாதம் நடந்துகொண்டிருந்தது. குளிர் தொடங்கிவிட்டது. ராஜா சந்திரபூஷண் சிங் அலகாபாத் சென்றுவிட்டு அங்கிருந்து கான்பூர் வழியாகத் தன் இலாக்காவுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார். டாகுர் கஜராஜ் சிங்கின் அழைப்பைப் பெற்று அவர் ஒரு வாரத்திற்கு காடம்பூர் வந்திருந்தார். அவர் வந்திருக்கும் மகிழ்ச்சியில் டாகுர் கஜராஜ் சிங் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ராஜா சந்திரபூஷண் சிங் இப்போது கவனமாக ஜ்வாலா பிரஸாதை நோக்கினர். அவருடைய கண்கள் மது மயக்கத்திஞல் சிவந்திருந்தன. ஒருவகை மறை பொருள் பொதிந்த புன்னகையுடன் அவர் மீர் ஸாஹபுக்குச் சொன்ஞர்: "இவரைச் சந்தித்திருக் கிறேன், மீர் ஸாஹப்! மேலும் அதைவிட அதிகமாக இவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். நல்லவராக இருப்பதோடு நீதியையும் விரும்புகின்றவர். கடமையை நிறைவேற்றுவதில் மிகுந்த உற்சாகம் கொண்டவர்.', பிறகு அவர் ஜ்வாலா பிரஸாதுக்குச் சொன்ஞர்: "நீங்கள் இங்கேயே இருந்தும்கூட நான் உங்களைக் கவனிக்கவேயில்லை. நீங்கள் மதுவை மறுக்கமாட்டீர்கள் என நான் நினைக்கிறேன். இந்தாருங்கள், நீங்களே கோப்பையில் ஊற்றிக்கொள்ளுங்கள். முன் தடவை பர்ஜோர் சிங் உங்களுக்காக ஊற்றிஞன். அதற்கு அவனுக்குக் கிடைத்த பரிசை நினைக்கும்போது உங்களுக்கு மது ஊற்ற எனக்குப் பயமாயிருக்கிறது." இதைச் சொல்லிவிட்டு ராஜா சந்திரபூஷண் சிங் வாய்விட்டு உரக்கச் சிரித்தார்.

பேச்சு கசப்பாக மாறுவதுபோல் கஜராஜ் சிங்குக்குப் பட்டது. ஜ்வாலா பிரஸாதைப்பற்றி உண்மையை

அறியாது, வேண்டுமென்றே அவமதிப்பு நிறைந்த பேச்சு பேசப்படுகின்றது எனத் தெளிவாகத் தெரிந்தது. அவர் தன் கையில் இருந்த வெள்ளிக் கோப்பையில் மதுவை ஊற்றி ஜ்வாலா பிரஸாதின் பக்கமாக நீட்டியவாறே சொன்னார்: "ராஜா ஸாஹப், நீங்கள் உதவி தாசில்தார் அவர்களைப் பற்றிச் சிறிது தப்பபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள். உதவி தாசில்தாருடைய தயவினால் தான் பர்ஜோர் சிங்கின் மனைவி மக்களுக்கு அந்த நிலம் திரும்பவும் கிடைத்துள்ளது."

மீர் சகாவத் ஹுஸேன் இந்தக் காட்சியைச் சிறிது விலகியிருந்தபடியே கவனித்து வந்தவர் இப்போது துணுக்குற்றார். "ஜ்வாலா பாபூவின் தயவால் பர்ஜோர் சிங்கின் மனைவிக்கு அந்த நிலம் திரும்பக் கிடைத்து விட்டதா? இதைப் பற்றி எனக்குத் தெரியவே தெரியாதே! இதெல்லாம் எப்படி நடந்தது? என்ன என்ன நடந்தது? கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்களேன்."

ஜ்வாலா பிரஸாத் இந்த விஷயத்தைத் தவிர்க்க முயன்றார். "ஒன்றும் இல்லை. எனக்கும் இதைப்பற்றி நினைவு இல்லாமல்போய்விட்டது. மிகவும் சாதாரணமான சின்ன விஷயம். நான் உங்களுக்கு இதைப்பற்றிப் பிறகு கூறுகிறேன்."

ஆனால் கஜராஜ் சிங், ஜ்வாலா பிரஸாதின் பண்புகளைப் புகழ்ந்து பேச விரும்பினார்—குறைந்தபட்சம் ராஜா சந்திரபூஷண் சிங் முன்னிலையில். அதனால் ஜ்வாலா பிரஸாதைப் பற்றி ராஜா ஸாஹப் கொண்டுள்ள தவறான எண்ணம் மாறக்கூடும். ஜ்வாலா பிரஸாதின் குரலில் தோன்றிய அச்சத்தையும், சங்கோசத்தையும் டாகுர் கஜராஜ் சிங் உணர்ந்துகொள்ளவில்லை. "மீர் ஸாஹப், நான் ஜ்வாலா பாபூவிடம்

சொன்னேன், நம்பர்தாரிணி அவர்களிடம் மதிப்பு வைத்திருக்கிறாள். ஆதலால் இந்த நிலத்தை பர்ஜோர் சிங்கின் குழந்தைகள் பேரில் பட்டா செய்து கொடுக்க அவர் உதவி செய்யவேண்டும் என்று. ஜ்வாலா பாபூ பர்ஜோர் சிங்கின் மனைவிக்கு நூறு தங்கக் காசுகளைக் கொடுத்தார். அதைக் கொண்டுதான் பர்ஜோர் சிங்கின் நிலத்தின் மேலிருந்த கடன் அடைக்கப்பட்டது. உதவி தாசில்தார் அவர்கள், நம்பர்தாரிணி இந்த நிலத்தை விட்டுவிடுவதற்கு இசையச் செய்தார்கள். ராஜா ஸாஹபுக்கு இந்தச் சம்பவங்களைப்பற்றித் தெரியாது. ஆதலால்தான் அவருக்குத் தவறான அபிப்பிராயம் உண்டாகியிருக்கிறது. என்ன ராஜா ஸாஹப்! அப்படித் தானே?"

கஜராஜ் சிங் சொன்ன வார்த்தை அங்கிருந்த ஒவ்வொருவரையும் பரவசப்படுத்தியது. டாகுர் கஜராஜ் சிங் ஒரு பெரிய ரகசியத்தை வெளியிட்டார். ஒவ்வொரு நபருடைய பார்வையிலும் ஜ்வாலா பிரஸாதின் பெருமை பன்மடங்காகப் பெருகியது.

ஆனால் மீர் ஸாஹப் மௌனமாக அமர்ந்திருந்தார். அவருடைய மனதில் மகிழ்ச்சியும் இல்லை, வருத்தமும் இல்லை. அவர் வேறு ஏதோ சிந்தனையில் சிக்கி இருப்பது போலக் காணப்பட்டது. அவருக்கெதிரில் நடைபெற்றுக் கொண்டிருந்த சம்பாஷணையில் அவருக்கு ருசி ஏதும் இல்லாததுபோலத் தோன்றியது.

கஜராஜ் சிங் மீர் ஸாஹபின் உதாசீனத்தைப் போக்க முயன்றார். "தாசில்தார் ஸாஹப்! உதவி தாசில்தாரைப் பற்றி ஜனங்கள் எவ்வளவு திருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல முடியாது. இந்தச் சிறு வயதிலேயே இவர் சாதாரண மக்களிடமும், பெரியவர்களிடமும் மதிப்பைச்

சம்பாதித்துக்கொண்டுவிட்டார். சிறியவராயினும், பெரியவராயினும் எல்லாருமே இவரைப் புகழ்கின்றனர்.''

இம்முறை மீர் ஸாஹப் பேசவேண்டி இருந்தது. ''நீங்கள் எல்லாரும் ஜ்வாலா பிரஸாதிடம் இவ்வளவு பெருமதிப்புக் கொண்டுள்ளதைப்பற்றி எனக்கு மகிழ்ச்சியே. ஜ்வாலா பாபூ நன்கு நீதி வழங்குகிறார் என்பதிலும் எனக்கு மகிழ்ச்சி. அவருடைய மனம் கருணை நிறைந்தது என்பதில் மகிழ்ச்சி. ஆனால் ஜ்வாலா பாபூ இன்னும் சிறுபிள்ளை என்று நான் நினைக்கிறேன். உலக அனுபவம் இன்னும் அவருக்குப் போதவில்லை. ஆனால் இதைப்பற்றிக் குறை ஒன்றும் இல்லை. வாழ்க்கையில் நிரந்தர அனுபவங்கள் உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. அனுபவங்கள் அதிகமாக அதிகமாக அவருடைய நற்பண்புகளும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.''

மீர்ஸாஹப் கூறியதைக் கேட்டு அங்கிருப்பவர்களுக்கு வியப்பு உண்டாகியது. ஆயினும் ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை.

விருந்து முடிந்தது. மீர்ஸாஹப் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அவர் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்துச் சொன்னார்: ''தம்பி, என்னை வீட்டுவரையில் கொண்டுவிட்டுப் போ. உன்னோடு சில விஷயங்கள் பேசவேண்டும்.''

ஜ்வாலா பிரஸாதின் மனதில் ஒரு சுமைபோல் உண்டாகியிருந்தது. மற்றவர்களுக்கு மீர்ஸாஹபின் பேச்சு புரியாமல் இருக்கலாம். ஆனால் ஜ்வாலா பிரஸாதுக்கு அதில் மறைந்திருந்த பொருள் புலப்பட்டது. தான் எதற்காகப் பயந்துகொண்டிருந்தாரோ அது அந்தப் பேச்சில் வெளிப்பட்டது. அச்சம் கொண்ட உள்ளத்

தோடு அவர் மீர்ஸாஹறைப வீட்டில் கொண்டுவிடுவதற்காகச் சென்றுர்.

மீர்ஸாஹறப் வழி நெடுக மௌனமாக இருந்தார். வீடு சேர்ந்ததும் அவர் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னுர்: "தம்பி, என்னை மன்னித்துவிடு. நேரம் ஆகிவிட்டது. ஆனலும் உன்னேடு அவசியமாகப் பேசவேண்டியிருக்கிறது. ஆதலால்தான் உன்னைக் கூடவே அழைத்து வந்தேன். உனக்குத் தெரியாது. இதைப்பற்றிப் பேசாது போனல் எனக்கு இரவெல்லாம் தூக்கம் வராது. ஜ்வாலா பிரஸாதின் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. "ஹுஜூர், உடல்நலம் ஒன்றும் குறைவாக இல்லையே?"

மீர்ஸாஹறப் புன்னகை செய்தார். "என்னைப்பொறுத்த வரையில் நலம்தான். எனக்குக் கவலை உன்னைப்பற்றித் தான். உன் நலத்தைப்பற்றி விசாரிக்கத்தான் நான் உன்னை அழைத்து வந்தேன்." இதைச் சொல்லிவிட்டு மீர்ஸாஹறப் மௌனமடைந்தார்.

ஜ்வாலா பிரஸாதின் மனதில் இருந்த ஐயம் பயமாகப் பரிணமித்தது. பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு அவர் மீர்ஸாஹறப் கேட்கப்போகும் கேள்விகளுக்காகக் காத்திருந்தார். கேள்வி என்னவென்று ஜ்வாலா பிரஸாதுக்குத் தெரியும். சிறிது நேரம் மீர்ஸாஹறப் யோசனைசெய்தவண்ணம் இருந்தார். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது, சர்ச்சையை எவ்வாறு நடத்துவது என்பது புரியாதிருப்பவர்போல் தோன்றினுர். பிறகு ஒரு பெருமூச்சு விட்டு அவர் சொன்னுர்: "அப்படி என்றுல் தம்பி, நீ பர்ஜோரின் மனைவிக்கு நூறு தங்கக் காசுகள் கொடுத்தாய். பர்ஜோருக்கு எதிராக நீ வாக்குமூலம் கொடுத்து அதன் விளைவாக அவன் தற்கொலை செய்து இறந்த பிறகு நீ செய்தது ஒரு

சாதாரண மனிதன் செய்யக்கூடிய காரியம் அல்ல, தெய்வம் செய்யக்கூடிய செயல். உன்னைப்பற்றி உன் தகப்பனருக்கு உள்ள பெருமை நியாயமானதே. ஆனால் மனிதன் உண்மையாகவே தெய்வம் ஆகிவிட முடியுமா என்றுதான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். நானும் உலகத்தைப் பார்த்திருக்கிறேன். எனக்கு நீண்டகால அனுபவம் உள்ளது. ஆனால் நான் என் அனுபவத்தைப்பற்றி திருத்தம் செய்துகொள்ள வேண்டும்போல் தோன்றுகிறது.''

ஜ்வாலா பிரஸாதிடம் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. அவர் மௌனமாக இருந்தார்.

மீர்ஸாஹப் இதனைக் கூறிவிட்டு தம் கேள்வியின் முக்கியத்துவத்தைத் தாமே உணர்ந்துகொண்டு அதற்கு விடை காண முயற்சிப்பவர்போல மௌனமாக இருந்தார்.

இரவின் அந்தகாரம் அவர் முகத்தில் சூழ்ந்தது. அதே அந்தகாரம் ஜ்வாலா பிரஸாதின் உள்ளத்தில் சூழ்ந்தது, காற்றில் ஒருவித நடுக்கம் காணப்பட்டது. அந்த நடுக்கம் ஜ்வாலா பிரஸாதினுடைய ஒவ்வொரு ரோமத்திலும் போய் அடங்கியது. மங்கிய, குளிர் நிறைந்த அந்தச் சூழ்நிலையை மீர்ஸாஹபின் குரல் உடைத்தது. ''....நூறு தங்கக் காசுகள் என்பது ஒரு பெரிய தொகை. இந்தக் காசுகள் உன்னிடம் எப்படி வந்தன என்பதே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உன் தகப்பனரை எனக்குத் தெரியும். உன் குடும்பத்தைப்பற்றியும் எனக்குக் கொஞ்சம் தெரியும். நீ லஞ்சம் வாங்குவது கிடையாது என்பதும் எனக்குத் தெரியும். லஞ்சம் வாங்காத ஒருவனால் இவ்வளவு பெரிய தொகை பிறருக்குப் பரிந்துகொண்டு கொடுக்க இயலாது.

ஜ்வாலா பிரஸாத் இந்தத் தடவைகூட மௌனமாக

இருந்திருக்கலாம். ஏனெனில் மீர்ஸாஹப் தமது கருத்தைத்தான் சொன்னாரே தவிர ஜ்வாலா பிரஸாதிடம் கேள்வி ஒன்றும் கேட்கவில்லை. மீர்ஸாஹபுடைய சொற்களில் உண்மையை வெளிப்படுத்தும்படிக்கு அழைப்பு அடங்கியுள்ளதென்பதை அவர் ஸ்பஷ்டமாக உணர்ந்துகொண்டார். ஜ்வாலா பிரஸாதின் உள்ளத்தில் மறைந்து கிடந்த உண்மை வெடித்துக்கொண்டு வெளிப்பட்டது. "ஹுஜூர், அந்தக் காசுகள் என்னுடையவை அல்ல. நம்பர்தாரிணிதான் பர்ஜோரின் மனைவிக்காக அவற்றைக் கொடுத்தாள். அந்தக் காசுகளைக் கொண்டு பர்ஜோரின் மனைவி தன் நிலத்தை மீட்டுக்கொள்ள உதவியாக இருக்கட்டும் என்றே கொடுத்தாள்.

மீர்ஸாஹபின் நெற்றியில் ஒரு சுருக்கம் தோன்றியது. "என்ன? பிரபுதயாள் எந்த நிலத்தைப் பிடுங்கிக் கொள்ள நினைத்து உயிரையே விட்டாரோ, எதற்காக பர்ஜோர் சிங் தற்கொலை செய்துகொள்ள நேர்ந்ததோ, அந்த நிலத்தைத் திரும்ப வாங்கிக்கொள்ளட்டும் என்று நம்பர்தாரிணி அந்தப் பணத்தைக் கொடுத்தாள்? உலகமே விசித்திரமானது. தம்பி! இதை யாரால்தான் புரிந்துகொள்ள முடியும்? நம்பர்தாரிணி ஜயதேயீ பர்ஜோர் சிங்கின் நிலத்தைத் தானாகவே திருப்பித் தந்துவிட்டாளா? இதில் எங்கேயோ, ஏதோ ஒரு ரகசியம் மறைந்திருக்கிறது!"

மீர்ஸாஹப் ஜ்வாலா பிரஸாதின் மேல் பார்வையைச் செலுத்தினார். "தம்பி, இந்த ரகசியத்தை உன்வரையில் மட்டுமே இருக்கும்படி பார்த்துக்கொள். இது வெளிப்படக்கூடாது. உனக்குப் பெண்டாட்டி இருக்கிறாள், குழந்தை இருக்கிறது. மானம், கௌரவம் இருக்கிறது. உலகத்தில் முன்னேறவும், வெற்றி பெறவும் நீண்ட வாழ்க்கை இருக்கிறது. இந்த நிலையில் இந்த

ரகசியத்தை நீ வெகு ஜாக்கிரதையாகக் காத்துக் கொள்ள வேண்டும்."

மீர்ஸாஹுபின் ஒவ்வொரு சொல்லும் ஜ்வாலா பிரஸாதின் உணர்வில் சம்மட்டியின் அடிபோல விழுந்தது. அவருடைய முகம் பயங்கரமாக வெளிறிப் போய்விட்டது. அவர் கண்களைக் கவிழ்த்துக்கொண்டு சொன்னுர்: "ஹுஜூர்......"

ஆனல் மீர்ஸாஹுப் மேலே தொடரவிடாமல் நிறுத்தி விட்டார். "வேண்டாம் தம்பி. இனி ஒரு வார்த்தைகூட இதைப்பற்றிப் பேச வேண்டாம். மனிதன் தன் குற்றத்தை மறைக்க முற்படும்வரையில்தான் அதைக் குற்றமாகக் கருதவேண்டும். ஒருவனிடம் எப்போது தன் குற்றத்தை வெளிப்படுத்தும் துணிவு உண்டாகி விடுகிறதோ அப்போதே அது குற்றமாக இராது மாறிவிடுகிறது. ஆனல் தம்பி, ஒன்று மட்டும் ஒப்புக் கொள்ள வேண்டும். உலகத்தில் பலவகையான பலவீனங்கள் உள்ளன; குற்றங்கள் உள்ளன. ஆதலால் தான், மனிதர்கள் குற்றங்களைக் குற்றங்களாகவே கருதி அவற்றை வெளிப்படுத்தாது மறைப்பது நல்லது. இதில்தான் உலகத்திற்கு நன்மை உண்டு. அப்போது தான் மக்கள் அந்தக் குற்றங்களைத் தவிர்க்கவும், பலவீனங்களைப் போக்கிக்கொள்ளவும் முயற்சி செய்வார்கள்."

இவ்வாறு கூறிவிட்டு மீர்ஸாஹுப் மௌனமாக எதைப் பற்றியோ சிந்தனைசெய்துகொண்டிருந்தார். அவருடைய உள்ளத்தில் தோன்றிய போராட்டமானது அவருடைய முகத்தில் துளும்பியது. பிறகு அவர், தன்மனதில் அவரே விரும்பாத, ஆனல் தவிர்க்க முடியாததொரு முடிவிற்கு வந்தவர்போல ஒரு விதிர்ப்புடன் எழுந்து நின்றுர்.

"தம்பி! ஏனே தெரியவில்லை. உன்னிடம் எனக்கு

ஒருவித அன்பு தோன்றிவிட்டது. எனக்கு முன்னும் பின்னும் உலகில் ஒருவரும் இல்லை. ஆகையால் நான் என்னை அறியாமலேயே உன்னை என் சொந்த மகன் போல நினைக்கத் தொடங்கிவிட்டேன்போலும். மகனைப் பாவித்துவிட்ட பிறகு தகப்பனுடைய கடமையைச் செய்து உன்னைக் காப்பாற்றவும்வேண்டும். உன்னிடம் நல்ல பண்புகள் உள்ளன. கபடமற்ற எளிமை உள்ளது. உன்னைப் பிரிவதில் எனக்கு வருத்தமே உண்டாகிறது. ஆயினும் அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு விடுவேன். உன்னைக் காக்க ஒரே வழிதான் இருக்கிறது. அதாவது நான் உன்னை இங்கிருந்து மாற்றல் செய்து விடவேண்டும். கமிஷனர் அவர்கள் என்னிடம் பெரு மதிப்பு வைத்துள்ளார். அலாகாபாத் ஜில்லாவில் உள்ள 'ஸோராவ்' தாசீலில் தாசில்தார் அடுத்த வருஷம் பென்ஷன் பெற்றுப் போகிறார். கமிஷனரிடம் நான் உறுதியாகச் சொன்னால் அவர் உன்னை அங்கே தாசில்தாராக நியமனம் செய்யக்கூடும் என்று நினைக்கிறேன். இவ்வளவு விரைவில் உனக்குப் பதவி உயர்வு கிடைப்பதைப் பற்றிச் சிலருக்கு ஆட்சேபம் இருக்கக்கூடும். ஆனாலும் நான்தான் சொன்னேனே இது என் மகனைப்பற்றிய விஷயமென்று? நான் எப்படி யாவது கமிஷனரை ஒப்புக்கொள்ளவைக்கிறேன்."

ஜ்வாலா பிரஸாத் ஒரேயடியாக உள்ளம் வெடித்து கண்ணீர் சொரியலானார். அவருக்கு விம்மல் எடுத்து விட்டது.

"ஹுஜூர், நான் குற்றவாளி. ஆயினும் நீங்கள் என்னை உங்களை விட்டுப் பிரிக்காதீர்கள். இனிமேல் எவ்வித புகாருக்கும் இடமளிக்காதபடி நடந்து கொள்ளுவேன். இது சத்தியம்."

மீர்ஸாஹப் புன்னகை செய்தார். "தம்பி, முன்

எடுத்துவைத்த அடியைப் பின்வாங்க முடியாது. ஆதலால் என்னால் உன் உறுதிமொழிகளிலோ, ஆணைகளிலோ நம்பிக்கை வைக்க இயலாது. அன்பு மற்றும் நியாயம் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டி வந்தபோது நியாயத்தைத்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். இது நீ அறிந்ததே! ஆனால் அந்த நியாயமும் அன்பு நிறைந்ததாக இருக்கவேண்டும். நீ இங்கிருந்து போவது பதவி உயர்வு பெற்றுத்தான்."

"எனக்கு நீங்கள் எந்தத் தண்டனையும் கொடுங்கள்."

"உனக்குத் தண்டனைதான் கொடுத்துக்கொண்டிருக் கிறேன் தம்பி! காடம்பூரில் இலாக்காதார் பதவியை விட ஸோராவில் தாசில்தார் பதவி தாழ்ந்ததுதான்." மீர்ஸாஹப் இதைச் சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தார்.

அடுத்த நாள் காலை முன்ஷி சிவலால் ஜ்வாலா பிரஸாதின் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டார். ஜ்வாலா பிரஸாத் கவலைகொண்டு ஆழ்ந்து உட்கார்ந் திருந்தார். இரவு சிவலாலுக்குத் தூக்கம் நன்றாக வரவில்லை. கஜராஜ் சிங்கின் விருந்தில் அவர் தன் பிள்ளையைப்பற்றி ஆமோதம் தெரிவித்தாரே தவிர, தம்முடைய பிள்ளை யாருக்கும் நூறு தங்கக் காசுகளைத் தானமாக அள்ளிக் கொடுக்கும் தவற்றைச் செய்வான் என்பது முன்ஷி சிவலாலுக்குப் பொறுக்க முடியவில்லை. அவர் ஜ்வாலா பிரஸாதை இதுவரை நன்னடத்தை யுள்ளவனாகவும், நம்பிக்கையுள்ளவனாகவும் கருதி வந்தார். ஆனால் ஜ்வாலா பிரஸாத் பர்ஜோர் சிங்கின் மனைவிக்கு நூறு தங்கக் காசுகளைக் கொடுத்தான் என்ற தகவலைக் கேட்டு முன்ஷி சிவலாலுடைய மனதில் சந்தேகம் என்ற பூதம் தலைவிரித்தாடியது. இரண்டு மாதத்திற்கு முன்தான் அவர் ராதேலாலுக்காக நிலம்

வாங்குவதன் பொருட்டு ஜ்வாலா பிரஸாதிடம் இருநூற்றைம்பது ரூபாய் கேட்டார். ஆனால் ஜ்வாலா பிரஸாத் தம் வரவு செலவுக் கணக்கைக் காட்டி அவ்வளவு ரூபாய் கொடுக்க இயலாமையை வெளிப் படுத்தினார். இரவு நூறு தங்கக் காசுகளைப்பற்றிக் கேட்டது முதல் அவருக்குக் கஷ்டமாக இருந்தது. அவருடைய பிள்ளை மிக்க குணசாலி, நேர்மையுள்ளவன் என்று அவர் நினைத்திருக்க, அவன் அவரிடமே தன் செயலைப்பற்றி மறைக்கிறானே ?

தந்தையின் முகபாவத்தைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத் ஆதுரம் அடைந்தார். சிவலால் சொன்னார்: "பர்ஜோர் சிங்கின் மனைவிக்கு நீ நூறு தங்கக் காசுகளைக் கொடுத்தாய் என்ற செய்தியை நேற்று இரவு கேட்டபோது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ராதே நிலம் வாங்க விரும்பினான். மொத்தம் இருநூற்றைப்பது ரூபாய் காரியம். ஆனால் நீ அடியோடு இல்லை எனக் கையை விரித்துவிட்டாய்."

ஜ்வாலா பிரஸாத் நடுங்கும் குரலில் அவருக்குப் பதிலளித்தார்: "அந்தப் பணம் என்னுடையதல்ல. "வீட்டுக் கணக்குத்தான் உங்களிடம் இருக்கிறதே ? நான் சம்பளம் முழுவதையுமே உங்கள் கையில் கொண்டு வந்து கொடுத்துவிடுகிறேனே ?"

முன்ஷி சிவலால் மேலும் சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். "ஆமாம், சம்பளம் என்னவோ முழுவதையும் நீ என்னிடமே கொண்டுவந்து கொடுத்துவிடுகிறாய். ஆனால், அந்த மேல் வரும்படி எங்கே போகிறது ? நீ மேல் வரும்படி ஒன்றும் சம்பாதிப்பதில்லை என்றே நான் இதுவரை நினைத்து வந்தேன். நான் நினைத்தது தவறு என்று தெரிகிறது. இப்போதுதான் எனக்கு எல்லாம் புரிகிறது."

ஜ்வாலா பிரஸாதின் குரல் தடைபட்டது. "நான் சொல்லுவது உண்மை. எனக்கு மேல் வரும்படி ஒன்றும் கிடையாது. அந்த நூறு காசு என்னுடையதல்ல. நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். ஒரு பைஸா லஞ்சம் வாங்குவதுகூட பாவம் என நினைக்கிறவன் நான்."

முன்ஷி சிவலாலுக்குச் சிறிது குழப்பமாக இருந்தது. கணநேரம் யோசித்துக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு கடுமையான குரலில் அவர் சொன்னார்: "அப்படியானால் அந்த ரூபாய் யாருடையது? அந்தத் தொகையைக் கொடுத்தது நீதான் என்று உலகமே நினைக்கிறது. இந்தக் கலியுகத்தில் யாரப்பா அப்படிப்பட்ட அன்பன் ஒருவன் தோன்றியிருக்கிறான்? கொஞ்சம் நானும்தான் அவனுடைய பெயரைத் தெரிந்துகொள்ளுகிறேனே?"

ஜ்வாலா பிரஸாத் இப்போது விருப்பத்திற்கு மாறாக பதில் சொல்லத்தான் வேண்டிவந்தது. யாருக்கும் தெரிய வேண்டாம். நீங்கள் கட்டாயப்படுத்துவதனால் சொல்லுகிறேன். அந்த ரூபாய் நம்பர்தாரிணி ஜயதேயீ பர்ஜோர் சிங்கின் மனைவிக்கு அவள் கடனை அடைத்து தன் நிலத்தை மீட்டுக்கொள்ளட்டும் என்று கொடுத்தது." முன்ஷி சிவலாலுடைய முகத்தில் படர்ந்திருந்த நிழல் திடீரென அகன்றுவிட்டது. அவருடைய கண்கள் மகிழ்ச்சியினால் மின்னலிட்டன. "ஓ! இப்போது புரிந்துவிட்டது. நான் நம்பர்தாரிணி ஜயதேயீயைப் பற்றி நினைக்கவேயில்லை. அப்படியானால் அவள் நீ சொன்னதனால்தானே பர்ஜோர் சிங்கின் மனைவிக்கு இந்த ரூபாயைக் கொடுத்தாள்? இப்படி நான் நினைப்பது சரிதானே?"

ஜ்வாலா பிரஸாதுக்கு மீண்டும் உண்மையைச் சொல்ல வேண்டிவந்தது. "ஆமாம், உலக விவகாரத்தை அறிவதில் நீங்கள் தவறிழைக்கமாட்டீர்கள்!"

உண்மையை அறிந்து முன்ஷி சிவலாலுடைய முகபாவம் மாறிவிட்டது. புன்முறுவல் பூத்துச் சொன்னார்: "குழந்தை ஜ்வாலா! உனக்கு அதிர்ஷ்டம் வந்து விட்டதப்பா! மிகப் பெரிய மீனை வலையில் சிக்கவைத்து விட்டாய்! இனிமேல் இந்தமாதிரி பிறருக்குப் பணம் கொடுக்கச் செய்யமாட்டேன் என்று சபதம் எடுத்துக் கொள். உனக்கென்று சொத்து சுதந்திரம் சம்பாதித்துக் கொள். நம்பர்தாரிணி ஜயதேயியிடம் ரொக்கமும் நகையுமாகவே லட்சக் கணக்கான சொத்து இருக்கும்."

தம் தந்தை சொன்னதற்கு ஜ்வாலா பிரஸாத் பதிலொன்றும் கூறவில்லை. தம்மைக் குறித்தும், தம் தந்தையைக் குறித்தும், உலகத்தைக் குறித்தும் அவருடைய மனதில் ஒருவகையான வெறுப்புணர்ச்சி தலையெடுத்தது.

8

திரிவேணியில் ஸ்நானம் செய்துவிட்டு முன்ஷி சிவலால் தம்முடைய கூரை வேய்ந்த குடிசைக்கு வந்தார். அப்போது அவருக்கு மிகவும் களைப்பு. சின்கீ அவர் சமையல் செய்துகொள்ளுவதற்காக இடத்தைச் சுத்தப் படுத்தி 'சௌகா'—ஏற்படுத்திவிட்டு அடுப்பையும் மூட்டிவிட்டாள். பிறகு பொங்கல் செய்துகொள்ள வேண்டிய சாமான்களைப் போட்டு பாத்திரத்தை அடுப்பின் மேல் வைத்தாள்.

முன்ஷி சிவலால் அலாகாபாதில் திரிவேணியின் கரையில் செய்யக்கூடிய "கல்பவாஸம்" விரதம்

மேற்கொண்டிருந்தார். ஸோராவ் கிராமத்துக்கு வந்த பிறகு அவர் ஒவ்வொரு வருடமும் மாசி மாதத்தில் 'கும்ப' விழாவின்போது கல்பவாஸம் செய்துவந்தார். அங்கு அவருக்கு எல்லாவித வசதிகளும் கிடைத்திருந்தன. அவருடைய குடில் திரிவேணி சங்கமத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு பர்லாங் தூரத்தில் இருந்தது. அந்தக் குடில் மிகவும் சிரமப்பட்டு நேர்த்தியாக அமைக்கப்பட்டதொன்று. போதிய அளவு பெரியதாகவும், காற்றடிக்காமலும், தண்ணீர் புகாமலும் வசதியாக அமைக்கப்பட்டிருந்தது.

சுமார் அரைமணிக்குப் பிறகு சின்கீ கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுக் குடிலுக்குத் திரும்பி வந்தாள். அப்போது சிவலால் 'ரஜாயி'யைப் போர்த்துக்கொண்டு படுத்திருப்பதைப் பார்த்தாள். அடுப்பு அணைந்து கொண்டிருந்தது. அவள் சிவலாலின் தலைமாட்டுக் கருகில் வந்து சொன்னாள்: "எப்படி இருக்குது உடம்பு? ஒண்ணுமில்லியே? அடுப்பு அணைஞ்சே போச்சே? சோறு பொங்கவே இல்லைபோல் இருக்குதே? நீங்க இப்படி சோம்பேறித்தனமா இருந்தா வேலை எப்படி ஆகும்? எழுந்திருங்க. போய் அடுப்பை எரியவிடுங்க! பொங்கல் சாப்பிட்டு அப்புறமா போர்த்துப் படுத்துக்குங்க!"

முன்ஷி சிவலால் ரஜாயிக்குள் இருந்தபடியே சொன்னார்: "அட! அடுப்பை நீயே ஊதிவிடு. பொங்கல் ஆனதும் சொல்லு. நான் இறக்கி வெச்சுக்கிட்டு சாப்பிடறேன். இப்போ எழுந்திருக்க மனம் வரலே!"

"ராம ராம! நான் சமையலைத் தொடக்கூடாதே? "கல்பவாஸம்" வேறே பண்ணிக்கிட்டு இருக்கீங்க! தருமம், வெரதம் இன்னு என்னென்னுட்டு கொஞ்சம் நெனவு வச்சுக்குங்க! 'சௌகா'விலே நான் போய்

அடுப்பைத் தொட்டா அதெல்லாம் தீட்டா இல்லே போயிடும்?"

"ஆறு ஆயிட்டு போறது போ! நானே சமைச்சு சாப்பிட்டு ஓஞ்சுபோயிட்டேன்! ராதேயின் பெண்சாதியோ, அவன் மருமகளோ யாராவது வருவாங்கன்னு பார்த்தா, அதுவும் இல்லே. இதோ பாரு! பொங்கல் பண்ணி தட்டுலே பரிமாறிவிட்டு அப்புறமா என்னைக் கூப்பிடு. இப்போ வருவதற்குக் கொஞ்சம்கூட மனம் வரல்லே! இன்னைக்கு குளிர் ஒரேயடியா வாட்டுது."

முன்ஷி சிவலால் சொன்னதைக் கேட்டு சின்கீ அயர்ந்துபோய் நின்றுவிட்டாள். "நீங்க என்ன சொல்றீங்க! நான் செஞ்ச சமையலே நீங்க சாப்பிடப் போறீங்களா? நான்தான் ராவுலே ஒங்களுக்கு 'பக்கா' சமையலா பூரியும், எண்ணேலே வதக்கிய கறியுமா செஞ்சுப் போடறேனே. பகல்லே நீங்க சமையல் செஞ்சுக்கிடுங்க! சமைக்க சோம்பலா இருந்துதுன்னு பால் சாப்பிட்டுவிட்டுப் படுங்க. அப்புறம் மத்தியானமா செஞ்சுக்கிடுங்க!"

முன்ஷி சிவலால் கடுமையான குரலில் சொன்னர்: "இல்லே, எனக்கு ரொம்பப் பசியா இருக்கு. நான் சாப்பாடுதான் சாப்பிடப் போறேன். நான் உனக்குச் சொல்லறேன், பொங்கல் பண்ணிப் போடு."

சின்கீயின் கண்ணில் நீர் துளும்பியது. "உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேனுங்க! இந்தப் பாபத்தைச் செய்யச் சொல்லாதீங்க! நான் சமையலண்டே போக மாட்டேன். ஏங்கையாலே ஒங்களோட புண்ணியம் பாழாகக் கூடாது!"

முன்ஷி சிவலால் பெருங்கோபம் கொண்டுவிட்டார். அவர் திடீரென எழுந்து சின்கீயின் கன்னத்தில் ஓர்

அறை அறைந்துவிட்டார். "பெரிசா சொல்ல வந்துட்டா புண்ணியத்தைப் பற்றி! நான் சொல்லறேன், பொங்கல் பண்ணு, போ!" முன்ஷி சிவலால் மீண்டும் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்துவிட்டார்.

சின்கீ பேசாமல் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு அடுப்பங்கரைக்குச் சென்று அடுப்பை ஊதத் தொடங்கினாள். கூடவே சொல்லிக்கொண்டிருந்தாள்: "ஏ கங்கையாத்தா! நீயே எனக்கு சாட்சி! நான் இவங்க புண்ணியத்தெ பறிக்கல்லே! இவங்க மூளை தான் கெட்டுப்போயிருக்குது. இவங்க செய்யற பாவத்தெ மன்னிச்சுடு. நான் சமையல் செய்து இவங்களுக்குப் போட்டேன்னா இவங்க சாதி கெட்டுப் போகும். செய்யாமேப் போனேன்னா பட்டினிக் கிடந்து துடிப்பாரு. அதோடெகூட எனக்கும் அடி விழும்!"

பொங்கல் பண்ணிவிட்டு சின்கீ சொன்னாள்: "இந்தாங்க! பொங்கல் ஆயிடுச்சு. சாப்பிடுங்க வந்து சீக்கிரமா. மத்தியான்னம் நீங்க 'டிப்டி ஸாஹப்' கூடாரத்துக்குப் போகணுமில்லே?"

சிவலால் எழுந்து சொக்காயையும் பனியனையும் கழற்றினார். பிறகு ஒரு கம்பளிச் சால்வையைப் போர்த்திக்கொண்டு மணையின் மேல் போய் அமர்ந்தார். "கொண்டுவா சீக்கிரம். தட்டுலெ போடு. டிப்டி ஸாஹப கிட்டே போகவேண்டிய விஷயத்தையே மறந்து போயிட்டேன்!"

சின்கீ சாப்பாட்டைப் போட, சிவலால் சாப்பிட ஆரம்பித்தார். "இன்றைக்குத்தான் பொங்கல் ருசிக்குது. எனக்குச் சமைக்கத் தெரியாதபோது சமைச்சுத்தான் என்ன பயன்? இன்னும் கொஞ்சம் போடு. உருளைக் கிழங்கு மசியலும் போடு. ஆகா! என்ன ருசி!"

சின்கீ கரண்டியினால் பொங்கலை எடுத்து முன்ஷி

சிவலாலுடைய தட்டில் போட்டாள். அதற்குள் ராதே லால் குடிசைக்குள் நுழைந்தார். அவர் தனியாக வரவில்லை. அவருடன் அவருடைய மனைவியும் இருந்தாள்.

ராதேலாலையும், அவர் மனைவியையும் கண்டு சின்கீ குற்றவாளிபோல எழுந்து நின்றாள். பின்னர் மெள்ள சமையல் செய்யுமிடத்திலிருந்து நகர்ந்தாள்.

"வா ராதே! நீ சின்னவளை அழைத்து வந்திருக்கிறாய். ரொம்ப நல்லதா போச்சு. சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது எனக்கு. வீட்டில் எல்லாரும் சௌக்கியம்தானே?"

ராதேலால் பதில் சொன்னார்: "ஆம். எல்லாரும் சௌக்கியம்தான் என்று எண்ணிக்கொள்ளுங்கள். என்னத்தைச் சொல்லுகிறது? கிஷ்னூ போன இடமே தெரியவில்லை. சிலர் அவனை பனாரஸில் சில சாதுக்களோடு பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தக் கூட்டத்திலிருந்து அவன் பிறகு மறைந்து விட்டான் போலிருக்கிறது. இங்கே என்னடா என்றால்—அவனுடைய கல்யாணத்திற்கு நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவன் இருக்கும் இடமே இன்னும் தெரியவில்லை. ஜ்வாலாவிடம் ரொம்பவும் சொன்னேன். அவனாவது கிஷ்னூ இருக்கும் இடத்தைப்பற்றிக் கண்டு பிடிக்கக்கூடும் என்று நினைத்தேன். ஆனால் ஜ்வாலாவுக்கு எங்கே ஒழிவு?"

சிவலால் சாப்பிட்டுவிட்டுக் கை அலம்பிக் கொண்டிருந்தார். அவர் சொன்னார்: "ஆமாம். திருமண நாளென்னவோ தலைமேல் வந்துவிட்டது. ஆனால் நான் சொல்லுகிற ஆலோசனையை நீ கேட்கிறதானால் ஒன்று சொல்லுவேன். அவனுக்கு இப்பவே கல்யாணம் வேண்டாம். பிறர் வீட்டுப் பெண்ணை வீட்டில் கொண்டு

வந்து உட்கார வைத்துக்கொள்ளுவாய். ஆனால் கிஷ்னூ எப்படி இருப்பானோ தெரியாது. இவன் ஒரேயடியாய் ஊர் சுற்றியாகப் போய்விட்டானே ?"

முன்ஷி ராதேலாலுடைய மனைவிக்குத் தன்னுடைய பிள்ளையைப்பற்றிய அவதூறுப் பேச்சு பிடிக்கவில்லை. கண்களில் நீர் ததும்ப தொலைவிலிருந்தபடியே அவள் சொன்னாள்: "எங்க கிஷ்னூ இன்னும் அறியாத குழந்தை. யார் எப்படியெல்லாம் சொல்லி ஏமாற்று கிறார்களோ, அப்படி யெல்லாம் தடுமாறிச் செல்கிறான். கல்யாணம் ஆனபிறகு எல்லாம் சரியாகிவிடும். அண்ணா ஜ்வாலா பெரிய உத்தியோகஸ்தன். அவன் நினைத்தால் ஒரே நாளில் கிஷ்னூவைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூடும். இப்போதெல்லாம் நாங்கள் சொல்வதை ஜ்வாலா காதில் போட்டுக்கொள்ளுவதே கிடையாது. அவன் தம்பியைப் பற்றியே இப்படி உதாசீனம் செய்வது சரியா ?"

ஜ்வாலாவைப்பற்றி இப்படிக் குறை கூறுதல் சின்கீக்கு தைத்தது. "அய்யோ பாவம்! ஜ்வாலா எல்லாத்தையும் தான் செய்துகிட்டு இருக்குது! இனிமே வீடுவீடாப் போயி கிஷ்னூவெ தேடிக்கிட்டு அலையணும். இது ஒண்ணுதான் பாக்கி. நீ சொல்லறபோது அது தாசில் உத்யோகம் பண்ணனும்; நீ சொல்லறபோது கிஷ்னூவை தேடிக்கிட்டுப் போகணும்!"

ராதேலாலின் மனைவி இதைக் கேட்டுச் சீறி எழுந்தாள். "சும்மா இரு சின்கீ! பெரிசா வந்துட்டியா ஜ்வாலா வுக்குப் பரிஞ்சு பேச?"

முன்ஷி சிவலால் அடக்கமான குரலில் சொன்னார்: "நீ எதற்கு இதிலெல்லாம் தலையிடறே?" பிறகு அவர் ராதேலால் பக்கம் திரும்பினார். "ஆனால் ராதே, நீ இன்னும் சாப்பிட்டிருக்கமாட்டாய். சின்கீ! நீ போய் ஒரு சேர் பூரியும் மிட்டாயும் வாங்கிக்கொண்டு வா மிட்டாய்க்

காரனிடமிருந்து."

சின்கீ, சிவலாலுடைய எச்சில் தட்டை எடுத்துக் கொண்டிருந்தாள். "நான் இப்பவே அடுப்பங்கரையைச் சுத்தி செய்துடறேன். அதுக்குள்ளாக சின்ன அம்மா கங்கைக்குப் போய் முழுகிட்டு வருவாங்க. வந்து சமையல் செஞ்சுக்குவாங்க! கடையிலே பூரி மிட்டாய் வாங்கித்தின்னு வயிறு நிரம்புமா எங்கேயாவது?"

ராதேலால் சொன்னார்: "வேண்டாம். அடுப்பங் கரையைச் சுத்தி செய்யறது இருக்கட்டும். ரொம்ப தூரம் பிரயாணம் செய்து வருகிறோம். களைத்துப் போயிருக்கோம். கங்கையில் ஸ்நானம் செய்ய நேரமில்லை. பூரி மிட்டாய் வாங்கிக்கொண்டு வா!"

"அப்படியானால் நானே மறுபடியும் பூரியும் கறியும் செஞ்சுடறேன்." சின்கீ மீண்டும் சொன்னாள்.

இந்தத் தடவை ராதேலாலுடைய மனைவி சொன்னாள்: "ஆமாம் சின்கீ ராணீ! இப்போது அடுப்பங்கரையிலே கூட உன் ராஜ்யம் நடக்க ஆரம்பிச்சுட்டுதுபோல் இருக்கு? அண்ணாவுக்கு சோறும் பருப்பும் போட்டு அவருடைய ஆசாரத்தைக் கெடுத்தாச்சு! இனிமே எங்க முறை! இவர்தான் என்னை வீணாலே அழைச்சிகிட்டு வந்திருக்காரு! இங்கேதான் சின்கீ ராணி ரொட்டி செஞ்சு போடறாளே!"

ராதேலால் சொன்னார்: "என்னடீ சின்கீ! அண்ணா தான் கிழடு ஆகிவிட்டார். மூளையும் கெட்டுவிட்டது போலிருக்கிறது. சாதி பார்ப்பதை விட்டுவிட்டார். ஆனால் நீ எப்படி உன் கையாலே செய்த சாப்பாட்டை இவருக்குப் போடலாம்?"

சின்கீ சோகம் நிறைந்த பார்வையால் சிவலாலைப் பார்த்தாள். முன்ஷி சிவலால் சொன்னார்: "தினந் தோறும் நான்தான் சமையல் செய்துகொள்ளுகிறேன்.

இன்றுகூட இவள் சமையலுக்கு வேண்டியதெல்லாம் எடுத்து வைத்திருந்தாள். ஆனால்.... என்னத்தைச் சொல்லுவது? கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பியபோது எனக்கு உடம்பு களைப்பாக இருந்தது. இவளையே சமைக்கச் சொல்லிவிட்டேன்!" பிறகு சிறிது இருந்துவிட்டுச் சொன்னார்: "இவள் எனக்குச் சமையல் செய்து போட்டாள் என்றால் அதனால் இவள் ஒன்றும் பாவம் செய்துவிடவில்லை. இவள் கையால் செய்ததைச் சாப்பிட்டு நானும் ஒரு பாவமும் செய்யவில்லை என்று தான் நினைக்கிறேன்."

ராதேலால் தயக்கம் கொண்ட குரலில் சொன்னார்: "அது சரிதான்! ஆனால் நம் சாதிக்காரர்கள் இதைப் பாவம் என்றுதானே நினைக்கிறார்கள்? சரி, நடந்தது நடந்துவிட்டது. இனி இவள் வந்துவிட்டாள்.ஆகையால் உங்களுக்குச் சமைத்துப் போடுவாள். நீங்கள் சின்கீ கையால் செய்த சமையலைச் சாப்பிட்ட விஷயம் ஒருவருக்கும் தெரிய வேண்டாம்."

சின்கீ குற்றவாளியைப்போல செயலற்று நின்றாள். பிறகு ராதேலாலுக்கும் அவருடைய மனைவிக்கும் பூரி மிட்டாய் வாங்கி வருவதற்காகப் போய்விட்டாள். முன்ஷி சிவலால் ஆடை மாற்றிக்கொண்டு ஒரு மணி முன்னதாகவே டிப்டி ஸாஹபின் கூடாரத்திற்குக் கிளம்பிவிட்டார்.

டிப்டி கலெக்டர் டாகுர் தம்மன்சிங் திருவிழாக் கூட்டத்தைச் சுற்றிவிட்டுத் திரும்பி வந்திருந்தார். சாய்வு நாற்காலியில் அமர்ந்து அன்றைய செய்தித்தாளை வாசித்துக்கொண்டிருந்தார். அவர் எழுந்து சிவலாலை வரவேற்றார். "வாருங்கள் முன்ஷி சிவலால் ஸாஹப்! இன்று நீங்கள் மத்தியானம் இளைப்பாறவில்லை போலும்! இன்னும் மீட்டிங்குக்கு ஒரு மணி நேரம்

இருக்கிறதே?"

முன்ஷி சிவலால் களைப்புடன் எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். "என்ன சொல்லுவது? என் தம்பியும் அவன் மனைவியும் வந்திருக்கிறார்கள். ஆகவே நான் கிளம்பிவிட்டேன். அவர்கள் ஒரு விசித்திரமான சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தம்பியின் சிறியபிள்ளை கொஞ்சகாலமாக வீட்டைவிட்டு ஓடிவிட்டான். சன்யாசியாகப் போய்விட்டான் என்று கேள்வி. பனாரஸில் ஒரு சாது கூட்டத்தில் காணப்பட்டானும், ஆனால் அங்கிருந்தும் மறைந்துவிட்டான். ஒருவேளை இங்கே மாகமேளாவில் வந்திருக்கக்கூடும். அதனால் அவனைத் தேட வந்திருக்கிறார்கள் அவர்கள்."

டாகுர் தம்மன்சிங் மனதிலேயே எதையோயோசித்துக் கொண்டிருந்தார். பிறகு சொன்னார்: "என்ன வயசு இருக்கும் அவனுக்கு? அவனுடைய அடையாளங்களைப் பற்றி ஏதாகிலும் கூறமுடியுமா?"

"அதுதான்—ஒரு இருவத்தி நாலு இருவத்தி ஐந்து வயது இருக்கும். ஒற்றைநாடியான உடம்பு. நடுத்தரத்தைவிட சிறிது அதிகமான உயரம். கோதுமை நிறம், நீள முகம். நெற்றியில் அடிபட்ட தழும்பு."

"அடையாளம் என்னமோ ஒத்திருக்கிறது." டாகுர் தம்மன் சிங் தாழ்ந்த குரலில் ஏதோ தமக்குள் சொல்லிக்கொண்டார்.

"டாகுர் ஸாஹப்! விஷயம் என்ன? எதற்காக நீங்கள் அடையாளம் கேட்டீர்கள்?"

"இன்று காலை இதே அடையாளங் கொண்ட ஒரு சாது மாகமேளாவில் பெண்களைத் தொந்தரவு செய்து கொண்டிருக்கையில் பிடிபட்டான். அவன் இங்குள்ள 'கரீமன்' என்பவனிடம் இருப்பதாகப் பிறகு தெரிய வந்தது. அவனை "லாக்அப்"பில் தள்ளியிருக்கிறோம்.

பெயரும் விலாசமும் சொல்ல மறுக்கிறான். இந்த மீட்டிங்குக்காக இன்ஸ்பெக்டர் பிஷன்தயாள் வந்து கொண்டிருப்பார். அவரிடம் கேட்டால் முழு விவரமும் தெரிந்துவிடும். அவன் ஒரு கெட்ட நடத்தையுள்ள சாது காலிப்பயல்!

முன்ஷி சிவலால் கரீமன் பெயரைக் கேட்டதும் ஐயம் கொண்டார். சந்தேக நிவர்த்திக்காகக் கேட்டார்.

"நீங்க சொல்ற நபர் கிஷ்னூ ஆக இருக்க முடியாது. அவன் போய் கரீமனிடம் எப்படி இருக்க முடியும்? அவனுடைய நடத்தையைப்பற்றி ஒருவரும் ஒருபோதும் குறை சொன்னது கிடையாதே?"

டாகுர் தம்மன்சிங் சிரித்தார். "அட! இந்தப் பேச்சை விட்டுத்தள்ளுங்கள். இந்தக் காலத்துப் பையன்கள் என்ன என்ன செய்வார்கள் என்று கேட்காதீர்கள்! மீட்டிங் முடிவடைந்த பிறகு இன்ஸ்பெக்டர் பிஷன்தயாளிடம் சொல்லி அவனை இங்கேயே வரவழைக்கிறேன். நீங்களே பார்த்து அடையாளம் கண்டுகொள்ளுங்கள்."

இன்ஸ்பெக்டர் பிஷன்தயாள் அந்த சாதுவை டாகுர் தம்மன் சிங்கின் கூடாரத்துக்கு அழைத்து வந்தபோது முன்ஷி ராதேலாலும் அங்கு வரவழைக்கப்பட்டிருந்தார். அந்த சாதுவைக் கண்டதும் ராதேலால் "அடே கிஷ்னூ, இது என்னடா கோலம்? எங்களுக்கு அவமானம் உண்டாக்கி மூக்கு அறுபட வைத்துவிட்டாயே?" என்று கூவிவிட்டார்.

கிஷன்லால் தன் தந்தையைக்கண்டு அழுதுவிட்டான். "என்னைக் காப்பாற்றுங்கள் அப்பா! இவர்கள் என் உயிரை வாங்கிவிடுவார்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று சொல்லி தடுமாறித் தரையில் விழுந்துவிட்டான்.

கிஷன்லாலின் உடம்பெல்லாம் வீங்கியிருந்தது. இங்குமங்கும் உடம்பில் தோல் உரிந்திருந்தது. இரத்தமும் கசிந்துகொண்டிருந்தது. அவனைக் கண்டபடி அடித்திருந்தார்கள் என்று தெரிந்தது. இன்னும் அடி விழுவதற்கு மீதி இருந்ததுபோலும். முன்ஷிசிவலால் இன்ஸ்பெக்டர் பிஷன்தயாளிடம் சொன்னார்: " இன்ஸ்பெக்டர் ஸாஹப்! இவனை இம்மாதிரி அடிப்பானேன் ?"

" ஐயா! இந்த அடி கொடுத்ததனால்தான் கரீமன் இடத்தில் வந்து ஒரு வாரமாகத் தங்கி இருப்பதாக வெளிவந்தது. ஆனால் அதற்கு மேல் எதையும் சொல்ல மறுக்கிறான். ஆகவே நிசத்தை ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும். கரீமன் சொன்னதெல்லாம் இவனும் ஒப்பவேண்டும். ஆனால் இது பெரிய மனிதர்களுடைய விவகாரம்!" என்று சொல்லி இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

டாகுர் தம்மன்சிங் நகைத்தபடி சொன்னார்: " சரி, தந்தையின் பெயர் விலாசம் எல்லாம்தான் நிரூபணமாகி விட்டதே. காலையில் இவன் பெண்களிடம் நடந்து கொண்டதற்கும் தண்டனை, தேவையை விடச் சிறிது அதிகமாகவே கிடைத்துவிட்டது. இனி இவனை நீங்களே சமாளியுங்கள், முன்ஷி சிவலால் ஸாஹப்! ஏதாவது வேலையில் அமர்த்துங்கள் இவனை!" என்று சொல்லி டாகுர் தம்மன்லால் கிஷன்லாலின் விலங்குகளைக் கழற்றச்சொன்னார்.

சிவலால் அங்கிருந்து தம் குடிலின் அருகே வந்து சேர்ந்தார். அப்போது உள்ளிருந்து குரல்கள் கேட்டன. ராதேலாலின் மனைவிக்கும் சின்கீக்கும் வாக்குவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ராதேலாலின் மனைவி சின்கீயை பதஹ்புர் அனுப்ப விரும்பினாள். தான் இல்லாத சமயத்தில் அங்கே வீட்டைக் கவனிக்கும் பொறுப்பை சின்கீயிடம் விட எண்ணினாள். ஆனால்

சின்கீ இதற்கு ஒப்பவில்லை. அவளோ, ஜ்வாலாபிரஸாதின் மனைவி யமுனா, அவர்கள் குழந்தை கங்கா பிரஸாத் இவர்களைக் கவனித்துக்கொள்ளுவதற்காக 'ஸோராவ்' போக விரும்பினாள். ராதேலாலின் மனைவிக்குக் கோபம் அதிகமாகிவிட்டது. சிவலால் அந்தக் குடிசைக்கு அருகில் வந்தபோது ராதேலாலின் மனைவி கொடூரமான குரலில் கத்திக்கொண்டிருந்தாள். "ஆமாம்டீ! அண்ணாவோட சாதி மதம் எல்லாத்தையும்தான் பாழாக்கினே. இப்பொ எங்களோடேயே சண்டை போட ஆரம்பிச்சுட்டே! ஜ்வாலா உனக்குச் சொந்தமா போயிட்டான். அண்ணா உனக்குச் சொந்தமாயிட்டாரு. அப்படின்னா நீயே அவுங்களே பார்த்துக்கோ. நாங்க இப்போவே ஊருக்குப் போயிடறோம். உன் ராஜ்யத்தையும் சிம்மாஸனத்தையும் நீயே வெச்சுக்கோ. நீ பதஹ்புர் போவதா இருந்தாத்தான் நான் இங்கே இருப்பேன். அவரு வரட்டும். அவர் வந்ததும் அண்ணாவையும் அவரையும் வெச்சுக்கிட்டு, அவங்க முன்னிலையிலேயே ஒரு முடிவு கட்டவேணும். நீ உன்னையே மறந்திட்டே போலிருக்கு!"

ராதேலால் மனைவியினுடைய கடுமையான குரலைக் கேட்டு சிவலால் அதிர்ந்துவிட்டார். அவருடையது கூட்டுக் குடும்பம். அதில் ராதேலாலின் மனைவிதான் அதிகாரம் செலுத்தி வந்தாள். சிவலாலும் அந்த அதிகாரத்துக்குப் பழக்கப்பட்டவர். இப்போது அவருக்கு குடிசைக்குள் நுழைய தைரியம் வரவில்லை. வந்தபடியே அவர் திரும்பிவிட்டார்.

போவதற்கு இடம் இல்லாமல் அவர் மேளாவில் இங்கும் அங்கும் உலாவத் தொடங்கினார். அவருடைய மனதில் திடீரென்று ஒரு சுமை ஏறிவிட்டது. யாரோ அவருடைய பிராணனைச் சம்மட்டி கொண்டு அடிமேல்

அடியாக அடிப்பதுபோலிருந்தது. அவருக்கு உலகமே மாறிக்கொண்டிருப்பது போல் காணப்பட்டது.

மாலை நேரம். காற்று வேகமாக அடிக்கத் தொடங்கியது. வட திசையிலிருந்து வானத்தில் சிறிய மேகங்கள் மிதந்து வந்துகொண்டிருந்தன. சூழ்நிலையில் ஒருவகைக் கொந்தளிப்பு உண்டாகியது போல் தோன்றியது. முன்ஷி சிவலால் வெகு நேரம்வரை ஒருவகைக் குறிக்கோளுமின்றி வீணைகச் சுற்றிக் கொண்டிருந்தார். மாகமேளாவின் கூட்டம் வேகமாக அதிகமாகிக்கொண்டிருந்தது. அன்றைக்கு மூன்றும் நாள் மகாசங்கிராந்தி. அவரால் குளிர் பொறுக்க முடியவில்லை. கால்களை ஏதோ தடுப்பதுபோலிருந்தது. தன் விருப்பத்துக்கு மாருக அவர் தன்னுடைய குடிசைக்கு வரவேண்டியிருந்தது.

இப்போது குடிசையில் மகிழ்ச்சியின் ஆரவாரம் மிகுந்திருந்தது. சண்டை நின்றுவிட்டது. சின்கி சமையலுக்கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தாள். சிவலால் ஒருவருடனும் பேசவில்லை. மௌனமாகத் தம் கட்டிலில் போய் போர்த்துக்கொண்டு படுத்துவிட்டார். ராதேலால், அவருடைய மனைவி, கிஷன்லால், சின்கி இவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அவருக்கு இந்தக் குரல்களெல்லாம் எங்கிருந்தோ தொலைவிலிருந்து வருவதுபோலவும், மீண்டும் சிறுகச் சிறுக தூர விலகிப் போவதுபோலவும் தோன்றியது. நடுநடுவே அவர் திடுக்கிட்டு எழுவார். பேச்சு நடந்துகொண்டிருப்பினும் அது அவருக்குப்புரியாது. பேச்சு நடந்துகொண்டிருந்தது —ஆனல் அதில் அவர் மனம் செல்லவில்லை. பேச்சு நடந்துகொண்டிருந்தது—ஏனெனில் இந்தப் பேச்சுதான் விழிப்பு, வாழ்க்கை என்பதன் பொருள்போலும்! சிவலாலைத் தூக்கம் சூழ்ந்துகொண்டிருந்தது. செயலற்ற,

அமைதி நிரம்பிய தூக்கம். அந்தத் தூக்கத்தை இந்தப் பேச்சு அடிமேல் அடியாகத் தாக்கிக்கொண்டிருந்தது. பிறகு அவருக்கு அவருடைய உடம்பை யாரோ உலுக்குவது போன்று தோன்றியது. சின்கீ தலைமாட்டில் நின்றுகொண்டு சொல்லிக்கொண்டிருந்தாள். "அட! எழுந்திருங்களேன்! எம்மா நேரம் தூங்குவீங்க? பாருங்க ஜ்வாலா வந்திருக்குது. நான் சாப்பாடு தயார் செய்துட்டேன்."

ஜ்வாலாவின் பெயரைக் கேட்டதும் சிவலால் ஒரு விதிர்ப்புடன் எழுந்து உட்கார்ந்தார்.

முன்ஷி சிவலால் பார்த்தார். அவருடைய குடிசையில் ஜனத்தொகை இப்போது அதிகமாகி இருந்தது. தரை மேல் ஜமக்காளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் மேல் மெத்தைகளும், திண்டுகளும் போடப்பட்டிருந்தன. ஜமக்காளங்களில் அவர் இதுவரையில் பார்த்திராத பெண்கள் சிலர் உட்கார்ந்திருந்தனர்.

ஜ்வாலா பிரஸாத் முன்னே வந்து அவருடைய கால்களைத் தொட்டு வணங்கினர். "இவர்கள் காடம்பூரில் இருக்கும் நம்பர்தாரிணி அப்பா, அது லட்சுமீசந்தின் மனைவி. மாகமேளாவில் சங்கமத்தில் ஸ்நாநம் செய்ய வந்திருக்கின்றனர். லட்சுமீசந்த் எனக்கு எழுதியிருந்தான். நான் அவனுக்கு உங்களுடைய குடில் இங்கு அமைக்கப்பட்டிருப்பதாகவும். போதிய வசதி உள்ளதென்றும், இங்கு அவர்கள் வந்து தங்குவதால் நமக்கு எந்த வகையிலும் அசௌகரியம் இல்லை என்றும் எழுதியிருந்தேன். இன்று மாலை வண்டியில் கான்பூரிலிருந்து இவர்கள் வந்தார்கள். நான் ஸோராவிருந்து வந்து நேராக அலாகாபாத் ஸ்டேஷனுக்கு இவர்களைச் சந்திப்பதற்காகப் போய்விட்டேன். அங்கிருந்து அழைத்து வந்தேன்."

"சபாஷ் சபாஷ்" முன்ஷி சிவலால் சொன்னார். பிறகு அவர் முன்ஷி ராதேலால், கிஷன்லால், ராதேலாலின் மனைவி இவர்கள் உட்கார்ந்திருந்த பக்கம் நோக்கினார்- "ராதேயும் அவனுடைய மனைவியும் மத்தியானமே வந்துவிட்டனர். பொழுது சாயும் வேளையில் கிஷனும் வந்தான். இங்கு எல்லாம் வசதியாக இருக்கிறது. எல்லாம் பகவத் கிருபை!" சிவலால் ஒரு பொருள் பதிந்த பார்வையால் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தார்.

ஜ்வாலா பிரஸாத் தந்தையின் பார்வையில் பொதிந்திருந்த பொருளை அறிந்துகொண்டார். அவர் சொன்னார்: "நான் இப்பொழுதே ஸோராவ் போகிறேன். நாளை நின்று மறுநாள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு கங்கையில் முழுக்காட வருகிறேன். கிஷனூரவையும் சிற்றப்பாவையும் நான் என்னோடு ஸோராவ் அழைத்துச் செல்கிறேன். இவர்களோடு அங்கேயே பேசிக்கொள்ளுகிறேன்."

முன்ஷி சிவலாலுடைய மனம் இப்போது சிறிது சுமையற்றிருந்தது. "அப்படிச் செய்வது சரிதான் குழந்தை! கிஷனூவுக்கு ஏதாவது ஏற்பாடு செய்துவிடு!"

"சரி! சரி! நீங்கள் கவலைப்படாமல் இருங்கள். நானும் சிற்றப்பாவும் கலந்து ஆலோசித்து ஏதோ ஒரு வழி காண முயற்சி செய்வோம்."

சிவலாலின் மனத்தின் சுமை மேலும் குறைந்தது ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "ஒருவேளை நேற்று லட்சுமீசந்த் வந்திருக்கலாம். இங்கு அவன் மர வியாபாரத்திற்காக காண்ட்ராக்ட் எடுத்திருக்கிறானாம். ஒரு மர அறுவை யந்திரம் அமைக்கப் போகிறான். 'பர்னிசர்' தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறான். கான்பூரில் நிறைய அலுவல்களை வைத்துக் கொண்டிருக்கிறான். ஆனாலும், ஜவுளி வியாபாரம்

மட்டுமின்றி வேறு .தொழிலும் செய்ய விரும்புகிருன்,''

முன்ஷி சிவலால் வியப்படைந்ததுபோல ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தார். ''ஜ்வாலா, இந்தத் தச்சு வேலே செய்ய வேண்டுமென்று என்னமாய்த் தோன்றியது அவனுக்கு? மரியாதை கௌரவம் என்றில்லையா? தொழிலே வளர்க்கத்தான் வேண்டும் என்ருல் இங்கே ஜவுளி வியாபாரம் ஆரம்பித்திருக்கலாமே?''

ஜயதேயீ தன் முட்டாக்கைச் சிறிது அகற்றியவாறே சொன்ஞள்: ''இதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன் அப்பா. குலம், மரியாதை—இதைக்கூட கொஞ்சம் பார்க்கவேண்டாமா? ஆஞல் மைத்துனர் அவனுக்கு புத்தி சொல்லி அறிவுறுத்துவதற்குப்பதிலாக அவனே ஆமோதித்துப் பேசுகிருர். கடவுள் கிருபையிஞல் காடம்பூரில் நமக்கு நல்லதொரு இலாக்கா இருக்கிறது. சுகமாக இருக்கலாம். அரசுரிமை செலுத்தலாம். அது இல்லே. நம்நாடு வெளிநாடு என்று அலேந்துகொண்டு இருக்கிருன் இந்த லட்சுமீசந்த். நாக்பூர் போயிருந்தான். அங்கிருந்து அலாகாபாத் வந்தான். மரத் தொழிற் சாலேயைப் பற்றிய நினேப்பு தலேமேல் ஏறி இருக்கிறது."

ஜ்வாலா பிரஸாத் சிரித்தார். ''அப்பா, இது புதிய யுகம். யாராவது சொந்தமாகவா தச்சு வேலே செய்யப் போகிருர்கள்? அவன் ஒரு தொழிற்சாலேயைத்தான் ஆரம்பிக்கப் போகிருன். நூற்றுக் கணக்கான தச்சர்கள் அங்கு வேலே செய்வார்கள். வேலே மெஷின்களின் உதவியால் நடைபெறும். நல்ல நல்ல புதிய பாஷன்களில் சாமான்களேச் செய்யலாம். லட்சக் கணக்கில் வியாபாரம் நடைபெறும். புதிய உலகம், புதிய உருவம் பெறுகிறது.

இந்தப் புதிய உலகத்தின் புதிய உருவம் என்னவென்று முன்ஷி சிவலாலுக்குப் புரியவில்லே. ஆயினும், இந்த வார்த்தையைச் சொல்லுவது அவருடைய பிள்ளே-

அவன் புதிய யுகத்தில் வாழும் மனிதன். ஆதலால் இந்த வார்த்தை தவறானதல்ல. சிவலால் கூறினார்: "ஆமாம், அலாகாபாத் ஒரு பெரிய நகரம். நம்முடைய மாகாணத்திற்குத் தலைநகரம். கவர்னர் இங்கே இருக்கிறார்கள். இங்கே பணம் இருக்கிறது. பணமோ வியாபாரத்தில் இருக்கிறது. தொழிலில் இருக்கிறது."

ராதேலால் இந்தச் சம்பாஷணையின் இடையிலே ஏதோ மிக முக்கியமானதொன்றைச் சொல்ல வந்தவர் போல பல முறை தொண்டையைக் கனைத்துக் கொண்டார். இப்போது அவரால் பேசாமலிருக்க முடியவில்லை. அவர் பேச்சை எடுத்தார். "ஆமாம், பணம் தொழிலில் இருக்கு. பணம் வியாபாரத்தில் இருக்கு. ஆனால் இந்த வியாபாரமும், தொழிலும் இங்கிலீஷ்காரன் கையிலிருந்து தப்பினால்தானே! அலாகாபாதில் பெரிய பெரிய கடைகளும், சர்க்கார் சாமான் வாங்கக்கூடிய கடைகளும் எல்லாமே இங்கிலீஷ் காரனுடையவை. ஆகையால் ஜ்வாலா, லட்சுமீசந்த் வெள்ளைக்காரனோடு போட்டி போடவேண்டியிருக்கும். இதைத் தெரிந்துகொள். இங்கிலீஷ்காரனோடு போட்டி யிடுதல் என்பது விளையாட்டல்ல. என்ன ஜ்வாலா, நான் சொல்வதில் தப்பு இல்லையே."

ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். ராதேலால் சொன்னதில் உண்மை இருந்தது, இதில் உண்மையான பிரச்னை ஒன்றும மறைந்திருந்தது. அவர் பிரச்னையின் இந்த அம்சத்தைப் பார்க்கவில்லை. சிறிது நேரம் அவர் இதைப் பற்றிச் சிந்தனை செய்தார். பிறகு சொன்னார்: "ஆமாம், தொழிற்சாலைகள் இங்கிலீஷ்காரன் கையில்தானிருக் கின்றன. இந்த மரத் தொழிற்சாலை ஆபத்தில் மாட்டிக் கொள்ளலாம். நான் லட்சுமீசந்திடம் இதைப் பற்றிப் பேசுகிறேன். பிரச்னையின் இந்தக் கோணத்தைப் பற்றி

நான் யோசிக்கவில்லை. ஆனால் லட்சுமீசந்தோ, கல்கத்தா, பம்பாய் எல்லா இடமும் போய் வந்துள்ளான். அவன் இதைப்பற்றிக் கட்டாயம் யோசித்திருப்பான்.

ராதேலால் தனது யோசனையைப் பற்றி மனதிற்குள்ளேயே மகிழ்ந்துகொண்டிருந்தார். "வெளிநாட்டு மரத்தோடு நாட்டில் செய்யும் மரச் சாமான் எவ்வாறு போட்டி போட முடியும்? வெளிநாட்டிலிருந்து மரச் சாமான் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே நம்பர்தாரிணி அம்மா, லட்சுமீசந்துக்கு நீங்கள் அறிவுறுத்துங்கள். இல்லையேல் உங்கள் மருமகளைக் கொண்டு கட்டாயப்படுத்தி சொல்லச் செய்யுங்கள். இந்தத் தொழிற்சாலை விவகாரத்தில் லட்சுமீசந்த் தலையிட வேண்டாம்."

நம்பர்தாரிணி ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதுக்குச் சொன்னாள்: "மைத்துனரே, நாளை நின்று லட்சுமீசந்த் வருகிறான். அப்போது நீங்கள் அவனுக்குச் சொல்லுங்கள். நாங்கள் சொல்வதையெல்லாம் அவன் எளிதாகத் தூக்கியெறிந்துவிடுகிறான். உங்கள் பேச்சைத் தான் அவன் கேட்பான்."

ஒரு மூலையில் லட்சுமீசந்தின் மனைவி உட்கார்ந்திருந்தாள். அவள் இந்தச் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சில வார்த்தைகள் அவளுக்குப் புரிந்தன. சில புரியவில்லை. ஆனால் தன் கணவனைப் பற்றிக் குறை கூறுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் தன் மாமியின் காதில் சொன்னாள்: "அம்மா, இரவு நேரமாகிவிட்டது. சாப்பாட்டுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யட்டுமா?"

ஜயதேயீக்கு இப்போதுதான் தான் உணவு சாப்பிட வேண்டியிருக்குமென்பது நினைவுக்கு வந்தது. அவள் மருமகளிடம் சொன்னாள்: "ஆம், ஆம். பூரி தயார் செய்து

விடு. சின்கீ உதவியாக இருப்பாள்.” பிறகு அவள் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னுள்: “மைத்துனரே! நீங்கள் சாப்பிட்டுவிட்டு ஸோராவ் போகலாம். இல்லையேல் நாளைக்குக் காலை போகலாம். இப்போது கிளம்பினுல் நீங்கள் போய்ச் சேரும்போது நடு ராத்திரி ஆகிவிடும். குளிர் அதிகமாக இருக்கிறது. மிகவும் கஷ்டமாக இருக்கும்.”

“அட! கஷ்டத்தைப் பற்றி என்ன கவலை நம்பர் தாரிணி? நாங்கள் மூன்று பேர் இருக்கிருேம். ஜ்வாலாவினுடைய ‘இக்கா’ வண்டி இருக்கிறது. ஆகவே, இப்போதே கடையிலிருந்து பூரி, மிட்டாய் வருகிறது. மருமகளுக்கு ஏன் சிரமம் கொடுக்கிறீர்கள்?” இவ்வாறு ராதேலால் சொன்னுர்.

சிவலால் சின்கீயின் பக்கம் பார்த்தார். அவள் மீண்டும் அடுப்பை மூட்டிக்கொண்டிருந்தாள். “இதோ பார், இரண்டு சேர் பூரியும், இரண்டு சேர் நல்ல மிட்டாயும் வாங்கிக்கொண்டு வா. ஜ்வாலா சீக்கிரம் புறப்பட வேண்டும்.”

சின்கீ சிறிது உரக்கச் சொன்னுள்: “பணம் என்ன வெள்ளமாவா வந்துகிட்டிருக்கு? எப்போ பார் பூரி, மிட்டாய் வாங்கியாரது! நான் அடுப்பு எரியவிடறேன்! இவங்க சாப்பாடு செய்திடுவாங்க! பாதி ராத்திரியிலே நான் ஜ்வாலாவைப் போக விடமாட்டேன். இத்தெ தெரிஞ்சுக்கோங்க. எழுந்திரு பெண்ணே!”

9

சின்கீ கங்காவுக்குக் கதை சொல்லிக்கொண்டிருந்தாள். "ஒரு ராஜா. அந்த ராஜாவுக்கு ஏழு ராணிகள். அந்த ஏழு ராணிகளுக்கு ஏழு வீடுகள். ஒவ்வொரு ராணிக்கு ஒவ்வொரு பிள்ளை...."

அப்போது ராதேலாலுடைய மனைவி வந்து சொன்னாள்: "சின்கீ, கொஞ்சம் சாமான் அறைச் சாவியைக் கொடு!"

கங்காவைத் தன் மடியில் வைத்துக்கொண்டவாறே சின்கீ பதில் சொன்னாள்: "என்ன வேணும்! இதோ கொஞ்ச நேரத்திலே வந்து எடுத்துக் கொடுக்கிறேனே."

"நான் சொல்லறேன், எனக்குச் சாவி வேணும். நான் எடுத்துக்கறேன்." ராதேலாலின் மனைவி கடுமையான குரலில் சொன்னாள்.

"உனக்கு சாமான் அகப்படாது. எல்லாத்தையும் நான் அடுக்கி வெச்சிருக்கிறேன். நீ எல்லாத்தையும் புரட்டிப் பார்க்க வேண்டியிருக்கும். எழுந்திரு குழந்தே! நான் போயி சாமான் எடுத்துக் கொடுத்திட்டு வரேன்!" சின்கீ கங்கா பிரஸாதிடம் சொன்னாள்.

ஆனால் பத்து வயது கங்காபிரஸாதின் மனம் கதையில் சிக்கியிருந்தது. அவன் சொன்னான்: "இல்லே சின்கீ பாட்டி! கதை சொல்லாமே நான் உன்னைப் போக விடமாட்டேன். பாட்டிக்கு சாவியைக் கொடுத்து விடேன்." கங்கா பிரஸாத் சின்கீயின் புடவைத் தலைப்பில் கட்டியிருந்த சாவிக்கொத்தை அவிழ்த்து ராதேலாலின்

மனைவியிடம் கொடுத்துவிட்டான். பிறகு அவன் சின்கீ யிடம் சொன்னான்: "ஆம், சின்கீ பாட்டி. ஒவ்வொரு ராணிக்கு ஒவ்வொரு குழந்தை! அப்புறம் என்ன ஆச்சு?"

சின்கீயின் மனம் இப்போது கதையில் ஓடவில்லை. அவள் கங்கா பிரஸாதின் வார்த்தையையும் கவனிக்க வில்லை. அவள் ராதேலாலின் மனைவியின் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். ராதேலாலின் மனைவி வேகமாக சாமான் அறையின் பக்கம் போய்க் கொண்டிருந்தாள். சின்கீ கங்கா பிரஸாதைத் தன் மடியிலிருந்து இறக்கிவிட்டுச் சொன்னாள்:

"இதோ வந்துடறேன் கண்ணு! அதுவரைக்கும் நீ பீக்கூவோட விளையாடிக்கிட்டிரு." சின்கீயும் சாமான் அறையை நோக்கிப் போனாள்:

ஆனால் அவள் சாமான் அறை வரைக்கும் போய்ச் சேர முடியவில்லை. முன்ஷி சிவலாலின் அறையில் முனகும் சத்தம் கேட்டு அவள் அந்தப் பக்கமாகத் திரும்பினாள்.

முன்ஷி சிவலாலின் தலைவலி அன்று மிக அதிகமாகி விட்டது. கல்பவாஸத்தின்போது அவருக்குப் பிடித்த ஜலதோஷமும் இருமலும் இன்னும் அப்படியே இருந்தது. முதலில் 'ஹக்கீம்' மருந்து கொடுத்தார். குணம் இல்லை. 'ஹக்கீம் ஸாஹப்' சொல்லுகிறபடி மதுவுக்கும் ஜலதோஷத்திற்கும் பிறவிப் பகை. வைத்தியர் பட்டினி இருக்கச் சொன்னார். அது சிவலாலுக்குப் பொறுக்காது. இப்படியே ஒரு மாதம் கழிந்துவிட்டது. ஒன்றும் நடைபெறாமல் சிவலால் டாக்டரிடம் சிகிச்சை செய்துகொள்ளவேண்டி வந்தது. இரண்டு நாளாக அவர் டாக்டருடைய மருந்தைக் குடித்துக்கொண்டிருந்தார்.

சின்கீ அவருடைய அறையில் நுழைந்து கேட்டாள்: "என்ன, வலி அதிகமாக இருக்குதா?"

சிவலால் அவளுடைய கேள்விக்குப் பதில் கூறவில்லை. அவர் முன்போலவே முனகிக்கொண்டிருந்தார்.

சின்கீ அவருடைய தலைமாட்டில் உட்கார்ந்துகொண்டு அவருக்குத் தலையைப் பிடித்துவிடத் தொடங்கினாள். இதனால் சிவலாலுக்குச் சிறிது இதமாக இருந்தது. அவருடைய முனகல் குறைந்தது. பின்னர் சிறுகச்சிறுக நின்றுவிட்டது. அவர் கண்ணைத்திறந்து பார்த்தார்.

"ஏண்டீ? நீ எங்கே போயிருந்தே?"

"கொஞ்சம் கங்காவுக்கு விளையாட்டுக் காட்டிக்கிட்டிருந்தேன். ஆனாலும் நீங்க ஏன் என்னைக் கூப்பிடலே? நான் சாமான் அறைக்கு சின்ன எசமானி பின்னாலேயே போய்க்கிட்டு இருந்தேன். உங்க குரலைக்கேட்டு அப்படியே இங்கே வந்துட்டேன்."

சிவலால் கேட்டார்: "ஏண்டீ! சின்னவ பின்னாலே எதுக்குப் போய்க்கிட்டு இருந்தே?"

"அவங்க எங்கிட்டேருந்து சாமான் அறைச் சாவியெ வாங்கிக்கிட்டு போனாங்க. நான் சொன்னேன்—பண்டம் எல்லாம் என் கையாலே அடுக்கி வெச்சது. அவங்க அதைப் புரட்டி மாத்தி வெச்சுடுவாங்க. அதுக்காக அவங்க கேட்ட சாமானை எடுத்துக் கொடுக்கலாமே இன்னு போய்க்கிட்டிருந்தேன்."

முன்ஷி சிவலால் மௌனமாக யோசிக்கத் தொடங்கினார். அதிகாரமும் சத்தியும் இடம் மாறிக் கொண்டிருந்தன. குடும்பத்தின் பரம்பரை அழிந்து கொண்டிருந்தது. அவர் மெல்லிய குரலில் சொன்னார்: "நீ சின்னவளுக்கு ஏன் சாவியைக் கொடுக்க மாட்டேங்கிறே?"

சின்கீ சீறி எழுந்தாள். "வீட்டுக்கு எசமானி

ஜ்வாலாவினுடைய பெஞ்சாதி. ஜ்வாலாவினுடைய தயவிலே தான் இந்த அரசு செல்வம் எல்லாத்தெயும் அனுபவிச்சுட்டு இருக்காங்க. ஆனால் ஜ்வாலாவின் பெஞ்சாதியோ அடிமை; எசமானி ஆனது சின்னம்மா!"

சிவலாலுக்கு பதில் சொல்ல ஒன்றும் தோன்றவில்லை. இந்த நிலைமை உசிதமில்லாதவென்று அவருக்குப் பட்டது உண்மையே. கண்ணை மூடிக்கொண்டு மனதில் யோசித்தவண்ணம் இருந்தார். பிறகு திடீரென்று கடுமையான குரலில் சொன்னார்: "இல்லை! எது ஆனாலும் ஆகட்டும். வீட்டுக்கு எசமானி சின்னவதான். இதெத் தெரிஞ்சுக்கோ! ராதேயின் பெஞ்சாதி இருக்கிற வரையில் அவள் இங்கே இருக்கிற வரையிலே இந்த வீட்டு அதிகாரம் அவள் கிட்டேதான் இருக்கும். இந்த வீட்டு விவகாரத்திலே தலையிட நீயாரு?"

இதைக் கேட்டு சின்கீ கண்கலங்கிவிட்டாள். ஆனால் அவள் பேசாமல் முன்போலவே சிவலாலுக்குத் தலையைப் பிடித்து விட்டுக்கொண்டிருந்தாள். இந்த அதட்டல், இந்த வகையான போக்கு எல்லாம் அவளுக்குப் புதியதல்ல. வாழ்க்கை முழுவதும் அனேகமாகத் தினந்தோறும் இவ்வகையான அவமானத்தையும் தாக்குதலையும் அவள் எதிர்க்கவேண்டியிருந்தது. இதெல்லாம் அவளுடைய வாழ்க்கையின் பகுதிகள் ஆகிவிட்டன. அவள் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். முன்ஷி சிவலாலுக்குத் தலையைப் பிடித்துவிட்டுக் கொண்டும் இருந்தாள். முன்ஷி சிவலாலோ, சின்கீயின் உணர்ச்சிகளைப் பற்றி ஏன் அவள் ஒருத்தி இருப்பதைப் பற்றி உணராதவர் போல அமைதியுடன் படுத்திருந்தார். அவருக்கு இதமாக இருந்தது. மனத்தில் அமைதியோடு தூங்கிவிட்டார். சின்கீ அறையிலிருந்து மெதுவாக வெளியேறினாள்.

மத்தியானம் கழிந்துவிட்டது. சமையலறையில் பூரி தயார் ஆகிக்கொண்டிருந்தது. ராதேலாலின் மனைவி எதிரில் உட்கார்ந்திருக்கும் கிஷ்னூக்குப் பூரி செய்து போட்டுக்கொண்டிருந்தாள். கிஷ்னூ சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கிஷ்னூ அன்று காலையிலிருந்தே வீட்டிலிருந்து மறைந்துவிட்டான். அவனுக்காக ரொட்டியும் பருப்பும் செய்து வைத்திருந்தது. அது ஒரு மூலையில் மூடிவைக்கப்பட்டிருந்தது. சின்கீக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவள் சமையலறையின் வாயிற்படியில் போய் நின்றுகொண்டாள். கிஷ்னூ சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். ஆனால் ராதேலாலின் மனைவியும் கிஷ்னூவும் சின்கீ என்ற ஒரு பிராணி அங்கிருப்பதே அறியாதவர்போல இருந்தனர். ஒருவரும் அவளுடைய திக்கில் கண்ணெடுத்துப் பார்க்கவே இல்லை. ஒன்றும் பேசவும் இல்லை. அங்கிருந்து அவள் ஏதோ அடிபட்டவள் போல நகர்ந்தாள். யமுனாவின் அறைக்குள் போனாள். சின்கீயைப் பார்த்து யமுனா கேட்டாள்: "எங்கே போயிருந்தே சின்கீ சித்தி? பார், கங்கா எவ்வளவு அழறான்னு! சின்கீ என்னை விட்டு விட்டு சின்ன பாட்டியின் பின்னால் போனாள் என்று சொல்றான்." சின்கீ பதில் ஒன்றும் கூறவில்லை. கங்காவைத் தன் மடியில் வைத்துக்கொண்டு யமுனாவின் கட்டிலுக்கு அருகில் கீழே பேசாமல் உட்கார்ந்து கொண்டாள். ஆனால் அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்தது.

யமுனா சிறிது நேரம் கண்கொட்டாது சின்கீயைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு திடுமென பயந்து விட்டவள்போல சொன்னாள்: "என்ன விஷயம் சின்கீ சித்தி? ஏன் அழறே? அப்பாவுக்கு உடம்பு சரியாத் தானே இருக்கு?"

சின்கீ தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெல்லிய குரலில் சொன்னாள்: "அவர் உடம்பு சரியாகத் தான் இருக்கு. ஆனா இதையெல்லாம் என்னாலே பார்த்துக்கிட்டு இருக்க முடியல்லே!"

"எதைப் பார்த்துக்கிட்டு இருக்க முடியல்லே?" யமுனா கேட்டாள்.

"சமையலறையிலே போய் நீயே பார். சுடச்சுட பூரி சுட்டாறது. கிஷ்னூ சாப்பிட்டுக்கிட்டு இருக்காரு. மத்தியானம் செஞ்ச சாப்பாடு அப்படியே மூடி வெச்சிருக்கு. அதைக் கொண்டுபோய் ஆத்துலே கொட்ட வேண்டியதுதான்."

நெய்யின் மணம் கமழ்ந்து வந்தது. யமுனா நிலைமையை அறிந்துகொண்டாள். "பண்டக அறையின் சாவி உன்னிடம்தானே இருக்கு? சித்தி என்ன நெய்யும் மாவும் கடையிலிருந்து தருவிச்சாளா?"

"கடையிலிருந்து தருவிப்பாளா சின்னம்மா? அது அவ வாய்க்குத்தான் போதுமா? என்னிடமிருந்து வலிய சாவியைப் பிடுங்கிக்கொண்டு போனாள். பதஹ்பூர் வீட்டில் அவதான் எசமானி. இங்கேயும் வந்து எசமானி ஆயிட்டா! தாறுமாறுச் செலவு செய்துகிட்டு இருக்கா. அய்யோ பாவம், ஜ்வாலா உழச்சு சம்பாதிக்குது. இங்கே கண்ட கண்ட போக்கத்தவங்க எல்லாம் வயிறு புடைக்கத் திங்கறாங்க."

யமுனாவுக்கு ஆத்திரம் பொங்கிவந்துகொண்டிருந்தது. ஆனால் அதை அடக்க முயற்சி செய்துகொண்டே சொன்னாள்: "விட்டுத்தள்ளு! சின்கீ சித்தி. அவங்க பங்கு சாப்பிட்டுவிட்டுப் போறாங்க! வெளியே கங்காவை அழைச்சுக்கிட்டுப் போய் சுத்திக்காட்டு, போ!"

"அவங்க பங்கைச் சாப்பிட்டாப் பரவாயில்லியே! கங்காவினுடைய பங்கேயில்லே திங்கிறாங்க. இந்த

கங்கா, ராஜகுமாரன். நல்லாப் படிக்கப் போருன். நிலம் நீச்சு எல்லாம் வாங்கப்போருன். பெரிய மனுஷன் ஆவப்போருன். இவன் பங்கைத்தான் இந்தச் சோம்பேறிப் பசங்க எல்லாம் திங்கருனுங்க. சின்கீ கங்காவை அழைத்துக்கொண்டு வெளியே போனுள்.

" இவர்கள் கங்காவின் பங்கைச் சாப்பிடுகின்றனர்!" யமுனு அயர்ந்துபோய்விட்டாள். சின்கீ சொன்னது ஒரு பயங்கரமான உண்மை. குரூபமான உண்மை. மறுக்க முடியாதது. அதைப்பற்றிக் கண்ணை மூடிக் கொண்டு சும்மா இருக்கவும் முடியாது. இதற்குள் ராதேலாலின் மனைவி ஒரு தட்டில் பூரியும், கறியும் எடுத்துக்கொண்டு யமுனுவின் அறைக்குள் நுழைந்தாள். "மாலை நேரத்துச் சிற்றுண்டி செய்துவிட்டேன். கிஷ்னு வுக்கு ரொம்ப பசி. காலையிலே செஞ்ச சாப்பாட்டை இந்த அகாலத்திலே சாப்பிட்டால் உடம்புக்கு ஆகாது என்று நான் இப்போ சிற்றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு, ராத்திரி சாப்பாடு சாப்பிடலாம் என்று சொன்னேன். உனக்கும் ஜ்வாலாவுக்கும் இதோ இருக்கு சிற்றுண்டி. இங்கே வைக்கிறேன்."

யமுனுவுக்கு ஒன்றும் சொல்லத் துணிவு வரவில்லை. ராதேலாலின் மனைவி, யமுனுவின் கண்களில் தோன்றிய உணர்ச்சியை ஸ்பஷ்டமாக அறிந்துகொண்டாள் போலும். அந்த உணர்ச்சியை நிராகரிக்கும் வகையில் சொன்னுள்: "நான் சாமான் அறையின் சாவியை சின்கீயிடமிருந்து வாங்கிக்கொண்டுவிட்டேன். நான் தான் இங்கே வந்துவிட்டேனே! வேலைக்காரியிடம் இதையெல்லாம் விட்டு வைப்பது தப்பு! இனிமேல் இந்த வீட்டிலே சாப்பாட்டைப் பற்றிய பொறுப்பு என்னுடையது."

யமுனுவின் வாயிலிருந்து தானுகவே வெளிவந்தது.

"ஆமாம் சித்தி! நல்ல காரியம் செய்தாய். நானும் யோசித்துக்கொண்டிருந்தேன். ஆனால் உனக்கு எதற்குச் சிரமம் என்று தோன்றியது. தவிரவும், நீ இங்கே எத்தனை நாள் இருக்கப்போகிறாய்? கடைசியில் பதஹ்பூர் வீட்டையும்தானே போய் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும்? சின்கீ எங்களுக்கெல்லாம் ரொம்ப உதவியாக இருக்கிறாள். உனக்குத்தான் தெரியுமே, அவர் எந்தக் காரியத்தையும் வேண்டாம் என்று சொல்லமாட்டார். அதனாலே நான் பண்டக அறையின் சாவியை சின்கீயின் கையில் ஒப்படைத்தேன். கடைசியில் நீ பதஹ்பூர் போன பிறகு சின்கீ சித்தி தானே வீட்டைக் கவனித்துக்கொள்ளுவாள்? ஆதலால் தான் நான் சின்கீ சித்திகிட்டேயிருந்து சாவியை வாங்கி உன் கிட்டே கொடுக்கவில்லை. நீ சாவியை வாங்கிக்கொண்டது சரிதான்."

யமுனாவின் குரல் அமைதி நிறைந்து இனிமை கொண்டதாக இருந்தது. அவள் பேசிய சொற்களில் எந்தவித எதிர்ப்போ, பிணக்கமோ இல்லை. ஆனால் அவள் இரண்டு முறை ராதேலாலின் மனைவி பதஹ்பூர் போவதைப்பற்றிக் குறிப்பிட்டது ராதேலாலின் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அந்தக் குறிப்பில் ராதேலாலின் மனைவியின் இருப்புக்கும் அதிகாரத் திற்கும் வெளிப்படையான எதிர்ப்பைக் காட்டும் போராட்டத்தின் அறைகூவல் அடங்கியிருந்தது. அந்தப் போராட்ட அறைகூவலுக்குப் பதில் அளிக்கும் வகையில் ராதேலாலின் மனைவி சொன்னாள்: "நீ அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாதே. நான் இருக்கிற வரைக்கும் உனக்கு இதையெல்லாம் நினைத்துக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. பதஹ்பூர் வீட்டைப்பற்றி ஒரு விதமாக ஏற்பாடு செய்து வரவே அவர் பதஹ்பூர்

போயிருக்கிறார். பதஹ்பூரிலிருந்து எல்லாரும் இங்கே வந்தாலும் வருவார்கள். இல்லாது போனால் ராமுவின் பெண்சாதியிடமும் சியாமுவின் பெண்சாதியிடமும் அந்த வீட்டின் பொறுப்பை விட்டு வைப்போம்." ராதேலாலின் மனைவி இதைக் கூறிவிட்டுப் போய் விட்டாள். யமுனையின் அறைகூவலுக்கு ராதேலாலின் மனைவி முகத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்லி விட்டாள். யமுனா சீற்றத்துடன் பொங்கி எழுந்தாள். அப்படி என்றால் சின்கீ சொன்னது முற்றிலும் சரிதான். கங்காவின் பிதுரார்ஜிதத்தையும், பங்கையும் அபகரிப் பதற்காகவே சித்தப்பாவின் குடும்பம் முழுவதும் இங்கு வந்து உட்காரப்போகிறது; ஜ்வாலாபிரஸாதின் தலை மேல் சுமையாக உட்காரப்போகிறார்கள்.

யமுனா பிரமை பிடித்தவள் போல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். பின்னர் அறையை விட்டு வெளியே வந்தாள். சிறிது தயங்கியபடியே முன்ஷி சிவலால் இருந்த அறையின் பக்கம் போனாள். சிவலால் தூங்கி விழித்துவிட்டார். யமுனா அறை வாயிலில் நின்று கொண்டு சொன்னாள்: "உடம்பு எப்படி இருக்கிறது அப்பா! இந்த மருந்தினால் ஏதாகிலும் குணம் தெரிந்ததா?"

சிவலால் சொன்னார்: "இப்போ கொஞ்சம் நிம்மதி யாகத்தான் இருக்கு, கடவுளுடைய கிருபை." யமுனா மேலே ஒன்றும் சொல்லவில்லை.

முன்ஷி சிவலால் மீண்டும் கேட்டார். "ஏன், ஏதாவது சொல்லவேண்டுமா?" சிறிது நேரம் முன்பு சின்கீ பேசியது அவருக்கு நினைவுக்கு வந்தது.

"சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. நான் ஏதோ கேள்விப்பட்டேன். சிற்றப்பாவின் குடும்பம் முழுவதும் இங்கு வந்து இருக்கப்போகிறதாம்! இப்போதுதான்

சித்தி சொல்லிக்கொண்டிருந்தாள். உங்களுடன் ஏதாவது பேசினார்களா?"

முன்ஷி சிவலால் இதைக் கேட்டுத் திடுக்கிட்டார். "என்ன சொன்னே? ராதேயின் குடும்பம் இங்கே வந்து இருக்கப்போகிறதா? என்னிடம் அந்த மாதிரி ஒன்றும் சொல்லவில்லையே? பதஹ்பூரில் வீடு இருக்கு, நிலம் இருக்கு, எல்லாம்தான் இருக்கு. அவர்கள் இங்கே வரவேண்டிய அவசியம் என்ன?"

ராதேலாலின் மனைவி யமுனைவுக்குப் பின்னால் வந்து நின்றுகொண்டிருந்தாள். யமுனைவுக்கு அவள் அங்கே வந்து நிற்பது தெரியாது. தெரிந்திருந்தால் இந்தப் பேச்சையே எடுத்திருக்கமாட்டாள். ராதேலாலின் மனைவி முன்னே வந்து சொன்னாள்: "உங்களுக்கு உடம்பு குணமடைகிற வரைக்கும் நாங்க இங்கே இருந்து கொண்டு பணிவிடை செய்யலாமே என்று நினைத்தோம். ராமுவும் சியாமுவும் பதஹ்பூரில் இருப்பார்கள். அவர்களுடைய மனைவிமார் வீட்டைக் கவனித்துக் கொள்ளுவார்கள். கிஷனு இங்கே இருக்கிறான். அவர் பதஹ்பூரிலிருந்து விஷ்ணுவை அழைத்துக்கொண்டு வருவார். அவனையும் ஏதாவது வேலையில் அமர்த்த வேண்டும். ஜ்வாலாதான் ஏற்பாடு செய்யமுடியும்."

ராதேலாலின் மனைவியின் கடுமையான குரலால் முன்ஷி சிவலால் உணர்வற்றவர்போல் ஆகிவிட்டார். "ஆமாம், அது சரிதான். ராதே விவேகமுள்ளவன். அவன் செய்வது சரியாகத்தான் செய்வான்."

யமுனை தோல்வியடைந்தவள்போல் வருத்தத்தோடு தன்னறைக்குச் சென்றாள்.

மாலையில் ஜ்வாலா வீட்டுக்கு வந்தபோது யமுனை முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார். ஜ்வாலா பிரஸாதுக்குச் சிற்றுண்டியைக்

கொடுத்து யமுனு சொன்னுள்: "கேட்டீர்களா? சித்தப்பாவும் சித்தியும் கிஷ்னூவையும் விஷ்னூவையும் கூட அழைத்துக்கொண்டு இங்கேயே இருக்கப் போகிருர்களாம்! இன்று அப்பாவிடம் சித்தி சொன்னுள்."

ஜ்வாலா பிரஸாத் மனத்தில் இந்தச் செய்தி கேட்டு எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை.

"இதில் என்ன தகாத விஷயம் இருக்கிறது? இங்கே இருந்தால் இரண்டு பையன்களும் முறையாக வேலை வெட்டி பார்ப்பார்கள். அப்பாவுக்கும் பொழுது போகும்."

யமுனுவுக்கு இங்கும் தோல்வியே கிட்டியது. இது எதிர்பார்த்ததுதான். வெற்றி கிடைத்திருந்தால்தான் ஆச்சரியம். ஆனுல் அவள் பேச்சை வளர்க்கவில்லை.

மாலையில் சமயம் பார்த்து யமுனு சின்கீயிடம் சித்தியின் திட்டத்தைப் பற்றிச் சொன்னுள். சின்கீயின் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. "இல்லே, இந்த வேலே நடக்காது. நான் இனிமே சின்னம்மாவோட போராட்டம் நடத்த வேண்டியதுதான். இனிமே, இன்னேலேந்து நீ சும்மா பாத்துக்கிட்டே இரு."

சின்கீ சிறிது நேரத்திற்குப் பிறகு முன்ஷி சிவலாலின் அறைக்குச் சென்ருள் ஏதோ தீர்மானத்துடன்! அப்போது இரவு நெடுநேரம் ஆகிவிட்டது. சிவலால் சின்கீயை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

பீக்கூ நித்திய நியமப்படி மது புட்டியை அவருடைய தலேமாட்டில் வைத்துவிட்டுப் போயிருந்தான். ஆனுல், தம் கையினுல் கோப்பையில் மதுவை ஊற்றிக் குடிக்கும் அளவுக்கு அவருக்கு இன்னும் தெம்பு வரவில்லை. சின்கீயைக் கண்டதும் அவர் கடுமையான குரலில் "ஏண்டீ! எங்கே செத்துப்போயிட்டே. எவ்வளவு

நேரமாச்சுது? மதுவைக் கொடு!" என்றார்.

சின்கீ பதில் சொன்னாள்: "உன் வீட்டிலே மகாபாரதம் ஒண்ணு நடக்கப்போவுதே, அதைப்பற்றி யோசிச்சுக் கிட்டு இருந்தேன். மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது. அதனாலே கங்காவுக்குக் கொஞ்சம் விளையாட்டுக் காட்டலாமேன்னு மாந்தோட்டத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போனேன்." இதைச் சொல்லிக் கொண்டே அவள் வெள்ளிக் கோப்பையில் சாராயத்தை ஊற்றி அவரிடம் நீட்டினாள்.

சிவலால் சாராயத்தை ஒரு மடக்குக் குடித்தார். பிறகு கண்கொட்டாமல் சின்கீயைப் பார்த்தார். சிறிது வேகத்தோடு கேட்டார்: "எந்த மகாபாரதம்?"

எதற்கும் ஆயத்தமாகவே வந்திருந்த சின்கீ, சிவலாலின் கடுமைக் குரலைக்கேட்டு பயந்துவிடவில்லை. அவள் மெதுவாக, ஆனால் உறுதியான குரலில் சொன்னாள்: "ஜ்வாலாவினுடே சித்தப்பாருடைய குடும்பம் ஜ்வாலா சம்பாதிக்கிறதைக் கொண்டு கும்மாளம் போடப்போறதே? துரியோதனன் பரிவாரம் கூடிக்கிட்டு இருக்கு."

"துரியோதனன் பரிவாரமா? என்ன பேத்தறே?..." சிவலால் சின்கீயை அதட்டப்போனார். ஆனால் நின்று விட்டார். சின்கீ சொல்லுவதில் உண்மை இருப்பதாக அவருக்குப் பட்டது. அவர் பாண்டு மகாராஜா. சாவு அவரைக் கொண்டுபோவதற்குச் சுற்றிக்கொண் டிருக்கிறது. ராதேலால் திருதராஷ்டிரன். அவர் இறந்த பிறகு வீட்டின் அதிகாரமெல்லாம் அவருடைய தம்பியின் மக்களிடம் போய்விடப்போகிறது. முழுவதும் மகாபாரதத்தின் உருவகமே! சின்கீ தவறாகச் சொல்ல வில்லை. இந்த உணர்விலிருந்து தப்பித்துக்கொள்ள அவர் கோப்பையிலிருந்து மற்றுமொரு மடக்கு மது

வருந்தினர். மது உள்ளே போனதும் உலக உணர்ச்சி மங்கிவிட்டது. மகாபாரதத்தின் காட்சி இன்னும் நன்கு புலப்பட்டது. சின்கீயின் பக்கம் கோப்பையை மது நிரப்ப நீட்டியவாறே அவர் சொன்னர்: "ஆமாம், இருக்கிற நிலைமை நல்லதாகத் தோன்றவில்லை. பத்து வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் இவர்கள் இங்கு வந்து கூடுகிருர்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை."

"என்ன செய்வது? ஜ்வாலாகிட்டச் சொல்லி கட்டாயமா கிஷ்னூவுக்கு ஏதாவது வேலை தேடிக் கொடுக்கச் சொல்லுவது. ஆனு அவனுக்கு வேலை ஸோராவிலேந்து எங்கேயாவது தூரத்திலே இருக்கணும். ஜ்வாலாதான் பெரிய ஆபீஸர் ஆச்சே, எல்லாம் செய்ய முடியும். அப்போ சின்ன எசமானரும் சின்னம்மாவும் அவங்க பையனேடே கூட போய் இருப்பாங்க. விஷ்னூவும் அவங்க அப்பா அம்மா வோடேயே இருந்துக்கிட்டு வேலை ஏதாவது கத்துக்கலாம்."

முன்ஷி சிவலால் சின்கீயை உற்று நோக்கினர். அவருக்குச் சிறுகச் சிறுக விஷயம் புரியத் தொடங்கியது. "என்ன சொன்னே? ராதே, சின்னவள், விஷ்னூ இவங்களெல்லாம் கிஷ்னூவுடன் கூடப் போய் இருப்பார்கள்! ஸோராவிலிருந்து தூரமான இடத்தில்! இதுதானே நீ சொன்னது? கொடு; என்ன பார்க்கிறே? கோப்பையை நிரப்பேன்?"

சின்கீ கோப்பையை சிவலால் கையில் கொடுத்துச் சொன்னுள்: "ஆமாம், அப்படித்தான் சொன்னேன்."

சிவலால் இன்னும் ஒரு வாய் மதுவைக் குடித்து விட்டுச் சொன்னர்: "நீ சொல்லறது சரிதான். ஆனல் இந்த கிஷ்னூ ஊதாரிப்பயல், சோம்பேறி. ஊரைச்சுற்றிக் கொண்டிருப்பான். ஒரு வேலையும் செய்ய கழியாதவனும்

கூட. இவனால் என்ன வேலை செய்ய முடியும்?"

"அதனாலேதான் கிஷ்னுவோடே கூட சின்ன எசமானரையும் அனுப்பணும் என்கிறது. இவ்வளவு நல்ல பிள்ளையைப் பெத்துக்கிட்டிருக்காங்கன்னு அவங்களே அவனை வழிக்குக் கொண்டுவந்துக் கிடட்டுமே! எனக்கு ஜ்வாலா கிட்டே இத்தெ சொல்ல துணிச்சல் இல்லே. நீங்களே சொல்லுங்களேன். ஒண்ணுமில்லேன்னு காடம்பூரில் நம்பர்தாரிணிகிட்டே வேலை வாங்கிக் கொடுக்கச் சொல்லுங்க. அவுங்களுக்குத் தான் பெரிய வியாபாரமாச்சே? எத்தனையோ வேலை கிடக்கும்!"

அடுத்த நாள் காலை சிவலால் ஜ்வாலா பிரஸாதின் வரவேற்பறைக்குள் சென்றார். ஜ்வாலா பிரஸாத் ஆபீஸ் பைல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். சிவலால் அங்கு சென்று கொஞ்சம் எட்டி உட்கார்ந்தார். ஜ்வாலா பிரஸாத் தந்தையைப் பார்த்துக் கேட்டார்: "என்ன விஷயம் அப்பா. நீங்க ஏன் வந்தீங்க? என்னையே கூப்பிட்டிருக்கக்கூடாதா?"

"அட நானே வந்துட்டா, குடி முழுகிடாது. ஆமாம், கிஷ்னுவுக்கு ஏதாவது நீதான் வேலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீபாட்டுக்கு ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கியே?"

"நான் என்னதான் செய்ய முடியும் கிஷ்னுவைப் பற்றி? சித்தப்பா ஏதாவது செய்வார்."

"ராதேயினால் ஒன்றும் ஆகாது. நீதான் ஏதாவது செய்ய வேண்டும். அதுவும் சீக்கிரமாகவே."

ஜ்வாலா பிரஸாத் சிறிது குழம்பினார். "இந்தப் படிப்பில்லாத ஊர் சுற்றிக்கு என்ன வேலை கிடைக்கப் போகிறது?"

"ஆமாம், ஏதோ ஆபீஸிலேயோ, கச்சேரிலேயோ

வேலை பார்க்கும் அளவிற்கு இவன் படித்தவன் இல்லை. ஆனல் எங்கேயாவது ஜமீந்தாரிடத்தில் குமாஸ்தாவாக வேலை பார்க்க முடியும். வழக்கு நடத்தறது கொள்றதுன்னு ஓடியாடிச் செய்வான்."

"ஆனல் இந்தத் தாசிலில் பெரிய ஜமீந்தார் ஒருவரும் இல்லையே இவனை வேலைக்கு வைத்துக்கொள்ளும் படியாக!"

முன்ஷி சிவலால் கனைத்துத் தன் குரலைச் சரிப் படுத்திக்கொண்டார். "நீ தவருக நினைக்கவில்லை என்ருல் நான் ஒன்று சொல்லுவேன். இது நம்முடைய குடும்பத்தைச் சீர்திருத்தவும், உயர்த்தவும் கூடிய விஷயம்."

"நீங்கள் சொல்லுவதை நான் தவருக எடுத்துக் கொள்ள முடியுமா? என்ன சொல்லுங்கள்."

சிவலால் வேறு பக்கம் திரும்பிக்கொண்டு சொன்னர்: "காடம்பூரில் நம்பர்தாரிணி ஜாதேயீக்கு வழக்குகளைக் கவனித்துக்கொள்ளவும், வக்கீல்களிடம் போய் வந்து ஓடியாடி வேலை செய்யவும் ஒரு நம்பிக்கையான குமாஸ்தா தேவையாக இருக்கிறதாம். நீ சொன்னல் அவள் தட்டமாட்டாள். கிஷ்னூவுக்கு அங்கே உத்தியோகம் வாங்கிக் கொடு. ராதேயும், சின்னவளும் அவனுடன் போய் அங்கே இருப்பார்கள். பெயரளவுக்கு கிஷ்னூ குமாஸ்தாவாக இருந்தபோதிலும் வேலை யெல்லாம் ராதே கவனித்துக்கொள்ளுவான்."

தந்தையின் யோசனையைக் கேட்டுவிட்டு ஜ்வாலா பிரஸாத் பிரமைபிடித்தவர்போல் அவரையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"ஏன்? என்ன யோசித்துக்கொண்டிருக்கிருய்?"

"இதைப்பற்றி ஆற அமர யோசிக்க வேண்டும். மிகவும் சங்கடமான விஷயம். கிஷ்னூவைப் பற்றித்தான்

உங்களுக்குத் தெரியுமே? அங்கேயோ வீட்டில் பெண் பிள்ளைகள் மட்டும்தான் இருக்கிறார்கள். லட்சுமீசந்த் வருஷத்தில் ஒரு மாசம், இரண்டு மாசம்தான் அங்கே இருப்பான். கிஷ்னூவை அங்கே வேலைக்கு அனுப்புவது சரி இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது.''

''ஆகையினாலேதான் ராதேயையும் கிஷ்னூவுடன் அனுப்பி வைக்கிறேன். ராதேயுடன் சின்னவளும் அங்கு போய் இருப்பாள். இந்த கிஷ்னூ அப்பா அம்மாவின் ஆணைக்குள் அடங்கி இருப்பான். கொஞ்ச நாளில் அவனுக்குக் கல்யாணமாகிவிடும். தானகத் திருந்திவிடுவான்''.

பிறகு அவர் சிறிது தாழ்ந்த குரலில் சொன்னார்: ''இதைச் செய்வதில் உனக்கும் நன்மை இருக்கிறது. இதை நீ கவனி?''

''ஆமாம், என்றார் ஜ்வாலா பிரஸாத். பிறகு 'பைல்' களைத் திருப்பத் தொடங்கினார். முன்ஷி சிவலால் அங்கிருந்து எழுந்து வந்துவிட்டார்.''

சிவலாலின் யோசனையைப் பற்றி ஜ்வாலா பிரஸாத் பல வகையில் சிந்தித்துப் பார்த்தார். ஆனால் எந்த விதத்திலும் அவருக்கு உடன்பாடு ஏற்படவில்லை.

முன்ஷி ராதேலாலிடம் இந்த யோசனையைக் கூறி அவரே இதை மறுக்கச் செய்வது நலம் என்று நிச்சயித்து ராதேலால் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

மூன்று நாள் கழித்து முன்ஷி ராதேலால் பிள்ளை கிஷ்னூவை அழைத்துக்கொண்டு ஊரிலிருந்து திரும்பி வந்தார். ராதேலால் ஸோராவ் வந்து சேர்ந்தபோது ஜ்வாலா பிரஸாத் சுற்றுப்பயணம் போய்விட்டார். ராதேலால் அண்ணாவுக்கு வணக்கம் செய்துவிட்டு பதஹ்பூரில் வீடு விஷயமாகச் செய்துள்ள ஏற்பாடுகளைப் பற்றி விவரமாகக் கூறினார். ராமலால் பள்ளி

ஆசிரியனாகவே நினைத்து வேலைசெய்கிறான். சியாமலால் தன் நிலத்தை முழுவதையும் குத்தகைக்கு அடைத்து விட்டான். அவனால் சாகுபடி செய்ய முடியவில்லை. சியாமலாலின் கையில் அதிகச் சிரமமின்றியே, ஒரு கிராமத்தில் பாதிபாகம் சிக்கியிருக்கிறது. "கபூர்மியான்" இறந்துவிட்ட பிறகு அவருடைய விதவை ஸலீமாவிடம் இரண்டு வருடமாக சியாமலால் வேலை பார்த்தான். அப்போது அவளுக்குச் சொந்தமான ரஹீம்பூர் கிராமத்தில் எட்டணா பங்கைத் தன் பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டான். விதவை ஸலீமாவின் செலவுகளை முறைப்படி அவன் ஏற்றுவந்தான். இப்படியிருக்க, கபூர்மியானின் மருமகன் ரஹ்மத்கான் சியாமலாலுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளான். டிப்டி கலெக்டருடைய கோர்ட்டில் பதிவான வழக்கு இப்போது சிவில் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. பண்டிந் கிரிஜாசங்கர் மிச்ரா ஸப்ஜட்ஜ் வழக்கிற்கு நீதிபதியாக இருக்கிறார். ஜட்ஜ் ஜ்வாலா பிரஸாதுக்கு நல்ல பழக்கம். ஜ்வாலா பிரஸாத் இந்த விவகாரத்தைப் பற்றி ஜட்ஜ் மிச்ராவைச் சந்தித்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், வழக்கில் வெற்றி நமக்குத்தான். இந்தவிதமாக ரஹீம்பூராவின் எட்டணா பகுதி நம்முடைய குடும்பத்துக்கு உடைமை ஆகிவிடும். மிகுதி எட்டணா பகுதி கரீம்மியானின் ஆதிக்கத்தில் உள்ளதையும் மலிவாகவே வாங்கிவிடலாம். ஏனெனில், கரீம்மியானுக்கு குழந்தை குட்டி ஒருவரும் கிடையாது. அவன் நிலத்தை விற்றுவிட்டு 'ஹஜ்' யாத்திரைக்குப் போக விரும்புகிறான்."

முன்ஷி சிவலால் சொன்னார்: இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வரும்? கரீம்மியான் தன் பகுதி நிலத்திற்காக எவ்வளவு பணம் கேட்கிறாரோ?"

"அவர் நிலத்தைப் பத்தாயிரத்துக்கு எழுதிக் கொடுத்துவிடுவார். ஆனல், கையில் நாலாயிரம் கொடுத்தால் போதும் என்கிருர். மூன்று வருஷங்களில் நாம் அவருக்கு மீதி நாலாயிரத்தைக் கொடுத்து விடலாம். இது அவருக்குச் சம்மதம்."

"நாலாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது?" முன்ஷி சிவலால் கேட்டார். பதில் இல்லை இந்தக் கேள்விக்கு!

"ஆங்...ஆங்... ராதேலால் தயங்கியபடி கூறினர்: ஆயிரம் ரூபாய் நான் எப்படியோ சேர்த்துவிடுகிறேன். இன்னொரு ஆயிரம் கடனுக நமக்கு பதஹ்பூரில் கிடைத்து விடும். மீதி இரண்டாயிரத்துக்கு ஜ்வாலாதான் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கும். இரண்டாயிரம்தானே! ஜமீந்தாரியை ஜ்வாலாவின் பெயரில் வாங்கிவிடலாம்!"

"கபூர்மியானின் பகுதி? அதற்கான வழக்குச் செலவு?"

"ஆங்...சியாம் அந்தப் பகுதியையும் ஜ்வாலாவின் பெயரிலேயே எழுதி வாங்கிவிடுவான். ஜ்வாலாவின் பெயரிலேயே ரஹீம்பூரின் ரிஜிஸ்தராருடன் கடிதப் போக்குவரத்து நடத்தலாம். ஜ்வாலா பெயரில் நடப்பதால் பண்டித கிரிஜாசங்கர மிச்ரா தீர்ப்பு நமக்கு அனுகூலமாகவே கொடுப்பார்."

முன்ஷி சிவலாலுக்கு இந்த யோசனை பிடித்து விட்டது. "ஜ்வாலா வந்ததும் நான் அவனேடு பேசுகிறேன். அவனிடம் ரூபாய் இல்லையென்ருல் எங்கே யாவது கடன் வாங்கிக் கொடுப்பான். ஆனல் இரண்டாயிரத்துக்கு நீ ஏற்பாடு செய்ய வேண்டும். அது கிடைத்துவிடும் அல்லவா?"

"ஆம்! ஓராயிரத்துக்கு நான் பொறுப்பு. ஒரு வாரத்தில் சேர்த்துவிடுகிறேன். இன்னும் ஓராயிரத்துக்கு நான் லாலா ராமகிசோரிடம் கேட்டிருக்கிறேன். அவர்

கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிருர். தாசில்தாருடைய குடும்பம் என்ருல் அதற்கு ஒரு செல்வாக்கு உண்டு அண்ணு!''

''தாசில்தாருடைய குடும்பம் என்ருல் அதற்கு ஒரு செல்வாக்கு உண்டு.'' திருப்தியோடு முன்ஷி சிவலால் திருப்பிச் சொல்லிக்கொண்டார். ''தாசில்தார் குடும்பத்தில் நிலமும் சொத்தும் இருக்க வேண்டும். நீ சொல்லுவது சரி ராதே! நான் எப்படியாவது இந்த இரண்டாயிரத்துக்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன்.''

10

''இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?'' ஜ்வாலா பிரஸாத் விஷன்லாலைக் கேட்டார்.

''நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன். ஆனல் ஒரு வார்த்தை. என்ஞல் உத்தியோகம் செய்ய முடியாது; ஒத்து வராது!''

''அப்படியாஞல் விவசாயம் பண்ணு.'' இதற்கு விஷ்னு பதில் ஒன்றும் கூறவில்லை. விஷன்லால் கிஷன்லாலைவிட இரண்டு வயது சிறியவன். விஷன்லாலிடம் எவ்வித கெட்ட பழக்கமும் இல்லை. படிப்பிலும் அவ்வளவு மோசமில்லை. ஒரு வருஷத்துக்கு முன் அவன் மிடில் பரீட்சை பாஸ் செய்தான். சிறிது முரட்டு சுபாவம் கொண்டவன். அடக்கமோ பணிவோ அவனிடம் கிடையாது. ஆகவேதான் அவன் தன்னை உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவஞகக் கருதினன்.

உடற்பயிற்சி செய்து கட்டேறிய உடல். நல்ல உயரம்.

வாலிபப் பருவம், முகம் உணர்ச்சியற்றது; கண்கள் சிறிது மறதிகொண்டவை போன்று தோன்றின. விஷன்லால் அழகன் என்று சொல்ல இயலாவிட்டாலும் அவலட்சணம் என்று சொல்ல முடியாது. அவன் கண் கொட்டாமல் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜ்வாலா பிரஸாத் ஆத்திரமடைந்து மீண்டும் கேட்டார்: "நான் சொல்லுகிறேன், நீ ஏன் விவசாயம் செய்யக்கூடாது?"

"விவசாயம் செய்து பார்த்தேன். ஆனல் சியாமு அண்ணு கூடாது என்று தடுத்துவிட்டார். அதில் என்னுடைய குற்றம் ஒன்றும் இல்லை என்று ஆணையிட்டுச் சொல்லுகிறேன். அவர் இரண்டு எருமை வளர்த்தார். பதினுலு படி பால் கறக்கும். அங்கே கிராமாந்திரத்தில் பால் எங்கே விற்பனையாகும்? நான் அந்தப் பாலை எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுத்து விடுவேன். இதற்கு சியாமு அண்ணு கோபமடைந்து விட்டார். அவர் என்ன சொல்வார் என்ருல்—பாலைத் தோய்த்து வைத்துத் தயிராக்க வேண்டும். தயிரைக் கடைந்து மோரும் வெண்ணெயும் ஆக்கி அதிலிருந்து நெய் எடுக்க வேண்டும் என்பார்."

"அதில் என்ன தப்பு?" ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

"தவருகச் சொல்லவில்லை. ஆனல், நான் அங்கேயே நிலத்திற்கு அருகாமையாக ஒரு "கோதா" போட்டிருந்தேன். ஜக்கூ பயில்வானை எனக்கு குருவாக்கிக் கொண்டேன். மிக்க சிரமப்பட்டு அவரை அழைத்து வந்திருந்தேன். அவருடைய சிஷ்யர்களும் அங்கு குழுமுவார்கள். நெய்-பால் அவர்களுக்குச் செல வாகிவிடும். இதற்குக் கோபமடைந்து சியாமு அண்ணு 'கோதா'வை அழித்துவிட்டார். ஜக்கூ பயில்வானையும்

அவர் சிஷ்யர்களையும் அங்கிருந்து வெளியேற்றிவிட்டார். என்னையும் வெளியேற்றிவிட்டார். நான் விவசாயம் செய்யமாட்டேன். அதுவும் சியாமு அண்ணாவின் மேற் பார்வையில் செய்யமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்துள்ளேன். எல்லாரும் சிரிக்கிறார்கள். ஐக்கூ உஸ்தாத், எனக்கு அவர் கற்றுக்கொடுத்த குஸ்திப் பிடிகள் எல்லாம் சமயத்தில் மறந்துபோகக்கடவது என்று சாபம் கொடுத்துவிட்டார்.''

விஷன்லாலின் பேச்சைக் கேட்டு ஜ்வாலா பிரஸாதுக்குச் சிறிது சிரிப்பு வந்துகொண்டிருந்தது. சிறிது கோபமும் வந்துகொண்டிருந்தது. இதற்குள் சிவலால் ஜ்வாலா பிரஸாதின் அறையில் வந்தார். அவருடன் ராதேலாலும் இருந்தார், தன் இயல்பான கபடச் சிரிப்போடு.

ஜ்வாலா பிரஸாத் எழுந்து தன் தந்தையையும் சிற்றப்பாவையும் வரவேற்றார். முன்ஷி சிவலால் ஆரம்பித்தார்: ''ஜ்வாலா, ராதே ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு வந்திருக்கிறான். எனக்கு அதில் கெடுதலாக ஒன்றும் காணப்படவில்லை. ஆனால், நான் இது நடந்தால் மிக நன்றாக இருக்கும் என்றுகூட சொல்லத் தயாராக இருக்கிறேன்.''

அனைவரும் உட்கார்ந்துகொண்டனர். ஜ்வாலா பிரஸாத் கேள்விப் பார்வை பார்த்தார்!

ராதேலால் கனைத்துத் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டவாறு சொன்னார்: ''விஷயம் என்னவென்றால், ரஹீம்பூர் கிராமம் இருக்கோ இல்லையோ, பதார்பூருக்குக் கிட்டே? அங்கே கபூர்மியானின் விதவை மனைவி யிடமிருந்து சியாமு நிலத்தில் எட்டணா பகுதி உரிமையை அதாவது பாதி கிராமத்தை வாங்கிக்கொண்டிருக்கிறான். சியாமு பேரில் பத்திரம் எழுதியாச்சு. சியாமு அதைச்

சுவாதீனமும் செய்துகொண்டுவிட்டான்.

விஷன்லால் குறுக்கிட்டான். "ஜ்வாலா அண்ணு, இது எல்லாம் மோசடி. சலீமா சித்திக்கு அபினியைக் கொடுத்துக் கொடுத்து சியாமு அண்ணு அவர் கைக் கட்டை விரல் குறியை வெறும் தஸ்தாவேஜில் வாங்கிக் கொண்டுவிட்டார். அதன் மேல் அவள் தன்னுடைய ஆஸ்தியை சியாமு அண்ணுவின் பேரில் மாற்றி எழுதி வைப்பதாக இவரே எழுதிக்கொண்டுவிட்டார். இதன் மேல் ரஹ்மத்கான் சியாமு அண்ணு பேரில் வழக்குத் தொடர்ந்திருக்கிருன். வழக்கு நடந்துகொண்டிருக் கிறது."

முன்ஷி ராதேலால் விஷன்லாலே அதட்டினுர். "என்னடா, தத்துப் பித்துண்ணு உளர்ரே?" பிறகு அவர் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னுர்: "இந்த விஷ்னு சியாமுவுக்குச் சத்துருவாகிவிட்டான். அதனலேதான் இவனே என்னேடு இங்கே அழைத்து வந்தேன். இவன் முற்றிலும் ஜக்கூ பயில்வான் சொல்லுகிறபடி; அந்த ஜக்கூ இருக்கிருனே, அவன் ரஹ்மத்கானுக்கு அத்தை புருஷன்." பிறகு அவர் விஷ்னுலாலேப் பார்த்து "ஜாக்கிரதை, இனிமேல் இந்த விவகாரத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட உன் வாயிலிருந்து வெளிப்படக்கூடாது" என்றுர்.

"விஷ்னு! பிறர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கே பேசக்கூடாது. ஆ! சித்தப்பா! நீங்கள் உங்கள் திட்டத்தைச் சொல்லுங்கள். அப்படி என்றுல் ரஹ்மத்கான் சியாமு பேரில் வழக்குத் தொடர்ந் திருக்கிருன்! வழக்கு என்ன ஆச்சு?"

"அட, அந்த வழக்கிலே என்ன ஆகிவிடும்? சிவில் கேஸ், விளையாட்டா என்ன? நிலம் சியாமுவின் சுவாதீனத்தில் இருக்கு, இனி போடட்டுமே வழக்கு!

வருஷக் கணக்காக நடக்கும், ஹைகோர்ட், பிரிவி கௌன்சில்; அந்த ஜம்மன்லால் பட்டாமணியக்காரன் நம்ம தூரத்து உறவு. அவன் நம்ம பக்கம்! நாங்கள் எழுத்து தஸ்தாவேஜ் எல்லாம் ஆயத்தமா வைத்திருக்கிறோம். ரஹ்மத்கான் இருக்கிறான் அலாகாபாத் ஜில்லா "மவூஆயிமா" கிராமத்தில்! ஒரு சோற்றுப் பருக்கைக்குப் பிறர் கையைப் பார்க்கிறவன். வழக்கு எதை வைத்து நடத்துவான்?"

இதன் மேல் முன்ஷி சிவலால் சொன்னார்: "வழக்கு பண்டித் கிரிஜா சங்கர் ஸப்ஜட்ஜ் அவர்களின் கோர்ட்டில் இருக்கிறது."

ஜ்வாலா பிரஸாத் முன்ஷி சிவலாலின் குறிப்பைப் புரிந்துகொண்டார். ஆனால் அவர் அந்த விஷயத்தை மௌனத்தினால் தள்ளி விட்டுவிட்டார். அவர் ராதேலாலிடம் கேட்டார்:

"ஆமாம் சித்தப்பா! உங்கள் திட்டம் இதற்கு மேல் என்ன?"

"அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ரஹீம்பூர் கிராமத்தின் பாதி பாகம் நம்பேரில் வந்து விட்டதே! மீதி பாகம் இருக்கு. கயூம்மியான் 'ஹஜ்' யாத்திரைக்காகப் போகிறார். அவர் பாகம் விலையாகிறது. மிக மலிவாகத் தட்டிவிடலாம். நாலாயிரம் ரொக்கம், நாலாயிரம் மூன்று வருடத்தில். இதில் இரண்டாயிரத்துக்கு பதஹ்பூரிலேயே நாங்கள் ஏற்பாடு செய்து கொள்கிறோம். பாக்கி இரண்டாயிரத்துக்கு நீ ஏற்பாடு செய். இந்த பாதிப் பகுதி உன் பெயரில் வாங்கிவிடலாம். கியாமுவும் தன் பாதி பாகத்தை உன் பேரிலேயே எழுதி விடுவான். இம்மாதிரி ரஹீம்பூர் கிராமம் உன்பேரில் வந்துவிடும்."

விஷ்ணுவால் இப்போது சும்மா இருக்க முடியவில்லை.

அவன் சிரித்துவிட்டான். "ஆம் ஜ்வாலா அண்ணு, சியாமுவின் இந்தக் கபட சூழ்ச்சியில் நீங்களும் சேர்ந்து கொண்டால் திட்டம் ரொம்பவும் சுளுவாக நிறைவேறி விடும். உங்களுக்கு எதிராக யாருக்கும் ஏதாவது சொல்லத் துணிச்சல் வருமா?"

ராதேலால் விஷ்ணுலாலின் காதைப் பிடித்துக் கொண்டார். "டேய் நன்றி கெட்ட பயலே! மறுபடியும் வாய் திறந்தாயா! இவன் சியாமுக்குப் பெரும் பகைக்காரன் ஆகிவிட்டான். சோம்பேறி! காலிப்பய! தண்டசோற்றுத் தடிராமன்! போடா! இங்கிருந்து."

விஷன்லால் பேசாமல் அறையிலிருந்து வெளியேறி விட்டான்.

ஜ்வாலா பிரஸாத் சிறிது நேரம் யோசனை செய்து கொண்டிருந்தார். பின்னர் ஓர் முடிவுக்கு வந்தவர் போல சொல்லலானுர்: "என்னுல் இந்த இரண்டாயிரம் ரூபாய்க்கு ஏற்பாடு செய்ய இயலாது. நீங்கள் கயூம்கானிடம் நிலத்தை வேறு யாருக்காவது விற்றுவிடச் சொல்லுங்கள்."

சிவலால் கடுமையாக ஜ்வாலா பிரஸாதைப்பார்த்தார்! "இல்லை! தானுக வரும் லக்ஷ்மியைப் புறக்கணிக்கக் கூடாது. நான் முன்ஷி ராமஸஹாய்க்குக் கடிதம் எழுது கிறேன். அவர் சுலபமாக இரண்டாயிரம் கொடுத்து விடுவார்." பிறகு அவர் ராதேலாலிடம் சொன்னுர்: "நீ சியாமு பங்கை ஜ்வாலா பேரில் மாற்றி எழுதுவதற்கு வேண்டியதைச் செய்."

ஜ்வாலா பிரஸாத் இப்போது மிக்க உறுதியோடு சொன்னுர்: "அப்பா! எனக்கு சியாமுவினுடைய அந்த ஆஸ்தி வேண்டியதில்லை. ஸலீமா சித்தி சியாமுவுக்குக் கொடுத்திருக்கிருள் என்ருல் அது சியாமுவுக்குத்தான் சொந்தம்."

"உன் பெயரில் இருந்தாலும் சியாமு பெயரில் இருந்தாலும் வித்தியாசம் ஒன்றும் இல்லை."

ராதேலால் சொன்னார்: "கூட்டுக் குடும்பத்தில் எந்தச் சொத்து இருந்தாலும் அதில் எல்லா அண்ணன் தம்பிகளுக்கும் சமமான பங்குண்டு."

"ஆம்; அது எனக்குத் தெரியும். ஆனாலும் ரஹீம்புரா கிராமத்தின் பாதி பாகம் சியாமு பேரிலேயே இருந்தால் நல்லது. பார்க்கப்போனால் பதஹ்பூரில் இருக்கும் நம் நிலம்கூட சியாமு பேரில்தானே இருக்கிறது. நீங்கள் இதில் என்னை ஏன் இழுக்கிறீர்கள்."

இப்போது ராதேலால் தணிந்து போகவேண்டிய கட்டம். "விஷயம் என்னவென்றால்—ஜ்வாலா, நீ கொஞ்சம் புரிஞ்சுக்கோ அதை...விஷயம் இதுதான்—அந்த விதவை ஸலீமாவும் இப்போது தன் மருமகனோடு கூட்டு சேர்ந்துவிட்டாள். அவள் சொல்கிறாள்—அந்த பாகம் அவள் அபினி போதையில் இருந்தபோது சியாமுவின் பேரில் மோசடியாக எழுதப்பட்டுவிட்டது என்று."

"ஆகவே, விஷன்லால் சொன்னது சரி. இந்த மோசடியிலே என்னையும் சேர்த்து மாட்டிவிட விரும்புவதாக வெளிப்படையாக ஏன் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்?"

இப்போது ஜ்வாலாவின் தைரியம் சிறிது தலை தூக்கியது. "நிச்சயமாக; ஒரு விஷயம் தெரிந்து கொள்ளுங்கள். இந்த விவகாரத்தில் என் பெயரை எங்கும் வரவிடப்போவதில்லை. இது என் கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயம், சொல்லிவிட்டேன்."

ஜ்வாலா பிரஸாத் திட்டவட்டமாகச் சொல்வதைக் கேட்டு முன்ஷி சிவலாலுக்குத் தம் பிள்ளை சொல்லுவது சரிதான் என்று தோன்றியது. அவர் பெருமிதத்தோடு

ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தார்.

"ஆமாம் ராதே, ஜ்வாலா சொல்வது சரிதான். பெரிய ஆபீஸர், அவன் மானம் மரியாதைக்கு எந்தவிதமான களங்கமும் வந்துவிடக்கூடாது. வழக்கில் சியாமு ஜயித்த பிறகு ஆஸ்தியை ஜ்வாலா பெயரில் எழுதலாம். இப்போது எழுதுவது உசிதமில்லை. வழக்குக்கான வேலைகளை நன்றாகக் கவனித்துக்கொள்."

"விஷயம் என்னவென்றால், வழக்கில் கொஞ்சம் பலகீனம் இருக்கின்றது என்று வக்கீல்கள் சொல்லு கிறார்கள். அந்த தஸ்தாவேஜ் ரிஜிஸ்தர் செய்யப்பட வில்லை. ஆனால் தஸ்தாவேஜ் நமக்கு அநுகூலமாக இருக்கிறதே. இன்னும் அந்த ஆஸ்தி சியாமுவின் சுவாதீனமாகத்தான் இருக்கிறது. ஜட்ஜிடம் சிறிது அழுத்திச் சொன்னால் வழக்கில் பூரணமாக உயிர்வந்து விடும்." பிறகு அவர் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னார்: "பண்டித் கிரிஜாசங்கரைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே. அவருடைய கோர்ட்டில் இந்த வழக்கு நடைபெறுகின்றது.

"ஆம், தெரியுமே! ஆனால் பண்டித் கிரிஜாசங்கரிடம் நான் வழக்கு சம்பந்தமாக எதுவும் சொல்லமாட்டேன்." ஜ்வாலா பிரஸாத் இந்தக் கசப்பான விஷயத்தை முடித்துவிடக் கருதி எழுந்து நின்றார். "டிப்டி ஸாஹப் சுற்றுப்பயணமாக வந்திருக்கிறார். அவர் என்னைக் கூப்பிட்டிருக்கிறார். நேரமாகிவிட்டது எனக்கு."

ஜ்வாலா பிரஸாத் இவ்வாறு தெளிவாகக் கூறிய பதில் முன்ஷி ராதேலாலுக்குப் பிடிக்கவில்லை. ஜ்வாலா பிரஸாத் போன பிறகு அவர் அண்ணாவைப் பார்த்து, "அண்ணா, குடும்பத்திற்கு ஜமீந்தாரி வரவேண்டும் என்றுதான் சியாமு இதெல்லாம் செய்தான். நீங்கள் ஜ்வாலாவுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்லுங்கள்.

இந்தத் தருணம் தவறிவிட்டால் தவறியதுதான். ஜ்வாலாவின் போக்கைப் பார்த்தால் இவன் எப்போ தாவது நிலம் ஆஸ்தி சேர்க்கக்கூடும், அல்லது பணம் சேமிக்கக்கூடும் என்ற நம்பிக்கை இல்லை. அவன் ஒன்றும் செய்ய வேண்டாம். செய்வதற்கு அவன் தம்பி இருக்கிறான். ஆனால் சமயம் வந்தபோது மேற் போக்காகச் சிறிது தன் வலிமையைக் காட்டி உதவி செய்யட்டும். இதுதான் நான் கேட்டுக்கொள்வ தெல்லாம்.''

முன்ஷி சிவலால் களைப்பு மேலிட்ட குரலில் கூறினார்: ''நீ சொல்வது சரிதான். ஆனால் என்ன செய்வது? ஜ்வாலா இப்போது பெரியவனாகிவிட்டான். அதுமட்டும் அல்ல, நம் குடும்பத்துக்கு விளக்காக இருக்கிறான். அவனை அதட்டவோ—திட்டவோ முடியாது. நீயும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே வேலை செய்யவேண்டும்.''

''என்னைப் பொறுத்தவரை மிகவும் ஜாக்கிரதையாக இருப்பேன். அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.''

''நான் கிஷ்னூவைப் பற்றி யோசித்துக்கொண்டிருக் கிறேன். எங்காவது வேலையில் அமர்த்த வேண்டும் என்று ஜ்வாலாவிடம் சொன்னேன். வேலை கிடைத்தால் கிஷ்னூ உருப்பட்டுவிடுவான். கடைசியில் அவனுக்குத் திருமணம் நடத்தத்தானே போகிறோம்?''

ராதேலால் வருத்தக் குரலில் கூறினார்: ''இந்தக் கிஷ்னூ இவ்வளவு காலிப்பயலாகவும் ஊர்சுற்றியாகவும் ஆவான் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை. மிடில் வகுப்புக்கூட பாஸ் செய்யத் தவறிவிட்டான். இவனுக்கு எந்த வேலை வாங்கி வைக்க முடியும் ஜ்வாலா?''

''அதைத்தான் சொல்கிறேன். காடம்பூரில் நம்பர் தாரிணியைத்தான் உனக்குத் தெரியுமே. அட, அவள் தான், நீ மாகமேளாவில் பார்த்தாயாமே. அவர்களுக்கு

ஏகப்பட்ட சொத்து இருக்கிறது. நிலம் ஒரு தாலுக்கா என்று வைத்துக்கொள்ளேன். அவள் ஜ்வாலாவிடம் மிகவும் மதிப்பு வைத்திருக்கிருள். சொந்த மனிதர் போலப் பழகுகிறவள். அவளிடம் கிஷ்னூ குமாஸ்தாவாக வேலை பார்த்தால் என்ன?"

இதைக் கேட்டதும் முன்ஷி ராதேலாலின் வாடிப் போன முகம் ஒரேயடியாய் மலர்ந்து பிரகாசித்தது. "நிஜமாகவா அண்ணு? இதுமட்டும் நடந்துவிட்டால் கிஷ்னூவுக்கு அடித்தது அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லுவேன்."

"கிஷ்னூவுக்கு மட்டுமல்ல, குடும்பம் முழுவதற்கும். ஆனல் ஒரு நிபந்தனை. கிஷ்னூவுடன் நீயும் அங்கே போகவேண்டும். அங்கு கிஷ்னூ எல்லா வேலையையும் பாழாக்கிவிடுவான். பெயருக்குத்தான் கிஷ்னூ. வேலை எல்லாம் நீதான் சமாளிக்க வேண்டும். தெரிந்ததா? நீ இதற்குச் சம்மதித்தால் நான் நம்பர்தாரிணியின் பேருக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து இந்தப் பிள்ளைகள் இருவரையும் அங்கே அனுப்பி வைக்கிறேன்."

அட, அண்ணு! இந்தத் தங்கமான தருணத்தைக் கைநழுவ விடுவோமா? உன்னுடைய கட்டளையைச் சிரமேற்கொள்ளுவேன். ஆனல், ஜ்வாலா நாங்கள் காடம்பூர் போவதை விரும்பமாட்டாளோ என்னவோ!"

"ஆமாம், அப்படியும் இருக்கலாம். ஆதலால்தான் நான் கடிதம் எழுதுவதாகச் சொன்னேன். நீயாக ஜ்வாலா விடம் இது சம்பந்தமாக ஒன்றும் பேசவேண்டாம்."

மூன்று நாட்களுக்குள் முன்ஷி சிவலால் ஜ்வாலா விடமே சொல்லி ஜயதேயிக்கு கிஷ்னூவை அவள் தன்னிடம் வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும் என்று கடிதம் எழுதச் செய்தார். பதினைந்து நாட்களுக்குள் ராதேலால், ராதேலாவின் மனைவி,

கிஷன்லால் — இவர்கள் காடம்பூருக்குக் கிளம்பி விட்டனர்.

ஜ்வாலா பிரஸாத் வீட்டில் மீண்டும் அமைதி குடிகொண்டது. விஷன்லால் சுபாவத்தில் அமைதி யானவன்; அவனுக்கு ஜ்வாலாவிடமும் யமுனாவிடமும் நல்ல ஆதரவு உண்டு. எப்போதும் சந்தோஷமாக இருப்பான். அவனுடைய மூன்று அண்ணன்மார்களுக்கும் அவனுக்கும் ஏணிவைத்தாலும் எட்டாது. குழந்தை கங்கா பிரஸாத் விஷன்லாலுடன் நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டான். ஆனால் விஷன்லால் வீட்டின் நாற்சுவருக்குள் ஒடுங்கியிருக்கும் பிராணி அல்ல. அவனுடைய பெரும்பான்மை நேரம், வெளியே சுற்று வதில் கழிந்தது.

ஸோராவில் செவ்வாய்க்கிழமைதோறும் ஒரு பெரிய சந்தை கூடும். அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து மட்டுமின்றி சாமான்களை வாங்க, விற்க தூரத்துக் கிராமங்களிலிருந்தும் மக்கள் வருவார்கள். சந்தையி லிருந்து கிட்டத்தட்ட ஆறு பர்லாங் தூரத்தில் ஸோராவ் கிராமத்துக்குச் சிறிது வெளியே ஒரு மாந்தோப்பு இருந்தது. அது புறம்போக்கு நிலம். சிதிலமாகிவிட்ட ஒரு அனுமார் கோயில் கவனிப்பற்றுக் கிடந்தது. சுற்றித் திரியும்போது விஷன்லாலின் பார்வை மாந்தோப்பில் விழுந்தது. அங்கு ஒரு நல்ல "கோதா" போட முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. அதே நேரத்தில் 'குமரூ மிச்ரா'வும் தன்னிச்சையாக அங்கு வந்துகொண்டிருந்தார். அவர் மனதில், அனுமார் கோயிலைச் சீர்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. விஷன்லாலும், குமரூ மிச்ராவும் அந்த மாந்தோப்புப் பக்கம் திரும்பினார்கள். இருவரும் அறிமுகம் செய்துகொண்டனர். குமரூ மிச்ரா 'பேச்சு

மிச்ரா'வுக்குத் தம்பி. இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் காசியிலிருந்து ஓடி வந்துவிட்டார். அங்கே அவரை ஸம்ஸ்கிருதம் படிக்க அனுப்பியிருந்தனர். ஸம்ஸ்கிருதத்துக்கும் நமக்கும் பிறவிப் பகை என்று அவருக்குத் தோன்றியது. இலக்கணம் என்ற ஆழ்கடலில் குமரூ மூழ்கினரோ இல்லையோ, அவர் பிராணன் போய்விட்டது போலத் தோன்றியது.

குமரூ மிச்ராவுக்கு வயது இருபதோ இருபத்தொன்றோ இருக்கும். விஷன்லாலை விட உயரத்திலும் பருமனிலும் அவர் கொஞ்சம் சிறியவர். நெற்றியில் பொட்டு. அவருக்கு இலக்கணம் ஏறவில்லையே தவிர சுலோகங்கள் பல மனப்பாடம். அவர் ராகம் போட்டுச் சொல்லுவார். காசியை விட்டு ஓடி வந்த குமரூவை பேச்சூ மிச்ரா மிகவும் கடிந்து அதட்டினர். ஆனால் குமரூவும் வயது வந்தவர். அவரைக் கட்டாயப்படுத்தி எந்த வேலையும் செய்விக்க முடியவில்லை அண்ணனால்!

பேச்சூ மிச்ரா ஸோராவின் உதவி தாசில்தார். அந்த ஊர்க்காரர்தான். அவர் அங்கிருந்து மாற்றலாகவில்லை. மாற்றலாகும் வாய்ப்பும் இல்லை. மக்களுக்கு இதைப் பற்றி வியப்புத்தான். பேச்சூ மிச்ரா ஸோராவில் அசையாமல் உட்கார்ந்திருந்தார். மாற்றலுக்கு உடன்பட்டிருப்பாராயின் அவர் இதற்குள் டிப்டி கலெக்டர் ஆகியிருப்பார்.

குமரூவுக்கும் விஷன்லாலுக்கும் ஒருவருக்கொருவர் பிடித்துப்போய்விட்டது. இருவரும் வாலிபப் பருவம். இருவரும் கட்டுமஸ்தான உடலமைப்புக்கொண்டவர்கள். இருவரும் பிடிவாதமுள்ளவர்கள். வழியிலேயே திட்டம் தீட்டப்பட்டது. அந்த மாந்தோப்பில் "கோதா" அமைப்பது, அதில் விஷன்லால் "உஸ்தாது" ஆகி குஸ்திப் பயிற்சி சொல்லிக்கொடுப்பார். குமரூ அனுமார் கோயிலில்

அர்ச்சகராக அமர்ந்துவிட வேண்டியது. ஒரு வாரத்துக் குள் "கோதா"வில் பத்து பன்னிரண்டு வாலிபர்கள் சேர்ந்துவிட்டனர். குஸ்தி பிடிப்பவர்களின் ஜதைகள் தீர்மானிக்கப்பட்டன. அனுமார் கோயிலைச் சுத்தம் செய்து பூஜை நைவேத்தியம் எல்லாம் ஆரம்பமாயிற்று.

ஹோலி கழிந்துவிட்டது. நிலங்களில் அறுவடை ஆரம்பமாகிவிட்டது. செவ்வாய்க்கிழமை சந்தை சம்பிரம மாக நடைபெற்றது. அக்கம் பக்கத்துக் கிராமங் களிலிருந்து மக்கள் வெல்லம், தானியம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு வருவார்கள். சந்தையில் சந்தடி வளர்ந்தது. அனுமாருக்கு நைவேத்தியமும் தட்சிணையும் அதிகமாகக் கிடைத்தது. "கோதாவு"க்கான செலவு அனைத்தும் அனுமாருக்குக் கிடைக்கும் தட்சிணையைக் கொண்டு நன்கு நிறைவேறி வந்தது. குமரு மிச்ரா இப்போது 'குமரு பண்டித்' என அழைக்கப்படலானார். விஷன்லால் 'விஷன் குரு' ஆகிவிட்டார்.

அந்தச் செவ்வாய்க்கிழமைச் சந்தையில் 'புத்தா சிங்' பயில்வான் எதற்காக, எப்படி வந்து சேர்ந்தார் என்பதைப் பற்றி ஜனங்கள் வெவ்வேறு கதை சொல்லு வார்கள். ஸோராவில் பயில்வான் புத்தூ சிங்கின் கோதா ஒன்றுதான் இருந்துவந்தது. பத்து வருடங் களுக்கு முன் கிழக்கு ஜில்லாக்களில் புத்தூ சிங் தலைசிறந்த மல்யுத்த வீரராகக் கருதப்பட்டவர். ஆனால், இப்போது அவருக்கு வயதாகிவிட்டது. ஆகையால் டாகுர் வீர்பான் சிங் அவருக்காக ஒரு 'கோதா' ஏற்படுத்தித் தந்திருந்தார்.

ஸோராவில் வேறொரு "கோதா" அமைக்கப்பெற்றதில் அவருடைய தன்மானத்துக்கு இழுக்கு உண்டாகி விட்டது என்று சிலர் சொன்னார்கள். இன்னொரு கோதா அமைந்ததில் அவருக்கு மகிழ்ச்சிதான் என்றும்

சிலர் பேசிக்கொண்டார்கள். எது எப்படியாயினும் பயில்வான் புத்தூ சிங் தம்முடைய பிரதம சிஷ்யன் 'மைக்கூ சிங்'குடன் அன்று செவ்வாய்க்கிழமைச் சந்தைக்கு வந்தார் என்ருல், அவருடைய நோக்கம் சந்தையில் சுற்றுவது மாத்திரமல்ல. கிராமத்துக்குச் சிறிது தள்ளித் திறக்கப்பட்டுள்ள புதிய கோதாவை நோட்டமிடுவதுதான் அவருடைய நோக்கம்.

பயில்வான் புத்தூ சிங் விஷன் குருவின் "கோதா" வந்து அடைந்தபோது, விஷன் குரு சிவப்பு நிற 'லங்கோட்' அணிந்தவராய் அனுமான் விக்கிரஹத்திற்கு முன்னுல் "பஸ்கி" போட்டுக்கொண்டிருந்தார். விஷன்லாலுடைய செயல் முறை என்னவென்ருல், தினந்தோறும் மாலையில் நூறு 'தண்டால்', ஐந்நூறு 'பஸ்கி' செய்வது. இவ்வாறு செய்து 'பஜ்ராங்க்பலீ' (வஜ்ராங்கபலீ—அதாவது அனுமார்) யினுடைய ஆசீர்வாதம் பெறுவது. பிறகு "கோதா"வில் வந்து தன் சிஷ்யர்களுக்கு 'குஸ்தி' பிடிகள் கற்றுக்கொடுப்பார். புத்தூ பயில்வான் வந்தபோது விஷன் குரு 'தண்டால்' முடித்துவிட்டு 'பஸ்கி' எடுக்கத் தொடங்கியிருந்தார். இவ்வளவு நேர்த்தியாக ஐந்நூறு பஸ்கி எடுத்து முடித்ததைக் கண்டு புத்தூ சிங் புளகாங்கிதமடைந்தார். அவர் அங்கிருந்தபடியே உரக்கக் கூறினுர்:

"பலே, பலே! தம்பி, சபாஷ்!"

விஷன் குரு பயில்வான் புத்தூ சிங்கைப் பார்த்தது இதுதான் முதல் தடவை. ஆனல், புத்தூ சிங்கின் உடற்கட்டையும் ஆடம்பரத்தையும் பார்த்து, 'குஸ்தி'க் கலையின் நிபுணராகிய ஒரு "வஸ்தாத்" நிற்கிருர் எனப் புரிந்துகொண்டார். புத்தூ சிங் பக்கத்திலேயே அவருடைய சிஷ்யர் மைக்கூசிங் நின்றுகொண்டிருந்தான். மைக்கூசிங்கிற்கு விஷன்லால் வயதுதான். ஆனல்

மைக்கூ சிங் உடற்கட்டில் கொஞ்சம் சிறியவனைகத் தோன்றினன். பயில்வான் புத்தூசிங் மைக்கூ சிங்கைப் பார்த்துக் கூறினர்: "பாருடா! டேய் மைக்கூ! உனக்கு ஜோடியாக இன்னெருத்தன் தயாராயிட்டிருக்கிருன்!"

மைக்கூசிங் அப்போதே புத்தூ சிங் கால்களைத் தொட்டு "சலாம்" செய்தான். "குருவே! இரண்டு நிமிஷத்திலே இவனுக்கு மண்காட்டி விடட்டுமா! வஸ்தாத் புத்தூ சிங்கினுடைய சிஷ்யனுக்கும் நான்!"

புத்தூசிங் சிரித்தார். "அட நீயோ சிஷ்யன்; இவனே குரு! என்ன தம்பி, உன் பேர் விஷன் குரு இல்லையா? யாரோ ஒரு குரு இங்கே இந்த ஸோராவ் கிராமத்தில் "கோதா" திறந்திருக்கிறதாகக் கேள்விப் பட்டதுமே இருப்புக்கொள்ளவில்லை, பார்க்க வந்து விட்டேன். முன்னுக்கு வந்துகொண்டிருக்கிற இளம் வாலிபன் இப்போதிலிருந்தே 'குரு' ஆகிவிட்டே!

விஷன் குரு கியாதி மிக்க பயில்வான் புத்தூ சிங்கின் எதிரில் சங்கோசத்துடன் நின்றுகொண்டிருந்தார். குமரு பண்டித் கோயிலில் அமர்ந்தபடியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். அரங்கத்தில் வரவேண்டிய சமயம் இது என்று அவருக்குத் தோன்றியது. அவர் விஷன் குருவை ஒருபுறம் விலக்கிவிட்டு முன்னே வந்தார். புத்தூ பயில்வான் எதிரே வந்து சொன்னர்: "புத்தூ குரு 'பாங்' அரைத்தாகிறது. உனக்குக் குடிக்கக் கொடுக்கிறேன்- ஒரு லோட்டா போட்டுப்பார். இந்த கோதாவைப் பற்றிய பேச்சை விட்டுத்தள்ளு. இந்த கோதா புதிதாகக் கற்றுக்கொள்ளும் எங்களுக்கு வேடிக்கையாக அமைத்துக்கொண்டது. இதில் கோபப் பட என்ன இருக்கிறது?"

புத்தூ சிங் பயில்வான் உரக்கச் சிரித்தார். "கஞ்சா" "பங்கி" அடிக்கும் உங்களைப் போன்ற சிறு பசங்க

ளெல்லாம் பயில்வான் வேலை எப்படிச் செய்வீங்க என்று எனக்கு நல்லாத் தெரியும். ஆனால் குரு இந்த ஸோராவில் ஒருத்தன் தான் இருக்கான். அவன் புத்தூ சிங் பயில்வான் தான்! பிறகு அவர் விஷன்லாலுக்குச் சொன்னார்: "சரி, நம்மகிட்டே தேங்காய் தட்டிக்கொள்."

இப்போது விஷன்லால் பேசவேண்டி வந்தது. "தேங்காய் தட்டறது ஒரு வஸ்தாத் கிட்டத்தான் தட்டிக்க வேண்டும். நான் ஜக்கூ பயில்வான் கிட்டே தேங்காய் தட்டிக்கொண்டிருக்கிறேன். இப்போ, நானே மத்தவங்களுக்கு கத்துக் குடுக்கிறேன்!"

புத்தூ சிங் மைக்கூவைப் பார்த்தார். "என்னடா மைக்கூ! இந்தப் பயல் சொல்லறதைக் கேட்டியா? 'குரு' என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கான் இங்கே! திமிர் வேறே பேசறான். இவனோடு பிடி போடுகிறாயா?"

இதற்குள் ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. ஜனங்கள் பலவாறு கூச்சலிட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். புத்தூ சிங் சொன்னதை அங்கிருந்த அனைவரும் ஆமோதித்தனர். "ஆகட்டும், ஆகட்டும்! யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்!" கூச்சல் மேலும் அதிகமாகி விட்டது.

குமரு பண்டித் மீண்டும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு சமாளித்தார். கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்: "சும்மா ஓசிலே குஸ்தி பார்க்க வந்தீங்களா எல்லாரும்! அது நடக்காது! நம்ம விஷ்னூ குருவுக்கும் மைக்கூ சிங்குக்கும் குஸ்தி நடப்பது என்று தீர்மானமாகி விட்டது. பதினைந்தாம் தேதி செவ்வாய்க்கிழமையன்று நடைபெறும். புத்தூ பயில்வான் கோதாவிலேயே நடக்கட்டும். எங்கே நடந்தாலும் சரி, விஷன் குரு பணிந்து போகவில்லை. விஷன் குரு மைக்கூ பயில்வான் கிட்டே தோற்றால், அவர் புத்தூ குருவிடம்

சரணடைந்து தேங்கா தட்டிக்க வேண்டியது. மைக்கூ தோற்ருல், விஷன் குரு கோதா நடத்தலாம். புத்தூ பயில்வான் அப்புறம் இந்தப் பக்கம் தலைகாட்டக் கூடாது."

"நாங்க சம்மதிக்கிருேம்." மைக்கூ சிங் விஷன்லாலை அலட்சியமாகப் பார்த்துச் சொன்னர்:

இரவில் அனுமான் சாமிக்கு வந்த நைவேத்தியம், தட்சிணைகளை எடுத்துக்கொண்டு குமரூ பண்டித் வீட்டிற்கு வந்தபோது பேச்சூ மிச்ராவின் தர்பார் முழுவதாக நிறைந்திருந்தது. குமரூவைப் பார்த்து பேச்சூ மிச்ரா உரக்கச் சிரித்தார். "என்னடா குமரூ, கோயில் ஜாம் ஜாம் என்று வளர்ந்துகொண்டு போகிறது. அனுமார் ஏகத்துக்கு வரம் கொடுக்கிருர் என்று தெரிகிறது!"

குமரூ பண்டித் அங்கு இருந்தவர்களுக்குப் பிரசாதம் கொடுத்தவாறு சொன்ஞர்: "இந்தா அனுமாருடைய பிரசாதம், சாப்பிடு. மீண்டும் அவருடைய மகிமை வளர்ந்துகொண்டு இருக்கிறது. ஆனல் தம்பி, இன்று உண்மையாகவே பெரிய வேடிக்கை. பயில்வான் புத்தூசிங்கின் சிஷ்யன் மைக்கூசிங் விஷன்குரு இருவருக்கும் போட்டாப் போட்டி நிச்சயிக்கப் பட்டுள்ளது. அடுத்த பதினைந்தாம் தேதி செவ்வாய்க் கிமையன்று நடக்கும்."

பேச்சூ மிச்ரா விழிப்படைந்து சொன்ஞர்: "இந்த விஷன் குரு யார்?"

"அட உங்களுக்குத் தெரியாதா! அவர்தான் விஷன்லால்! தாசில்தாருடைய சிற்றப்பா மகன்.

அவனைக் கூட்டு சேர்த்துக்கொண்டுதானே இந்தக் கோவிலும் கோதாவும் தொடங்கப்பட்டுள்ளன. கோவிலை நான் பார்த்துக்கொள்கிறேன். கோதாவை

விஷ்னூ குரு கவனித்துக்கொள்கிருர்.''

பேச்சூ மிச்ராவிற்கு வயது நாற்பத்தைந்து ஐம்பது இருக்கும். அவர் சோராவின் சமூக வாழ்க்கையில் முக்கியஸ்தராகக் கருதப்பட்டார். பேச்சூ மிச்ரா உதவி தாசில்தார் வேலை பார்த்து வந்தார். சண்டைகளில் பஞ்சாயத்து செய்வார். கூடவே புரோகிதர் வேலையும் செய்து வந்தார். இரண்டு மூன்று தடவை டிப்டி ஸாஹப் அவருக்கு இவையெல்லாம் ஒரு பொறுப்புள்ள உயர்ந்த ஆபீஸருக்கு அழகல்லவென்று ஜாடைமாடையாகச் சொல்லிப் பார்த்தார். ஆனுல், பேச்சூ மிச்ரா கேட்பதாக இல்லை. "பழக்கம் விடமுடியவில்லை. இல்லாது போனல் இதுவரை டிப்டி கலெக்டர் ஆகி இருக்க மாட்டேனு" என்று சொல்லிவிட்டார். பேச்சூ மிச்ரா பயமற்றவர், அடக்கி ஆளக்கூடிய திறமைகொண்டவர். ஓரளவு கோபமுள்ளவரும் சண்டைக்காரரும்கூட. ஜனங்களுக்கு அவரிடம் மிக்க மதிப்பு. நம்பிக்கையான மனிதராக இருப்பதோடு அல்லாமல் எல்லோருடனும் சமமாகப் பழகுவார். ஜனங்களுக்குக் கஷ்டம் வருத்தம் என்ருல் அவர் உதவி செய்ய ஓடோடிவருவார்.

பேச்சூவிடம் ஜ்வாலா பிரஸாத் மிகவும் பரிவு கொண்டவர். மதிப்புடன் நடத்தி வந்தார். சர்க்கார் விஷயங்களில் அவர் எப்போதும் பேச்சூ மிச்ராவின் ஆலோசனைப்படி நடந்து வந்தார். பேச்சூ மிச்ராவுக்கும் ஜ்வாலா பிரஸாதைக் குறித்து ஒருவித அன்பு ஜ்வாலா பிரஸாதின் நடத்தை நாணயத்தைக் குறித்து. அவருக்கு அபார மதிப்பு.

மைக்கூசிங் விஷன் குரு இருவருக்கும் போட்டி நிச்சயிக்கப்பட்டது என்ற சமாச்சாரம் பேச்சூமிச்ராவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதற்கு முக்கியகாரணம் என்னவென்ருல், சில நாட்களுக்கு முன் டாகுர் வீர்பான்

சிங் பேச்சூ மிச்ராவை அவமதித்துவிட்டார்—சமூகத்தில் மதிப்பையும், தலைமையையும் பற்றிய பிரச்னையின் பேரில் அப்படி ஒரு சம்பவம் நேர்ந்தது.

சமாசாரம் முழுவதையும் கேட்டு பேச்சூ மிச்ரா எழுந்து நின்றார். தக்க ஆடை அணிந்துகொண்டு அவர் ஜ்வாலா பிரஸாத் வீட்டுப்பக்கம் போனார். வழியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சஹாபுத்தீன் அவரைச் சந்தித்தார். பேச்சூ மிச்ரா புன்னகை செய்துகொண்டு சஹாபுத்தீனிடம் சொன்னார்: "கேட்டீரா ஸாஹப்மியான் தாசில்தாரின் சித்தப்பா மகன் இங்கு வந்திருக்கிறான். ஒரு நல்ல பயில்வான்."

"ஆம் மிச்ராஜீ. பார்த்திருக்கிறேன் நான்கூட அவனை. நான் கேள்விப்பட்டது என்னவென்றால், புத்தூ பயில்வான் அவன் மேல் மிகுந்த கோபம் கொண்டாராம். ஒரு நாள் அவனுடைய கோதாவுக்குப் போகப்போகிறாராம். இந்த புத்தூசிங்குக்கும் மிகுந்த தலைக் கொழுப்பு ஏறிவிட்டது. ஒரு எதிராளி வந்துவிட்டான் அல்லவா."

"அட, அந்த புத்தூ அவன் கோதாவுக்கு வந்திருந்தானும். தாசில்தார் தம்பிக்கும் புத்தூவின் சிஷ்யன் மைக்கூ சிங்குக்கும் இன்றைக்குப் பதினைந்தாம் நாள் குஸ்தி போட்டி என்று நிச்சயமாகியுள்ளது. அதனால் முறைப்படி ஏற்பாடாக வேண்டும் போலீஸ் சார்பில்."

"என்ன பேச்சு சொன்னீர்கள் உதவி தாசில்தார் ஸாஹப்! அருமையான சந்தர்ப்பமாச்சே இது! நடுவில் கொஞ்ச நாளாக ஊரே வெறிச்சென்று இருக்கிறது. இன்றையிலிருந்தே குஸ்தி ஏற்பாடு தொடங்கிவிடுகிறேன். டாகுர் வீர்பான் சிங்குடன் கலந்து ஆலோசித்து இந்த குஸ்திப் போட்டியைப்பற்றித் தண்டோரா போட்டு அறிவிக்க ஏற்பாடு செய்கிறேன். ஆனால் அவர்கள் இருவரும் இன்னும் சிறு பசங்கள் தானே. ஒரு பெரிய

ஜோடியும் வேண்டும். அப்போதான் வசூல் இருக்கும், டிக்கெட் விற்பனையாகும்."

பேச்சு மிச்ரா புன்னகை புரிந்தார். "ஆமாம், இந்த புத்தூ சிங்குக்கு ஜோடியாக பயில்வான் ஒருவனைத் தேடியாக வேண்டும். அதைச் செய்யுங்கள். அதற்காகத்தானே உங்களிடம் சொன்னேன். வாருங்கள், தாசில்தாருடன் கலந்து ஆலோசனை கேட்டுக்கொள்ளுவோம்.

11

இரவு ஒன்பது மணிக்கு ஸோராவ் கிராமத்தில் 'இக்கா' வண்டியில் உட்கார்ந்துகொண்டு வரும் உடல் கட்டுடன் இருக்கும் இரண்டு புதியவர்களைப் பார்த்து இன்ஸ்பெக்டர் சஹாபுதீன் வண்டியை நிறுத்தச் சொன்னார். "யார் நீங்கள்? என்னடா இக்காவாலா, எங்கிருந்து வருகுது சவாரி?"

'இக்கா' ஓட்டுகிறவனுடைய இடத்தில் உட்கார்ந்திருந்த ஒற்றைநாடியான வாலிபனுக்கு ஏறக்குறைய இருபத்தைந்து வயது இருக்கும். "ஹுஜூர்! நாங்கள் அலாகாபாதிலிருந்து வருகிறோம் சொந்த ஊர் பதஹ்பூர். தாசில்தாரிடம் கொஞ்சம் வேலை இருக்கிறது." "அது சரி. நீங்கள் வந்திருப்பது ஏதோ வேலையாகத்தான் இருக்கும். ஆனால் நீங்கள் யார் என்று சொல்லவில்லையே!"

'இக்கா'வில் உட்கார்ந்திருந்த மற்றொருவர் உயரமான நல்ல கட்டுமஸ்தான ஆசாமி. அவர் சொன்னார்: "ஸாப், இந்தப்பையன் ரஹ்மத்கான். பதஹ்பூரில்

"லாண்ட் லார்ட்". ஆனால் இப்போது 'மஹூஆயிமா' கிராமத்தில் வசிக்கிறான். என்னை ஜக்கூ பயில்வான் என்று சொல்வார்கள். இந்தப் பையன் எனது மைத்துனர் பிள்ளை. தாசில்தாரின் தம்பி விஷன்லால் என்னுடைய சிஷ்யன். தாசில்தார் பங்களா எந்தப் பக்கம்?"

பேச்சூ மிச்ரா முழங்கையினால் சஹாபுத்தீனை இடித்து ஜாடை செய்தவாறே 'இக்கா' ஓட்டுகிறவனிடம் சொன்னார்: "அதோ எதிரில் புளியமரம் இருக்கிறதே, அதற்கு எதிரில் கிட்டத்தட்ட நூறு அடி தள்ளி இடது புறமாக ஒரு திருப்பம் இருக்கிறது. 'இக்கா'வைத் திருப்பி ஒரு பர்லாங் தூரப்போனால் தாசில்தார் கச்சேரி இருக்கிறது. கச்சேரிக்கு எதிரிலேயே தாசில்தார் வீடு."

இக்கா கிளம்பிப் போன பிறகு பேச்சூ மிச்ரா சொன்னார்: "சாஹப்மியான்! குஸ்தி சண்டைக்கு ஏற்பாடு ஆகிவிட்டது!" இருவரும் வேகமாக நடை போடத் தொடங்கினார்கள்.

இவர்கள் ஜ்வாலா பிரஸாத் வீட்டைப்போய் அடைந்த போது அவர் ஜக்கூ மியானுடனும் ரஹ்மத் கானுடனும் பேசிக்கொண்டிருந்தார். விஷன்லால் வெளியிலிருந்த அறையில் இவர்கள் இருவருக்கும் ஜாகை ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். சஹாபுதீனுடன் பேச்சூ மிச்ரா வந்ததும் பேச்சு நின்றுவிட்டது. ஜ்வாலா பிரஸாத் எழுந்திருந்து இவ்விருவரையும் வரவேற்றார். "வாருங்கள், மிச்ராஜீ! வாருங்கள், சஹாபுத்தீன் சாஹப்! இந்த நேரத்தில் இரவில் ஏன் சிரமம் எடுத்துக் கொண்டீர்கள்; நலந்தானே? விசேஷம் ஒன்றும் இல்லையே?"

பேச்சூ மிச்ரா உட்கார்ந்ததுமே சொன்னார்: "ஆம்,

ஒன்றும் விசேஷம் இல்லை. வீட்டிலே உட்கார்ந்து இருப்புக்கொள்ளவில்லை. பார்த்தேன், உங்களைச் சந்தித்து வெகு நாட்கள் ஆகிவிட்டன. ஆகவே கிளம்பினேன். இங்கு வரும்போது வழியில் ஸாஹப் மியானும் தென்பட்டார். இன்று தாசில்தார் வீட்டுக்கே போய் பேசிக்கொண்டிருக்கலாம் என்று நான் சொல்லவே, இவரும் கூட வந்தார்." பிறகு மிச்ரா ஜக்கூ பயில்வானை விளக்கின் ஒளியில் உன்னிப்பாகப் பார்த்துக் கேட்டார்: "இப்போது ஸோராவில் 'கோதா'க்களும் குஸ்திகளும் நிறைந்து ஆரவாரமாக இருக்கிறது. புத்தூ சிங்கின் கோதா டாகுர் வீர்பானின் ஆதரவில் நடந்து வருகிறது. உங்களுடைய தலைமையிலும் உங்களுடைய தம்பி விஷன்லால்—அதாவது விஷன் குரு புளியமரத்து அனுமார் கோயில் இருக்கும் மாந்தோப்பில் கோதா ஆரம்பித்திருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்."

ஜ்வாலா பிரஸாத் நிமிர்ந்து உட்கார்ந்தார். வாய்ப் பேச்சாக நானும் இதைப்பற்றிக் கேட்டுள்ளேன். ஆனால் நான் இதைப்பற்றி கவனம் செலுத்தவில்லை என்று ஜ்வாலா பிரஸாத் சொன்னார். "விஷ்னூ, கொஞ்சம் இங்கே வா!" விஷன்லால் ஓடோடி வந்தார். "என்ன சொல்லுங்கள்?" "என்ன புளியமரத்து அனுமார் கோவில் தோப்பில் நீ கோதா ஆரம்பித்திருக்கிறாயாமே? —உதவி தாசில்தார் சொல்லுகிறார்." அதற்கு விஷன்லால் பதில் ஒன்றும் சொல்லவில்லை. தலை குனிந்து பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

அதே நேரத்தில் ஜக்கூ பயில்வான் உரக்கச் சிரித்தார். 'வாஹ்! என் சிங்கமே. ஸோராவ் வந்ததுமே 'குரு' ஆகிவிட்டாயா? ஜக்கூ பயில்வானின் சிஷ்யன் அல்லவா? ஹுஜூர்! இவனுக்கு நிறைய குஸ்திப்பிடிகள் தெரியும். ரொம்ப நல்லவன். கொஞ்சம் முறையாக அப்பியாசம்

செய்துகொண்டிருந்தானானால் அந்த வட்டாரத்தில் இவனுக்கு எதிராக ஒரு பயலும் நிற்கமாட்டான்."

பேச்கூ மிச்ரா இப்போது சரியான தருணம் எனக் கண்டார். "ஐயா! ஸாஹப் மியான் சொல்லுகிறார்—கொஞ்ச நாளாக ஸோராவில் எவ்வித வேடிக்கை விநோதமோ, ஆட்ட பாட்டமோ நடக்கவில்லை. ஆகவே, போலீஸ் சார்பில் ஒரு குஸ்திப் போட்டி நடந்தால் எப்படியிருக்கும்? அதிர்ஷ்டவசமாக ஜக்கூ பயில்வானும் வந்திருக்கிறார். புத்தூ சிங்—ஜக்கூ பயில்வான் ஜோடியைப் பார்க்க மக்கள் திரண்டு வருவார்கள். விஷனும், மைக்கூ சிங்கும் அடுத்த ஜோடி. மீதி நாலைந்து ஜோடிகள் போலீஸ் ஜவான்களுக்குள் ஏற்பாடு செய்துகொள்ளலாம்."

சிறிது யோசித்துவிட்டு ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "ஆம், பேஷான யோசனைதான்." பேச்கூ மிச்ராவும் சஹாபுத்தீன்கானும் போன பிறகு ஜ்வாலா பிரஸாத் விஷ்னூலாலைப் பார்த்து "ஜக்கூ பயில்வானுக்கும் ரஹ்மத்கானுக்கும் வேண்டிய ஏற்பாடு செய்யும்படி சொன்னார். விஷ்ன்லாலை அனுப்பிவிட்டு ஜ்வாலா பிரஸாத் தான் முன் பேசிக்கொண்டிருந்ததைத் தொடர்ந்தார். "ரஹ்மத்கான், நான் சியாமுவுடன் பேசிய பிறகே எது உண்மை, எது பொய் என்று அறிய முடியும். ஆனால் இதில் எதிலும் எனக்குப் பங்கு ஒன்றும் இல்லை என்று உனக்குத் திட்டவட்டமாகச் சொல்லுவேன். இதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் ஸலீமாவின் சொத்துக்கு ஆசைப் படவேயில்லை."

ரஹ்மத்கான் ஏதாவது சொல்லுவதற்கு முன்னமே ஜக்கூ பயில்வான் சொன்னார்: "உங்கள் பெருமையைப் பற்றி ஊரே சொல்லுகிறது. நீங்கள் எவ்வளவு நீதி

யுள்ளவர், உதாரகுணமுள்ளவர், நல்லவர், நம்பிக்கை யுள்ளவர் என்று உலகில் இதைப்பற்றித் தண்டோரா போட்டதுபோல் எல்லாரும் அறிவார்கள். ஆதலாலே தான் ஸலீமாவின் பாகத்தை உங்கள் பேரில் எழுதி விட்டான் என்று சியாமுலால் சொன்னபோது குறைந்த பட்சம் எனக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. ஹுஜூர்! இந்த ரஹ்மத்கான் மிகவும் ஏழை. வழக்கைத் தொடர இவனுக்கு என்ன சக்தி இருக்கிறது? 'மவூ' கிராமத்தில் வளையல் கடை வைத்துக்கொண்டு பிழைக்கிறன். ஆம்பளையும் பெண்சாதியும் இரவும் பகலுமாக ஓடியாடி வேலை செய்கிறார்கள். அதனால் ஏதோ இரண்டு வேளை வயிற்றுக்குக் கிடைக்கிறது. அந்த வேலையை விட்டு வழக்காட ஆரம்பித்தானால் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்."

ஜ்வாலா பிரஸாதுக்கு இப்போது இந்தப் பேச்சில் அலுப்புத் தட்டியது. "ஜக்கூ பயில்வான் எப்போ வழக்கில் போடப்பட்டுள்ளதோ, அதை நடத்தித்தான் ஆகவேண்டி யிருக்கிறது. தீர்ப்பை எதிர்பார்க்க வேண்டும். ஆனால் நான் வாக்களிப்பது என்னவென்றால், என் சார்பில் ஆபீஸர்கள் மேல் தகாத முறையில் எவ்விதமான நிர்ப்பந்தமும் கொண்டுவரப்படாது. எனக்கு இந்த வழக்கில் எவ்விதத் தன்னலமோ, பற்றோ இல்லை என்பதே. பெரிய ஜட்ஜ் பண்டித் கிரிஜா சங்கர் மிகுந்த நீதி குணமுள்ளவர். அவரிடம் நம்பிக்கை கொள். வழக்கைச் சரியான முறையில் நடத்து."

ஜக்கூ பயில்வானும் ரஹ்மத்கானும் எந்த நம்பிக்கை யுடன் வந்தார்களோ, அது பூர்த்தியடைந்துவிட்டது. ஜ்வாலா பிரஸாதைப்பற்றி அவர்கள் கேட்டிருந்த தெல்லாம் முற்றிலும் சரியாகவே நடந்தது. அடுத்த நாள் காலையில் ரஹ்மத்கான் திரும்பிப் போய்விட்டான். ஆனால்

ஜக்கூ பயில்வானை விஷன்லாலும் பேச்சூ மிச்ராவும் சஹாபுத்தீன்கானும் போகாமல் நிறுத்திவிட்டனர்.

அன்றைக்கே மாலையில் இன்ஸ்பெக்டர் சஹாபுத்தீனுடன் பேச்சூ மிச்ரா டாகுர் வீர்பான் சிங்கிடத்தில் குஸ்திச் சண்டை போட்டித் திட்டத்தைச் சொல்லச் சென்றனர். போலீஸின் சார்பில் இதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. பதஹ்பூரின் ஜக்கூ பயில்வானுக்கும் ஸோராவிலுள்ள புத்தூ பயில்வானுக்கும் முதல் குஸ்தி. இரண்டாவது ஜோடி மைக்கூ சிங் பயில்வானுக்கும் விஷன் பயில்வானுக்கும். இதன் பிறகு போலீஸ் ஜவான்களுடைய ஜோடிகள் ஐந்து. டாகுர் வீர்பான் சிங் புத்தூ சிங்கை அழைத்து திட்டத்தை அவர் முன் வைத்தார். புத்தூ சிங் பலவாறு சாக்குப்போக்குகள் சொல்லியும் முடிவில் இந்த திட்டத்தை ஒப்புக்கொள்ளவேண்டி வந்தது.

ஏக உற்சாகத்துடன் குஸ்திக்கான ஏற்பாடுகள் தொடங்கின. அலாகாபாத் நகரத்திலும் வேறு பல தாசில்களிலும் நோட்டீஸ்கள் விநியோகிக்கப்பட்டன. இரண்டு கோதாக்களிலும் மிகத் தீவிரமாக குஸ்தி அப்பியாசம் நடைபெற ஆரம்பித்தது.

குஸ்தி போட்டிக்கு இரண்டு நாள் முன்னர் புத்தூ பயில்வான் விஷன் குருவின் கோதா அதாவது அகாடாவிற்கு வந்தார். அப்போது ஜக்கூ உஸ்தாது விஷன் குருவை 'பிடி'களில் பழக்கிக்கொண்டிருந்தார். பயிற்சி முடிந்தவுடன் புத்தூ பயில்வான் ஜக்கூ பயில்வானிடம் தனிமையில் பேசினார். "ஜக்கூ உஸ்தாத்! என்னுடைய கௌரவம் உன் கையில்தான் இருக்கிறது. உன்னைச் சரணடைந்திருக்கிறேன்."

புத்தூ பயில்வானின் பரிதாப முகபாவத்தைப் பார்த்து ஜக்கூ பயில்வானுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன வேண்டும்?"

"என்னத்தே சொல்றது. டாகுர் வீர்பான் சிங்கின் நிழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். இந்த குஸ்தியில் தோற்றுவிட்டால் என் பிழைப்பில் மண்தான்."

ஜக்கூவுக்கும் இந்த வயசில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இல்லை. புத்தூ சிங்கின் வார்த்தையைக் கேட்டு அவர் மனதில் துணிவுண்டாகியது. "ஆம், பிழைப்பு முக்கியமாச்சே! என்ன செய்வது?"

புத்தூ பயில்வான் கொஞ்சம் யோசித்துச் சொன்னார்: "இந்த குஸ்தியில் நீ தோற்றுவிடு என்று சொல்வது சரியில்லை. ஆனால் நம் ஜோடி சரிசமமாக இருந்ததென்றால் எப்படி இருக்கும்? அதில் இருவருடைய கௌரவமும் பிழைக்கும்."

ஜக்கூ தன் துருப்புச் சீட்டை ஓங்கி ஒரு அடி அடித்தார். "ஒரு நிபந்தனைதான்! விஷ்னு மைக்கூவைத் தோற்கடித்தாக வேண்டும்."

புத்தூ பயில்வான் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டார். மைக்கூ சிங் முன்னுக்கு வரத் துடிக்கிற அடங்காப்பிடாரி வாலிபன். அவனை விஷன்லாலிடம் தோற்கும்படிச் சம்மதிக்க வைப்பது கடினம் மாத்திரம் அல்ல, நடக்காதது.

புத்தூ சிங் இரங்கிய குரலில் சொன்னார்: "வஸ்தாத்! இந்த மைக்கூ எனக்கு அடங்கமாட்டான். வேறு வழி ஏதாவது சொல்லு!"

ஜக்கூ வஸ்தாத் சொன்னார்: "உனக்குப் பிழைப்பளிப்பவர் டாகுர் வீர்பான்சிங். ஆனால் இந்த விஷன்லால் தாசில்தாருடைய தம்பி. தாசில்தாரின் தம்பி தோற்றால் அதனால் தாசில்தாருக்கு அகௌரவம் உண்டாகும். புத்தூ சிங் சிறிது யோசித்தான். "அதுவும் நியாயம் தான் பயில்வான்! எனக்கு என்ன தோன்றியதோ!

நான் வீணை இந்த ஆபீஸர் பசங்களோடு சண்டைக்கு நிற்கிறேன்! இதெல்லாம் அந்த மைக்கூ பயல் வேலை. நல்லது. மைக்கூ விஷனிடம் தோற்கத் தயாராக இல்லை என்றால் அவன் நாளை நின்று மறு நாள் நடைபெறும் குஸ்திப் போட்டிக்கே வரமாட்டான். நான் பார்த்துக்கொள்கிறேன். இந்த ஏற்பாடு சம்மதமா?"

"சம்மதம்."

குஸ்திப் போட்டி தினத்தன்று ஜனங்கள் வெகு தூரத்திலிருந்தெல்லாம் வந்து டிக்கெட் வாங்கிக்கொண்டு கூடிவிட்டார்கள். ஸோராவில் பெரிய திருவிழாக்கூட்டம். சிறிய ஜோடிகள் குஸ்தி போட்ட பிறகு விஷன் குரு மைக்கூ சிங்கின் பெயர்கள் கூப்பிடப்பட்டன. விஷன்லால் 'லங்கோட்' கட்டிக்கொண்டு ஆயத்தமாக கோதாவில் வந்து குதித்தான். ஆனால் மைக்கூ சிங் இருக்குமிடம் தெரியவில்லை. சிறிது நேரம் வரை மைக்கூ சிங் வருகையை எதிர்பார்த்த பிறகு மைக்கூ மைதானத்தை விட்டு ஓடிவிட்டான் என்று அறிவிப்புச் செய்யப்பட்டது. ஜனங்கள் கசமுச என்று பேசிக் கொண்டனர். சிறிது கூச்சலும் உண்டாகியது. ஆனால் அதற்குள் புத்தூ சிங் பயில்வானுக்கும் ஜக்கூ பயில் வானுக்கும் குஸ்தி ஆரம்பமாகிவிட்டது.

இவ்விருவருடைய குஸ்திப்பிடி தொடங்கியதோ இல்லையோ, மைக்கூ சிங் ஓடோடி கோதா அருகில் வந்து சேர்ந்தான். நேராக ஜ்வாலா பிரசாத் எதிரில் போய் நின்றான். "சர்க்கார்! நான் மைதானத்திலிருந்து புறம் காட்டி ஓடிப்போகவில்லை. என்னுடைய குரு இருக்கிறாரே புத்தூ பயில்வான், இவர் என்னைப் பல வந்தமாக அறையில் தள்ளிப் பூட்டிவிட்டு வந்துவிட்டார். இவர் ஜக்கூ பயில்வானுடன் ரகசிய ஒப்பந்தம் பேசிக்

கொண்டிருக்கிறார். ஜோடி சரி சமமாகப் பிரிந்து வர வேண்டும் என்று முன்கூட்டியே திட்டம் செய்திருக்கிறார்.''

மைக்கூ சிங் உரத்த குரலில் இதைச் சொல்லவே எல்லார் காதிலும் விழுந்துவிட்டது. மைக்கூ சிங்கின் குற்றச்சாட்டினால் ஜனங்களிடையே ஒருவிதக் குழப்பம் உண்டாகியது.

சிலர் எழுந்து நின்று கத்தத்தொடங்கினர் — "இந்த மோசடி நடக்காது. டிக்கெட் ரூபாயை வாபஸ் பண்ணு!"

இவ்விதம் தர்ம சங்கடம் உண்டாகிவிடவே ஜக்கூ பயில்வானுக்கும் புத்தூ சிங்குக்கும் பேச்சு எழவில்லை. ஜக்கூ, புத்தூவைக் கேள்விப் பார்வை பார்த்தார். புத்தூ சிங் ஜக்கூவின் காதில் சொன்னார்: "இந்தத் தடிப் பயல் மைக்கூ எப்படியோ தப்பித்து வந்துவிட்டானே!"

"நான் இவனை நன்றாகத்தான் கட்டிப்போட்டுவிட்டு வந்தேன். எப்படிக் கதவைத் திறந்துகொண்டு வந்தானோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்! என்ன சொல்வது? கூட்டம் மாத்திரம் இங்கே இல்லை என்றால், இப்பவே இவன் கழுத்தைப் பிடித்து நெரித்து விடுவேன்."

புத்தூ சிங் பொய் சொல்லவில்லை என்பது ஜக்கூவுக்குத் தெரிந்தது. புத்தூ சிங்கின் முகபாவத்தைக் கண்டு ஜக்கூவுக்கும் அவனிடம் இரக்கம் ஏற்பட்டு விட்டது. பிறகு புத்தூ சிங்கின் காதில் சொன்னார்: "பயில்வான்! கவலைப்படாதே. நீ என் வார்த்தையைக் காப்பாற்றினாய். கடவுள் உனக்கு நன்மை செய்வார்." பின்னர் இருவரும் ஒருவர் மற்றொருவரை உற்றுப் பார்த்துக்கொண்டு திரிந்தனர்.

ஜக்கூ கோதாவில் முன்னே சென்று அதிகாரிகளைப் பார்த்து சத்தம் போட்டார். "இது என்ன கூச்சல்

போட்டுக்கிட்டு இருக்காங்க ஜனங்க! குஸ்தி வேண்டாம் இன்னு நாங்க போயிடறோம்!"

ஜக்கூ பயில்வான் போட்ட இந்த சத்தத்தைக் கேட்டு கூட்டம் கொஞ்சம் அடங்கியது. குரல்கள் தணிந்தன. பேச்சூ மிச்ரா எழுந்து நின்றுகொண்டார். "குஸ்தி தொடங்கட்டும். மைக்கூ சிங்கினுடைய விஷயம் பிறகு கவனிக்கப்படும்" என்று சொன்னார். ஜக்கூ பயில்வானும் புத்தூ பயில்வானும் முன்னேறி ஒருவர் மற்றொருவருடைய கையைப் பிடித்துக் குலுக்கினர். பிறகு பிடி தொடங்கியது. ஜக்கூ பயில்வான் புத்தூ பயில்வானை விடக் குறைந்த சாமர்த்தியமுள்ளவராகவே காணப் பட்டார். ஆனாலும் இரண்டு பேரும் ஒருவரை மீறி மற்றொருவர் பெரிய பெரிய வஸ்தாது பிடிகள் காட்டினர். கிட்டத்தட்ட ஐந்து நிமிஷம் இதேபோல் சண்டை நடந்துவந்தது. பிறகு ஜக்கூசிங் புத்தூ சிங்கைத் தரையில் சாய்த்துவிட்டார். கண்மண் தெரியாமல் அழுத்தித் தேய்த்துவிட்டார். ஆனால் புத்தூ சிங் முதுகு தரையில் படாமல் விழுந்தது விழுந்தபடி கிடந்தார்.

பார்ப்பவர்கள் வெகு உற்சாகமாக இந்த குஸ்தியைக் கவனித்தனர். அவர்களுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஆனாலும் சிறிது நேரத்தில் பொறுமையை இழக்கத் தொடங்கினர். இரு பயில்வான்களும் அசைய வில்லையே ஏன்? சிலர் கசமுசவெனப் பேசிக் கொண்டனர். "மைக்கூ சிங் சொன்னது உண்மை போலத்தான் இருக்கிறது." இதற்குள் திடீரென ஜக்கூ பயில்வான் புத்தூ பயில்வானை முதுகுப்புறமாகத் திருப்ப ஒரு யுக்தி செய்யப்போய் தாமே முதுகுப் புறமாகத் தரையில் விழுந்துவிட்டார். புத்தூ சிங் அவர் மார்பில் ஏறி உட்கார்ந்தார். பிறகு வெற்றி, வெற்றி! புத்தூ சிங் அகாடாவிற்கு வெளியே ஓடிவந்தார். அவர்

ஜ்வாலா பிரஸாதுக்குச் சலாம் போட்டார். பிறகு டாகுர் வீர்பான் சிங்கின் காலைத் தொட்டு வணங்கினர். ஒரே கூச்சல். "புத்தூ சிங் ஜக்கூ பயில்வானைத் தோற்கடித்து விட்டார்!"

ஜக்கூ பயில்வான் தலை குனிந்தவாறு அகாடாவி லிருந்து வெளியேறினர். இனி மைக்கூசிங்குக்கு அவன் சொல்ல வேண்டியது கூற அனுமதி கொடுக்கப்பட்டது. புத்தூசிங் ஜக்கூவுடன் சேர்ந்துகொண்டிருக்கிருன் என்பது பொய்யாகிவிட்டது. மைக்கூசிங் சிறிது சிரிப்புக்கிடமான நிலையில் இருந்தான். அதே நேரத்தில் ஜக்கூசிங் முன்னேவந்து சொன்னர்—"இந்தப் பயலுக்கு எங்கேயோ ஏதோ காரணத்தினலே தவருகத் தோன்றி இருக்கிறது. சர்க்கார், எது எப்படியாளுலும் விஷன் இந்த கோதாவில் இருக்கிருன். இவர்கள் இருவருக்கும் போட்டி நடக்கட்டும்." கூட்டம் கை தட்டியது. ஆனல் விஷன்லாலுக்கு மூர்ச்சை போட்டது போலாகியது. ஜக்கூ தாழ்ந்த குரலில் விஷனை அதட்டினர். "அட என்னடா பார்க்கிறே; முன்னே போடா; கடவுள் கிருபையால் உனக்குத்தான் வெற்றி." பிறகு அவர் புத்தூவிடம் சொன்னர்: "வஸ்தாத், இருவரும் சிறு பையன்கள். அறியாப்பிள்ளைகள்; ஆவேசத்திலே வந்து எங்கேயாவது ஏதாகிலும தவருன பிடி போட்டுவிடப் போருங்க. ஆகவே இந்த குஸ்தியின் மேற்பார்வை நீதான் செய்யவேண்டும்." அகாடாவில் பிடிகள் தொடங்கின. புத்தூசிங் 'நடுவர்' வேலை செய்துகொண் டிருந்தார்.

மைக்கூசிங் விஷன்லாலுக்குக் கை கொடுத்ததுமே ஒரு யுத்தியைக் காட்டினன். விஷன்லால் தலைக்கு மேலே ஒரு கஜம் உயரம் எம்பிக் கீழே விழுந்தான். ஆனல் புத்தூசிங் எப்படி மைக்கூவுக்கும் விஷனுக்கும்

நடுவில் வந்து விழுந்தான் என்று ஒருவருக்கும் தெரியாது.

விஷன்லால் கவிழ்ந்தவாறு விழுந்தான். புத்தூசிங் நடுவில் வந்துவிட்டபடியால் மைக்கூசிங்குக்கு விஷன் லால் மீது ஏறி உட்கார வாய்ப்பு கிடைக்கவில்லை. விழுந்ததுமே விஷன்லால் எழுந்து நின்றான். இதற்குள் புத்தூசிங் அகன்றுபோய் ஓரமாக நின்றார்.

விஷன்லாலுக்கும் மைக்கூசிங்குக்கும் உண்மையாகவே பிடிகள் ஆரம்பமாயின. நிலைமை என்னவென்றால், விஷன்லாலும் மைக்கூசிங்கும் அகாடாவில் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தனர், முன்னே விஷன்லாலும் பின்னே மைக்கூவுமாக. ஆனால் ஒருவரும் பிடி கொடுக்க வில்லை. ஜனங்கள் சிரித்துச் சத்தம்போட்டுச் சொற்களை வீசிக்கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட ஐந்து நிமிஷம் வரை இப்படியே நடந்துகொண்டிருந்தது. கடைசியில் கூட்டத்தின் கேலிப் பேச்சுக்களைக் கேட்டு ரோஷம் கொண்டு மைக்கூசிங் விஷன்லாலைப் பிடித்தேவிட்டான். இருவரும் ஒருவர் பிடியில் மற்றொருவராகத் திரண்டு சுருண்டு அகாடாவில் பம்பரம்போல் சுற்றி வந்தனர். புத்தூசிங் இருவருடைய செயல்களையும் கவனித்துக் கொண்டே அவர்கள் கூடவே ஓடி ஓடி வரவேண்டி இருந்தது.

மைக்கூ சிங்கிற்குத் திடீரென்று எங்கேயோ ஏதோ இடித்தது போல் தோன்றியது. வேகமாகத் தடாலென விழுந்தான். விழும்போது கவிழ்ந்தவாக்கில் விழ வேண்டும் என்று சமாளிக்க முயன்றான். ஆனால் அவன் வலது பக்கமாகத் திரும்பி விழுந்தான்....புத்தூ சிங்கின் குரல் கேட்டது.

"சபாஷ் மகனே, விஷன்லால் ஜயித்தான்." பின்னர் அவர் விஷன்லாலை மைக்கூவின் பிடியிலிருந்து விடு

வித்துவிட்டார். விஷன்லால் கோதாவிலிருந்து ஓடி வெளியே வந்து நேராக ஜக்கூ பயில்வானிடம் போய் குனிந்து ஸலாம் போட்டான். பிறகு அவன் தாசில்தாருக்கு ஸலாம் செய்தான்.

பார்ப்பவர்களுக்கு இந்த இரண்டு குஸ்திகளிலும் எங்கேயோ ஏதோ சூது இருப்பதாகத் தோன்றியது. ஆனால், என்ன நடந்தது எப்படி நடந்தது என்று ஒருவருக்கும் புரியவில்லை. மைக்கூ சிங்குக்கே தெரிய வில்லை கண்ணுக்கு எதிரில் நடந்தது. இனி இதில் அவநம்பிக்கை எப்படிக் கொள்ளமுடியும்?

குஸ்திப் போட்டி நடந்த அடுத்த நாள் புத்தூ சிங் பயில்வான் ஜக்கூ பயில்வானைச் சந்திக்க வந்தார். முந்திய நாள் குஸ்தியில் கிடைத்த ஐம்பது ரூபாய் அவர் இடுப்பில் இருந்தது. அவர் அந்த ரூபாயை ஜக்கூ பயில் வான் எதிரில் வைத்துச் சொன்னார்: "வஸ்தாத், இது உன்னுடையது. நீ என் கௌரவத்தைக் காப்பாற்றினாய். அந்த நன்றிக் கடனை நான் அடைக்கவேண்டும், இந்த தடியன் மைக்கூவை இன்று காலையே கோதாவிலிருந்து வெளியேற்றி விட்டேன்." ஜக்கூ பயில்வான் ஐம்பது ரூபாயை எடுத்து மடியில் சொருகிக்கொண்டார். விஷன்லாலைப் பார்த்து, "பாருடா பயலே, புத்தூ சிங் பயில்வானிடம் தேங்காய் தட்டிக்கோ! குருவாவதற்கு இன்னும் போகணும். உனக்கு உன் கௌரவத்தை இவர் தான் காப்பாற்றினார்."

அன்று மத்தியானமே ஜக்கூ பயில்வான் பதஹ்பூர் போகக் கிளம்பிவிட்டான்.

குஸ்திப் போட்டியில் நடந்ததெல்லாம் பேச்சூ மிச்ராவுக்குச் சரியெனப் படவில்லை. தாசில்தாருடைய தம்பி விஷன்லால் மைக்கூவைத் தோற்கடித்தும் புத்தூவின் சிஷ்யன் ஆகிவிட்டான். இது ஏன்?

அவனுடைய புகழ் புத்தூ சிங்கின் புகழோடு கூடச் சேர்ந்து பரவிவிட்டது. ஆனல் அவர் தம்பியோ இன்னும் வெறும் அனுமார் கோயில் பூசாரியாகவே இருந்தான்!

இதற்குப் பின் மற்ருெரு காரியம் நடந்தது. அது பேச்சூ மிச்ராவுக்கு அதிகமாக உறுத்தியது. அனுமார் கோயில் இருக்கும் மாந்தோப்பு டாகுர் வீர்பான்சிங்கின் ஜமீந்தாரி இலாக்காவில் இருந்தது. டாகுர் வீர்பான் சிங் அந்தப் பட்டாவை விஷன்லால் பெயரில் இனுமாக எழுதி வைத்துவிட்டார். அந்தப் பட்டாவினுல் மாந்தோப்பின் நாலு பீகா நிலத்தோடு ஒரு செங்கல்லால் கட்டிய கிணறும், அனுமார் கோயிலும் விஷன்லாலின் சொத்து ஆகிவிட்டன. அந்தக் கோயிலில் குமரு அர்ச்சகராக இருப்பது விஷ்னூவோடு கூட்டு முறையிலன்றி இப்போது விஷ்னூவின் தயவில் என்று ஆகிவிட்டது.

வெயில் காலம் சூடு ஏறியது. ஜ்வாலா பிரஸாத் வீட்டின் சூழ்நிலை அமைதி நிறைந்திருந்தது. சிவில் கோர்ட்டில் கோடைக்காக ஒரு மாதம் விடுமுறை உண்டு. இந்த விடுமுறை தொடங்கியவுடனே ஜட்ஜ் கிரிஜா சங்கர் மிச்ரா ஸோராவ் கிராமத்திற்கு வந்தார்.

கிரிஜா சங்கரும் பேச்சூவும் ஒரே குலத்தினர். இருவருடைய வீடுகளும் ஒன்ருேடொன்று ஒட்டி இருந்தன. ஐம்பது வருஷங்களுக்கு முன்னர் இந்த இருவருடைய முன்னேர்களுக்கும் சண்டை உண்டாகி பங்கு பிரித்துக்கொண்டு விட்டனர். அப்போதிலிருந்தே இவ்விரு குடும்பங்களும் பகைமை பாராட்டி வந்தன. ஆனல் ஆங்கிலேய அரசாட்சியில் கிரிஜா சங்கர், பேச்சு இருவருக்கும் சர்க்கார் உத்தியோகம் கிடைத்தது. அதிலிருந்து இரண்டு கிளைகளுக்கும் பகைமை நீங்கிவிட்டது. பேச்சூ மிச்ரா கிரிஜா சங்கரைத்

தன் அண்ணன் என்ற முறையில் மதித்து, அவர் அன்பைப் பெற்றார். பேச்சூ மிச்ரா வாயிலாகத்தான் ஜ்வாலா பிரஸாதுக்கு கிரிஜா சங்கருடைய அறிமுகம் உண்டாகியது. இந்தப் பழக்கம் சிறுகச் சிறுக வளர்ந்து ஆழ்ந்த நட்பாக மாறியது.

கிரிஜா சங்கர் வந்திருக்கும் செய்தி கேட்டு மூன்றாம் நாள் முன்ஷி சிவலால் பேச்சூ மிச்ராவின் வீட்டுக்குப் போனார்.

எல்லாரும் எழுந்து முன்ஷி சிவலாலை வரவேற்றனர். பிறகு சிவலாலுக்கு கிரிஜா சங்கரின் பக்கத்தில் இடம் கொடுத்துப் பேச்சூ மிச்ரா சொன்னார். "முன்ஷிஜீ' வெயில் அதிகமாகிவிட்டது. அனற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. மாவடுவின் சாற்றில் 'பங்' தயாராகிக் கொண்டிருக்கிறது. குடித்தால் உடம்பில் குளுமை உண்டாகும்."

முன்ஷி சிவலால் சொன்னார்: "என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு ஒரே ஒரு வஸ்துதான் பழக்கமாகி யுள்ளது."

"வாயின் ருசியை மாற்றிக்கொள்ள ஊறுகாய் மாதிரி எப்போதாவது வேறு வஸ்துவையும் கொள்ளலாம்" சிரித்துக்கொண்டே கிரிஜா சங்கர் சொன்னார்.

"ஜட்ஜ் சாஹப், ருசி மாற்றிக்கொள்ள வேண்டிய வயது கழிந்துவிட்டது. இனி நான் வாழ்வு முடிவடை வதை எதிர்பார்க்க வேண்டியதுதான். நீங்கள் நம்ப மாட்டீர்கள். இப்போது சாமானியமாக அரை ஆழாக் களவுகூட சாராயம் சாப்பிடமுடியவில்லை. ஒரு காலத்தில் குடம்குடமாகக் குடிப்பேன். சாராயம் மருந்து போல ஆகிவிட்டது இப்போது."

'பங்' தயாராகி வந்தது. எல்லாரும் கட்டாயப் படுத்தவே முன்ஷி சிவலால் மறுக்க முடியவில்லை.

அவரும் பாதிக் குவளை "பங்" கலந்த மாஞ்சாறு சாப்பிட வேண்டி வந்தது.

பங் குடித்த அரை மணிக்குள் கிரிஜா சங்கர், பேச்சூ இருவருடைய உறவினர்களும் போய்விட்டனர். எல்லோரும் சென்ற பிறகு பேச்சூ மிச்ரா கேட்டார்: "என்ன முன்ஷிஜீ, உங்கள் உடல் நலம் இப்போது எப்படி இருக்கிறது? இங்கு இவ்வளவு தூரம் வந்த காரணம்?"

"எல்லாம் ராமனுடைய கிருபை." முன்ஷி சிவலால் பதில் அளித்தார். "ஜட்ஜ் சாஹப் வந்திருக்கும் செய்தி கேட்டு அவரைச் சந்திக்கலாமே என்று வந்தேன். ஜ்வாலாவுக்கு மூச்சு வாங்கக்கூட ஒழிவு கிடையாது"

"அட, நீங்கள் ஏன் சிரமம் மேற்கொண்டீர்கள். நாங்களே ஒரு நாள் அங்கு வருவதாக இருந்தோமே!" கிரிஜா சங்கர் சொன்னார்.

"நானே வந்தால் தப்பா? ஒரு பழமொழி உண்டு. தாகம் கொண்டவன் கிணற்றுக்கு வருவான் என்று. எங்களுடைய ஒரு சொந்த வேலையும் இருக்கிறது. அதனால் ஜட்ஜ் அவர்கள் நம்முடைய மனிதர்தானே; அவர் உதவி செய்யவில்லை என்றால் வேறு யார் செய்வார்கள் என்று யோசனை பண்ணினேன்."

"விஷயத்தைச் சொல்லுங்கள்." கிரிஜா சங்கர் சொன்னார். ஆனால் அவருடைய குரலில் சிறிது நடுக்கம் இருந்தது.

முன்ஷி சிவலால் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "விஷயம் என்னவென்றால், பதஹ்பூரில் எங்கள் ஜமீந்தாரி சம்பந்தமாக ஒரு சிக்கல் உண்டாகியுள்ளது. உங்கள் கோர்ட்டில் ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது. ரஹ்மத்கானுக்கும் சியாமலால் மற்றும் ஸலீமா அவர்களுக்கும்." "ஆமாம், அந்த சியாமலால்

பெயரில் ஸலீமா தனது கிராமத்தை விற்பனைசெய்தாளா, தானமளித்தாளா, எழுதிக் கொடுத்திருக்கிறுளா, என்ன செய்திருக்கிறுள் என்று ஸ்பஷ்டமாகத் தெரியவில்லை. ஆனுல் சலீமா சொல்வது என்னவென்ருல், நிலத்தை விற்பனை செய்யவுமில்லை, தானம் செய்யவுமில்லை, யார் பெயரிலும் எழுதிக் கொடுக்கவும் இல்லை. அவளுக்கு அபினி கொடுத்து மயக்கி மோசடியாகக் கை நாட்டு வாங்கப்பட்டுவிட்டது என்கிருள்."

"சுத்தப் பொய், சுத்தப் பொய்" முன்ஷி சிவலால் ஆவேசமடைந்து சொன்ஞர். "ஜ்வாலாவிடம் ஆயிரக் கணக்காக ருபாய் வாங்கி இருக்கிருள். அடிக்கடி விருந்து அளிப்பாள். தன் பெண்ணுடனும் மருமக னுடனும் அவளுக்குச் சரிப்படாது." கிரிஜா சங்கர் பேசுவதற்குள் பேச்சூ மிச்ரா சொன்ஞர்: "தாசில்தார் அவர்கள் ருபாய் கொடுத்திருக்கிருர் என்ருல் அவர் பொய் சொல்லமாட்டார். தாசில்தார் பணம் கொடுத் திருக்கிறேன் என்று ஒரு வார்த்தை சொன்ஞராஞல் போதும். நீங்கள் வழக்கில் வெற்றி பெற்றதாகத்தான் அர்த்தம். இதில் உங்களுக்குக் கவலைப்பட என்ன இருக்கிறது?"

முன்ஷி சிவலால் சென்ஞர்: ஜ்வாலா ருபாய் சியாம லாலுக்குக் கொடுத்தான். நேராக ஸலீமா கையில் அல்ல. ஆகவே அவன் ஸலீமாவுக்கு ருபாய் கொடுத் தேன் என்று சொல்லமாட்டான்.

பேச்சூ மிச்ரா ஒன்றும் மெலிந்த ஆட்டக்காரர் அல்ல. அவர் சென்ஞர் — "பரவாயில்லை. தாசில்தார் இதையே சொல்லிவிடட்டும். இது போதுமானது." முன்ஷி சிவலால் சிறிது தணிந்துவிட்டார். "ஏன், நான் சொல் வது போதாதா? நான் ஜ்வாலாவின் தகப்பஞர்."

இம்முறை கிரிஜாசங்கர் பதில் சொன்ஞர்: "சியாமலால்

ஜ்வாலாவின் சிற்றப்பா மகன்; ராதேலால் ஜ்வாலாவின் சிற்றப்பா. எப்போது நான் இவ்விருவருடைய பேச்சிலும் நம்பிக்கை கொள்ளவில்லையோ, அப்போது உங்கள் பேச்சில் எப்படி நம்பிக்கை கொள்ள இயலும்? ஜ்வாலா உயர்ந்த ஆபீஸர்; மானம் மரியாதை நாணயம் உள்ளவர். அவர் பொய் சொல்லமாட்டார். அவர் வார்த்தையை நான் நம்புவேன்.'' அவர் எழுந்த வாறு சொன்னார்.

''சரி, நல்லது. நான் ஜ்வாலாவிடம் அவனே உங்களிடம் பேசிக்கொள்ளும்படி சொல்கிறேன். இந்தச் சொத்தை சியாமலால் ஜ்வாலாவின் பேரில்தான் எழுதச் சொல்கிறான். ஒருவேளை சங்கோசப்பட்டு ஜ்வாலா இந்த விவகாரத்தில் தானே ஒன்றும் சொல்ல விரும்பா விட்டால் இந்த அத்தாட்சி போதாதா?'' ''போதாது! கூட்டுக் குடும்பத்தில் ஆஸ்தி யாருடைய பெயரில் இருந்தாலும் அதில் எவ்வித வித்யாசமும் ஏற்படாது. முன்ஷிஜீ, உங்களுக்கு இவ்வளவும் தெரிந்ததுதான், விஷயம் நம்பிக்கையைப் பொறுத்தது. ஜ்வாலா பாபூ கோர்ட்டுக்கு வரவேண்டிய அவசியம் ஒன்றும் இருக்காது. அவர் என்னிடம் சொல்லிவிட்டால் போதும். இந்த விடுமுறை முடிந்ததும் ''ஹியரிங்'' நடைபெறும். வாதம் முடிவடைந்ததும் தீர்ப்பு கொடுப்பேன்.''

வீட்டுக்கு வந்து முன்ஷி சிவலால் ஜ்வாலா பிரஸாதிடம் கூறினார்: ''ஜட்ஜ் கிரிஜா சங்கர் வந்திருக்கிறார். இன்று நான் அவரைச் சந்திக்கப் போயிருந்தேன். ஜ்வாலா பாபுவை இன்னும் சந்திக்க வில்லையே என்றார் அவர்.''

''ஆமாம், இங்கே கொஞ்சம் வேலை அதிகமாக இருந்தது. இரண்டொரு நாளில் போய்ப்பார்க்கிறேன்.''

முன்ஷி சிவலால் சொன்னார்: "நான் சியாமுவின் வழக்கைப்பற்றி அவரிடம் பேசினேன். ஜ்வாலா பிரஸாத் ஸலீமாவுக்கு ரூபாய் கொடுத்ததாகச் சொல்லிவிட்டால் நான் ரஹ்மத்கானின் வழக்கைத் தள்ளுபடி செய்து விடுவேன் என்று சொன்னார்."

"அப்பா, இது எப்படி முடியும்? நான் ரூபாய் எப்போது கொடுத்தேன் ஸலீமாவுக்கு? எனக்கு அவளை அடையாளம்கூடத் தெரியாதே. இவ்வளவு பெரிய பொய் என்னால் சொல்ல இயலாது."

"....ம், அது சரிதான். ஆனால் நீ சியாமலாலுக்கு நிலம் வாங்கப் பணம் கொடுத்ததாக மட்டுமாவது சொல்ல முடியும் அல்லவா? சியாமலாலுக்கு நிலம் வாங்க நான் உன்னுடைய பணத்தைக் கொடுத்துள்ளேன் என்பது பொய்யும் அல்ல. ரூபாய் ஸலீமாவின் நிலத்தை வாங்கக் கொடுக்கப்பட்டதா அல்லது வேறு நிலத்தை வாங்கவா என்பதைப்பற்றி அக்கறையில்லை."

ஜ்வாலா பிரஸாதின் முகத்தில் ஒரு பொருள் பொதிந்த புன்னகை தவழ்ந்தது. "ஆமாம். மகாபாரத யுத்தத்தில் தருமராஜா நிசத்தைதானே சொன்னார்—அச்வத்தாமா கொல்லப்பட்டான், மனிதனோ யானையோ என்று."

முன்ஷி சிவலால் கடுமையான குரலில் சொன்னார்: "மஹாபாரதக் கதையை இங்கு இழுக்கக் கூடாது."

"ஆமாம், இது கலியுகம். மேலும் என்னுடைய ரதத்தின் சக்கரம் நிலத்தை விட்டு மேலேயே நடப்பதுமில்லை, அது பூமியில் பட்டுவிட. கர்ணனுக்குத்தான் அந்த நிலை வந்தது. எனக்கு அந்த வகையான நிலைமை வராதுதான். எல்லாம் தெரியும். ஆனால் சர்க்காரின் பெரிய ஆபீஸர் ஆகையால் நான் பொய் சொல்ல

முடியாது. அரைகுறை உண்மையைச் சொல்வதற்கோ, கிரிஜா சங்கர் துரோணாசாரியர் அல்ல, ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு உட்கார்ந்து விட! அவர் ஜட்ஜ். அவர் தர்க்கரீதியாகச் சிந்தனை செய்வார். அதில் இந்த அரை குறை உண்மை எளிதாக முழு உண்மையாக வெளி வந்துவிடும். ஏனெனில், நான் பொய் சொல்ல முடியாது.''

பேச்சூ மிச்ரா வீட்டில் ''பங்'' கலந்த மாஞ்சாறு முன்ஷி சிவலால் இரண்டு வாய்தான் குடித்திருந்தார். ஆனால் அதில் கூடுதல் போதை இருந்தது. முன்ஷி சிவலாலுக்கு அவருடைய பிள்ளை இந்த உண்மை, நம்பிக்கை என்று தன்னுடைய காலிலேயே கோடாரி போட்டுக் கொள்ளுவது மாத்திரமல்லாமல் தம் குடும்பத்தினரைக் கிண்டலும் செய்கிறான் என்று தோன்றியது. ஜ்வாலா பிரஸாதின் ஒவ்வொரு சொல்லும் அவருக்குக் கடுமை யான வசவுபோல அவமானகரமாகத் தோன்றியது. முன்ஷி சிவலாலுக்கும் திடீரெனக் கோபம் அதிகரித்து விட்டது. ''பெரிய தர்மராஜாவுக்கு அப்பனாக இருக்கிறார் இவர்! ஒரு நல்ல ஜமீந்தாரியைத் தொலைத்துக்கொண் டிருக்கிறான். என் பிள்ளை இவ்வளவு ஏமாளி என்று எனக்கென்ன தெரியும்.'''

முன்ஷி சிவலால் குரல் மிகவும் உயர்ந்துவிட்டது. சின்கீ, பீக்கூ, யமுனா, விஷன்லால் எல்லாரும் முற்றத்திற்கு வந்துவிட்டனர்.

கோபம் பைத்தியத்தின் மற்றொரு உருவமாகக் கருதப் படுகிறது. பைத்தியத்தின் வேகத்தைப் போலவே கோபத்திற்கும் வேகம் உண்டு. அதில் மனிதன் தன்னுடம்பின் மேலுள்ள கட்டுப்பாட்டின் சக்தியை இழந்துவிடுகிறான். முன்ஷி சிவலால் ஜ்வாலா பிரஸாதின் பதிலுக்காகச் சிறிது நேரம் வரை எதிர்

பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு ஜ்வாலா பிரஸாதிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அதற்கு மாருக அங்கே ஒரு கூட்டம் கூடிவிட்டது. முன்ஷி சிவலால் கர்ஜனை செய்தார். "ஏன் பேச மாட்டேனென்கிருய் கழுதை! உன்னைப் பெற்றேன், படிக்க வைத்தேன். இதெல்லாம் எதற்குச் செய்தேன் என்ருல், என் வார்த்தையைக் கேட்க நீ தர்மராஜாவுக்கு அப்பனுக வேண்டும் என்பதற்காக!"

இவ்வாறு அவர் கோபம் ஜொலித்ததால் ஜ்வாலா பிரஸாத் உள்ளத்தில் இருக்கும் உண்மையும், நாணய உணர்ச்சியும் இன்னும் அதிகமாக உறுதிப்பட்டன. அவர் இம்முறை திட்டவட்டமாகச் சொன்ஞர்: "என்னுடைய உண்மையையும், நம்பிக்கைத் தன்மையையும் நீங்கள் என்ன, கடவுளே நேரில் வந்து கைவிடச் சொன்னுலும் மறுத்துவிடுவேன்."

திடுதிப்பென்று முன்ஷி சிவலால் எழுந்து நின்ருர். அருகில் வைத்திருந்த தண்ணீர் நிறைந்த மண் கூஜாவை எடுத்தார். "இந்தா உன் நம்பிக்கை—உண்மைக்காக நான் பலியாகிவிடுகிறேன்" என்று கூறி இரண்டு கைகளாலேயும் அந்த மண்பாண்டத்தைத் தன் வலிமை அனைத்தையும் செலுத்தித் தன் தலைமேல் போட்டு உடைத்துக்கொண்டார். முன்ஷி சிவலால் அடிபட்டுத் தடுமாறித் தரையில் தடாலென்று விழுந்தார். எல்லாரும் ஓடிவந்தனர். சிவலால் கீழே விழுந்ததுமே மூர்ச்சித்து விட்டார். அவர் தலை உடைந்து இரத்தம் பெருகத் தொடங்கியது.

அன்று இரவே அலாகாபாதிலிருந்து டாக்டர் வரவழைக்கப்பட்டார். நல்ல சிகிச்சை செய்யப்பட்டது. ஆனல் சிவலாலுக்கு நினைவு திரும்பவில்லை. ஒரு வாரம் வரையில் சாவுக்கும் உயிருக்குமாகப் போராட்டம்

நடந்தது. ஏழாம் நாள் முன்ஷி சிவலால் கண்களைத் திறந்தார். அவர் சின்கீயை விட்டு ஜ்வாலா பிரஸாதைக் கூப்பிட்டனுப்பினர். ஜ்வாலா பிரஸாதைப் பார்த்ததும் அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. "போய் வருகிறேன் மகனே! என்னை மன்னித்துவிடு! தவறு உன்னுடையது அல்ல; இந்தக் கிழத்தனத்திலிருந்து எனக்கு விடுதலை கிடைத்தது போ!"

ஜ்வாலா பிரஸாத் அழுதுகொண்டே சொன்னர்: "நீங்கள் உடம்பு தேறிக் குணமடைந்துவிடுவீர்கள் அப்பா. இப்படியெல்லாம் பேசாதீர்கள்." முன்ஷி சிவலால் ஜாடை காட்டி சின்கீயைக் கூப்பிட்டார். பிறகு அவர் களைத்து அணைந்துகொண்டிருக்கும் குரலில் சொன்னர்: "இந்த சின்கீ—இவளை உன் தாயாராக நினைக்க வேண்டும். உன் பொறுப்பில் இவளை விட்டுப் போகிறேன்." இதைச் சொல்லி முன்ஷி சிவலால் நிரந்தரமாகக் கண்களை மூடிக்கொண்டார்.

12

முன்ஷிராம தேலால் ஜ்வாலா பிரஸாதுடன் முன்ஷி சிவலாலின் சிராத்தத்தைப்பற்றித் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார். "ஜ்வாலா! ரொம்ப பிரக்கியாதியோடு வாழ்ந்தவரப்பா அண்ணு! குடும்பத்தை வலுவாக்கி விட்டுப் போனர். பார்க்கப் போனல் ஐந்நூறு பிராமணர்களுக்கு "பிரம்ம போஜனம்"—சமாராதனை—செய்விக்கவேண்டும். ஆனல், ஐந்நூறு பிராமணர்கள் இந்த பட்டிக்காட்டில் கிடைக்கமாட்டார்கள். ஆகவே

நூற்றிருபத்தைந்து பிராமணர்களுக்குச் சமாராதனை நடக்கட்டும். பிறகு நமது பந்துக்கள், வேண்டியவர்கள் இவர்களுடைய பிரச்னை. ஸோராவ், அலாகாபாத், பதெஹாபாத்,—எல்லா ஊர்களிலிருந்தும் இருநூறு—முன்னூறு பேர் வருவார்கள்."

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "நீங்கள் கணக்குப் போடுவதைப் பார்த்தால் கிட்டத்தட்ட ஐந்நூறு அறுநூறு பேர்களுக்குச் சாப்பாடு போடவேண்டி வருமோ ?"

"ஆம் தம்பி, அண்ணாவின் பரலோக கதி மோட்சத்தைப் பற்றிய விஷயம். இதிலெல்லாம் சிக்கனம் பிடித்தால் நடக்காது. மற்றவங்க சிக்கனம் பண்ணினா பண்ணட்டும். நீயோ தாசில்தார்; ஸோராவிற்கே ராஜா மாதிரி. ஒரு உத்திரவு மாத்திரம் போட்டுவிடு. எல்லா சாமானும் நிமிஷத்தில் வந்து சேர்ந்துவிடும்!"

ஜ்வாலா பிரஸாத் தாழ்ந்த குரலில் சொன்னார் : ஆனால் பாருங்கள், இதெல்லாம் நான் ஒருபோதும் செய்தது இல்லை. இப்படியெல்லாம் செய்வது தவறு. சிராத்தத்திற்கு இந்த ஏற்பாடெல்லாம் அவசியமா ?

"அவசியம் இல்லை என்றால் நான் ஏன் உன்னிடம் சொல்லுகிறேன் ?" ராதேலால் சொற்களைச் சிறிது அழுத்தமாகச் சொன்னார். பெரிய புண்ணியாத்துமா! மிகவும் பெருமையோடு வாழ்ந்தவர் அண்ணா! அவருக்கு நற்கதி கிடைக்க வேண்டும். பிராமணர்களுக்கும் உறவு முறையாருக்கும் சாப்பாடு போடுவதனால் அவருடைய ஆன்மாவுக்குத் திருப்தி உண்டாகும். நான் இப்போதே ரிவின்யூ இன்ஸ்பெக்டர் அம்ஜத் அலியிடம் சொல்லுகிறேன். பதினைந்து நாட்களுக்குள் வீட்டில் உட்கார்ந்தபடியே எல்லாம் வந்துவிடும்."

சின்கீ அருகில் நின்றுகொண்டே எல்லாம் கேட்டுக்

கொண்டிருந்தாள். அவள் கண்களினின்று பொலபொல வென்று கண்ணீர்த் துளிகள் சொரிந்துகொண்டிருந்தன. இப்போது அவளால் சும்மா இருக்க முடியவில்லை. "இம் மாதிரி பலவந்தமா கட்டாயப்படுத்தி சாமான்களைச் சேர்த்தா அவருக்கு நல்லகதி எப்படிக் கிடைக்கும்? இதெல்லாம் சரியில்லை. இருபத்தியொரு பிராமணர் களுக்குச் சாப்பாடு போட்டுடு. வேண்டியவங்க, உறவுக் காரங்க அம்பது அறுவது பேர் வருவாங்க. அவர் களுக்கும் விருந்து போட்டுடணும். இதுக்கு வேண்டிய சாமானுக்கு நான் கவனிச்சுக்கிறேன். நீ கவலைப் படாதே!"

சின்கீயின் குறுக்கீடு முன்ஷி ராதேலாலுக்குப் பிடிக்க வில்லை. "நீ மறுபடியும் குறுக்கே பேசறே சின்கீ! பெரிசா வந்துட்டா ஏற்பாடு செய்றவ! எங்க மூக்கு அறு படணும்னு நினைக்கிறே நீ!"

சின்கீ இப்போது எரிந்துவிழுந்தாள். அவள் ஜ்வாலா பிரஸாதினிடம் சொன்னாள்: "இனிமே நான் இந்த வீட்டிலே இருக்கமாட்டேன். பேசவும்மாட்டேன். இவங்க செய்கிற அதர்ம வலையிலே விழுந்து அவரு பிராணன் விட்டாரு; இப்போ ஜ்வாலாவையும் மாட்டிவைக்கப் பாக்கிறாங்க! என்னாலே இதெல்லாம் பாத்துக்கிட்டு இருக்க முடியாது!" அவள் அழுது கொண்டே அங்கிருந்து போய்விட்டாள்.

ஜ்வாலா பிரஸாத் சின்கீ சென்ற பிறகு சொன்னார்: "சித்தப்பா! சின்கீ சொல்வது சரி என்று நான் நினைக் கிறேன். ஊர் ஜனங்களிடமிருந்து பலவந்தமாக வசூல் செய்தால் ஜனங்கள் மனம் வருந்தும். என்னிடமோ பணம் இல்லை. கொஞ்சம் சாவகாசமாக இதைப்பற்றி யோசியுங்கள்."

அதே நேரத்தில் சியாமலால் கங்காபிரஸாதை

ஜ்வாலாபிரஸாத் எதிரில் இழுத்துக்கொண்டு வந்தார்— "அண்ணு! பார் இந்த கங்கா பண்றதை! இவன் விஷ்னு அவன் தோழர்களுடைய கூட்டத்தில் சேர்ந்து 'பங்' குடித்து வந்திருக்கிருன். பீக்கூ இவனைத் தடுப்பதற்குப் பதிலாக தானும்ஒரு லோட்டா போட்டுக்கிட்டு வந்திருக்கிருன்.

ஜ்வாலா பிரஸாத் அல்லது ராதேலால் ஏதாவது சொல்வதற்கு முன்னரே பீக்கூ ஒரு மிட்டாய்க்கூடையை எதிரே கொண்டுவந்து வைத்துச் சொன்ஞன்: "இந்தாருங்க அனுமார் கோயில் பிரசாதம். கங்கா பாஸ் ஆகிவிட்டானில்லையா. கோயிலில் பங் பிரஸாதம் கொடுத்தாங்க. கொஞ்சம் பிரஸாதம் நானும் வாங்கிக் கொண்டு வந்து இவனுக்கும் கொடுத்தேன். அப்போ அங்கே இந்த சியாமலால் வந்தார் பூசையில் கரடி வந்தது போல. அப்போதிலிருந்து இவர் கங்காவை அழ வைத்துக்கொண்டிருக்கிருர் வீணுக, வெட்கமில்லாத மனுஷன்! அங்கே விஷ்னுவைக் கண்டபடி திட்டிவிட்டு வந்தார்."

பீக்கூவின் ஆதரவு வார்த்தை கேட்டு கங்கா பிரஸாத் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான். அவன் அழும் குரலைக் கேட்டுச் சின்கீ வேகமாக வீட்டுக்கு வெளியில் வந்தாள். மிகப் பரிவோடு கங்காபிரஸாதின் கையைப் பிடித்துக்கொண்டு சொன்ஞள்: "சின்னஞ்சிறு குழந்தை. பிஞ்சு மனசு; அதை இப்படியா அதட்டறது. வா குழந்தே! சிரிச்சு விளையாடற நாள். இன்னைக்குப் போய் அழ விட்டுக்கிட்டிருக்காங்க. சின்கீ கங்கா பிரஸாதுக்குச் சமாதானம் சொல்லியவாறே வீட்டிற்குள் அழைத்துச் சென்ருள். சின்கீ பின்னல் பீக்கூவும் மிட்டாய்க் கூடையை எடுத்துக்கொண்டு போஞன்.

சின்கீயும் பீக்கூவும் போன பிறகு சியாமலால்

சொன்னான்: "அண்ணா! இந்த அல்பங்களை ரொம்பத் தான் தலைமேல் தூக்கி வெச்சுக்கிட்டிருக்கிறீங்க! எங்களோடு எதிர்த்து மறுத்துப் பேசி வாதம் போடருங்க." ராமேதலால் தன் பிள்ளையைச் சமாதானப்படுத்தினார். "பரவாயில்லை. ஜ்வாலா பரம சாது. நேர்மையுள்ளவன். இனி நான் வந்துவிட்டேன் வீட்டைப் பார்த்துக் கொள்ள. இரு, இவங்களைச் சரிப்படுத்துகிறேன்."

ஜ்வாலா பிரஸாத் அப்பா—மகனிடையே நடைபெற்ற பேச்சைக் கேட்காதவர்போல் இருந்துவிட்டார். அவர் சியாமலாலைப் பார்த்து "சியாமு, நீ பதஹ்பூர் நிலத்துக்கு என்ன ஏற்பாடு செய்தாய்? இந்தத் தடவைதான் நல்ல விளைச்சலாயிற்றே?"

"விளைச்சலைப் பற்றி என்னத்தைச் சொல்ல? உலகத்திலே ஒரேயடியாய் அநியாயம் பெருத்துப் போச்சு. எந்த உழவாளிகளுக்கு நான் நிலத்தைக் குத்தகைக்கு விட்டேனே, அவங்களே அநியாயம் பண்ணத் தொடங்கிட்டாங்க. பணம் கொடுப்பதில்லை. அவர்கள் பேரில் வழக்குத்தான் தொடரணும் போலிருக்குது."

"சரி, அந்த எழுபது பீகா சொந்தச் சாகுபடி நிலம் என்ன ஆச்சு?"

"ஆம். அதைச் சாகுபடி வாரத்துக்கு விட்டேன்! ஆனால், அந்தக் கேசவ சிங் இப்படித் திருடனா வந்து சேருவான் என்று நான் நினைக்கவேயில்லை. அறுவடை செய்து இரவோடு இரவாக தலைமறைவாகிவிட்டான்! என்னுடைய பயிர் தீய்ந்துவிட்டது. நூற்றைம்பது மணங்கு கோதுமையும், நூறு மடங்கு கடலையும் கண்டு முதல். அதில் கிட்டத்தட்ட எழுபது மணங்கு கோதுமையும், இருபது மணங்கு கடலையும் விதை கொடுத்த வட்டிக்காரனுக்குக் கொடுத்தாச்சுன்னு சொல்லுகிறான்.

ஆக மொத்தம் முப்பது மணங்கு கோதுமையும், முப்பது மணங்கு கடலையும் என் பங்குக்கு வந்தது. அதை விற்று நிலத்துக்கு வரியைக் கொடுத்துவிட்டேன். சுமார் பதினைந்து ரூபாய் நான் கையை விட்டுக் கொடுக்க வேண்டி வந்தது.''

ஜ்வாலா பிரஸாதின் முகத்தில் ஒரு சிறு புன்னகை தோன்றியது. ''விவசாயம்ங்கிறது ஆட்களை ஏவிவிட்டு நடைபெறுவதல்ல; சொந்தமாக உழைக்க வேண்டும் தம்பி.''

''நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால் அண்ணா, என்னால் ஏர் பிடிக்க முடியாது. அது குடும்பத்தின் கௌரவத்தைப் பற்றிய விஷயம். இனி பதஹ்பூரில் இவ்வளவு கொஞ்சமாக நிலத்தை வைத்துக்கொண்டு பிரயாசைப்படறது பயனற்றது. ரஹீம்பூரா ஜமீந்தாரி கிடைத்திருந்தாலும் ஏதோ நன்மை இருந்திருக்கும். சொந்த நிலத்தில் விவசாயம் செய்து அதைக்கொண்டு பிழைப்பது கஷ்டம்.''

''அப்படியானால் அந்த நிலத்தை விற்றுவிடுவது தானே?'' என்று ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

இப்போது ராதேலால் பேசினார்: ''ஜ்வாலா குழந்தே, நிலத்தை விற்கிற பேச்சு மட்டும் எடுக்காதே, மேற்கொண்டு நிலத்தை வாங்குவதைப் பற்றிப் பேசு. அண்ணா சிராத்தம் ஆனதும் நான் சியாமுவை அழைத்துக் கொண்டு பதஹ்பூர் போகிறேன். என்னிடம் கொஞ்சம் ரூபாய் இருக்கிறது. ஒன்றும் இல்லையென்றால் பீர்பூரா கிராமத்தில் நிலம் விற்பனையாகிக்கொண்டிருக்குது. அதில் கொஞ்சம் வாங்கிக்கொள்கிறோம். கடைசியில் எப்படியோ ஒரு வகையில் நம் நிலையைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும் இல்லையா!''

இதே நேரத்தில் வீட்டை நோக்கி ஒரு 'இக்கா'

வருவது தென்பட்டது. "யாராக இருக்கும்?" ராதேலால் சொன்னார். அங்கிருந்தே குரல் கொடுத்தார் — "யார் வருகிறது?" 'இக்கா' வீட்டிற்கு எதிரே வந்து நின்றது. முன் படுதா மூடிக்கொண்டிருந்தது. ராதேலாலின் பெரிய மகன் ராமலால் மட்டும் படுதாவுக்கு வெளியே அமர்ந்திருந்தான். 'இக்கா'விலிருந்து இறங்கிய வாறே ராமலால் சொன்னான்—

"நான்தான் அப்பா! பள்ளிக்கூடத்தில் கோடை கால விடுமுறை தொடங்கிவிட்டது. எல்லாரையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்."

ஜ்வாலா பிரஸாத் பார்த்தார். 'இக்கா'விலிருந்து ராமலாலின் மனைவி, சியாமலாலின் மனைவி, மற்றும் மூன்று குழந்தைகள் இறங்கிக்கொண்டிருந்தனர்.

சியாமலால் ஓடிப்போய் 'இக்கா'விலிருந்து சாமான்களை இறக்கச்செய்தான். வீட்டில் ஒரே ஆரவாரம். இரண்டு நாட்டுப்பெண்களும் தங்கள் மாமியாருடைய கால்களைத் தொட்டு வணங்கினர். யமுனாவைக் கட்டிக் கொண்டார்கள். வீட்டு உள் முற்றத்தில் இரண்டு கட்டில்கள் போடப்பட்டன. பெண்கள் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் குசலக்ஷேமம் விசாரித்துக்கொண்டு பேசத் தொடங்கினர். ராமலால் வெளியே வந்து மற்றவர்களோடு சேர்ந்துகொண்டார்.

"என்ன ஜ்வாலா! சௌக்கியந்தானே? பெரியப்பா சிராத்தம் வரதே என்று நினைத்தேன். அங்கே பள்ளிக் கூடத்தில் விடுமுறை. எல்லாரையும் அழைத்துக் கொண்டு ஸோராவ் வந்தேன்." பிறகு அவன் சியாமலால் பக்கம் திரும்பினான். "என்ன சியாமு, எங்கேயாவது இப்படித்தான் நிலபுலன்களைக் கவனிப்பார்களா? நீ இங்கே உட்கார்ந்திருக்கிறாய், அங்கே சொந்த சாகுபடி நிலத்தில் கிரிமினல் வழக்கு நடக்கக்கூடும் நிலை

உண்டாகியது. அப்பா, சியாமு கொஞ்சம் பாடுபட்டிருந்தால் நல்ல மாசூல் கிடைச்சிருக்கும். ஆனால் இவனுக்கு அங்கே இருப்புக்கொள்ளுவதே இல்லை. ஸோராவ், அலாகாபாத், பதஹ்பூர் என்று சுற்றிக்கொண்டிருக்கிறான். நீ அந்த இடத்தில் இல்லாது போனால் எப்படி வேலை நடக்கும்?" ராமலால் வந்ததும் வராததுமாக இந்தப் பஞ்சாயத்து விசாரணை ஆரம்பித்துவிட்டான். சியாமலாலுக்குக் கோபம் வந்தது. அவன் சொன்னான்— "நீங்கள்தான் அங்கே இருக்கிறீர்களே. நீங்களே சமாளிக்கிறதுதானே அந்த நிலத்தை."

ராமலால் கருவத்துடன் தலை நிமிர்ந்து சொன்னான்: "நீ என்னை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்? நான் உழவர்களிடம் குத்தகை பூரா வசூல் பண்ணிவிட்டேன். அதுமட்டுமல்ல, நம்ம நிலத்தோடு ஒட்டியுள்ள எட்டு பீகா நிலமும் டாகுர் பச்சூ சிங்கிடமிருந்து வாங்கிவிட்டேன். பாதி ரூபாய் அடைச்சாச்சு! இன்னும் சுமார் முந்நூறு ரூபாய்க்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதை ஜ்வாலா! நீதான் செய்ய வேண்டும்."

"சித்தப்பா ஏற்பாடு செய்வார்; நிலம் வாங்குவதற்காக அவர் பணம் சேர்த்து வைத்திருக்கிறார்."

இந்தப் பேச்சினால் ஜ்வாலா பிரஸாதின் மனதில் ஒரு விசித்திரமான குழப்பம் உண்டாகிக்கொண்டிருந்தது. இதை முடித்துவிட அவர் உரக்க பீக்கூவை அழைத்தார்.

பீக்கூ வீட்டிலிருந்து வெளியே வந்தான். "சித்தியைக் கேள், சாப்பாடு ஆகிவிட்டதா என்று. ரொம்ப நேரம் ஆகிவிட்டது; எனக்குப் பசி எடுத்துவிட்டது. இவர்களும் ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள். நான் சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கவேண்டும். ரொம்பக் களைப்பாக இருக்கிறது."

"சாப்பாடு எப்பவோ தயாராகிவிட்டது. சமையற்காரி

போய்விட்டாள். சித்தி கொஞ்சம் பூரி பொறித்துக் கொண்டிருக்கிறுர்கள். ராமலால் குளிக்கட்டும். நீ எழுந்து சாப்பிடு. நாளைக்கு நீ காலையிலேயே சுற்றுப் பயணத்துக்குப் புறப்படணுமே!" என்றுள் சின்கீ.

"நல்ல வேளை, ஞாபகப்படுத்தினே!" ஜ்வாலாபிரஸாத் எழுந்துவிட்டார்.

முன்ஷி சிவலாலின் சிராத்த தினத்தன்று குடும்பம் முழுவதும் 'இக்கா' வண்டிகளில் ஏறி விடியற் காலையிலேயே ஸோராவிலிருந்து "பாபாமவூ" போஞர்கள். மத்தியானமாக எல்லாரும் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வந்தார்கள். அவர்கள் திரும்பியபோது கிஷன்லால் தாசில் ஆபீஸில் அவர்கள் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந் தான். கிஷன்லாலைப் பார்த்து ராதேலால் திடுக்கிட்டார். அச்சம் கொண்ட குரலில் கேட்டார்: "அடே, கிஷ்னூ நீயா! நீ வரும் செய்திகூட எங்களுக்கு அறிவிக்க வில்லையே! "பாபாமவூ" வழியாகத்தானே வந்தாய்? அங்கேயே எங்களைச் சந்தித்திருக்கலாமே! ஏன் இப்படி திடுதிப்பென வந்தாய்? ஏன் இந்தக் கோலம்? எங்கே யாவது விழுந்துவிட்டாயா?"

"பெரியப்பாவின் சிராத்தமல்லவா? நம்பர்தாரிணி இங்கே வர எனக்கு அனுமதி கொடுக்கவில்லை. உங்களுக்குச் செய்தி எப்படி அனுப்ப? ஆனல் ஐந்தாறு நாட்களுக்கு முன் ஒரு கனவு கண்டேன். பெரியப்பா மிகவும் வருத்தத்தோடு சொல்கிறுர்: 'குழந்தை கிஷ்னூ! எல்லாரும் வந்திருப்பாங்க. ஆனல் நீ வராதது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கும்' என்றுர். இதனல், என் வருத்தம் அதிகமாகிவிட்டது. ஒரு வெறி போல் பிடித்துவிட்டது எனக்கு. நேரே நம்பர்தாரிணி கிட்டே போனேன். அன்றுதான் கான்பூரிலிருந்து

லட்சுமீசந்தும் வந்திருந்தான். நான் இந்தக் கனவைப் பற்றிச் சொன்னேன். நம்பர்தாரிணி பேசாமல் இருந்தாள். ஆனால் இந்த லட்சுமீசந்த் பெரியப்பாவையும் ஜ்வாலா அண்ணாவையும் திட்ட ஆரம்பித்தான். என்னால் சும்மா இருக்க முடியவில்லை. நானும் சரியா சுடச்சுட பேசிவிட்டேன். அவ்வளவுதான். லட்சுமீசந்த் நாலு ஆட்களைக் கூப்பிட்டு என்னை அடிஅடின்னு அடிக்கவெச்சான். மூன்று நாள் வரை நடக்கக்கூட முடியவில்லை. முந்தாநாளிரவு காடம்பூரிலிருந்து கிளம்பி வந்தேன்."

கிஷன்லால் உடம்பில் பல இடங்களில் கட்டு போட்டிருந்தது. அடிபட்ட அடையாளங்கள் தென்பட்டன. ராதேலால் ஜ்வாலா பிரஸாதினிடம் சொன்னார்: "கேட்டாயா ஜ்வாலா!"

ஜ்வாலா பிரஸாத் தலையைச் சொறிந்தபடி சொன்னார்! "ஆம், எல்லாம் கேட்டேன். ஆனால் எனக்கு இவன் சொல்வதில் நம்பிக்கை இல்லை. லட்சுமீசந்த் இம்மாதிரி செய்திருக்கமாட்டான். கிஷ்னூ நிஜம் சொல்லவில்லை.

விஷன்லாலும் அங்கேயே நின்று இதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனால் சும்மா இருக்க முடியவில்லை. உரக்கச் சிரித்துவிட்டான். "அட, கிஷ்னூ அண்ணாவுக்கும் நிஜத்துக்கும் பகைமை ஆச்சே! இவரு எங்கேயோ என்னவோ செஞ்சு அடிபட்டிருக்காரு! ஆனால் கெட்ட பெயர் உண்டாக்குகிறார் லட்சுமீசந்துக்கு."

ராதேலால் விஷன்லாலைக் கன்னத்தில் பளாரென்று அறைந்துவிட்டார். "மிருகமே! பேசாமல் இருக்கிறாயா இல்லையா? உனக்கு உன் அண்ணன்களோடு பகை; எப்போ பார்த்தாலும் அவர்களைக் குறை சொல்லிக் கொண்டே இரு." ராமலாலும் சியாமலாலும் விஷன்லாலை ஒரு கை பார்க்க முன்வந்தனர். இதற்குள் ஜ்வாலா

பிரஸாத் விஷன்லாலிடம் சொன்னார்: "விஷன், நீ போ இங்கிருந்து! உனக்கு எத்தனை தரம் சொல்லி இருக்கிறேன், பிறர் விஷயத்தில் தலையிடாதே, இது கெட்ட பழக்கம் என்று." பிறகு அவர் கிஷன்லாலிடம் சொன்னார்: "சரி! இப்போது நீ போய் குளித்து வா, ஆடைகளை மாற்றிக்கொள். என்ன செய்வதென்று பிறகு யோசிக்கிறேன்."

ஜ்வாலா பிரஸாத் அன்று விடுமுறை எடுத்துக் கொண்டிருந்தார். அடுத்த நாள் அவர் ஆபீஸுக்குப் போனபோது அவருக்கு ஜயதேயியின் கடிதம் கிடைத்தது. அதில் அவள், கிஷன்லாலைச் சில காரணங்களால் வேலையை விட்டு நீக்கிவிட்டதாகவும், அந்தக் காரணங்களைப்பற்றிக் கடிதத்தில் எழுத இயலாதென்றும், கிஷன்லால் சொல்லுவதை அவர் நம்பக்கூடாதென்றும், ஆவணி மாசம் அவள் அலாகாபாத் வரும் போதுஸோராவில் அவரை வந்து பார்ப்பதாகவும் எழுதி இருந்தாள்.

முன்ஷி சிவலாலின் சிராத்தம் முடிந்தது. அதன் பிறகு ஜ்வாலா பிரஸாத் நான்கு புறமும் பார்வையைச் செலுத்தினார். அவரால் தாம் இருக்கும் சூழ்நிலையை அடையாளம் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் சிற்றப்பாவின் குடும்பம் முழுவதும் அங்கே இருந்தது. தாசில்தாருடைய அந்த மாளிகை போன்ற வீடுகூடச் சுருங்கிச் சிறியதாகத் தோன்றியது. தன் வீட்டிலேயே அவர் இருக்குமிடம் தெரியவில்லை.

ஒரு நாள் ஜ்வாலா பிரஸாத் தம் வேலையை முடித்துக் கொண்டு கச்சேரியிலிருந்து புறப்படும் தருணம். பண்டித் பேச்சூ மிச்ரா அவரிடம் வந்து சொன்னார்: மழை "மாமூல் பருவத்துக்குச் சிறிது முன்னதாகவே வரும்போல் தோன்றுகிறது. இன்னும் ஆடி மாசம் முதல் பட்சம்

முடியவில்லை. இதற்குள் வானம் மப்பு போடத் தொடங்கிவிட்டது. அனற் காற்று நின்றுவிட்டது. கீழைக் காற்று வீசுகிறது."

ஜ்வாலா பிரஸாத் வானத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னார்: "ஆம், இன்று சூழ்நிலை திடீரென மாறி விட்டது. வானிலை சுகமாக இருக்கிறது. ஆடி பாதிக்கு மேல் மழை ஆரம்பித்துவிடும். இம்முறை வெயிலும் மிகக் கடுமை!"

பேச்சூ மிச்ராவின் முகத்தில் சிறியதொரு புன்னகை உண்டாகியது. "அனுமார் கோயில் மாந்தோப்பில் இந்த வருஷம் காய்ப்பு ரொம்பவும் அதிகம்போல் காணப்படுகிறது. நேற்று ஐந்து வண்டி மாம்பழம் இங்கிருந்து விற்பனைக்காக அலாகாபாத்போயிருக்கிறது. உங்கள் தம்பி சியாமலால் ஏதோ நல்லபடியாக ஒரு வியாபாரம் தொடங்கிவிட்டார். நல்லதுதான்." ஜ்வாலா பிரஸாத் ஆச்சரியத்துடன் பேச்சூ மிச்ராவைப் பார்த்தார். "ஐந்து வண்டி மாம்பழம் அலாகாபாத் போயிருக்கா விற்பனைக்காக? சியாமுவினுடையதா? எனக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாதே! அந்தப் பாழடைந்த தோப்பு. அதிலே இவ்வளவு மாம்பழம் எப்படி காய்ச்சிருக்கும்? ஐந்து வண்டியா? நம்ப முடியல்லியே?"

"அது என்னவோ? எனக்குக்கூட ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. ஏனென்றால், இந்த வருஷம் மா விளைச்சல் மிகவும் குறைவு என்று குமரு சொல்லிக் கொண்டிருந்தான். வாருங்களேன், இந்த சுகமான நேரத்தில் கொஞ்சம் உலவிவிட்டு வரலாம். இன்று சனிக்கிழமை. பஜார் கிஜார் இல்லை. வாருங்கள் இன்று நாமும் போய் அனுமாரைத் தரிசிப்போம். பேச்சூ மிச்ராவின் முகத்தில் குத்தலான ஒரு சிரிப்பைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத்துக்குச் சிறிது மனக்கடுப்பு

உண்டாகியது.

"ஏன்? என்ன விஷயம்? வெளிப்படையாகச் சொல்லுங்கள்." "எப்படிச் சொல்வது ஜ்வாலா பிரஸாத் பாபூ! பார்க்கப் போனால் பெரிய விஷயம் இல்லை. ஆனால் பிரச்னை உங்களுடைய மரியாதையைப் பாதிக்கக்கூடியது. ஆகவேதான் உங்களிடம் சொல்ல வேண்டி இருக்கிறது. இப்பொழுதெல்லாம் அனுமார் கோவிலுக்கு அக்கம்பக்கத்தில் மாந்தோப்புகளில் ஏகப் பட்ட திருட்டு நடைபெறுவதாக ரிபோர்ட் வந்து கொண்டிருக்கிறது. திருடர்களைப்பற்றிய தடையங்களும் கொஞ்சம் தெரியவந்திருக்கிறது. சியாமலால் மாதிரி ஆளாம், தவிர சியாமலால் ஐந்து வண்டி பழம் அலாகாபாத் அனுப்பியதால் சந்தேகம் மேலும் வலுத்து விட்டது. இன்ஸ்பெக்டர் சஹாபுத்தீன் அந்த ரிபோர்ட்டுகளை அமுக்கிவிட்டார். ஆனால் சியாமலாலைக் கூப்பிட்டு விசாரணை செய்யாமலுமில்லை. சியாமலால் அலாகாபாத்துக்கு அனுப்பிய பழமெல்லாம் அனுமார் கோவில் தோப்பில் காய்த்ததென்றே சொல்லுகிறான்."

ஜ்வாலா பிரஸாத் நெற்றியில் சுருக்கம் விழுந்தது. "போகலாம் வாருங்கள்! விசாரித்து வருவோம்."

அனுமார்கோயிலுக்குப் பின்னால் கிணற்றுக்கு அருகில் மாமரத்தடியில் "குண்டீஸ்வாமி" ஆசனத்தில் வீற்றிருந் தார். கிஷன்லால் அந்த இடத்தில் குண்டீ சாமியார் சொன்னதின்பேரில் கூரை வேய்ந்திருந்தான். "சாமி யாரின் முக்கிய சிஷ்யன் கிஷன்லால். வேறு நான்கைந்து வாலிபர்களும் அங்கிருந்தனர். 'கஞ்சா'வைக் குழாயில் போட்டு கிஷன்லால் ஸ்வாமிக்குக் கொடுத்தான். ஸ்வாமி நீண்டதொரு "தம்"பிடித்தார். குழாயிலிருந்து ஒரு கஜம் உயரம் ஜ்வாலை எழுந்தது.

ஸ்வாமிஜீயின் கண்கள் நெருப்புத்தணலாக ஒளி

வீசின. "இந்தா பக்தா! நீயும் பிரசாதம் வாங்கிக் கொள்"—இவ்வாறு சொல்லி அவர் குழாயைக் கிஷன்லால் கையில் கொடுத்தார். கிஷன்லால் 'தம்' இழுத்துக்கொண்டிருக்கும்போதே ஸ்வாமியின் பார்வை அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்த ஜ்வாலா பிரஸாத் மற்றும் பேச்சு மிச்ரா மேல் விழுந்தது. அருகில் உட்கார்ந்திருந்தவர்கள் தாசில்தாருடைய உருவத்தைப் பார்த்தவுடன் எழுந்து நின்றனர். ஸ்வாமி நெருப்பில் ஒரு கட்டையத் திணித்தபடி சொன்னார்: "விழித்துக் கொள் மடையா! உன் அண்ணன் வருகிறான்!" சாமியாருடைய குரல் உயர்ந்தது.

"மிகப் பெரிய மனிதர்; பெருமை உள்ளவர்! தருமம், நியாயம், மரியாதை உள்ளவர். ஆனால் ருபாய்க் காசுக்கு மட்டும் கொஞ்சம் கஷ்டப்படறாரு! ஆனல் பணம் கிடைக்கப்போகுது! ஆயிரம் ஆயிரமாக் கிடைக்கப் போகுது! தங்கம், வெள்ளி, ரத்தனம், வைரம், வைடூரியம் எல்லாம் செழிக்கப்போகுது!" இதற்குள் ஜ்வாலா பிரஸாதும் பேச்சு மிச்ராவும் ஸ்வாமியாரின் அருகில் வந்துவிட்டனர். ஜ்வாமி ஜ்வாலா பிரஸாதைப் பார்த்துச் சொன்னார்: "இந்தா குழந்தே, விபூதி வாங்கிக்கோ!" இதைச் சொல்லி ஸ்வாமி எதிரில் இருந்த நெருப்பிலிருந்து சிறிது விபூதியை எடுத்து ஜ்வாலா பிரஸாதின் கையில் வைத்தார்.

"மூடிக்கோ கையை! ஆம், இப்போ திறந்து பார்." ஜ்வாலா பிரஸாத் கையைத் திறந்தார். அவர் ஆச்சரியத்தினல் திடுக்கிட்டார்! அவர் கையில் விபூதிக்குப் பதிலாக ஒரு நிறமான ரத்தினம் இருந்தது. பேச்சு முன்னே வந்து பார்த்தார். "இது கோமேதகக் கல்போல இருக்கிறதே!"

ஸ்வாமி புன்னகை புரிந்தார். "கேது உனக்குக்

கெட்டவனாக இருக்கிறான் பக்தா! சிவபெருமான் உனக்குக் கோமேதகம் கொடுத்திருக்கிறான். இதை மோதிரத்தில் பதித்து அணிந்துகொள். ஆறு மாதத்துக்குள் புதையல் கிடைக்கும்!"

பேச்சூ மிச்ராவின் மனதில் ஜ்வாலா பிரஸாதிடம் ஒருவகைப் பொறாமை உண்டாகியது. ஜ்வாலா பிரஸாதை அவர் அங்கு அழைத்து வந்தது மாந்தோப்பைக் காட்டுவதற்காக என்ற விஷயத்தை அவர் மறந்து விட்டார். ஸ்வாமியார் தமக்கும் கொஞ்சம் விபூதி கொடுக்கமாட்டாரா என்ற நினைப்போடு அவர் நின்றிருந்தார். அதற்குள் மாந்தோப்பின் தெற்குப் பகுதியிலிருந்த வேறொரு தோப்பிலிருந்து ஜும்மன் மியானும் அவருடைய இரண்டு ஆட்களுமாக சியாமலாலை இழுத்துக்கொண்டு வந்தார்கள். ஜும்மன் மியான் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார். "திருடன் இன்று என் கைக்கு அகப்பட்டுக்கொண்டான். என்னமோ பெரிசா தாசில்தார் தம்பி என்று சொல்லிக்கொண்டு சுத்தறான். இனிமேல் என் தோப்பிலே எங்காவது தென்பட்டா கைகாலை ஒடிச்சுப்போடுவேன். பிடிச்சுக் கோடா பேய் ஹும்தூ! மரத்திலே காய் பாதிக்கு மேல் பறிபோய்விட்டது."

இதற்குள் ஜும்மன் மியானின் பார்வை ஜ்வாலா பிரஸாத், பேச்சூ மிச்ரா இருவர்மீதும் விழுந்தது. அவன் சியாமலாலை இழுத்துக்கொண்டு அந்தப் பக்கமாக வந்தான். "தாசில்தார் ஸாஹப்! நீங்க என்ன இவனை என் தோட்டத்தைப் பார்த்துக்கோன்னு சொல்லியிருக்கீங்களா? பகல் வேளையிலே இவன் தோட்டத்திலே வந்து பழங்களைப் பார்த்து வெச்சுக்கிடறான். ராவிலே பூந்து பறிச்சுக்கிட்டுப் போறான். பல நாள் திருடன் இன்னைக்குப் பிடிபட்டான். இந்தத் திருட்டுப் பயல்

என் ஒட்டுமாந் தோட்டத்தையே அழிச்சுட்டான்."

கூச்சலைக் கேட்டு கோயிலில் இருந்த கூட்டம் அவர்கள் அருகில் வந்து கூடியது. ஜ்வாலா பிரஸாத், பேச்சூ மிச்ரா ஆகிய இருவரின் கவனமும் இப்போது சாமியை விட்டு அகன்று, பேச்சூ மிச்ரா எந்தப் பிரச்னையின் உண்மையை அறிவதற்காக ஜ்வாலா பிரஸாதை அழைத்துக்கொண்டு வந்தாரோ அந்தப் பிரச்னையில் ஈடுபட்டது.

பேச்சூ மிச்ரா ஜும்மன் மியானிடம் சொன்னார்: "இவ்வளவு கோபம் அடைய வேண்டிய அவசியம் இல்லை ஜும்மன் மியான்! நீ சியாமலாலே மாம்பழம் பறித்துக் கொண்டிருக்கப் பார்க்கவில்லை. நீ போ. இனிமேல் உன் மாம்பழத்துக்கு ஒரு விதத் தீங்கும் உண்டாகாது. தாசில்தார் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றித் தாமே நேராகப் பார்க்கவே இங்கு வந்திருக்கிறார்கள்." பின்னர் அவர் கூட்டம் கூடி இருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்: "எதற்காகக் கூட்டம் போடுகிறீர்கள். போங்கள் போங்கள்!"

ஜும்மன் மியான் தன் ஆட்களுடன் போய்விட்டான். கூட்டமும் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. ஜ்வாலா பிரஸாத் தலைகுனிந்து போய் அறைந்தவர் போல் நின்று கொண்டிருந்தார். இதற்குள் சாமியாரின் அட்டகாசச் சிரிப்பொலி கேட்டது. "என்ன யோசிக்கிறாய் பக்தனே! இதில் கவலைப்பட வேண்டிய காரணம் என்ன இருக்கிறது? இதெல்லாம் நடப்பது சகஜம்தான். தலையெழுத்து எப்படி இருக்குமோ அப்படியே அவனுக்குக் கிடைக்கும். இந்த சியாமலாலுக்கு மிகப்பெரிய அதிருஷ்டம் இருக்கிறது. செல்வம் இவனிடம் ஓடிவரும்." பின்னர் சுவாமி பேச்சூ மிச்ரா பக்கம் திரும்பினார். "இனி, பக்தனே! இந்த சாமியார் பட்சபாதம் செய்கிறார் என்று

நினைத்துக்கொண்டிருப்பாய்!" இதைச் சொல்லி சாமியார் நெருப்பிலிருந்து ஒரு சிட்டிகை விபூதியை எடுத்து பேச்சூ மிச்ராவின் கையில் வைத்தார். பிடியை மூடச் சொல்லி பிறகு திறந்து பார்க்கச் சொன்னபோது அதில் பவழம் இருந்தது.

சாமியார் மீண்டும் உரக்கச் சிரித்தார். "செவ்வாய் கெடுதலாக இருக்கிறது. செவ்வாய்! உன் தம்பியை அனுமாருக்குப் பூசை செய்யச் சொல்லியிருப்பது நல்லது தான். இல்லாது போனால் உங்கள் சொத்தெல்லாம் தொலைந்துபோயிருக்கும். இந்தப் பவழத்தை அணிந்து கொள். செவ்வாய்க்கிழமை விரதம் இரு. தினமும் சந்தி வேளையில் அனுமார் தரிசனம் செய்துகொள்."

இதற்குள் அவர்களுக்கு அருகில் நின்றிருந்த விஷன் லால் சொன்னான்: "பெரிய பக்கா சூழ்ச்சிக்காரனப்பா நீ சாமியாரே! கோமேதகம், பவழம் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறாய். யார் கையிலாவது வைரமோ, மாணிக்கமோ, மரகதமோ வரவழை பார்க்கலாம்." பிறகு அவன் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னான்: "அண்ணா, நீங்களும் இந்த சூழ்ச்சிக்காரன் வலையில் விழுகிறீர்கள். சியாமு அண்ணாவையும் கிஷ்னூ அண்ணாவையும் தன் வசம் ஆக்கிக்கொண்டு நமது மாந்தோட்டத்தில் வந்து தங்கிவிட்டான். ராவும் பகலும் இந்த "கஞ்சா" தம் பிடிக்கிறான். இப்போது பெண்களும் தரிசனத்துக்கு வரத் தொடங்கிவிட்டனர். என்ன குமரு பண்டித், நான் சொல்வது சரிதானே!"

குமரு ஒரு சிஷ்யனை அனுமார் பூசையில் வைத்துவிட்டு அங்கு வேடிக்கை பார்க்க வந்திருந்தான். அவன் சொன்னான்: "அண்ணா, இவன் எங்களையெல்லாம் ஆபத்தில் கொண்டு மாட்டிவிட்டான். இவனிடத்தில் ஒருத்தனை விட ஒருத்தன் பெரிய குண்டாக்கள்

வருகின்றனர். அனுமாருக்கு வரும் வருவாயில் பாதி பங்கு கேட்டுக்கொண்டிருக்கிறான்."

ஜ்வாலா பிரஸாத் திக்பிரமை பிடித்தவர்போல் பிரக்ஞையற்றவராய் நின்றுகொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருந்தார். ஆனால் பேச்சு பிச்ரா, அனுமாருடைய வருவாயில் பங்கு கேட்கும் விஷயம் கேட்டவுடன் விழிப்படைந்தார். அவர் சாமியாரைப் பார்த்துக் கேட்டார்: "இன்னும் எத்தனை நாள் இங்கு இருக்க உத்தேசம் சாமியாரே!"

"அது 'பம்போலேநாத்'துடைய இஷ்டம் பக்தனே! பகவான் பூதநாதன் எப்போது அனுமதி கொடுப்பானோ அப்போதே நாம் கிளம்பிவிடுவோம். இனி, இந்த பசங்கள் சொன்னதையெல்லாம் பக்தனே, நாம் விஷத்தைக் குடிப்பவர்கள். ஆகையால், அந்த வார்த்தையையும் குடித்துவிட்டோம். ஆனால் எனது மூன்றாவது கண் கோபம் நிறைந்தது. திறந்துவிட்டால், இந்தப் பசங்கள் பஸ்மம் ஆகிவிடுவார்கள். சங்கரன் அறிவான்."

இதற்குள் ஜ்வாலா பிரஸாத் நினைவுபெற்றுவிட்டார். அவர் கடுமையான குரலில் சொன்னார்: "பகவான் சங்கர் என்ன ஆணை கொடுக்கிறார் என்றால், நீ நாளைக் காலை இங்கிருந்து கிளம்பிவிடு என்கிறார். நாளைக்கு சாயங்காலம் மீண்டும் நான் இங்கு வருவேன். அப்போது நீ இங்கு இருந்தாயானால் உள்ளே தள்ளிவிடுவேன். உதவி தாசில்தார்! இன்ஸ்பெக்டர் சஹாபுத்தீனிடம் சொல்லி இப்போதே இங்கு இரண்டு ஜவான்களைக் காவல் போடச் சொல்லுங்கள்."

13

சின்கி பெருமூச்சு வாங்கிக்கொண்டிருந்தாள். அவளால் பேச முடியவில்லை. யமுனையின் காலடியில் உட்கார்ந்து கொண்டு புலம்பத் தொடங்கினாள். "ஏ கடவுளே. என்ன நடக்கும்? இவங்க எல்லாம் என்ன செய்யப் போறாங்களோ! ஏ கங்காமாயீ, எங்க ஜ்வாலாவையும் கங்காவையும் காப்பாத்துடியம்மா."

யமுனா பதற்றமடைந்து "என்ன ஆகிவிட்டது? என்ன ஆபத்து வந்திருக்கிறது? சொல்லேன். ஏன் இப்படி பிலாக்கணம் பாடறே?"

"கண்ணைத் திறந்து பார். ஒரே ஆபத்துதான் சூழ்ந்து கொண்டிருக்கு. நீ பட்டத்து ராணி போல கண்ணை மூடிக் கொண்டு படுத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் அதோ அங்கே உன் ராஜ்யமெல்லாம் கொள்ளை போயிட்டிருக்குது. என்னாலே இதெல்லாம் பார்த்துக்கிட்டிருக்க முடியாது. அக்கிரமம் நடக்குது."

சின்கி போடும் பீடிகையைப்பற்றி யமுனா நன்கு அறிந்திருந்தாள். "சின்கீ சித்தீ, தினந்தினமும் உனக்கு இந்த வார்த்தைதான். நான் அவசியம் இதைப்பற்றித் தறைபட்டுக்கொண்டு சொன்னால் அவர், எல்லாரும் அவங்க அவங்க பங்கில் இருப்பதைத்தான் அனுபவிக்கிறாங்க எங்கிறார், நீ என்னடான்னா தினம் ஒரு கதையை சொல்லறே, கஷ்டம் கஷ்டம்."

சின்கீ கோபமாக எழுந்து நின்றாள். "ஆமாம் ராணீ, நான் கதை கட்டிவிடறேன். உன் பெரிய அண்ணிக்கு

அரை சேர் வெள்ளியில் கழுத்துப் பட்டையும், ஒண்ணே கால் சேரில் காலுக்குக் காப்பும் இப்போதான் தட்டான் கிட்டேருந்து பண்ணி இங்கே வந்திருக்குது. அது நான் கட்டிவிட்ட கதைதான். எனக்கென்ன கொள்ளை போகவிடு. நல்லா கண்ணே மூடிக்கிட்டு கொள்ளை பேகவிட்டுடு. கங்கா தெருவிலே போவா."

யமுனை திடுக்கிட்டு கட்டிலை விட்டு இறங்கினள். "நான் கையெடுத்துக் கும்பிடறேன். சின்கீ சித்தி நான் சொல்லறதைத் தவருக எடுக்காதே. இந்த நகை எப்போது பண்ணி வந்திருக்கிறது? நீ பார்த்தாயா?"

சின்கீ யமுனைவுக்கு எந்த பதிலும் சொல்லவில்லை. சியாமலாலின் மனைவி அறைக்குள் வருவதை அவள் பார்த்தாள். சின்கீ அந்த சமயத்தில் அறையிலிருந்து அகன்று போவதே சரியென நினைத்தாள். சின்கீ போய் விட்ட பிறகு சியாமலாலின் மனைவி யமுனைவிடம் சொன்னள்—"அண்ணி, பெரிய அண்ணிக்கு காலுக்குக் காப்பும், கழுத்துக்குப் பட்டையும் இப்போதான் பண்ணி வந்திருக்கு. நான் அடுத்த அறையில்தான் இருந்தேன். எனக்கு அண்ணைவின் பேச்சுக்குரல் கேட்டது. அண்ணை சொல்லிக்கொண்டிருந்தார். ஒண்ணேகால் சேர் காப்பும், அரை சேருக்குக் கழுத்துப் பட்டையும் வந்தது. ஆனல் இந்த விஷயம் ஒருவருக்கும் தெரியக்கூடாது என்ருர்."

ராதேலாலின் குடும்பத்தில் சியாமலால் மனைவிக்கு எல்லாரையும் விட அதிக நிராதரவு. சியாமலாலுக்குக் குழந்தை இல்லை. சியாமலாலின் மனைவி நல்ல வளர்த்தி, நீண்ட உருவம். ஓரளவு குரூபி. கருநிறம். இதோடுகூட அவள் சிறிது வாயாடியும் கூட. ஆனல் வீட்டு வேலையில் அவள் எல்லாரையும் விட உழைப்பாளி. கெட்டிக்காரி. வீட்டில் அத்தனை பேருக்கும் அவள் தனியாகவே சமையல் வேலை செய்வாள். தனியாகவே பாத்திரம்

பண்டம் எல்லாம் சுத்தம் செய்வாள். ஆயினும் வீட்டில் எல்லாரிடமும் அவமதிப்பும் நிராதரவுமே பெற்று வந்தாள். சில வேளைகளில் யமுனையின் ஆதரவு அவளுக்குக் கிடைக்கும். ஆகவே அவள் யமுனையிடம் சொன்னாள்—"அண்ணி, என் காலிலே, நகைன்னு ஒரு கொலுசு இருக்குது. அதுவும் தேஞ்சு ஒடியும் போல கிடக்கு. ஒண்ணுமில்லேன்னாலும், அண்ணனிடம் சொல்லி இந்தக் கொலுசைக் கொஞ்சம் சரிப்படுத்திக் கொடுக்கச் சொல். பெரிய அண்ணிக்கு நகைகள் சுமை சுமையாக வந்து சேர, எங்கிட்ட இருப்பதுகூட ஒடிஞ்சிகிட்டு இருக்குது. இது ரொம்ப அநியாயம் அண்ணி."

யமுனை அப்போது அதைவிடப் பெரியதொரு அநியாயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள். சின்கீ சொல்லிக்கொண்டிருந்தது எல்லாமே உண்மை. யமுனையின் கண்ணெதிரேயே யமுனையின் அழிவு ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் பெரிய மழை பெய்யத் தொடங்கியது. ஜ்வாலாபிரஸாத் ஆபீஸிலிருந்து திரும்பி வரும் நேரம் ஆகிவிட்டது. வீடும் ஆபீஸும் எதிரெதிரேதான் இருந்தன. ஆயினும், ஆபீஸிலிருந்து வீடு வருவதற்குள் நனைந்துவிடுவார். அவ்வளவு பெரிய மழை. யமுனை சியாமலாலின் மனைவியிடம் சொன்னாள்: "நான் அவரிடம் சொல்றேன். ஆனால் அவர் எல்லா பணத்தையும் சித்தப்பாவிடம்தான் கொடுக்கிறாரு. அதனால் சித்தப்பா விடம் போய் சொல்லேன். நானும் உன்னோடுகூட வந்து சொல்றேன்."

சியாமலாலின் மனைவி கெஞ்சும் குரலில் பதில் சொன்னாள்: "எனக்கு ஏன் திட்டு வாங்கிவைக்கணும்னு யோசிக்கிறே. அப்பாவின் சுபாவம்தான் உனக்கு தெரிஞ்சது ஆச்சே. அம்மாவுக்கோ ஒத்தைக் கண்ணாலே

கூட என்னைப் பார்க்கப் பிடிக்கலே. அந்தக் கிழவியை என்னிக்காவது தரையிலே தள்ளி ஒரு அமுக்கு அமுக்கலாம்னு தோணுது; அப்போ அவ வாய் உயிர் இருக்கிற வரை மூடிக்கிடக்கும்."

யமுனாவின் முகத்தில் புன்னகை தோன்றியது. "ராம்! ராம்! மாமியாரைப்பத்தி இப்படியெல்லாம் பேசலாமா!"

சியாமலாவின் மனைவிக்குக் கண்ணில் கண்ணீர் பொங்கியது. "என்ன செய்வது அம்மாி! பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு. இந்த வீட்டில் இருக்கும் ஜனங்களுடைய நடத்தையினாலே என் உயிர் துடித்துப்போய் விட்டது. என்னிக்காவது மண்ணெண்ணையை மேலே ஊத்திக்கிட்டு நெருப்பு வைச்சிக்கப்போறேன். ஆனால் சாகிறதற்கு முன்னே இந்தக் கிழவியின் பிராணனை வாங்கிக்கிட்டு அப்புறம் சாகப்போறேன். இத்தே நல்லா தெரிஞ்சுக்கோ."

சியாமலாவின் மனைவி ஆவேசத்தோடு சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டு யமுனா அச்சமடைந்து விட்டாள். "இதெல்லாம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. இந்தா, எனக்கு ஒரு யோசனை வந்தது. சின்கீ சித்தியை சித்தப்பாவிடம் அனுப்புவோம். உன் மாமியும் மாமனும் யாரிடமாவது பயப்படுவாங்கன்னா அது சின்கீ சித்தியிடம் தான்."

இதே நேரத்தில் சின்கீ அறைக்குள் வந்தாள். அவள் மிகவும் பரபரப்படைந்து காணப்பட்டாள். அறைக்குள் நுழையும்போதே அவள் யமுனாவின் பேச்சைக் கேட்டு விட்டாள். அவள் சொன்னாள்: "சிறிய எசமானிடத்தில் இல்லே, நான் ஜ்வாலாவிடம் சொல்லுவேன். அவர் வர்ற நேரமாகிவிட்டது. ஆனால் அவர் குடை எங்கேன்னு தெரியல்லே. பீக்கூ வீடெல்லாம் தேடிவிட்டான். குடை

எங்கே மறஞ்சு போச்சுன்னு தெரியவில்லே.''

"குடையை மத்தியானம் எங்கிட்டேருந்து வாங்கிக் கிட்டுப் போனாரு அவர். ஒரு மணி நேரத்திலே கொண்டு வந்துவிடுவேன்னு போனாரு. அவரைப் போய்க் கேள்.''

''போய்க் கேட்கணும் பூதத்துக்கிட்டேயும் பிரேதத்துக் கிட்டேயும். சின்ன எசமான் எங்கேயிருக்காருன்னு தெரியவில்லே. அவருடைய பிள்ளேகள் ஒருத்தரும் தெம்படவில்லே. இப்போ என்ன செய்வது? மழை கொட்டு கொட்டுன்னு கொட்டறதே!''

இங்கே குடையைத் தேடிக்கொண்டிருந்தனர். இதற்குள் ஜ்வாலா பிரஸாத் பேச்சூ மிச்ராவின் குடையை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தார். பீக்கூ விடம் கொடுத்து குடையை பேச்சூ மிச்ராவுக்குத் திருப்பி அனுப்பும்போது யமுனையை அவர் கேட்டார்: ''ஏன், நான் இவ்வளவு நேரமா காத்துக்கிட்டு இருந்தேன். நீ என் குடையை ஏன் கொடுத்தனுப்ப வில்லே?''

'' குடையை சித்தப்பா மத்தியானம் வாங்கிக்கொண்டு போனார். ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்துவிடுவேன் என்று சொன்னார். இதுவரை அவரைக் காணவில்லே. அண்ணாவும் ஒருவேளே அவருடன் போயிருக்கார்போல இருக்குது.''

ஜ்வாலா பிரஸாத் ஆடை மாற்றிக்கொண்டார். மழையும் நின்றுவிட்டது. மழை நிற்பதோடு திடீரென இறுக்கம் மிகவும் அதிகமாக வளர்ந்துவிட்டது. ஜ்வாலா பிரஸாத் ஆபீஸ் காகிதங்களே எடுத்துக்கொண்டார். ஆனால் அவரால் இப்போது வீட்டுக்குள் உட்கார முடிய வில்லே. அவர் யமுனைவிடம் சொன்னார்: ''டாகுர் வீர்பான் வீட்டிற்குப் போய் ரொம்ப நாளாச்சு. மிகவும் குறைப்பட்டுக்கொண்டார். அவர் வீட்டுக்குப் போய்

வரலாமா? டாகுரின் மனைவிகூட, நீ அவர்கள் வீட்டுக்குப் போகவில்லை என்று பலமுறை சொல்லியனுப்பினாள். நான் 'இக்கா' வரவழைக்கிறேன். அதற்குள் நீயும் போகத் தயாராகிவிடு."

"நான் இதோ அரை நாழிகையில் தயாராகி விடுகிறேன். அதற்குள் நீங்கள் சிற்றுண்டி சாப்பிடுங்கள்."

யமுனா சமையல்கட்டுக்குச் சென்று ஜ்வாலா பிரஸாதுக்குப் பூரியும் மாங்காய் ஊறுகாயும் சாப்பிட அனுப்பி வைத்தாள். ஜ்வாலா பிரஸாத் சிற்றுண்டி சாப்பிடத் தொடங்கினார். சின்கீ சியாமலாலின் மனைவிக்குத் தான் செய்த வாக்குறுதியைப் பூர்த்தி செய்யத் தொடங்கினாள். "சியாமுவின் மனைவியினுடைய கால் சங்கிலி தேஞ்சுபோச்சு. பாவம், அழுதுகிட்டிருக்கிறா அவ. ராமுவின் பெஞ்சாதிக்கு இன்னிக்குத்தான் ஒண்ணேகால் சேர் எடையில் காலுக்குக் காப்பும், அரை சேரில் கழுத்துக்குப் பட்டையும் செய்து வந்திருக்கு. ஆனா அவளுக்குப் பாவம், காலுக்குச் சங்கிலிகூட ஒருத்தரும் சரி செய்து கொடுக்கிறவங்க இல்லை. அவ எங்கிட்டே சொன்னா; நான் உங்கிட்டே சொல்லிட்டேன்."

சியாமலாலின் மனைவிக்கு அந்தக் குடும்பத்தில் என்ன ஸ்தானம் என்பதை ஜ்வாலா பிரஸாத் நன்கு அறிந்திருந்தார். சியாமலாலின் மனைவியைப் பற்றி அவருக்கு அனுதாபம் உண்டாகியது.

"நல்லது, நாளைக்கே அவளுக்குக் காலுக்கு சங்கிலி வாங்கிக் கொடு; நான் தட்டானைக் கூப்பிட்டு செய்யச் சொல்றேன். ஆனால் இது என்ன, (அண்ணிக்கு)ராமுவின் பெண்சாதிக்குக் காப்பும், பட்டையும் செய்து கொடுத்தார்கள் என்பது உண்மையா?"

"பின்னே பொய்யா என்ன? இன்று காலை ராமு நகையைக் கொண்டுவந்து தன் பெண்சாதிக்கும் அம்மாவுக்கும் ஒப்படைத்து ஒருத்தருக்கும் சொல்ல வேண்டாம், மறைச்சுவை இன்னு சொன்னரு. நான் பக்கத்திலே இருந்து பார்த்துவிட்டேன்."

ஜ்வாலா பிரஸாதுக்குப் பெரும் சந்தேகம் உண்டாகியது. ஆனல் அவர் பேச்சை மேலே தொடரவில்லை.

யமுனைவை அழைத்துக்கொண்டு ஜ்வாலா பிரஸாத் டாகுர் வீர்பான் வீட்டுக்குப் போனபோது முன்ஷி ராதேலாலும் ராமலாலுடன்கூட அங்கு வீற்றிருப்பதைக் கண்டார். யமுனை அந்தப்புரத்துக்குள் போய்விட்டாள். ஜ்வாலா பிரஸாத் டாகுர் வீர்பான் அருகில் வந்து வெளியேயுள்ள பகுதியில் உட்கார்ந்துகொண்டார். ஜ்வாலா பிரஸாத் வந்ததும் முன்ஷி ராதேலால் சொன்னர்:

"நீ நல்ல சமயத்தில் வந்தாய் ஜ்வாலா! ராமுவுக்கு இங்கேயே பள்ளிக்கூடத்தில் உத்தியோகம் கிடைக்க டாகுர் ஸாஹப் முயற்சி செய்துகொண்டு இருக்கிருர். குடும்பத்து ஜனங்கள் இங்கும் அங்குமாகச் சிதறிக் கிடக்கிரோம். இதைவிட எல்லாரும் சேர்ந்து ஒன்ருக இருப்பது ரொம்ப நல்லது."

ஜ்வாலா பிரஸாதின் வாயிலிருந்து தானக வெளி வந்தது—"ஆனல் சிற்றப்பா, பதஹ்பூரில் உள்ள வீடு என்ன ஆகும்? நான் இருக்கும் வீடோ சர்க்கார் வீடு. அதில் இத்தனை பேர் இருக்க இடம் போதாதே."

டாகுர் வீர்பான் ஜ்வாலா பிரஸாதின் கேள்விக்கு பதில் கொடுத்தார். "தாசில்தார் ஸாஹப், வீட்டைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் ஒரு புதிய மாளிகை கட்டிக்கொண்டிருக்கிறேன். இந்த மாளிகையில் இருந்து ராணி அம்மாவுக்கு மனம் வெறுத்துப்

போய்விட்டது. இதை நான் உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன். இது மூன்று பகுதிகள் கொண்ட மாளிகை. நீங்கள் அனைவரும் இருக்கப் போதுமானது. நீங்கள் சுகமாக இதில் இருக்கலாம்.

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "டாகுர் ஸாஹப், உங்கள் தயவுக்கு நன்றி. ஆனால் உங்கள் மாளிகையில் நான் வந்து இருந்தால் சர்க்கார் ஆட்சேபம் செய்யும். இந்த விவகாரத்தை நீங்கள் அறிய முடியாது டாகுர் ஸாஹப்."

டாகுர் வீர்பான் புன்னகை புரிந்தார். "நாகில்தார் ஸாஹப், நீங்கள் கவலைப்படாதீர்கள். இந்த மாளிகையை நான் உங்கள் பேரிலேயோ, அல்லது கங்காவின் பேரிலேயோ விலைக்கு எழுதிக் கொடுத்து விடுகிறேன். இது கட்டி இன்றைக்கு எழுபது வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இப்போது இதற்கு விலை தான் எவ்வளவு? நிலத்தின் விலைக்கே இந்த மாளிகை கிடைத்துவிடும். சரி, நீங்கள் இதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். முன்ஷி ராதேலால் எல்லாம் செய்து விடுவார்."

ஜ்வாலா பிரஸாத் விஷயத்தை மெள்ள முடித்து விட்டார். "விடுங்கள் இந்த விஷயத்தை. உங்களுடைய புது மாளிகை கட்டி முடிவடைய இன்னும் இரண்டு வருடங்கள் ஆகும். இப்போது நீங்கள் அஸ்திவாரம் தானே போட்டிருக்கிறீர்கள்."

"ஆமாம். ஏழெட்டு மாதம் கட்டாயம் ஆகிவிடும். ஒரு வருஷம் என்று வைத்துக்கொள்ளுங்கள்!" டாகுர் வீர்பான்சிங் ஒப்புக்கொண்டார்.

"அதுவரை நாங்கள் ஏதோ சமாளித்துக் கொள்ளுகிறோம். இப்போதும்கூட நடந்துகொண்டு தானே இருக்கிறது." முன்ஷி ராதேலால் பதில்

சொன்னார். பிறகு அவர் எழுந்து நின்றார். "சரி, இனி நீங்கள் பேசிக்கொள்ளுங்கள். நாங்கள் போகிறோம். டாகுர் ஸாஹபுடன் மத்தியானம் அலாகாபாத் போயிருந்தோம். அங்கே ராமுவின் விஷயம் சரியாகி விட்டது. பதினைந்து நாளில் உத்தரவு கிடைத்துவிடும். இரண்டு மூன்று நாட்களுக்குள் ராமுவை அழைத்துக் கொண்டு பதஹ்பூர் போகவேண்டும். அங்கே வேலைக்கு ராஜீனமா கொடுக்கவேண்டுமில்லையா! பிறகு பதஹ்பூரி லிருக்கும் வீட்டைப் பற்றியும், நிலத்தைப் பற்றியும் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்" என்று சொல்லி விட்டு ராமலாலை அழைத்துக்கொண்டு முன்ஷி ராதே லால் சென்றுவிட்டார்.

இவர்கள் போன பிறகு சிறிது நேரம் ஜ்வாலா பிரஸாதும் டாகுர் வீர்பான் சிங்கும் மௌனமாக வீற்றிருந்தனர். பிறகு வீர்பான்சிங் கேட்டார்: "ஏன் தாசில்தார் ஸாஹப், நீங்கள் இவ்வளவு கவலை நிறைந்து காணப்படுகிறீர்கள்? இவர்கள் இங்கே உங்களோடு இருப்பது உங்களுக்கு இஷ்டம் இல்லையா?"

"ஜ்வாலா பிரஸாத் தழுதழுத்த குரலில் சொன்னார்: ம்....ம்...அப்படி ஒன்றும் இல்லை."

டாகுர் ராணியின் வற்புறுத்தலினால் அன்று யமுனாவும் ஜ்வாலா பிரஸாதும் அங்கேயே உணவருந்த வேண்டி வந்தது. சாப்பாட்டுக்கு முன்னால் ஜ்வாலா பிரஸாத் டாகுர் வீர்பான் சிங்குடன் சிறிது மது அருந்தினார். அதனால் அவர் மனம் சிறிது சுமை நீங்கியது. உள்ளத்தில் ஒருவகையான துணிவு எழுச்சி பெற்றது. அவர் இதெல்லாம் ஒருபோதும் நிகழும்படி விட்டுவிடமாட்டார். மனிதனது உரிமையில் நரகத்தை உண்டாக்கிக் கொள்ளும் அதிகாரம் இருக்குமாயின் நரகத்தைத் தடுக்கும் அதிகாரமும் அவன் உரிமையில் இருக்கிறது.

ஜ்வாலா பிரஸாத் வீடு திரும்பியபோது பாதிராத்திரி ஆகிவிட்டது. சின்கீ மட்டும் அப்போது தூங்கிக் கொண்டிருந்த கங்காவின் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். பீக்கூ வெளியே வாயில் அருகே உட்கார்ந்து தூங்கி விழுந்துகொண்டிருந்தான். ஜ்வாலா பிரஸாதும் யமுனையும் அறைக்குள் வந்தவுடன் சின்கீ எழுந்து போகத் தொடங்கினாள். ஆனால் ஜ்வாலா பிரஸாத் அவளைத் தடுத்தார். 'சின்கீ சித்தி கொஞ்சம் இரு, உன்னை ஒரு யோசனை கேட்க வேண்டும்.'

சின்கீ ஒரே அடியாய் அசந்துவிட்டாள். இதுநாள் வரை அவளுடைய யோசனையை ஒருவரும் கேட்டதில்லை. அவள் தானாகவே யோசனை கூறி வந்தாள். முதல் தடவையாக ஒருவன் அவளை யோசனை கேட்கிறான். அவள் தரையில் உட்கார்ந்து 'சொல்லு' என்றாள்.

ஜ்வாலா பிரஸாத் கூறினார்: "சித்தப்பா டாகுர் வீர்பானின் மாளிகையை நமக்காகக் கேட்டு வாங்கி விட்டார். அவர்கள் புது மாளிகை கட்டிக்கொண்டிருக் கின்றனர். ராமு அண்ணா பதஹ்பூரில் வேலையை விட்டு விட்டு இங்கே ஸோராவில் வாத்தியார் ஆகப்போகிறார். சித்தப்பா இதையெல்லாம் சரிப்படுத்திவிட்டார். குடும்பம் முழுவதும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்."

"அய்யோ தெய்வமே! உன் தலைமேலே மிளகாய் அறைக்க வந்திருக்காங்க இவங்க எல்லாம். திருடங்க, சூதுவாது செய்றவங்க, போக்கிரிங்க. நீ இதெல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும்னு சும்மா இருக்கப்போறியா?"

"இதைப்பற்றி யோசனை கேட்கத்தானே உன்னைக் கூப்பிட்டேன் சின்கீ! என்ன செய்வது ஒன்றுமே ஓடவில்லை."

"நீ சின்ன யசமான்கிட்ட வெட்ட வெளிச்சமாச்

சொல்லிவிடு. அவங்கள் எல்லாரும் போய் பதஹ்பூரில் இருந்துகொள்ளட்டும் இன்னு!"

இந்தச் சமயத்தில் பீக்கூவின் கண்கள் திறந்து கொண்டன. சின்கீ சொன்ன கடைசி வார்த்தை அவனுக்குப் புரியவில்லை. வாயில் அருகில் இருந்து அவன் நகர்ந்து அறைக்குள் வந்து கேட்டான்.

"என்ன விஷயம் தம்பி! அம்மா யாருமேல் கோவிச்சுக்கிட்டிருக்கா!"

சின்கீ பதில் சொன்னாள்: "நான் கோவிச்சுக்கிட்டது ஒண்ணுமில்லே. ஆபத்தைப் போக்குவது எப்படி இன்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன். இதை ஜ்வாலாவின் தலையிலே மிளகாய் அறைக்க பதஹ்பூர் குடும்பம் எல்லாம் இங்கே வந்திருக்குது. ஸோராவில் தங்கிவிடுவதற்காக வந்திருக்குது."

"இது பெரிய தொல்லையாப் பேச்சே! எனக்கு என்னமோ இவங்களே கண்டாலே பயமா இருக்குது; மனுஷன்களா வந்திருக்காங்க, பிசாசுங்க இன்ற வந்திருக்குதுங்க" பீக்கூ சொன்னான்.

ஜ்வாலா பிரஸாதுக்கு மது மயக்கம் குறைந்து கொண்டே இருந்தது. அதோடு அவருடைய துணிவும் அகன்றுகொண்டு இருந்தது. ஒரு முறை தனது துணிவை எல்லாம் ஒன்று சேர்த்து அவர் கூறினார்:

"பீக்கூ, நீ காலையிலே சித்தப்பாவிடம் போய் சொல்லிவிடு. எனக்கு அவங்க ஸோராவில் இருப்பது பிடிக்கவில்லை. அவர் எல்லாரையும் அழைத்துக் கொண்டு பதஹ்பூருக்குப் போகட்டும்."

பீக்கூ கண்களைச் சிமிட்டியவாறே சொன்னான்: "இவங்க எல்லாம் சேர்ந்து என்னை அடிக்க வந்தா என்னைக் காப்பாத்த வருவாயா? இல்லே தம்பி, இதெல்லாம் என்னை விட்டுச் சொல்லாதே; நீயே அவங்ககிட்ட

சொல்லிப்புடு."

நெற்றியில் கை வைத்துக்கொண்டு ஜ்வாலா பிரஸாத் சொன்னர்: "இதுதானே சங்கடமா இருக்கு; பூனையின் கழுத்திலே யார் மணியைக் கட்டுவது. சரி, பரவாயில்லே. நான் நாளை காலையிலே எல்லாத்தையும் காகிதத்தில் எழுதிக் கொடுக்கிறேன். நீ சித்தப்பாவிடம் கொண்டு போய் கொடுத்துவிடு."

"சரி, இது கட்டாயம் நான் செய்யக்கூடும்." பீக்கூ கொட்டாவி விட்டுக்கொண்டே சொன்னன்.

"அலாகாபாத்திலிருந்து ஒட்டகம் சவாரி செய்பவன் ஒருத்தன் கடிதாசி கொண்டுவந்தான் உன் பேருக்கு. அதை உன் தலையணைக்குக் கீழே வெச்சிருக்கிறேன்."

சின்கீயும் பீக்கூவும் போன பிறகு ஜ்வாலா பிரஸாத் தமது தலையணை அடியிலிருந்து கடிதத்தை எடுத்தார். அது ஜயதேயீ எழுதியது. ஜயதேயீ அலாகாபாத் வந்து நோய்ப்பட்டு படுத்துவிட்டாள். அதனல் ஸோராவ் வர இயலாமற் போய்விட்டது. அந்தக் கடிதத்தில் ஜயதேயீ, ஜ்வாலா பிரஸாதுக்கு அசௌகரியம் ஒன்றும் இல்லையென்றல் அவர் யமுனைவுடன் என்றைக்காவது அலாகாபாத் வரும்படியும் இரண்டு மூன்று நாள் விடுமுறை பெற்று வந்தால் மிக நல்லது எனவும் எழுதியிருந்தாள்.

ஜ்வாலா பிரஸாத் புன்முறுவல் புரிந்தார். அவர் யமுனையிடம் சொன்னர்: "நம்பர்தாரிணி எழுதியிருக்கிறள். அலாகாபாத் வந்து நோய்வாய்ப்பட்டிருக்கிறள். அங்கே வரும்படி நம்மை அழைத்திருக்கிறள். நாளை நின்று ஞாயிற்றுக்கிழமை. நாளைக்கு அலாகாபாத் போகவேண்டும். திங்கட்கிழமை அமாவாசை. விடுமுறை. திங்கட்கிழமை இரவிலோ, செவ்வாயன்று காலையிலோ நாம் திரும்பிவரலாம். "ஆம். அலாகாபாத்

போகும் விஷயத்தைப்பற்றி நான் சொல்ல நினைத்தேன். ஆனால் துணிச்சல் உண்டாகவில்லை. இந்த வீடு நம்மை விழுங்க ஓடிவருவது போல இருக்குது. எங்கேயாவது ஓடிப்போய் விடலாமான்னு தோணுது."

ஜ்வாலா பிரஸாதின் கண்கள் ஒளியிட்டன. "அலாகா பாதுக்குப் போய் நான் ராமு ஸோராவ் வருவதையும் தடுத்துவிடுகிறேன். நம்பர்தாரிணியிடம் கிஷ்னுவின் செய்கைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். ஆனால் நாம் நம்பர்தாரிணியைப் பார்க்கப் போவதாக வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியவேண்டாம். டிப்டி ஸாஹப் வீட்டில் குழந்தைக்குக் காதுகுத்தல் விழா இருப்பதால் அதற்குப் போவதாக நீ சொல்லிவிடு."

"சரி, சரி. நீங்க கவலைப்படாதீங்க" — யமுனை சொன்னாள்.

பதினோரு பன்னிரண்டு வருடங்களுக்கு முன் முப்பத்தைந்து வயதில் ஜயதேயீ இருபத்தைந்து வயது மங்கையாகக் காட்சியளித்தவள், இன்று அறுபது வயதுக் கிழவிபோல் தோன்றினாள். அவள் தலை மயிர் பெரும்பாலும் நரைத்துவிட்டது. முகத்தில் சுருக்கம் விழுந்துவிட்டது. உடலில் விசேஷமாக மாறுபாடு ஒன்றும் காணவில்லை. ஆனால், அவள் வலிமை குன்றிவிட்டது. அவள் கண்கள் ஒளியிழந்துவிட்டன.

ஜயதேயீக்குக் கடந்த இரண்டு வருடமாகக் குளிர் காய்ச்சல். வைத்தியர்கள் சிகிச்சை செய்தனர். ஹக்கீம்கள் சிகிச்சை செய்தனர். மந்திரம், தந்திரம் எல்லாம் செய்தனர். ஆனால் இந்தக் குளிர் காய்ச்சல் அவளை விட்டு நீங்கவில்லை. மாதம் பதினைந்து நாளுக்கு நன்றாக இருக்கும். ஆனால் மறுபடியும் காய்ச்சல் தொடங்கி விடும். ஜ்வாலா பிரஸாத் யமுனையோடுகூட வந்து சேர்ந்தபோது அவள் குளிர் காய்ச்சலில் நினைவற்றுக்

கிடந்தாள். லட்சுமீசந்தின் மனைவி ராதா அவள் தலைமாட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

லட்சுமீசந்த் ஆறு மாதத்திற்கு முன் "சிவில் லைன்"ஸில் ஒரு பங்களா வாங்கியிருந்தான். அலாகாபாத் வரும் போது அதில் வந்து தங்குவான். ஜ்வாலா பிரஸாதும் அலாகாபாதில் அந்த பங்களாவில்தான் போய்த் தங்குவார். வேலையாட்கள் ஜ்வாலா பிரஸாதின் சாமான்களை இறக்கினர். ஜ்வாலா பிரஸாத் வெளியில் உள்ள அறையில் போய் அமர்ந்தார். யமுனை வீட்டுக்குள் போய்விட்டாள். அவள் நேராக ஜயதேயீயின் அறைக்குள் சென்றாள்.

ராதா யமுனையின் காலைத் தொட்டு வணங்கினாள். யமுனையை ஒரு நாற்காலியில் அமர்த்திச் சொன்னாள்: "பதினைந்து நாளாக அம்மாவுக்கு தினமும் காய்ச்சல் வந்துகொண்டிருக்கிறது. விளக்கு வைக்கும் நேரத்தில் குளிர் வந்து சுரமும் வருகிறது. பாதி ராத்திரியில் வேர்த்து சுரம் விட்டுவிடுகிறது. காலையிலிருந்து மாலை வரை சாப்பிடுவாள், வேலையும் செய்வாள். ஆனால் முகம் முற்றிலும் வெளுத்துவிட்டது. அவர் ஒரு வாரமாக கான்பூரிலிருந்து காடம்பூர் போயிருந்தார். இந்த நிலைமையைப் பார்த்து கட்டாயப்படுத்தி அம்மாவுக்கு வைத்தியம் செய்விக்க என்னோடு இங்கே அழைந்து வந்தார். ஆனால் அம்மா டாக்டரிடம் சிகிச்சை செய்து கொள்ள மறுக்கிறாள். அவர் தன் முயற்சியில் தோல்வி யடைந்து ஒரு முக்கியமான காரியமாக கான்பூர் போயிருக்கிறார்."

ராதாவும் யமுனையும் பேசும் குரலைக் கேட்டு ஜயதேயீயின் தூக்க மயக்கம் குறைந்தது. கண்களை மூடிக்கொண்டே "யார்" என்றாள். ராதா பதில் சொன்னாள்: "அம்மா, தாசில்தார் வீட்டு சித்தி

வந்திருக்காங்க. சித்தியாவும் வெளியே அறையில் உட்கார்ந்திருக்கிறார்."

ஜயதேயீ மிகப் பிரயாசைப்பட்டுக் கண்களை மெள்ளத் திறந்தாள். "மைத்துனர் வந்திருக்கிறாரா! அடே, மைத்துனி, நீயும் வந்திருக்கிறாயா! சரி, நல்லதாச்சு போ! பெண்ணே, மைத்துனரை இங்கேயே கூப்பிடுவது தானே."

ஜ்வாலா பிரஸாத் அறைக்குள் வந்தவுடன் ராதா முட்டாக்கு இட்டுக்கொண்டாள்.

ராத்திரி வெகுநேரம் ஆகிவிட்டது. தூரத்தில் எங்கோ மணி பதினொன்று அடித்தது. ஜயதேயீயின் காய்ச்சல் குறையும் நேரம் ஆகியது. அவள் ராதாவிடம் சொன்னாள்: "பெண்ணே, மைத்துனருக்கும் மைத்துனிக்கும் சாப்பிட ஏதாவது ஏற்பாடு செய் போ. உன்னுடன் மைத்துனியும் வருவாள். உதவியாக இருப்பாள். அது வரை நான் மைத்துனரோடு பேசிக்கொண்டிருக்கிறேன்."

ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதுடன் தனிமையில் பேச விரும்புகிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது. ராதா யமுனையின் கையைப் பற்றிக்கொண்டு அவள் காதில் மெள்ளக் கூறினாள்: "வா சித்தி, அம்மா சித்தப்பாவிடம் பேசப்போவது என்னவென்று நான் உனக்கு விவரமாகச் சொல்லுகிறேன். நீ சித்தப்பாவுக்கு எல்லாவற்றையும் சொல்லிவிடு."

சமையல்கட்டில் வந்து ராதா யமுனையிடம் சொன்னாள்: "சித்தி, சித்தப்பாவின் தம்பி காடம்பூரில் குமாஸ்தாவாக வந்தானே, அவன் இவ்வளவு துஷ்டன், கயவன் என்று எனக்கு என்ன தெரியும்?"

ராதாவின் வார்த்தையைக் கேட்டு யமுனை திக்பிரமை கொண்டு இருந்துவிட்டாள். இந்த கிஷன்லால்

இவ்வளவு நீசனு!"

ஜயதேயியும் அழுதுகொண்டே ஜ்வாலா பிரஸாதுக்குக் கதையைச் சொன்னுள். ஜ்வாலா பிரஸாத் இதைக் கேட்டுக் கோபமடைந்து கொதித்தார். அவர் சொன்னுர்: "அண்ணி, நீ ஒரு வாரத்திற்கு ஸோராவ் வாயேன். நான் சீக்கிரமாக உன் எதிரிலேயே எல்லாம் தீர்த்து விட ஆசைப்படுகிறேன். இவங்கள் எனக்கு ரொம்பத் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறுர்கள்."

"மைத்துனரே, நான் இருக்கும் நிலையை நீர்பார்த்துக் கொண்டிருக்கிறீர். இந்தக் காய்ச்சல் விடும்போல் தோன்றவில்லை."

"அண்ணி, ஒரு வார்த்தை சொல்லுவேன். நீ ஒத்துக் கொள்ளவேண்டும்."

"ராம்! ராம்! மைத்துனரே, உம்முடைய பேச்சை நான் எப்போதாவது தட்டியதுண்டா?"

"நாளை காலையிலிருந்தே உனக்கு டாக்டர் சிகிச்சை ஆரம்பிக்கப்படும். எனக்கு டாக்டர் ப்ராயிட் தெரியும். அவர் இங்கு பெரிய டாக்டர். அவரால்தான் இந்த நோயை குணமாக்க முடியும்."

"மைத்துனரே, உம்மை நான் கையெடுத்துக் கும்பிடு கிறேன். இந்த சீமை மருந்தை சாப்பிடச் சொல்லாதீர். என் ஜாதி போய்விடும். வைத்திராஜ் நித்யானந்த் அலாகாபாத்தில் பெரிய வைத்தியர். அவரிடம் மருந்து வாங்கி சாப்பிடுகிறேன்."

ஜ்வாலா பிரஸாத் சிடுசிடுப்புடன் சொன்னுர்: "இப்போது இரண்டு வருஷமாக நீ வைத்தியர்களிடமும் ஹக்கீம்களிடமும் மருந்து சாப்பிட்டுப் பார்த்தாச்சு. இனி மேல் அதெல்லாம் வேண்டாம். நாளைக்கே நான் டாக்டர் ப்ராயிட்டை அழைத்து வரப்போகிறேன்."

ஜயதேயி களைப்புடன் கண்களை மூடிக்கொண்டு

சொன்னாள்: "உம் விருப்பம் எப்படியோ அப்படியே ஆகட்டும் மைத்துனரே! லட்சுமீ சொன்னதைக் கேட்காமல் பிடிவாதம் பிடித்திருந்தேன். ஆனால் உம்மிடம் நடக்காது. மைத்துனரே! நீர் மூன்று நான்கு நாட்களுக்கொருமுறை என்னை வந்து பார்த்துப் போக வேண்டும். நீர் சொல்லுகிறபடியே செய்கிறேன்."

அடுத்த நாள் டாக்டர் ப்ராய்ட் ஜயதேயியை வந்து பார்த்தார். மலேரியா முறை சுரம் என்று தெளிவாகியது. அவர் மருந்து எழுதிக்கொடுத்துச் சொன்னார்: "அஜாக்கிரதையினால் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. வயிற்றில் கட்டி வளர்ந்திருக்கிறது. சுரம் மூன்று நாளிலே குறைந்துவிடும். ஆனால் சிகிச்சை ஒரு மாதம் வரையில் தொடர்ந்து செய்ய வேண்டும்."

ஜ்வாலா பிரஸாத் திங்கட்கிழமை வீட்டிலேயே கழித்தார். மழை நின்று நின்று பெய்து கொண்டிருந்தது ஒரு பக்கம். மறுபக்கம் அவரது மனம் எங்கும் போக விருப்பமற்றுக் கவலை நிறைந்திருந்தது. திங்கட்கிழமையன்று மாலை அவர் ஜயதேயியிடம் விடை பெற்று யமுனையோடு ஸோராவுக்குப் போகக் கிளம்பினார்.

ஜ்வாலா பிரஸாதின் மனதில் தமது குடும்பத்தாரைக் குறித்து ஸ்பஷ்டமாக ஒருவித வெறுப்பு உண்டாகியிருந்தது. அலாகாபாதிலிருந்து திரும்பி வந்து அவர் யமுனையை வீட்டில் விட்ட பிறகு நேராக டாகுர் வீர்பான் சிங்கின் வீட்டிற்குப் போனார். அங்கு அவரிடம் ராமலாலுக்கு ஸோராவில் வேலை வாங்கிக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லச் சென்றார். அப்போது காலை ஒன்பது மணி. முன்ஷி ராதேலால் வீர்பான் அவர்களிடம் பிரஸன்னமாகியிருந்து அவருக்கு ஆஸ்தான அங்கத்தினராகச் செயல் புரிவதைக்

கண்டார்.

டாகுர் வீர்பான் சிங் எழுந்திருந்து ஜ்வாலா பிரஸாதை வரவேற்ருர். அவருடைய ஆஸ்தான அங்கத்தினர்களும் எழுந்து நின்றனர். ராதேலால் சொன்ஞர்: "அட ஜ்வாலா' நீ வந்துவிட்டாயா! நீ இன்றே திரும்பி வருவாய் என்று எங்களுக்கு என்ன தெரியும்; தெரிந்திருந்தால் ராஜாஸாஹறைப் போகாமல் நிறுத்தியிருப்போம். உன்னைச் சந்திக்க வேண்டும் என்று ரொம்பவும் விரும்பிஞர். சியாமு அவருடன் போய் இருக்கிருன். இங்கேதான் 'பிரதாப்கட்'சில் இருபது காதத்தில் அவருடைய இலாக்கா உள்ளது."

ஜ்வாலா பிரஸாத் தன் சித்தப்பாவின் வார்த்தையைக் கேட்காதது போல இருந்துவிட்டார். இதன் மேல் டாகுர் வீர்பான் சிங் கூறிஞர்: "தாசில்தார் ஸாஹுபும், ராஜாஸாஹப் ஸரோஹன் எனக்கு மாமா. அவர் பிரதாப் கட் ஜில்லாவில் தாலூகாதார். இப்போது கொஞ்சம் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டுள்ளார். கோர்ட்டு விவகாரத்தில் ஈடுபட்டிருக்கிருர். கை கொஞ்சம் தாராளம். கணக்கு வழக்கைப்பற்றி அக்கறை இல்லை. ஆஸ்தி கொஞ்சம் அடமானமாக வைக்கப்பட்டுள்ளது. கொஞ்சம் விற்கப்பட்டுள்ளது. ஆஞல் மிகவும் குஷி பேர் வழி. அவரைச் சந்தித்தால் நீங்கள் மிகவும் சந்தோஷப் படுவீர்கள்."

ஜ்வாலா பிரஸாத் ஆர்வமற்றதொரு விடையைக் கூறிஞர். "அப்படியா; அவரைச் சந்திக்க முடியாமல் போனது பற்றி எனக்கு வருத்தம்தான். வேறு இடங் களிலும் அவரைப்பற்றி ரொம்பக் கேள்விப்பட்டிருக் கிறேன். சரி, பரவாயில்லை. உங்கள் உறவினர். ஆகவே வேறு எப்போதாவது அவரைப்பார்க்க இயலும்."

"ஆம், நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம்

கூறவேண்டும் என்று வந்தேன். உங்களுக்குச் சிரமம் இல்லையென்றால் என்னோடு ஐந்து நிமிஷம் கொஞ்சம் இப்படி வாருங்கள்."

தனிமையில் சென்று டாகுர் வீர்பான் சிங்கிடம் ஜ்வாலா பிரஸாத் கூறினார்: "ராமலாலுக்கு நீங்கள் இங்கே ஸோராவில் உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேண்டாம். அவன் பதஹ்பூரை விட்டு இங்கு வருவது எனக்கு இஷ்டமில்லை."

டாகுர் வீர்பன் சிங் நெற்றியைக் கைவைத்து தடவிய படியே சொன்னார்: "விவகாரம் கிட்டத்தட்ட முடிந்து விட்டதே. நீங்கள் முன்னரே என்னிடம் சொல்லி இருக்கலாமே. நான் உங்களுக்காகத்தானே இதைச் செய்தேன்."

"அப்படியானால் எனக்காகவே அவன் எந்த நிலையிலும் இங்கு வராமல் இருக்க முயற்சிசெய்யுங்கள்." ஜ்வாலா பிரஸாத் சிறிது புன்னகையுடன் சொன்னார்: "மேலும் நீங்கள் என்னுடைய சித்தப்பாவுக்கும் அதிகம் இடம் கொடுக்காதீர்கள். நான் உங்களிடம் இவ்வளவு தான் கேட்டுக்கொள்ளவேண்டியிருந்தது."

டாகுர் வீர்பான்சிங் சிறிது நேரம் யோசனை செய்தார். பிறகு அவர் சொன்னார்: "தாசில்தார் ஸாஹெப், எனக்கு உங்கள் குடும்பத்தின் அந்தரங்க விஷயங்களைப்பற்றித் தெரியாது. நான் இதுவரை செய்ததும், இப்போது செய்துகொண்டிருப்பதும் அனைத்தும் உங்களுக்கு உதவி செய்வதாக நினைத்துத்தான். இவர்களிடம் எனக்கென்னவேண்டியிருக்கிறது? இனி நீங்கள் கவலையில்லாமல் போய்த் தூங்குங்கள்."

ஜ்வாலாபிரஸாத் வெளியிலிருந்தே திரும்பிச் சென்றார்.

அன்று ஜ்வாலா பிரஸாத் ஜயதேயியைப் பார்க்க அலாகாபாத் போகவேண்டியிருந்தது. அன்று அவருக்கு

ஆபீஸில் மனம் ஓடவில்லை. வீட்டிற்கு அவர் வந்தபோது அங்கு ஒரு மஹாபாரதம் நடைபெறுவதைக் கண்டார். சியாமலாலின் மனைவி மேல் அடிமேல் அடியாக விழுந்து கொண்டிருந்தது. அவள் சத்தம் போட்டுக் கூச்சலிட்டவாறு சொல்லிக்கொண்டிருந்தாள்: "நான் எல்லாம் சொல்லுவேன். என் காலில் நாலு நாலு கம்பி தான் இருக்குது. அதுவும் தேய்ந்துபோய்விட்டது. நான் எவ்வளவு சொல்லியும் ஒருத்தரும் கேட்கவில்லை. அண்ணிக்காலில் நகைமேல் நகை வந்துகொண்டிருக்கு."

ஜ்வாலா பிரஸாத் சித்தப்பாவின் அறை எதிரில் சென்றார். வாயிலிலிருந்தே கேட்டார்: "சித்தப்பா, என்ன நடக்கிறது! ஒரு பெண்ணை இத்தனை பேர் சேர்ந்துகொண்டு அடிக்கிறீர்கள். இது நன்றாக இல்லை. அய்யோ பாவம். அவள் உடம்பில் பல இடங்களில் காயம் பட்டுள்ளது. இரக்கமற்ற தன்மைக்கும் கொடுமைக்கும்கூட ஒரு எல்லை உண்டு."

முன்ஷி ராதேலால் அறையின் உள்ளிருந்தே உருமிக் கொண்டு பதில் கூறினார்: "அய்யோ பாவம் என்ன! ராட்சசி, இவள் ராட்சசி! எப்போ பார்த்தாலும் வசவும் திட்டும்தான். மாமியாரோடவும் ஓரகத்திகளுடனும் சண்டை. எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள் நீச குணம் படைத்தவள். மூன்று மாதத்துக்கு ஒரு தடவை அடி படாமல் இவளுக்குப் பொழுது போகாது. தனியாக ஒருவரும் இவளைச் சமாளிக்க முடியாது. தோலை உரித்து வை."

ஜ்வாலா பிரஸாத் மிகுந்த துணிச்சலோடு கூறினார்: "சித்தப்பா, இந்த வீட்டில் இதெல்லாம் நடக்காது. இவ்வளவுதான், நான் உங்களுக்கெல்லாம் சொல்லி விடுகிறேன்." இதைச் சொல்லிவிட்டு வேகமாக அவர் தன்னறைக்குப் போய்விட்டார்.

அன்று இரவு ஜ்வாலா பிரஸாத் அலாகாபாத் போய்ச் சேர்ந்தார். அங்கு லட்சுமீசந்த் இருந்தான். அவன் மத்தியானமே கான்பூரிலிருந்து அலாகாபாத் வந்து விட்டான். ஜயதேயீக்கு சுரம் விட்டு மூன்று நாள் ஆகிவிட்டது. அவள் இப்போது முன்னைவிட மிகக் குணமடைந்து காணப்பட்டாள். ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்போலும். ஏனெனில், அவர் குரலைக் கேட்டதும் அவள் வராந்தாவில் வந்தாள். "வாரும் மைத்துனரே, இந்தத் தடவை மைத்துனியை அழைத்துவரவில்லையா?"

மூன்றும் நாள் காலை ஜ்வாலா பிரஸாத், ஜயதேயீ, லட்சுமீசந்த், மற்றும் ராதா மூவரையும் அழைத்துக் கொண்டு ஸோராவ் வந்தார்.

கிஷன்லால் அப்போது வெளியில் கிணற்றங்கரை மேடையில் உட்கார்ந்து பல் தேய்த்துக்கொண்டிருந் தான். லட்சுமீசந்த், ஜயதேயீ, ராதா இவர்களைக் கண்டதுமே அவன் பல் குச்சியை எறிந்துவிட்டு அங்கிருந்து போகத் தொடங்கினன். அவன் போவதைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத் கூப்பிடச் சொன்னர். "கிஷ்னு, நீ எங்கே போகிருய்? கொஞ்சம் இப்படி வா."

கிஷன்லால் ஜ்வாலா பிரஸாத் சொன்னதைக் கேட்காதவன்போல ஓட ஆரம்பித்தான். ஜ்வாலா பிரஸாத் சத்தம் போட்டார். "யாருடா அங்கே, பிடித்துக்கொள் கிஷ்னுவை."

விஷன்லால் அப்போதுதான் கோதாவிலிருந்து வந்து கொண்டிருந்தான். ஜ்வாலா பிரஸாத் குரலைக் கேட்டு அவன் கிஷ்னுலாலைச் துரத்திச் சென்ருன். தாசில் ஆபீஸில் இருந்த போலீஸ்காரன் கையில் கிஷ்னு பிடிபட, அவனிடமிருந்து விடுவித்து தானே கிஷ்னுவை

ஜ்வாலா பிரஸாத் முன் இழுத்து வந்தான். இந்த சத்தத்தைக் கேட்டு ராதேலாலும், ராமலாலும் உள்ளே இருந்து வெளியே வந்தனர். "என்ன விஷயம் விஷ்னு. நீ ஏன் கிஷ்னூவை இழுத்துக்கொண்டு வருகிறாய்?" ராதேலால் கேட்டார்.

"ஜ்வாலா அண்ணா இவரைக் கூப்பிட்டார். ஆனால் இவர் வராமல் போய்க்கொண்டிருந்தார். யாராவது அவனைப் பிடியுங்கள் என்று ஜ்வாலா சத்தம்போட்டார். போலீஸ்காரன் இவரைப் பிடித்துக்கொண்டான். நான் இவரை விடுவித்து இங்கு அழைத்து வருகிறேன்."

ஜ்வாலா பிரஸாத் கிஷன்லாலிடம் சொன்னார். "பயப்பட வேண்டிய விஷயமில்லை. நம்பர்தாரிணி பிள்ளை, மருமகளுடன் வந்திருக்கிறாள். கிஷன்லால் செய்த காரியமோ, அவன் அப்படியெல்லாம் செய்வான் என்று எதிர்பார்த்ததே. அதற்கு அவனுக்குக் கொஞ்சம் தண்டனையும் கிடைத்துவிட்டது. ஆனால் இவன் நம்பர் தாரிணியைப்பற்றியும், லட்சுமீசந்தைப்பற்றியும் பொய்யான குறைகளைச் சொல்லியது ரொம்பவும் தகாத காரியமாகும். அதைச் சொல்லத்தான் இவனை இங்கே அழைத்தேன்."

"என்னவென்று சொல்வது. இந்தப் பயல் குலத்திற்குக் களங்கமாகப் பிறந்திருக்கிறான்." முன்ஷி ராதேலால் அழுங் குரலில் கூறினார். "லட்சுமீசந்த், இந்த லாயக்கற்றவனை மன்னித்துவிடு. நான் கைகூப்பி இவனுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்."

தகப்பனார் சொல்வதைக் கேட்டு விஷ்னுவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "யார் யாரிடம் மன்னிப்புக் கேட்டுத் திரிவாய் அப்பா! கிஷ்னூ அண்ணா எங்காவது திருந்தக்கூடியவரா? தனக்கும் நமக்கும் அவமானத்தை உண்டாக்கவே இவர் பிறந்திருக்கிறார்."

யமுனா வெளியில் வந்து ஜயதேயீயையும் ராதாவையும் எதிர்கொண்டு அழைத்தாள். அவர்களை அழைத்துக் கொண்டு அவள் வீட்டிற்குள் போனாள்.

லட்சுமீசந்த் ராதாவுடன் அன்று மாலையே அலாகாபாத் திரும்பிச் சென்றுவிட்டான். ஜயதேயீ சில நாட்கள் வரை யமுனாவின் விருப்பத்தினால் ஸோராவில் இருந்தாள்.

அடுத்த நாள் காலை ஜ்வாலா பிரஸாதும் சுற்றுப் பயணமாகப் போய்விட்டார்.

- மூன்று நாட்களுக்குப் பிறகு ஜ்வாலா பிரஸாத் திரும்பி வந்தபோது சியாமலால் ஸோராவில் வந்திருக்கக் கண்டார். சியாமலால் அவரிடம் சொன்னான்: "அண்ணா, இன்று காலை ராஜாஸாஹப் ஸரோஹன் டாகுர் வீர்பான் சிங் அவர்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார். உங்களைக் கட்டாயம் சந்திக்க ஆசைப்படுகிறார்."

"ஆம், எனக்குத் தெரியும், ஏன் கட்டாயமாகச் சந்திக்க ஆசைப்படுகிறார் என்று. பிஜ்ஜூ கிராமத்தை அவர் உன் பெயரில் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார் அல்லவா. அதைப்பற்றித்தான் அவர் என்னைச் சந்திக்க விரும்பியிருப்பார்" ஜ்வாலா பிரஸாத் பதில் கூறினார்.

இதற்குள் முன்ஷி ராதேலால் அங்கு வந்துவிட்டார். அவர் ஆச்சரியத்தோடு கேட்டார்: "இதைப்பற்றி உனக்கு எப்படி செய்தி கிடைத்தது. என்னையும் சியாமுவையும் தவிர வேறு யாரும் இதைப்பற்றி அறியார்கள். டாகுர் வீர்பான் சிங்குக்குக்கூட இது தெரியாதே."

"நாலைந்து நாட்களுக்கு முன்தான் அலாகாபாதிலிருந்து லாலா கனசியாமதாஸ் என்னிடம் வந்திருந்தார். அவரிடம் ராஜாஸாஹபின் மூன்று கிராமங்கள் அடமானம் உள்ளன. அவற்றில் பிஜ்ஜூ கிராமமும்

ஒன்று. ஆகவே அவர் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லிவிட்டுப் போனார். வழக்கு விவகாரம் என்ற தலைவலி எல்லாம் ஏற்கவேண்டாமென்றும், இதனால் கெட்ட பெயர் வரும் என்றும் எச்சரித்துவிட்டுப் போனார்.''

ராதேலால் கூறினார்: அட, வழக்கு நடந்துகொண்டு தான் இருக்கிறது. அதை நடத்துகிறார் ராஜா ஸாஹப். ஆகவே அந்த வழக்கிலே நமக்கென்ன சம்பந்தம். தஸ்தாவேஜுகள் உண்மைதான் என்று நிரூபிக்கப் பட்டால் ராஜா ஸாஹபின் இரண்டு கிராமங்கள் போனது போல இதுவும் போகும். இல்லையேல் எந்த விதச் சிக்கலுமின்றி ஜமீந்தாரி நம் கைக்கு வரும்.

'' அப்படியானால் அவர் என்னை ஏன் சந்திக்க விரும்பு கிறார் ?" ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

" நீ தாசில்தார். ஒவ்வொரு பணக்காரனும் பெரிய ஆபீஸரைச் சந்திக்க விரும்பவே செய்வான். இன்று இரவு டாகுர் வீர்பான் சிங் வீட்டில் உனக்கு விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது. அங்கே ராஜா ஸாஹபைச் சந்திக்கலாம்."

ஜ்வாலா பிரஸாத் பேச்சை அதிகம் வளர்க்கவில்லை. அவர் குளித்து உணவருந்தினார். இதற்குள் மத்தியானம் ஆகிவிட்டது. இரவு வேளையில் அவர் யமுனாவுடன் டாகுர் வீர்பான் வீட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்று யமுனாவும் சொன்னாள். இந்த அழைப்பை எவ்வாறு தட்டிக்கழிப்பது என அவருக்குத் தெரிய வில்லை. அவர் யமுனாவிடம் சொன்னார்: "நீ இக்காவண்டி கட்டச் சொல்லி டாகுர் வீர்பான் சிங் வீட்டுக்குப் போ. நான் கொஞ்சம் பேச்சு மிச்ராவிடம் போய் வருகிறேன். அவரிடம் கொஞ்சம் ஆலோசனை கேட்க வேண்டும். அவர் வீட்டிலிருந்து நேராக நான் வந்துவிடுகிறேன். நீ இதை

டாகுர் மனைவியிடம் சொல்லு.''

யமுனா சொன்னாள்: ''சரி, சியாமுவின் மனைவிக்கு காலுக்குக் காப்புகள் செய்யவேண்டும். பாவம், அவளை எல்லோரும் கொடுமைப்படுத்துகின்றனர். வழியில் தட்டான் வீடு இருக்கிறது. இந்த எட்டு கம்பிகளைக் கொடுத்து பதினாறு காப்புகள் செய்யும்படிச் சொல்ல வேண்டும். மீதிக்கு வேண்டிய வெள்ளியை அவனே போட்டுச் செய்யட்டும். இதைச் சொல்லி யமுனா சியாமுவின் மனைவியின் கால் காப்புகளை ஜ்வாலா பிரஸாதிடம் கொடுத்தாள்.

அன்று ஜ்வாலா பிரஸாத் பேச்சூ மிச்ரா வீட்டிற்கு நடந்தே சென்றார். போகும் வழியில்தான் தேவிதயாள் ஷர்ராபின் கடை இருந்தது. ஜ்வாலா பிரஸாத் அவன் கடை வாயிலில் போய் நின்றதும் தேவிதயாள் ஷர்ராப் எழுந்து அவரை வரவேற்றான். ''வாருங்கள், நீங்களே வருவானேன்? ராமலாலிடம்தான் நான் சொல்லியிருந்தேனே. நாளைக்குள் தயாராகிவிடும், வாங்கிக்கொண்டு போகலாம் என்று.''

''என்ன தயாராகிவிடும்?'' ஆச்சரியத்தோடு ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

''அட, அதுதான் தாசில்தாரிணி ஸாஹிபா அவர்களுக்குக் கழுத்துக்கு மாலை. இதோ பாருங்கள், எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது! இன்னும் பாலிஷ் செய்யவேண்டியது பாக்கி. பாலிஷ் ஆனபிறகு பாருங்கள் இதனை!'' என்று சொல்லியவாறு ஒரு தங்க மணிமாலையை எடுத்து ஜ்வாலா பிரஸாதின் முன் வைத்தான்.

ஜ்வாலா பிரஸாத் அதைத் திருப்பிதிருப்பிப் பார்த்து விட்டுக் கேட்டார், ''எவ்வளவு எடை இது?''

''மொத்தம் ஒண்ணேகால் தோலா எசமான். ஆனால்

ஐந்து தோலா மாதிரித் தெரியும். மணிமாலை அலாகாபாத் பணக்காரங்கள் கூட என்னிடம் வந்து செய்துகொண்டு போகிறார்கள். என்னிடம் உள்ள வேலையாள் இந்த மாகாணத்திலேயே புகழ் பெற்றவன்" தேவிதயாள் கருவமாகச் சொன்னான்.

ஜ்வாலா பிரஸாத் சிறிது யோசித்து விட்டுக் கேட்டார்: "அண்மையில் நீ வேறு ஏதாவது நகை என் வீட்டுக்கு அனுப்பிவைத்தாயா ?" "அட, அது இருக்கட்டுங்க எசமான். இதெல்லாம் கேட்கவேண்டிய அவசியம் என்ன! நகைன்னா ராஜாஸாஹப்கள் வீடுகளிலும் பெரிய ஆபீஸர்கள் வீடுகளிலும் செய்துகொண்டுதான் இருப்பார்கள்! இதில் கவலைப்பட என்ன இருக்கிறது ? ராமலால் கை வழியாகத்தானே இந்த சாமான் அனைத்தும் போயிருக்கிறது. கணக்கு வழக்கில் ராமலால் ரொம்ப கட்டாயப் பேர்வழி." தேவிதயாள் சிரித்தான்.

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "கொஞ்சம் நானும் அந்தக் கணக்கைப் பார்க்க விரும்புகிறேன். கடைசியில் ரூபாய் நான்தானே கொடுக்க வேண்டும். அப்படித் தானே ?"

"எசமானே, என்னங்க, நீங்களும் ரூபாப் பைசான்னு பேசறீங்க! பணக்காரங்க வீட்டுக்கு வருஷத்துக்கு ஒரு முறை கணக்குச் சீட்டு எழுதி அனுப்புவோம். உங்களிடமும் தீபாவளிக்கு முன்னரே அனுப்பிவிடு வோம். மூன்று நான்கு நூறு ரூபாய்—இது உங்களுக் கெல்லாம் என்னங்க, தூசி மாத்திரம்!"

சியாமுவின் மனைவியின் கால் காப்புகளை ஜ்வாலா பிரஸாத் தேவிதயாளிடம் கொடுத்தார். "நாளைக்கு மத்தியானத்துக்கு முன்னரே பதினாறு கால் காப்புகள் செய்துகொண்டு நாளைவரைக்கான கணக்கு முழுவதை

யும் கொண்டு என் வீட்டுக்கு வரவேண்டும். இதில் மறதி கூடாது. நான் கடன் கணக்கு வைத்துக்கொள் பவனல்ல என்பது உனக்குத் தெரியும்."

14

அடுத்த நாள் ஜ்வாலா பிரஸாத் வெகு நேரம் தூங்கி விட்டு எழுந்தார். அவர் கண் திறந்தபோது சிறிது தலைவலி இருந்தது. காலை நாலு மணியிலிருந்து பெய்து கொண்டிருந்த பெருமழை இப்போது குறைந்துவிட்டது. சூழ்நிலை ஒருவகை உல்லாசம் நிறைந்திருந்தது. ஜயதேயீ பூஜையை முடித்துக்கொண்டு யமுனாவின் அருகில் உட்கார்ந்து இரவு நடந்த விருந்தைப்பற்றி அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை; கச்சேரிக்கு விடுமுறை. தாசில் ஆபீஸின் வேலையாள் தபாலை எடுத்துக்கொண்டு ஜ்வாலா பிரஸாதின் வீட்டுக்கே வந்துவிட்டான்.

ஜ்வாலா பிரஸாத் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஸ்நானம் பண்ண பத்து மணி ஆகி விட்டது. மேகம் அகன்று சூரிய பகவான் சற்றைக் கொருமுறை தரிசனம் கொடுத்தான். ஜ்வாலா பிரஸாத் காலை உண்டி வேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஆபீஸ் அறையில் உட்கார்ந்து சர்க்கார் தபாலைப் பார்க்கத் தொடங்கினார். பீக்கூவை விட்டு அவர் முன்ஷி ராதேலாலை அழைத்துவரச் சொன்னார்.

முன்ஷி ராதேலால் சியாமலாலுடன் ராஜா ஸாஹப் ஸரோஹனுடன் கலந்து பேசுவதற்காக அப்போதுதான்

கிளம்பிக்கொண்டிருந்தார். முன்ஷி ராதேலால் சியாமலாலேயும் கூட இட்டுக்கொண்டு ஜ்வாலா பிரஸாதின் அறைக்கு வந்தார். சியாமலாலைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "நல்லது! நீயும் வந்துவிட்டாய்! சித்தப்பா, நான் நேற்று ராஜா ஸாஹப் ஸரோஹனைச் சந்தித்து வந்தேன். அவருடைய வக்கீல் பாபூபடேச்வரீ பிரஸாதும் அவருடன் இருந்தார்."

முன்ஷி ராதேலால் சொன்னார்: "ஆம், படேச்வரீ பாபூ நம் பதேஹ்பூர்காரர்தான். வெளிநாட்டுக்குப் போய் வந்ததால் அவரை ஜாதியிலிருந்து தள்ளி வைத்து விட்டனர். ஆனால் மிகவும் புகழ் பெற்ற வக்கீல். அலாகாபாதில் அவருக்கு ஒரு பிரம்மாண்டமான பங்களா இருக்கிறது."

"ஆமாம். இதெல்லாம் அவர் என்னிடம் சொன்னார். மிகவும் அன்போடு பேசினார். உட்காருங்களேன். என்ன, சீக்கிரமாகப் போகவேண்டுமா?"

"இல்லை, அப்படி ஒன்றும் முக்கியமான அவசரமில்லை. நான் சியாமுவுடன் ராஜா ஸாஹபைச் சந்திக்கப் போய்க்கொண்டிருந்தேன். அவர் இன்று மாலை ஸரோஹன் போய்விடுவார். ஆகவே, அவர் போவதற்கு முன்னால் சந்தித்துப் பேசலாமென்று நினைத்தேன்."

"சாயங்காலத்துக்கு இன்னும் ரொம்ப நாழிகை இருக்கிறது. நான் உங்களிடம் மிக முக்கியமானதொரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்."

முன்ஷி ராதேலால் உட்கார்ந்தார். சியாமலால் சொன்னான்: "அண்ணா! நான் அங்கே போவதில் ஆட்சேபம் ஒன்றும் இல்லையே? என்னிடம் உங்களுக்கு வேலையொன்றும் இல்லையே?"

"இல்லை, இல்லை. நீ போகலாம். நான் சித்தப்பாவிடம் தான் பேசவேண்டும்."

சியாமலால் போன பிறகு ஜ்வாலா பிரஸாத் ராதே லாலிடம் சொன்னார்: "சித்தப்பா, அப்பாவின் மரணம் ஏன், எப்படி நிகழ்ந்தது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா?"

முன்ஷி ராதேலால் சிறிது தயக்கத்துடன் சொன்னார்: "ஆம், நீதானே அவர் கீழே விழுந்துவிட்டார். மண் கூஜா உருண்டு அவர் தலையில் விழுந்தது என்று சொன்னாய்."

"இல்லை. அவர் மண் கூஜாவைத் தன் தலையில் போட்டு உடைத்துக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்." ஜ்வாலா பிரஸாத் வறண்ட குரலில் சொன்னார்: "உங்களுக்கெல்லாம் இது தெரியும். அவர் கோபமடைந்து கண்மூடித்தனமாகக் கூஜாவைத் தலையில் போட்டு உடைத்துக்கொண்டார். அவருக்கு இவ்வளவு கோபம் ஏன் வந்ததென்றால், உங்களுடைய சூழ்ச்சியிலும் கபடத்திலும் கூட்டுச் சேர்ந்துகொண்டு பொய் சொல்லுவதற்கு நான் தயாராக இல்லாததால்தான்."

முன்ஷி ராதேலால் சொன்னார்: "நடந்தது நடந்து விட்டது. அந்த வழக்கில் நாம் தோற்றுப்போனோம். இனி அந்தக் கதையைக் கிளப்புவதில் பயன் இல்லை. அவர் உன்னைக் கட்டாயப்படுத்தியது அவருடைய தவறு."

"சித்தப்பா, அந்த விஷயம் இன்னும் முடிவடையவில்லை. ராஜாஸாஹப் ஸரோஹன் சியாமலால் பேரில் பிஜ்ஜூ கிராமத்தை எழுதி வைத்திருக்கிறாரே; இதற்காக யார் பலியாகப் போகிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்." "அட, அந்தப் பத்திரத்திற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அதைப்பற்றி ராஜா ஸாஹபும் சியாமலாலும்தான் அறிவார்கள். இதிலே உன்னை யார் பொய் சொல்லச் சொல்கிறார்கள்? எவ்விதச் சிக்கலும்

இல்லாமல் ஜமீந்தார் தானுக வருகிறது. வருகின்ற லட்சுமியை புறக்கணிக்கக் கூடாது என்று சாஸ்திரம் கூறுகிறது.''

ஜ்வாலா பிரஸாத் மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்தார். சொல்லப்போய் நின்றுவிட்டார். தேவிதயாள் ஷராப் பதினுறு கால் கொலுசுகளேயும், கணக்குச் சீட்டையும் எடுத்துக்கொண்டு அறை வாசலில் வந்து நின்ருன். ஜ்வாலா பிரஸாத் பார்வையை வெளிப்புறம் ஓட்டியவாறே கூறினுர்: "யாரது; தேவிதயாளா! உள்ளே வா !"

ஜ்வாலா பிரஸாத் காப்புகளேத் தேவிதயாள் கையிலிருந்து வாங்கிக்கொண்டு 'பீக்கூ'வைக் கூப்பிட்டார்.

பீக்கூ அறையை ஒட்டியே நின்றுகொண்டிருந்தான் போலும். உடனே அவன் உள்ளே வந்து "என்ன, தம்பி!" என்ருன். காப்புகளேப் பீக்கூவின் கையில் கொடுத்து ஜ்வாலா பிரஸாத் சொன்னுர்: " இந்தக் காப்புகளே அண்ணியிடம் கொடுத்துவிட்டு வா. ராமு அண்ணுவை இங்கே வரச்சொல். நான் கூப்பிட்டேன் என்று சொல்."

"ஏன், விஷயம் என்ன ?" சந்தேகமடைந்து முன்ஷி ராதேலால் கேட்டார்.

"ராமு அண்ணு தேவிதயாள் ஷராபிடம் சில நகைகள் செய்வித்திருக்கிருர். இது அந்தக் கணக்கு." ஜ்வாலா பிரஸாத் மிகவும் அமைதியாகக் கூறினுர்.

ராதேலால் தேவிதயாளின் பக்கம் திரும்பினுர். "என்னய்யா! இது ராமலாலுடைய சொந்தக் கணக்கு. தாசில்தாருக்கு இதில் என்ன சம்பந்தம்."

தேவிதயாள் பதில் சொல்வதற்கு முன்னரே ஜ்வாலா பிரஸாத் கூறினுர்: "சித்தப்பா! தேவிதயாளுக்கு ராமு எங்கே தெரியும்! இவர் என்னே அறிவார். வேலே எது

நடந்தாலும் அது தாசில்தார் வீட்டுடன் நடக்கிறது. பொறுப்பு என்மேல்தான். இந்தக் கணக்கு இவர் தாமாக என்னிடம் கொண்டுவரவில்லை. நான்தான் இவரிடமிருந்து வரவழைத்தேன்'' என்று சொல்லி ஜ்வாலா பிரஸாத் சீட்டில் எழுதியிருந்த கணக்கைப் பார்த்தார்.

அதற்குள் ராமலால் அறைக்குள் வந்துவிட்டார். தேவிதயாளைப் பார்த்ததும் ராமலால் கேட்டார்: "என்ன லாலா! தாசில்தாரிடம் இந்தக் கணக்கை ஏன் கொண்டு வந்தாய்? எங்கள் பேச்சில் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

ஜ்வாலா பிரஸாத் கணக்குச் சீட்டைப் படித்தார். "காலுக்குக் கெட்டிக்காப்பு ஒரு ஜதை, நிறை நூற்றிருபது தோலா எடை. கழுத்துப்பட்டை ஒன்று, நிறை நாற்பத்தைந்து குந்துமணி; வெள்ளி-மாலை நாற்பது தோலா. மிகுதி வெள்ளி நூற்றிருபது; கால் காப்பு விலை எழுபத்தைந்து ரூபாய்; செய்யும் கூலி இருபது ரூபாய் இரண்டு அணு. மொத்தம் தொண்ணூற்றைந்து ரூபாய் பத்தணு. ஜ்வாலா பிரஸாத் தேவிதயாளைப் பார்த்தார்— "ஏன் ஐயா, மணிமாலை கணக்கை எழுதவில்லையே?" தேவிதயாள் பதில் சொன்னன்: "எசமான்; மணிமாலை சாயங்காலத்திற்குள் தயாராகிவிடும்; ஏறத்தாழ அறுபது ரூபாய் அதற்கு ஆகும். நாளைக்கு அதையும் சீட்டுடன் கொண்டுவருகிறேன்."

"நல்லது, நீ போகலாம். நாளைக் காலை மணி மாலையையும் அதற்கான சீட்டையும் கொண்டுவா" என்றுகூறி ஜ்வாலா பிரஸாத் தேவிதயாளை அனுப்பி வைத்தார்.

தேவிதயாள் சென்ற பிறகு ஜ்வாலா பிரஸாத் ராமலாலிடம் சொன்னர்: "மொத்தம் நூற்று ஐம்பத்தைந்து

ரூபாய் பத்து அணு ஆகிறது. தேவிதயாளுக்கு அந்த ரூபாயை நாளைக் காலையில் கொடுக்கவேண்டும். அதனால் நூற்றைம்பத்தைந்து ரூபாய் என்னிடம் கொடுத்து விடுங்கள்."

ராமலால் தம் தந்தையைப் பார்த்தார். ராதேலால் பதில் சொன்னார்: "சரிதான், ராமலாலிடம் ரூபாய் ஏது? அவன் தேவிதயாளுக்குத் தன் சம்பளம் முழுவதும் அதாவது மாதம் பன்னிரண்டு ரூபாய் என்று கொடுத்துவிடுவான். ஒரு வருஷத்தில் கடன் அடைந்து விடும்."

"இவர் எங்கேயும் வேலைபார்க்கவில்லையே?" ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

"இரண்டு மூன்று நாளில் வேலைக்கு உத்தரவு வரப் போகிறது"—ராமலால் சொன்னார்.

"அந்த உத்தரவு உங்களிடம் ஒருபோதும் வரப் போவதில்லை. நீங்கள் நாளை மாலை பதஹ்பூருக்குப் புறப்படுகிறீர்கள்; தெரிந்ததா. உங்கள் மனைவி பசங்களுடன் அங்கிருக்கிற உத்தியோகத்தைப் போய்ச் சமாளியுங்கள்."

ஜ்வாலா பிரஸாதினுடைய பேச்சைக் கேட்டு ராதேலால் அதிர்ச்சியடைந்து திகைத்து நின்றுவிட்டார். ஆனால், ராமலாலுக்கு ஜ்வாலா பிரஸாதினுடைய இந்த நடத்தை பிடிக்கவில்லை. "அப்படியானால் நீங்கள் என்னையும், என் மனைவி குழந்தைகளையும் வீட்டை விட்டுத் துரத்துகிறீர்கள் என்றுதானே அர்த்தம்" என்று கேட்டார்.

ஜ்வாலா பிரஸாத் ஆவேசமாகக் கூறினார்: "நீங்கள் இதை வீட்டை விட்டுத் துரத்துவதாகக் கருதுகிறீர்கள். ஆனால், நான் உங்களை உங்கள் சொந்த இடத்திற்கு அனுப்புவதாக நினைக்கிறேன். நீங்கள் பதஹ்பூரில்

வேலை செய்கிறீர்கள். சியாமலாலிடம் போதுமான நிலமும் ஆஸ்தியும் உள்ளது. சித்தப்பா வீட்டுக் காரியங்களைச் சமாளிப்பார். கிஷன்லாலுக்குத் திருமணம் செய்வித்து அவனை நீங்கள் சரியான பாதைக்குக் கொண்டுவாருங்கள்."

ராதேலால் திடீரென்று கூச்சல் போட்டார். "ஏ, அண்ணா! கேட்டுக்கொண்டிருக்கிறாயா. நீ சுவர்க்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டாய். எங்களை நரகத்தில் விட்டுச் சென்றாய். இந்த ஜ்வாலா அழிந்து போவான். அடியோடு அழிந்து போவான்'' என்று சொல்லி முன்ஷி ராதேலால் தன் கைகளால் தலையில் மாறி மாறி அடித்துக்கொண்டார்.

வீடு அல்லோல கல்லோலப்பட்டது. நான்கு பக்கத்திலிருந்தும் ஜனங்கள் வந்து கூடிவிட்டனர். கூட்டம் சேரச்சேர முன்ஷி ராதேலால் பொழிந்த வசவு மாரியும் வலுத்தது. இதற்குள் உள்ளிருந்து ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதின் அறைக்கு வந்தாள். ஜ்வாலா பிரஸாதின் கையைப் பிடித்து அவரை அங்கிருந்து எழுப்பினாள். "வாருங்கள் மைத்துனரே! இங்கிருந்து; இவர் கத்திக் கொண்டிருக்கட்டும்.''

உள்ளே போய் ஜ்வாலா பிரஸாத் கதவைத் தாளிட்டுக் கொண்டார். ஆனால் இதனாலெல்லாம் முன்ஷி ராதேலாலின் சத்தத்திலும், வசவிலும், தூற்றலிலும் குறைவு உண்டாகவில்லை. இப்போது ராமலாலும் ராதேலாலுடன் சேர்ந்துகொண்டு இருவருமாகத் திட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

பத்துப்பதினைந்து நிமிஷம் வரை பீக்கூ பேசாமல் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு அவனால் சும்மா இருக்கமுடியவில்லை. அவன் ராமலாலின் கையைப்பிடித்தான். "உன் அப்பாவை அழைத்துக்

கொண்டு வீட்டுக்குள்ளே போ. இங்கே இந்த மாதிரி ஆட்டம் போடுவதினால் ஒன்றும் நடக்காது.

ராமலால் பிக்கூவைக் கெட்ட வசவுகளால் திட்டியவாறே குரலை இன்னும் உயர்த்தினார். அப்போது பீக்கூவுக்கும் கோபம் ஏறிவிட்டது. "வாயை மூடிக் கொண்டு உள்ளே போகிறாயா, இல்லாட்டி ஜவானை விட்டு உதைக்கச் சொல்லட்டுமா. அண்ணாவின் சோற்றைத் தின்றுவிட்டு அவரையே திட்டுகிறாயா? நன்றிகெட்ட பயலே!"

உண்மையிலேயே பீக்கூவுக்குப் பின்னால் இரண்டு ஜவான்கள் நிற்பதை முன்ஷி ராதேலால் பார்த்தார். ராதேலால் ராம்லாலின் கையைப் பிடித்துக்கொண்டு, "வாடா ராமு, இதோடு விட்டதா; இந்தக் கயவன் நம்மை ஜவான்களை விட்டு அடிக்கச் சொன்னாலும் சொல்லுவான். வா, இன்றே நாம் இங்கிருந்து போய் விடலாம். இந்தப் பாவியின் வீட்டில் இனிமேல் சோறு, தண்ணீர் உண்ணக்கூடாது. அம்மாவிடமும் மற்றவர் களிடமும் சாமான்களைக் கட்டச்சொல்லு. சியாமுவையும், கிஷ்னூவையும் தேடி அழைத்துக்கொண்டு வா" என்று சொல்லி வீட்டிற்குள் போய்விட்டார்.

அவர்கள் உள்ளே சென்றதும் வீட்டுக்கு வெளியே சத்தம் நின்றுவிட்டது. ஆனால் வீட்டுக்குள் கூச்சல் அதிகமாகிவிட்டது. சாமான்களை எடுப்பதும், எறிவது மாக இருந்தனர். வசவும், திட்டும் இடைவிடாமல் வந்து கொண்டிருந்தது. இதனால் மனம் சோர்ந்து ஜயதேயீ ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னாள்: "மைத்துனரே, ஒன்றும் இயலவில்லையென்றால் நீர் எங்கேயாவது போய் வாருங்கள். இங்கு நிலைமை மோசமாகிக் கொண்டே போகிறது."

"சாப்பாட்டிற்கு என்ன செய்வேன்" என்று கேட்டார்

ஜ்வாலா பிரஸாத்.

"சாப்பாடா? இன்றைக்கு ஏகாதசி என்று நினைத்துக்கொள்ளுங்கள்." ஜயதேயீ புன்னகை செய்தாள். "எப்போதும் ஒட்டியிருக்கக்கூடிய பீடையைப் போக்கிக்கொள்ள ஒரு நாள் உபவாசம் இருந்தால் என்னவாம். இன்று வீட்டில் எல்லோரும் உபவாசம்தான்."

ஜ்வாலா பிரஸாதினுடைய முகத்திலும் புன்முறுவல் தவழ்ந்தது. "இல்லை அண்ணி, இந்த மாதிரி உபவாசம் எதற்கு?" பிறகு அவர் யமுனைவிடம் சொன்னார்: "நீயும் சின்னீயும் முற்றத்தில் போய் என்ன நடக்கிறது என்று பாருங்கள். அண்ணி, இல்லையென்றால் நீயும்கூட இவர்களுடன் போய்ப்பார். நான் இதற்குள் ஆபீஸ் அறையில் போய் தபாலைக் கவனிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஜ்வாலா பிரஸாத் தன் அறைக்குப் போனார்.

சமைற்கட்டில் சியாமலாலின் மனைவி எதிலும் சம்பந்தப் படாதவள் போல் சமையல் செய்துகொண்டிருந்தாள். ராமலாலின் மனைவியும் ராதேலாலின் மனைவியும் அழுது கூச்சல் போட்டுக்கொண்டிருந்தனர். முன்ஷி ராதேலால் சத்தம் போட்டுக்கொண்டிந்தார் — "இல்லை, நான் சாப்பிடமாட்டேன். தண்ணீர்கூட குடிக்க மாட்டேன், பட்டினி கிடந்து இங்கேயே பிராணனைவிட்டு விடுகிறேன். இவன் அண்ணாவை சாகடித்துவிட்டான். நானும் இவன் கையாலேயே சாகிறேன். தன்னுடைய தாசிலையும் தன்னுடைய ராஜ்யத்தையும் பட்டத்தையும் அதிகாரத்தையும் இவனே அனுபவிக்கட்டும். நரகத்தில் கூட இவனுக்கு இடம் கிடைக்காது. கிடைக்கவே கிடைக்காது."

சின்னீயால் சும்மாயிருக்க முடியவில்லை. அவள் முன்ஷி

ராதேலாலுக்கு முன்னால் போய் நின்றாள். "பிராணனை விடவேண்டுமென்றால் இப்பவே விட்டுடு; இந்த வசவுதிட்டாலே பிராணன் போகாது. இந்த நல்ல குணம் படைத்திருப்பதினாலேதான் உனக்கு இவ்வளவாவது பார்க்கக் கொடுத்து வெச்சிருந்தது. பெரிய மானம் மரியாதை உள்ளவனாயிருந்தால் பிராணனை விட்டுடு. நானும் பார்க்கிறேன் எப்படித்தான் உன் பிராணன் போறதுன்னு."

ராதேலாலின் மனைவிக்கு நிலைமை மிகவும் மோசமாகி விட்டதென்று தோன்றியது. மோசமானது மட்டுமல்ல. இப்போது எல்லாமே தீர்ந்து முடிந்துவிட்டது. முன்ஷி ராதேலால் பெரிதாகக் கூச்சலிட்டு சின்கீயைத் தூற்றத் தொடங்கினார். ராதேலாலின் மனைவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சொன்னாள்: "என்னடீ சின்கீ, உனக்குக்கூட இவ்வளவு துணிச்சல் வந்துவிட்டதா, சின்ன எசமானோடே சண்டை போடறியா?"

"ஏன், இவரிடம் என்ன பயம்? இவர் கொடுத்துத் தான் நான் சாப்பிட்டு உடுத்திப் பிழைச்சேனா? என் பிள்ளையைத்திட்டறாரே, அதைத் தடுக்கமாட்டேங்கிறே! மோசடிசெய்து ஜ்வாலா தலையிலே மிளகாய் அறைக்கப் பார்க்கிறாங்க. இதெல்லாம் நடக்காது. வீடுவாசல் இருக்குது. அங்கே போய் இருங்கன்னுதானே ஜ்வாலா சொல்லுது! தகாதபடி என்ன சொல்லிட்டுது! நிலம் வாங்கிக் கொடுத்திருக்காரு; எல்லாவிதத்திலியும் உதவி செய்யறாரு. அப்படியும் சம்மதம் இல்லை. அவர் பிராணனை வாங்கிக்க ஆசைப்படறீங்க, அதெல்லாம் நடக்காது."

ராதேலாலின் மனைவி கணவரைச் சும்மா இருக்கச் சொன்னாள். "இந்தமாதிரி கூச்சல் போடுவதினாலே ஒன்றும் நடக்காது. பதஹ்பூர் போக ஏற்பாடு செய்ய

வேண்டியிருக்கு. அதைப் போய் கவனியுங்கள். இந்த மாதிரி பிராணனை விடுவதினாலே என்ன பலன்?''

ராதேலால் கர்ஜனை செய்தார். ''நான் இம்மாதிரி சுலபத்திலே பிராணனை விட்டுடுவேனா? நாம் இன்னிக்கு சாயங்காலத்திற்குள் இந்தப் பாவியின் வீட்டை விட்டுப் போய்விடவேண்டும். நான் சொல்றேன். நான் இனிமேல் இந்த வீட்டிலே சாப்பிடப்போறது இல்லை; உங்களையும் சாப்பிட விடமாட்டேன். சியாமுவின் அகமுடையாளிடம் சமையல்கட்டை விட்டு வெளியே வரச்சொல்லு.''

சியாமலாலின் மனைவி சீக்கிரம் சீக்கிரமாக ரொட்டிகள் சுட்டுக்கொண்டிருந்தாள். ராதேலால் மனைவியின் கட்டளை பிறப்பதற்குள் அவள் யமுனாவின் காதில் சொன்னாள்: ''சமையல் செய்துவிட்டேன் அண்ணி. நீ கவலைப்படாதே! நான் போறேன். பதஹ்பூர் போக ஏற்பாடு செய்யவேண்டும்.''

திடீரென யமுனாவுக்கு சியாமலாலின் மனைவிக்காகச் செய்திருந்த கம்பிக் காப்புகள் நினைவுக்கு வந்தது. அவள் சியாமலாலின் மனைவியிடம் சொன்னாள்: ''இரு, உன் காப்புகள் தயாராகி வந்துவிட்டன. இதோ கொண்டுவரேன்.''

அதே நேரத்தில் ராதேலாலின் மனைவி சமையற் கட்டுக்கு வந்தாள். ''எழுந்திருடீ நடுவளே. விட்டுத் தொலை இந்தச் சமையலை! உன் சாமானையெல்லாம் எடுத்துக் கட்டு'' என்று சொல்லிவிட்டு ராதேலாலின் மனைவி வந்த வழியே திரும்பி நடைபோட்டாள்.

சியாமலாலின் மனைவி யமுனாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். யமுனா அவளுக்குப் பதினாறு காப்புகள் கொடுத்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். சீக்கிரமாக காப்புகளை அணிந்துகொண்டு சொன்னாள்:

"அண்ணி, விட்டது போ. இந்த ஜனங்களிடமிருந்து உன் பிராணன் விடுதலை அடைந்தது போ!"

அதே நேரத்தில் மீண்டும் ராதேலாலின் மனைவி கூச்சலிட்டது காதில் விழுந்தது. "ஏனடீ நடுவளே! என்ன செய்கிறாய்? நான்தான் சொன்னேனே சமையலை விட்டு வா என்று" சாமான் எல்லாம் எடுத்துக் கட்ட வேண்டும்."

சியாமலாலின் மனைவி அங்கிருந்தே பதில் சொன்னாள்: "இதோ வந்துவிட்டேன் அம்மா. கொஞ்சம் கையையும் காலையும் கழுவிக்கொள்ளுகிறேன்." பிறகு யமுனையிடம் சொன்னாள்: "என்ன சொல்றது அண்ணி, உன்னை விட்டுப் போவது வருத்தமாகத்தான் இருக்குது. ஆனால் நாங்கள் போவதில்தான் உனக்கு நன்மை என்று எனக்கு நல்லாத் தெரியும்." திடீரென சியாமலாலின் மனைவிக்குக் கண்ணில் நீர் பெருக்கெடுத்தது.

அவள் கண்ணீர் விடுவதைக் கண்டு யமுனையின் உள்ளத்தில் பரிவு கரைபுரண்டோடியது. அவள் சியாமலாலின் மனைவியை அணைத்துக்கொண்டாள். பிறகு தன் காலிலிருந்த கொலுசைக் கழற்றி சியாமலாலின் மனைவியிடம் கொடுத்துச் சொன்னாள்: "உனக்காக நான் எவ்வித நகையும் செய்துதர முடியவில்லை; இந்தா எனது கொலுசை வாங்கிக்கொள். நான் வேறு செய்துகொள்ளுகிறேன். ஜாக்கிரதையாக வைத்துக்கொள் இதை. இவர்கள் உனக்கு ஏதாவது தொல்லை கொடுத்தால் எனக்குச் செய்தி அனுப்பு."

சியாமலாலின் மனைவி சீக்கிரமாகத் தனது முந்தானையில் கொலுசை முடிந்துகொண்டாள். பிறகு குனிந்து யமுனையின் காலைத் தொட்டு வணங்கி, அங்கிருந்து விரைவாகச் சென்றுவிட்டாள்.

மத்தியானம் ஆகிவிட்டது. ஜ்வாலா பிரஸாதின்

வீட்டில் அமைதி குடிகொண்டிருந்தது. முன்ஷி ராதேலாலும், அவர் குடும்பத்தினரும் உணவருந்தவே இல்லை. ஜ்வாலா பிரஸாத் தன் அறைக்கு வந்தும் அமைதி பெற முடியவில்லை. "இக்கா" கட்டச் சொல்லி அருகிலிருக்கும் ஓர் கிராமத்தில் நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றுவிட்டார். அங்கிருந்து மத்தியானத்திற்கு மேல் திரும்பி வந்தார். இதற்குள் சியாமலாலும், கிஷன் லாலும் வந்துவிட்டனர். எல்லாரும் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டிருந்தனர்.

யமுனா ஜ்வாலா பிரஸாதைச் சாப்பிட அழைத்தாள். சாப்பிடுமிடத்தில் போய்ப் பார்த்தபொழுது அங்கு யமுனா மட்டும் இருந்தாள். முற்றத்தில் அமைதி நிலவியிருந்தது. "அவர்கள் எல்லாரும் எங்கே. அவர்கள் சாப்பிடவில்லையா?" என்று கேட்டார் ஜ்வாலா பிரஸாத்.

யமுனா பேசுவதற்கு முன்னரே சமையல் அறை வாசலில் நின்றுகொண்டிருந்த சின்கீ பதில் சொன்னாள்: "சின்ன எசமான் இந்த வீட்டிலே சாப்பிடமாட்டேன் என்று ஆணையிட்டு இருக்கிறாரு. தான் ஆணையிட்டுக்கொண்டது மட்டுமல்ல; தன் பிள்ளைகளையும், மருமகளுங்களையும்கூட சாப்பிடக்கூடாது என்று ஆணைபோட்டுட்டாரு. எல்லாரும் மூட்டை கட்டிக்கொண்டிருக்காங்க."

ஜ்வாலா பிரஸாத் எழுந்துவிட்டார். கையை அலம்பிக் கொண்டு முன்ஷி ராதேலாலின் அறைக்குச் சென்றார். அவர் ராதேலாலிடம் ஒன்றும் சொல்லாது, அவர் மனைவியிடம் "சித்தி, நீங்கள் இந்த வீட்டில் சாப்பிடப் போவதில்லை என்று ஆணையிட்டதாகக் கேள்விப் பட்டேன். இது தருமா?"

அவர் கேட்ட கேள்விக்கு ராதேலால் விடைகொடுத்தார். "ஆமாம். இவ்வளவு தூரம் மரியாதை கெட்டு

விட்ட பிறகு நாங்கள் இந்த வீட்டிலே சாப்பிடுவோமா? எங்கள் பார்வையில் நீ இறந்துவிட்டாய்."

ஜ்வாலா பிரஸாதிற்குப் பின்னாலேயே வந்து நின்ற சின்கீ இதைக் கேட்டு முன்னே வந்து கூச்சலிட்டாள். "செத்துவிட்டது நீங்களும், உங்க பிள்ளைகளும்தான். வாய் அழுகிவிடும்; எங்க பிள்ளையைத் திட்டறயா? காளியாத்தா உன்னை அழிச்சிடுவா."

ஜ்வாலாபிரஸாத் சின்கீயை அதட்டிப் பேசாமலிருக்கச் சொன்னார். "சின்கீ சித்தி, நீ போ இங்கிருந்து. ஜாக்கிரதை; உன் வாயிலிருந்து ஒரு வார்த்தை வரப்படாது. பிறகு அவர் ராதேலாலின் மனைவியிடம் சொன்னார்: "கேட்டியா சித்தி. உங்களுக்கு இனிமேல் நான் செத்து விட்டேன். உன் குடும்பத்தையும், வம்சத்தையும் நீ சமாளித்துக்கொள். பதஹ்பூரில் இருக்கும் வீட்டையும், நிலம் ஆஸ்தி எல்லாவற்றையும்நான் இறந்து உங்களுக்கே எழுதிக்கொடுத்துவிட்டேன். இனிமேல் எனக்கு அந்த வீட்டிலேயோ, ஆஸ்தியிலேயோ எந்தவித சம்பந்தமும் கிடையாது."

திடீரென்று ராதேலாலின் மனைவி ஓடிவந்து ஜ்வாலா பிரஸாதின் காலில் விழுந்தாள். "ஐயோ பிள்ளையே; இந்த நாளையும் பார்க்கும்படியா என் தலையிலே எழுதி யிருந்ததே! அப்பா, எங்களை மன்னித்துவிடு! ஏதோ ஒரு பெரிய விபத்து வரப்போகுது எங்களுக்கு! அதனாலே தான் இவருக்கு புத்தி மாறாட்டம் ஏற்பட்டிருக்கு. உன்னை என் பிள்ளையைப்போலவே வளர்த்தேன். நான் கேட்டுக்கொள்றேன். இவரை மன்னிச்சுடு" என்று சொல்லி அவள் ஜ்வாலா பிரஸாதின் கால்களைப் பிடித்துக்கொண்டாள்.

ராதேலாலின் மனைவி ஜ்வாலா பிரஸாதைத் தன் பிள்ளையைப்போலவே வளர்த்தாள் என்பது உண்மை.

ஜ்வாலா பிரஸாதுக்குக் கண்ணில் நீர் பெருக்கெடுத்தது. குனிந்து அவர் தன் சின்னம்மாவைத் தூக்கினர். "ராம ராம! சித்தி, நீ ஏன் என்னை நரகத்தில் தள்ளுகிருய்! கோபத்தில் நான் ஏதோ சொல்லி விட்டேன். அதற்கு நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். சித்தப்பா! இந்த மாதிரி கோபமடைந்தால் பயனில்லை. நான் உங்களிடம் சொன்னதெல்லாம் உங்கள் நன்மைக்காகவும், எனது நன்மைக்காகவும்தான். உங்கள் பிள்ளைகளை நேர்மையுள்ளவர்களாகவும், உழைப்பாளிகளாகவும் இருக்கச் சொல்லுங்கள். இவர்கள் நேர்மையோடு உழைத்தால் நான் எல்லா விதத்திலும் உதவி செய்யத் தயார். என்னேடு இருந்தால் இவர்கள் சோம்பேறிகளாகவும், நேர்மையற்ற திருட்டுப் புத்தி கொண்டவர்களாகவும் ஆகிவிடுவார்கள். கடைசியில் இவர்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைப்பது உங்கள் கடமைதானே."

ராதேலாலுக்குத் தாம் காலையிலிருந்து செய்தது அனைத்தும் கோபம் மிகுந்து வெறிப்பிடித்துச் செய்துவிட்ட செய்கைகள் போன்று தோன்றியது. மனதில் பச்சாத்தாபம் நிறைந்துவிட்டது. அவர் ஜ்வாலா பிரஸாத் சொன்னதற்குப் பதில் ஏதும் கூறவில்லை. அவர் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் சொறிந்தது.

ஜ்வாலா பிரஸாத் ராதேலாலைப் பிடித்து எழுப்பினர். "சித்தப்பா, வாருங்கள். சாப்பிடுங்கள். நீங்கள் சாப்பிடாவிட்டால் வீட்டில் ஒருவரும் சாப்பிட மாட்டார்கள். அறியாமல் என் வாயிலிருந்து தகாத வார்த்தை வந்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்."

ராதேலாலுக்கு விம்மல் எடுத்துவிட்டது. ஜ்வாலா

பிரஸாதுடன் அவர் சமையல்கட்டிற்கு வந்தார். அங்கு அவருடன் அமர்ந்து சாப்பிட்டார். சாப்பிடும் போது ஜ்வாலா பிரஸாதிடம் கூறினர்: "குழந்தை, உன் அண்ணன் தம்பிகளைப்பற்றி உனக்குத் தான் நன்கு தெரியும். ஒருவனுக்கு மேல் மற்ருெருவன் சோம்பேறி. ஊர் சுற்றும் காலிப்பயலாக இருக்கிருங்க. உன்ேைடு இருந்தால் இவர்களுடைய வாழ்வு சீர்படும் என்று நினைத்தேன். ஆனல் நான் நினைத்தது தவறு. நாங்கள் பிழைக்க என்ன வழியென்பதே இப்போது கேள்வி."

ஜ்வாலா பிரஸாத் சொன்ஞர்: "ஏன் போதுமான நிலம்தான் வாங்கியாகி விட்டதே. ராமுவும் உத்தி யோகம் செய்கிருர். கிஷன் லாலையும் சியாமலாலை யும் கூட வைத்துக்கொண்டு நீங்கள் நிலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு எந்தவிதக் குறை யும் இருக்காது என்றே நான் நினைக்கிறேன். அவசியம் நேர்ந்தபோது எனக்கு எழுதுங்கள்; என்னல் ஆன உதவியை நான் செய்துவருகிறேன்."

ராதேலாலின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. "குழந்தை, நீதானப்பா உதவி செய்யவேண்டும். நீ கை விட்டுவிடாதே."

மூன்ரும் ஜாமத்துக்குள் ராதேலாலின் குடும்பத்தினர் சாமான்களை யெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு தயாராகிவிட்டனர். எல்லாரும் உணவருந்தினர். சியாமலால் மூன்று 'இக்கா' வண்டிகளை அமர்த்தினன். அன்று விஷன்லால் பிரதாப்கடில் ஒரு குஸ்திப் போட்டிக்காகப் போயிருந்தான். சாமான்களையெல்லாம் வண்டியில் ஏற்றியான பிறகு ராதேலாலின் மனைவி ஜ்வாலா பிரஸாதிடம் கைகூப்பிச் சொன்ஞள்: "ஜ்வாலா குழந்தை, விஷ்ணுவை நாங்கள் பார்க்க முடிய

வில்லை. மிகவும் நேர்மையுள்ளவன்: அப்பாவி! அவனைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ளப்பா."

"விஷ்ணுவைப் பற்றி எந்தவிதக் கவலையும் பட வேண்டாம் சித்தி. அவனைப் பற்றி உலகத்தில் ஒருவருக்கும் எந்தவிதக் குறையும் இல்லை."

இக்கா வண்டிகள் அலாகாபாதை நோக்கிச் சென்றன; ஜ்வாலா பிரஸாத் தன்னறையில் வந்து அமர்ந்தார். அவர் மனம் சுமை நீங்கியிருந்தது. ஆனால் நான்கு புறமும் சூழ்நிலையில் ஒரு விசித்திரமான சோகம் குடிகொண்டிருந்தது. ஒரு வருடமாக அவர் பழக்கப்பட்டு விட்ட சத்தமும் கூச்சலும் நிறைந்த புழுக்கமான சூழ்நிலை இன்று மறைந்துவிட்டது. ஒரு விடுதலை நிறைந்த சூழ்நிலை, ஆனால் வறண்டு ரசமற்றதாக இருந்தது. அவர் மனம் இலேசாக இருந்தது. ஆனால் மனதில் ஒருவகை வேதனை இருக்கத்தான் செய்தது. எவ்வளவு நேரம் அவர் வெறுமனே உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தாரோ, எப்போது மாலை நேரத்து இருள் சூழ்ந்ததோ அவர் உணரவேயில்லை. திடீரெனத் திடுக்கிட்டு அவர் உணர்வுற்றார். ஜயதேயீ அவர் தோளில் கையை வைத்து அசைத்தபடியே குரல் கொடுத்தாள். "எழுந்திருங்கள் மைத்துனரே, இந்த இருட்டில் உட்கார்ந்துகொண்டு என்ன யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள். வெளியே வாருங்கள்."

ஜ்வாலா பிரஸாதைக் கையைப் பிடித்து முற்றத்திற்கு அழைத்து வந்தாள். யமுனா அப்போது சமையல் கட்டில் இருந்தாள். சின்கீ அவளுக்கு உதவி செய்துகொண்டிருந்தாள். பீக்கூ முற்றத்தோடு ஒட்டிய வராந்தாவில் கங்காபிரஸாதுக்குப் படுக்கை விரித்திருந்தான். ஜயதேயீ யமுனாவை அழைத்தாள். "ராணீ, சமையலறையிலிருந்து வந்து இவரைத் தாங்கிக்கொள். இங்கு வந்து உட்கார்.

"பக்கா" சாப்பாடு செய்யவேண்டுமில்லையா! சின்கீ கறி சமைத்துவிடட்டும். நானும் நீயுமாக பிறகு பூரி செய்துகொள்ளலாம்."

யமுனை சமையலறையிலிருந்து வந்தாள். அப்போது எவ்வளவு அமைதியை அனுபவித்தாள் அவள். பீக்கூ கங்கா பிரஸாதை அழைத்துக்கொண்டு வெளியே சென்றிருந்தான். சின்கீ சமையல் செய்து கொண்டிருந்தாள். ஜ்வாலா பிரஸாதும், யமுனையும் ஜயதேயீயும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

ஜயதேயீ சொன்னாள்: "மைத்துனரே, லட்சுமீசந்தின் அகமுடையாளுக்கு ஐந்தாவது மாதம். பிரயாகையி லேயே பிள்ளை பிறக்க வேண்டுமென்பது என் எண்ணம். அலாகாபாத்தில் ஒரு பங்களா வாங்கியிருக்கிறோம். லட்சுமி கான்பூருக்கும் அலாகாபாத்துக்கும் போய் வந்துகொண்டிருக்கிறான். காடம்பூர் போக அவனுக்கு ஒழிவே இருப்பதில்லை."

யமுனை சொன்னாள்: "அக்கா, அலாகாபாதிலேயே வந்திருப்பதுதானே. காடம்பூரில் என்ன இருக்கிறது என்று அங்கே கிடக்கிறாய்? வேலையாட்களை நம்பி எங்கே யாவது வீட்டை நடத்த முடியுமா! என்னைக் கேட்டால், காடம்பூரை விட்டு அலாகாபாதிலேயே மாற்றிக்கொண்டு வருவது நலம்."

"ஆமாம் ராணி; லட்சுமீகூடக் காடம்பூரிலிருந்து மாற்றிவிடச் சொல்லுகிறான். கான்பூரிலோ அலாகா பாதிலோ இருக்கவேண்டும் என்கிறான். கான்பூரிலும் அவன் ஒரு பெரிய வீடு வாங்கியுள்ளான். ஆனால் எனக்கு அந்த வீடு பிடிக்கவில்லை. பிரயாகை ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாச்சே. என் வாழ்வின் மிகுதி நாட்களை அங்கேயே கழித்துவிடலாமென்று நினைக்கிறேன்."

"ஆமாம் அக்கா; புண்ணிய ஸ்தலமாச்சு. மாகாணத்

திற்கும் தலைநகரம்! லட்சுமீயின் அகமுடையானுக்கு எது பிடித்தது?"

"அவளுக்குக் கான்பூர்தான் பிடித்தது. அங்கேதான் அவளுக்குப் பிறந்தகம். ஆனால் மருமகளுடைய விருப்பு வெறுப்பைப்பற்றிக் கவலையில்லை. சிறிசு. உலக அனுபவம் இல்லாதவள். ராணீ, நீ இரண்டு மூன்று மாதம் கழித்து என்னுடன் ஒரு மாதம் அலாகாபாதில் வந்து இருக்கவேண்டியிருக்கும், லட்சுமீக்குக் குழந்தை பிறக்கும் வரையில்! மைத்துனரே, எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறீரா? ராணியை ஒரு மாதத்திற்கு என்னிடம் அனுப்பவேண்டியிருக்கும்."

"சரி, சரி! நீ விரும்பினால் இப்போதே இவள் உன்னோடு வரட்டுமே!" ஜ்வாலா பிரஸாத் சிரித்தார். "அண்ணி, எங்களிடம் உனக்கு முழு உரிமை உண்டு."

இப்போது ஜ்வாலா பிரஸாதுக்கு பீக்கூ, கங்கா பிரஸாத் இருவரின் குரல்கள் கேட்டன. பீக்கூ சொல்லிக்கொண்டிருந்தான்: "இப்போதானே ஸ்கூல் திறந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு மாதத்திற்கு ஸ்கூலில் பாடம் நடைபெறாது. ஆதலால் வீட்டிலேயும் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. வா, சாப்பிட்டுத் தூங்க. இந்தப் புழுக்கத்தில் அறைக்குள் உட்கார்ந்து என்ன படிப்பு?"

இதற்கு விடை கங்கா பிரஸாத் அளித்தான். "இல்லை பீக்கூ சித்தியா! இந்தத் தடவை நான் வகுப்பில் முதலாவதாக வரவேண்டும். நாலு மார்க்கிலே நான் இரண்டாவதாக வந்தேன். இந்தத் தடவை ஒருத்தரும் என்னைத் தோற்கடிக்க முடியாது."

ஜயதேயீ சிரித்தாள். "மைத்துனரே, இந்த கங்கா உம்மை விட முன்னுக்கு வந்துவிடுவான். ஆனால் ஸோராவில் இவனுக்குப் படிக்க என்ன வசதி இருக்கும்?

ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். கங்கா பிரஸாத் ஐந்தாவது தேறி ஆருவது வகுப்பிற்கு வந்துவிட்டான். ஸோராவில் ஆருவது வரையில்தான் ஆங்கிலப் படிப்பு. அதன் பிறகு கங்கா பிரஸாதின் படிப்பிற்கு வேறு எங்காவது ஏற்பாடு செய்யவேண்டியிருக்கும். இந்தப் பிரச்னையைப்பற்றி அவர் இதுவரை யோசிக்காதது அவருக்கே ஆச்சரியம் விளைவித்தது. கடந்த ஒன்று ஒன்றரை ஆண்டாக அவர் மற்ற குடும்பப் பிரச்னைகளில் சிக்கி இருந்தபடியால் இதைப்பற்றிச் சிந்திக்கவே ஒழிவில்லை. அவர் சொன்னார்: "ஆமாம் அண்ணி, நீ நல்லவேளை நினைவுபடுத்தினாய். கங்காவின் படிப்பைப் பற்றி நான் யோசிக்கவே இல்லை. இங்கு ஸோராவில் இவனுக்குப் படிப்பு கிடையாது; பதஹ்பூருக்கு அனுப்பப் போவதில்லை. இதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கும்."

ஜயதேயீ புன்னகை புரிந்தாள். "இதிலே யோசிக்க என்ன இருக்கிறது மைத்துனரே! உமக்கு அலாகாபாதில்கூடத்தானே வீடு இருக்கிறது. கங்காவை நீங்கள் என்கையில் ஒப்படைத்துவிடுங்கள். பெரிய பிள்ளை லட்சுமீ இப்போது தன் கால் மேலேயே நிற்கிருன். இந்த சின்னப் பிள்ளைக்கு நான் ஆதரவாக இருக்கிறேன்."

ஜ்வாலா பிரஸாத் யமுனையைப் பார்த்தார். யமுனை ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தாள். இருவரும் ஒருவர் மற்றொருவருடைய மனதிலுள்ளதைப் புரிந்து கொண்டனர். யமுனை ஜயதேயீயின் தோளில் கையை வைத்துச் சொன்னாள்: "அக்கா, கங்கா எனக்கு எப்படியோ, உனக்கும் அப்படியே. அவன் நிறையப் படிக்க வேண்டும். அவன் அப்பாவை விட பெரியவன் ஆகவேண்டும். ஆதலால் இனி கங்கா உன்னுடையவன். இவர் வேலையோவென்ருல் ஒரு வருஷமாக மாற்றலைப் பற்றியும், பதவி உயர்வைப்பற்றியும் பேசுவதுதான்.

இந்த வேலை மாற்றத்தில் கங்கா படிப்பு எப்படி ஒழுங்காக நடைபெற முடியும்?"

ஜயதேயீ யமுனையை மார்போடு அணைத்துக்கொண்டாள். "ராணி நீ. நீ எவ்வளவு நல்லவள். எனக்கு நீ சொந்தமானவள். கங்கா எனக்கு லட்சுமீயைவிடக் குறைந்தவன் அல்ல. இனி நான் பிரயாகையை விட்டுப் போகமாட்டேன். லட்சுமீக்குச் கான்பூர் மிகவும் விருப்பம். ஆனால் நான் இங்கேயே பிரயாகையிலிருக்கப் போகிறேன்." ஜயதேயீயின் முகத்தில் சுருக்கங்கள் மறைந்துவிட்டன. அவளுக்குப் பத்து வயது குறைந்து விட்டது போன்ற அநுபவம் ஏற்பட்டது.

இரண்டாம் பாகம்

1

பண்டித ஸோமேசுவர தத்தர் வானத்தைச் சிறிது நேரம் இமை கொட்டாது பார்த்துக்கொண்டே இருந்தார். அவர் முகத்தில் ஒருவகையான பரிவு குடி கொண்டிருந்தது. அதில் சிந்தனை கலந்திருந்தது. அவர் கண்களில் ஒருவகைக் கனிவு தவழ்ந்தது. பிறகு அவர் ஆழ்ந்த சிந்தனையில் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார் — "இப்போது நாம் முழுக்க முழுக்க அடிமைகள் ஆகிவிட்டோம். இங்கிலாந்தின் சக்கரவர்த்தி டில்லியில் தர்பார் நடத்த வந்துகொண்டிருக்கிறான். இந்தியாவிலுள்ள ராஜாக்கள் என்ன,

மஹாராஜாக்கள் என்ன எல்லாரும் அவனுக்கு எதிரில் தலை வணங்குவார்கள். அவனுக்குக் காணிக்கை அளிப்பார்கள். அவனுடைய அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள்.''

''அப்படியானால் பண்டித்ஜீ, உங்களுக்கு அதைப் பற்றி வருத்தமா?''—திரு கிஷோரிரமண் பண்டித ஸோமேசுவர தத்துக்கு எதிரில் தனது வெற்றிலைப் பெட்டியை நகர்த்தியவாறே கேட்டார்.

திரு. கிஷோரிரமண் பரேலியில் உதவி ஸிவில் ஸர்ஜன். சிவந்த நிறம், உயர்ந்த தோற்றம். இரட்டைநாடியான உடல், வாலிபப் பருவத்தைத் தாண்டி முதிர்ந்த வயதில் அடி வைத்துக்கொண்டிருந்தார். திரு. கிஷோரிரமண் பரேலியில் ஜனங்களுடைய ஆதரவுக்குப் பாத்திரமான டாக்டர். சர்க்கார் சம்பளத்தைத் தவிர அவருக்குத் தனிப்பட்ட பிராக்டீஸில் மாதத்திற்கு இருநூறு முந்நூறு ரூபாய் வருமானம் கிடைத்து வந்தது.

பண்டித ஸோமேசுவரின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை மலர்ந்தது; ஆனாலும் அவரது ஆழ்ந்த சிந்தனையில் எவ்வித மாற்றமும் உண்டாகவில்லை. ஏனெனில் அவருடைய புன்னகை அவருடைய உதடுகளை மூடியிருந்த அடர்ந்த கருப்பும் வெளுப்புமான மீசைகளின் இடையிலிருந்து வெளிப்படவில்லை. ''இல்லை டாக்டர். நடப்பதெல்லாம் சரியாகத்தான் நடக்கிறது. ஏதோ ஒரு வகையில் இந்த மிலேச்சர்களுடைய அரசாட்சி இங்கிருந்து அகன்றுவிட்டது. நாட்டில் அராஜகம் நீங்கியது. அட்டூழியம் ஒழிந்தது. பாதுகாப்புக் கிடைத்தது. நாட்டில் அமைதி நிலைபெற்றது. இதைத் தவறு என்று யார் சொல்ல முடியும். ஆனால் ஒன்று வெளி நாட்டான் எப்போதைக்கும் வெளி நாட்டான்தான்.''

பண்டித ஸோமேசுவரதத் பரேலியில் டிப்டி கலெக்டர். அவருக்கு வயது ஏறத்தாழ ஐம்பது இருக்கும். உயர மான உருவம்; கம்பீரமான முகவெட்டு. மாநிறம். அவர் ஸம்ஸ்கிருதம் நன்கு கற்றிருந்தார். ஆசார நிஷ்டை நிரம்பியவர். ஆனால் அவர், கருக்கான மனிதர். உள்ளதை உள்ளபடி ஒளிக்காமல் சொல்லிவிடுபவர். ஓரளவு சண்டைக்காரர்கூட. திடீரென ஸோமேசுவரதத் கலகல வென்று சிரித்தார். "டாக்டர், இந்த வெளிநாட்டான் நம்மை எவ்வளவு தூரத்திற்கு மாற்றிவிட்டிருக்கிறான். இதோ மீர்ஸாஹப் வருகிறாரே. இவருடைய தகப்பனார் நீண்ட தாடி வைத்திருந்தவர். எப்போதும் நீண்ட சொக்காய் அணிந்திருப்பார். அவர் கையில் எந்த வேளையிலும் "தஸ்பீஹ்" மாலை இருக்கும். ஆனால் இவரைப் பாருங்கள். கோட்டும் கால்சராயும் போட்டுக் கொண்டு தாடியையும் சிரைத்துவிட்டார். மீசையோ முறுக்கிவிட்டுப் பார்ப்பவர் பயந்து ஓடும்படி பயங்கர மாகக் காட்சியளிக்கிறது. வாயில் சுருட்டு!"

மீர்ஜாபர் அலியின் காதுக்குப் பண்டித ஸோமேசுவர தத்தின் வார்த்தை சிறிது கேட்டுவிட்டது. புன்னகை செய்துகொண்டு மீர்ஸாஹப் அவர் அருகில் வந்தார். "என்ன பண்டித்? என்னைப்பற்றிப் பரிகாசப் பேச்சு நடக்கிறது போலும். தன்னை மறந்து பேசுகிறீர்களே! டாக்டர் ஸாஹப், ஒரு புது ஸமாச்சாரம் கேள்விப் பட்டேன். நம் பண்டித்ஜீ ஆரியஸமாஜியாகிவிட்டார். என்ன பண்டித், நான் சொல்வது சரிதானே?"

"இதில் உங்களுக்கு வருத்தம் ஏன்? எங்கள் இந்துக்களின் "போப் லீலை" எங்கள் மதத்தை உள்ளிருந்து துளைத்து நாசமாக்கிவிட்டது. எங்கள் மதத்தில் உண்டான இந்தக் குறையை முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் பயன்படுத்திக்கொண்டனர். லட்சோப

லட்சம் இந்துக்கள் மதம் மாறிவிட்டனர். ஆரிய ஸமாஜம் இந்து மதத்தை மீண்டும் சீர்திருத்தம் செய்து நல்ல முறையில் நிறுவி வருகிறது. ரிஷிகளின் பரம்பரையை மீண்டும் உயிர்ப்பித்து வருகிறது. இந்து மதம் உலகத்தையே வெற்றிகொள்ளும்படி செய்துவருகிறது."

மீர்ஜாபர் அலி பரேலியில் போலீஸ் "டிப்டி சூபரின்டென்டென்ட்"ஆக இருந்தார். இளைஞர் என்றே சொல்லலாம். உயரமான, கட்டுள்ள உடல். மாநிறத்தை விடச் சிறிது தெளிவான நிறம். தாம் பட்டாணியர் என்று மீர்ஸாஹப் கூறிவந்தார். மதம் சடங்கு என்பதைப்பற்றியெல்லாம் அவருக்கு அவ்வளவு அக்கறை கிடையாது. அவர் 'நோன்பு' இருப்பதில்லை. 'நமாஜ்' படிப்பதில்லை. ஆனால் கொஞ்ச நாளாக மத விஷயங்களைப்பற்றி மணிக்கணக்காக விவாதம் செய்வது அவருக்குத் தொழில்போல் ஆகிவிட்டது. மீர்ஸாஹப் முகத்தைச் சுளித்தவாறு கூறினார்: "பண்டித்ஜீ, கொஞ்சம் மயக்கம் தெளிய மருந்து சாப்பிடுங்கள். இந்த வேட்டிக்காரர்கள் உலகை வெற்றிகொள்ளப் போகிறார்களா? எறும்புக்குச் சாவதற்கு முன்னால் சிறகு முளைக்குமாம். அதுபோலவே இந்து மதத்தில் இந்த ஆரிய ஸமாஜம் பிறந்திருக்கிறது. என்னப்பா, ஜோனதன் ஸாஹப்?" மீர்ஸாஹப் சீட்டாட்டத்திற்காக ஆட்களைத் தேடிக்கொண்டிருந்த மிஸ்டர் ஜோனதன் டேவிடைக் கூப்பிட்டார்.

மிஸ்டர் ஜோனதன் டேவிட் கரு நிறம்; குள்ளம். சிறிது மெலிந்த மனிதர். ஏறத்தாழ நாற்பது வயது இருக்கும். ஆனால் ஐம்பது வயதுபோல் காணப்பட்டார். ஜோனதன் டேவிட் பரேலியில் ஸப் ஜட்ஜ். கோட்டும் "பான்ட்"டும் அணிந்து தாடி மீசையை மழுங்கச் சிரைத்துவிட்டிருந்தார். மீர்ஸாஹபின் குரலைக் கேட்டு

ஜோனுதன் டேவிட் அவர் பக்கம் திரும்பிச் சொன்னார்: "என்னப்பா மீரு, நீ வண்டிட்யா! நான் உன்காகத் தான் தேடிக்கிட்டு இருக்கேன். ஹலோ டாக்டர், இன்னிக்குப் பிரிட்ஜ் கிடையாதா?" பிறகு அவர் மீர் அருகில் வந்து சொன்னார்: "என்ன மேன், நீ எங்களைக் கூப்பிட்டாய். சொல்லு, என்ன சமாச்சாரம்-"

மீர்ஸாஹப் உரக்கச் சிரித்தார். "டேவிட் ஸாஹப், உங்கள் பேச்சில் இன்னும் சிறிது நாட்டுப் பாஷையின் வாடை அடிக்கிறதே. இன்னும் முயற்சி செய்யவேண்டும் நீங்கள். அப்போதுதான் ஆங்கிலோ இண்டியனைத் தோற்கடிக்கலாம்."

"இது என்ன பேத்தல்? மீர், நான் "ப்யூர்" யூரோப்பியன்! ஸெவென் ஜெனரேஷன்ஸ் முன்னே எங்கள் போர்பாதர்ஸ் இண்டியா வந்தாங்க. ஸவுத்தில் தங்கி விட்டாங்க டாக்டர்! ஸெவென் ஜெனரேஷன்ஸ் இன் இண்டியா, அன்ட் இன் தி ஸௌத்" ஜோனுதன் டேவிட் அபிநயம் பிடிக்கும் முறையில் இரண்டு கைகளையும் நீட்டி நீட்டிக் கூறினார். "அன்ட் த ரிஸல்ட்?"

டாக்டர் கிஷோரிரமண் சொன்னார்: "ஒன்றுக்குப்பின் மற்றொன்றாக இந்தியரின் கறுப்புப் பூச்சு படிந்து கொண்டே இருந்தது! ஸெவென் ஜெனரேஷன்ஸ் ஸெவென் வரிசை! கருங்காலி மரம்கூட உங்களிடம் தோற்றுவிடும் டேவிட் ஸாஹப்! ஆனால், நான் ஸர்ஜன். உங்கள் சருமத்தின் மேல் கருநிறப் பூச்சு எத்தனை அடுக்கடுக்காகப் படிந்திருந்தாலும் அதனுள்ளிருக்கும் அசல் வெளுப்பு நிறம் என்கண்ணுக்கு நன்கு புலப்படு கிறது. அந்த 'மேக்கி'ல் பெரிய ஸிவில் ஸர்ஜன் என்று ஆட்டம் போடுகிறான், கண் தெரியவில்லை. குருடனாகி விட்டான். அதனால் தான் உங்கள் வெளுத்த தோலைப் பார்க்க முடியவில்லை. அவன் உங்களை யூரோப்பியன்

கிளப்பில் நுழைய விடவில்லை.

பண்டித ஸோமேசுவரதத் இதுவரை இந்தப் பேச்சை மௌனமாகக் கேட்டு ரசித்தார். இப்போது அவரால் பொறுக்க முடியவில்லை. ''இந்தப் போக்கிரி யூரோப்பியர்கள் உங்களைத் தங்கள் கிளப்பில் என்றுமே நுழைய விடமாட்டார்கள். ஜோனதன் ஸாஹப்! நீங்கள் நான் சொல்வதைக் கேட்டு "சுத்தி" செய்துகொள்ளுங்கள். நாங்கள் ஒரு பிரதிக்ஞை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அடிக்குப் பயந்தோ வறுமையினாலோ முஸ்லிமாகவும் கிறிஸ்தவராகவும் மதம் மாறிய இந்துக்களை "சுத்தி" செய்து மீண்டும் இந்துக்கள் ஆக்கும் பணி செய்து வருகிறோம். அதனால் டேவிட் ஸாஹப் இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்."

ஜோனதன் டேவிடோ மீர்ஜாபர் அலியோ பண்டித ஸோமேசுவரதத்தருக்கு முகத்தில் அறைந்தாற்போல் பதில் ஏதும் கூறுவதற்கு முன்னரே டாக்டர் கிஷோரி ரமண் பேச்செடுத்தார். ''பண்டித்ஜீ. இந்த டேவிட் ஸாஹப் "சுத்தி" செய்துகொண்டாலும் செய்து கொள்ளுவார். ஆனால் இவருடைய துரைசாணி அம்மாவை நீங்கள் எப்படி 'சுத்தி' செய்யப்போகிறீர்கள்? அவள் பக்கா யூரோப்பியன் ஆயிற்றே! இந்த நம் ஜோனதன் டேவிட் ஸாஹப் யூரோப்பியன் கிளப்பில் நுழைய முடியவில்லை. ஆனால் இவருடைய துரைசாணி அம்மா தினமும் டென்னிஸ் விளையாடுகிறாங்க, டான்ஸ் பண்ணுறாங்க."

மிர்ஜாபர்அலி சொன்னார்: "நீங்கள் எல்லாம் ஜோனதன் ஸாஹபை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இவர் கவர்னரிடம் என்னை யூரோப்பியன் கிளப்பில் சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டு 'மெமோரேண்டம்' அனுப்பி

யிருக்கிறார். இவருடைய மனைவியார் தாமே அந்த 'மெமோரேண்ட'த்தை எடுத்துக்கொண்டு லெப்டினெண்ட் கவர்னரை பேட்டி கண்டாங்க. ஒரு மணி நேரம் பேட்டி நடத்திருக்குது தெரியுமா?"

பண்டித ஸோமேசுவரதத் ஜோனதன் டேவிடைப் பார்த்தார். "என்ன டேவிட், இந்த மீர்ஸாஹப் சொல்வது சரிதானா?"

மிகவும் உருக்கமாக ஜோனதன் டேவிட் பண்டித ஸோமேவர தத்தைப் பார்த்தார். "ஆம் பண்டித், ஆனால் அந்த லெப்டினெண்ட் கவர்னர் என் மேடம்கிட்ட என்குயரி செய்கிறேன்னு சொல்லிவிட்டாரு. கமிஷனர், கலெக்டர், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் இவங்களெல்லாம் ஒத்துக் கொண்டாங்க. ஆனால் இந்தப் 'பண்ணி' ஸிவில் ஸர்ஜன் இருக்கானே, இவன் மாத்திரம் நான் கிளப்பில் நுழைஞ்சா என்னைத் தூக்கி வெளியிலே எறிந்து விடுவானும். அவனோடு அந்த க்ளீமெண்ட்ஸ்—அதுதான் நன்றிகெட்ட பய, போலீஸ் சூபரின்டென்டெண்டும் இருக்கான்." இதைச் சொல்லி ஜோனதன் டேவிட் "பாயை"க் கூப்பிட்டார்.

"ஒரு சின்ன பெக்'! வெல்மேன் நீயும் சாப்பிடு மீர், இரண்டு 'பெக்' எடுத்துக்கிட்டு வா!"

பண்டித ஸோமேசுவரின் புன்முறுவல் அவர் மீசைக் குள்ளிருந்து தலைநீட்டியது. "மிஸ்டர் டேவிட், போலீஸ் காப்டன் இந்த க்ளீமெண்ட்ஸ், கங்கா பிரஸாதைத் தினமும் யூரோப்பியன் கிளப்பில் கூப்பிட்டு அவனுடன் டென்னிஸ் விளையாடுகிறானும். இது உண்மையா?"

கிஷோரிரமண் உரக்கச் சிரித்தார். "பண்டித்ஜீ, என்னுடைய சிவில் ஸர்ஜன் மிஸ்டர் மேக்கில், என்னைக் கூட நான்கு ஐந்து தடவை யூரோப்பியன் கிளப்பிற்கு அழைத்துக்கொண்டுபோயிருக்கிறார். ஆனால் அவருக்கு

ஏனே நம் ஜோனதன் டேவிட்டிடம் இவ்வளவு கோபம் என்று தெரியவில்லை. இவர் உருவத்தைப் பார்த்தே அவர் மிரண்டுவிடுகிறார்."

"பேரர்!" ஜோனதன் டேவிடுக்கும் மீர்ஸாஹபுக்கும் விஸ்கி நிறைந்த கிளாஸ் தம்ளர்களைக் கொடுத்துச் சென்றான். ஜோனதன் டேவிட் ஒரேமடக்கில் பாதி தம்ளர் விஸ்கியை விழுங்கிவிட்டார். அதற்குப் பிறகு ஒரு பெருமூச்சு விட்டு அவர் சொன்னார்: "வெல், பண்டித், என் அதிர்ஷ்டம் அப்படி. நான் சீமைக்குப் போனேன். அசல் யூரோப்பியன் லேடியைக் கட்டிக்கிட்டேன். என் "டாடி" என்னை ஆங்கிலோ இண்டியன் என்று எழுதினர். ஆனல் இந்த அவிசாரி மக்கள் மேக்கில்லும் க்ளீமெண்ட்ஸும் என்னை "நேடிவ் கிறிஸ்டியன்" என்றே நினைக்கிறார்கள். பண்டித், இது அதிர்ஷ்டக் கோளாறு, இல்லாவிட்டால் வேறென்ன. இதோ கங்கா பிரஸாத் வந்துவிட்டான் பாரு. ரொம்ப சந்தோஷமாகக் காணப் படறான். ஹலோ மிஸ்டர் கங்கா பிரஸாத்! நீ இன்னிக்கு யூரோப்பியன் கிளப்பில் டென்னிஸ் விளையாடப் போகலியா? சொல்லுமேன், என்ன விஷயம்?"

கங்கா பிரஸாத் சொன்னார்: "டேவிட் ஸாஹப், நான் இன்றைக்கு இரவு வண்டியிலோ, நாளைக் காலையிலோ அலாகாபாத் போகவேண்டும். டில்லி தர்பாருக்கு ஏற்பாடு செய்யும் கமிட்டியில் என்னையும் போட்டிருக் கிறார்கள். டில்லியில் இரண்டு மூன்று மாதமாவது தங்கி ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது."

ஜோனதன் டேவிட் வியப்புடன் கங்கா பிரஸாதைப் பார்த்தார். "நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன் கங்கா பிரஸாத்! இவ்வளவு ஜூனியர்! ஸர்விஸ் இரண்டு வருஷம்தான் ஆச்சுது; அதற்குள் டில்லி தர்பாருக்கு ஏற்பாடு செய்ய உன்னை அனுப்பறாங்க. மீர், நீ

போவேன்னுல்லே நான் நெனச்சேன். ஆனல் கங்கா பிரஸாத் போருன்!''

கங்கா பிரஸாத் டில்லி தர்பாருக்குப் போவதைக் கேட்டு மீர்ஜாபர் அலிக்கு இடி விழுந்தது போல் இருந்தது. ''ஜோனதன் ஸாஹப், இது க்ளீமெண்ட்ஸ் செய்த அக்கிரமம்! இந்த துரை தினமும் அவனேடு டென்னிஸ்விளையாடருன். அவனை முகஸ்துதி செய்கிருன். அப்பறம் இவனை அனுப்பாமே என்னையா அனுப்பு வாரு?''

கிஷோரிரமண் கூப்பிட்டார். ''கங்கா பிரஸாத் நீ சக்கரவர்த்தியைக் கட்டாயம் சந்திப்பாய். அவர் கிட்டே நம் ஜோனதன் டேவிடின் ரிப்ரஸென்டேஷனைப் பற்றி அவசியம் சொல்லு! அவர் ஒரு உத்தரவு பிறப்பித்து ஜோனதன்டேவிடை யூரோப்பியன் என்ரே இல்லாது போனல் ஆங்கிலோ இண்டியன் என்ரே தீர்ப்புக் கொடுத்துவிடட்டும்.''

ஜோனதன் டேவிட் ஆழ்ந்த சிந்தனையோடு சொன்னர்: ''இவன் என்ன பேசுவான், கிங் எம்பரர் கிட்டே! அவர் அருகில் எந்த ''நேடி''வும் அண்ட முடியாது. நான் என் மிஸஸ்ஸை அனுப்பப்போறேன்!''

கங்கா பிரஸாத் ஒற்றைநாடியான உயரமான மனிதர். அலாகாபாதில் பி. ஏ. பாஸ் செய்த பிறகு டிப்டி கலெக்ட ராக உத்தியோகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந் தார். அவர் டிப்டி கலெக்டர் ஆவதில் ஜ்வாலா பிரஸாத் செய்த முகஸ்துதிகளும், லட்சமீசந்தின் செல்வாக்கும், அத்துடன் கங்கா பிரஸாதின் யோக்கியதாம்சங்களும் உதவியளித்தன. பி. ஏ. பரீட்சையில் அவனுக்கு இரண்டாம் வகுப்பு கிடைத்தது. ஆனல் விளையாட்டில் மாணவ உலகத்தில் அவன் முன்னணியில் நின்ருன். ஜயதேயியுடன் சிவில்லைன்ஸ் பங்களாவில் இருந்ததினல்

அவருக்கு எல்லாவித வசதிகளும் கிடைத்திருந்தன. இந்த வசதிகள் காரணமாக கங்கா பிரஸாத் அலாகாபாதில் 'ம்யோர் செண்டிரல் காலேஜி'ல் மிகப் புகழ் பெற்ற ஆட்டக்காரனுகிவிட்டார். கிரிக்கெட், டென்னிஸ் இரண்டிலும் அகில இந்தியப் புகழ் பெற்ருர்.

கங்கா பிரஸாத் அப்போது மிகவும் அடக்க ஒடுக்கமாக இருந்தார். ஜோனதன் டேவிடைப் பற்றிய பேச்சைக் கேட்டு அவர் புன்முறுவல் செய்தார். பிறகு இவர்களை விட்டுவிட்டு பிரிட்ஜ் டேபிள் அருகில் போய் விட்டார். கங்கா பிரஸாத் அங்கிருந்து அகன்றவுடன் மீர்ஜாபர் அலி சொன்னர்: "பார்த்தியா பண்டித ஸோமேசுவரதத் இந்தப் பயலை; என்ன கர்வம், என்ன பெருமை! பெரிய தாலுகாதார்போலேயில்லே ஆடம்பரம் செய்கிறன்!"

பண்டித ஸோமேசுவரதத் சிறிது மௌனமாக இருந்து விட்டுக் கூறினர்: "அப்பாவுக்கும் பிள்ளைக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. ஆனல் பையன் நல்ல குடும்பஸ்தன். கங்கா பிரஸாத் திறமையும் துணிவும் உள்ளவன். மீர்ஸாஹப்! இதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். புது யுகத்து மனிதன். புதிய உலகத்தில் ரொம்ப தூரம் முன்னேறக்கூடியவன்."

"முன்னேற்றமாவது மண்ணுங்கட்டியாவது? இவனைப் பற்றி இப்பவே புகார்கள் வரத் தொடங்கியாச்சு. கடவுளுக்குத்தான் வெளிச்சம். இவன் செய்யற வீண் செலவுக்கெல்லாம் பணம் எங்கிருந்து வருகிறதோ? இவன் லஞ்சம் வாங்குகிறதாகவும் எங்கிருந்தும் புகார் வரவில்லை. நான் சொல்றேன் பண்டித்ஜீ, என்றைக் காவது இவர் மாட்டிக்கொள்வார். நீங்கள் பெரியவர். இவனுடைய தந்தையின் நண்பர். ஆதலால் கொஞ்சம் இவருக்கு எச்சரிக்கை செய்யுங்கள்."

மீர்ஜாபர் அலி சொன்னார். கிஷோரிரமண் உரக்கச் சிரித்தார். "என்ன, பொறுமையாக இருக்கிறதா உங்களுக்கு மீர்ஸாஹப்? நீங்கள் ஆயிரம் ஊழல்கள் பண்ணிவிட்டு ஆபத்து இல்லாது இருப்பீங்க. ஆனால் இந்த கங்கா பிரஸாத் மாட்டிக்கொள்வான். என்ன பண்டித்ஜீ, நீங்கள் என்ன நினைக்கிறீங்க?"

பண்டித ஸோமேசுவர தத்தர் ஆழ்ந்த சிந்தனையோடு சொன்னார்: "டாக்டர், மீர் ஸாஹப் சொல்லுவது சரியே. மீர் ஸாஹபுக்கும் கங்கா பிரஸாதுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், கங்கா பிரஸாத் துணிவு கொண்டவன். வெள்ளைக்காரர்களிடம் இவனுக்கு இவ்வளவு சலுகை ஏனென்றால், இவன் அவர்களோடு சரிசமானமாகப் பழகுகிறான். ஆனால் டாக்டர் இதுவே அவனுடைய குறையுங்கூட. அவனால் முகஸ்துதி செய்ய முடியாது. காரணம், அவன் ஒரு வீரன். வீரத் தன்மை குற்றத்தை உண்டாக்கும் என்பதும் உண்மை. நமது மீர் ஸாஹப் முற்றிலும் கோழை மனம் கொண்டவர். இவருடைய சூபரின்டென்டென்ட் இவரைத் திட்டுவார். ஆனால் இவர் முகத்தில் ஒரு சுருக்கம் விழவேண்டுமே! மீர் ஸாஹப் எல்லாருடனும் நட்புக்கொள்வார். ஆனால் கங்கா பிரஸாதின் வீராப்பு அவனுக்குப் பகை. அவன் உள்ளும் புறமும் ஒரேமாதிரி யிருக்கிறான். இதுதான் ஆபத்து. மீர் ஸாஹபிடமோ உள்ளுக்கும் புறத்திற்கும் பூமிக்கும் வானத்துக்குமுள்ள வித்தியாசம். டாக்டர் ஸாஹப், உலகம் இந்த இரண்டு உருவங் கொண்டது. இந்த உலகில் உள்ளொன்றும் புறமொன்றுமாக இரட்டை வாழ்க்கையால்தான் மனிதன் முன்னேற முடியும்."

மீர்ஜாபர் அலி பண்டித ஸோமேசுவரதத் கூறியதைப் பற்றித் தவறாக நினைக்கவில்லை. "அடே பண்டித், நீ

ஒரு ஒண்ணும் நம்பர் ஆசாமியப்பா! சரி, வாருங்கள் ஜோனுதன் ஸாஹப். இரண்டொரு 'ரப்பர்' ஆடலாம்."

ஜோனுதன் டேவிடின் கையைப் பிடித்துக்கொண்டு மீர்ஜாபர் அலி பிரிட்ஜ் அறைக்குப் போனபோதுதான் கங்கா பிரஸாத் ஆட்டத்தை முடித்துவிட்டு எழுந்து கொண்டிருந்தார். மீர்ஸாஹப் அருகில் வந்து அவர் சொன்னுர்: "மீர்ஸாஹப், கொஞ்சம் என்னேடு வாருங்கள். உங்களோடு கொஞ்சம் பேசவேண்டும். மிஸ்டர் டேவிட்! என்னை மன்னியுங்கள். உங்கள் நண்பரைப் பிரித்து அழைத்துப்போகிறேன்."

கங்கா பிரஸாத் மீர்ஜாபர் அலியை அழைத்துக் கொண்டு கிளப் கட்டடத்திலிருந்து வெளியே வந்த போது மீர்ஸாஹப் கேட்டார். "என்னப்பா, என்னை எங்கே அழைத்துச் செல்கிருய்?"

"மிஸ்டர் க்ளீமெண்ட்ஸின் பங்களாவுக்கு. கங்கா பிரஸாத் சொன்னுர்: நான் அவரிடம் உங்களையும் டில்லி தர்பார் ஏற்பாட்டுக்கான கமிட்டியில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்படி சொன்னேன். அவர் பாதி சம்மதித்துவிட்டதாகத் தோன்றியது. இப்போது நீங்களும் போய்ப் பேசிப்பாருங்கள். அவர் உங்களையும் அழைத்துச் செல்ல சம்மதித்துவிடுவார் என்று நான் நினைக்கிறேன்."

"உண்மையாகவா தம்பி!" மீர்ஸாஹப் நன்றியுடன் கங்கா பிரஸாதின் கையை அழுத்தியபடி கூறினுர்: நீ என்னை டில்லி தர்பாருக்கு அனுப்பி வைத்தாயானுல் நான் வாழ்வு முழுவதும் உனக்கு அடிமையாக இருப்பேன்."

இவர்கள் இருவரும் மிஸ்டர் க்ளீமெண்ட்ஸின் பங்களாவை அடைந்தபோது அவர் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு டில்லி தர்பாருக்கான

'திட்டத்தைப்' பார்த்துக்கொண்டிருந்தார். டில்லி தர்பாரின் அமைப்பைப் பற்றிய பொறுப்பு உத்திர பிரதேசத்தின் லெப்டினண்ட் கவர்னருடையது. லெப்டினண்ட் கவர்னருடைய பிரியத்துக்குப் பாத்திர மானவர் க்ளீமண்ட்ஸ். கங்கா பிரஸாதையும் மீர்ஜாபர் அலியையும் பார்த்ததுமே மிஸ்டர் க்ளீமெண்ட்ஸ் சொன்னர்: "ஹலோ கங்கா பிரஸாத், நீ எப்போது டில்லிக்குப் புறப்பாடு? நான் நாளை நின்று அங்கு போய்ச் சேருவேன்."

"நான் நாளைக் காலை அலாகாபாத் போகிறேன், ஸர். அங்கிருந்து ஒரு வாரத்திற்குப் பிறகு டில்லியில் ஆஜர் ஆவேன். என் மனைவியையும், குழந்தையையும் அலாகாபாதில் கொண்டு விடவேண்டுமே!"

"சரி, ஆனல் ஒரு வாரத்திற்குள் வந்து சேர்ந்துவிடு. மீர் நீ எதற்காக வந்துள்ளாய்? ஏதாவது முக்கியமான வேலை இருக்கிறதா?"

கங்கா பிரஸாத், "நான்தான் இவரை அழைத்து வந்திருக்கிறேன் ஸர்! மீர்ஸாஹபும் டில்லி தர்பார் ஏற்பாட்டைக் கவனிக்க வர விரும்புகிருர். நீரே காப்டன் ஸாஹபைச் சந்தித்துப் பேசுவதுதானே என்று சொல்லி நான்தான் இவரிடம் சொன்னேன். மீர்ஸாஹபுக்கு உங்களிடம் பேச பயம்; நான் வற்புறுத்தி அழைத்து வந்தேன்."

மிஸ்டர் க்ளீமெண்ட்ஸ் கங்கா பிரஸாதின் பேச்சைக் கேட்டுப் புன்னகை புரிந்தார். "கங்கா பிரஸாத், இந்த மீர் என்னிடம் பயப்படுகிருன? என்ன சொன்னய் நீ? பெரிய பன்றியப்பா இவன்! இவனைப்போலக் கயவன் பார்க்கவே முடியாது! என்ன மீர், நான் சொல்வது தப்பு இல்லையே! நீ பொறுக்கி எடுத்த நம்பர் ஒன் கேடிப் பயலல்லவா?"

மீர்ஜாபர் அலி பணிவோடு சொன்னார்: "துரையின் வார்த்தையை மறுத்துப் பேச எனக்குத் துணிவு உண்டா! துரையின் பேச்சை மறுப்பது அடக்கமற்ற செயலல்லவா!"

மிஸ்டர் க்ளீமெண்ட்ஸ் கங்கா பிரஸாதைப் பார்த்தார். "கேட்டுக்கொண்டிருக்கிறாயா கங்கா பிரஸாத்! எவ்வளவு பெரிய வேலைக்காரன் இவன் பார்த்தியா! இவனைப்போய் நீ டில்லி தர்பாருக்கு அனுப்பு என்று சொல்றியே!"

மீர்ஸாஹப் மேலும் குழைந்து குழைந்து கூறினார். "துரை, என் அதிகப்பிரசங்கித்தனத்தை மன்னிக்க வேண்டும். இந்தப் போலீஸ் இலாக்காவே ஒண்ணும் நம்பர் ஆசாமிகள் இருப்பதாகும். துரை! என்னைப் போன்றவர்கள் உங்கள் சேவைக்கு இல்லாதுபோனால் ஒரு நாளைக்குக்கூட அரசாங்கம் நடக்காது. ஏற்பாடெல்லாம் நாங்கதானே செய்கிறோம்."

இந்த வார்த்தையைக் கேட்டு மிஸ்டர் க்ளீமெண்ட்ஸ் உரக்கச் சிரித்தார். "நன்றாகச் சொன்னாய் மீர். பேஷ்! சரி, கங்கா பிரஸாத் மீர்ஜாபர் அலியின் பெயரையும் நிர்வாக அதிகாரிகள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுகிறேன். இந்த அயோக்யனிடம் அங்கே போவதற்கு ஏற்பாடு செய்யச் சொல்லு."

மீர்ஸாஹபின் முகம் மலர்ச்சி அடைந்தது. அவர் குனிந்து க்ளீமெண்ட்ஸுக்கு நீண்டதொரு சலாம் அடித்தார்.

மீர்ஸாஹபைக் கிளப்பில் கொண்டு விட்டு கங்கா பிரஸாத் வீடு திரும்பினார். அவருடைய மனைவி ருக்மிணிக்கு அவர் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டதைப் பற்றி ஆச்சரியம் உண்டாயிற்று. ருக்மிணி பக்கத்தில் இருக்கும் வக்கீல் ஸ்ரீ கிருஷ்ணாவின் வீட்டுக்குப் போக

ஆயத்தமாக இருந்தாள். கங்கா பிரஸாதின் இரண்டு வயது பிள்ளை நவல் கிஷோருக்கு பீக்கூ வராந்தாவில் விளையாட்டு காட்டிக்கொண்டிருந்தான். சமையல்காரி சமையல் அறையில் வேலை செய்துகொண்டிருந்தாள். கங்கா பிரஸாதைப் பார்த்ததும் பீக்கூ சொன்னான்: "இன்று வெகு சீக்கிரமாக வந்துவிட்டாயா தம்பி. உன் பொண்சாதி வக்கீல் அவர்கள் வீட்டிற்குப் போகப் போகிறாள்."

ருக்மிணி கங்கா பிரஸாதின் முகத்தில் புன்முறுவலைப் பார்த்து அவர் ஏதோ சந்தோஷச் செய்தி கொண்டு வந்திருக்கிறார் என்று புரிந்துகொண்டாள். அவள் கேட்டாள்: "ஏது இவ்வளவு மகிழ்ச்சி? ஏதாவது வேலை உயர்வு கிடைத்துள்ளதா?"

"பதவி உயர்வு என்றுதான் நினைத்துக்கொள். டில்லி தர்பாருக்கு வேண்டிய ஏற்பாடு செய்வதற்காகப் போக உத்தரவு கிடைத்துள்ளது. நீயும் வந்து பார் டில்லி தர்பாரை! டில்லி ஒரு பழைய சரித்திர நகரம். செங்கோட்டை, குதுப்மினார் எல்லாம் பார்க்கலாம்."

ருக்மிணி சொன்னாள்: "ராம! ராம! உங்களோடு டில்லியைச் சுற்றிப் பார்க்க வந்தால் அங்கே என்ன நினைப்பார்கள்? இரண்டு முழம் முட்டாக்குத் தொங்க விட்டுக்கொண்டு உங்களோடு வந்தேனானால் சிரிப்பார்களே." "அட, முட்டாக்குப் போட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? இதெல்லாம் பத்தாம்பசலி வழக்கம். விட்டுவிடு. பிக்கூ, எங்கள் சாமானை எல்லாம் எடுத்துக் கட்டு. நாளை காலை வண்டியிலோ அல்லது மத்தியானம் வண்டியிலோ போகவேண்டும். மூன்று மாதம் அங்கே இருக்கவேண்டியிருக்கும். குளிர்காலத்துக்கு வேண்டிய உல்லன் துணிகளும் வேண்டியிருக்கும். எடுத்து வை."

ருக்மிணி பீக்கூவிடம் "இல்லை பீக்கூ சித்தையா. இவர் எப்போதும் இப்படித்தான். அசட்டுப் பிசட்டுன்னு பேசுவார்! டில்லி தர்பாரில் பெண்களுக்கு என்ன வேலையாம். நன்றாக இருக்கிறது! நீயே சொல்லு."

பீக்கூ புன்னகை செய்தான். "வேலை ஏன் இல்லை அம்மா? கால்சட்டை போட்டுக்கொண்டு நீயும் துரைசாணி ஆகிவிடு. அங்கே இங்கிலீஷ் கத்துக்கோ! எங்க தம்பியின் ஆசை பூர்த்தியாகும். புது உலகம் ஆகையினாலே புதிய பழக்கங்களையும் கற்றுக்கொள்ளனு மில்லியா!"

"ஐயோ கடவுளே! நீயும் இப்படியெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டியா பீக்கூ சித்தியா!" ருக்மிணி சொன்னாள். பிறகு அவள் கங்கா பிரஸாத் பக்கம் திரும்பினாள். "மூன்று மாதம் அங்கே இருக்க வேண்டுமா? எப்போது போய்ச் சேரவேண்டும் நீங்கள் அங்கே?"

"ஒரு வாரத்துக்குள் போய்ச் சேரவேண்டும். இரண்டு மூன்று நாள் தாமதமானாலும் பரவாயில்லை. ஆனால் நீ மூன்று மாதம் இங்கே தனியே எப்படி இருப்பாய் என்பதுதான் கேள்வி."

"என்னை 'பாந்தா'வுக்கு அனுப்பிவிடுங்கள். அல்லது அலாகாபாதில் சித்தியிடம் அனுப்பிவிடுங்கள். ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது, அம்மாவையும் பார்க்கவில்லை. சித்தியையும் பார்க்கவில்லை. சித்தி உடம்பு சரியில்லை என்று கடிதமும் போட்டிருந்தாள்." "ஆம் உன்னை அலாகாபாத் அனுப்பலாம் என்றுதான் நினைத்தேன். விஷயம் என்னவென்றால், பீக்கூ இல்லாமல் டில்லியில் என் வேலை நடக்காது. இவனை என்னுடன் அழைத்துப் போகப்போகிறேன். ஆகவே நீங்களிருவரும் புறப்படுங்கள். நாளை காலை வண்டியில்

நாம் அலாகாபாத் போகவேண்டும். நான் அப்பாவுக்கு பாந்தாவுக்குக் கடிதம் எழுதுகிறேன். அவர் அலாகா பாத் வந்து உன்னை அழைத்துச் செல்வார்.''

கங்கா பிரஸாத் அலாகாபாதுக்குத் தாம் வரும் சமாசாரத்தைத் தந்தி மூலமாக ஜயதேயீக்குத் தெரிவித்தார்.

மூன்றும் நாள் காலை கங்கா பிரஸாத் குடும்பத்தோடு அலாகாபாத் அடைந்தபோது ஜயதேயீயின் 'தாங்கா' ஸ்டேஷனில் அவர்களுக்காகக் காத்திருந்தது. சாமான்களை எடுத்துக்கொண்டு எல்லோரும் ஜயதேயீயின் பங்களாவிற்குச் சென்றார்கள்.

வீட்டில் ஜயதேயீ மட்டுமின்றி கங்கா பிரஸாதின் தந்தை ஜ்வாலா பிரஸாதும் இருந்தார். ஜ்வாலா பிரஸாத் ஒரு வாரம் விடுமுறை பெற்று ஜயதேயீயைப் பார்க்க அலாகாபாத் வந்திருந்தார்.

ஜயதேயீ மிகவும் மெலிந்துவிட்டாள். அவளுக்குக் கடுமையான மலேரியா.வைத்தியரிடம் மருந்து சாப்பிட்டு வந்தாள். ஜ்வாலா பிரஸாத் வந்து டாக்டர் மருந்து கொடுக்கச் செய்தார். இரண்டு நாளில் சுரம் குறைந்து விட்டது. ஜயதேயீ ருக்மிணியைப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தாள். "கங்கா, நீ இவளையும் அழைத்து வந்தது நல்லதாய்ப்போய்விட்டது. நான் தன்னந்தனியாக இருக்கிறேன். லட்சுமீயின் மனைவிக்கு குழந்தைகள், வீட்டு வேலை என்று ஓய்வு ஒழிவில்லாத தால் இங்கு வர முடியவில்லை. லட்சுமீயையும் அவள் பார்த்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது."

"அப்படியானல் சித்தி, நீ கான்பூருக்கு ஏன் போக மாட்டேன் என்கிறுய்?" கங்கா பிரஸாத் கேட்டான்.

"இப்போது சாகும் தருவாயில் பிரயாகையை விட்டு விட்டு எப்படி கான்பூர் போவது?" ஜயதேயீயின்

முகத்தில் வறண்டதொரு சிரிப்பு ஓடியது.

"இல்லே குழந்தை, இனிமேல் இந்த உடம்பு திரிவேணிக் கரையில் சாம்பலாக வேண்டியதுதான். அறுபது வயது ஆகிவிட்டது. இன்னும் மூன்று நான்கு வருஷம்தான்." இதைச் சொல்லி ஜயதேயீயின் கண்கள் பனித்தன. அவள் பிறகு சொன்னாள்: "லட்சுமீக்கு ரொம்பக் கோபம். கான்பூருக்கு வா, கான்பூருக்கு வா என்று என்னிடம் சொல்கிறான். நான் அவனிடம் எவ்வளவோ சொன்னேன். மகனே, இங்கே அலாகாபாதில்கூடத்தானே ஒரு மரத் தொழிற்சாலே இருக்கு. இங்கேயே ராதாவையும் குழந்தைகளேயும் இருக்கச் சொல் என்று. ஆனால் ராதாவின் பிறந்தகம் கான்பூரில் இருக்கிறதல்லவா! பிறந்த வீட்டாரிடம் உள்ள பாசத்தை அவள் விட முடியாது." ஜயதேயீ ஒரு பெருமூச் செறிந்தாள். "கான்பூரிலேயே இருக்கலாம். அங்கேயே நல்லபடியாக இருந்து வளரட்டும் என்று கடவுளே வேண்டிக்கொள்கிறேன்."

ஜயதேயீயின் குரலில் ஒருவித வேதனே இருந்தது, குமைச்சல் நிறைந்திருந்தது என்பதை எல்லோரும் உணர்ந்துகொண்டார்கள். கங்கா பிரஸாத் சொன்னான்: "சித்தி, இதில் வருத்தப்படறதுக்கு என்ன இருக்கிறது? நீ சொன்னால் அலாகாபாதுக்கு வேலே மாற்றம் வாங்கி வந்துவிடுகிறேன். ஆனால், என் உத்தியோகம் கவர்ன் மெண்ட் உத்தியோகம். மாற்றல் நடந்துகொண்டே இருக்கும். இங்கிருந்து வேறு எங்கேயாவது மாற்றல் வரும்."

கங்கா பிரஸாதின் இந்த வார்த்தையைக் கேட்டு ஜயதேயீயின் வருத்தமனேத்தும் மறைந்துவிட்டது. ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தவாறு அவள் சொன்னாள்: "இல்லே குழந்தை, நீ இப்படியெல்லாம் சொல்லாதே.

மைத்துனர் இருக்கிறார். மாதா மாதம் வந்து பார்த்து விட்டுப் போகிறார். ஆறு ஏழு வருஷங்களில் அவரும் பென்ஷன் வாங்கிவிடுவார். இவருக்கு இங்கு மாற்றல் வாங்கிக்கொண்டு வரும்படி நான் சொல்லியிருக்கிறேன். உத்தியோகத்தின் கடைசி ஆறேழு வருஷங்களை இங்கே அலாகாபாதிலேயே கழித்துவிடலாம். வீடு கட்ட நிலம் வாங்கியிருக்கிறார். இங்கே ஒரு புதிய காலனி "லூகர் கஞ்ச்" அமைக்கப்படுகிறதல்லவா! இங்கே வந்து வீடு கட்டிக்கொள்ளுவார்."

கங்கா பிரஸாத் தம் தந்தையின் பக்கம் திரும்பினார். "நான் முந்தாநாள் பரேலியிலிருந்து உங்களுக்குக் கடிதம் போட்டேன். விஷயம் என்னவென்றால், டில்லியில் நடைபெறப்போகும் தர்பார் சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிக்க அமைந்துள்ள கமிட்டியில் என்னையும் போட்டிருக்கின்றனர். நான் டில்லியில் மூன்று மாதங்கள்வரை இருக்கவேண்டி யிருக்கும். பீக்கூவையும் என்னுடன் அழைத்துச் செல்கிறேன். பீக்கூ இல்லாமல் எனக்குக் கஷ்டமாக இருக்கும்."

ஜ்வாலா பிரஸாதின் முகத்தில் மகிழ்ச்சி ஒளி படர்ந்தது. "அப்படியா! ரொம்ப நல்ல சமாசாரம்! அதனால்தான் உன் அகமுடையாளையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாய். கேட்டியா அண்ணி, உன் மகன் டில்லி தர்பாருக்குப் போகிறான்."

ஜயதேயிக்கு உண்டான மகிழ்ச்சி ஜ்வாலா பிரஸாதை விடக் குறைந்ததல்ல. "மைத்துனரே, இந்த கங்கா ஒரு நாள் கலெக்டர் ஆவான். நான் இப்பவே சொல்லு கிறேன்! ஆனால் மைத்துனரே, மருமகள் இன்னும் குறைந்தது ஒரு மாதமாவது என்னுடன் இருக்கட்டும். இல்லாதுபோனால் மைத்துனியைக்கூட இங்கேயே அனுப்பி வையுங்களேன்."

"ஆம் அண்ணி. நான் ரொம்ப நாளாகச் சொல்றேன், மருமகளும் என்னோடு பாந்தாவுக்கு வரவேண்டும் என்று. கங்காவை நீ படிக்க வைத்தாய்; அவனுக்குக் கல்யாணமும் மிக ஆடம்பரமாகச் செய்து வைத்தாய். இந்த கங்காவிடமும் மருமகளிடமும் என்னைவிட உனக்குத்தான் அதிக உரிமை ; சொந்தம்."

ஜ்வாலா பிரஸாதுக்கு "லீவ்" முடிவடையவிருந்த தால் அவர் பாந்தாவுக்குப் போய்விட்டார். அவர் சென்ற இரண்டு நாட்களுக்குப் பின்னர் கங்கா பிரஸாத் டில்லிக்குப் புறப்படவேண்டியிருந்தது. டில்லிக்குப் போவதற்கு முன் ஜயதேயீயின் கால்களைத் தொட்டு வணங்கினான். "சித்தி, உன்னிடம் ஒரு வார்த்தை சொல்லவேண்டும்."

"ஆம் ஆம், தெரியும். நீ என்ன சொல்லப்போகிறாய் என்று! டில்லி போகிறாய் அல்லவா, ஆதலால் பணம் தேவை! எவ்வளவு வேண்டும் உனக்கு!"

"சித்தி, மூன்று மாதம் இருக்கவேண்டும் அங்கே. கூட ஒரு மாதம் ஆனாலும் ஆகும். எனக்கு என்னவோ சம்பளம் வரத்தான் செய்கிறது...."

ஜயதேயீ கங்கா பிரஸாதின் வார்த்தையைத் தடுத்துப் பேசினாள்: "ஆம், ஆம். உனக்கு என்ன சம்பளம் வருகிறது என்று எனக்குத் தெரியும். உன்னுடைய பழக்கங்களைப் பற்றியும் லட்சுமீ என்னிடம் சொல்லி யிருக்கிறான். பொறுப்புள்ள ஆபீஸர் ஆகிவிட்டாய், கொஞ்சம் ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டும் நீ."

"ஆமாம் சித்தி. லட்சுமீ அண்ணாவுக்கு செலவு செய்கிறது என்றால் ஒரே கசப்பு. ஆனால், டில்லியில் பெரிய பெரிய ராஜா மஹாராஜாக்கள் வருவார்கள். அவர்களுடன் இருக்கவேண்டும். ஆகவே அவர்கள் எதிரில்...." கங்கா பிரஸாத் சொல்லும்போதே நின்று

விட்டான்.

"ஆம், எனக்குத் தெரியும். நீ எந்த ராஜாவை விடக் குறைந்தவன்!" மிகவும் அன்பாக ஜயதேயீ கங்கா பிரஸாதின் தலைமேல் கையை வைத்து ஆசீர்வதித்த வாறே சொன்னாள்: "நான் சொல்கிறேன், உன் முன்னால் பெரிய பெரிய ராஜா மஹாராஜாக்கள்கூட அடிமைபோல் தோன்றுவார்கள். சொல்லு, எவ்வளவு ரூபாய் உனக்குத் தேவை? தாராளமாகவே கேளு. டில்லிக்குப் போய் நல்ல முறையில் இருக்கணும்."

"ஒரு ஐந்நூறு ரூபாய் இருந்தால்.,..இருந்தால் போதும்" கங்கா பிரஸாத் சொன்னான். "ஐந்நூறு ரூபாயில் என்ன நடக்கும் உனக்கு. உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதாக்கும்" என்று சொல்லி ஜயதேயீ தன் பெட்டியிலிருந்து நூறு ரூபாய் நோட்டாக பத்து நோட்டுக்களை எடுத்து கங்கா பிரஸாதினிடம் கொடுத்தாள். "உனக்குப் பற்றுமற்போனால் மீண்டும் எனக்கு எழுதி வாங்கிக்கொள். வீணாகக் கஷ்டப்படக் கூடாது, தெரிந்ததா!"

கங்கா பிரஸாத் சிரித்துக்கொண்டே சொன்னான்: "சித்தி, நீ எவ்வளவு நல்லவள்! நீதான் என்னைக் கெடுத்து வருகிறாய். என்னுடைய ஆடம்பரத்தைப் பார்த்து மற்றவர்களுக்குப் பொறாமை உண்டாகிறது." ஜயதேயீ திகைத்தாள். "உன் எதிரிகள் பொறாமை யினால் குமுறி எரியட்டும். அது நல்லதுதான். நீ எந்த ராஜா மஹாராஜாவைவிடக் குறைச்சல்! அடே, ஆமா, என்ன சொன்னாய் நீ! டில்லியில் பெரிய ராஜா மஹா ராஜாக்கள் வருவார்கள். டில்லி முழுவதும் வைரமும் வைடூரியமுமாக ஜொலிக்கும் அல்லவா! ஆனால் உன் கையில் ஆபரணம் ஒன்றும் இல்லாமல் வெறிச்சென்று இருக்கிறதே! கொஞ்சம் பொறு!" இதைச் சொல்லி

ஜயதேயீ இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு வைர மோதிரத்தை எடுத்தாள். "ஒரு ராஜா இதை அவரிடம் அடமானம் வைத்திருந்தார். இது பதினொரு ரத்தி வைரம். இவர் இதை வைத்துக்கொண்டு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தார். பிறகு அவன் இதை மீட்டுக் கொள்ளவேயில்லை. இந்தா வாங்கிக்கொள். விரலில் போட்டுக்கொள்! பெரிய பெரிய மஹாராஜாக்களிடம் கூட இவ்வளவு உயர்ந்த வைரம் கிடையாது."

மோதிரத்தில் பதித்திருந்த வைரத்தின் பிரகாசத்தில் கங்கா பிரஸாதின் கண்கள் கூசின. இவ்வளவு பெரிய வைரம் அவன் இதுவரை பார்த்ததேயில்லை. இலேசான நீல நிறம், பளிச் பளிச் என்னும் ஒளி மின்னல், பெல்ஜியத்தில் தேய்த்துப் பட்டை தீட்டப்பெற்றது. கங்கா பிரஸாதின் கையில் அவனுக்கென்றே அளவெடுத்துச் செய்ததுபோல் அது பொருந்திக் கொண்டது.

கங்கா பிரஸாத் ஜயதேயீயைக் கட்டிக்கொண்டான். "சித்தி, சித்தி! நீ எனக்கு அம்மாவுக்கு மேல்! என்மீது எவ்வளவு பிரியம்! எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய்?" கண்களில் நீர் பெருகக் கூறினான் கங்கா பிரஸாத்.

2

லட்சுமீசந்துக்கு 'ஸர்' பட்டம் கிடைக்கும் என்று ஒருவரும் கற்பனைகூடச் செய்யவில்லை.

டில்லி தர்பாருக்காக லட்சுமீசந்த் ஐம்பதாயிரம் ரூபாய்

சந்தா அளித்திருந்தான். லட்சுமீசந்தை அதிகாரிகள் அவ்வளவு தூரம் நெருக்கி வற்புறுத்திவிட்டார்கள். லட்சுமீசந்த் வட இந்தியாவில் பெரிய வெளிநாட்டுத் துணி மொத்த வியாபாரி ஆகிவிட்டான். ஆனால், அவன் இத்துடன் திருப்தியடைந்துவிடவில்லை. பி. ஏ. வரையில் இங்கிலீஷ் படித்திருந்ததால் சர்க்காரில் அவனுக்கு நல்ல செல்வாக்கு. அவன் ஒரு துணி ஆலையும், ஒரு சர்க்கரை ஆலையும், இரண்டு எண்ணெய் ஆலைகளும் கான்பூரில் அமைத்திருந்தான். மற்றும் அலாகாபாதில் ஒரு மிகப் பெரிய மர ஆலை சொந்தமாக இருந்தது. இவை சம்பந்தமாக அவன் பல வழக்குகளில் ஈடுபடவேண்டியிருந்தது. பணத்தை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான். கோடிக்கணக்கில் ரூபாயைப் போட்டு வரவு செலவு பண்ணிக்கொண்டிருக்கும்போது கேவலம் ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுத்து அதிகாரிகளுடைய பார்வையில் தனது நிலையை உயர்த்திக்கொள்ளுவது அவனுக்கு லாபகரமாக முடிந்தது. ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஹைகோர்ட்டில் இரண்டு பெரிய வழக்குகள் அப்பீலில் இருந்தன. அவை சம்பந்தமாக டிஸம்பர் மாதம் கடைசி வாரத்தில் அவன் அலாகாபாத் வந்திருந்தான். 1912 ஜனவரி மாதம் முதல் தேதியன்று "பயோனியர்" பத்திரிகையில் புது வருஷத்து விருது பெற்றவர்கள் பட்டியலில் தன் பெயரைக் கண்டு அவன் களிப்படைந்து குதித்தான்.

காலையிலிருந்து லட்சுமீசந்துக்குப் பாராட்டுத் தெரிவிக்கப் பலர் வரிசை வரிசையாக வந்தபடி இருந்தனர். எல்லா இடங்களிலிருந்தும் வாழ்த்துத் தந்திகள் வந்து குவிந்தன. ஜயதேயீ லட்சுமீசந்துக்கு ஆரத்தி எடுத்தாள். அவனை கங்கையில் போய் ஸ்நானம் செய்யச் சொன்னாள். கங்கா ஸ்நானம் முடிந்த

பிறகு கோயிலில் பூஜை செய்வித்து நைவேத்தியங்கள் சமர்ப்பித்தாள். இதெல்லாம் முடிய மத்தியானம் ஆகிவிட்டது. லட்சமீசந்த் வீடு திரும்பி அம்மாவிடம் சொன்னான்: “நான் உடனே கான்பூர் போகவேண்டும். அங்கே எல்லாரும் எனக்காகக் காத்துக்கொண்டிருப் பார்கள். கான்பூருக்கு ஒரு தந்தி அடித்திருக்கிறேன்.” பிறகு சிறிது நின்று அவன் தொடர்ந்தான். “எனக்குப் பெரிய விருது கிடைத்திருக்கிறது.ஆகையால் கான்பூரில் ஆலைகளில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், கான்பூர் பஜாரில் அனைவரும் என்னைப் பாராட்ட வருவார்கள். ஒரு வாரத்திற்கு நீயும் என்னுடன் கான்பூர் வந்திரு. அதன் பிறகு நீ திரும்பி வந்துவிடலாம்.”

மாலை வண்டியில் லட்சுமீசந்த் அம்மாவோடு கான்பூருக்குப் புறப்பட்டான். இரவு ஒன்பது மணி, வண்டி கான்பூர் சேர்ந்தது. ஸ்டேஷனில் பெரிய கூட்ட மாக மக்கள் திரண்டிருந்தனர் லட்சுமீசந்தை வரவேற்க. நகரத்தின் முக்கிய வியாபாரிகளும், லட்சுமீ சந்திடம் வேலை செய்யும் முக்கியப் பணியாளர்களும் அங்கு கூடியிருந்தனர். வண்டி நின்றதும் “லட்சுமீ சந்துக்கு ஜே”என்ற கோஷத்துடன் அவனை வரவேற்றுப் பூமாலைகள் அணிவித்தார்கள். ஸ்டேஷனுக்கு வெளியில் ஊர்வலமாகச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இங்கிலீஷ் பாண்டு வாத்தியமும், ‘கியாஸ்’ விளக்கு களும், கோச்சு வண்டிகளும் தயாராக இருந்தன. ஜயதேயி ஒரு மூடிய வண்டியில் உட்கார்ந்துகொண்டு தனியே வீட்டிற்குப் போனாள். பூக்களால் அலங்கரித்த ஒரு கோச்சு வண்டியில் லட்சுமீசந்தை அமர்த்திக் கொண்டு எல்லோரும் ஊர்வலமாகச் சென்றனர். ராதா ஜயதேயியின் கால்களைத் தொட்டு வணங்கி

வரவேற்ருள். அவள் மாளிகையிலும் பெருங்கூட்டம் கூடியிருந்தது. லட்சுமீசந்தின் உறவினர் வீட்டுப் பெண்கள் அனைவரும் அங்கு குழுமியிருந்தனர். வீட்டு வேலையாட்களும் பரபரப்போடு இங்குமங்கும் ஓடியாடிய படியிருந்தனர். ராதா 'பதலூ'கஹாரியிடம் சொன்னுள்: "இந்தா பதலூ! அம்மாவை அவங்க அறைக்கு அழைத்துப் போ. 'பரோஸி'யை பணிவிடைக்காக இங்கேயே இருக்கச்சொல்." பிறகு அவள் தன் மாமியின் பக்கம் திரும்பி "என்ன சொல்றது அம்மா! இவருடைய ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ரொம்பத் தொல்லை கொடுத்துவிட்டாங்க. இவரை ஊர்வலமாக அழைத்து வரவேண்டும்னு வற்புறுத்த ருங்க. நான் என்ன செய்வது? எல்லாத்துக்கும் சரி சொல்லவேண்டிவந்தது. அவர்களுக்கெல்லாம் சாப்பாடு இங்கேதான். முந்நூறு நானூரு பேருக்கு மேலே சாப்பிட்டிருப்பாங்க. ஊர்வலம் எத்தனை மணிக்கு வந்து சேருமோ தெரியாது. பாதி ராத்திரி ஆனுலும் ஆச்சரியம் இல்லை. நீங்கள் சாப்பிட்டுவிட்டுப் போய் படுத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு நேரம் கண்விழித் திருப்பீர்கள்!"

ஜயதேயீ வருத்தம் நிறைந்து ராதாவைப் பார்த்தாள்—அந்த ராதாவை தன்னிடமிருந்து மகனைப் பறித்துக் கொண்டவளை, அந்த வீட்டுக்கு எஜமானியைப் பார்த்தாள். பிறகு ஒரு பெருமூச்சு விட்டவாறு எழுந்து நின்ருள். "நீ சொல்வது சரி மருமகளே. எல்லாருக்கும் நல்லவிதமாக சாப்பாடு பண்ணி வை. என் குழந்தையை எல்லாரும் ஆசீர்வதிக்கட்டும். இப்போ எனக்குப் பசியே இல்லை. ரொம்பவும் களைப்பா இருக்குது. கொஞ்சம் பாலைக் குடித்துவிட்டுப் படுத்துக்கொள் கிறேன்."

ராதை புன்னகை செய்தவாறு சொன்னாள்: "இல்லை அம்மா! கொஞ்சம் இனிப்பு அவசியம் சாப்பிடவேண்டும். விருந்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த விருந்து, ஊர்வலம் எல்லாம் இங்கே அன்றாடக் காரியமாகிவிட்டது. இவ்வளவு பெரிய ராஜ்யத்தை அறிவும் ஆற்றலும் இல்லாமலா சமாளித்து வருகிறேன்?" அவள் வேலையாளிடம் சொன்னாள்: "கொஞ்சம் இனிப்பும் ஒரு தம்ளர் கங்கா ஜலமும் கொண்டுவா. இதோ பார், ஒரு தாமிரக் குடத்தில் கங்கா ஜலத்தை நிரப்பி அம்மாவின் அறையில் வை."

சிறிது சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு ஜயதேயீ பேசாமல் தன் அறைக்குச் சென்றாள். மூன்றடுக்கு மாடியில் ஒரு தனிமையான அறையை அவளுக்கென ஒதுக்கியிருந்தனர். பெரிய அறை. சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பரோஸி அங்கே முன்னரே வந்து ஆஜராகியிருந்தாள். அவள் ஜயதேயீயின் படுக்கையை விரித்தாள். ஜயதேயீ படுக்கையில் படுத்துக் கொண்டாள். பரோஸி அவள் கால்களைப் பிடிக்கத் தொடங்கினாள். ஜயதேயீ சொன்னாள்: "இருக்கட்டுமடி! நான் அவ்வளவாகக் களைத்துவிடவில்லை. நீ போய் மருமகளுக்கு உதவி செய்."

அடுத்த நாள் ஜயதேயீ ஸ்நானம் பூஜை எல்லாம் முடித்துக்கொண்டு மூன்றும் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். வீட்டில் மகிழ்ச்சி ஆரவாரம் நிரம்பியிருந்தது. லட்சுமீசந்தின் குழந்தைகள் ஜயதேயீயைச் சூழ்ந்துகொண்டனர். ஜயதேயீ அந்தக் குழந்தைகளுடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

ராதாவின் உறவினர்கள் அங்கு இருந்தனர். ஆனால், அங்கு தன் தம்பி குடும்பத்தார் ஒருவரும் இல்லை

என்பதை ஜயதேயீ உணர்ந்தாள். சமயம் பார்த்து ராதாவிடம் கேட்டாள்: "மருமகளே, 'புத்தூ'வையும், 'முன்னூ'வையும் கூப்பிட்டாயா இல்லையா? அவர்களில் ஒருவரையும் இங்கு காணேமே?"

ராதா இந்தக் கேள்விக்கு விளக்கமாக பதில் ஒன்றும் கூறவில்லை. "அம்மா, எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர்களைக் கூப்பிடுவது? நாம் யாரைத்தான் அழைத்திருக்கிறோம்? எல்லாரும் தாமாகவே இஷ்டப் பட்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வந்திருக்கிறாங்க. இப்போது அவர்கள் எல்லாம் விரோதம் கொண்டாடி வாழ்த்துத் தெரிவிக்க வரவில்லை என்றால் இதில் நம்முடைய குற்றம் என்ன?" ராதா இவ்வளவு சொல்லி விட்டு வேறு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

புத்தூலாலும் முன்னூலாலும் ஜயதேயீயின் தம்பி புதல்வர்கள். அவர்களுக்குத் தோல் வியாபாரம். ஒரு காலத்தில் அவர்களே கான்பூரில் பெரிய வியாபாரிகள். ஆனால் சில வருடங்களாக அவர்கள் நிலைமை இறங்கி விட்டது. லட்சுமீசந்த் ஜயதேயீயின் தம்பி ஸாக்கூலால் வீட்டில் இருந்துகொண்டு படித்தவன். லட்சுமீசந்தின் மாமாவும் அவனிடம் தம் பிள்ளைகளைவிட அதிக அன்பு காட்டியவர். ஸாக்கூலால் இறக்கும்போது புத்தூ லாலுக்குப் பதினெட்டு வயது; முன்னூலாலுக்குப் பதினைந்து வயது. ஸாக்கூலால் தமது பிள்ளைகள் இருவரையும் லட்சுமீசந்தின் கையில் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடினார். லாலா ஸாக்கூலாலிடம் ரொக்கம் பதினைந்து இருபது லட்சம் இருக்கும் என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். ஆனால், லட்சுமீசந்த் கணக்கு வழக்குப் பார்த்தபோது கடன் போக மொத்தம் எழுபது ஆயிரம் தொகை அவருடைய பிள்ளைகளுக்கு வைத்துப் போயிருந்தார்

என்பதைக் கண்டான். ஸுக்கூலால் இறந்த ஒரு வருடத்திற்குள்ளேயே லட்சுமீசந்த் கான்பூரில் ஒரு சர்க்கரை மில்லும், ஒரு எண்ணெய் மில்லும் தொடங்கி விட்டான். உறவினர்களிடையே அதைப்பற்றிக் கொச கொசவென்று குற்றச்சாட்டுக்கள் பேசப்பட்டன. ஸுக்கூலாலின் மைத்துனர் கிரிதாரிலால் இரண்டு பிள்ளைகளின் சார்பில் லட்சுமீசந்துக்கு எதிராக வழக்கும் தொடர்ந்தார். வழக்கு இரண்டு வருடம் வரை நடை பெற்றது. இந்த இரண்டு வருடங்களில் புத்தூலால், முன்னூலால் இருவருடைய நிலைமை மேலும் சீர்கெட்டுப் போயிற்று. வழக்கு தோற்றுவிடும்போல் இருப்பதைக் கண்டு கிரிதாரிலால் லட்சுமீசந்துடன் சமாதானம் செய்துகொண்டார். இந்த வழக்கு விவகாரத்தில் லாலா கிரிதாரிலாலிடமும் ஏறக்குறைய ஒரு லட்சம் சேர்ந்து விட்டது; ஸுக்கூ—புத்தூவின் கம்பெனிக்கு ஒரு லட்சம் கடன் சுமை ஏறிவிட்டது.

லட்சுமீசந்த் நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறான் என்பதை ஜயதேயீ அறிவாள். கிரிதாரிலாலுக்கு ஐம்பதினாயிரம் பணம் கொடுத்து இந்த சமாதானம் செய்துகொள்ளப்பட்டதென்பதையும் அவள் அறிவாள்.

இரண்டு மூன்று முறை அவள் தன் மருமான்கள் சார்பில் லட்சுமீசந்துடன் பேச முயற்சி செய்தாள். ஆனால் லட்சுமீசந்தும் ராதாவும் இந்தப் பேச்சுக்கு செவிசாய்ப்பதேயில்லை. ஜயதேயீ கான்பூரில் இருக்க விரும்பாததற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். மாலை வேளையில் ஜயதேயீ தன் பிறந்தகத்திற்குச் சென்றாள். தன் தந்தை வீட்டின் நிலையைப் பார்த்து அவள் துணுக்குற்று நின்றுவிட்டாள். அந்தப் பெரிய மாளிகை இப்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது; நடுவில் ஒரு சுவர். ஜயதேயீயின் மருமகன் அவளை ஏதோ

வரவேற்று வார்த்தை சொன்னனே தவிர அவனது உபசரிப்பில் அன்பும் இல்லை, உள்ளத்தின் ஈடுபாடு மில்லை.

வீட்டில் ஓர் பயங்கரமான கலவரச் சூழ்நிலையை அவள் கண்டாள். புத்தூலால் முன்னூலாலிடையே பாகப் பிரிவினை ஆகிவிட்டது. லட்சுமீசந்தின் ஜவுளி மில்லில் முன்னூலாலுக்குத் தரகு வேலை கிடைத்த தாகவும், அதற்குப் புத்தூலாலும் அவன் தாயும் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் அவளுக்கு அங்கே தெரிய வந்தது. வழக்கினல் புத்தூலால் முன்னூலாலின் கம்பெனி மிகவும் சீர்குலைந்துவிட்டது. இதனல் முன்னூலால் மிகவும் மனம் சோர்ந்துவிட்டான். இந்தத் தரகு வியாபாரத்தினல் முன்னூலாலுக்கு மாதம் ஓராயிரம் வருமானம் கிடைத்து வந்தது. ஆதலால், அவன் தன் அண்ணனுடன் பாகப் பிரிவினை செய்துகொண்டு கம்பெனியிலிருந்து அகன்றுவிட்டான்.

ஜயதேயீ தன் பிறந்தகத்தில் இரண்டு மூன்று மணி நேரம் இருந்தாள். இதற்குள் அங்கு அவள் ஒரு பயங்கர மான கசப்பு மனப்பான்மை இருப்பதை உணர்ந்தாள். அவளுக்கு மூச்சுத் திணறியது. விரைவாகத் தன் மகன் வீட்டிற்கே திரும்பிவிட்டாள். அவள் திரும்பி வந்த போது லட்சுமீசந்த் உணவு அருந்திக்கொண்டிருந்தான். தன் தாயைக் கண்டு அவன் புன்னகை புரிந்தான். "உன் மருமான்களைப் பார்த்துவிட்டு வந்தாயா? இப்போது தங்களுக்குள்ளேயே வழக்காடிக்கொண்டிருக் கின்றனர். நான் அவர்களுக்குச் சிறிது ஆதரவு தர முற்பட்டதற்கு புத்தூ கோபமடைந்துவிட்டான். மாமியோ விரோதம் கொண்டு உட்கார்ந்திருக்கிறள். ஆனல் முன்னூலால் என் உதவியைப் பெற்றுக் கொண்டான். இதனல் அவர்கள் முன்னூவுக்கும்

விரோதிகளாகிவிட்டனர்.'' ஜயதேயி மகனுக்கு மிகவும் கடுமையான பதில் கொடுக்க இயலுமாயினும் அவ்வாறு செய்யாது ஒரு பெருமூச்செறிந்து சொன்னாள்: "இதெல்லாம் பகவானுடைய லீலை. இதில் யார்தான் என்ன செய்ய முடியும்?''

எப்போதும்போல ஜயதேயி தன் மருமான்களது கட்சியை ஆதரித்து ஏதாவது கடுஞ் சொற்களைச் சொல்லுவாளென்று லட்சுமீசந்த் நினைத்திருந்தான். அப்படி நடக்கவில்லை. அவன் மேலும் சொன்னான்: "அம்மா, நான் அலாகாபாதில் உள்ள மரத் தொழிற் சாலையை விற்கப்போகிறேன். அதில் எனக்கு ஒரு லட்சம் லாபம் கிடைக்கும்.''

ஜயதேயி திடுக்கிட்டாள். "ஏன், மரத் தொழிற்சாலை தான் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறதே. ஏன் விற்கப் போகிறாய்?''

"ஆமாம், சரியாகத்தான் ஓடுகிறது. இல்லாவிட்டால் எவனாவது ஒரு லட்சம் அதிகம் கொடுத்து அதை வாங்கிக்கொள்ள முன் வருவானா? ஆனால் இங்கே கான்பூரில் இருந்துகொண்டு நான் அதைச் சரிவர கவனித்துக்கொள்ள இயலவில்லை. அதில் வீணாகத்தான் பணம் முடங்கிக் கிடக்கிறது. நான் இங்கே இன்னொரு துணி ஆலையை ஆரம்பிக்கப்போகிறேன். அந்த மரத் தொழிற்சாலையை விற்ற பணத்தோடு இன்னும் கொஞ்சம் முதலீடு சேர்த்து இந்தத் துணி ஆலையை அமைத்துவிடலாம். கான்பூரில் இருப்பதால் நான் அதை நன்றாக கவனித்துக்கொள்ள இயலும்.''

ஜயதேயி பயந்துகொண்டே கேட்டாள்: "அந்த அலாகாபாதில் உள்ள வீடு? அதையும் விற்கப் போகிறாயா என்ன?''

லட்சுமீசந்த் சிரித்தான். "இல்லையம்மா. அந்த வீடு

உன்னுடையது. மேலும், அலாகாபாத் நம் மாகாணத்துக்குத் தலைநகரம். அங்கு ஹைகோர்ட் இருக்கிறது. தினம் ஒரு வழக்கு இருந்துகொண்டுதான் இருக்கிறது. அது சம்பந்தமாக அலாகாபாத் வரவேண்டியிருக்கும் அல்லவா?''

ஜயதேயீக்குப் போன உயிர் மீண்டும் திரும்பி வந்தது போல் ஆகியது. அவள் சிறிது மௌனமாக இருந்து பின்னர் சொன்னாள்: "அது சரிதான் லட்சுமீ. ஆனால் இனிமேல் நீ வந்து போவது குறைந்துவிடும். தன்னந்தனியாக இருக்கிறேன். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. உன் பிரியம்."

லட்சுமீசந்த் சொன்னான்: "நான்தான் எத்தனையோ தடவை இங்கு கான்பூரில் வந்து இரு இரு என்று சொன்னேனே. ஆனால் உனக்கு அது புரியவில்லை. கங்கை கான்பூரில்கூடத்தான் இருக்கிறது. பிரயாகை பெரிய புண்ணிய ஸ்தலம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அங்கு உன் பெயரில் ஒரு சத்திரம் கட்டி வைக்கிறேன்.''

ஜயதேயீ சிரித்தாள். ''சத்திரம் நான் இறந்துவிட்ட பிறகு கட்டலாம்...."

அப்போது ராதா சொன்னாள்: "அங்கே ஏன் தனியாக இருக்கிறீர்கள் அம்மா, அங்குதான் வேலையாட்கள் எல்லோரும் இருக்கிறார்களே. அவ்வளவு பெரிய பங்களா, சவாரிக்காக வண்டி. என்ன இல்லை? மேலும் புண்ணிய ஸ்தலம் திரிவேணி இருக்கிறது. நாம் போய் இருக்கும் இடமும் ஆச்சுது. அம்மா கான்பூரில் வந்து இருக்க விரும்பவில்லையென்றால் இதில் என்ன குறை?"

ஜயதேயீ இப்போது ராதாவை நோக்கினாள். அவளுடைய அந்தப் பார்வையில் வருத்தம் தோய்ந்த நன்றியுணர்வு இருந்தது. கான்பூரில் வீட்டு எஜமானி

ராதா, ஜயதேயீ அல்ல, இது தெளிவுபட்டது. இனி கான்பூரில் ஜயதேயீ வந்திருப்பதென்பதன் பொருள் ராதாவின் அதிகாரத்திற்குட்பட்டு இருப்பது என்பது தான். வீட்டிலும் இடைவிடாது சண்டை. அவள் லட்சுமீ சந்திடம் சொன்னாள்: "சரியாகத்தான் சொல்லுகிறாள் ராதா. அங்கேயே நான் சௌக்கியமாக இருக்கிறேன். வேலையாட்கள் இருக்கிறார்கள். பாசபந்தங்களை அறுத்து பகவானை தியானம் செய்வதில் மனதைச் செலுத்தவேண்டும். எப்போது அழைத்துக்கொள்ளப் போகிறாளோ! அங்கேயே அலாகாபாதில் இருந்து கொண்டு பூஜை புனஸ்காரம் என்று இருந்து விடுகிறேன். நீ நன்றாக இருக்கவேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொண்டிருக்கிறேன்."

ஒரு வாரம் கான்பூரில் தங்கிவிட்டு ஜயதேயீ அலாகாபாதிற்குத் திரும்பிவிட்டாள். "கும்ப மேளா" நெருங்கிக் கொண்டிருந்தது.

3

டில்லீ தர்பாரிலிருந்து திரும்பிய கங்கா பிரஸாத் தம் குடும்பத்தை அழைத்துக்கொண்டு பரேலீ வந்தடைந்தபோது அங்கு ஒரே பரபரப்பு! பரேலியில் ஆரிய சமாஜத்தின் முதல் மகாநாடு நடந்துகொண்டிருந்தது. பரேட் மைதானத்தில் பிரமாண்டமான பந்தல் போடப்பட்டிருந்தது. தினசரி உணர்ச்சி பொங்கும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. நாடு முழுவதிலிருந்தும் நல்ல நல்ல பஜனை கோஷ்டிகள்

வந்திருந்தன. ஆரிய சமாஜத்தின் பெரிய உபதேசகர் சுவாமி ஜடிலாநந்தர் இந்த மகாநாட்டிற்கு ஜீவ களை அளித்தார். அவருடைய பேருரைகளில் ஆவேசத் தீ பொங்கியெழும். சுவாமி ஜடிலாநந்தர் வெவ்வேறு மதத்தினரை வாதப் போருக்கு அறைகூவி அழைத்தார். இந்த அறைகூவலை ஏற்று வந்தார் அல்லாமா பக்ஷி.

மூன்றும் நாள் மாலை அல்லாமா பக்ஷிக்கும் சுவாமி ஜடிலாநந்தருக்கும் வாதப் போர். பந்தலில் கூட்டம் நெரிந்து வழிந்தது. பெருமளவில் போலீஸ் ஜவான்கள் காவல் காத்து நின்றனர். வாதத்தில் தீர்ப்பளிக்க வந்திருந்தார் மிஸ்டர் ப்ரேடர். அவர் வீட்டில் விருந்தாளிகள் வந்துவிட்டபடியால் கூட்டத்திற்கு வர நேரமாகியது. மிஸ்டர் ப்ரேடர் வந்ததும் மேடையில் அமர்ந்தார். அவருடன் மீர்ஜாபர் அலி, பண்டித ஸோமேசுவர தத்தர் மற்றும் மிஸ்டர் ஜோனதன் டேவிட் ஆகியோர் இருந்தனர். இவர்களைத் தவிர மேடையில் ஆறு ஏழு நாற்காலிகள் காலியாகக் கிடந்தன. பெரிய மேடைக்கெதிரில் ஒருவர் உட்காரும் அளவில் மூன்று மேடைகள் அமைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் நடு மேடையில் சுவாமி ஜடிலானந்தர் உட்கார்ந்திருந்தார். வலது பக்கத்து மேடையில் அல்லாமா பக்ஷியும், இடது பக்கத்து மேடையில் பூஜ்ய மஸீஹுூம் உட்கார்ந்திருந்தனர். மிஸ்டர் ப்ரேடர் எழுந்து வாதப் போருக்கான நியமங்களை எடுத்துரைத்தார். முதற் கேள்வி அல்லாமா பக்ஷி சுவாமி ஜடிலானந்தரைப் பார்த்துக் கேட்பார். அதற்கு விடை சுவாமி ஜடிலானந்தர் அளிப்பார். இக்கேள்வி விடைகளால் தீர்ப்பாளர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லையெனில் மீண்டும் கேள்வியின் மேல் விடை மாற்று விடை சொல்ல வாய்ப்பு அளிக்கப்படும். பின்னர் இதே

முறையில் பூஜ்ய மஸீஹ், சுவாமி ஜடிலானந்தரை நோக்கி கேள்வி கேட்பார். சுவாமி ஜடிலானந்தருக்குப் பிறகு விடையளிக்கும் பொறுப்பு அல்லாமா பக்ஷியி னுடையதாகும். அவர் விஷயத்திலும் முன்போலவே எல்லாம் நடைபெறும். முடிவில் மஸீஹ் பாதிரியார் விடையளிப்பார்.

மிஸ்டர் ப்ரேடர் இவ்வாறு அறிவிப்புச் செய்தபோது பந்தலில் மௌனம் நிலவியது. சுவாமி ஜடிலானந்தர் பத்மாசனத்தில் அமர்ந்து 'ஓம்' என்ற கோஷம்செய்ய, அவரது சிஷ்யர்கள் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அல்லாமா பக்ஷி மெத்தையில் பெரிய திண்டின்மேல் சாய்ந்தவாறு கையில் தியான மாலை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருடைய கண்கள் மூடியிருந்தன. அவருடைய கையிலிருந்த மணி மாலை வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தது. திடீரென அல்லாமா பக்ஷி திடுக்கிட்டு கண்களைத் திறந்தார். அவர் கண்கள் தணலாகச் சிவந்திருந்தன. இரண்டு முழங்கால்களையும் ஒன்றாகச் சேர்த்து பிடித்துக்கொண்டு அமர்ந்து அவர் உரத்த குரலில் கூறினார்: "ஆணை அல்லாவினுடையது. விருப்பம் ரஸூலுவினுடையது. ஏ தலைமொட்டைச் சாமியாரே! நான் சொல்லவேண்டியது என்னவென்றால், நீர் உம் மண்டையை மட்டும் சிரைத்துக்கொள்ளவில்லை. உம் மீசையையும் சிரைத்து விட்டீர், தாடியையும் சிரைத்துவிட்டீர். உம் கடவுள் உம் தலை மேல் மயிரை உண்டாக்கினர். அவர் உம் முகவாய்க்கட்டையில் தாடி மயிரை உண்டாக்கினர். ஆனல் நீர் என்ன பண்ணினீர் என்றால், உம் கடவுளை முட்டாள், அறிவற்றவன் என்று நினைத்தீர். உம் தாடி மீசையையும், தலையையும் சிரைத்துவிட்டு உம் கடவுளைவிட நீர் அதிக புத்திசாலி என்று உலகிற்குக்

காட்ட எண்ணினீர். உம் கடவுள் இந்த மயிரை உண்டாக்கித் தவருன செய்கையைச் செய்தான் என்றீர். ஆகவே இந்தச் செய்கையால் கடவுளை அறிவற்றவனுகக் காட்டுகின்றீர். ஏ தலைமொட்டைச் சாமியாரே! ஏ மூர்க்கானந்த்! கடவுள் செயலைப்பற்றி உன் வேலையினுல் இவ்வாறு தவருக எடுத்துக்காட்டுவது தருமத்தை எதிர்ப்பது மட்டுமல்ல, மிகப் பெரிய துரோகச் செயலுமாகும்."

பண்டித ஸோமேசுவர தத் இந்தக் கேள்வியால் மிகவும் உணர்ச்சி அடைந்துவிட்டார். அவர் கலெக்டரிடம் "துரையே, இது கேள்வியல்ல. இது திட்டுப் பேச்சல்லவா?" என்ருர்.

மிஸ்டர் ப்ரேடர் புன்முறுவல்பூத்து மீர்ஜாபர் அலியின் பக்கமாகப் பார்த்தார். "நீ என்ன சொல்லுகிருய் மீர்?"

"துரையவர்கள் நீதியளிப்பவர்கள். தீர்ப்பு உங்கள் கையில் உள்ளது. பார்க்கப்போனுல் கேள்வி கேட்கின்ற முறை சிறிது தவருனதாக இருக்கக்கூடும். ஆனுல், எனக்குக் கேள்வி அப்படியொன்றும் தகாததாகப் படவில்லை. அதனுல் உங்களையும், என்னையும், அதாவது நம் அனைவரையுமே இந்தக் கேள்வியில் இழுத்து மாட்டியிருக்கிறது." மிஸ்டர் ப்ரேடர் ஜோனுதன் டேவிடைப் பார்த்தார். "என்ன மிஸ்டர் டேவிட், உங்கள் கருத்து என்ன?"

ஜோனுதன் டேவிட் உடனே பதிலளித்தார்: "இந்தக் கேள்வியை 'டிஸ்அலவ்' செய்துவிடவேண்டும். அனுமதிக்கக்கூடாது. மிகவும் மட்டமான கேள்வி."

அப்போது மிஸ்டர் ப்ரேடர் கங்கா பிரஸாதின் பக்கம் திரும்பினுர். கங்கா பிரஸாத் புன்னகை செய்தவாறு சொன்னுன்: "கேள்வி சரியானதே, கேள்வி கேட்ட

முறையும் இயற்கையானதே."

சிறிது நேரம் யோசனை செய்த பிறகு மிஸ்டர் ப்ரேடர் சொன்னார்: "கேள்வி கேட்ட முறை எங்களுக்குச் சிறிது தவறானதாகத் தோன்றியபோதிலும் கேட்ட கேள்வி முக்கியத்துவம் கொண்டதே. அல்லாமாபக்ஷி வசவு பாணியில் கேள்விகேட்டபடியால் ஸ்வாமி ஜடிலானந்தருக்கும் அதே பாணியில் பதில் சொல்லும் உரிமை உண்டு."

சபையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். எவ்வளவு நியாயம் நிறைந்த தீர்ப்பு!

ஸ்வாமி ஜடிலானந்தர் தம் குரலை எழுப்பினார். "மகர்ஷி தயானந்தருக்கு ஜே! எங்கள் மதத்தின் பிரகாரம் உலகில் மூன்று தத்துவங்கள் செயல்பட்டு வருகின்றன. பரமாத்மா, ஆத்மா, இயற்கை. ஏ, அல்லாமா என்று சொல்லப்படுகின்ற பிராணியே! என் உடல் இயற்கையின் பகுதியாகும். என் பிராணன் ஆத்மாவின் பகுதியாகும். இந்த இயற்கைக்கும் ஆன்மாவுக்கும் தலைவனே கடவுள். ஆன்மாவையும் இயற்கையையும் உண்டாக்கியது கடவுளேதான். ஆனாலும் இவற்றைத் தம் மனம்போல் செயல்படும் உரிமையையும் கடவுள் அளித்திருக்கின்றான். அடே அல்லாமா பிராணியே! உம் கேள்வி ஒரு நாடகம். ஏனெனில், இயற்கை குறைபட்டிராது போனால் நீர் அணிந்திருக்கும் இந்த சொக்காயும் இராது பைஜாமாவும் இராது. இயற்கை காட்டை உண்டாக்குகின்றது. மனிதன் அதை தோட்டம் ஆக்குகின்றான். இயற்கை பனிக்கட்டியை வீழ்த்துகின்றது. குளிர்ந்த காற்றை வீசுகின்றது. மனிதனோ வீடுகட்டுகின்றான், கம்பளி போர்த்திக் கொள்ளுகின்றான். இந்த நமது ஆன்மா இயற்கையை சீர்திருத்திச் சிங்காரிக்கின்றது. இதோ என்னுடைய

பதிலைக் கேள்! நான் என் தலையை மழித்துக்கொண்டுள்ளேன். தாடியையும் மீசையையும் சிரைத்துக் கொண்டுள்ளேன். இதற்குக் காரணம், இயற்கை உண்டாக்கிய வீணை சிக்கல்களில் சிக்குண்டு தலையில் எண்ணெய்தடவி சீப்பினால் வாருவதும், தாடிமீசையைத் தினந்தோறும் நாவிதனைக்கொண்டு ஒழுங்குபடுத்திக் கொள்வதும் வீண் கால விரயமே! இவற்றினின்று உயர்ந்து ஆன்மா மனதைப் பரமாத்மாவிடம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே ஆனால் ஏ அல்லாமா! உம் கடவுள் மலையைப் படைத்தான். காட்டைப் படைத்தான், சிங்கத்தைப் படைத்தான், நரியைப் படைத்தான், பன்றியைப் படைத்தான், பாம்பைப் படைத்தான். அதாவது அவன் மிகவும் பொருத்தமற்ற பல பொருள்களைச் சிருஷ்டித்துள்ளான். பிறகு உம்மையும் படைத்து உம் கடவுள் வெளியிட்டுள்ள கோமாளித்தனத்தைப்பற்றி எப்படி புகழ்ந்து பேச முடியும்? கடவுளைப்பற்றி முட்டாள்தனம் என்ற சொல்லைச் சொல்வது தகாது. முட்டாள்தனம், அல்லாமா உம்மிடத்தே உள்ளது."

ஸ்வாமி ஜடிலானந்தருடைய இந்த விடையைக் கேட்டு ஒருபக்கம் கைதட்டல் ஒலி எழும்பியது. ஆனால் மற்றொரு புறம் "அடிடா இவனை, இவன் ஒரு காபிர்; கடவுளைக் கோமாளி என்கிறான்!" என்ற ஒலி கிளம்பியது. மிஸ்டர் ப்ரேடர் எழுந்திருந்து குழப்பத்தை அடக்கினார். "கேள்வி எப்படிப்பட்டதோ விடையும் அப்படிப்பட்டதே. 'அடி' 'உதை' என்று பேசுகிறவர்கள் கைது செய்யப்படுவார்கள். போலீஸ்காரர்கள் இங்கு நின்றுகொண்டு இருக்கின்றனர். இந்தக் கேள்வியில் மார்க்குகள் ஸ்வாமிக்குக் கிடைத்துள்ளன. இனி பாதிரி மஸீஹ் ஸ்வாமி ஜடிலானந்தரைக் கேள்வி கேட்பார்."

பாதிரி ராம் இலாஹீ சாவதானமாக அமைதியாகத் தன் நாற்காலியில் அமர்ந்தபடி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும் இருந்தார். மிஸ்டர் ப்ரேடருடைய கட்டளையைக் கேட்டு அவர் எழுந்தார். அவர் வானத்தை நோக்கி இங்கிலீஷில் பிரார்த்தனை செய்தார்.

"என் பிதாவே! உன் பிரகாசத்தை உலகிற்கு யான் காட்ட எனக்கு நீ சக்தியை அளிப்பாயாக". பிறகு அவர் சுவாமி ஜடிலானந்தரைப் பார்த்தார்.

ஸ்வாமி ஜடிலானந்தர் தமது வெற்றியினால் இறுமாப்புக்கொண்டவராய் பாதிரி மஸீஹின் பக்கம் ஆட்டைப் புலி பார்ப்பது போல் பார்த்தார். பாதிரி மஸீஹ் சொன்னார்:

"ஸ்வாமி, ஆரிய ஸமாஜத்தில் விக்ரக ஆராதனை தகாதெனக் கூறப்பட்டுள்ளது என்பது உண்மை தானே; கோவிலுக்குப் போவது தவறாகக் கருதப்படு கின்றது. ஆரிய சமாஜத்தில் பூஜை செய்யும் முறை சந்தியாவந்தனத்தோடு ஹோமமும் யாகமும் செய்வது தானே?" ஸ்வாமி ஜடிலானந்தர் விடை புகன்றார். "பாதிரி அவர்களே! பரமாத்மா உருவமில்லாதவன். கிறிஸ்துவ மதமும்கூட இதைத்தானே கூறுகின்றது. அவன் எங்கும் இருக்கின்றான்.ஆதலால் கோவில்,மசூதி, சர்ச் இவை யெல்லாம் வியர்த்தமாகுமோ? எமது ரிஷிகளும் முனிவர்களும் யாகம் செய்துவந்தனர். பரமாத்மாவைப் பூஜை செய்ய இதுதான் எல்லாவற்றை யும் விட சரியான வழி."

பாதிரி மஸீஹ் தம்முடைய கொடுமையான படையை பிரயோகித்தார். "ஸ்வாமிஜி, ஹிந்துக்களில் பிணத்தை எரிக்கின்றனர். ஆதலால் உம் யக்ஞ குண்டம் என்பது பிணத்தைக் கொளுத்தும் பாடைதானே. அதில்

'ஸ்வாஹா ஸ்வாஹா' என்று சொல்லி நீ தினந்தோறும் கடவுளை எரித்துவிடுகிறீர் அல்லவா! அதாவது நீர் உம் கடவுளை பிணம் என்று நினைக்கின்றீர். தினந்தோறும் அதைக் கொளுத்த யாகம் செய்கின்றீர்."

பாதிரி மஸீஹின் இந்தக் கேள்வியைக் கேட்டு ஸ்வாமி ஜடிலானந்தர் ஆத்திரம் அடைந்தார். "பாதிரி, நீர் ஒரு பெரிய அறிவிலி. நாங்கள் செய்யும் யாகமும், ஹோமமும் எங்கள் ஆன்மாவைச் சுத்தப்படுத்துவதேயாகும். அதாவது, நாங்கள் எங்களுடைய பாவத்தைக் கொளுத்துகின்றோம். இவ்வாறு எங்களுடைய பாவத்தைக் கொளுத்திப் பரமாத்மாவிற்குப் பூஜை செய்கின்றோம்."

பாதிரி மஸீஹ் புன்புறுவல் செய்தார். "ஸ்வாமியாரே, பாவத்திற்கு உடல் கிடையாது. பரமாத்மாவிற்கும் உடல் கிடையாது. ஆதலால் ஹோமகுண்டத்தின் பாடையில் எரிவது உன் பாவமா, கடவுளா என்று உமக்கு எப்படித் தெரியும்?"

ஸ்வாமி ஜடிலானந்தர் கொதித்தெழுந்தார். "என்ன அர்த்தமில்லாமல் உளறுகிறீர் பாதிரியாரே. கடவுள் எங்காவது எரியக்கூடுமா? அவன் பிறப்பற்றவன், முதுமையற்றவன், இறப்பற்றவன். இந்த மூளையை வைத்துக்கொண்டுதான் நீர் பி. ஏ. பாஸ் செய்திருக்கின்றீரா?"

பாதிரி மஸீஹ் விடையளித்தார்: "அர்த்தமில்லாத பேச்சு நீர்தான் பேசுகின்றீர் ஸ்வாமி! பாவத்திற்கு உடல் இல்லாதபோது அது எப்படி எரிய முடியும்! உம் பாவத்தின் குணம் எரிவது அல்ல. அதாவது பாவமே ஒருவித நெருப்பாகும். அதன் ஜ்வாலையில் எல்லாரும் எரிகின்றார்கள். ஆதலால் உம் ரிஷிகளும் முனிகளும், ஹோமமும் யக்ஞமும் செய்தவர்

களும் அறிவற்றோர், நாகரீகமற்றோர். பக்தியில்லாதவர்கள். எங்கேயாவது, எவனாவது நெருப்பைக் கொளுத்தி தன் தாய்தந்தையருக்குப் பூஜை செய்வானா? ஆகையால், இந்த ஸந்தியாவந்தனம், ஹோமம் எல்லாம் அஞ்ஞானம்! மோசடி!" ஸ்வாமி ஜடிலானந்தர் எவ்வாறு கடுமையாகப் பதிலளிக்கலாம் என்று சிறிது யோசனை செய்து பார்த்துக் கணநேரம் கண்ணை மூடிக் கொண்டார். ஆனால் மிஸ்டர் ப்ரேடர் அவர் விடையளிக்க முடியாமல் போய்விட்டதாகக் கருதினார். அவர் சொன்னார்: "இந்தக் கேள்வியில் மார்க்குகள் பாதிரி மஸீஹூக்குக் கிடைத்துள்ளன. இனி அல்லாமாவின் முறை. அவர் கேள்விகளுக்குப் பதில் அளிப்பார்."

மிஸ்டர் ப்ரேடர் இதைச் சொன்னதும் கைத்தட்டல் ஆரவாரம் ஒலித்தது. ஸ்வாமி ஜடிலாநந்தர் எழுந்து சொன்னார்: "நான் இனி வாதப்போர் நடத்த மாட்டேன். இங்கே அநியாயம் நடைபெறுகின்றது. கிறிஸ்துவ மதத்தினிடம் பட்சபாதம் காட்டப்படுகின்றது." இதைச் சொல்லி ஸ்வாமிகள் தன் சிஷ்யர்களுடன் "வாக்-அவுட்" செய்து சென்றார்.

ஸ்வாமிஜி சென்றதும் கலெக்டர், ஸ்வாமி வாதத்தில் தோற்று ஓடிவிட்டார் என்றும், வாதம் முடிவடைந்தது என்றும் அறிவித்தார். இவ்வாறு அந்த வாதப்போர் முடிவடைந்தது.

கங்கா பிரஸாத் வீட்டிற்குத் திரும்பியபோது ஏதோ ஒரு நாடகத்தைப் பார்த்துவிட்டு வருவது போன்ற உணர்வு உண்டாகியது. ஜடிலானந்தர், பாதிரி மஸீஹ், ப்ரேடர் இவர்களனைவரும் கூடி ஒரு விசித்திரமான "டிராமா" நடத்தினரோ?

4

ரயில் அலாகாபாத் ஸ்டேஷனில் வந்து நின்றபோது கங்கா பிரஸாதின் மனம் மிகவும் கவலை நிறைந்திருந்தது. ஜயதேயீயின் பங்களாவை அடைந்தபோது அங்கு ஏதோ ஒரு புழுக்கம் நிறைந்திருந்தது போன்ற சூழ்நிலையைக் கண்டார். பீக்கூ அப்போது வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். கங்கா பிரஸாதின் 'தாங்கா'வைக் கண்டதும் அவன் ஓடிவந்து சாமான்களை இறக்கினான். சாமான்களை இறக்கும்போதே அவன் சொன்னான்: "நீ எங்கே போய் தாமதித்தாய் குழந்தே! நீ இருக்கிற விலாசம் எங்களுக்குத் தெரியல்லே. இல்லாதுபோனால் சமாசாரம் சொல்லியனுப்பியிருப்போம். நம்பர் தாரிணி இவ்வளவு நேரம் உன் பெயரை முணமுணத்துக் கொண்டிருக்கத் தெரியுமா?"

"ஏன், என்ன விஷயம்? சித்தியின் உடல் நிலை நன்றாகத்தானே இருக்கின்றது!"

"உன்னைப் பார்க்கவேணும் என்கிறதற்காக அவங்க பிராணன் போகாமல் தடைபட்டு நிற்கின்றது. டாக்டர் கையை விரித்துவிட்டுப் போயிட்டாரு. நேரா அவங்க அறைக்குப் போ தம்பி! ஆறு நாளா இங்கேதான் இருக்குது. அந்த அறையிலேதான் இருக்கிறது, முந்தாநாள் லச்சுமீசந்த் வந்துட்டுப் போனாரு."

கங்கா பிரஸாத் நேராக ஜயதேயீயின் அறைக்குள் சென்றான்.

ஜயதேயீ கண்களை மூடிக்கொண்டு பேச்சற்றுப்

படுத்திருந்தாள். ஏதோ உள்ளிருந்த வேதனையை அடக்குவதினால் அவள் முகம் சுருங்கிவிட்டதுபோல் காணப்பட்டது. ஜ்வாலா பிரஸாதும் அவள் தலைமாட்டில் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் தூங்குவதுபோல் காணப்பட்டார். கங்கா பிரஸாதின் காலடி ஓசையைக் கேட்டு அவர் கண்களைத் திறந்தார். "அடே, நீ வந்துவிட்டாயா!" அண்ணி பொய் சொல்லவில்லை. நேற்றிரவு அவள் நீ இன்றைக்கு கட்டாயமாக வருவாய் என்று சொன்னாள். நீ பரேலியில் இல்லையா? உனக்கு நான் இரண்டு தந்தி அனுப்பினேன். ஆனால் பதில் ஒன்றும் வரவில்லை."

"ஆமாம்! நான் கல்கத்தா போயிருந்தேன். அங்கே ஒருவாரம் என்று போக, பதினேழு பதினெட்டு நாட்கள் பிடித்துவிட்டன."

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "நேற்று இரவிலிருந்து இவள் மூர்ச்சையடைந்திருக்கிறாள். நடுவில் எப்போதாவது கண்களைத் திறந்து நீ வந்தாயா இல்லையா என்று கேட்கிறாள். பிறகு மறுபடியும் மூர்ச்சையடைந்து விடுகிறாள்."

பிறகு ஜ்வாலா பிரஸாத் சிறிது உரக்கச் சொன்னார்: "அண்ணி, நீ சொன்னது உண்மையாகிவிட்டது! கங்கா வந்துவிட்டான்!"

ஜயதேயீ கண்களைத் திறந்தாள். சிறிது நேரம் இமை கொட்டாமல் அவள் கங்கா பிரஸாதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு ஒரு மெலிந்த குரலில் கூறினாள்: "கொஞ்சம் கிட்டத்தில் வா. உன் தலைமேலே கையை வைக்க வேண்டும். சரி! நீ எங்கே தங்கிக் கொண்டிருந்தாய்? உன்னைப்பார்க்க என் பிராணன் துடித்துக்கொண்டிருந்தது. ஆனால் நான் மைத்துனரிடம் உன்னைப்பார்க்காமல் என் பிராணன் போகாது என்று

சொன்னேன். ஆகவே நீயும் வந்துவிட்டாய். கடவுள் என் பிரார்த்தனையைக் கேட்டுக்கொண்டார். மைத்துனரே, லட்சுமீ எங்கே?"

"அரை மணி நேரம் ஆகியது, இங்கிருந்து போனான்; கமிஷனர் அவர்களுடைய பங்களாவுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனான். அவசியமானால் ஆளை அனுப்பிக் கூப்பிடுகிறேன். ஏன்? ஏதாவது முக்கியமான வேலை இருக்கிறதா?"

"ஆமாம், வேலை இருக்கிறது. ஆனால் அவன் எப்போது திரும்பி வருவானோ அப்போதே நடக்கும் அந்த வேலை. பிறகு அவள் கங்கா பிரஸாதிடம் சொன்னாள்: "என்னடா? சரியான சமயத்தில் வந்துவிட்டாய்! இன்னும் ஒரு நாள் தாமதமாகியிருந்தால் நான் உன்னைப் பார்த்திருக்க முடியாது. நீயும் என்னைப் பார்த்திருக்க முடியாது."

ஜயதேயீ, கங்கா பிரஸாதின் தலையில் கையை வைத்து ஏதோ ஒரு அமைதியை அடைந்ததுபோல தன் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் இருந்த சுருக்கமும் அகன்றுவிட்டது. அவளது இயல்பான தோற்றம் மீண்டும் காட்சியளித்தது. ஜயதேயீ சிறிது நேரம் அப்படியே பேசாமல் இருந்து, கங்கா பிரஸாதின் தலையிலிருந்து தன் கையை அகற்றாது போகவே கங்கா பிரஸாத் மெல்ல அந்தக் கையைப் பிடித்து அகற்றி அவள் பக்கத்தில் சேர்த்து அமர்த்தினான். "இது என்ன அப்பா! மறுபடியும் மூர்ச்சை அடைந்துவிட்டாளே?"

"மூர்ச்சையாக இரண்டு நாளாகவே இருக்கிறாள். இதுவரை எப்படிப் பிழைத்திருக்கிறாள் என்றே டாக்டர்கள் ஆச்சரியம் அடைகிறார்கள். சரி, நீ போய்க் குளித்து ஆடை மாற்றிக்கொள். இவள் மூர்ச்சை தெளிந்தபோது உன்னைப்பற்றிக் கேட்பாள். அப்போது

நான் உன்னைக் கூப்பிடுகிறேன்."

அறையிலிருந்து வெளிப்பட்டு கங்கா பிரஸாத் தன் மனைவியைப் பார்த்தான். தன் தாயையும் பார்த்தான். அவர்களோடு விசேஷமாக ஒன்றும் பேச முடியவில்லை. ஒரு விசித்திரமான அச்சம் நிறைந்த சூழ்நிலை பரவி யிருந்தது. குளித்துச் சாப்பிட்ட பின் வரவேற்பு அறையில் வந்து உட்கார்ந்தான்.

மத்தியானம் லட்சுமீசந்த் திரும்பி வந்தான். கங்கா பிரஸாதைப் பார்த்து அவன் சொன்னான்: நீ வந்துவிட்டாயா? எங்கே போயிருந்தே? உனக்காக எவ்வளவு விசாரித்தேன். கடிதம் போட்டேன், தந்தி யடித்தேன். ஆனால் நீ இருக்கும் இடமே தெரியாது மறைந்துவிட்டாயே! அம்மா உன் பெயரையே ஜபம் செய்துகொண்டிருந்தாள். அவளைப் போய்ப் பார்த்தாயா?"

"ஆம். இரண்டு மூன்று நிமிஷம் நினைவு திரும்பியது. மீண்டும் மூர்ச்சையடைந்துவிட்டாள். நீங்கள் தனி யாகவே கான்பூரிலிருந்து வந்திருக்கிறீர்களா? அண்ணியும், குழந்தைகளும் வரவில்லையா? இங்கே இருக்கும் நிலை இப்போதோ அப்போதோ என்றல்லவா தோன்றுகிறது." லட்சுமீசந்த் புன்னகை செய்தான். "ஆம், தனியாகத்தான் வந்தேன். குழந்தைகள் இரண்டு நாளில் வந்துவிடுவார்கள். இங்கே வந்து நான் ஒரு விசித்திர சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். நான் வந்து மூன்று நாள் ஆயிற்று. இரண்டு நாளில் போய்விடலாம் என்று வந்தேன். கான்பூரில் வேலை தடைப்பட்டுவிட்டது. இப்போதுதான் சிவில் சர்ஜனைப் பார்த்துவிட்டு வருகிறேன். ஒன்றும் சொல்வதற்கில்லை என்று சொல்கிறார். எந்த நேரத்திலும் இவர்கள் பிராணன் போய்விடக்கூடுமாம். மூன்று நான்கு நாள்

இதேபோலத் தள்ளினாலும் தள்ளக்கூடுமாம். என்ன செய்வது என்று தோன்றவில்லை."

"இதிலே சம்சயம் என்ன இருக்கிறது. நீங்கள் இங்கு தங்கவேண்டியதுதான்."

"ஆமாம், தங்கவேண்டியதுதான்." ஏதோ அசுவாரஸ்யமாக லட்சுமீசந்த் பதிலளித்தான். "ஒருவருடைய சாவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது. ஆனால் அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். நான் மட்டும் என்ன? இந்த வீட்டில் எல்லோரும்தான் அப்படிச் செய்கிறோம். ஆனால் நீ எங்கே ஒளிந்திருந்தாய் என்று சொல்லவில்லையே!"

"கல்கத்தா போயிருந்தேன். அங்கிருந்து நண்பன் ஒருவன் அழைத்திருந்தான். லாலா ராதாகிஷன் பெயரை ஒருவேளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். உங்களுக்கு அவரைத் தெரியும். அவருடைய தகப்பனார் கோபிகிஷன் இப்போது கான்பூரில் இருக்கிறார்."

"அட, அந்த கோபிகிஷன் பிள்ளை ராதாகிஷனா? ராஜா பஹதூர் ஆகிவிட்டான், கல்கத்தாவில் நகை வியாபாரி—தெரிந்துவிட்டது. அப்போ நீ அவன் வீட்டிற்குப் போயிருந்தாயா! கல்கத்தாவில் அவர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள்? இப்போதான் தலைநகரம் அங்கிருந்து மாறிவிட்டதே!"

"தலைநகரம் மாறிவிட்டால் என்ன, பழைய ஆரவாரம், பழைய கலகலப்பு; கல்கத்தாவின் உருவத்தைக் கண்டு எனக்கு அச்சமே உண்டாகிவிட்டது."

லட்சுமீசந்த் சிரித்தான். "நீ பயந்துவிட்டாயா கங்கா பிரஸாத்! ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே! பார்க்கப் போனால் அப்படி ஒன்றும் பயப்படுகிறவனில்லையே நீ!"

"பிறகு லட்சுமீசந்த் கங்கா பிரஸாதின் கையிலிருந்த, வெகு நேரமாகத் தான் கவனித்துப் பார்த்துக்கொண்

டிருந்த மோதிரத்தைக் குறிப்பிட்டுக் கேட்டான்: "எவ்வளவு அழகாக இருக்கிறது. இதில் வைரமும் மிகப் பெரியதாக அமைக்கப்பட்டுள்ளது. இதை நான் எங்கேயோ பார்த்ததுபோல் தோன்றுகிறது. கல்கத்தாவில் வாங்கினையா இதை?"

"இல்லே. இதை சித்திதான் எனக்குக் கொடுத்தாள்." கங்கா பிரஸாத் சிறிது சங்கோசத்துடன் சொன்னன்.

லட்சுமீசந்த் புருவங்களேச் சுளித்துக்கொண்டான். "அதுதானே பார்த்தேன்." இருவரும் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அந்த நேரத்தில் ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயின் அறையிலிருந்து வெளியே வந்தார். அவர் டிராயிங் ரூமில் வந்து சொன்னர்: "லட்சுமீ, அண்ணி உன்னேயும் கங்காவையும் அழைக்கிருள்."

வைர மோதிரத்தைப் பற்றிக் கேட்ட பிறகு லட்சுமீ சந்தின் முகத்தில் தோன்றிய கடூரம் இன்னும் மாற வில்லே. அவன் எழுந்திருந்தான்.

ஜயதேயீ அவர்களது வருகையை எதிர்பார்த்திருந் தாள். அவள் தலேமாட்டில் இருந்த நாற்காலியில் ஜ்வாலா பிரஸாத் அமர்ந்தார். கட்டிலுக்கு அருகில் இருந்த இரண்டு நாற்காலிகளில் லட்சுமீசந்தும் கங்கா பிரஸாதும் உட்கார்ந்துகொண்டனர். ஜயதேயீ மௌன மாகச் சிறிது நேரம்வரை இவர்களேப் பார்த்துக்கொண் டிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் பெருக் கெடுத்தது. பிறகு அவள் மெலிந்த குரலில் சொன்னள்: "எனக்குக் கடைசி காலம் வந்துவிட்டது. குழந்தை லட்சுமீ, நான் உன்னிடம் ஒன்று சொல்ல ஆசைப்படு கிறேன். இது எனது கடைசிக் கோரிக்கை."

"சொல்லு அம்மா! உனது கடைசிக் கோரிக்கை பூர்த்தி யாகும்"—லட்சுமீசந்த் சொன்னன்.

ஜயதேயி சிறிது களைப்பாறிச் சொன்னாள்: "நான் இந்த கங்காவை உன்னைப்போலவே வளர்த்தேன். ஆதலால் இவனுக்கு நான் கொஞ்சம் பொருள் கொடுக்க ஆசைப்படுகிறேன். என்னிடம் இருக்கும் ரொக்கக் காசும், சில நகைகளும் அந்த இரும்புப் பெட்டியில் இருக்கின்றன. நான் இதையெல்லாம் கங்காவுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறேன். கங்கா அப்போது இல்லை. நான் மைத்துனரிடம் இதைப்பற்றிச் சொன்னபோது அவர் முதலில் உன்னிடம் சொல் என்று என்னிடம் கூறினார்.

லட்சுமீசந்த் சிரித்தான். ஒரு வறண்ட கடூரத்தனம் நிறைந்த சிரிப்பு. "இதற்காகத்தான் 'கங்கா', 'கங்கா' என்று ஜபம் செய்துகொண்டிருந்தாயா? கங்கா முன்னரே வந்திருந்தால் என்னிடம் இதையெல்லாம் சொல்லவேண்டி யிருந்திருக்காது. கங்காவுக்கு இந்த வைர மோதிரத்தை நீ என்னைக் கேட்டுக்கொண்டுதான் கொடுத்தாயா? ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது அம்மா!"

ஜயதேயி கண்களை மூடிக்கொண்டாள். அவள் முகத்தில் ஓர் பயங்கர வேதனைச் சுருக்கம் தோன்றி மறைந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு கண்களை மூடிய படியே அவள் சொன்னாள்:—"எது என்னுடையதோ அதை நான் அவனுக்குக் கொடுத்தேன். ஒவ்வொன்றுக்கும் நான் உன்னைக் கேட்டுக்கொண்டு சுற்றவேண்டுமா? நீ இப்போது வந்திருப்பதால்தான் உன்னை கேட்டேன்.

லட்சுமீசந்த் சொன்னான்: "இதுதான் நல்லது அம்மா. நீ என்னைக் கேட்டுவிட்டாய். இல்லாது போனால், நீ போன பிறகு இவர்கள் நிலை மிக மோசமாகப் போயிருக்கும். திருட்டுக் குற்றம் சுமத்தி நான் கங்காவைக் கைது செய்வித்திருப்பேன். சித்தப்பா இதை அறிவார்.

ஆகவேதான் அவர் உனக்கு இந்த ஆலோசனை கூறியிருக்கிறார். அம்மா! இந்தப் பணத்தின் மேல் யாருக்கும் எந்தவித உரிமையும் இல்லை. இது என்னுடையது. இனி நீ கங்காவுக்கு ஒன்றும் கொடுக்க முடியாது. நீ இதை நன்கு தெரிந்துகொள். நீ இவனைப் படிக்க வைத்தாய். இவனுக்காக ஆயிரம் ஆயிரமாகப் பணம் செலவிட்டாய். வைர மோதிரமும் கொடுத்திருக்கிறாய். இன்னும் என்னென்ன இவனுக்குக் கொடுத்திருக்கிறாய் என்று கொஞ்சம் என்னிடம் சொல்லேன்!"

ஜயதேயீ கண்களைத் திறந்தாள். "குழந்தை லட்சுமீ! இவ்வளவு சிறிய புத்தி ஆகாது! நான் ஒருவருக்குக் கொடுக்கும்படியாக அப்படி என்ன வைத்துக்கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் உனக்கும் உன் மனைவிக்கும்தான் தத்தம் பண்ணிவிட்டேனே. என்னுடைய சொந்த நகை கொஞ்சம் இருக்கிறது. ரொக்கம் பத்து-பதினைந்து ஆயிரம் இருக்கிறது. மொத்தம் ஏதோ இருபத்தைந்து முப்பது ஆயிரம் பெறும். கடவுள் உனக்கு கோடிக்கணக்காக அளித்திருக்கிறார். இவ்வளவு சிறிய தொகையைப்பற்றி ஏன் கஞ்சத்தனம் காட்டுகிறாய்?"

லட்சுமீ சந்த் சிறிது ஆவேசமாகச் சொன்னான். "நீ சொல்லுகிற இந்த கோடிக்கணக்கான பணமெல்லாம் இந்த நூறு, ஆயிரம் என்ற தொகைகளைக்கொண்டு தானே அம்மா, உண்டாகியது? ஒரு பைசா கஜத்துக்கு என்று லாபம் கிடைத்துத்தான் துணி மில்லில் லட்சக்கணக்கான ஆதாயம் ஏற்படுகிறது. என்னுடைய பொருளை நான் ஏன் விட்டுவிட வேண்டும். நடந்தது எதுவோ நடந்துவிட்டது. இனிமேல் இவர்களுக்கு ஒரு பைசாகூட கொடுக்க உன்னை நான் அனுமதிக்க முடியாது. இதைத் தெரிந்துகொள்."

லட்சுமீசந்தின் இந்த ஆவேசம் ஜயதேயீயையும் தாக்கும் என்பது நிச்சயம். "சரியாக உன் அப்பாவினுடைய குணம்தான் உனக்கும் வந்திருக்கு! ஆனால் நீ என்னைத் தடுக்க முடியாது." இதைச் சொல்லி ஜயதேயீ தனது பலமற்ற கைகளால் மெள்ளத் தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியிருந்து சாவிக் கொத்தைக் கழற்றி கங்கா பிரஸாதின் பக்கமாக நீட்டினாள். "என்னுடைய பொருளைக் கொடுப்பதற்கு எனக்கு முழு உரிமை உண்டு. இதை நீ தடுக்க முடியாது. இந்தா கங்கா பிரஸாத், வாங்கிக்கொள் சாவியை."

ஆனால், லட்சுமீசந்த் இதற்கெல்லாம் ஏற்கனவே தயாராகயிருந்தான். அவன் சடக்கென்று அம்மாவின் கையிலிருந்து சாவிக்கொத்தைப் பிடுங்கிக்கொண்டு விட்டான். "பெரிசாக வந்துவிட்டாள் கங்கா பிரஸாதுக்குச் சாவி கொடுக்கிறவள், நன்றி கெட்டவள்!"

அப்போது கங்கா பிரஸாத் ஆத்திரம் கொண்டு எழுந்தான், ஜயதேயீயைப் பற்றி லட்சமீசந்த் கூறிய வசவைக் கேட்டு. அவன் லட்சுமீசந்தின் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டான்: "சித்தியை இப்படித் திட்ட வெட்கமாக இல்லையா உனக்கு."

லட்சுமீசந்த் அப்போது முற்றிலும் தன் வசமிழந்து விட்டான். "திட்டுவேன். இந்த ராட்சசியை நன்றாகத் திட்டுவேன். இவளுடைய குணம் எங்களுக்குத் தெரியாதா?"

ஜயதேயீயின் வாயிலிருந்து ஒரு கூக்குரல் கிளம்பியது. "ஐயோ! ராமா!" அவள் மூர்ச்சையடைந்துவிட்டாள்.

அதே நேரத்தில் ஜ்வாலா பிரஸாத் வெறி பிடித்தவர் போல எழுந்து நின்றார். "லட்சுமீசந்த், போ வெளியே! உடனே போய்விடு. உன்னுடைய சொத்து பணம் எல்லாம் உன்னிடமே இருக்கட்டும். அதை ஒருவரும்

தொடமாட்டார்கள். ஆனல் இந்த அப்பாவியை அமைதியாக சாகவிடு. போ! கங்கா, போ! இந்த அறையிலிருந்து வெளியே போ! லட்சுமீசந்த் நீயும் போய்விடு. இந்த அபாக்யசாலி அமைதியாக இறந்துபோகட்டும்!" ஜ்வாலா பிரஸாத் தன் வசமிழந்து இரைந்துகொண்டிருந்தார்.

கங்கா பிரஸாத் தலையைக் குனிந்துகொண்டு அந்த அறையினின்று வெளியே போய்விட்டான். ஆனல் லட்சுமீசந்த் ஹிம்சை நெருப்பு கொழுந்துவிட்டெரியச் சொன்னன்: "போகிறேன். ஆனல் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த வீட்டில் ஏதாவது தாறுமாறு நடந்ததென்றல் அப்பனையும் பிள்ளையையும் சேர்த்து மாமனர் வீட்டுக்கு அனுப்பி விடுவேன்." அவனும் வெகு வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறினன்.

இந்தப் பேச்சு நடக்கும்போது வீட்டு வேலையாட்கள் அனைவரும் அறை வாசலில் வந்து கூடிவிட்டனர். சாவு கவிந்த வீட்டில் ஹிம்சையின் பயங்கரமும் சேர்ந்து கொண்டுவிட்டது. ஜ்வாலா பிரஸாத் மருமத்தில் அடிபட்டவர்போல் நாற்காலியில் அயர்ந்து உட்கார்ந்து விட்டார். அவர் குரல் கொடுத்தார். "அண்ணி, கண்ணைத் திற, அவர்கள் போய்விட்டார்கள்."

ஜயதேயீ உயிரற்றவள் போல் அசையாமல் கிடந்தாள். அவள் முகத்தில் ஒரு கோரமான சுருக்கம். ஏதோ ஒரு பயங்கர மன வேதனை. ஜ்வாலா பிரஸாதின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. கையைக் குவித்து அண்ணாந்து பார்த்து அவர் முனகத் தொடங்கினர். "பகவானே! அண்ணி ஏதாவது பாவம் செய்திருந்தால் அந்த தண்டனையை எனக்குக் கொடுத்துவிடு. அவளுடைய வேதனையைத் தீர்த்துவிடு. பகவானே! இவளை விரைவாக உன்னிடம் அழைத்துச் சரணமளிப்

பாய்.''

மெள்ள மெள்ள ஜயதேயீயின் முகம் சுருக்கம் நீங்கியது. ஆனால் அவளது மூர்ச்சை அகலவில்லை.

மாலை ஆறு மணிக்கு டாக்டர் வந்தார். ஜயதேயீயைப் பரிசோதனை செய்துவிட்டு அவர் சென்னார்: ''நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இது ஒரு வேளை கடைசி மூர்ச்சையாக இருக்கலாம். மருந்தை நிறுத்திவிடுங்கள். வெறும் கங்கா ஜலம் கொடுங்கள்.''

''டாக்டர்! வெறும் கங்கா ஜலம்தானே மூன்று நாளாகக் கொடுத்து வருகிறோம். அப்போதே நீங்கள் மருந்தை நிறுத்திவிட்டீர்களே.''

''அட, ஆமாம். நான் மறந்தே போய்விட்டேன். இது வரை எப்படி உயிர் இருக்கிறது என்பதே எனக்கு வியப்பாக இருக்கிறது.''

அப்போது லட்சுமீசந்த் கூறினான்: ''டாக்டர், நான் மூன்று நாளாக இங்கே கிடக்கிறேன். எனது வேலையெல்லாம் தடைபட்டுக்கிடக்கிறது. இன்னும் எத்தனை நாள் ஆகும்?''

டாக்டர் சிறிது மனக்கடுப்புடன் கூறினார்: ''நான் நினைப்பது என்னவென்றால், நாளைக்கு நீங்கள் இவர்களுக்கு ஈமச்சடங்குகளைச் செய்து முடித்துக்கொண்டு கான்பூர் போய்விடலாம்.''

டாக்டருடைய இந்த மனக்கடுப்பைக் கண்டு லட்சுமீசந்த் சிரித்தான். ஒரு கசப்பான சிரிப்பு. ''பிரச்னை நான் கான்பூர் போவதைப் பற்றி அல்ல டாக்டர்! நான் இங்கே இருந்து ஆகவேண்டியதைச் செய்யத்தான் வேண்டும். குறைந்தது பதினைந்து இருபது நாளாவது ஆகும் எனக்கு! பிரச்னை, மற்றவர்கள் இங்கிருந்து போவதைப் பற்றியது. நான் அவர்களைப் பற்றித்தான் கவலைப்பட்டேன். சரி: நல்லது!''

டாக்டரை வாசல்வரை கொண்டுவிடுவதற்கு லட்சுமீ சந்தும் ஜ்வாலா பிரஸாதும் அறையிலிருந்து வெளியே வந்தனர். டாக்டர் சென்ற பிறகு லட்சுமீசந்த் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னான்: "சித்தப்பா, கோபத்தினால் நான் ஏதாவது தகாத வார்த்தை சொல்லியிருந்தால் மன்னித்துவிடுங்கள். ஆனால் நீங்களே யோசித்துப் பாருங்கள். கண் முன்னே தட்டு நிறைய இனிப்பு பரிமாறி வைத்திருப்பதை தூரத் தள்ளிவிட யார் விரும்புவார்கள்? ஆம், இன்னும் ஒன்று. நான் என்னுடைய பிரைவேட் செக்ரடரிக்கும், குமாஸ்தாவுக்கும் தந்தியடித்துள்ளேன். இரண்டு நாளில் அவர்கள் என் மனைவி மக்களுடன் வந்துவிடுவார்கள். இதில் உங்களுக்கெல்லாம் கொஞ்சம் சிரமம் உண்டாகும். ஆயினும் என்ன செய்வது? வேறு வழியில்லை. இங்கே நாங்கள் பதினைந்து இருபது நாள் தங்கவேண்டியிருக்குமே!"

ஜ்வாலா பிரஸாத் வானத்தைப் பார்த்தபடியே சொன்னார்: "அவர்களையெல்லாம் வரவழைத்தது நல்லதுதான். அண்ணிக்கு இன்று இரவு தள்ளாது என நான் நினைக்கிறேன். நாளைக் காலைக்குள் எல்லாம் முடிந்துவிடும்." ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயின் அறைக்குள் சென்றுவிட்டார்.

மத்தியானம் நிகழ்ந்த வருத்தமளிக்கும் நிகழ்ச்சிக்குப் பிறகு கங்காபிரஸாத் நகரத்துப் பக்கம் போய்விட்டான். அவன் இரவு ஒன்பது மணி அளவில் திரும்பி வந்தான். வந்ததும் நேராக ஜயதேயீயின் அறைக்குப் போனான். ஜயதேயீ மூர்ச்சையாகவே இருந்தாள். ஜ்வாலாபிரஸாத் அவள் தலைமாட்டில் கற்சிலைபோல் சலனமற்றுக் கண்களை மூடி உட்கார்ந்துகொண்டிருந்தார். "உட்கார் கங்கா. இன்றைய இரவு முடியா நெடுங்கதையாக இருக்கிறது!

பார்த்தாயா ? எவ்வளவு பயங்கரம்!"

"மூன்று இரவுகளாக நீங்கள் தொடர்ந்து விழித்துக் கொண்டிருக்கிறீர்கள் அப்பா. சிறிது தூங்குங்கள். நான் உட்கார்ந்திருக்கிறேன்."

ஜ்வாலா பிரஸாத் புன்னகை புரிந்தார். "இன்னும் ஓர் இரவு! அவ்வளவுதான். இது கடைசி இரவு. இதையும் விழித்திருந்தே கழித்துவிடுகிறேன். இப்போது என்ன மணி ?"

"ஒன்பது அடித்துப் பத்து நிமிஷம்." கங்கா பிரஸாத் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துச் சொன்னான்.

"போ, போய் சாப்பிடு! ஆம். இதோ பார், லட்சுமீ சந்த் சொன்னதைப் பற்றி ஒன்றும் நினைத்துக் கொள்ளாதே. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய அடிப் படை மனப்பாங்கின்படித்தான் செயல்படுகிறான். அந்த லட்சுமீ சந்துக்கும் அவனுடைய தந்தை பிரபுதயாளுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை."

ஜயதேயீ இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந் தாள் போலும். இலேசாகக் கண்ணைத்திறந்தாள். "சரி யாகச் சொல்லுகிறீர்கள் மைத்துனரே. அப்பனுக்கும் பிள்ளைக்கும் வித்தியாசமே இல்லை. என் வயிற்றில் பிறந்தானே என்று நினைத்தேன். ஆனால், வித்தியாசம் ஒன்றும் கிடையாது!"

ஜயதேயீயின் பலவீனம் எங்கோ பறந்துவிட்டது. முகத்தில் சுருக்கமும் முற்றிலும் நீங்கிவிட்டது. ஜ்வாலா பிரஸாத் கேட்டார்: "உடம்பு எப்படி இருக்கிறது அண்ணி!"

"ரொம்பத் தேவலை மைத்துனரே! எனது நோயெல் லாம் போய்விட்டது. குழந்தை கங்கா, நீ இங்கு வருவதில் ரொம்ப தாமதம் செய்துவிட்டாய்....எல்லாம் விதியின் செயல்! நீ போய்ச் சாப்பிடு; அதுவரை நான்

மைத்துனரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்."

"சரி சித்தி," கங்கா பிரஸாத் அங்கிருந்து போய் விட்டான்.

ஜயதேயீ சிரித்தாள். "சாப்பிட்டுவிட்டு வருவானும். அதுவரை நான் உட்கார்ந்திருப்பேன் போலும்!"

சிறிது நேரம் கழித்து ஜயதேயீ மீண்டும் சொன்னுள்: "ரொம்ப தாகமாக இருக்கிறது மைத்துனரே! சிறிது கங்கா ஜலத்தை எடுத்துக் கொடுங்கள். இதோ பாருங்கள். கங்கா ஜலத்தில் கொஞ்சம் துளசியும் போடுங்கள். யாரறிவார்? இதுவே எனது கடைசி தாகமாக இருக்கலாம்."

ஜ்வாலா பிரஸாத் வெள்ளி கிண்டியில் துளசி போட்ட கங்கா ஜலத்தை எடுத்துக்கொண்டு வந்தார்.

"மைத்துனரே, என்னைத் தூக்கி உட்காரவையுங்கள். படுத்துக்கொண்டு கடைசி முறை சாப்பிடமாட்டேன்."

ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயைத் தூக்கி உட்கார வைத்தார். ஜயதேயீ ஒரு வாய் கங்கா ஜலம் உட்கொண்டாள். ஒரு விக்கல் வந்தது. "என்னைத் தரையில் எடுத்துப் போடுங்கள் மைத்துனரே! நான் போகிறேன்."

ஜ்வாலா பிரஸாத் ஜயதேயீயைத் தன் கைகளில் அணைத்துப் படுக்கையிலிருந்து தூக்கினுர். ஒரு பெரும் விக்கலோடு ஜயதேயீயின் பிராணன் போய்விட்டது.

5

"நீயா? வியப்போடு" ஞானபிரகாஷைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

"ஆம் அண்ணு! ஞாயிற்றுக்கிழமை பம்பாயில் கப்பலை விட்டு இறங்கினேன். திங்களன்று அங்கிருந்து ரயிலில் கிளம்பி இப்போதுதான் அலாகாபாத் வந்தடைந்தேன். ஸ்டேஷனிலிருந்து நேராக வருகிறேன்."

"நீ வரும் சமாசாரத்தைத் தந்தி மூலம் தெரிவித்திருந்தால் நான் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே!" என்று ஜ்வாலா பிரஸாத் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டார். "கிரிதாரீ, 'தாங்கா'விலிருந்து சாமானை இறக்கு. உள்ளே போய் சொல் ஞானபிரகாஷ் வந்திருக்கிருன் என்று."

ஞானபிரகாஷ் முன்ஷி ராமஸஹாயின் கடைசிப் பிள்ளை. அவன் 1912-ம் ஆண்டு பாரிஸ்டருக்குப் படிக்க இங்கிலாந்து சென்றுன். இங்கிலாந்தில் இருக்கும்போது இங்கு முன்ஷி ராமஸஹாய் இறந்துவிட்டார். அவனது தாய் அவன் இங்கிலாந்து போவதற்கு முன்னரே இறந்துவிட்டாள். ராஜபுராவில் அவனுடைய அண்ணன் சத்திய பிரகாஷ் நிலபுலன்களைக் கவனித்து வந்தார். அண்ணன் தம்பிகளது சுபாவத்தில் வானத்துக்கும் பூமிக்கும் உள்ள வேறுபாடு. ஆகவே, ஞான பிரகாஷுக்குத் தன் வீட்டில் அதிகப் பற்று இல்லாமல் போய்விட்டது. பம்பாயிலிருந்து அவன் நேராக அலாகா பாத் வந்தான். அங்கே அலாகாபாதில் வக்கீல் தொழிலை நடத்த உத்தேசித்தான்.

சாமான்களை இறக்கிய பிறகு ஜ்வாலா பிரஸாதும் ஞானபிரகாஷும் டிராயிங் ரூமில் போய் உட்கார்ந்து கொண்டனர். ஜ்வாலா பிரஸாத் கேட்டார்: "ராஜபுரா போகப்போவதில்லையா? நீ வரும் சமாசாரம் சத்திய பிரகாஷுக்குத் தெரியும் அல்லவா?"

ஞான பிரகாஷ் புன்னகை செய்து சொன்னுர்: "ஆம். இங்கிலாந்திலிருந்து புரிப்படுவதற்கு முன்னுல்

அண்ணாவுக்கு ஒரு கடிதம், இனிமேல் பணம் அனுப்புவது அவசியம் இல்லை என்று எழுதினேன். ஆனால் இப்போது ராஜபுரா போகும் எண்ணம் ஏதும் கிடையாது. இப்போது அலாகாபாதில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஜனவரி முதல் தேதியிலிருந்து வக்கீல் தொழில் தொடங்கவேண்டும். ஹைகோர்ட்டில் "என்ரோல்" செய்துகொள்ள வேண்டும். அதுவுமன்றி, இப்போதே நான் வீட்டுக்குப் போனால் குழப்பம் உண்டாகக்கூடும். வெளி நாடு போய் வந்திருக்கிறேன். பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்று ஜனங்கள் சொல்லுவார்கள். இந்தச் சிக்கலில் யார் போய் மாட்டிக்கொள்ளுவான்."

ஜ்வாலா பிரஸாத் சிரித்தார். "ஆம், அது சரிதான். பட்டிக்காட்டில் இப்படிப்பட்ட பழங்காலத்து நம்பிக்கைகள் இன்னும் குடிகொண்டுள்ளன. ஆனால் எனக்கு ஆச்சரியம் என்னவென்றால், இந்தப் பழைமை கொண்டாடுவதில் சத்தியபிரகாஷ் பெரிய பெரிய பிராமணர்களையும் தோற்கடித்துவிட்டான்." சிறிது மௌனமாக இருந்து மீண்டும் அவர் சொன்னார்: "ஆனால், இங்கிலாந்தில் நீ வெகு நாட்கள் இருந்து விட்டாய். உன்னைப் பார்க்க மாமா துடிதுடித்து விட்டார்."

சிறிது ஆழ்ந்த சிந்தனை கொண்டு ஞானபிரகாஷ் சொன்னார்: "நீங்களே யோசித்துப் பாருங்கள்; நான் என்ன செய்யக்கூடும்? நான் அங்கே போய்ச் சேர்ந்தேனோ இல்லையோ, போர் துவங்கிவிட்டது. யுத்த காலத்தில் எப்படித் திரும்பி வருவது? போர் முடியும் போது நான் அமெரிக்காவில் இருந்தேன். அங்கிருந்து லண்டனுக்குப் போனபோது அங்கே இந்தியாவைப்பற்றிய அரசியல் போராட்டம் தொடங்கிவிட்டது.

இந்தியாவிலிருந்து ஒன்றன் பின் ஒன்ருக அரசியல் நல்லெண்ணத் தூது கோஷ்டிகள் வரத்தொடங்கின. அங்கிருந்து வருவதற்கு மனம் வரவில்லை."

"இந்த அரசியல் குழப்பங்கள்தான் இன்னும் வளரப் போகின்றன! சரி, நீ திரும்பி வந்துவிட்டாய். இனி என்ன குறை! சரி. நீ கிறிஸ்துவஞகிவிட்டாய் என்றும், அங்கேயே எவளையோ ஒரு வெள்ளைக்காரியை மணந்து கொண்டுவிட்டாய் என்றும் சத்தியபிரகாஷ் நினைத்து விட்டான். உன்னைப்பற்றிச் சில வதந்திகள் இங்கே பரவி விட்டன. நானும் கேட்டிருக்கிறேன்."

"ஆமாம், வதந்திகள் பரவுகின்றன. பொய் உண்மை எல்லா வகையான வதந்திகளும் பரவுகின்றன. நான் கிறிஸ்தவன் ஆகவில்லை. அங்குள்ள பாதிரிகளுக்கு மற்ற வர்களைக் கிறிஸ்துவராக மதம் மாற்றுவதில் அக்கறையே கிடையாது. இந்த அமர்க்களம் எல்லாம் இந்தியாவில் தான்! என் திருமண விஷயம் ரொம்பதூரம் வரை பேச்சு நடந்து பிறகு முறிந்துவிட்டது. நான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்துப் பேச்சைத் தொடங்கிய பெண்ணுக்கு முன்னதாகவே மணம் செய்விக்க நிச்சயிக்கப்பட்டிருந்தவன் ஜர்மனியுத்தத்தில் இறந்துவிட்டதாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் அவன் இறக்கவில்லையாம். கைது செய்யப்பட் டிருந்தானும். 1919ம் ஆண்டு பிப்ரவரி மாதம், எட்டாம் தேதி எங்களுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருந்த நாளுக்குச் சரியாக ஒரு வாரத்திற்கு முன் அவன் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தான். அதோடு என் திருமணக் கதை முடிந்துவிட்டது."

ஜ்வாலா பிரஸாத் மகிழ்ச்சியோடு ஒரு பெரு மூச்சு விட்டார். "சரி போ, இதுவும் நல்லதுக்குத்தான். கடவுள் செய்வது நல்லதுக்குத்தான். நீ வந்துவிட்டாய்;

ஆகவே வக்கீல் தொழிலை நடத்து. பல இடங்களிலிருந்து உன் திருமண விஷயமாகப் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளனர். இன்றுகூட பரைஸிலிருந்து கன்னையாலால் காலையில் உன்னைப்பற்றி விசாரித்துவிட்டுப் போனார். பெண் அழகாக இருக்கிறாள். பிரவேசப் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறாள். நானும் பெண்ணைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் வீட்டில் பர்தா முறை கிடையாது. உங்கள் பெண்ணினுடைய அதிர்ஷ்டத்தினால் நீ வந்துவிட்டாய் என்று அவர்களுக்கு அறிவிக்கிறேன்."

"ஆனால் நான் நாளைக்கு அமிர்தஸரஸ் போக புறப்படுகிறேன். இன்று டிஸம்பர் 22-ம் தேதி. 26ம் தேதி அங்கே காங்கிரஸ் மகாநாடு நடக்கிறது."

"என்ன, நீ காங்கிரஸ் மகாநாட்டிற்கு அவசியம் போகவேண்டுமா?" ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

"அவசியமா என்று கேட்டால் உலகத்தில் எதுவுமே அவசியமில்லைதான். ஆனால், நம் நாட்டில் தோன்றிக் கொண்டிருக்கும் புதிய உணர்ச்சி அலையை நான் பார்க்க விரும்புகிறேன். ஜலியன்வாலாபாக் படுகொலை அமிர்தஸரஸில்தான் நிகழ்ந்தது. அங்குதான் காங்கிரஸ் கூட்டம் நடைபெறுகிறது. நீங்களும் என்னோடு வாருங்களேன்."

ஜ்வாலா பிரஸாத் பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னார்: "இல்லே தம்பி. என் பென்ஷனுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது. அரசியல் குழப்பமெல்லாம் இன்று தோன்றும், நாளை அடங்கிவிடும். ஆனால் இந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கிறதே இது என்றென்றைக்கும் சாசுவதமாக நிலைத்து நிற்கக்கூடியது. நான் என் பென்ஷனை ஏன் தொலைத்துக்கொள்ள வேண்டும்?"

அப்போது கை கடிகாரத்தில் பத்து மணி அடித்தது. "அட, பத்து மணி ஆகிவிட்டதா? வா, போய் சாப்பிட

லாம். உன் படுக்கையும் விரிக்கப்பட்டிருக்கும். இரவு நன்ருகத் தூங்கு. நாளைக்குத் தேதி இருபத்து மூன்று. நீ இருபத்து நாலாம் தேதி இங்கிருந்து கிளம்பினுல் இருபத்தைந்தாம் தேதி காலையில் அமிர்தஸரஸ் போய்ச் சேர்ந்துவிடலாம். காங்கிரஸ் கூட்டம் இருபத்தாரும் தேதி தொடங்கும். நாளைக்கே போக வேண்டிய அவசரம் என்ன? நாளை முழுவதும் இங்கே இளைப்பாறலாமே."

ஜ்வாலா பிரஸாத் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பென்ஷன் பெற்றுவிட்டார். அவர் ஜார்ஜ் டவுனில் ஒரு பங்களா கட்டிக்கொண்டு வாழ்ந்தார்.

அடுத்த நாள் காலை ஞானபிரகாஷ் தூங்கி எழுந்த போது ஒன்பது மணி. வெளியில் இன்னும் மூடுபனி சூழ்ந்து இருட்டாக இருந்தது. ஜ்வாலா பிரஸாத் சீக்கிர மாக காலைக் கடன்களை முடித்துக்கொண்டு உடுப்பு அணிந்தார். குளிர் காற்று வேகமாக வீசிக்கொண் டிருந்தது. ஞானபிரகாஷின் மனதில் ஒருவகை உற்சாகம், ஒரு உல்லாசம் நிறைந்திருந்தது. ஜ்வாலா பிரஸாத் வராந்தாவில் கிளம்புவதற்கு ஆயத்தமாக இருந்தார். அவருடைய தாங்கா போர்டிகோவில் தயாராக நின்றுகொண்டிருந்தது. ஞானபிரகாஷைப் பார்த்ததும் அவர் சொன்னுர்: "வெகு நேரம் வரை தூங்கிக்கொண்டிருந்தாய். போய் சாப்பிடு. நான் ஸ்டேஷன் வரை போகவேண்டும். இப்போதுதான் கங்காவின் தந்தி வந்தது. அவன் இன்று அலகாபாத் வருகிருன். அவனை அழைத்து வரவேண்டும். கிறிஸ்துமஸ் விடுமுறை அல்லவா. வண்டி பதிஞெரு மணிக்கு வருகிறது."

ஞானபிரகாஷ் உட்கார்ந்தவாறே சொன்னுர்: "சரியா கப்போய்விட்டது. பேஷ், அமிர்தஸரஸ் போவதற்கு முன் அவனையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

இப்போது அவன் எங்கே இருக்கிறான்? எப்படி இருக்கிறான்?”

“ஜௌன்பூரில் இருக்கிறான். அங்கிருந்துதான் இப்போது வருகிறான். அவனைச் சந்தித்து எல்லாம் கேட்டுக்கொள்.”

“தனியாக வருகிறானா அல்லது அவனுடைய மனைவி மக்களும் வருகிறார்களா?”

“அட, நான் நேற்று உனக்குச் சொல்ல மறந்து விட்டேன். அவனுடைய மனைவியும் குழந்தைகளும் இங்கு தான் இருக்கிறார்கள். பிள்ளை இங்கே படிக்கிறான். அவன் மனைவியும் ஒரு மாதமாக இங்குதான் வந்திருக்கிறாள். ஸாட்சாத் லட்சுமீதேவிதான்.”

ஞானபிரகாஷ் சிரித்தான். “உங்கள் தனிமை கலைந்து விட்டது போங்கள். நல்லது, நானும் உங்களுடன் ஸ்டேஷன் வருகிறேன். அங்கிருந்தே டவுன் பக்கம் போகிறேன்.”

ஞானபிரகாஷ் கங்கா பிரஸாதை விட மூன்று வயது மூத்தவன். ஆனால் இருவரிடையேயும் ஒரு நட்பும் பிணைப்பும் இருந்தது. ஞானபிரகாஷ் அலாகாபாதிலுள்ள ம்யோர் சென்டிரல் கல்லூரியில்தான் பி.ஏ. எல்.எல்.பீ. பரீட்சைகளைப் பாஸ் செய்தார். கங்கா பிரஸாதுடன் அவர் சேர்ந்து சுற்றி இருக்கிறார்.

ஞானபிரகாஷைக் கண்டதும் கங்கா பிரஸாதின் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது. தந்தையின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு அவன் ஞானபிரகாஷை அணைத்துக்கொண்டான். “என்ன சித்தையா, நீ கூட சரியான வேளையில் வந்து சேர்ந்தாய். வெளிநாட்டில் ரொம்ப ‘குஷி’யாகக் காலம் கழிந்திருக்கும். எங்களை நீ மறந்துவிட்டாய். மாமி மேடம் ஸாஹபாவை அழைத்து வந்திருக்கிறாயா இல்லையா?”

ஞானபிரகாஷ் தன் உதடுகளின் மேல் விரலை வைத்துச் சொன்னார் : "கேள்விகள் எல்லாவற்றையும் ஒரே மூச்சில் கேட்டுவிட்டால் எப்படி? வீட்டுக்கு வா. தனிமையில் பேசிக்கொள்ளலாம். நேற்று இரவுதானே திரும்பி வந்தேன். நீங்கள் போங்கள். நான் சுமார் ஒன்று அல்லது ஒன்றரை மணியில் வீட்டிற்குத் திரும்பி வருகிறேன். சாப்பிட்டுவிட்டு நாம் இருவரும் சேர்ந்து சுற்றுவதற்குக் கிளம்புவோம். அப்போது எல்லாம் சொல்லுகிறேன். நீ உன் கதையை எனக்குச் சொல்லு.

ஏறக்குறைய ஒரு மணிக்கு ஞானபிரகாஷ் வீட்டுக்குத் திரும்பி வந்தார். ஜ்வாலா பிரஸாதும் கங்கா பிரஸாதும் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சாப்பிட்ட பிறகு இருவரும் காலாற நடந்து ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டனர். கவர்ன்மெண்ட் ஹவுஸைக் கடந்து எல்பிரேட் பூங்காவில் நுழைந்தனர். ஞான பிரகாஷ் சொன்னார் : "ஆம் கங்கா. எங்கே போகலாம்? நீ எத்தனை நாட்களுக்கு இங்கு வந்திருக்கிறாய் ?"

இரண்டாம் தேதி கச்சேரி திறக்கும். மத்தியானத் திற்குள் ஜௌன்பூர் போய்ச் சேரவேண்டும். அதுவரை விடுதலைதான். பார்க்கப்போனால், விடுமுறையில்கூட நான் எனது ஜில்லாவை விட்டுப் போகக்கூடாது. ஆயினும், கலெக்டருக்கு என்னிடம் பிரியம் உண்டு. அனுமதியளித்துவிட்டார். உன்னுடைய திட்டம் என்ன சொல்.

"சாதாரண புரோகிராம்தான். இன்று மாலைக்குள் ஒரு பங்களா வாடகைக்கு அமர்த்திக்கொள்ளவேண்டும். இப்போதுதான் சில பங்களாக்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். நாளைக்குக் காலை மெயிலில் அமிர்தஸரஸ் போகவேண்டும். அங்கு காங்கிரஸ் மகாநாடு நடைபெறு கிறது. அதைப் பார்க்க விரும்புகிறேன்."

கங்கா பிரஸாத் சிறிது யோசனையுடன் கூறினன். "சித்தையா, நான் சொல்லுவதை நீ கேட்பதானல் காங்கிரஸை விட்டுத் தூர விலகி இரு."

ஞானபிரகாஷ் உரக்கச் சிரித்தார். "இந்த வார்த்தையைத்தான் உன்னிடம் எதிர்பார்த்தேன் தம்பி! டிப்டி கலெக்டர் அல்லவா! குஷியாயிருக்கிருய்; வாழ்க்கை சந்தோஷமாக ஓடுகிறது. ஆனல் என்னைப் பார். நான் சீமையிலிருந்து வருகிறேன். நாம் அடிமைகள். நாம் நாகரிகமற்றவர்கள்; தீண்டத் தகாதவர்கள். நீ இதையெல்லாம் அனுபவிக்கவில்லை. உனக்கு இந்தியாவை விட்டு வெளியே போகும் வாய்ப்பு கிடைக்கவில்லை. உன்னை லட்சக்கணக்கான மக்களுடைய தலையெழுத்தை எழுதும் பொறுப்பில் வைத்து அதிகாரத்தின் மயக்கத்தில் ஒரு பொம்மையாக மாற்றியிருக்கிருர்கள்.

"அட, சித்தையா, நீ சொல்லுவது சரிதான். ஆனல்... ஆனல்...நான் இருக்கும் நிலையைப் பற்றி எனக்கேன் குறை இருக்கவேண்டும்? எனக்கு மட்டும் என்ன பிறருக்குத்தான் ஏன் குறை? இங்கே ஒரு ஸ்திரத் தன்மை இருக்கிறது. உயிருக்கும் உடைமைக்கும் ஒரு காவல், காபந்து உள்ளது; எல்லா வேலையும் சரிவர நடந்து வருகிறது. இனி பார்க்கப்போனல், இது பிரிட்டிஷ் அரசாட்சி. எவ்வளவு வலிமை பொருந்தியது இந்த சர்க்கார்! உலகில் ஐந்தில் ஒரு பகுதி இந்த அரசுக்கு உட்பட்டுள்ளது. ஜெர்மனியை நசுக்கிவிட்டது இந்த பிரிட்டிஷ் அரசு!"

"ஆம், ஜெர்மனியை நசுக்கிவிட்டது பிரிட்டிஷ் அரசு! ஜெர்மனியை யார் தோற்கடித்தார்கள் என்று நீ எப்போதாவது சிந்தித்தாயா? எத்தனை இந்தியர்கள் இந்த உலக யுத்தத்தில் மடிந்தனர் என்று உனக்குத் தெரியுமா? இங்கிலீஷ்காரனுடைய

சண்டையை இந்தியர்கள் நடத்தியிருக்கின்றனர்—கூர்க்கா, சீக்கியர், பட்டாணியர், பலூச்சிகள், ராஜபுத்திரர், கடுவாலிகள், தெலுங்காணத்தர், மராட்டியர்—இந்தியா முழுவதிலிருந்தும் துருப்புக்கள் சென்றனர். இந்திய ராணுவத்தில் ஐம்பது லட்சம் வீரர். ஜெர்மனி தோல்வியுற்றது. கங்கா, இப்போது இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பதனால் ஒன்றும் நடக்காது. நமக்கு டொமினியன் ஸ்டேடஸ் கிடைத்தே தீர வேண்டும்.

எல்பிரேட் பூங்காவைக் கடந்து இருவரும் கட்ராவிலிருந்து நகரத்துக்குப் போகும் முக்கிய சாலைக்கு வந்துவிட்டனர். இப்போது அவர்கள் நகரத்துக்குச் செல்லாது சிவில் லைன்ஸ் பக்கமாகச் சென்றனர். கங்கா பிரஸாத் ஒரு பெருமூச்செறிந்து கூறினான்: "ஆம் சித்தையா, நீ சொல்லுவது சரிதான். என்னையே எடுத்துக்கொள்ளேன். இந்த டிப்டி கலெக்டர் உத்தியோகத்திலேயே வாழ்க்கையெல்லாம் கழிந்து விடும்போல் காணப்படுகிறது. ரொம்பப் போனால் என்னை ஜில்லா துணை மாஜிஸ்ட்ரேட் ஆக்குவார்கள். ஆனால் வெள்ளைக்காரன் ஒரு சின்னப் பயல்கூட வந்ததும் வராததும் எனக்கு ஆபீஸராக அமர்ந்து விடுகிறான். என்மேல் அதிகாரம் செலுத்தத் தொடங்கி விடுகிறான். ஆகவே, சித்தையா "குடியேற்ற நாட்டு அந்தஸ்து" நமக்குக் கிடைத்துவிட்டால் நான் குறைந்த பட்சம் பதவி உயர்வுக்காகக் கனவாவது கண்டுகொண்டிருக்கலாம்."

"இப்போ வந்தாயடா நீ சரியான வழிக்கு." ஞான பிரகாஷ் முறுவலித்தார். "அப்படியானால் என்னோடு அமிர்தஸரஸ் வருகிறாயா?"

கங்கா பிரஸாத் திடுக்கிட்டான். "என்ன நீ

போதையில் இருக்கிருயா! என்னைப்போய் அமிர்த ஸரஸ் காங்கிரஸுக்கு வரச் சொல்லுகிருயே! மேலிடத்துக்கு இந்த செய்தி தெரிந்தால், எனக்குக் கிடைக்கக் கூடிய ஏதோ ஒரு சிறிய பதவி உயர்வுகூட நின்று விடும். ஸி. ஐ. டி.காரர்கள் எங்கும் திரிகிருர்கள் தெரியுமா?"

"அட அப்பனே, விடு இந்த ஸி.ஐ.டி.காரங்க கதையை! என் பெயர் ஞானபிரகாஷ், உன் பெயர் ராமபிரகாஷ் என்று வைத்துக்கொள். அதாவது நீ என் தம்பி; ஊரும் புதிது. கூட்டத்துக்கிடையில் யார் நம்மைக் கேட்கப்போகிருர்கள்? ஸி.ஐ.டி.காரர்கள் தலைவர்களைப் பின்தொடர்ந்து போவார்கள். இந்திய ஸி. ஐ. டி.காரர்கள் மூளையில்லாத கழுதைகள் என்பதும் உனக்கு நன்ருகத் தெரியும். தவிர, பஞ்சாப் போலீஸுக்கு உன்னைப் பற்றியும் என்னைப்பற்றியும் என்ன தெரியப்போகிறது? வா என்னேடு; வந்து பார் அங்கே என்ன என்ன நடக்கிறது என்று! நாட்டின் தலைவர்களுடைய உருவத்தை யாவது பார்க்கலாமே, முக்கியமாக மிஸ்டர் காந்தியைப் பார்க்கலாம். எந்த காங்கிரஸ் கூட்டத்திற்காவது போயிருக்கிருயா?"

"இதுவரையில் போனது கிடையாது. ஆனல் சித்தையா! நீ இந்தத் தடவை என்னை வலுக்கட்டாயப் படுத்தி ஆசை காட்டுகிருய். எனக்கும் உன்னேடு வர வேண்டும் என்று ஆசைதான். அப்பா கிட்டேமாத்திரம் நமது புரோகிராமை மறைக்கவேண்டி யிருக்கும். அதாவது, அவரிடம் ஏதாவது பாசாங்கு செய்ய வேண்டும், பொய் சொல்ல வேண்டியிருக்கும். அவர் என்னைக் காங்கிரஸ் கூட்டத்திற்குப் போகவிடமாட்டார், புரிகிறதா?"

ஒன்றும் சிரமமில்லை! நீதான் அண்ணுவுக்கு இதுவரை உன்னுடைய புரோகிராம் என்னவென்பதைச் சொல்லவில்லை. நீ சீக்கிரமாகவே ஆக்ரா, மதுரா, அலிகட் அல்லது மீரட்—எந்த ஊருக்காவது ஒரு டூர் புரோகிராம் போட்டுக்கொள். அலிகடில் உனக்கு யாரோ ஒரு பழைய நண்பன் இருக்கிருன் என்று நினைத்துக் கொள்ளேன்.

"ஆமாம், அலிகடில் பண்டித் ஸோமேசுவரதத் இருக்கிருர். அப்பாவுக்குத் தெரியும் அவரை" கங்கா பிரஸாத் சொன்னுன்.

"இல்லை; அந்த பண்டிதரால் ஒன்றும் ஆகாது. அண்ணுவுக்கு அவரைத் தெரியும். நம் குட்டு வெளிப்பட்டு விடும். அண்ணுவுக்குத் தெரியாத ஆசாமியாக இருக்க வேண்டும்."

கங்கா பிரஸாத் சிறிது யோசனை செய்துவிட்டுக் கூறினுன். "மீரட்டில் கிருஷ்ணசந்திர மிஸ்ரா இருக்கிருர், அஸிஸ்டென்ட் ஸர்ஜன்!"

"சரி! ரொம்ப பேஷ்! கிருஷ்ணசந்திருடைய குழந்தைக்கு முடியெடுப்பு, காதுகுத்து, அதற்கு நீ போகிருய்!"

"ஊஹூம், மாசி மாதத்தில் இவ்வித சுப விசேஷங்கள் நடத்தமாட்டார்களே."

"அட என்னப்பா இது! விசித்திரமான சங்கடத்தில் கொண்டுவந்து மாட்டிவிட்டாய் நீ! ம்...மாசி மாதத்தில் மனுஷன் சாகவாவது செய்யலாம்தானே! கிருஷ்ண சந்தரின் தந்தை இறந்துவிடவே துக்கம் விசாரிக்க நீ போவதாக வைத்துக்கொள்ளேன். இதில் ஒருவரும் குற்றம் கண்டுபிடிக்க இயலாது!"

"ஆம் ஆம், மூன்று வருடங்களுக்கு முன் அவருடைய தகப்பனுர் இறந்துவிட்டார்."

"சரி சரி! அப்போ, அவருடைய தகப்பனார் இறந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. வருடக் கடைசியில் நடைபெறும் திவசத்தில் கலந்துகொள்ளுவதற்காக நீ போகிறாய். இருபத்தாறாம் தேதி திவசம். இருபத்தேழாம் தேதியன்று நீ புறப்படுவதென்றால் அவர் விடமாட்டார். வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்திருக்கிறாய். ஆதலால் இருபத்தெட்டாம் தேதி கிளம்பி இருபத்தொன்பதாம் தேதி நீ இங்கு வந்து சேர்ந்துவிடலாம். இனி, ஒருநாள் அரைநாள் வழியில் எங்கேயாவது தாமதிக்கவும்கூடும்.

இருபத்தைந்தாம் தேதியன்று இருவரும் ஸ்டேஷனுக்கு வந்தனர். ஞானபிரகாஷ் அமிர்தஸரஸுக்கு இரண்டு டிக்கட் வாங்கிக்கொண்டார். கங்கா பிரஸாத் ஆச்சரியத்தோடு கேட்டான்: "மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்யப்போகிறாயா சித்தையா! கூட்டத்தைப் பார்! அதுவும் இவ்வளவு நீண்ட தூரத்துப் பிரயாணத்தில்......"

"ஆமாம் நண்பரே! ஆதலால்தான் சுகமாகத் தூங்கிக் கொண்டு போகலாமே என்று மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்கினேன். இரண்டாம் வகுப்பில் ஒரே கூட்டமாக இருக்கும். இண்டர் வகுப்பில் இடம் கிடைத்தாலும் உண்டு, கிடைக்காமலும் போகலாம். தலைவர்களெல்லாம் கூட்டம் கூட்டமாக அமிர்தஸரஸை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். முதல் வகுப்பு நம் சக்திக்கு மீறின சமாசாரம். தவிர, முதல் வகுப்பில் சென்றால் எவனாவது வெள்ளைக்காரன் கோபக்காரனாக இருந்து நம் ஸாமானைத் தூக்கி வெளியே எறிந்துவிடக் கூடும். அடிதடி சண்டையில் முடிந்துவிடும், இப்போது அதற்கெல்லாம் நேரமில்லை. மூன்றாம் வகுப்பில் சுகமாகத் தூங்கிக்கொண்டு போகலாம்!"

6

சின்கீயின் உடலை தகனம் செய்துவிட்டு பீக்கூ திரிவேணியிலிருந்து வீடு திரும்பியபோது இரவு ஆகி விட்டது. சின்கீயின் சிதையில் நெருப்பு ஏற்றியதுமே ஜ்வாலா பிரஸாத் வீட்டுக்கு வந்துவிட்டார். ஆனால் பீக்கூ தன் இனத்தாரோடு கடைசிவரை அங்கே இருக்க வேண்டியிருந்தது. காலையிலிருந்தே நல்ல மழை. நடு நடுவில் விட்டு விட்டுத் தூறல் விழுந்துகொண்டிருந்தது. ஜ்வாலா பிரஸாத் ஏதோ சிந்தனையாக உள் வராந்தாவில் யமுனாவோடும் குழந்தைகளோடும் உட்கார்ந்துகொண்டிருந்தார். வீட்டில் சோக மயமான சூழ்நிலை. பீக்கூ வந்ததுமே ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னான்: "தம்பி, எல்லாம் முடிந்துவிட்டது. போய் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யுங்கள். குழந்தைகளைப் பற்றி நினைக்க வேண்டாமா!"

"நீ?"

"நான் இன்று உபவாசம். போய் வெளி அறையில் படுத்துக்கிறேன்."

"வெளி அறையில் எங்கே தூங்கப்போகிறாய் பீக்கூ. சின்கீ சித்தியின் அறையில் நீ படுத்துக்கொள்ள வேண்டும். அங்கே ராத்திரி முழுவதும் விளக்கு எரிய வேண்டும். சின்கீ என்னென்ன விட்டுச் சென்றாளோ, அதையெல்லாம் நீ எடுத்து வைத்துக்கொள். நீ வந்த போது அவளுக்குப் பேச்சு மூச்சில்லை. நினைவு இருந்த வரை உன் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவள் தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை உனக்குக் கொடுக்க எண்ணினுள்."

"என்ன பணம் தம்பி, வந்ததெல்லாம் உங்கிட்டே யிருந்துதானே வந்திச்சு. அதை உங்கிட்டயே வச்சுக்கோ! எனக்கு இனிமே முன்னே பின்னே ஒருத்தரும் இல்லே. கங்கா ஒருத்தன்தான் எனக்கு. அவனும் உன் பிள்ளை" என்முன் பீக்கூ.

"இல்லே பீக்கூ. நீ இருக்கிறவரையில் இந்த சேமிப்பு உன்னுடையது. ஏறக்குறைய ஓராயிரம் ரூபாய் ரொக்கமும், முன்னூறு நானூறு ரூபாய் பெறுமான முள்ள நகைகளும் சின்கீயிடம் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். பீக்கூவுக்குத் திருமணம் நடைபெற்முல் தன் மருமகளுக்கு இவற்றையெல்லாம் கொடுப்பேன் என்று சொல்லிக்கொண்டிருப்பாள். சாவதற்கு முன் சிறிது நேரம் வரை பீக்கூவைக் கல்யாணம் செய்து கொள்ளச்சொல் என்று சொல்லிக்கொண்டிருந்தாள்."

பீக்கூ சிரித்தான். "தம்பி, இனிமே எனக்கு கட்டை யிலேதான் கல்யாணம். அம்பதுக்கு மேலே வயது ஆகி விட்டது. இவ்வளவு நாள் செஞ்சுக்காத கல்யாணம் இனிமேற்பட்டு செய்துப்பேனு? அதுவுமல்லாமே, எனக்கு கல்யாணம் செஞ்சிக்காமேயே வீடு கிடைச்சுவிட்டது; பிள்ளையும் கிடைச்சுட்டான். நான் கங்காவோடேயே இருந்து என் வாழ்க்கையை முடிச்சுடறேன்." சிறிது நேரம் மௌனமாக இருந்து மீண்டும் அவன் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னுன்: "தம்பி, தப்பா நினைச்சுக்காமே இருந்தா நான் ஒரு வார்த்தை சொல்லறேன்."

"சொல்லு பீக்கூ!"

"நான் சொல்றேன், நீயும் உன் பெண்சாதியும் கங்கா வோடு ஏன் போய் இருக்கக்கூடாது? கங்காவின் பெண்சாதியோ வருஷத்தில் ஆறு மாதம் அலாகாபாதில்

உங்களோடு வந்து இருக்கிருள். இந்த மாதிரி கங்காவைத் தனியாக விடுவது சரியில்லே. நீ கூட யிருந்தா கொஞ்சம் வெட்கம், நாணம் உண்டாகும் அவனுக்கு!"

கங்கா பிரஸாதைப் பற்றி ஜ்வாலா பிரஸாத் ஏதேதோ கேள்விப்பட்டார். அவன் நடத்தைக் குறைபாடுகளைப் பற்றி உள்ளூர் ஆபீஸர்களிடையே மட்டுமன்றி மாகாண அதிகாரிகள் வரையிலும் பேச்சு அடிபட்டது. ஜ்வாலா பிரஸாத் கங்கா பிரஸாதுக்கு புத்தி சொல்லிப் பார்த்தார். ஆனல் ஒரு பலனும் இல்லே. யமுனு, ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னுள்: "பீக்கூ சொல்லுவது சரிதான், இங்கே அலகாபாதில் என்ன வைத்திருக்கிறது, நாம் நம் பிள்ளையை விட்டு வந்திருக்க? இந்த பங்களாவை வாடகைக்கு விட்டால் மாதம் ஐம்பது—அறுபது ரூபாய் கிடைக்கும். இரண்டு குடும்பங்கள் நடத்தும் செலவும் குறைந்துவிடும். மருமகளும் பல தடவை, நீங்கள் எல்லாம் ஜௌன்பூர் வந்திருங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிருள்....பெரிய பங்களாவில் அங்கே தனியாக அவளால் இருக்க முடியவில்லே. நாம் அந்த பேச்சை இதுவரை தள்ளிவிட்டோம். மருமகள் சொல்லியதே சரியென்று இப்போது தெரிகிறது."

"சரி, யோசிக்கலாம் இதைப்பற்றி."

பீக்கூ பேசினுன்: "இதிலே யோசிக்கிறத்துக்கு ஒண்ணுமில்லே தம்பி! நீ ஜௌன்பூர் வந்து இருக்க வேண்டும். இதிலேதான் கங்காவுக்கும் நன்மை, குடும்பத்துக்கும் நன்மை. இந்த கங்கா பணத்தை தண்ணியாட்டமா செலவழிச்சு வீணுக்கருன். ரெண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் கடனும் இருக்குதுன்னு கேள்வி."

ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். "என்ன சொன்னே,

கடனு ? இந்தக் கடன் எப்படி ஏற்பட்டது ?"

"நான் இதெல்லாம் உங்கிட்டே சொன்னேன்னு கங்காவிடம் சொல்லிவிடாதே. என்னை சும்மா விடமாட்டான். என்னத்தே சொல்றது தம்பி, எனக்கு கங்கா கிட்டே பயமாக இருக்குது. அவன் ஒரு வைப்பாட்டி வெச்சுக்கிட்டு இருக்கான். அவளுக்காகச் செலவு. குடி வேறே. இதிலெல்லாம் தான் கடன் உண்டாகி விட்டது ! புரியுதா ?"

ஜ்வாலா பிரஸாத் அதிர்ந்துவிட்டார். "சமாசாரம் இந்த அளவுக்கு வந்துவிட்டதா ?" பிறகு அவர் யமுனையைப் பார்த்தார். "இதைப்பற்றி எல்லாம் மருமகன் உனக்கு ஒன்றும் சொல்லவில்லையா ?"

யமுனையின் கண்கள் பனித்தன. "மருமகனுடைய முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்துவிட்டது. ஆனால் வாயைத்திறந்து ஒரு வார்த்தை கூட இதைப்பற்றிச் சொல்லவில்லை. அவள் ஜௌன்பூரில் ஏன் இருக்க விரும்பவில்லை என்று இப்போதுதான் புரிகிறது."

ஜ்வாலா பிரஸாத் கண்டிப்புடன் கூறினார். "இல்லை—இல்லை. நாம் போய் இருக்க வேண்டியதுதான். ஜௌன்பூரில் இருந்துகொண்டுதான் எல்லாவற்றையும் சரி செய்ய முடியும். நானேக்கு ஞானபிரகாஷையும் கலந்து யோசனை செய்கிறேன்."

மூன்று நாலு நாட்களாக ஞானபிரகாஷ் மிகவும் வேலையாக இருந்தார். கல்கத்தா காங்கிரஸுக்காக மும்முரமான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. நாட்டின் இதயம் முதன் முறையாக ஒரு பெரிய கிளர்ச்சி இயக்கத்திற்காக தத்தளித்துக்கொண்டிருந்தது. ஞான பிரகாஷ் அந்த உணர்வில் ஒரு பகுதியாகும். காந்திஜீயின் சீடர்களில் ஞானபிரகாஷ் முக்கிய ஸ்தானம் பெற்றிருந்தார். குறுகிய காலத்திலேயே

இவ்வளவு முக்கியத்துவம் பெற்றுவிட்டார். ஜ்வாலா பிரஸாத் அவரிடம் வந்தபோது அவர் நகரத்தின் முக்கியமான காங்கிரஸ்காரர்களுடன் ஏதோ ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தார். ஞானபிரகாஷ் சொல்லிக் கொண்டிருந்தார். "பிரிட்டிஷ் அரசாங்கம் நம்போன்ற படித்த நடுத்தர வர்க்கத்தை ஆதாரமாகக் கொண்டிருக் கிறது. ஜமீந்தார்களைப் பொறுத்தமட்டில், அவர் களெல்லாம் எப்போதும் ராஜாக்களுடைய அடிமை களாக இருந்துகொண்டு ராஜாக்களுடைய கொடுங் கோன்மைக்கு உதவியாக இருந்து, படிப்பு வாசனையற்ற ஒன்றுமறியாத மக்கள் மீது அதிகாரம் செலுத்திக் கொடுமை செய்து வந்துள்ளனர். இந்த ஜமீந்தார்கள் பிரிட்டிஷ் அரசுக்குத் துணையாக நிற்பார்கள் என்பது வெளிப்படை.

ராஜ்பிஹாரிக்கு ஞானபிரகாஷின் வார்த்தை பிடிக்க வில்லை. அவரே ஒரு ஜமீந்தார். அவர் துடிதுடிப்பாகச் சொன்னார்: "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஏழாம் ஆண்டில் நடைபெற்ற போராட்டம் இந்திய ஸமஸ்தான மன்னர் களும் ஜமீந்தார்களும் நடத்திய புரட்சிதானே. வரலாற்றையே நீங்கள் மாற்றிச் சொல்லுகிறீர்களே!"

ஞானபிரகாஷ் அமைதியோடு பதில் கூறினார்: "ராஜ்பிஹாரிஜீ அவர்களே, வரலாறு என்னவோ உண்மைதான். ஆனால் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு நாம் கூறும் விளக்கம் சரியாக இருக்கவேண்டும். ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டில் நடந்த போராட்டம், கலகம், புரட்சி—அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பெயரிட்டு அழையுங்கள்—அது எவ்வாறு குலைந்தது என்று உங்களுக்குத் தெரியும். மக்கள் அதில் எவ்வித உற்சாகமும் காட்டவில்லை.

ஆகவேதான் அது வெற்றிபெறவில்லை. அந்த ஆண்டோடு நம் காலத்தைஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. வரலாற்றின் ஏடுகளில் நமக்குப் படிப்பினை கிடைக்கும் என்று நினைத்தால் அது ஒரு பெரும் பிரமைதான். வரலாறு செத்துவிட்டது. ஒவ்வொரு கணமும் நிலை மாறி வருகின்றது. கொள்கைகள் மாறுகின்றன. மக்கள் மாறுகின்றனர். இவையனைத்தையும் விட எல்லா வற்றிலும் முக்கியமாக மனித சமுதாயத்தின் உணர்வு மலர்ச்சி பெற்று வருகின்றது.''

ஞானபிரகாஷின் இந்த தத்துவ விசாரத்தில் ஜயநாத் பாண்டே சிறிது வெறுப்புக் கொண்டவராய் சொன்னார்: "சரிதான். கொள்கை, வரலாறு என்ற அனாவசியமான பேச்சை விட்டுத் தள்ளுங்கள். விஷயத்துக்கு வாருங்கள். வக்கீல் தொழிலை விடுவது, ஸ்கூல், காலேஜ்களை விட்டு வெளியேறுவது, கௌன்ஸிலை விட்டு வெளியேறுவது, விருதுகளை உதறி எறிவது—இதனையெல்லாம் சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்று நீங்கள் மனப்பூர்வமாகவே நம்புகிறீர்களா?''

ஞானபிரகாஷ் பதில் சொன்னார்: "நிச்சயமாக நம்புகிறேன். நாம் இவற்றையெல்லாம் நல்ல முறையில் நடத்துவோமானால்—நீங்களே யோசித்துப் பாருங்கள். முப்பத்து மூன்று கோடி இந்தியர்கள்மேல் ஏறக்குறைய இரண்டு லட்சம் தொகையுள்ள வெள்ளையர்கள் அதிகாரம் செலுத்துகின்றனர். இவர்களில் ஒன்றேகால் அல்லது ஒன்றரை லட்சம் பேர் இராணுவத்தில் இருப்பவர்கள். மிகுதி ஐம்பதாயிரம் வெள்ளையர்கள் இந்தியாவின் அரசாங்கத்தை நடத்துகின்றனர். இதெல்லாம் எவ்வாறு சாத்தியமாகிறது என்பதுதான் நம் முன் இருக்கும் முக்கியமான பிரச்னை. சுமார் பத்து அல்லது இருபது லட்சம் இந்தியர்கள், ஆங்கிலப்

படிப்புப் படித்தவர்கள் வெள்ளையர் அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்கின்றனர். இவர்கள் நாடு முழுவதும் வெள்ளையருக்கு அடிமையாக இருக்கத் தங்கள் ஒத்துழைப்பை அளிக்கின்றனர். இவர்கள் ஒத்துழைப்பு அளிப்பதை மறுத்தார்களானால் வெள்ளையர்களால் இந்தியாவில் அரசு செலுத்த இயலாது. இதுமட்டுமல்ல அவர்கள் இந்தியாவில் இருப்பதே இயலாமல் போய் விடும்."

ராஜ்பிஹாரி சிடுசிடுத்துக் கூறினார். "அதாவது அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்கும் இந்தியர் அனைவரும் தங்கள் தங்கள் உத்தியோகத்தை விட்டு விட்டால் சுயராஜ்யம் கிடைக்கும். அது நடக்கப் போவதில்லை. நடைமுறை சாத்தியமும் அல்ல. சர்க்காரில் உத்தியோகம் பார்ப்பவர்கள் ஆனந்தமாக இருக்கின்றனர்; நிறையச் சம்பளம் வாங்குகின்றனர். அவர்கள் இந்த சுயராஜ்ய இயக்கத்தில் ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டார்கள். மீதியுள்ளவர் வக்கீல்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள். அப்படியானால், வக்கீல்கள் தம் தொழிலை விடவேண்டும், மாணவர் படிப்பதை விட்டு படியாதவராக இருந்துவிடட்டும். நல்லது ஞானபிரகாஷ் அவர்களே, நீங்கள் வக்கீல் தொழிலை விட்டுவிடத் தயாரா?"

லாலா சீதள் பிரஸாத் சிரித்தார். "இவர் வக்கீல் தொழிலை எங்கே தொடங்கினாலல்லவா அதை விட்டு விடும் பிரச்னை ஏற்படும்! எது எப்படி இருந்தபோதிலும், நாம் காந்திஜீயுடன் சேர்ந்து பாடுபட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பம் ஆகிவிட்டால், பிரிட்டிஷ் சர்க்கார் சமாதானம் செய்து கொள்ளத் தயாராகும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஞானபிரகாஷ் சொல்வதுபோல, நம்முடைய

ஒத்துழையாமை முழுவதும் வெற்றி பெறுமானல் இரண்டு லட்சம் வெள்ளையர்களும் அடுத்த நாளே கப்பல் ஏறிக் கிளம்பிவிடுவார்கள்."

சிறிது நேரம் அனைவரும் மௌனமாக இருந்தனர். அதன் பிறகு ஞானபிரகாஷ் சொன்னார்: "ஒத்துழையாமை இயக்கம் ஒருவாறு தொடங்கிவிட்டது. கிலாபத் இயக்கத்தினல் இந்த ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பெரும்பலம் கிட்டியது. நாட்டின் முஸ்லிம் மக்களிடையே இப்போது வெள்ளையர்களைக் குறித்து எதிர்ப்பு மனப்பான்மை தீவிரமாகத் தோன்றியுள்ளது. மதராஸில் நடைபெற்ற கிலாபத் மாநாட்டில் நாட்டின் முஸ்லிம்கள் ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுவிட்டனர். இந்த முஸ்லிம்கள் ஆதியிலிருந்தே பாரத நாட்டில் வசிப்பவர்கள். இவ்வுண்மையையும் முஸ்லிம்கள் உணர்ந்துவிட்டனர். அண்மையில் ஒரு செய்தி கிடைத்தது. அதாவது, பிரிட்டிஷ் அரசை எதிர்த்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இந்தியாவை விட்டு ஆப்கானிஸ்தானில் குடியேற முயன்றபோது ஆப்கானிஸ்தானத்து சர்க்கார் அவர்களைத் தங்கள் நாட்டு எல்லைக்குள் வரவிடாது தடுத்துவிட்டது. ஒத்துழையாமைக்கு இதைவிட நல்ல தருணம் வேறே என்ன வாய்க்கக்கூடும்? வெகு சிரமப்பட்டு இப்போது தான் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமை உண்டாகியுள்ளது. நாம் இந்தத் தருணத்தைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை உறுதியாக நிலைநாட்ட வேண்டும்."

"ஆம்! இப்போது ஒற்றுமை வலுப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. ஆனல் இந்த ஒற்றுமை வெள்ளையர்களை எதிர்ப்பதற்குமட்டுமே. அதற்குமேல் யாருடைய ஒற்றுமையும் இருக்க இயலாது!" ராஜ்பிஹாரி

சொன்னார். "முஸ்லிம்கள் உங்களுடன் ஏன் சேர்ந்து கொண்டார்கள் என்றால் இங்கிலீஷ்காரர்கள் துருக்கி விஷயத்தில் தாங்கள் அளித்திருந்த வாக்குறுதியை மீறிவிட்டனர் என்பதற்காகவே."

ஞானபிரகாஷ் ராஜ்பிஹாரியின் இந்தக் குத்தலான பேச்சைக்கேட்டு சிரித்தார். "ராஜ்பிஹாரிஜீ, காரணங்களைப்பற்றி யோசிக்காதீர்கள். காரணம் எல்லாம் கடந்த காலத்து சமாசாரம். இன்றைய உண்மை என்னவென்றால், வெள்ளையர்களை எதிர்த்து ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமை கொண்டிருக்கின்றனர். இந்த இரு சாராரும் எதிர்ப்பதற்குக் காரணம் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் இந்த விரோத மனப்பான்மையினாலும் வெறுப்புணர்ச்சியினாலும் உண்டாகும் எதிர்ப்பும் புரட்சியும் ஹிந்து முஸ்லிம்களிடையே உள்ள வேறுபாட்டை ஒரேயடியாக அகற்றிவிடும். நாம் எல்லாரும் ஒரே குரலாக காந்திஜீக்கு நம் ஒத்துழைப்பைத் தெரிவிக்கவேண்டும்.

ராஜ்பிஹாரி சிரித்தார். "நாமே, கண்ணை மூடிக் கொண்டு காந்திஜீயைப் பின்பற்றுகிறோம். நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம். கல்கத்தா காங்கிரஸில் எனது வாக்கு காந்திஜீயின் தீர்மானத்திற்குத்தான். அங்கு வருகின்றவர் எல்லாருமே காந்திஜீயைப் பின் பற்றுவார்கள் என்று நான் நினைக்கிறேன்."

எல்லாரும் ஒரு குரலாக காந்திஜீயிடம் தங்கள் பக்தியைக் காட்டினர்.

அனைவரும் சென்ற பிறகு ஞானபிரகாஷ் ஜ்வாலா பிரஸாதைக் கேட்டார்: "சொல்லுங்கள் அண்ணா, ஏன் ஏதோ கவலையாக இருக்கிறீர்களே?"

ஒரு பெருமூச் செறிந்து ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "ஞானா, கங்கா நம்மிடமிருந்து கைநழுவிப் போகிறான்.

அவனை எப்படி காப்பாற்றுவது என்று யோசிக்கவே உன்னிடம் வந்தேன்.'' பிறகு ஜ்வாலா பிரஸாத் நிலைமையை ஞானபிரகாஷுக்கு விளக்கிக் கூறினார்.

ஞானபிரகாஷின் முகத்திலும் ஒரு மங்கலான கவலையின் ரேகை தோன்றியது. ''இதைப்பற்றி எனக்கும் சிறிது அச்சம்தான் அண்ணா! அதிகாரம், செல்வம் இவற்றோடு ஒரு சாபக்கேடும் சேர்ந்திருக்கும். அதாவது, மனிதன் அகந்தையால் சுய அறிவையும் தன்னடக்கத்தையும் இழந்துவிடுகிறான், மேலும் நடத்தையில் சீரழிந்துவிடுகிறான். நீங்கள் இதைப்பற்றி ஏதாவது யோசித்திருக்கிறீர்களா?''

''எனக்கு ஒன்றும் தோன்றவில்லை ஞானா; நாம் எல்லாரும் ஜௌன்பூருக்குப் போய் இருக்கலாம் என்று பீக்கூ சொல்லுகிறான். உன் அண்ணிக்கும் இது சம்மதமே. ஆனால் ஏனோ, எனக்கு அங்கு போய் இருப்பது சரியெனப்படவில்லை. கங்கா வெறும் பேச்சுக்காவது என்னை அங்கு வந்து இருக்கும்படிச் சொல்லவில்லை. எங்களை விட்டு அவன் ஏன் விலகி இருக்க நினைக்கிறான் என்பது இப்போதுதான் புரிகிறது.

ஞானபிரகாஷ் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னார்: ''அண்ணா! வீட்டுக்குத் தலைவர் நீங்கள். கங்காவின் தந்தை. நீங்களாகவே இதைப்பற்றி ஏதேனும் செய்ய வேண்டும். கங்கா சொல்லவேண்டும் என்று ஏன் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.''

''என்னைப்பற்றி அவன் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் மதிப்பும் நல்லெண்ணமும் நிலைத்திருக்கட்டுமே என்பதற்காகத்தான். நான் அங்கே போவதனால் அவனுடன் போராட்டம் தொடங்கிவிடும். அவன் என்னிடம் வைத்திருக்கும் மதிப்பை இழந்துவிடுவேன்;

அதாவது என்பிள்ளையை நான் இழந்துவிடுவேன்." மிகவும் கவலை தோய்ந்த குரலில் ஜ்வாலாபிரசாத் இவ்வாறு சொன்னார்.

"இந்த வகையில் நீங்கள் கங்காவைக் காப்பாற்ற முடியுமா அண்ணா; அவனை ஆதரவற்ற அனாதையாக விட்டுவிடுவீர்களா? உங்கள் முன்னிருப்பது கங்கா பிரஸாதைக் காக்கவேண்டிய பிரச்னை. ஒருவகையில் வாழ்வா சாவா என்கிற பிரச்னை. நீங்கள் அவனிடம் போயிருப்பதனால் நிலைமையைச் சமாளிக்க முடியும். அவன் எவ்வளவு தூரம் கெடவேண்டுமோ கெட்டு விட்டான். நாளை இரண்டு மூன்று நாட்களில் கல்கத்தாவுக்குப் போகிறேன். இன்று ஆகஸ்ட் இருபத்தொன் பதாம் தேதி. செப்டம்பர் நான்காம் தேதி முதல் கல்கத்தாவில் காங்கிரஸ் மாநாடு கூடவிருக்கிறது. அதைப்பற்றித்தான் நாங்கள் இப்போது பேசிக்கொண் டிருந்தோம். செப்டம்பர் பத்து அல்லது பதினொன்றும் தேதிக்கு நான் கல்கத்தாவிலிருந்து நேராக ஜௌன்பூர் வருகிறேன். நீங்கள் ஒருவாரத்திற்குள்ளேயே ஜௌன்பூர் போய்ச்சேருங்கள், குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு!"

"ஆனால் இங்கே... அலாகாபாதில் உள்ள பங்களா... இதை என்ன செய்ய?"

"பங்களாவை வாடகைக்கு விட்டுவிடுங்கள். என்னுடைய நண்பர் மன்மோகன் பானர்ஜிக்கு ஒரு பங்களா தேவை. எழுபது எண்பது ரூபாய் வாடகையில் வேண்டும் என்கிறார். நீங்கள் விரும்பினால் நான் அவரி டம் பேசிப் பார்க்கிறேன்!"

ஈடுபாடற்ற குரலில் ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "வாடகைக்கு விடுவதற்கா நான் இந்த பங்களாவைக் கட்டினேன். நீயே இதில் ஏன் வந்து இருக்கக்கூடாது?

உன் வீடு கட்டி முடிய இன்னும் ஒரு வருடமாவது பிடிக்கும். அதுவரையில் நீ என் பங்களாவில் வந்திரு. நீ இந்த பங்களாவை மன்மோகன் பானர்ஜிக்குக் கொடுத்துவிடு''.

ஜ்வாலாபிரஸாத் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, அவருக்குத் தனது கால்களை பலவந்தமாக இழுத்து வருவதுபோல் தோன்றியது. இதெல்லாம் என்ன இப்படி நடந்துகொண்டிருக்கிறது. ஏன் நடந்து கொண்டிருக்கிறது, எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பது ஒன்றும் அவர் புத்திக்கு விளங்கவில்லை. வீட்டில் ஒரு விசித்திரமான சோக நிலை சூழ்ந்திருந்தது. அவர் வந்ததுமே கங்காபிரஸாதுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தான் குடும்பத்தோடு ஜௌன்பூர் வந்து இருக்க விரும்புவதாக எழுதினார்.

இந்தக் கடிதத்தை எழுதிய நான்காம் நாளே அவருக்கு கங்கா பிரஸாதின் பதில் கிடைத்துவிட்டது. கங்கா பிரஸாத் தன் தந்தையின் கருத்தை வரவேற்றான். அதோடுகூட தனக்குச் சீக்கிரமாக எங்கேயாவது வேறிடத்திற்கு மாற்றல் வரக்கூடும் என்றும் குறித்திருந் தான். ஜ்வாலா பிரஸாதுக்கு கங்கா பிரஸாதின் சொற்களில் தன்னை வருந்தி அழைக்கும் ஆவல் காணப் படவில்லை. ஆயினும், ஒரு வாரத்திற்குப் பிறகு அவர் யமுனையையும், ருக்மிணியையும், கங்கா பிரஸாதின் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு ஜௌன்பூருக்குப் புறப்பட்டார். பீக்கூ மூன்று நாள் முன்னதாகவே ஜௌன்பூர் சென்றுவிட்டான்.

ஜ்வாலா பிரஸாதின் குடும்பமனைத்தும் போய்ச் சேர்ந்த பிறகு கங்கா பிரஸாதின் வாழ்க்கை சீர்திருந்தி விட்டது, இப்போது அவனது பெரும்பான்மை நேரம் வீட்டிலேயே கழிந்தது. எப்பொழுதாயினும் தனது

நண்பர்கள் வந்தபோது அவர்களுடன் மது அருந்துவான். ஜ்வாலா பிரஸாத் ஓரளவு ஆறுதல் அடைந்தார். தாம் ஜௌன்பூர் வந்தது சரியான முடிவு என்றே அவருக்குப் பட்டது. ருக்மிணியின் முகத்திலும் மகிழ்ச்சி தவழ்ந்தது. வீட்டில் சந்தோஷ ஆரவாரம் பரவியது.

ஆனால் கங்கா பிரஸாதின் முகத்தில் மட்டும் ஒரு விசித்திரமான ஆழ்ந்த உணர்வு நிலவிக் காணப்பட்டது. அவன் மூளையிலோ, மனதிலோ எங்கேயோ ஒரு பெரிய சுமை ஏறியிருப்பது போன்ற தோற்றம்! ஜ்வாலா பிரஸாதுக்குக்கூட அந்த முகபாவனையைக் கண்டு வியப்பு உண்டாகியது. ஆனால் இதைப்பற்றி அவனுடன் பேசுவது சரியல்லவென்று நினைத்தார். இந்த ஆழ்ந்த நிலை மறையக்கூடியது, சீக்கிரமே மறைந்துவிடும் என்று அவர் அறிவார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. கங்கா பிரஸாத் சனிக்கிழமையன்று மாலையே நண்பன் ஒருவனைப் பார்த்துவர பனாரஸ் சென்றுவிட்டான். ஜ்வாலா பிரஸாத் பேரன் நவலை வராந்தாவில் உட்கார வைத்துக்கொண்டு படிப்புச் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார். நவலுக்குப் பதின்மூன்று வயது. எட்டாவதில் படித்துக் கொண்டிருந்தான். அருகிலேயே நவலுடைய தங்கை வித்யா உட்கார்ந்துகொண்டு சிலேட்டில் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தாள்.

மத்தியானம் ஆகிவிட்டது. ஜ்வாலா பிரஸாத் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதை நிறுத்திக் கொண்டார். அக்டோபர் மாதம் இரண்டாம் வாரம், ஆயினும் வெயில் இன்னும் அதிகமாகவே இருந்தது. ஜ்வாலா பிரஸாத் கிணற்றடியில் குளிப்பதற்காகப் போக முற்பட்டார். இதற்குள் பங்களாவின் வாசலில் ஒரு தாங்கா வந்து நின்றதைக் கவனித்தார். தாங்காவில்

ஞானபிரகாஷ் அமர்ந்திருந்தார். ஜ்வாலா பிரஸாதின் கால்கள் நின்றுவிட்டன. "அட, நீயா ஞானு!" என்று கூறியபடியே அவர் ஞானுவை நோக்கிச் சென்றார். ஜ்வாலா பிரஸாத் ஞானபிரகாஷின் சாமான்களை இறக்கச் செய்தார். பிறகு அவருடன் வராந்தாவில் வந்து உட்கார்ந்துகொண்டு பேசலானார்: "நீ செப்டம்பர் பத்து அல்லது பதினைன்ரும் தேதிவாக்கில் வருவதாகச் சொன்னாய்; ஆனால் தசரா கழித்து வந்திருக்கிறாய்!"

"ஆமாம், கல்கத்தாவில் துர்க்கா பூஜை மிகவும் விசேஷம். காங்கிரஸ் மாநாடு நடந்த பிறகு அங்கேயே தங்கிவிட்டேன். இப்போது வங்காளத்தில் அரசியல் கொந்தளிப்பு அதிகமாக இருக்கிறது. வங்காளத்துக் காங்கிரஸ்காரர்கள் தங்கள் தோல்விக்குப் பிறகு மீண்டும் காங்கிரஸுக்குள்ளேயே மற்றொரு போராட்டத்திற்காக தயார் செய்துகொண்டிருக்கிறார்கள் அல்லவா! ஆகவே இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தேன். இப்போது நான் கல்கத்தாவிலிருந்து நேராக வந்து கொண்டிருக்கிறேன். அல்லது சரியாகச் சொன்னால், பனாரஸில் ஓரிரவு தங்கிவிட்டு அங்கிருந்து இன்று காலை ஜௌன்பூருக்குப் புறப்பட்டேன். நேற்று இரவு பனாரஸில் யுனைட்டெட் புராவின்ஸ் மாகாணத் தொண்டர்களுடைய கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்காக இறங்கவேண்டி வந்தது."

"கங்கா கூட நேற்று மாலை தனது நண்பன் ஒருவனைச் சந்திக்க பனாரஸ் போயிருக்கிறான். நாளை காலை திரும்பி விடுவான்."

"கங்கா பனாரஸ் போயிருக்கிறானா! அப்படியானால் என் கண்கள் ஏமாறவில்லை." ஞானபிரகாஷ் தாழ்ந்த குரலில் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுவது போல கூறினார்.

ஜ்வாலா பிரஸாத் கேட்டார்; "அப்படியானால் நீ கங்காவைப் பார்த்தாயா ?"

"ஆமாம், பார்த்தேன். ஆனால் தொலைவிலிருந்து. வேட்டியும் சட்டையும் அணிந்துகொண்டிருந்தான். ஆதலால் சரியாக அடையாளம் புரிந்துகொள்ள இயல வில்லை. மேலும் இரவு நேரம், வெளிச்சமும் குறைவாக இருந்தது. என் கண்கள் ஏமாற்றினவென்று நினைத் தேன். சரி, விடுங்கள். ஆம், இங்கு நிலைமை எப்படி இருக்கிறது?"

"எனக்கு விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை. சரியான நேரத்திற்கு வீட்டுக்கு வருகிறான், சரியான நேரத்தில் செல்கிறான். மிகவும் பணிவுடனும் அடக்கத் துடனும் இருக்கிறான். இதுமட்டுமல்ல; வீட்டில் ஒவ் வொருவரைப் பற்றியும் கவனமாக இருக்கிறான்." இதைக் கூறும்போது ஜ்வாலா பிரஸாதின் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்பட்டது.

ஞானபிரகாஷ் முறுவலித்தார். "நான் என்ன சொன் னேன் உங்களுக்கு? நீங்கள் இங்கு வந்ததனால் நல்ல பலன்தான் உண்டாகியது. எனக்கு மிக மகிழ்ச்சி. ஆனால் நீங்கள் கவலை தோய்ந்து காணப்படுகிறீர்கள், என்ன விஷயம் ?"

"ருக்மிணிக்கு இன்று காலையிலிருந்து இடுப்புவலி ஆரம்பித்திருக்கிறது. கங்காவோ இங்கே இல்லை. நாள் ஆகிவிட்டது. பீக்கூவை அனுப்பியிருக்கிறேன் மருத்து வச்சியை அழைத்துவர. எப்போ குழந்தை பிறக்குமோ? அவ்வளவுதான் சமாசாரம்!"

"மருத்துவச்சியை அழைத்துவர அனுப்பியிருக்கிறீர் களா? லேடி டாக்டரையும் 'மிட்வைப்'ஐயும் அழைத்து வரச் சொல்லக்கூடாதா? நீங்கள் எல்லாம் இன்னும் அந்தப் பழைய பழக்க வழக்கங்களையே

கடைப்பிடித்து வருகின்றீர்களா? நீங்கள் இருங்கள். நான் இப்பொழுதே சிவில் ஆஸ்பத்திரியிலிருந்து லேடி டாக்டரையோ நர்ஸையோ அழைத்துக் கொண்டு வருகிறேன்." ஞானபிரகாஷ் இதைச் சொல்லிவிட்டு எழுந்து நின்றார். அதே நேரத்தில் எதிரே பீக்கூ மருத்துவச்சியை அழைத்துக்கொண்டு வருவது தெரிந்தது.

"நல்லது; ஆனாலும் சிறிது நேரம் இரு. அதோ பார், மருத்துவச்சியும் வந்துவிட்டாள். என்ன சொல்கிறாளோ பார்ப்போம். அதற்குள் நான் ஸ்னானம் செய்து முடித்துக் கொள்ளுகிறேன். நீயும் ஆடை மாற்றிக்கொண்டு குளி."

ஜ்வாலா பிரஸாத் குளித்துவிட்டு ஞானபிரகாஷின் அருகில் வந்தார். அதே நேரத்தில் பீக்கூ உள்ளே இருந்து வந்து சொன்னான். "தம்பி, மருமகளுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்குது. சரியான நேரத்தில் நான் மருத்துவச்சியே அழைச்சுக்கிட்டு வந்தேன்."

ஜ்வாலா பிரஸாதின் முகம் மலர்ந்தது. அவர் எழுந்து நின்றார். அவர் இரண்டு ரூபாய் எடுத்து பீக்கூ கையில் கொடுத்தார். "இரண்டு ரூபாயிக்கு பைசாவும் அரையணாவுமாக சில்லரை மாற்றிக்கொண்டு வா. குழந்தை பேரிலும், அதன் தாயின் பேரிலும் திருஷ்டி கழித்து தானம் செய்துவிடு. இதோ பார், போய்.... புரோகிதரையும் அழைத்துக்கொண்டு வா." பீக்கூ புன்முறுவல் செய்தான். "இதோ அழைச்சுக்கிட்டு வர்றேன்."

கங்கா பிரஸாத் நடுராத்திரிவேளையில் பஜாரிலிருந்து திரும்பி வந்தான். வீட்டில் அப்போதும் மகிழ்ச்சி ஆரவாரமாக இருந்தது. ஜ்வாலா பிரஸாதும் ஞானபிரகாஷும் தூங்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். ஞானபிரகாஷைப் பார்த்ததும்

கங்கா பிரஸாத் சொன்னான்: "பலே! சித்தையா, எத்தனை நாளாக நீ வருவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் தெரியுமா? கல்கத்தாவில் ரொம்ப நாட்களைக் கழித்துவிட்டாயே? எப்போது வந்தாய்?"

"நான் இன்று மத்தியானமே இங்கே வந்துவிட்டேன். நேற்று பனாரஸில் தங்கவேண்டி வந்துவிட்டது. நான் உன்னை பனாரஸில் பார்த்தேன். ஆனால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. நீயும் ஏதோ அவசரமாக இருந்ததுபோல் தோன்றியது. ஆதலால் உன்னை நான் கூப்பிடவில்லை. அப்புறம் எண்ணினேன்—ஒருவேளை என் கண்களுக்குத்தான் அப்படி தோன்றியதோ என்று. ஆனால்..."ஞானபிரகாஷ் ஒரு பொருள் பொதிந்த புன்முறுவலோடு கங்கா பிரஸாதைப் பார்த்தார். "என் கண்களுக்கு இலேசில் ஏமாற்றம் உண்டாவதில்லை. நீதான் அது!"

கங்கா பிரஸாத் பயந்துகொண்டிருந்தான். எங்கேயாவது சமயாசமயம் தெரியாது ஞானபிரகாஷ் வாக்கு வாதம் செய்ய ஆரம்பித்துவிடுவாரோ என்று. அதற்குள் ஜ்வாலா பிரஸாத் எழுந்தவாறே சொன்னார்: "ஒரு மணி அடிக்கப்போகிறது. போய்த் தூங்குகிறேன். நாள் முழுவதும் ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். மிகவும் களைத்துவிட்டேன்!"

"ஆம்—ஆம், நீங்கள் போய்த் தூங்குங்கள் அண்ணா!" ஞானபிரகாஷ் இதைச் சொல்லிவிட்டு கங்கா பிரஸாதுடன் பேசத் தொடங்கினார்: "குழந்தைக்கு வாழ்த்துகள் தம்பி! நல்ல முகூர்த்தத்தில் பிறந்திருக்கிறான். வீட்டுக்குள்ளே போ. இனிமேல் ஆடைகளை மாற்றிக் கொண்டு தூங்கு போ. பனாரஸில் நான் பார்த்த காட்சி நல்லதெனப் படவில்லை. அதைப்பற்றி நாளைக்குப் பேசுகிறேன்."

"என் எண்ணம் என்னவென்றால் சித்தையா, இப்போதே பேசித் தீர்த்துக்கொள்ளலாம். நாம் தனியாக இருக்கிறோம். என்னோடு மலிகாவும் இருந்தாள். அப்பாவும் மற்றவர்களும் இங்கு வந்ததி லிருந்து நான் அவளை ஜௌன்பூரிலிருந்து பனாரஸுக்கு அனுப்பிவிட்டேன். இங்கே தலைவேதனையும் தொல்லையும் யார் படுவார்கள்? நீங்கள் சொல்லுங்கள், தவறாக ஒன்றும் செய்யவில்லையே!"

"சரியாகத்தான் செய்தாய். ஆனால் இதனால் உனக்குச் செலவு அதிகமாகிவிட்டது. பனாரஸில் மலிகாவுக்குச் செய்யவேண்டிய செலவு, நீ பனாரஸுக்குப் போய் வர வேண்டியதற்கான செலவு! பார்க்கப்போனால் உன்னுடைய நிதி வசதி அப்படியொன்றும் பெரியதாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை!"

"ஆம், உண்மையிலேயே நிதி வசதி அவ்வளவு நன்றாக இல்லை. ஆனாலும், அலாகாபாத் செலவு இப்போது குறைந்துவிட்டது. மேலும் சித்தையா, இங்கே ஜௌன்பூரில் ஜனங்கள் "குச குச"வென்று பேசத் தொடங்கிவிட்டனர். அதையும் நிறுத்தவேண்டி யிருந்தது."

ஞானபிரகாஷ் சிறிது நேரம் மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் மன்றாடும் குரலில் சொன்னார்: "கங்கா, நீ இந்தப் பாதையிலிருந்து விலக முடியாதா? நான் சொல்லுகிறேன், இது அழிவுக்கான பாதை!"

கங்கா பிரஸாத் சிறிது ஆழ்ந்த சிந்தனையடைந்து பின்னர் சொன்னான்: "ஆம் சித்தையா, இது அழிவுக் கான பாதை என்று எனக்கும் தெரியும். என் மனதிற்கும் அவ்வாறு படுவது உண்டு. ஆனால் அதே நேரத்தில் வாழ்க்கையின் பாதையே அழிவின் பாதை

என்றும் எனக்குப் படுகிறது. கடைசியில் நமக்கெல்லாருக்கும் கிடைக்கப்போவது சாவு! அப்பிடியிருக்க, நடக்கப்போவது என்ன என்பதைப் பற்றி யோசிப்பதே வீண்! இன்று எது நடக்கிறதோ, அதுதான் உண்மை. நாளை என்ன நடக்கும் என்பதை யாரும் அறியார். அதைப்பற்றிக் கவலைப்படுவதும் வீண்தான்!"

சிறிது களைப்பு நிறைந்த குரலில் ஞானபிரகாஷ் பதில் சொன்னார்: "இதுவும் ஒரு கொள்கைதான்; இது மேல்வாரியாகத் தவறற்றதுபோல் காணப்படுகிறது. ஆனால், தம்பி, நல்ல அதிர்ஷ்டத்தினாலோ, துரதிர்ஷ்டத்தினாலோ நமக்கெல்லாம் யோசனை செய்யச் சக்தி கிடைத்திருக்கிறது. இந்த புத்தியை எங்கே அழித்துக் கொள்ள இயலும் கங்காபிரஸாத்? உன் குடும்பம் பெருகிக்கொண்டிருக்கிறது என்பதை நீ கவனிக்க வேண்டும். உனக்குச் செலவுகள் மிக அதிகமாகி இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். நீ அதருமமான காரியம் செய்யமாட்டாய் என்பதும் எனக்குத் தெரியும். நீ லஞ்சம் வாங்கமாட்டாய். நீ கடன் பட்டிருந்தால் அதில் எனக்கு ஆச்சரியம் உண்டாகாது".

"அலிரஜா இங்கு வந்ததிலிருந்து கடன்கள் குறைந்து விட்டன. இல்லாது போனால் ஆகிக்கொண்டுதான் இருந்தது."

ஆனால் அலிரஜா எவ்வளவு நாள் இங்கே இருப்பார், அல்லது நீயும் அலிரஜாவும்கூட எத்தனை நாள்வரை இருக்க முடியும்? இல்லை கங்கா, நீ உன் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ளவேண்டும்; உனக்குப் பெண்டாட்டி குழந்தைகள் இருக்கின்றனர். நீ ஒரு உயர்ந்த குடும்பத்தில், உயர்ந்த சமூகத்தில் பிறந்தவன், உனக்கு மதிப்பு கௌரவம் உண்டு.

கங்காபிரஸாத் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

பிறகு ஒரு பெருமூச்செறிந்து, சொன்னான்: "பெண்டாட்டி மக்கள், குலம் சமுதாயம், கௌரவம் மானம் என்றெல்லாம் நாம் எவ்வளவு குறுகிய எல்லையில் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி அதனை ரஸமற்றதாகவும் அழகற்றதாகவும் செய்துவிட்டோம்! சித்தையா, இந்தக் கட்டுக்களை அறுக்காமல் மனிதனால் ஒன்றும் செய்ய இயலாது. நீ அரசியலில் இருக்கிறாய், ஆகவே உனக்கு இது தெரிந்ததுதான். ஜெயிலுக்குப்போவது, தீண்டாமையை ஒழிப்பது, பெண்டாட்டிமக்கள் என்ற பாசத்தில் கட்டுண்டு கோழை ஆகாமலிருப்பது இதையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் இன்றைய அரசியலில் ஒருவன் கால் வைக்க முடியும். நீ இந்தக் குலத்தையும், மான மரியாதையையும் புகழ்ந்து கூறுகிறாய். நீதான் கல்கத்தாவில் 'கிலாபத்' தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு வருகிறாயே! உன் வாயிலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்க எனக்கு வியப்பாக உள்ளது."

ஞானபிரகாஷ் கங்கா பிரஸாதின் இந்த வாதத்தைக் கேட்டுப் புன்முறுவல் செய்தார். "மிகவும் அறிவாளி ஆகிவிட்டாய் தம்பி! நீ தவறாகச் சொல்லவில்லை. ஆனால் நீ ஏற்றுக்கொண்டது அரை உண்மை. உண்மையிலே வாழ்க்கையின் முன்னேற்றம் சமுதாயத்தில் வழங்கி வரும் கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதில்தான் இருக்கிறது என்று நீ சொன்னால் அதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், இந்த எதிர்ப்பு இருவகைப் பட்டது. ஒன்று, நம்பிக்கையினின்றும் தோன்றுவது; மற்றொன்று அவநம்பிக்கையினின்றும் தோன்றுவது. உன்னுடைய வழி அவநம்பிக்கையைக் கொண்டது."

"நம்பிக்கை அவநம்பிக்கை என்று ஏதோ ஒரு சிக்கலான புதிரைப் போட்டுவிட்டாய்! கொஞ்சம் தயவு செய்து அதை விளக்கிச் சொல்."

"ஐயா பெரியவரே! சிறிது கவனமாகக் கேளுங்கள். இந்தக் குடும்பம், மதிப்பு, மானம் முதலியவை இருக்கின்றனவே, இவற்றிற்கும் மேலானதொரு பொருள் இருக்கிறது—அது தான் தியாகம். தன் உடைமையைப் பலியிறுத்தல் என்பது. இதை மேற்கொண்டவர்களது பாதை நம்பிக்கையின் பாதை. அவர்களுக்கு இந்த வாழ்க்கையில் வழங்கிவரும் கொள்கைகளைப்பற்றி அவ்வளவு அவநம்பிக்கை என்பதல்ல. அவர்களுக்குத் தியாகம், உண்மை என்பவற்றில் இருக்கும் நம்பிக்கைதான் பெரிது. ஆனல் சிலர் எப்படிப்பட்டவர்கள் என்ருல், அவற்றில் நம்பிக்கை என்பது இல்லாமல் போனது மட்டுமல்ல, வாழ்க்கையிலுள்ள மதிப்பு, கௌரவம் என்கின்ற வழியைப் பற்றியும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அவர்களுடைய வழி அவநம்பிக்கையின் வழி என்றுதான் நான் சொல்லுவேன். ஆகவே, தம்பி, உன்னுடைய பாதை அவநம்பிக்கையினது; நாங்கள் மேற்கொண்டதோ, நம்பிக்கையின் மேல் ஆதாரங் கொண்டது. சரி, நேரம் ஆகிவிட்டது. இனி நான் தூங்கப்போகிறேன். நான் சொன்னதைப்பற்றி நன்கு யோசித்துப் பார். நாளைக்கு மீண்டும் பேசிக்கொள்ளலாம்." இதைக்கூறி ஞானபிரகாஷ் தன் சிந்தனையில் சிக்கிக் கவலை நிறைந்து பிரமை கொண்டவன் போல் உட்கார்ந்திருந்த கங்கா பிரஸாதை அங்கேயே விட்டு தூங்கச் சென்ருர்.

7

அலிரஜாவுக்கு மூச்சு வாங்கியது. அவர் நாக்கு குழறியது. வந்ததுமே தன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்; பெருமூச்சு வாங்கியது. தனக்குத்தானே முணமுணத்துக் கொள்வதுபோலச் சொன்னார்: "யா குதா! பிரளயம் தான் வரப்போகிறது என்று தோன்றுகிறது. ஜௌன்பூரில் இவ்வளவு பெரிய இயக்கம் நடைபெறும் என்று நினைக்கவில்லை. உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறதோ?"

"நரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லுங்கள். ஆனால் நீங்கள் ஏன் இவ்வளவு காபராபட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? நானும்தான் சிறிது தெரிந்துகொள்ளுகிறேனே!" கங்கா பிரஸாத் புன்முறுவலோடு சொன்னான்.

"அட, நான் எங்கே காபராபடுகிறேன்; ஆனால் என் கண்மேலேயே நம்பிக்கை இல்லை; அடாலா மசூதியிலிருந்து ஒரு ஊர்வலம் கிளம்பியது பாரு, அதிலே ஐம்பது-அறுபது பேர்தான் இருந்தார்கள். ஐயா! இவ்வளவு கூட்டம் எப்படி குழுமியது என்று கடவுளுக்குத்தான் வெளிச்சம்."

கங்கா பிரஸாத் சிரித்தான். "ஐம்பது அறுபது பேர் கொண்ட கூட்டம் அல்ல; அதில் பத்து-பதினொரு ஆயிரம் பேர் இருந்தனர். எனக்கு சமாச்சாரம் கிடைத்துவிட்டது. கிராமப்புறத்திலிருந்து கோமதி நதியில் ஸ்னானம் செய்வதற்கு ஜனங்கள் வந்துள்ளனர்.

இன்று மாக பூர்ணிமை. ஸ்நானம் செய்யும் நாள். அந்த ஊர்வலத்தோடு இந்த விழாவும் கலந்துகொண்டது. இதில் எனக்கொன்றும் ஆச்சரியம் இல்லை.''

'' அட, மேலே கேளுங்கள் ஐயா. அதிர்ச்சியடைந்து போவீர்கள் இக்கதையைக் கேட்டு. பரஹதுல்லா மஹாத்மாகாந்தி விடுத்த கட்டளைப்படி வக்கீல் தொழிலை இன்றையிலிருந்து விட்டுவிட்டதாக அறிவித்துவிட்டார். இது மட்டுமல்ல. போலீஸ் இன்ஸ்பெக்டர் விக்ரம் சிங் வேலையை ராஜீனமா பண்ணிவிட்டார். ஊர்வலம் முடிந்த பின்னர் பெரிய பொதுக்கூட்டமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில்தான் இந்தச் செய்திகள் வெளியிடப்பட்டன. நான் போன வழியிலேயே திரும்பி ஓடிவந்துவிட்டேன். ஏனென்றால், என் உள்ளத்திலேயும் ராஜீனமா செய்துவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அங்கே அவ்வளவு உணர்ச்சி! என்ன ஆவேசம்!''

'' பரஹதுல்லா வக்கீல் தொழிலை விட்டுவிட்டாரா! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? அவருக்குத்தான் பிராக்டீஸ் நல்ல முறையில் நடந்துகொண்டிருந்ததே! போலீஸ் இன்ஸ்பெக்டர் விக்ரம் சிங்கின் விஷயம் எனக்குப் புரியவில்லை. பெரிய முரடன், வாயாடி; அவனாலே கவர்ன்மெண்ட் உத்தியோகம் செய்ய இயலாது. ஆனால் இந்த பரஹதுல்லா! என்ன தோன்றியது இவருக்கு? அவருடைய செல்வநிலைகூட அவ்வளவு சீராக இல்லை என்று எனக்குத் தோன்று கிறது!''

" அட, ரொம்ப மோசமான நிலைமை. இவனுடைய அப்பன் நெசவு செய்பவன்; ஆனால் செலவாளி. அவன் சம்பாதித்ததையெல்லாம் இவன் படிப்புக்காகவே செலவழித்துவிட்டான். அவன் சாகும்போது கடன்

வைத்துவிட்டுப் போனுன் என்று நினைக்கிறேன். இந்த பரஹதுல்லா....இவன் பிராக்டீஸ் நன்ருகத்தான் நடக்கிறது. ஆனல் இவன் சும்மா பணம் வாங்காமல் நடத்தும் கேசுகள் அதிகம். கட்சிக்காரன் கொடுத்ததை வாங்கிக்கொள்வான். பணம் கேட்டு வாங்குவது எப்படி என்று இவனுக்குத் தெரியாது. இப்போது லீடர் ஆகும் எண்ணத்திஞல் இவன் செய்யும் செலவுகளும் அதிகமாகிவிட்டன. ஸமீஉல்லாவுக்கு வேலை போய்விட்டதிலிருந்து அவன் ஊர் சுற்றிக்கொண் டிருக்கிருன். இவனுடைய கடைசித் தம்பி அலாகா பாதில் ம்யோர் இண்டர் காலேஜில் படித்துக்கொண் டிருக்கிருன். இவனுக்கும் மூன்று குழந்தைகள். இரண்டு பெண்டாட்டிகள். இத்தனையும் இருக்க, இப்போது வக்கீல் தொழிலை விட்டுவிட்டு பட்டினி கிடப்பான் போலும். முட்டாள்தனம்.''

'' அந்த மீட்டிங்கில் என்ன என்ன நடந்தது?'' கங்கா பிரஸாத் கேட்டான்.

'' அட, அது மீட்டிங்கா, ஒரே குழப்பம். நான் புத்தூ லாலுடைய கள்ளுக் குத்தகையைப் பற்றி மேற்பார்வை செய்ய அவன் கடைப்பக்கம் போயிருந்தேன். வீடு திரும்பும்போது சிறிது தூரம் சென்று என் தாங்கா நின்றுவிட்டது. எதிரில் ஒரு பெரிய ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஏறக்குறைய அரை மணி நேரம் பாதை ஓரத்தில் ஒதுங்கி நிற்கவேண்டி வந்தது. அப்போதுதான் அந்த ஊர்வலம் முடிவடைந்தது. அங்கிருந்து வீட்டுக்குப் போனேன். சிறிது இளைப்பாறினேன். ஆடை மாற்றிக்கொண்டேன். அதற்குப் பிறகு உங்கள் வீட்டுப்பக்கமாகப் புறப் பட்டேன். பாருங்கள், அப்போ என்ன நடந்ததென்ருல், நான் அடாலா மசூதியின் அருகில் வந்தபோது அங்கே

23

ஒரு மீட்டிங் நடந்துகொண்டிருந்தது. என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டுதான் போகலாமே என நினைத்தேன். தாங்காவிலிருந்து இறங்கி நானும் கூட்டத்தில் சேர்ந்துகொண்டேன். அப்போது பரஹதுல்லா கூட்டத்துக்குத் தலைமை வகித்துக் கொண்டிருந்தார். அவருக்கு இடமும் வலமுமாக கதராடை அணிந்து பத்து பதினஞ்சு பேர் உட்கார்ந் திருந்தனர். அவர்களில் சிலர் காங்கிரஸ்காரர்கள்; சிலர் ஜமையத் உலேமா அங்கத்தினர்கள். இந்த பரஹதுல்லா வும் கதராடை அணிந்துகொண்டிருந்து சொற்பொழிவு செய்துகொண்டிருந்தான். கல்கத்தா காங்கிரஸில் என்ன என்ன நடந்தது என்று சொல்லிவிட்டு, ஓராண்டுக் குள் நாட்டுக்கு சுயராஜ்யம் வாங்கித்தருவேன் என்று காந்திஜி வாக்களித்துள்ளதாகச் சொன்னன். கிலாபத் லீக் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதென்றும், மௌலானா முகம்மதலியும் மௌலானா சௌகத்அலியும் காங்கிரஸ் தலைவர்கள் ஆகிவிட்டனர் என்றும் சொன்னன். பின்னர் அவன் மஹாத்மா காந்தியின் ஆணையால் வக்கீல் தொழிலை விட்டுவிடுவதாகச் சொன்னன். ஜனங்கள் அவனை மிகவும் பாராட்டி ஞர்கள்; கைதட்டிஞர்கள், பூமாலைகள் போட்டனர். இதன் பிறகு அந்த விக்ரம்சிங் வந்தான். அவனும் கதராடை போட்டுக்கொண்டிருந்தான். அவன் ஒத்துழையாமையைப்பற்றி நீண்டதொரு சொற் பொழிவு செய்துவிட்டு, தான் சர்க்கார் உத்யோகத்தை ராஜீனமா செய்வதாகக் கூறினன். எனக்கு ஒரே அதிர்ச்சி. எனக்கும் மனதில் உணர்ச்சிப்புயல் வீசத் தொடங்கியது. எனக்கு பயமாகப் போய்விட்டது; நானும் ஏதாவது சொற்பொழிவு செய்யத் தொடங்கி விடுவேனே என்று நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன்."

கங்காபிரஸாத் சிரித்தான். "ரொம்ப புத்திசாலித் தனத்தோடு வேலைசெய்தீர் அலீரஜாஸாஹெப். நீர் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகு காட்டி ஓடிவிட்டீர்கள்!"

கங்கா பிரஸாத் அன்று வீட்டில் தனியாக இருந்தான். ஜ்வாலா பிரஸாத் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு மாகமேளாவில் ஸ்நானம் செய்வதற்காக பதினைந்து நாட்களுக்கு அலாகாபாத் போயிருந்தார்.

இயக்கம் கிளர்ந்தெழுந்தது மிகவும் வேகத்தோடு! மறியல் நடைபெற்றது. ராட்டைகள் சுழற்றப்பட்டன. கதர், சுதேசிப் பொருள்களுக்குப் பிரசாரம் முழங்கப் பட்டது. வெளி நாட்டுப் பண்டங்கள் மறுக்கப்பட்டன. ஊர்வலங்கள் சென்றன; வெளிப்படையாக சர்க்காரைத் தூற்றினர். வெள்ளைக்காரர்களை வைதனர். ஜௌன்பூரில் இந்த இயக்கத்தை அடக்கும் பொறுப்பைக் கலெக்டர் கங்கா பிரஸாதிடம் ஒப்படைத்திருந்தார். அவன் மிகுந்த ஈடுபாடுடன், சிறிதும் கருணையற்ற முறையில் தன் கடமையைச் செய்யலானான். ஜௌன்பூரில் ஜெயில் நிறைந்துவிட்டது. பெரிய பெரிய அபராதத் தொகைகள் விதிக்கப்பட்டன. ஜௌன்பூரிலிருந்த தொண்டர்கள் பெரும்பாலோர் ஜெயிலில் அடைபட்டிருந்தனர்.

8

நவல் பாடிக்கொண்டிருந்தான்.

" சொல்லுகின்றனர் கராச்சிக் கைதிகள்,
செல்லுவோம் சிறை இரண்டு ஆண்டுக்கு!"

அதன்மேல் வித்யா கொச்சை மொழியில் சொன்னாள்: "முகம்மதாலி அம்மா சொன்னாளே!" அடுத்த அடி அவளுக்கு மறந்துவிட்டது. ஆனால் நவல் அதனைப் பூர்த்தி செய்தான். "உயிரைப் பிள்ளாய்! கிலாபத்துக்குக் கொடு!"

ஞானபிரகாஷ் காங்கிரஸ் கமிட்டி ஆபீஸுக்குப் போவதற்காக உடை அணிந்துகொண்டிருந்தார். அவர் சிரித்தவாறே நவல் முதுகில் ஒரு அடி கொடுத்தார். "அப்பன் ஜாயிண்ட் மாஜிஸ்ட்ரேட் ஆகிவிட்டான்; பிள்ளை புரட்சிப் பாட்டுப் பாடுகிறான்! அதற்குள் வித்யா ஓடிவந்து ஞானபிரகாஷின் கால்களைக் கட்டிக் கொண்டாள். "தாத்தா, அந்த பொம்மையைக் கட்டாயம் வாங்கி வரணும்! நாளைக்குப் பக்கத்து வீட்டு மாலதியின் பொம்மைக்குக் கல்யாணம். நானும் என் பொம்மைக்குக் கல்யாணம் பண்ணப்போறேன்!"

அந்த நேரத்தில் ஜ்வாலா பிரஸாத் பூசையை முடித்து விட்டு எழுந்தார். ஞானபிரகாஷ் புறப்படவிருப்பதைப் பார்த்து அவர் சொன்னார்: "அட, இன்று இவ்வளவு சீக்கிரமாகப் போகிறாயா! பத்து மணிதானே அடிச்சிருக்கு? என்ன விசேஷம்?"

"என்ன விசேஷம் என்று சொல்லுவது அண்ணா; சர்க்கார் காங்கிரஸின் வாலண்டியர் படையைச் சட்ட விரோதமானதென்று தடை விதிக்கப்போவதாகக் கேள்வி. இதைப்பற்றி நாங்கள் யோசிக்கவேண்டியிருக் கிறது. இதைத் தவிர இந்தக் காங்கிரஸ் இயக்கத்தை எவ்வாறு வலுப்படுத்தவேண்டும் என்பதைப் பற்றியும் யோசிக்கவேண்டும்."

ஜ்வாலா பிரஸாத் உட்கார்ந்துகொண்டு கேட்டார்—"எத்தனை நாள் நடைபெறும் உன்னுடைய இந்தக் காங்கிரஸ் இயக்கம்?"

"இப்போதானே ஆரம்பித்திருக்கிறது. இது இந்த இயக்கத்தின் முதல் கட்டம். புரிந்ததா? இன்று சர்க்காரின் ஜெயில்கள் நிறைந்துவிட்டன. எவ்வளவுக் கெவ்வளவு இந்த இயக்கத்தை அடக்க சர்க்கார் முயலுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இந்த இயக்கம் வலுவடைந்துகொண்டே போகும்."

ஜ்வாலா பிரஸாத் ஒப்புக்கொண்டார். "ஆம், உன்னுடைய இயக்கம் மும்முரமாக நடப்பது உண்மைதான். ஆனால் இதற்கு முஸ்லிம்களினால் தான் வலிமை உண்டாகி இருக்கிறது. மஹாத்மா காந்தியின் யோசனை சிறந்ததென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அலி சகோதரர்கள் கைதுஆனதால் நாட்டில் ஏதோ தீ மூண்டு விட்டதுபோல் ஆகிவிட்டது."

"ஆம். மக்கள் மிக வேகமாக விழிப்படைந்து வருகின்றனர்" ஞானபிரகாஷ் பதில் கூறினார்.

இதற்கிடையில் கங்கா பிரஸாத் மெள்ள வந்து பேசாமல் ஒரு பக்கமாக உட்கார்ந்துகொண்டான். அவனால் சும்மா இருக்க முடியவில்லை. "சித்தப்பா, மக்கள் விழித்துக்கொள்ளவும் இல்லை, தூங்கவும் இல்லை. சில நபர்களே, ஏதோ அதிருப்தி அடைந்துள்ளவர்கள், இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இப்போது இந்த இயக்கம் முடிவடையும் நேரம் வந்துவிட்டதென்று எனக்குத் தோன்றுகிறது. காங்கிரஸ் தொண்டர் படை ஒழிந்துவிடப்போகிறது. ஜெயிலுக்குப் போகக்கூடிய வாலண்டியர்களின் எண்ணிக்கை முடிவடைந்து விட்டதாக நினைக்கிறேன். இனி, ஏதோ தீமூண்டது போல் உங்களுக்குக் காணப்படுகிறதே, அது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுகூலமானது. இந்தத் தீயின் காரணமாக மக்கள் ஹிம்சையில் இறங்குவார்கள். மக்கள் எப்போது ஹிம்சையில் இறங்குகிறார்களோ அப்போதே நசுக்கப்

பட்டுவிடுவார்கள்."

கங்கா பிரஸாத் இயக்க நிலைமையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பியிருந்தான். ஜௌன்பூரிலிருந்து அவனுக்குக் கான்பூருக்கு மாற்றலாகியிருந்தது. ஒரு ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டின் ஸ்தானத்தில் தாற்காலிக மாக நியமிக்கப்பட்டிருந்தான். இந்த நியமனம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முக்கிய காரணம் என்ன வென்றால், ஜௌன்பூரில் இந்த இயக்கத்தை அடக்கி விடுவதில் கங்கா பிரஸாதுக்கு நல்ல வெற்றி கிடைத் திருந்தது. கான்பூரில் காங்கிரஸுக்குப் பணம் பெருவாரி யாகக் கிடைத்துவந்தது. அதனால் கங்கா பிரஸாத் கான்பூரில் இந்த இயக்கத்தின் வேர்களைக் களைந்து விடுவான் என்று கருதப்பட்டது. சார்ஜ் வாங்கிக் கொள்ள அவன் கான்பூர் போய்க்கொண்டிருந்தான். கான்பூரில் தங்குவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும் வரை அவனது குடும்பம் அலாகாபாதில் தங்க வந்திருந் தனர்.

ஞானபிரகாஷ் கேட்டார்: "நீ கமிஷனரைச் சந்தித்தாயா? என்ன பேசினீர்கள்?"

"கங்கா பிரஸாத் புன்முறுவல் செய்தவாறு சொன்னான்: "கமிஷனருடன் பேச்சா? அடக்குமுறை—அடக்குமுறை—அடக்குமுறை. பிரிட்டிஷ் அரசாங்கம் இங்கே எப்படியாகிலும் நிலைபெற்றிருக்கவேண்டும். ஆதலால், இந்த இயக்கத்தை அடக்கவேண்டும்; நசுக்க வேண்டும். இன்று மாலை வண்டியில் நான் கான்பூர் போகவேண்டும்; நாளைக்கு சார்ஜ் வாங்கிக்கொள்ள வேண்டும். லட்சக்கணக்கான ரூபாய் இந்த இயக்கத்தின் பொருட்டு கான்பூரில் கிடைத்து வருகிறது. அதைத் தடுக்க உதவி செய்ய வேண்டும்."

ஞானபிரகாஷ் கவலையுடன் கூறினார்: "கங்கா, நான்

சொல்லுகின்ற வார்த்தை ஒன்றை ஏற்பாயா?"

"சித்தப்பா, அரசியலைப் பொறுத்தவரை என்னுடைய கட்சி சர்க்கார் பக்கம். அதில் எந்தப்பேச்சையும் நான் ஏற்கும்படி செய்யவேண்டாம்!" ஞானபிரகாஷ் பிறகு பேச்சை எடுக்கவில்லை. அவர் உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினர். ஆயினும் கங்காபிரஸாதினிடம் அவர் இவ்வகையான பதிலை எதிர்பார்க்கவில்லை. அவருடைய கண்களில் கவலை தோய்ந்தது.

கங்காபிரஸாத் வீட்டுக்குள் போய்விட்டார். அன்றே கான்பூர் புறப்பட ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. ஜ்வாலாபிரஸாதும் மகன் பின்னல் சென்றார். நவல் ஒரு மூலையில் பேசாமல் நின்றுகொண்டு இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தான். இப்போது அவன் ஞான பிரகாஷுக்கருகில் வந்தான். "தாத்தா, பெரியவனை பிறகு நான்கூட ஜெயிலுக்குப் போவேன், நீங்கள் கவலைப்படவேண்டாம். பாரதமாதாகீ ஜே".

ஞானபிரகாஷ் சிரித்தார். "இல்லை குழந்தை! நான் கவலைப்படவில்லை. கடவுள் கிருபையால் நீ ஜெயிலுக் குப் போகவேண்டிய அவசியமே இருக்காது. நீங்கள் எல்லாம் இந்தியாவின் சுதந்திரத்தை அனுபவிக்கப் போகிறீர்கள். சரி, ஸ்கூலுக்குப் போகவேண்டிய நேரம் ஆகிவிட்டது, புறப்படு, ராஜா".

நவலும் வித்யாவும் சண்டையிட்டுக்கொண்டே வீட் டுக்குள் போய்விட்டனர். ஞானபிரகாஷ் ஏதோ சிந்தனை செய்தவண்ணம் இருந்தார், யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்போல. அதே நேரத்தில் போர்டி கோவில் ஒரு தாங்கா வந்து நின்றது. பண்டித ஜயநாத் பாண்டேயுடன் வாலிபன் ஒருவன் வந்து இறங்கினன். ஞானபிரகாஷ் வராந்தாவிலிருந்து முன்னுக்கு வந்து இருவரையும் வரவேற்ருர். "வாருங்கள், பாண்டேஜி.

ரொம்ப தாமதம் செய்துவிட்டீர்கள்".

"ஆம், இவரைத் தேடிக் கண்டுபிடிக்க நேரமாகி விட்டது. இவர்தான் ஸ்ரீ கேந்தாலால், இவர் சம்பந்தமாகத்தான் நான் உங்களிடம் கூறியிருக்கிறேன். இந்த வருடம் இவர் எம். ஏ., பரீட்சை பாஸ் செய்திருக்கிறார். தோல் தொழிற்சாலை ஆரம்பிக்க விரும்புகிறார்".

கேந்தாலால் ஞானபிரகாஷுக்கு வணக்கம் தெரிவித்தார். பதில் வணக்கம் செய்தவாறே ஞானபிரகாஷ் சொன்னார் " வாருங்கள் அறைக்குள்."

கேந்தாலால் வேட்டியும், சொக்காயும் திறந்த கழுத்துள்ள கோட்டும் அணிந்திருந்தார். நடுத்தர உயரம், கட்டுக்கோப்புள்ள உடற்கட்டு, உருண்டை முகம், பருக்கள் நிறைந்திருந்தது, மாநிறம். தலையில் முண்டாசு அணிந்திருந்தார். வயது சுமார் இருபத்தைந்து இருபத்தாறு இருக்கும். சிறிது சங்கோசத்துடன் அவர் அறையில் நுழைந்தார். ஜயநாத்தும் ஞானபிரகாஷும் அமர்ந்தனர். ஆனால் கேந்தாலால் நின்று கொண்டே இருந்தார்—உட்காருவதற்குத் துணிவில்லாததுபோல. ஞானபிரகாஷ் சொன்னார்: "உட்காருங்கள் கேந்தாலால். ஏன் நின்றுகொண்டே இருக்கிறீர்கள் ?"

" இல்லை ஐயா! கஷ்டம் ஒன்றும் இல்லை. பண்டித்ஜீ என்னை தாங்காவில் உட்காரவைத்துக்கொண்டு அழைத்து வந்தார், நான் நடந்தே வந்திருப்பேன்.''

ஞானபிரகாஷ் எழுந்திருந்து கேந்தாலாலின் கையைப் பற்றி உட்கார வைத்தார். '' எதைப்பற்றியும் சங்கோசப் படாதீர்கள். தீண்டாமை என்ற கொள்கையை நாங்கள் விட்டுவிட்டோம். மஹாத்மா காந்தி இதற்காக சபதம் எடுத்துக்கொண்டிருக்கிறார்."

ஜயநாத் பாண்டே சொன்னார்: '' ஸ்வாமீ தயாநந்த் இதை ஆரம்பித்தார். என்ன ஞானபிரகாஷ். ஆனால் இப்

போது தான் அவருடைய தொண்டு நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. உட்கார் கேந்தாலால். நாம் எல்லாரும் ஸமானமானவர்கள்.''

கேந்தாலால் நாணிக்கோணி ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

ஞானபிரகாஷ் கேட்டார்: ''நான் கேள்விப்பட்டேன், நீங்கள் தோல் தொழிற்சாலை ஆரம்பிக்கப்போகிறீர்களாமே, வெளி நாட்டு ரீதியில்?"

ஆம், ஆரம்பிக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். ஆனால், பணம் போதவில்லை. சர்க்காருக்கு எழுதிப் போட்டு ஒரு வருடம் ஆகிவிட்டது. இங்கும் அங்கும் கடன் கேட்டேன்; ஆனால் அதிக வட்டி கேட்கிறார்கள். லாபத்திலும் பாதி பங்கு வேண்டும் என்கிறார்கள்."

ஜயநாத் பாண்டே சொன்னார்: ''மேலும் ஷரத்துக்கள் எப்படியிருக்கின்றன வென்றால், தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் பணம் போட்டவன் அதற்கு உரிமையாளன் ஆகிவிடுவான், கேந்தாலால் வெளியே தள்ளப் பட்டுவிடுவார். அல்லது சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டும். என்ன கேந்தாலால், நான் சொல்லுவது சரி தானே! ஆகவே நான் இவரிடம் இப்போது இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டாம் என்று சொன்னேன்.''

"ஆம் பண்டித்ஜீ, அந்த எண்ணத்தை விட்டுக்கொண்டிருக்கிறேன். எப்போதாவது மனதில் ஒரு வேதனை உண்டாகிறது. வெளி நாட்டிலிருந்து வரும் தோலை விட நாம் நல்ல தோல் தயார் செய்ய முடியும். ஆனால் நமக்கு வாய்ப்புக்கிட்டவேண்டும். எல்லாவிடத்திலும் குருட்டுக் கணக்குத்தான் நடந்து வருகிறது."

ஞானபிரகாஷ் சொன்னார்: ''கேந்தாலால், இந்த இயக்கத்தைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன?"

"என்ன! இந்த இயக்கமா! இதைப்பற்றி என் கருத்தென்ன இருக்கப்போகிறது? இதெல்லாம் உங்களைப் போன்றவர்களுடைய காரியங்கள். என்னைப் போன்ற தீண்டத்தகாதவர்களுக்கு இதிலெல்லாம் என்ன சம்பந்தம்? நாங்கள் ஜன்ம ஜன்மத்திற்கும் உங்களுக்கு அடிமைப்பட்டவர்கள்."

கேந்தாலாலின் குரலில் ஒருவகைக் கடுமை இருப்பதை ஞானபிரகாஷ் உணர்ந்துகொண்டார். அவர் சொன்னார்: "இல்லை கேந்தாலால், நீங்கள் உங்களைத் தீண்டத்தகாதவர் எனக் கூறுதீர்கள். உயர் ஜாதியினராகிய நாங்கள் மனிதனுடைய கழுத்தை நெரித்துக் கொடுமைப்படுத்தியுள்ளோம். அதன் விளைவாகவே ஆயிரம் வருஷம் அடிமைத்தனத்திலேயே இருந்து கழிந்தோம். இன்று நம் நாட்டின் ஒவ்வொரு குழந்தையும் தீண்டத்தகாததாக அவமதிக்கப்படுகிறது."

கேந்தாலால் ஞானபிரகாஷின் பேச்சைப் புரிந்து கொள்ளவில்லைபோலும், புரிந்துகொள்ளவும் அவன் விரும்பவில்லை. அவன் சொன்னான்: "ஆம், ஆம், நீங்கள் என்னை ஏன் அழைத்தீர்கள்?"

"கேந்தாலால், நாட்டில் இவ்வளவு பெரிய இயக்கம் நடைபெறுகிறது என்பதை நீர் அறிவீர். இதில் நீங்கள் ஏன் பங்கு பெறக்கூடாது?"

"எப்படிப்பட்ட இயக்கம், என்ன பங்கு?" ஏதோ நடக்கிறது, அது தெரியும். ஆனால் இது என்ன என்பது எங்களுக்கு அறிவிக்கப்படவுமில்லை, நாங்களும் அறிந்துகொள்ளவில்லை. ஒருவேளை இது எங்கள் மூளைக்கு எட்டவும் எட்டாது. எங்கள் மூளைக்கு எப்படி எட்டும்? படித்தவர்கள் அல்ல நாங்கள். நாங்கள் படித்தாலும்கூட அதனால் என்ன ஆகிவிடப்போகிறது? நானும்தான் படித்திருக்கிறேன். ஆனால் எனக்கு

எங்குமே வேலை கிடைக்கவில்லை. ஜனங்கள் என்னைத் தொடவே தயாராக இல்லாதபோது என்னை ஆபீஸில் தங்களோடு எப்படி உட்காரவைத்துக்கொள்ளுவார்கள்? அது ஒரு மிஷன் ஸ்கூல். அதனால் எப்படியோ படித்தேன். ஒருவராலும் தடுக்க இயலவில்லை. இல்லாது போனால் என்னைப் படிக்கக்கூட விட்டிருக்க மாட்டார்கள்".

அதேநேரத்தில் கங்காபிரஸாத் அறைக்குள் வந்தான். அவன் கோட்டும் பாண்ட்டும் அணிந்திருந்தான். கேந்தாலால் பதற்றமடைந்து எழுந்து நின்றான்; குனிந்து வணக்கம் செய்தான். கங்காபிரஸாத் தலையை அசைத்து வணக்கத்திற்குப் பதில் கூறியபடியே சொன்னான்: "உட்கார், ஏன் நிற்கிறாய்?"

கேந்தாலால் மீண்டும் உடலைக் கோணிக்கொண்டு உட்கார்ந்தான். ஞானபிரகாஷ் அறிமுகம் செய்து வைத்தார். "இவர் கேந்தாலால். எம். ஏ. பாஸ் செய்திருக்கிறார். தோல் தொழிற்சாலை ஆரம்பிக்க விரும்புகிறார். ஏனெனில் ஜாதியில் தோல் தொழில் செய்பவர்."

திடீரென்று கங்கா பிரஸாத் கொதித்தெழுந்தான். "சக்கிலியா! நீ இந்த அறையில் எப்படி நுழைந்தாய்? வெளியே போ இங்கிருந்து, போ!"

கங்கா பிரஸாத் இவ்வாறு செய்வான் என ஞான பிரகாஷ் கற்பனைகூடச் செய்யவில்லை. அவர் கங்கா பிரசாதின் கையைப் பிடித்துக்கொண்டு சொன்னார்: "இதெல்லாம் என்ன பிதற்றுகிறாய் கங்கா? நான்தான் இவரை அழைத்தேன், இவரோடு பேசுவதற்காக. இந்த இயக்கத்தில் தீண்டாதார் கலந்துகொள்ளவில்லை. நாட்டில் இவர்களுடைய எண்ணிக்கை ஆறு கோடி, இவர்களுடைய ஒத்துழைப்பு நமக்குத் தேவை".

ஞானபிரகாஷின் வார்த்தையைக் கேந்தாலால் மறுத்தான். அவன் எழுந்து நின்றுகொண்டிருந்தான். "ஆம், இப்போது எங்களுடைய ஒத்துழைப்பைப் பெறுங்கள், பிறகு எங்களை அடியோடு அழித்துவிடுங்கள். எங்களுக்கு உட்காரவும் அதிகாரம் அளிக்காத உங்களோடு பேசத்தான் எப்படி இயலும்? இயக்கம் நடத்துங்கள், சுயராஜ்யம் பெறுங்கள், ஆனால் எங்களை உயிருடன் வாழவிடுங்கள். நாங்கள் உங்களுக்கு அடிமையாக வேலை செய்யவே பிறந்திருக்கிறோம்." பின்னர் கேந்தாலால் எவ்விதபதிலையும் எதிர்பாராது அங்கிருந்து போய்விட்டான்.

கேந்தாலால் போன பிறகு ஞானபிரகாஷ் சொன்னார்: "நான் எண்ணியிருந்தேன்! நீ இந்தப் புதிய யுகத்தின் மனிதன் என்று, படித்தவன், உதார சிந்தனை கொண்டவன், நீ இதை எல்லாம் செய்கிறவன் அல்ல என்று. ஆனால் நான் நினைத்தது தவறு என்று தெரிகிறது. ஆனால் இந்த ஆறு கோடி தீண்டாதாரை நாம் இழக்க முடியாது."

கேந்தாலால் சென்றதுமே கங்கா பிரஸாதுக்குத் தான் தவறான காரியம் செய்துவிட்டதாகத் தோன்றியது. ஆயினும் தான் செய்த காரியம் சரியானதென்று ஸ்தாபித்தல் அவனுடைய பெரும் கடமையாகிவிட்டபடியால் அவன் யோசித்துச் சொன்னான்: "ஆம், இந்த ஐந்தாறு கோடி தீண்டாதார், ஏழெட்டு கோடி முஸ்லிம்கள், மொத்தம் பதிமூன்று பதினான்கு கோடி மக்கள். அப்போது, சித்தப்பா, இந்த பதிமூன்று-பதினான்கு கோடி மக்களுடைய சிக்கல்களைத் தீர்த்த பிறகே நீங்கள் சுயராஜ்யத்தைப்பற்றி யோசனை செய்யுங்கள். எனக்கோ, சுயராஜ்யமும் வேண்டியதில்லை, இந்த மக்களுடைய பிரச்னையைத் தீர்க்கவும்

வேண்டியதில்லை. நான் இன்று மாலை வண்டியில் கான்பூர் போகிறேன்."

ஜயநாத் பாண்டேயும் எழுந்து நின்றார். அவர் ஞான பிரகாஷிடம் கூறினார்: "நீங்கள் கேந்தாலாலைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். அவன் நம்முடையவனே." பிறகு அவர் கங்கா பிரஸாதிடம் கூறினார்: "கங்கா பிரஸாத்ஜீ முஸ்லிம்களது பிரச்னையை நாங்கள் தீர்த்துவிட்டோம். தீண்டத்தகாதாருடைய பிரச்னை நம்முன் இருக்கிறது. இதையும் தீர்ப்பதற்கு மஹாத்மா காந்தி கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். இதோ இப்போது கேந்தாலால் இங்கிருந்து போய்விட்டதனால் தீண்டாதார் நம்மை விட்டு அகன்றுவிட்டனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் அவன் அகன்று போக முடியாது. அவன் நம்முடையவன்; நம்முடன் ஒத்துழைப்பான்."

ஜயநாத் சொன்னதின் விளைவாக கங்கா பிரஸாதின் மனதில் என்ன தோன்றியது என்று சொல்லுவது கடினம். ஜயநாத் போன பிறகு கங்கா பிரஸாத் ஞான பிரகாஷிடம் சொன்னான்: "சித்தப்பா, உங்களுடைய இந்த இயக்கம் வெற்றி பெறாது. இது நான் கூறமுடியும். சுதந்திரம் பெறும் தகுதியைப் பெற நம் நாட்டிற்கு இன்னும் பல நூற்றாண்டு காலம் பிடிக்கும். சுதந்திரம், சமத்துவம் என்ற கொள்கைகள் எல்லாம் நமக்கு ஆங்கிலேயரிடமிருந்தும், ஆங்கிலக் கல்வியின் வாயிலாகவும் தான் கிடைத்தது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். அப்படியாயின்,நாம் முதலில் இந்தக் கல்வியைப் பூரணமாகப் பெறவேண்டும். அப்புறம்தான் சுதந்திரத்தைப் பற்றி யோசிக்க இயலும். இந்த இயக்கத்தைப் பொறுத்தமட்டில், இது எந்த திட்டமும் இல்லாது, எவ்வித ஆயத்தமுமின்றியே தொடங்கப்பட்டு விட்டது. ஆகவே இது தோல்வியடைவது நிச்சயம்."

ஞானபிரகாஷ் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவர் அப்போது எவ்வித விவாதத்திலும் இறங்கும் 'மூடி'ல் இல்லை போலும். அவர் சொன்னார்: "அப்படியானால் நீ இன்று மாலை போவது நிச்சயமாகிவிட்டது. ஆனால் கங்கா, உன்னுடைய உள்ளத்தில் இந்த இயக்கத்தைப் பற்றி அனுதாபம் பிறக்குமாறு முயற்சி செய்."

கங்காபிரஸாத் கான்பூர் சென்ற அடுத்த நாளே 'சார்ஜ்' பெற்றுக்கொண்டார்.

குளிர் தீவிரமாகியது. கங்காபிரஸாதுக்கும் புதியதொரு கம்பளி 'ஸூட்' வேண்டுமெனத் தோன்றியது. கான்பூர் வந்ததும் உயர் சமுதாயத்தில் அவனது தொடர்பும் வளர்ந்து வந்தது. கான்பூரில் மில்கள் பல இருந்தபடியால் அதிகமான எண்ணிக்கையில் ஆங்கிலேயர்கள் இருந்தனர். அவர்களோடு அவன் பழகவேண்டியிருந்தது. அவனுடைய பங்களா சிவில் லைன்ஸில் இருந்ததால் நவலை அவன் கான்வென்டில் சேர்த்திருந்தான். அன்று கச்சேரி வேலையை முடித்துக்கொண்டு நேராக நகரத்தைநோக்கி, துணிவாங்குவதற்காகப் போனான்.

கங்காபிரஸாத் துணியை வாங்கிக்கொண்டு வீட்டை நோக்கி வந்தபோது கடைத்தெருவில் கூட்டம் குறைந்திருந்தது. வீட்டை அடைந்ததும் கலெக்டரிடமிருந்து வந்திருந்த செய்தியொன்றைக் கண்டான். காலையில் ஏழுமணிக்குத் தன் பங்களாவில் வந்து சந்திக்கும்படியும், ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டும் என்றும் அந்தச் செய்தியில் கண்டிருந்தது.

கங்காபிரஸாத் கலெக்டரிடம் சென்றபோது அவர் வராந்தாவில் அமர்ந்து தேனீர் அருந்திக்கொண்டிருந்தார். கங்கா பிரஸாதுக்காகத் தேநீரைத் தயார் செய்தபடியே அவர் சொன்னார்: "மிஸ்டர் கங்காபிரஸாத், மிகவும் கவலைக்கிடமான செய்தி. நேற்று பம்பாயில்

பிரிட்டிஷ் பட்டத்து இளவரசர் வந்தபோது கூட்டத்தின் மேல் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டி வந்ததாம்.''

கங்காபிரஸாத் திடுக்கிட்டார். ''கூட்டத்தின்மேல் துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டிவந்ததா? இது மிகவும் கெடுதலானது. இளவரசர் என்ன எண்ணி யிருப்பார்?''

கலெக்டர் சொன்னர்: "வேல்ஸ் இளவரசர் என்ன எண்ணியிருப்பார் என்பதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னே இந்த இயக்கம் இவ்வளவு வலிமை எவ்வாறு பெற்றுவிட்டது என்பதே. யுவராஜர் வருகையை ''பகிஷ்காரம்'' செய்வார்கள் என்பது நாம் அறிந்ததுதான். ஆனல் இந்த 'பாய்காட்' இவ்வளவு தீவிரமாக இருக்கும், ஹிம்சை நிறைந்ததாக இருக்கும் என்பதை நாம் கற்பனே செய்யவில்லே. இங்கே நகரத்தின் நிலே என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?"

''நிலேமை கான்பூரில்கூட அவ்வளவு நன்ருக இல்லே. நேற்று மாலே கொஞ்சம் துணிவாங்க நான் நகரத்துக்குள் போயிருந்தேன். மூல்கஞ்ச் நாற்சந்தியில் வெளிநாட்டுத் துணிகளைக் குவித்து "ஹோலி" போல் கொளுத்தினர்கள். மிகவும் ஆவேசம் நிறைந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. கடைத்தெருவில் ஒருவகை அச்சம் குடிகொண்டிருக்கிறது. ஜனங்கள் தங்கள் தங்கள் கடைகளிலிருந்து வெளிநாட்டுத், துணியை அகற்றிக் கொண்டிருக்கின்றனர். எப்போ என்ன நடக்கும் என்று தெரியவில்லே. வெளிநாட்டுத் துணியே கடைத் தெருவில் தென்படவில்லே. இந்த சுதேசி இயக்கம் தீவிரமாகி வருகிறது. வெகு விரைவில் வெளிநாட்டுத் துணிக்கடைகளில் மறியல் செய்வார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது".

"அப்படியா!" கலெக்டர் சிறிது வருத்தத்தோடு கூறினர்: "மிஸ்டர் கங்கா பிரஸாத், சர்க்காரிடமிருந்து நமக்கு ஆர்டர் கிடைத்துள்ளது, நாம் ஜாக்கிரதையாக விழிப்புடன் இருக்கவேண்டும் என்று. இளவரசர் மதராஸ் வழியாக கல்கத்தா செல்கிறார். டிஸம்பர் இருபத்தைந்தாம் தேதி கல்கத்தாவில் கிறிஸ்துமஸ் கொண்டாடுவார். ஜனவரி மாதத்தில் வட இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார். இங்கு பம்பாயில் நடந்தது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுதவாறு நாம் கவனமாக இருக்கவேண்டும். அதற்காக பூரண ஏற்பாடுகள் செய்ய வேண்டும்."

"ஆமாம். செய்ய வேண்டியதுதான். ஆனால் அந்த ஏற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும்?" கங்கா பிரஸாத் கேட்டார்.

"காங்கிரஸ் தலைவர்களுடைய முக்கியத் தொண்டர்களுடைய ஒரு பட்டியல் நாம் தயார் செய்யவேண்டும். டிசம்பர் கடைசி வாரத்தில் இவர்களைக் கைது செய்ய வேண்டும். காங்கிரஸ் வாலண்டியர் படை ஒன்று இருக்கிறதே, அதற்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்று நாம் கண்டுபிடிக்கவேண்டும்." கலெக்டர் சிறிது மௌனமாக இருந்து பிறகு கேட்டர்: "மிஸ்டர் கங்கா பிரஸாத்! இங்கே காங்கிரஸுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்று நீ ஊகிக்க முடியுமா? கான்பூரில் பெரிய ஜமீன்தார்களும் தாலுக்காதார்களும் இல்லையே?"

கங்கா பிரஸாதின் சிந்தனையில் மூல்கஞ்சிலுள்ள ஜவுளிக்கடைக்காரர் சொன்ன சொற்கள் எதிரொலித்தன. "சுதேசி இயக்கத்தினல் நாட்டுத்துணி மில்களுக்கு அதிர்ஷ்டம் அதிகமாகிவிட்டது!" பின்னர் அவன் சிறிது தயக்கத்துடன் சொன்னன்: "நான் என்ன நினைக்கிறேன் என்ருல், இயக்கத்தினல் நேரடியாக யாருக்கு

லாபம் கிடைக்குமோ அப்படிப்பட்ட மில் முதலாளிகளிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் தான் அவர்களுக்குப் பணம் கிடைக்கிறது என்று நான் நினைக்கிறேன்.''

கலெக்டர் கவனத்துடன் கங்கா பிரஸாதைப் பார்த்தார். ''மிஸ்டர் கங்கா பிரஸாத், நீ உண்மையிலேயே புத்திசாலி. இவ்வளவு சாதாரணமான விஷயம் என் மூளைக்கு ஏன் எட்டவில்லை என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பம்பாயிலும் கல்கத்தாவிலும் இந்த இயக்கம் ஏன் தீவிரமாகிக்கொண்டு வருகிறது, மற்ற இடங்களில் அடங்கிவிட்டது என்பது இப்போது விளங்கிவிட்டது. கான்பூரும் வியாபாரிகள் நிறைந்த நகரம். ஆயினும் இங்குள்ள மில் முதலாளிகள் அதிகம்பேர் ஆங்கிலேயர்கள். அரசரிடம் விசுவாசம் கொண்டவர்கள். கங்கா பிரஸாத், எந்தெந்த மில் முதலாளி அல்லது வியாபாரி காங்கிரஸோடு தொடர்பு வைத்திருக்கிறான் என்று சிறிது கவனமாக இருந்து கண்டுபிடியுங்கள்!''

அன்று மாலை கங்கா பிரஸாத் லட்சுமீசந்தின் வீட்டுக்குப் போனான். லட்சுமீசந்த் நகரத்திலிருந்த தன் வீட்டில் ஆபீஸ் வைத்துக்கொண்டிருந்தான், வசிப்பதற்காக சிவில் லைன்ஸில் ஒரு பங்களா கட்டியிருந்தான். லட்சுமீசந்தின் பங்களா கங்கா பிரஸாதின் பங்களாவிலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தொலைவில் இருந்தது. கங்கா பிரஸாத் அங்கு போனபோது இரவு நேரம். லட்சுமீசந்த் வெளிப்பக்கமாக இருந்த அறையில் அமர்ந்து ஆபீஸ் பைல்களைப் பார்த்துக்கொண்டிருந்தான், இரண்டு குமாஸ்தாக்கள் அவனுக்கு உதவியாக இருந்தனர். கங்கா பிரஸாதின் ''சீட்டை''க் கண்டதுமே அவன் தன் குமாஸ்தாக்களிடம் ''காலையில் வாருங்கள், எல்லாவற்றையும் எடுத்து ஜாக்கிரதையாக வையுங்கள்'' என்று சொல்லியவாறு தான் பார்த்துக்கொண்டிருந்த

பைல்களை மூடிவிட்டான். பிறகு வராந்தாவில் வந்து சொன்னான்: "அடே நீயா, கங்கா பிரஸாத். "விசிட்டிங் கார்டு" அனுப்பவேண்டிய தேவை என்ன? தன் வீட்டிலேயே இப்படிக்கூட செய்வார்களா? வா!"

லட்சுமீசந்த் கங்கா பிரஸாதை அழைத்துக்கொண்டு வரவேற்பு அறையில் உட்காரவைத்தான். "இப்போது நீ எங்கே இருக்கிறாய்? இங்கே கான்பூருக்கு எப்போது வந்தாய்? என்ன வேலையாக?"

கங்கா பிரஸாத் லட்சுமீசந்தின் மாறுதலைப்பற்றிச் சிந்தித்தார். தாய் ஜயதேயி மரணப் படுக்கையில் கிடக்கும் போது அவளைத் திட்டிய, கங்கா பிரஸாதையும் ஜ்வாலா பிரஸாதையும் அவமதித்த அந்த லட்சுமீசந்தோடு இப்போது மிகவும் பரிவுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் லட்சுமீசந்தை ஒப்பிட்டுப் பார்த்தான். பிறகு அவன் தனது உள்ளத்திலேயே தோன்றிய ஒரு விசித்திரமான மாறுபாட்டையும் உணர்ந்தான். அவனுள் இருந்த மனத்தாங்கல் மறைந்துவிட்டது, முகத்தில் புன்முறுவல் தோன்றியது. அவன் குரல் மென்மை பெற்றது. "ஏழு நாள் ஆச்சு. இங்கே கான்பூரில் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் ஆக வேலைபார்த்துக்கொண்டிருக்கிறேன். வந்ததும் வராததுமாக ஏகப்பட்ட அலுவல். புதிய ஊர், புதிய பொறுப்பு, புதிய பிரச்னைகள். இன்று அண்ணன், லட்சுமீசந்தைப் போய்ப் பார்த்துவரலாம் என்று நினைத்தேன். மிகவும் சிரமப்பட்டுக் கொஞ்சம் ஓய்வு பெற்று இங்கே வந்தேன்."

"நல்வரவு! நல்வரவு! என் தம்பி கங்கா கான்பூரில் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் ஆகிவிட்டான்! இதுவரை இந்தியன் எவனும் அந்த ஆசனத்தில் உட்கார்ந்ததில்லை! எனக்கு எவ்வளவு பெருமை!" லட்சுமீசந்த் மிகவும் உணர்ச்சியோடு சொன்னான்: "உன் அண்ணிக்கும்

செய்தி தெரிவிக்கிறேன். எத்தனை முறை உன்னைப்பற்றி அவள் என்னைக் கேட்டாள் தெரியுமா? ஆனால் எனக்கு நீ இருக்கும் இடம் தெரியவில்லை. நீயும் கடிதம் போடுவதில்லை!" இதைச் சொல்லிவிட்டு லட்சுமீசந்த் வீட்டுக்குள் போனான். ஐந்தே நிமிஷத்தில் ராதையையும் அழைத்துக் கொண்டு வந்தான்.

ராதா மிகவும் பெருத்திருந்தாள். பார்க்க விகாரமாகத் தோன்றினாள். நகைகளைச் சுமந்துகொண்டு தன் முன் நின்ற சிறிது வயதான பெண்ணை கங்காபிரஸாத் முதலில் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. பிறகு அவன் எழுந்திருந்து சொன்னான்:

''அண்ணி! ராம்—ராம்!''

''சௌக்கியமாக இரு கங்கா லாலா! உன்னைப்பற்றி ரொம்பக் குறை! அட, வருவதற்கு முன்னதாக செய்தி அனுப்பக்கூடாது? ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பியிருப்பேனே. எங்கே தங்கி இருக்கிறாய்? சௌக்கியமாக இருக்கிறாயா?"

லட்சுமீசந்த் சிரித்துக்கொண்டே சொன்னான்: ''கான்பூர் மாஜிஸ்டிரேட் ஆகி வந்திருக்கிறாராக்கும் இவர். சுக சௌக்கியத்திற்கு என்ன குறைவு! 'ஜம்' மென்று பெரிய பங்களா, திரும்பின இடமெல்லாம் வேலைக்காரர்கள். நம்மைப் பார்க்கலாம் என்று வந்தாரே, இதுவே பெரிது. சரி கங்கா, உன் மனைவியையும் அழைத்து வந்திருக்கிறாயா? சித்தப்பா, சின்னம்மா எல்லாம் சௌக்கியம்தானே! அலாகாபாதில் அவர் ஒரு வீடு கட்டியிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். பென்ஷன் பெற்ற பிறகு அங்கேயே தங்கிவிட்டார்போலிருக்கு!"

''ஆம் லட்சுமீ அண்ணா. அப்பா அலாகாபாதில் பங்களா கட்டிக்கொண்டிருக்கிறார், ஜார்ஜ் டவுனில்!

ஆனால் அங்கே அப்பாவும் அம்மாவும் தனியாக என்ன இருப்பது! ரொம்பவும் சொல்லி அவர்களை நான் என்னுடனேயே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். என் குடும்பம் இங்கேதான் இருக்கிறது. அப்பா உங்கள் வீட்டுக்கு வருவதாக இருந்தார். ஆனால், இன்னும் வீட்டில் சாமானை எல்லாம் சரிவர எடுத்து வைக்கவில்லை. அதுவும் தவிர, என்னிடம் இருப்பது ஒரு தாங்கா. அது என் அலுவலுக்கு எடுத்துப்போக வேண்டியிருக்கிறது. ஆகவே அவர் வர இயலவில்லை. ஞாயிற்றுக்கிழமை வருவதாக என்னிடம் சொன்னார்."

"அட, இன்னும் தாங்காவைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறாயா! இதற்குள் ஒரு கார் வாங்கியிருக்க வேண்டாம்? தாங்கா—கீங்கா எல்லாம் சாதாரண டிப்டி கலெக்டர்கள் உபயோகிப்பது. நீ இப்போது ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் அல்லவா?" பிறகு சிறிது யோசனைசெய்து அவன் சொன்னான்: "நான் நாளை மாலை உன் வீட்டுக்கு வருகிறேன், சித்தப்பாவைப் பார்க்க. அவரையும், உன் குடும்பத்தினரையும் என்னோடு இங்கே அழைத்து வருகிறேன். உன் மனைவி குழந்தைகள் அனைவருக்கும் சாப்பாடு இங்கே. உனக்கு ஓய்வு கிடைத்தால் நீயும் வந்துவிடவேண்டும்." பிறகு லட்சுமீ சந்த் புன்முறுவல் செய்தான். "ஆனால் இங்கே நம்ப வீட்டில் சைவ உணவுதானப்பா!"

கங்கா பிரஸாத் சிரித்தான். "இல்லை, நாளைக்கு எஸ். பி. வீட்டில் டின்னர் இருக்கிறது. அப்புறம் எப்பொழுதாவது வருகிறேன்."

கங்கா பிரஸாத் வீட்டுக்கு வந்து ஜ்வாலா பிரஸாதிடம் தான் லட்சுமீசந்த் வீட்டுக்குப் போன கதையைச் சொன்னான்: "நாளை மாலை அவன் உங்களையும் எல்லாரையும் அழைத்துக்கொண்டு போவதற்காக

வருவான். மிகவும் கரிசனையோடு பேசினுன்."

ஜ்வாலா பிரஸாதின் முகம் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டியது. "கங்கா, நீ அவன் வீட்டுக்குப் போயிருக்கக் கூடாது !"

"நான் என்ன செய்வது அப்பா! கான்பூரில் எல்லா ரையும்விட பெரிய இந்திய மில் முதலாளி; முக்கியஸ்தன்; 'ஸர்' விருது பெற்றவன். சர்க்காரில் அவனுக்குப் பெரு மதிப்பு. நான் அவனேடு நட்போடு இருந்தாகவேண்டும். நீங்கள் கவலையை விடுங்கள். எல்லாம் சரியாகிவிடும். பழைய சங்கதிகளை மறந்துவிடவேண்டும் அப்பா ! பார்க்கப்போனல் சித்தப்பா மகன்தானே அவன்! நம் மிடையே ஒரு காலத்தில் சொந்தம் இருந்ததல்லவா !"

கங்கா பிரஸாதிடம் உணர்ச்சி, தாட்சிண்யம் என்பவை இல்லையென்பதை ஜ்வாலா பிரஸாத் கண்டு உணர்ந்தவர். ஆகவே, இப்போது தன் மகன் வாயினல் இச்சொற்களைக் கூறக் கேட்டு அவருக்கு மகிழ்ச்சி உண்டாகியது. தன் மகனிடத்தில் ஒரு மாறுபாடு தோன்றியிருப்பதாகக் கண்டார். "ஆம் கங்கா, அது சரிதான். ஆனல் லட்சுமீசந்த்....ஏனே அவன் எனக்குப் பிடிக்கவில்லை. சரி, பரவாயில்லை. அவன் வரட்டும்."

அடுத்த நாள் மாலை சுமார் ஆறு மணிக்கு லட்சுமீசந்த் ஒரு புதிய ஓவர்லண்ட் காரில் கங்கா பிரஸாத் வீட்டு வாசலில் வந்து இறங்கினுன். லட்சமீசந்தின் வருகையை எதிர்பார்த்திருந்தான்போலும் கங்கா பிரஸாத். டிராயிங் ரூமில் வந்து லட்சுமீசந்த் அவனிடம் சொன்னுன்: "கங்கா, என்னேடு ஒரு நிமிஷம் இப்படி வெளியே வாயேன். ஒரு புதிய கார் இன்றுதான் வாங்கி யிருக்கிறேன், வந்து பாரேன் !"

"உங்களிடம்தான் இரண்டு கார்கள் இருக்கின்றனவே, நான் நேற்றுப் பார்த்தேன். ஆனல் இது பெரிய கார்,

அழகாக இருக்கிறது. மூன்று நான்கு மாதத்தில் நானும் கார் வாங்க எண்ணியிருக்கிறேன்.” காரைப் பார்த்துவிட்டு இருவரும் அறைக்குள் வந்து விட்டனர். கங்கா பிரஸாத் தன் தந்தையிடம் லட்சுமீ சந்த் வந்திருக்கும் செய்தியை அறிவித்தான்.

ஜ்வாலா பிரஸாத் வந்தார். லட்சுமீசந்த் எழுந்திருந்து சொன்னான்: “வணக்கம் சித்தப்பா. நீங்கள் எல்லாம் இங்கு வந்திருப்பதாக நேற்றுதான் கங்கா மூலமாகத் தெரிந்தது. ஒரு காலத்தில் நாம் எல்லாம் எவ்வளவு நெருங்கிய உறவினர்களாக இருந்தோம். அந்நாட்கள் நினைவுக்கு வந்தன. கங்காவைப் பார்த்ததும் எனக்கு உணர்ச்சி வேகத்தால் உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. என் தம்பியல்லவா! சௌக்கியம்தானே! உங்கள் உடல் நலம் நன்றாக இருக்கிறதா?”

லட்சுமீசந்த் காட்டிய பரிவினால் ஜ்வாலா பிரஸாத் உருகிவிட்டார். அவரும் க்ஷேமலாபம் விசாரித்தார். பிறகு அவர் யமுனா, ருக்மிணி, குழந்தைகள் எல்லாரையும் லட்சுமீசந்துடன் செல்வதற்குத் தயாராகும்படி சொன்னார்.

எல்லாரும் ஆயத்தமாகி வெளியே வந்தபோது கங்கா பிரஸாதும் லட்சுமீசந்தும் அரசியல் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பம்பாயில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிச் செய்தித் தாள்களில் வெளியாகியிருந்தது. அதனால் நகரத்தில் எங்கும் கொந்தளிப்பு உண்டாகி யிருந்தது. கங்கா பிரஸாத் சொல்லிக்கொண்டிருந்தான். “இந்த சுதேசி இயக்கம்—இதனாலெல்லாம் எங்காவது சுயராஜ்யம் கிடைக்குமா? இந்த சுதேசியை ஆதாரமாகக் கொண்டுதான் நாம் வாழ முடியுமா? நம் நாட்டில் சுதேசி இயக்கம் வெற்றிபெறுமளவுக்குத் தொழில்கள்தான் இருக்கின்றனவா? நாம் வெளிநாட்டுப் பொருள்களைக்

கட்டாயமாக வாங்கத்தான்வேண்டி யிருக்கும், லட்சுமீ அண்ணு !"

லட்சுமீசந்த் சொன்னுன்: ஆம் கங்கா, நீ சொல்வது சரிதான். இந்த இயக்கத்திஞல் சுயராஜ்யம் கிடைக்காது. ஆனுல் நம் நாட்டுத் தொழில்கள் வளர்ச்சியடைய வேண்டும். சுதேசியைப் பற்றிய உணர்வு மக்களிடம் தோன்றவில்லை யென்ருல் நாட்டின் தொழில் வளம் பெருகுவது முடியாமற்போகும். நம் நாட்டில் தொழில் துறை இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளது. ஆரம்ப கட்டத்தில் நாம் வெளி நாடுகளோடு போட்டியிட முடியாது. நாட்டின் உணர்ச்சி எங்களோடு ஒத்திருக்குமானுல் என்னைப் போன்ற தொழிலதிபர்கள் மெள்ள மெள்ள நாட்டை சுயபூர்த்தி செய்துகொள்ளவல்லதாக ஆக்க முடியும். நாட்டு மக்கள் முரட்டுத் துணியாஞலும், சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பெற்ற துணிகளையே அணிவோம் என்று உறுதிகொண்டால் மெள்ளமெள்ள நாட்டில் மில்கள் தோன்றும், நாங்கள் உயர்தரமான மெல்லிசு துணிகளையும் உற்பத்தி செய்ய முடியும். கங்கா, இந்த சுதேசி இயக்கம் எங்களுக்கு நன்மை பயப்பதாகும். இனி மீதிப் பிரச்னைகள், சுயராஜ்யம் கிலாபத் என்பதெல்லாம் வெறும் ஏமாற்றமே." இதைச் சொல்லி லட்சுமீ சிரித்தான்.

ஜ்வாலா பிரஸாத் முதலியோர் புறப்படத் தயாராகி வந்துவிட்டபடியால் லட்சுமீசந்த் இந்த அரசியல் விவாதத்தை நிறுத்திவிடவேண்டி வந்தது. "இப்போது இங்கே வந்துவிட்டாய் கங்கா, உன்னேடு விஸ்தாரமாகப் பேசலாம். எப்போதாவது ஏதாகிலும் தேவை இருந்தால் என்னிடம் சொல். எல்லாவித உதவியும் செய்வதற்கு நான் தயார். இன்னும் இதோ பார், நீ எனக்குத் தம்பியல்லவா கங்கா! என் தம்பிக்கு,

இங்கு எல்லாரையும் விட பெரிய இந்திய ஆபீஸருக்கு ஒரு மோட்டார்கார் வேண்டும். நான் இன்று வாங்கிய கார் உனக்காகத்தான். நான் அதில்தான் உன் வீட்டுக்கு வந்துள்ளேன். உன் குடும்பத்தை என் வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிறேன். கம்பெனிக்காரர்களிட மிருந்தே ஒரு மாதத்திற்கு ஒரு டிரைவரையும் வரவழைத் துள்ளேன். அவனுடைய சம்பளமும் இந்தக் காரின் விலையிலேயே அடக்கம். இந்தா, இந்தக் காகிதங்களை வாங்கிக்கொள். இந்த டிரைவர் உனக்கு டிரைவிங் கற்றுக்கொடுப்பான். நீ வேண்டுமென்றால் வேறு டிரைவரையும் அமர்த்திக்கொடுப்பான். நான் வீட்டை அடைந்ததும் இந்தக் காரைத் திருப்பி அனுப்பிவிடு கிறேன். இதிலேயே நீ டின்னருக்குப் போகலாம்!"

கங்கா பிரஸாத் பலமாதங்களாக ஒரு கார் வாங்க நினைத்திருந்தான். ஆனால் பணம் இல்லாததனால் வாங்க வில்லை. "லட்சுமீ அண்ணா, இதற்கு என்ன அவசியம், நானே கார் வாங்குவதாக இருந்தேன்."

"நீ வாங்குவது போலவே உனக்காக நான் வாங்கிவிட்டேன். இதில் என்ன வித்தியாசம் இருக் கிறது?" பிறகு அவன் ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னான்: "வாருங்கள், சித்தப்பா. வாகன வசதி இல்லாததினால் நீங்கள் இத்தனை நாளாக எங்கள் வீட்டுக்கு வரவில்லை என்று கங்கா சொன்னான். அதனால் அந்தக் குறை ஏன் இருக்கவேண்டும் என்று நான் நினைத்தேன். ஒரு மோட்டர்கார், ஒரு தாங்கா. ஒன்று கங்காவுக்கு, மற்றொன்று வீட்டினருக்காக. இப்போ தெல்லாம் இரண்டு வண்டி இருந்தாலன்றி காரியம் நடக் காது." கங்கா பிரஸாத் லட்சுமீசந்த் குடும்பங்களுக் கிடையே மீண்டும் உறவுத் தொடர்பு உண்டாகியது.

டிசம்பர் மாதம் மூன்றும் வாரத்தில் வங்காளத்திலும்

வட இந்தியா முழுவதும் கிரிமினல் விதிமுறைத் திருத்தச் சட்டம் அமுல் செய்யப்பட்டது, வங்காளத்திலும் யு. பி. யிலும் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப் பட்டனர். டிசம்பர் இருபத்தைந்தாம் தேதி வேல்ஸ் இளவரசர் கல்கத்தா சேர்ந்தார். ஆனால் அங்கு நடை பெற்ற பிரம்மாண்டமான "ஹர்த்தால்" வட இந்தியா முழுவதிலும் நடந்த "ஹர்த்தால்" எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாக நிலைமை மிகவும் கவலைக்கிடமாகிவிட்டது. டிசம்பர் இருபத்தைந்தாம் தேதி கல்கத்தாவில் நடந்த "ஹர்த்தாலை"ப் பற்றிக் கேள்வியுற்று கலெக்டர் கங்கா பிரஸாதை அழைத்து ஆலோசனை செய்தார். இதர ஜில்லா அதிகாரிகளும் வந்திருந்தனர். இயக்கத்தை அடக்குவது எப்படி என்பதற்கு யாரிடமும் எவ்வித திட்டமும் இல்லை. ஒரே வழிதான் இருந்தது—அடக்கு முறை!

அஹமதாபாதில் நடந்த காங்கிரஸில் இயக்கத்தை மேலும் தீவிரமாக்கத் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் காங் கிரஸுக்கு ஞானபிரகாஷ் போயிருந்தார். திரும்பு கையில் அவர் நேராக அலாகாபாத் போகவில்லை. டில்லிக்குச் சென்று அங்கிருந்து கான்பூர் வந்தார். அன்று ஆயிரத்துத்தொள்ளாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு ஜனவரி முதல் தேதி, புது வருஷத்து முதல் நாள். கங்கா பிரஸாத் வீட்டிற்கு புதுவருஷ வாழ்த்துக்கள் தெரிவிக்க சாரி சாரியாக ஜனங்கள் வந்தனர். அன்று மாலை லட்சுமீசந்த் வீட்டில் புது வருடக் கொண்டாட் டத்தை முன்னிட்டு "டின்னர்" ஏற்பாடாகியிருந்தது.

ஞானபிரகாஷ் கங்காபிரஸாதின் பங்களாவை அடைந்தபோது மாலை நேரம். கங்காபிரஸாதின் குடும்பத் தினர் மத்தியானமே லட்சுமீசந்த் வீட்டிற்குப்போய்விட் டனர். கங்காபிரஸாத் டிராயிங் ரூமில் அமர்ந்து வருகிற

வர்களைச் சந்தித்தவண்ணம் இருந்தான். அப்போது "விஸ்கி" ஒரு பாட்டில் காலியாகி மற்ெருரு பாட்டில் பாதி ஆகிக்கொண்டிருந்தது. ஞானபிரகாஷ் வந்திருக்கும் செய்தி கேட்டதும் அவன் அறையை விட்டு வெளியே வந்தான். ஞானபிரகாஷின் கையைப் பிடித்து வரவேற்றவாறே அவன் சொன்னன்: "வா, சித்தப்பா டில்லி போயிட்டு வருகிருய்போலும்! புது வருட வாழ்த்துக்கள். மிகவும் களைத்து வந்திருக்கிருய்!" அவன் ஒரு கோப்பையில் விஸ்கியை ஊற்றி ஞானபிரகாஷின் பக்கம் நீட்டினன்.

உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து சென்றுவிட்டனர். ஞானபிரகாஷ் ஒரே விழுங்கலில் கோப்பையின் கால் பகுதியைக் காலியாக்கிவிட்டார். உண்மையிலேயே அவர் களைத்திருந்தார். கூடவே தாகமும் அவரை வாட்டியது. "அண்ணு எங்கே? வீடு வெறிச்சென்றிருக்கிறதே? குழந்தைகளையும் காணுமே!" "எல்லாரும் லட்சுமீசந்த் வீட்டுக்குப் போயிருக்கின்றனர், இன்று அவன் வீட்டில் புது வருடத்தை முன்னிட்டு பெரிய டின்னர் ஏற்பாடாகியிருக்கிறது. எல்லா ஆபீஸர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். நானும் இரவு எட்டு மணிக்குப் போகவேண்டும். ஆகவே சித்தப்பா, முகம் கழுவிக்கொண்டு ஆடை மாற்றிக்கொள். உன்னிடம் டின்னர் ஸூட் இருக்கின்றதல்லவா!" இதைச் சொல்லி அவன் மணியை அடித்தான். அதைக் கேட்டு பீக்கூ வந்தான். "ஞானு சித்தப்பாவுக்காக குளியலறையில் வென்னீர் கொண்டுவை." பீக்கூ போய்விட்டான்.

"ஆனல் சித்தப்பா, சமாதானப் பேச்சு முறிந்துவிட்டது. இப்போது என்ன தீர்மானம் செய்திருக்கிறீர்கள் அஹமதாபாத் காங்கிரஸில் நீங்கள்?"

"இயக்கத்தை மேலும் தீவிரமாக்க வேண்டும், நாடு

முழுவதிலும் சத்தியாக்கிரகம் நடத்தவேண்டும்" ஞான பிரகாஷ் புன்முறுவல் செய்துகொண்டு சொன்னார். "இப் போது போராட்டத்தில் உணர்ச்சி தோன்றிவிட்டது. இளவரசர் சுற்றுலாவில் என்ன அவல நிலை உண்டாகி யிருக்கிறது என்பதை நீ பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாய்!"

கங்காபிரஸாதின் முகத்தில் ஒரு மங்கிய நிழல் தோன் றியது. "ரொம்ப சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக் கிறாய் சித்தப்பா! இந்த ஒத்துழையாமை மறியல் போன்றதால் எனக்குப் பிராண சங்கடமாகிவிட்டது. இது போதாதென்று சத்தியாக்கிரகமும் வரிகொடாமை யுமா?" பிறகு சிறிது யோசித்துவிட்டு அவன் சொன் னான்: "ஆனால் உன்னுடைய இந்த சத்தியாக்கிரகம் ஒரு வகையில் நல்லதாகத்தான் இருக்கும். இதனால் நாங்கள் இந்த இயக்கத்தை சீக்கிரமாகவே தீர்த்துக் கட்டி விடுவோம்".

இப்போது ஞானபிரகாஷ் பேசவேண்டிய முறை— அவர் கூறினார்: "சத்தியாக்கிரகத்தினால் இயக்கம்முடிந்து விடுமா! என்ன சொல்லுகிறாய் நீ?"

"ஆம், சாதாரண மக்களிடையே சத்தியாக்கிரகம் துராக்கிரகமாக மாறிவிடும். தலைவர்கள் இருப்பார்கள் சிறைச்சாலையில், அறிவு புகட்டி வழிகாட்டுகின்றவர் கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். மக்கள் ஹிம்சை யில் இறங்குவார்கள். அதற்குப் பிறகு "ஜலியான்வாலா பாக்" மீண்டும் நடைபெறும். அவ்வளவுதான், இது நடந்ததோ இல்லையோ, இயக்கம் மறைந்துவிடும்."

ஞானபிரகாஷ் நீண்ட பிரயாணத்திற்குப் பிறகு களைத்திருந்தார். அவர் இப்போது விவாதம் செய்யும் மனப்பாங்கில் இல்லை. அவர் விஸ்கியைக் குடித்து முடித்துச் சொன்னார்: "இதைப்பற்றி பிறகு உன்னுடன்

பேசுகிறேன். ஆனால் தம்பி, நீ என்னை லட்சுமீசந்திடம் இழுத்துச்செல்லுகிறாயே, இது நியாயமா?"

"சித்தப்பா, இதில் தவறு என்ன இருக்கிறது? என்னுடைய குடும்பத்தினர் அனைவரையும் அவன் அழைத்திருக்கிறான். ஆகவே உன்னை நான் எங்கு விட்டுச் செல்வது? இனி. லட்சுமீசந்தைத்தான் உனக்கு நன்கு தெரியுமே! 'ஸர்' பட்டம் கிடைத்திருக்கிறது. "ஷாம்பேன்" அளிக்கப்படும். தடபுடலான விருந்து, எத்தனையோ ஆங்கிலேயர்கள் அங்கு தென்படுவார்கள். உனக்கு வெளிநாடு நினைவுக்கு வரும்."

ஞானபிரகாஷ் சிரித்துக்கொண்டார். "நல்லது, கிளம்பு. இந்த விருந்தில் அவனைச் சந்திக்கலாம்."

முகத்தைக் கழுவிக்கொண்டு சீமையில் தைத்த ஸூட்டை அணிந்துகொண்டு ஞானபிரகாஷ் வெளியே வந்தார். அங்கே பங்களாவின் முன் கங்கா பிரஸாதின் கார் நிற்பதைக் கண்டார். "லட்சுமீசந்த் உனக்காகக் காரை அனுப்பியிருக்கிறானா?" கங்கா பிரஸாத் சிரித்தான். "இல்லை சித்தப்பா, இது என்னுடைய கார். இங்கே ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் ஆனதினாலே என்னிடம் கார் இருப்பது அவசியமாகிவிட்டது. ஆனால் உன்னுடைய வார்த்தையும் தவறானதல்ல. இதை எனக்கு லட்சுமீ சந்த் வாங்கிக் கொடுத்திருக்கிறான். என் அண்ணன் அல்லவா அவன். என்னிடம் கார் வாங்க அவ்வளவு பணம் ஏது? இன்னும் ஜௌன்பூர் கடனையே அடைத்துக் கொண்டிருக்கிறேன்."

ஞானபிரகாஷைப் பார்த்து லட்சுமீசந்த் திடுக்கிட்டுடான். அவன் அவரை அலாகாபாதில் பலமுறை சந்தித்ததுண்டு. அவரோடு பேசியிருக்கிறான். ஆயினும் இந்தத் தடவை அவர் பெயரைக் கேட்டதுமே இது கங்கா பிரஸாதுக்குச் சிறிது விசித்திரமாகப் பட்டது. ஆனால்

ஞானபிரகாஷுக்கு அதில் விசித்திரமாக ஒன்றும் தோன்றவில்லை. லட்சுமீசந்த் மெதுவான குரலில் "என்ன நீங்கள் அஹமதாபாத் காங்கிரஸிலிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டான்.

"ஆம், முக்கியமாக உங்களைச் சந்திக்கவே கான்பூர் வந்துவிட்டுப் பிறகு அலாகாபாத் போக எண்ணினேன்."

"நாளைக்கு மத்தியானம் என் ஆபீஸில் வந்து சந்தியுங்கள்" என்றான் லட்சுமீசந்த். பிறகு அவன் மற்ற விருந்தாளிகளை வரவேற்கும் பணியில் ஈடுபட்டான். ஞானபிரகாஷ் ஜ்வாலா பிரஸாதுடன் பேசத் தொடங்கினார்.

ஞானபிரகாஷும் லட்சுமீசந்தும் பேசியதைக் கவனித்த கங்கா பிரஸாதுக்கு அது ஏதோ கூடமாகப் பட்டது. வீட்டிற்கு வந்த பிறகு அவன் அதைப்பற்றி அவரிடம் கேட்டான். "சித்தப்பா, நீ அஹமதாபாத் காங்கிரஸிலிருந்து வருகிறாய் என்பது லட்சுமீசந்துக்கு எப்படித் தெரிந்தது? நீ அணிந்திருக்கும் டிரஸ் யூரோப்பியனையும் தோற்கடிப்பதாக இருக்கிறது. அப்படியிருக்க, நீ காங்கிரஸ்காரன்என்று அவனுக்கு எப்படித் தெரிந்தது?"

"இதையெல்லாம் தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?" ஞானபிரகாஷ் புன்முறுவல் செய்தவாறே பேச்சை மாற்ற முயற்சி செய்தார்.

"இல்லை சித்தப்பா, இதை நீ சொல்லித்தான் ஆக வேண்டும். இல்லாதுபோனால் எனக்குத் தூக்கம் வராது" கங்கா பிரஸாத் பிடிவாதம் செய்தான்.

"அப்படியானால் கேள் தம்பி! ஆனால் நான் சொல்லுவதெல்லாம் கான்பூரின் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டினிடம் அல்ல. என் அண்ணா பிள்ளையும் நண்பனுமாகிய சிரஞ்சீவி கங்கா பிரஸாதிடம் சொல்லுகிறேன். இந்த ஸர் லட்சுமீ சந்த் பணம் படைத்த முதலாளி அல்லவா! இத்தகைய

இந்திய முதலாளிதான் எங்கள் இயக்கத்தின் முதுகெலும்பு. எந்த இயக்கத்திற்கும் பணம் வேண்டும், பணம் நாட்டின் முதலாளிகளிடமிருந்துதான் கிடைக்கும். ஏனென்றால், ஆங்கிலேய சாம்ராஜ்யம் பிரிட்டிஷ் முதலாளிகளுடைய ராஜ்யம். இந்தியாவில் வியாபாரம் செய்தும், இந்தியாவிற்குத் தனது பொருள்களை விற்றும் தான் பிரிட்டன் இந்தியாவைச் சுரண்டி வருகிறது. ஆதலால் பிரிட்டிஷ் முதலாளித்துவத்திற்குப் பெரிய எதிரி யார் என்றால் அது இந்த இந்திய முதலாளிவர்க்கம் தான்.

கங்கா பிரஸாதுக்கு மீண்டும் ஜவுளிக் கடைக்காரனது பேச்சு நினைவுக்கு வந்தது. "இந்த சுதேசி இயக்கத்தினால் நாட்டு மில்களுக்கு அதிர்ஷ்டம் வந்திருக்கிறது!" என்று அல்லவா அவன் சொன்னான். "அறிந்து கொண்டேன், சித்தப்பா, ஆக நீங்கள் இயக்கத்திற்காக லட்சுமீசந்திடம் பணம் வாங்க வந்திருக்கிறீர்கள். என்ன ஆச்சரியம். லட்சுமீசந்த் சர்க்காருக்குப் பணம் கொடுக்கிறான், காங்கிரஸுக்கும் பணம் கொடுக்கிறான்."

"உனக்கும்தான் பணம் கொடுக்கிறான்—கார் உருவத்தில்" ஞானபிரகாஷ் சொன்னார். "ஆனால் கங்கா, இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இந்த முதலாளி பலாத்கார முறையில் லாபம் அடிக்கிறான். அந்த லாபத்தில் ஒரு சிறு பகுதியை சர்க்காருக்குத் தருகிறான், அதன் மூலம் சர்க்காரிடமிருந்து அவனுக்குப் பலவகையான சலுகைகள் கிடைக்கும். இன்னொரு சிறு பகுதியை அவன் காங்கிரஸுக்குக் கொடுக்கிறான். அதனால் சுதேசி இயக்கம் தீவிரமாகும், அவன் தயாரிக்கும் பொருள்களின் விற்பனை ஏறுகிறது. இந்த லாபத்தில் ஒரு சிறு பகுதியை அவன் கங்கா பிரஸாத் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டுக்கும் கொடுக்கிறான். அது

எதற்காக? ஸர். லட்சுமீசந்த் செய்யக்கூடிய மோசடி சுரண்டல் கொள்ளை லாபம் இவற்றைப்பற்றி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கவனிக்காமல் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும் என்பதற்காக. ரூபாய் தான் இந்த யுகத்தில் வேறு எதையும் விட அதிக சக்திவாய்ந்த கருவி தெரிந்ததா?'' இதைச் சொல்லி ஞானபிரகாஷ் உரக்கச் சிரித்தார்.

9

கான்பூரில் பொது மறியல் நடைபெற்றது. எங்கும் தீவிர ஆவேசம்! முன் தினம் இரவு சிறையில் ஒரு காங்கிரஸ் தொண்டன் இறந்துவிட்டான். மக்கள், அவன் போலீஸ் கொடுமைக்குப் பலியாகி இறந்தான் என்றனர். சர்க்கார், அவன் நோய்வாய்ப்பட்டிருந்ததால் இயற்கை மரணம் எய்தினன் என்று அறிவித்தனர். காங்கிரஸ் தொண்டனது சடலம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் புறப்பட்டு மேஸ்டன் ரோடை அடைந்தபோது அதில் இருபத்தைந்து முப்பதாயிரம் மக்கள் கலந்துகொண்டனர். மக்களிடையே குரோத பாவம் தலைதூக்கி நின்றது. ஹிம்சை வெறி அலைமோத ஆரம்பித்தது.

போலீஸ்காரர்கள் இதைக்கண்டு கவலைகொண்டனர். கங்காபிரஸாதுக்குத் தகவல் போயிற்று. அதிகாரிகள் ஆலோசனை செய்து ஊர்வலத்தை சிவில் லைன்ஸிற்குள் அனுமதிக்காமல் தடுக்கத் தீர்மானித்தனர். அங்குதான் ஆங்கிலேயர்களும் உயர் அதிகாரிகளும் வசித்தனர்.

சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்த மக்கள் ஆவேச வெறிகொண்டிருப்பதால் எந்த நேரத்திலும் அவர்கள் ஹிம்சையில் இறங்கக்கூடும். அதே நேரத்தில் ஆயுதம் தாங்கிய போலீஸ் படையொன்று கூட்டத்தைச் சமாளிக்கத் தருவிக்கப்பட்டது.

ஆயுதப் போலீஸும் சாதாரண போலீஸுமாக ஏறக் குறைய இருநூறு போலீஸ் ஜவான்களுடன் கங்காபிரஸாத் மேஸ்டன் ரோட்டிலிருந்து சிவில் லைன்ஸுக்குத் திரும்பும் பாதையில் நாற்சந்தியில் வந்து நின்றுகொண்டார், அந்த ஊர்வலத்தைத்தடுத்து நிறுத்த. அந்தக் காங்கிரஸ் தொண்டனின் சவம் சிறைச்சாலையிலிருந்து உறவினர்கள் வசம் கொடுக்கப்பட்டு நேராக பைரவ்காட் சுடுகாட்டிற்குஎடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. ஊர்வலம் நாற்சந்தி வந்தடைந்ததும் அது மேலே செல்லாமல் தடுக்கப் பட்டது.

முன்னணியில் கையில் காங்கிரஸ்கொடிகளைத்தாங்கி பெண் தொண்டர்கள் நின்றிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் ஆண் தொண்டர்களும் மற்றவரும் இருந்தனர். அவர்களுக்குப் பின்னால் கான்பூர்மக்களுடைய பெரும் கூட்டம் நின்றது. கங்காபிரஸாத் முன்னே அடி வைத்து அங்கிருந்து எல்லாரும் திரும்பிப் போகவேண்டும் என்றும், சிவில் லைன்சில் அவர்கள்போகக்கூடாதெனத்தடை விதித்திருப்பதாகவும் சொன்னார். இதன்மேல், நகர காங்கிரஸ் கமிட்டியின் ஐந்து தலைவர்கள் முன்னே வந்தனர். அவர்கள் ஊர்வலம் திரும்பிச்செல்லாதென்றும், சிவில் லைன்ஸ் வழியாக அவர்கள் மயானத்திற்குப் போய் பலியாகிய அமரனுக்கு இறுதிமரியாதை தெரிவிப்பார்கள் என்றும், சர்க்காரின் ஆணையை ஏற்க மறுப்பதாகவும் சொன்னார்கள். கூட்டம் ஹிம்சைச்செயலில் ஈடுபடாது என்று கங்காபிரஸாதுக்குஉறுதிகூறினார்கள்.

ஊர்வலத்தில் ஆரவாரம் அதிகரித்தது. மிகவும் தாழ்ந்த முறையில்சர்க்காரைக்குறித்தும், அதிகாரிகளைக்குறித்தும் வசவுகள் ஒலிக்க ஆரம்பித்தன. காங்கிரஸ், மஹாத்மா காந்தி, பாரதமாதா என்றெல்லாம் ஜயகோஷம் போடத் தொடங்கினர். கங்கா பிரஸாதின் பக்கத்திலேயே கான்பூரின் ஆங்கிலேய உதவி போலீஸ் சூபரின்டென் டெண்ட் நின்றிருந்தார்; அக்கம் பக்கங்களில் வெள்ளைக் கார அல்லது ஆங்கிலோ-இந்திய ஸார்ஜெண்ட்கள் இடுப்பில் பிஸ்டலைத் தொங்கவிட்டுக்கொண்டு நின்று கொண்டிருந்தனர். கங்கா பிரஸாத் இப்போது நூற்று நாற்பத்து நாலாம் பிரிவுச் சட்டத்தை அமுலாக்குவதாக அறிவிப்புச் செய்தார். பதினைந்து நிமிடங்களுக்குள் கூட்டம் கலைந்துவிடவேணடும் என்று கட்டளையிட்டார்.

இந்த நேரத்தில் ஊர்வலத்தின் பின்பக்கத்திலிருந்து யாரோ ஒருவன் ஒரு கல்லை விட்டெறிந்தான். அது அஸிஸ்டெண்ட் சூபரின்டென்டெண்டின் இடது கையில் வந்து பட்டது. உடனே அவர் தன் பிஸ்டலை எடுத்துக் கூட்டத்தை நோக்கிக் குறிபார்த்துப் பிடித்தார். இதற்குள் கங்கா பிரஸாத் அவர் கையைக் கீழ்ப்பக்க மாக மடக்கிவிட்டார். ஆனால் கூட்டத்திலிருந்து சரமாரி யாகக் கற்கள் வந்து விழுந்தன. ஒன்று கங்கா பிரஸாதின் தலையில் வந்து பட்டது. கங்கா பிரஸாத் "லாட்டிசார்ஜ்" செய்யும்படி போலீஸுக்கு உத்தரவிட்டு, குதிரைப் போலீஸையும் கூட்டத்தை நோக்கிப் போகும்படிச் செய்தார். அவர் ஆணையிட்ட உடனே போலீஸும், குதிரைப் போலீஸும் கூட்டத்தின் மேல் தாவிச் சென்றது. கூட்டத்தில் கலவரம் உண்டாகி மக்கள் சிதறி அடித்துக்கொண்டு ஓடினர். ஆனால் காங்கிரஸ் படை யைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தொண்டர்களும் அங்கு நிலைத்து நின்றனர். அவர்கள் தடியடியைத்

தாங்கினர். ஐந்து நிமிஷத்திற்குள் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. ஆனல் அடிபட்டவர்கள் தாறுமாருக விழுந்துகிடந்தனர். அடி பட்டவர்கள் இருநூறுக்கும் அதிகம். அவர்களில் சுமார் இருபத்தைந்து பெண்களும் இருந்தனர். ஐம்பது பேருக்கு மேலாக பலத்த காயம் அடைந்து கிடந்தனர். அவர்கள் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டனர். ஏனையோரைக் கைது செய்து சிறைக்கு அனுப்பினர்.

அடுத்த நாள் கங்காபிரஸாத் கச்சேரியிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அங்கு ஞானபிரகாஷும் ஸத்தியவிரத்தும் அறையில் உட்கார்ந்திருந்தனர். சுமார் முப்பது பேரை அன்று காலையிலேயே ஆஸ்பத்திரியிலிருந்து "டிஸ்சார்ஜ்" செய்துவிட்டார்கள். மீதி இருபது பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. முந்தைய நாள் கைது செய்யப்பட்ட ஐந்து தலைவர்களுக்கும் கங்காபிரஸாத் தலா ஒரு மாதம் காவல் தண்டனை விதித்திருந்தார். இதனல் எல்லாம் அவருடைய மனம் சிறிது நிம்மதி அடைந்திருந்தது. உடை மாற்றிக்கொண்டு அவர் இவர்கள் அருகில் வந்து அமர்ந்துகொண்டார். பீக்கூ மூவருக்கும் சிற்றுண்டியும் தேநீரும் கொண்டு வைத்தான். கங்கா பிரஸாத் கேட்டார் சாவகாசமாக ஞானபிரகாஷைப் பார்த்து. "ஆம், உங்களுடைய நோக்கம் என்னவென்று இப்போது சொல்!"

"நோக்கமா! உன்னுடைய கவலையைப் போக்கடிப்பதுதான் தம்பி! குறைந்த பட்சம் உனக்கு இதில் அமைதி உண்டாகும். இயக்கத்தை இப்போது நகரங்களிலிருந்து அகற்றி கிராமங்களில் நடத்தப்போகிறோம். கிராமங்களில் வரி கொடாமை இயக்கத்தை சத்தியாக்

கிரகமாக மாற்றிவிட்டோம். கிராமங்களைப்பற்றி நகரத்திலிருக்கும் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு சம்பந்தம் ஒன்றும் இல்லை. ஆகவே மூன்று நான்கு மாதத்திற்குள் சர்க்கார் அடிபணிந்து ஒருவழிக்கு வந்துவிடும். பிறகு ஒரு முடிவு உண்டாகும் என்று நாங்கள் நினைக்கிறோம்."

"நீங்கள் உண்மையாகவே கிராமப்புறங்களில் கூட்டு சத்தியாக்கிரகம் நடத்தப்போகிறீர்களா சித்தப்பா? கூட்டு சத்தியாக்கிரகம் ஒரு பயங்கரமான ஆயுதம். இதைப்பற்றிச் சிறிது யோசனை செய்து பாருங்கள். உங்களுக்கு இதுவரை கிடைத்துள்ள ஓரளவு வெற்றியும் இதனால் அழிந்துவிடும்.''

சிறிது யோசித்த பிறகு ஞானபிரகாஷ் சொன்னார்: "எனக்குத் தெரியும் கங்கா! ஆனால் இந்த வெற்றி எங்கள் செயலற்ற தன்மையினால்கூட அழிந்து போகக் கூடும். இந்தக் கூட்டு சத்தியாக்கிரகம் ஒன்றுதான் பிரிட்டிஷ் சர்க்காரையும் தலை வணங்க வைக்கக்கூடிய ஒரு பெரும் ஆயுதமாகும். நாங்கள் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான உழவர்களிடையே இதனைப் பரப்ப வேண்டும்.ஒரு வாரத்துக்குப் பிறகு அலாகாபாதில் யு.பி. மாகாணத் தொண்டர்களுடைய கூட்டம் நடைபெறப் போகிறது. அதில் கிராமப்புறத்தில் இந்த இயக்கத்தைப் பரப்பும் வழிவகைகளைப்பற்றி ஒரு திட்டம் உருவாக்கப் படும்.''

அப்போது கலெக்டருடைய ஜவான் வந்து ஒரு சீட்டைக் கொடுத்தான். அதைப்படித்துவிட்டு கங்கா பிரஸாத் திடுக்கிட்டர். ஜவானிடம் அவர் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் வருவதாகச் சொல்லியனுப்பினார். ஜவான் சென்றதும் அவன் கலெக்டர் அனுப்பியிருந்த அந்த டைப் அடித்த சீட்டை ஞானபிரகாஷிடம் நீட்டினன். "கொஞ்சம் இதைப்படி சித்தப்பா, உனக்கு

மிகவும் பரபரப்பான செய்தியொன்றைத் தெரிவிக்கின்றேன்.''

ஞானபிரகாஷ் கலெக்டருடைய சீட்டைப் படித்து இரைந்து கத்திவிட்டார். "இந்த 'சௌரீ சௌரா' செய்தி பொய், மிகைப்படுத்திய செய்தி. இருபத்தியொரு போலீஸ் ஜவான்களும் ஒரு ஸப் இன்ஸ்பெக்டரும் உயிருடன் கொளுத்தப்பட்டார்களா! போலீஸ் ஸ்டேஷன் எரிக்கப்பட்டுவிட்டதா! இதை நான் நம்பவில்லை. என்ன கங்கா, இது உண்மையான செய்திதானா?" கங்கா பிரஸாத் பதில் சொன்னார்: ''சித்தப்பா, சர்க்கார் விவகாரத்தில் பொய்யான செய்தி அனுப்புவதில்லை. நீங்கள் நம்புங்கள், நம்பாமல் போங்கள். நான் முன்னரே சொன்னேன், கிராமப்புறத்தில் இந்தக் கூட்டு சத்தியாக்கிரகம் என்ற அழிவு இயக்கம் தவறானதென்று. இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் இதுபோன்றவை நிகழ்ந்துவிட்டால் மாகாணம் முழுவதிலும் இராணுவ ஆட்சி அமலாக்கப்படும். அது பஞ்சாபில் ஏற்படுத்திய ''மார்ஷியல் லா''வை விட பயங்கரமாக இருக்கக்கூடும். இப்படிப்பட்ட ராணுவ ஆட்சி உசிதமே என்றும் நிரூபிக்கப்படும்."

இதற்கு ஞானபிரகாஷ் பதில் ஒன்றும் கூறவில்லை. ஆனால் சத்தியவிரத் திடமான குரலில் சொன்னார்: ''மாஜிஸ்டிரேட் அவர்களே, யு.பி. மாகாணம் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலுமே மார்ஷியல் லா அமுல் செய்யப்பட்டாலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஆங்கிலேயர் நாடு முழுவதிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய ஆட்சியொன்றை நிறுவி வைத்திருக்கின்றனரே, அது முடிந்துவிடும். ஒவ்வொரு இந்தியனும் தான் ஓர் அடிமை என்பதை உணர்ந்துகொள்வான். இந்த அரசாங்கங்கள் தங்களை ''சிவிலியன்ஸ்'' என்றழைத்துக்

கொள்ளும் இந்தியர்கள் மேல்தான் ஆதாரங்கொண் டிருக்கிறது!"

கங்கா பிரஸாதுக்கு சத்தியவிரத் சொன்னது பிடிக்க வில்லை. அதில் அவரைப்பற்றியும் குத்தலாகக் குறிப்பிட் டிருந்தது. ஆயினும் சத்தியவிரத் சொன்னதை மறுக்க இயலவில்லை. அவர் சத்தியவிரதைப் பார்த்தார்-அனுபவ மற்ற ஒரு வாலிபன், எப்படி இந்தப்பெரிய உண்மையைச் சொல்லிவிட்டான். ஆனால் அவன் சொன்னதற்கு ஒரு மறு கட்சியும் இருந்தது. கங்கா பிரஸாத் கேட்டார்: "இந்த இந்திய ராணுவப் படையின் உதவியால்தானே ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டு நடந்த போராட்டமும் அடக்கப்பட்டது! இந்தப் படையின் பலத்தைக்கொண்டுதான் ஒரு சில ஆங்கிலேயர்கள் இவ்வளவு பெரிய நாட்டை அடிமை ஆக்கிவிட்டனர். ஆகவே சத்தியவிரத், இந்த மார்ஷியல் லா மிகவும் பயங்கரமானதொன்று. இது வரவேண்டுமென்று விரும் பாதே."

சத்யவிரத் எழுந்து நின்றான். "மாஜிஸ்டிரேட் அவர் களே, அடிமைத்தனத்தை மறுத்துக் கிளர்ச்சி செய்வதும் போராடுவதும் எங்கள் கடமை என்பதை நான் அறிவேன். இந்த யுத்தத்தின் விளைவு என்னவாகும் என்று யோசிப்பது கோழைத்தனமாகும். இந்தக் கோழைத்தனத்தின் காரணமாகத்தான் இந்தியரது நிலை ஆடு மாடுகளது நிலைபோல் ஆகிவிட்டது. சரி, நீங்கள் கலெக்டர் அவர்களிடம் போகவேண்டும். ஆதலால் நானும் காங்கிரஸ் ஆபீஸுக்குப் போகிறேன். அங்கும் ஏதாவது செய்தி வந்திருக்கக்கூடும். இந்த நிலைமையைப் பற்றி நாங்களும் சிந்திக்க வேண்டும். வாருங்கள். ஞானப் பிரகாஷ், நீங்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்?"

கங்காபிரஸாத் ஞானபிரகாஷிடம் சொன்னார்: "இந்த 'சௌரீ சௌரா' செய்தியை ஒருவருக்கும் தெரிவிக்காதீர்கள். இல்லையேல் சர்க்கார் செய்தியை வெளிப்படுத்திவிட்டதாக என்மேல் குற்றம் சாட்டப்படலாம். இந்த செய்தியைப்பற்றி சர்க்கார் மக்களுக்கு வேறுவிதமாகச் சொல்லக்கூடும். சிறைக்கு வெளியே இருக்கும் பொறுப்புள்ள காங்கிரஸ் தலைவர்களாகிய உங்கள் இருவருக்கும் இந்த இயக்கத்தை இப்படியே நிறுத்துமாறு ஆலோசனை கூறுகிறேன். இல்லாவிட்டால் பெரிய தீங்கு உண்டாகும். இந்தியன் இந்தியனைக் கொலை செய்வானாயின், கொளுத்துவானாயின் நம் நாட்டில் உள்நாட்டுப் போர் மூண்டுவிடும். எங்கு பார்த்தாலும் கொள்ளையும் அராஜகமும் தலைவிரித்தாடக்கூடும்."

அடுத்த நாள் "சௌரீ சௌரா" படுகொலை பற்றிய செய்தி நாடெங்கிலும் பரவிவிட்டது. ஒரு பெரும் பயங்கர நிகழ்ச்சி நடந்துவிட்டது. மக்கள் வெறி கொண்டால் எவ்வளவு பயங்கரமான நிலை ஏற்பட்டு விடுகிறது! சர்க்கார் உத்யோகஸ்தர்களிடையே ஒருவித பயம் குடிகொண்டுவிட்டது. அந்த பயத்தின் விளைவாக அவர்களிடையே காங்கிரஸ்காரர்களைப்பற்றி ஒருவித ஹிம்சை மனப்பான்மை தோன்றிவிட்டது. போராட்டத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டாகிவிட்டது. நாடு முழுவதிலும் காங்கிரஸ் வர்க்கத்தில் ஒரு வகைத் தீவிரம் தோன்றிவிட்டது.

அன்று சிறு தூறல் போட்டது. கடந்த இரவிலிருந்தே குளிர் அதிகமாகிவிட்டது. கங்காபிரஸாத் கச்சேரிக்குப் போக ஆயத்தமாக இருந்தார். அப்போது ஞானபிரகாஷ் அறைக்குள் நுழைந்தார். "கங்கா, நான் இந்த வண்டியில் அலாகாபாத் போகிறேன். நேற்றிரவு காங்கிரஸ் கமிட்டியிலிருக்கும்போது அலாகாபாதில் நான் இருப்பது

அவசியம் என்று தந்தி வந்தது. இந்தத் தபாலில் மாகாணக் கமிட்டியின் செயலாளரிடமிருந்தும் கடிதம் வந்திருக்கிறது. விசித்திரமான நிலைமை தோன்றி உள்ளது.''

கங்கா பிரஸாத் ஆவல் நிறைந்த பார்வையோடு கேட்டான்: "என்ன நிலைமை? சொல்லுவதில் நஷ்டம் ஒன்றும் இல்லை என்றால் எனக்குச் சொல்லேன்.''

''நீ செய்தித்தாளில் படித்திருக்கலாம், மகாத்மா காந்தி இந்தக் கூட்டு சத்தியாக்கிரகத்தை வாபஸ் பெற விரும்புகிறார். பார்தோலியில் பிப்ரவரி பன்னிரண்டாம் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடப்போகிறது. இதையும் படித்திருப்பாய். காந்திஜீயின் தீர்மானம் ஏற்கப்பட்டுவிடும் என்று தோன்றுகிறது."

கங்கா பிரஸாத் மகிழ்ச்சி நிறைந்த பெருமூச்சு விட்டான். ''நான் என்ன சொன்னேன் சித்தப்பா, மகாத்மா காந்தி உண்மையில் நாட்டின் நிலையை நன்கு உணர்ந்தவர். அவர் செய்வது சரியாகத்தான் செய்கிறார். இதில் நீங்கள் கவலைப்பட என்ன இருக்கிறது?''

''அடியை முன்னே வைத்த பிறகு பின்னால் நகருவது எங்களுடைய தோல்வியே! எங்கள் முன் வெற்றி வந்து நிற்கும்போது நாங்கள் பின் வாங்குகிறோம்". கங்கா பிரஸாத் புன்முறுவல் செய்தார். "சரிதான், முன் நிற்பது வெற்றியா, அழிவா என்பது உன்னைவிட மகாத்மா காந்திக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அலாகாபாத் போய் நீ என்ன செய்துவிடுவாய்? இதோபார் சித்தப்பா, அப்பா இன்னும் திரும்பி வரவில்லை. இன்று தேதி பதினொன்று ஆகிவிட்டது. நீ இருப்பதினால் பொழுது போகிறது. என் பேச்சைக் கேட்டு இன்னும் ஒரு வாரம் இங்கேயே இரு. நீ இல்லாமல் போனால் காங்கிரஸின் வேலை ஒன்றும் தடைபட்டு விடாது!''

ஞானபிரகாஷ் சிறிது கடுகடுப்பாக இருந்தார். அவர் சொன்னார்: "வேலை தடைபடுகிறது, தடைபடவும் இல்லை. இந்த இயக்கத்தை நடத்த ஏற்பாடு செய்யும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. ஆனால் இப்போது ரூபாயும் கிடைக்கவில்லை. கான்பூர் வியாபாரிகளும் மில் முதலாளிகளும் சாக்குப்போக்கு சொல்லத் தொடங்கிவிட்டனர். நேற்று அப்பட்டமாக மறுக்கும் நிலையும் வந்துவிட்டது. லட்சுமீசந்த் ஐம்பதினாயிரம் கொடுப்பதாக வாக்களித்திருந்தான். நேற்று ஒரேயடியாகக் கையை விரித்துவிட்டான்." கங்கா பிரஸாத் சிரித்தார். "சபாஷ் ஸர் லட்சுமீசந்த்! புத்திசாலி மனிதன்! இயக்கம் வரை அவன் ஒத்துழைக்க முடியும். ஆனால் போராட்டமும் அராஜகமும் வரும்போல் இருந்தால் லட்சுமீசந்த் உங்களுடன் ஒத்துழைப்பானா? நன்றாக இருக்கிறது! சரிதான். நீங்கள் போங்கள். காங்கிரஸ்காரர்கள் ரூபாய் வருமென்று கனவுகாணும் பொய்யான நம்பிக்கையை அகற்றிவிடுங்கள். ஆனால் நீங்கள் போனதும் அப்பாவையும் குடும்பத்தினரையும் நாளைக்கே அனுப்பிவையுங்கள்." ஞானபிரகாஷுக்குச் சாதாரணமாகக் கோபம் வராது. ஆனால் இப்போது அவர் முகம் சிவந்துவிட்டது. "அனுப்பிவைக்கிறேன் எல்லாரையும். போகமாட்டேன் என்றால் கட்டாயப்படுத்தி வண்டியில் ஏற்றிவிடுகிறேன். ஆனால் கங்கா, இந்த லட்சுமீசந்த் மிகவும் கேவலமான மனிதன். இந்த சுதேசி இயக்கத்தினால் இவனுக்குச் சுமார் ஐந்து ஆறு லட்சம் லாபம் கிடைத்துள்ளது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள். இன்னொரு மில் கட்டப்போகிறான். இந்த சமயத்தில் ஒரேயடியாக மறுத்துவிட்டான். அலாகாபாதில் மாகாண கமிட்டிக்காரர்களுக்கு நான் எப்படி முகத்தைக் காட்டுவது? நாங்கள் அலாகாபாதில் திரட்டிய

காங்கிரஸ் வாலண்டியர் படைக்காகவும், தொண்டர்கள் அணிவகுப்புக்காகவும் சுமார் இரண்டு மூன்று ஆயிரம் செலவாகும். அங்கு எங்கள் கையில் காலணா கிடையாது. லட்சுமீசந்திடம் ஐந்தாயிரம் மட்டும்தான் கேட்டேன். கையில் ஒரு பைசாகூட இல்லை என்கிறான். ஐந்நூறு ரூபாய் நோட்டை எடுத்து, என்னிடம் இவ்வளவு ரொக்கம்தான் இருக்கிறது. நேற்றுதான் மூன்று லட்சத்துக்கு உண்டியல் பணம் செலுத்தினேன் என்கிறான்."

கங்கா பிரஸாத் கேட்டார்: "அப்படியானால் அவன் வெறுங்கையோடு உங்களைத் திருப்பி அனுப்பிவிட்டானா சித்தியா? அலாகாபாத் போய்ச் சேர வண்டிச் சத்தமாவது இருக்கிறதா, அல்லது நான் கொடுக்கவா?"

ஞானபிரகாஷ் ஆத்திரமடைந்து சொன்னார்: "தம்பி, இப்போது உன்னிடம் யாசகம் செய்யும் அளவிற்கு நான் ஏமாளியா என்ன! லட்சுமிசந்த் 'இல்லை இல்லை' என்று சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால் நான் அவனுடைய அந்த ஐந்நூறு ரூபாயைப் பிடுங்கிக்கொண்டுதான் வந்தேன். ஓடும் பூதத்தின் கோவணமானாலும் போதும்! இன்னும் ஒரு ஐந்நூறு ரூபாய் இங்குமங்குமாகச் சேர்த்துவிட்டேன்! இப்போது நிலைமை என்னவென்றால் என்னிடம் ஆயிரம் ரூபாய் இருக்கிறது. இன்னும் ஆயிரம் தேவை, என்ன செய்வதென்று தோன்றவில்லை."

கங்கா பிரஸாதின் 'மூட்' அப்போது விளக்கமடைந்திருந்தது. அவர் சொன்னார்: "சித்தப்பா, ஐந்து அல்லது பத்து நிமிஷத்துக்கு நீ 'அமைதி சபை'யின் அங்கத்தினராக இருக்கக்கூடுமானால் நான் உனக்கு ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொடுக்க இயலும்."

ஞானபிரகாஷ் திடுக்கிட்டார். "அமைதி சபை! சுய நினைவோடுதான் பேசுகிறாயா தம்பி! என்னைப் போய்

அமைதி சபைக்கு வரச் சொல்லுகிறுயே ?"

கங்கா பிரஸாத் புன்முறுவல் செய்தார். "நீ அல்ல சித்தியா, உன் அண்ணு ராய்ஸாஹப் ஸத்திய பிரகாஷ் தான் அமைதி சபையின் தலைவர்! இவ்வளவு சிறிய விஷயத்தைத் தவருக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? நான் நல்ல எண்ணத்தோடு நீ சங்கடத்தில் சிக்கி இருக்கிறுயே, அதிலிருந்து உன்னைத் தப்பிக்கலாம் என்று சொன்னேன். அதாவது ஆயிரம் ரூபாய் ரொக்கம் வாங்கிக்கொடுக்கலாம் என்றுதான் சொன்னேன். இல்லாவிட்டால் நீ கையைவிட்டுத்தான் இந்தத் தொகையைச் சரிக்கட்ட வேண்டியிருக்கும். நான் சொல்வது தவறில்லையே; சித்தப்பா!"

"ஆம், இந்தத் தொகையை நான்தான் கொடுத்தாக வேண்டும். ஆனுல் அமைதி சபையின் அங்கத்தினராவது என்னுல் எப்படி இயலும்? இயன்றுலும் ரூபாய் எவ்வாறு கிடைக்கும்?"

"ஏன் இயலாது? இங்கு 'நூர் அஹமத் மஞ்சூர் அஹமத்' என்ற பெயர் கொண்ட ஒரு "பர்ம்" இருக்கிறது. அதற்கு இரண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. கான்பஹதூர் நூர் அஹமத் சர்க்காரிடம் பெரும் பக்தி உடையவர். நான் நேற்று அமைதி சபைக்காக சந்தா வேண்டும் என்றபோது ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னுர். நான் அவருக்குச் சீட்டு எழுதித் தருகிறேன். அவரிடம் ஓராயிரம் ரூபாய் வாங்கிக் கொள். ஆனுல், அங்கே ஸூட் அணிந்துகொண்டு போக வேண்டியிருக்கும்."

"இந்தச் சந்தாவுக்கு ரசீது?" ஞானபிரகாஷ் கேட்டார்.

"ரசீது நான் அனுப்பி வைக்கிறேன். விஷயம் என்ன வென்றுல், லட்சுமீசந்த் அமைதி சபைக்காக இரண்டாயிரம் ரூபாய் அனுப்பியிருக்கிறுன். இன்னும் நான்

அவனுக்கு ரசீது அனுப்பிவைக்கவில்லை. எவ்வளவு ரூபாய் வருகிறதோ அதை நான் பாங்கில் அமைதி சபையின் கணக்கில் போட்டு வைக்கிறேன். ஆனால் ரசீதைப் பின்னர்தான் அனுப்பி வைக்கிறேன். ஆகவே, லட்சுமீசந்துக்கு ஓராயிரத்துக்கு மட்டுமே ரசீது அனுப்பி விடுகிறேன். என்னிடம் ரூபாய் இருந்தால் நான் உன்னை இந்த துஷ்டன் கான்பஹதூரிடம் அனுப்புவேனா?"

ஞானபிரகாஷின் முகத்தில் ஒரு வறண்ட சிரிப்புத் தோன்றியது, "அப்போ, மோசடி வேலையிலும் நீ கைதேர்ந்துவிட்டாய் என்று சொல்."

"இதெல்லாம் உனக்காகத்தான் செய்கிறேன் சித்தையா. இல்லாது போனால் எப்படி? நானே காங்கிரஸுக்குப் பெரும் எதிரி!"

ஞானபிரகாஷ் பகல் வண்டியில் போகும் எண்ணத்தை விட்டார். ரூபாய் வாங்கிக்கொண்டு அவர் மாலை வண்டியில் அலாகாபாத் போனார்.

பலரும் ஊகித்ததுபோலவே, பார்தோலியில் நடந்த காங்கிரஸில் மகாத்மா காந்தியின் தீர்மானம்—கூட்டுச் சத்தியாக்கிரகத்தை உடனே நிறுத்திவிடும் முடிவு நிறைவேற்றப்பட்டது. நாடு முழுவதிலும் ஒரு வகையான நிராசையும் மனச்சோர்வும் பரவிவிட்டது. ஆயினும், செயல்மிக்க தொண்டர்களுடைய பகுதியொன்று இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுக்கொண்டிருந்தது. பிப்ரவரி இருபத்து நான்காம் தேதி டில்லியில் காங்கிரஸ் மகாநாடு கூடவிருந்தது. ஞானபிரகாஷ், சத்தியவிரத் இருவரும் அதன் அங்கத்தினர். சத்தியாக்கிரகத்தை ஒத்திப்போடுவது பல அங்கத்தினர்களுக்கும் சரியெனப் படவில்லை. ஆயினும், செல்வாக்குப் படைத்த அங்கத்தினர்கள் சிறையில் இருந்தனர். அந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்

களிடம் உணர்ச்சி இருந்ததானாலும் செயலைத் திட்ட மிட்டுச் செய்யும் அறிவு பலமில்லை. சத்தியாக்கிரகக் கொள்கையை வகுத்தவர் மகாத்மா காந்தி. அதை நடத்துகிறவரும் அவரே. ஆயினும், பெரும்பான்மை யினரது எண்ணம்—மகாத்மா காந்தியும் இந்த எண்ணம் கொண்டவரே—தனிப்பட்ட முறையில் சத்தியாக்கிரகம் நடத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பதே. இந்தத் தனியார் சத்தியாக்கிரகத்திலும் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதே அவரது ஆணை. அதோடு கூட ஆக்க வேலைத் திட்டத்தின் வாயிலாக மக்களை சத்தியாக்கிரகத்திற்காக ஆயத்தம் செய்யவேண்டும் என்பதும் அவருடைய திட்டம். அந்த ஆக்க வேலைத் திட்டம் மகாத்மா காந்தியிடம் இருந்தது.

டில்லியிலிருந்து சத்தியவிரத் கான்பூருக்கு வந்தார். ஆனால் ஞானபிரகாஷ் அலாகாபாத் போய்விட்டார். காங்கிரஸைப் புதிய முறையில் செப்பமாக அமைக்க வேண்டியிருந்தது; மேலும் அலாகாபாதில் காங்கிரஸ் தொண்டர்களுடைய "முகாம்" ஒன்றும் நடைபெற விருந்தது. இயக்கத்தை நடத்தப் பொருளாதார நிலையை வலுவாக்கப் பணம் திரட்டவேண்டுமென்று வற்புறுத் தப்பட்டது. அலாகாபாத் முகாமுக்கு கான்பூரிலிருந்தும் ஒரு பெரிய தொண்டர் படை போகவிருந்தது.

கங்கா பிரஸாத் அன்று ஆபீஸிலிருந்து நேரம் கழித்து வீட்டுக்கு வந்தார். கலெக்டர் ஆபீஸில் அன்று நகரத்தின் சர்க்கார் உத்யோகஸ்தர்களுடைய "மீட்டிங்" நடை பெற்றது. அதில் காங்கிரஸின் வருங்காலத்திட்டத்தை எதிர்க்க என்னென்ன செய்யவேண்டும் என்பதை ஆலோசித்தனர். கலெக்டர் சில ஆலோசனைகள் கூறினர். அவை கங்கா பிரஸாதுக்குப் பிடிக்கவில்லை. கலெக்டருக்கே அவற்றில் நம்பிக்கை குறைவாக

இருந்தது. ஆயினும் அந்த ஆலோசனைகள் மேலிடத்திலிருந்து வந்திருந்தன. அன்று அவன் மிகவும் களைத்துப்போய் இருந்தான். உடலிலும் மனதிலும் இந்த இயக்கத்தைப்பற்றி அவன் அறியாமலேயே ஒருவித அனுதாபம் அவன் உள்ளத்தில் எழுந்தது. இயக்கத்தைப்பற்றி யோசிப்பதோடுகூட கலெக்டர் அந்தக் கூட்டத்தில் ஹோலி விழாவின்போது முஸ்லிம்கள் மேல் சாயத்தண்ணீர் தெளித்து விழுவதனால் சச்சரவு உண்டாகலாம் என்று குறிப்பிட்டார். இந்தக் குறிப்பு கங்கா பிரஸாதுக்கு வியப்பை அளித்தது. ஆனால் அவனுக்கு அதைவிட முஸ்லிம் அதிகாரிகள் கலெக்டருடைய பேச்சை ஏற்று அதை ஆமோதித்தவாறே முஸ்லிம்களிடையே கோபமும் மதவெறியும் இருப்பதை வெளிக்காட்டினார்கள் என்பதில் ஆச்சரியம் அதிகமாக உண்டாகியது. கங்கா பிரஸாத் யோசித்துக்கொண்டிருந்தான். —பல நூற்றாண்டுகளாக ஹோலி பண்டிகை நடைபெற்று வருகிறது. ஆனால் மதக்கலவரம் நிகழ்ந்தது கிடையாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அனைவரும் கலந்தே ஹோலியில் வர்ணமும் சாயத்தண்ணீரும் ஒருவர் மேல் ஒருவர் தெளித்துக்கொண்டு விளையாடுவது வழக்கம். இந்த முறை ஹோலியின் போது மதக்கலவரம் உண்டாகலாம் என்று நினைக்கவும் அதைப்பற்றிச் சிந்திக்கவும் அவசியம் ஏன் உண்டாகியது?

10

மிஸ்டர் ஹாரிஸன் வீட்டில் நடந்த விருந்தில் மொத்தம் பன்னிரண்டு பேர்தான் இருந்தார்கள். அவர்களில் ஆறு

பேர் இந்தியர்கள். அந்த இந்தியர்களிலும் நான்கு பேர் ஹிந்துக்கள், இருவர் முஸ்லிம்கள்—ஸர் லட்சுமீசந்த், ராஜா சிவகுமார், ராய்பஹதூர் கோபிநாத் மற்றும் கங்காபிரஸாத். கான்பஹதூர் நூர்அஹமத், நவாப் அஷ்பாக் ஹுஸேன். எல்லோரும் கூடி மது அருந்திக் கொண்டே பேசத் தொடங்கினர். அப்போது கங்கா பிரஸாதுக்கு அது ஒரு அரசியல் கலந்த விருந்து எனத் தோன்றியது. ஆங்கிலேயர்களில் கான்பூர் கலெக்டரும் போலீஸ் ஸுபரின்டென்டெண்டும் தவிர நான்கு மில் முதலாளிகளும் இருந்தனர். மிஸ்டர் ஹாரிஸன் தேவையைவிடச் சிறிது அதிகமாகக் குடித்துவிட்டார். ஆவேசமடைந்து சொன்னார்: "மொத்தம் ஆறுவருடம் தண்டனை இந்த காந்திக்கு. இந்தியா முழுவதிலும் எதிர்ப்புக்கிளர்ச்சியைப் பரப்பிய இந்தத் துரோகியைத் துப்பாக்கியால் சுட்டிருக்க வேண்டும். என்ன ஸர் லட்சுமீசந்த், உம்முடைய கருத்தென்ன ?"

லட்சுமீசந்த் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பதில் அளித்தார் ராய்பஹதூர் கோபிநாத். "விடுங்கள், ஆபத்து தவிர்ந்துவிட்டது போங்கள்! இந்தத் துஷ்டன் என் வியாபாரத்துக்கே முடிவுகட்டிவிட்டான். மான்செஸ்டரிலிருந்து எனக்கு ஐந்து லட்சம் பெறுமான முள்ள துணி வருகிறது. நான் மிகவும் கவலை கொண்டிருந்தேன்."

கான்பஹதூர் நூர்அஹமத் பேசினார்: "என்ன வார்த்தை சொன்னீர் கோபிநாத் ஸாஹப்! மனிதன் தீவட்டிதான், நெருப்பை மூட்டிவிட்டான் எங்கும்!"

மிஸ்டர் ஹாரிஸனுடைய ஆவேசம் அதிகமாகியது. "அந்த நெருப்பு அணைந்துவிட்டது. நான் இன்று அந்தக் காட்டுமிராண்டி துரோஹி சிறையில் அடைபட்டதைக் கொண்டாடும் மகிழ்ச்சியில்தான் இந்த 'டின்னர்'

அளிக்கின்றேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.''

கங்கா பிரஸாத் தம்மோடு வந்திருந்த மற்ற இந்தியர்களைக் கவனித்தார். அந்த மனிதனின் தகாத வார்த்தையைக் கண்டும் ஒருவருடைய நெற்றியிலும் சுருக்கம்கூட காணவில்லை. அவரால் சும்மாயிருக்க முடியவில்லை. ''மிஸ்டர் ஹாரிஸன், நீங்கள் இந்த டின்னரின் நீசமான, அபவித்திரமான நோக்கத்தைக் குறிப்பிட்டிருந்தால் குறைந்தபட்சம் நான் இந்த டின்னரில் கலந்துகொண்டிருக்கமாட்டேன். ஒருவேளை இங்கு வந்தவர்களில் மற்றும் நாலாறு பேர்கள் வந்திருக்கமாட்டார்கள்.'' அனைவரும் கங்கா பிரஸாத் சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்டனர். மிஸ்டர் ஹாரிஸன் கான்பூரில் மிகப் பெரிய பணக்காரர், மில் முதலாளி. இங்கிலாந்தின் ஒரு உயர்ந்த பிரபு வம்சத்தினர் என்று தம்மைப்பற்றிப் பறைசாற்றிக்கொண்டவர். உக்கிர சுபாவத்துக்குப் பேர்போனவர். அவர் முகம் கோபத்தினால் சிவந்துவிட்டது. ''அப்படியானால் என்ன நீங்களும் அந்த துஷ்டன், கயவன், பொய்யன், மோசடிக்காரனாகிய காந்தியை மகாத்மா என்று நினைக்கிறீரா ?''

காரணமில்லாமல் ஹாரிஸன் திட்டுவதைக் கண்டு கங்கா பிரஸாத் கொதித்தெழுந்தான். ''மிஸ்டர் ஹாரிஸன், இது உன்னுடைய கயவாளித்தனம், நீசத்தனம். நீ அந்த மகாபுருஷரைத் திட்டுகிறாய். நாங்கள் அவரது அரசியல் கொள்கைகளை ஏற்கவில்லை. ஆனால், அவருடைய பெருந்தன்மை, தருமப் பண்பு மற்றும் நன்னடத்தையை மறுக்க இயலாது.''

ஹாரிஸன் எழுந்து நின்றார். ''நீ என்னைக் கயவன், நீசன் என்கிறாய். நீ கறுப்பன்; நாங்கள் உன்னைச் சேர்த்துக்கொண்டோம். அதன் விளைவு இதுதான்! மறுபடியும் சொன்னாயோ உன் முகத்தை உடைத்து

விடுவேன்.''

கங்கா பிரஸாத் தன் சட்டைக்கைகளை உயர்த்திவிட்ட வாறே எழுந்து நின்றான். "நீ ஒரு கயவன், நீசன், நன்றிகெட்டவன்.''

அங்கு ஒரே அமர்க்களம் ஆகிவிட்டது. அதிதிகள் இவ்விருவரையும் தடுத்து நிறுத்தினர். தவறு ஹாரிஸ னுடையது என்பது வெளிப்படையானதே. எல்லாரும், முக்கியமாக ஆங்கிலேயரில் முதலாளிகள் வற்புறுத்திய தனால் மிஸ்டர் ஹாரிஸன் மகாத்மா காந்தியைப் பற்றித் தான் கூறியதை வாபஸ் வாங்கிக்கொண்டார். அதன் பிறகு கங்கா பிரஸாதும் தன் சொற்களை வாபஸ் வாங்கிக்கொண்டான். சூழ்நிலை மீண்டும் அமைதி கொண்டதாகியது. விருந்தினர் உணவருந்தத் தொடங்கினர்.

அடுத்த நாள் கங்கா பிரஸாத் கச்சேரிக்குச் சென்ற போது கலெக்டருடைய ஜவான் வந்து சொன்னான்: "பெரியதுரை உங்களைக்கூப்பிடுறாருங்க.''

கங்கா பிரஸாத் நேராக கலெக்டரிடம் சென்றான். "மிஸ்டர் கங்கா பிரஸாத், இந்த ஹாரிஸன் முதல் நம்பர் துஷ்டன், முரடன்" என்றார் கலெக்டர்.

"துரை அவர்களே, அவர் குடித்திருந்தார். நானும் குடித்திருந்தேன்.'' கங்கா பிரஸாத் சிறிது சங்கோ சத்துடன் கூறினார்.

"இல்லை, அதில் உனது தவறு ஒன்றும் இல்லை. ஆனால் இந்த ஹாரிஸன் உன்னை விடமாட்டேன் என்கிறான். அவன் கமிஷனரிடம் உன்னைப்பற்றிக் குறைகூறி எழுதி யிருக்கிறான். அதை என் மூலமாக அனுப்பியிருக்கிறான். இதோ அவன் எழுதிய கடிதம்" என்று கூறி கலெக்டர் ஹாரிஸன் எழுதிய கடிதத்தை கங்கா பிரஸாதிடம் கொடுத்தார்.

கங்கா பிரஸாத் அதைப்படித்து திடுக்கிட்டான். அவன் ஒரு காங்கிரஸ் பேர்வழி என்று ஹாரிஸன் குற்றம் சாட்டியிருந்தான். கடந்த இரவில் நடந்ததை அவன் மிகைப்படுத்திக் குறிப்பிட்டிருந்தான். கடிதத்தைப் படித்துவிட்டு கங்கா பிரஸாத் கலெக்டரிடம் சொன்னன்: "இதில் எழுதியிருப்பது அனைத்தும் பொய் என்று உங்களுக்கே தெரியும்."

"ஆமாம், அதுவும் கெட்ட எண்ணம் நிறைந்த பொய். நான் இந்தக்கடிதத்தில் எனது குறிப்பையும் சேர்த்து எழுதுகிறேன். ஆனாலும் நீயும் கமிஷனரைப் போய்ப் பார்ப்பது நல்லது. இந்த ஹாரிஸனுடைய பேச்சுக்கு கமிஷனர் முக்கியத்துவம் கொடுக்கக்கூடும். கமிஷனருடைய மனதில் உன்னைப்பற்றிக் குறை உண்டாகிவிட்டால் அதனல் உன்னுடைய எதிர்காலம் பாதிக்கப் படும். இதை நான் கமிஷனருக்கு அனுப்புவதற்கு முன்னரே நீ கமிஷனரிடம் நடந்ததைச் சொல்லிவிடு. நான் எழுதும் குறிப்பு உனக்கு அனுகூலமாக இருக்கும்."

கலெக்டரிடமிருந்து வந்ததுமே கங்கா பிரஸாத் நான்கு நாட்களுக்கு விடுமுறை கேட்டு மனுச் செய்தார். கலெக்டர் உடனே அனுமதியளித்துவிட்டார்.

அலாகாபாத் சென்று கங்கா பிரஸாத் கமிஷனரைச் சந்தித்தார். கங்கா பிரஸாதின் வார்த்தையைக் கேட்டு அவர் சொன்னர்:

நீ காந்தியை மகாத்மா என்று நினைக்கிருய் அல்லவா? அவர் அறைகுறை நாகரிகம் படைத்த ராஜ துரோகம் செய்யும், மகாத்மா என்பது உன் கருத்து. அப்படித் தானே? கமிஷனருடைய குரலில் ஒருவகைக் குற்றச் சாட்டு பொதிந்திருந்தது.

கங்கா பிரஸாத் உறுதிமிக்க வணக்க பாவத்துடன் பதில் அளித்தான். "துரை அவர்களே, நான் அவருடைய

கருத்துக்களையும் அரசியல் கொள்கைகளையும் ஏற்க வில்லை. ஆனால் அவருடைய தருமநீதி, நன்னடத்தை— இவற்றை மதிக்கிறேன். பிறருடைய நற்பண்புகளை மதிப்பதிலிருந்து மக்களைத் தடுக்கும் அளவிற்கு பிரிட்டிஷ் ஜாதியினர் உதாரகுணமற்றவர் அல்ல என நான் நினைக் கிறேன்." கமிஷனர் தம் உதட்டைக் கடித்தவாறே சொன்னார்: "பிரிட்டிஷ் ஜாதி அவ்வளவு உதாரகுண மற்றதல்ல. ஆனால் தனி நபர் உதாரகுணமற்றவனாக இருக்கலாம். நீ சொன்னது சரியானால், ஹாரிஸன் செய்யும் குற்றச்சாட்டினால் என் உள்ளத்தில் எந்தவித மாறுபாடும் ஏற்படாது."

கங்கா பிரஸாத் திருப்தி அடைந்து சொன்னார்: "துரையே, நல்லது." பின்னர் ஏதோ அவன் சொல்லத் தொடங்கினான். அதற்குள் கமிஷனர் அவரைத் தடுத்துச் சொன்னார்: "மிஸ்டர் கங்கா பிரஸாத், நடந்தது நடந்து விட்டது. ஆனால் இனிமேல் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள். ஆங்கிலேயன், ஆங்கிலேயனே; இந்தியன் இந்தியனே! ஒருவன் ஆளுகின்றவன், மற்றவன் ஆளப்படுகின்றவன். உனக்கு இந்த வார்த்தை பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் இது உண்மை. ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட விவகாரங்களில் மௌனமாக இருப்பதே உனக்கு நன்மை பயக்கும்."

கமிஷனர் சொன்ன யோசனையை அவன் அப்பொழுதே கடைப்பிடித்தான்- "சரி துரையே!"

இயக்கம் இப்போது தீர்ந்துவிட்டாற்போலத்தான். நாட்டில் எங்கும் நிராசை குடிகொண்டது. காங்கிர ஸின் செயல்முறையைப்பற்றிப் புனர் ஆலோசனை செய்ய வேண்டும் என்ற கருத்து எங்கும் நிலவியது. ஆதலால், மக்கள் இயக்கத்தில் சோர்வடைந்துவிட்டனர் என்பது வெளியாயிற்று. ஒத்துழையாமைக்குப் பதிலாக பெரிய

மெள்ள ஒத்துழைப்பதுடன் எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்ற கொள்கையைப்பற்றி வெளிப்படை யாகப் பேசத் தொடங்கினர்.

ஆனல் கங்கா பிரஸாத் தம் உள்ளத்தில் ஒரு விசித்திர மான மாறுபாடு நிகழ்வதை உணர்ந்தான். ஒத்துழை யாமை இயக்கம் சோர்வுற்றதால் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. ஆனல் ஒருவகை அமைதியற்ற நிலையே உண்டாகியது. காரணம் என்னவென்று அவனுக்கு விளங்கவில்லை. திடீரென்று ஜூலை மாதத்துக் கடைசி வாரத்தில் அவருக்குத் தன் உள்ளத்தின் அசாந்திக்குக் காரணம் புலப்பட்டது. ஒரு காரணமுமின்றியே அவனை "ஏட்டா"வில் டிப்டிகலெக்டராக மாற்றல் செய்தனர். சர்க்கார் உத்தரவு கிடைத்தபோது அவர் காலை உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தார். உணவைப் பாதியில் விட்டு எழுந்திருந்தார். ஆகவே எனக்குக் கிடைத்த பரிசு இதுதானு!

ஒத்துழையாமை இயக்கத்தை அடக்க அவன் பாடு பட்டதைப்பற்றி மேலதிகாரிகளிடையே சர்ச்சை இருந்து வந்தது. அவனுக்கு சீக்கிரமாகவே பதவி உயர்வு கிடைக்கும், ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் பதவியில் அவன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. கான்பூரின் ஜாயின்ட் மாஜிஸ் டிரேட்டும் தம் லீவை ஜூன் 1923 வரைக்கும் நீடித்திருந் தார். அதுவரை தமக்கு மாற்றல் வராது என்று அவர் நினைத்திருந்தார். உடை அணிந்துகொண்டு அவர் கலெக்டரைப் பார்க்கப் போனர். கலெக்டர் சொன்னர்: "மிஸ்டர் கங்கா பிரஸாத், உனக்கு மாற்றல் வந்திருக் கிறது என்பதுபற்றி நான்வருந்துகிறேன். ஆனலும் வேறு வழியில்லை. கான்பூரில் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் ஐ. சி. எஸ். அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும். ஒருவேளை

ஐ. சி. எஸ்.ஸில் சிலர் புதிதாகச் சேர்ந்திருக்கக்கூடும். அவர்களை எங்கேயாவது நியமனம் செய்தே ஆக வேண்டும்."

"அப்படியானால் தாற்காலிகமாகக்கூட ஒரு ஐ. சி. எஸ். ஆபீஸரைத்தானே ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்டாக நியமித்திருக்கவேண்டும். என்னை ஏன் இந்த ஐ. சி. எஸ். இடத்தில் நியமித்தார்கள்?"

"நான் என்ன நினைக்கிறேன் என்றால், அப்போது இயக்கம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதை எதிர்க்க ஒரு தகுதி வாய்ந்த அனுபவமுள்ள ஆள் வேண்டியிருந்தது. அதனால் உன்னை இங்கு நியமித்தனர்."

கசப்பான குரலில் கங்கா பிரஸாத் கூறினார்: "இப்போது இயக்கம் முடிந்துவிட்டது, அவ்வளவு தானே! இந்த இயக்கம் முடிவடைந்துவிட்டபடியால் ஒரு இந்தியன் என்பதற்காக என்னைப் பாலில் விழுந்த ஈயை எடுத்தெறிவதுபோல் தூக்கி வெளியே போடுகிறார்கள்!"

கலெக்டர் கங்கா பிரஸாதை உன்னிப்பாகப் பார்த்தார். பிறகு சிறிது ஆழ்ந்த சிந்தனையோடு கூறினார்: "மிஸ்டர் கங்கா பிரஸாத். இந்த ஐ. சி. எஸ். என்கிற அமைப்பு இருக்கிறதே, இதில் தகுதி வாய்ந்த ஆங்கிலேய இளைஞர்கள் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படுகின்றனர். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சியின் அஸ்திவாரமாக இது அமைந்துள்ளது. பொறுப்புள்ள எல்லா சர்க்கார் பதவிகளிலும் ஐ. சி. எஸ். காரர்தான் நியமிக்கப்படுகிறார்கள். கான்பூரில் உள்ள ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் பதவியும் பொறுப்பு வாய்ந்த பதவியாகக் கருதப்படுகிறது."

கங்கா பிரஸாதுக்குத் திடீரென்று சில மாதங்களுக்கு முன் கமிஷனர் சொன்ன வார்த்தை நினைவுக்கு வந்தது.

அவன் கமிஷனர் சொன்னதைத் திருப்பிச் சொன்னான். "ஆமாம், எனக்குத் தெரியும். ஆங்கிலேயன் ஆங்கிலேயனே; இந்தியன் இந்தியனே. ஒருவன் ஆளுகின்றவன், மற்றவன் ஆளப்படுகின்றவன். இந்த ஐ. சி. எஸ். ஆளுகின்றவருடைய அமைப்பு." கங்கா பிரஸாதின் முகத்தில் கசப்பான புன்சிரிப்புத் தோன்றியது. "நன்றி துரையே. இனிமேல் நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. எனக்குத் தக்க விளக்கம் கிடைத்துவிட்டது."

கங்கா பிரஸாத் சொன்னது கலெக்டருக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் அதில் எவ்வளவு குமைச்சலும், நிர்ப்பந்த உணர்வும் நிறைந்திருந்ததென்பதைக் கலெக்டர் புரிந்துகொண்டார். அவருக்கு கங்கா பிரஸாதிடம் அனுதாபம் பிறந்தது. "மிஸ்டர் கங்கா பிரஸாத், நான் நினைக்கிறேன்; கூடிய விரைவில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தக் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். உனக்கு அநீதி இழைக்கப்படுகிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஒரு முறை நீ பிரதம காரியதரிசியைச் சந்தித்துப் பார்க்கலாம். இதுவே என் யோசனை. உன் "ரிகார்டு" மிகவும் நன்றாக இருக்கிறது. உன்னை ஏன் 'ஏட்டா'வுக்கு அனுப்புகின்றனர் என்று எனக்குப் புரியவில்லை."

கங்கா பிரஸாத் சீப் ஸெக்ரடரியைக் காணச் சென்றார். அவர் சொன்னார்: "மிஸ்டர் கங்கா பிரஸாத், நான் வருந்துகிறேன். இப்போது நான் 'ஏட்டா'வுக்குத் தான் உன்னை அனுப்ப இயலும். உன்னை நான் கான்பூரிலேயே வைத்திருப்பேன். ஆனால்....ஆனால், சரி, அதை விட்டுத் தள்ளு. ஒவ்வொருவருக்கும் சிரமங்கள் உண்டு. உனக்கு நான் என்ன யோசனை கூறக்கூடும் என்றால், நீ டிஸம்பர் மாதம்வரை லீவ் வாங்கிக்கொள். ஜனவரியில் நான் உன்னை ஏதாவது நல்ல இடத்திற்கு அனுப்பு

கிறேன். அதற்குள் ஏதாவது சரிப்பட்டு வரும்."

கங்கா பிரஸாதுக்கு சீப் ஸெக்ரடரி ஐ. சி. எஸ்.ஸைப் பற்றிய ஆட்சேபத்தைக் குறிப்பிடவில்லை என்பதில் ஆச்சரியம் உண்டாகியது. சீப் ஸெக்ரடரிக்கு என்ன சிரமம்,என்ன கட்டாய நிலை என்றும் அவருக்குத் தெரிய வில்லை. உடனே அவர் லீவுக்கு மனு எழுதிக் கொடுத் தார். சீப் ஸெக்ரடரி அதனை ஏற்றுக்கொண்டார்.

கங்கா பிரஸாதின் பிரிவுபசாரத்தின்போது லட்சுமீ சந்த் ஒரு "பார்ட்டி" கொடுத்தான். அதில் நகரத்துப் பிரமுகர்களும், வியாபாரிகளும், மில் முதலாளிகளும், ஜமீந்தார்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் கலந்துகொண்டனர். எல்லாரும் கங்கா பிரஸாத் மாற்றிப் போவதைப் பற்றி வருத்தம் தெரிவித்தனர். பார்ட்டி முடிந்து எல்லாரும் போகும்போது ஹாரிஸன் கங்கா பிரஸாதிடம் வந்தான். அவன் முகத்தில் ஒரு துஷ்டத் தனம் நிறைந்த மகிழ்ச்சி தோன்றியது. அவன் மெள்ள கங்கா பிரஸாதின் காதில் சொன்னான்: "மிஸ்டர் கங்கா பிரஸாத், இனிமேல் ஆங்கிலேயன் எவனுடனும் முரண் பட முயற்சிக்காதீர்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே வேகமாகப் போய்விட்டான்.

ஹாரிஸன் சொன்னதைக் கேட்டதுமே கங்கா பிரஸாதின் மூளையில் ஒரு மின்னல் மின்னியது. சீப் ஸெக்ரடரியின் நிர்ப்பந்த நிலை என்னவென்று அவனுக் குப் புரிந்துவிட்டது. மழைக்காலம் தீர்ந்தது. சூழ்நிலையில் மழைக்குப் பிந்திய பயங்கர இறுக்கம் நிரம்பியிருந்தது. கங்கா பிரஸாத் ஆகஸ்டு மாதத்தை அலாகாபாதில் கழித்துவிட்டு ஞானபிரகாஷுடன் தென்னிந்தியாவைச் சுற்றிப் பார்க்கப் போக எண்ணினர். ஆனால் கங்கா பிரஸாதின் உள்ளத்தில் தோன்றியிருந்த எரிச்சல் வளர்ந்துகொண்டேயிருந்தது.ஒரு அடங்காப்பிடாரியான

முரட்டு அநாகரிக ஆங்கிலேயன் ஒருவனிடம் நாம் தோல்வி யடைந்துவிட்டோம். ஒரு இந்தியன் என்ற காரணத்தினால் தான் என்ற உணர்வு அடிக்கடி தோன்றியது. அவருடைய இந்தத் தோல்விக்கு மூல காரணம் பிரிட்டிஷ் சர்க்காருடைய நிற வேற்றுமைக் கொள்கைதான். தன்னையறியாமலேயே அவர் தன் உணர்ச்சியில் ஞான பிரகாஷை நெருங்கிக்கொண்டிருந்தார். சத்தியம், நியாயம், மனிதத் தன்மை—ஒரு அடிமைக்கு இவை யொன்றும் கிடையாது. அடிமை என்ற முறையில் அவன் நிலை ஒரு வளர்ப்புப் பிராணி போன்றது. அது தன் எசமானனுடைய குறிப்பை உணர்ந்து நடக்கவேண்டும். அதில் எவ்வித சைதன்யமோ, உணர்வோ இருக்கக் கூடாது. கங்கா பிரஸாத் தம் உள்ளத்தில் தோன்று கின்ற எதிர்ப்பை எவ்வளவுக்கெவ்வளவு அடக்க முயன்றாரோ, அவ்வளவுக்கவ்வளவு அது வலு வடைந்து வந்தது.

அன்று அவர் டவுன் பக்கம் சுற்றிவிட்டுத் திரும்பி வந்தபோது வராந்தாவில் ஞானபிரகாஷும் பரஹ துல்லாவும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கங்கா பிரஸாத் பரஹதுல்லாவை நோக்கிச் சென்றார். "வணக்கம் பரஹதுல்லா ஸாஹப். என்ன விஷயம், எப்படி இவ்வளவு தூரம்?"

பரஹதுல்லா எழுந்திருந்து கங்கா பிரஸாதுடன் கை குலுக்கிவிட்டுச் சொன்னார்: "நான் இப்போது அலாகாபாதில்தான் இருக்கிறேன். ஞானபிரகாஷிடம் பேசலாம் என்று வந்தேன்."

இருவரும் உட்கார்ந்தனர். கங்கா பிரஸாத் கேட்டார். "ஜௌன்பூரை விட்டு விட்டீர்களா நீங்கள்? ஏன்?"

பரஹதுல்லா புன்முறுவல் செய்தார். "நான் எங்கே விட்டு விட்டு வந்தேன், ஜனங்கள் நான் அந்த ஊரை

விடும்படி கட்டாயப்படுத்தினர்கள். நாலு மாதம் அலாகாபாதில் இருந்துகொண்டே காங்கிரஸ் வேலையைக் கவனிக்கலாம் என நினைத்தேன். அப்துல் ஹக் ஸாஹெப் எனக்கு எதிராக விஷத்தைக் கக்கினர். அங்குள்ள முஸ்லிம்களைத் தூண்டிவிட்டார். ஆதலால் எனக்குத் தொல்லையாகப் போய்விட்டது. அவரோடு அலீரஜாவும் சேர்ந்துகொண்டான். அவன் குண்டா வேலையில் இறங்க முற்பட்டான். சரி, விடுங்கள் அதை. நீண்ட லீவில் இருக்கிறீர்களாமே! இப்போதுதான் ஞானபிரகாஷ் சொன்னர்.''

ஞானபிரகாஷ், ''பரஹதுல்லா ஸாஹெப், மதத்தையும் கடந்து நின்று நாம் சமூகத்தின் கெட்டபழக்கங்களைப் போக்கவேண்டும். மகாத்மா காந்தி சமூகத்தின் தீமைகளைக் களைந்தெறிய முற்பட்டிருக்கிறார். காங்கிரஸின் செயல் திட்டம் அரசியல் சம்பந்தமானதோடு சமூகத்தையும் பற்றியது. இது உங்களுக்குத் தெரியும்.''

''ஆம். ஆதலால்தான் நான் காங்கிரஸில் சேர்ந்தேன். காந்திஜியின் தலைமையை ஏற்றுக்கொண்டேன். ஆனல் ஒன்று, நான் முதலில் ஒரு முஸ்லிம். என் மதம் சமத்துவம், உண்மை என்ற அடிப்படையைக் கொண்டது. இதை நான் எப்படி மறக்க முடியும்? ஒவ்வொரு சமயம் என்னுள்ளத்தில் விசித்திரமான போராட்டம் உண்டாகிவிடுகிறது. அப்போது நான் மேற்கொண்ட பாதை சரியானதா என்று எண்ணிடுவேன். இஸ்லாமின் ஆன்மாவுக்கு எதிராகவும் சீர்திருத்தம் செய்யக்கூடுமா? மறுபடியும் சிந்திப்பேன். இதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்! தருமம், நன்னடத்தை இவற்றில் ஊன்றி நின்று கடவுளுடைய அடியார்களுக்குப் பணி செய்வதொன்றே நம் கடமை! கடவுளுடைய அடியார்களுக்கு நான் செய்யும் பணியையும் சமய நோக்கம் கொண்டுதான்

செய்கிறேன். எனது வாழ்க்கைக்கு ஒரே ஒரு கண்ணுடி மதம்!" இதைக் கூறிவிட்டு, பரஹதுல்லா சிரித்தார். "விடுங்கள் இந்தப் பேச்சை அன்பரே! நான் செய்தது சரியா, அல்லது அப்துல்ஹக்கும் அலீரஜாவும் செய்வது சரியா என்று கடவுள் தீர்ப்பு வழங்குவார். நான் நியாயத்தையும் தருமத்தையும் விட இயலாது.ஏனெனில் இவை மகாத்மாகாந்தியின்பால் இருக்கின்றன.அவரிடம் மற்றொரு சக்தியும் இருக்கிறது. அதுதான் அஹிம்சை. நான் அஹிம்சையை விரும்புகிறவன். ஆகவே எனக்கு ஒருவரிடமும் குறையில்லை; வருத்தம் இல்லை."

பரஹதுல்லா சென்ற பிறகு கங்கா பிரஸாத் ஞானபிரகாஷிடம் சொன்னார்: "சித்தப்பா. உன்னிடம் ஒரு யோசனை கேட்கவேண்டும்.உனக்கு தான் தெரியுமே, கான்பூரிலிருந்து எனக்கு மாற்றல் ஆகிவிட்டபடியால் நான் இந்த நீண்ட லீவ் எடுத்துக்கொண்டேன். ஆனால் எனக்கு ஏன் மாற்றல் வந்தது என்று உனக்குத் தெரியாது."

"இதை நீ எனக்குச் சொல்லவே இல்லை. நானும் கேட்பது சரியல்ல என்று இருந்துவிட்டேன்."

"இப்போது சொல்கிறேன். ஒரு துஷ்ட ஆங்கிலேயன் மகாத்மா காந்தியைப்பற்றி அவமதிப்பாகப் பேசினான். நான் அவனைத் திட்டிவிட்டேன், அதற்காகத்தான்!" கங்கா பிரஸாத் ஹாரிஸன் கதையை விஸ்தாரமாகச் சொன்னார்.

"நீ செய்தது முற்றிலும் சரி, தம்பி. நான் ஏன் காங்கிரஸில் சேர்ந்தேன் என்று இப்போது உனக்குப் புரிந்ததல்லவா!" "புரிந்துகொண்டேன் சித்தப்பா, இப்போது புரிகிறது. காங்கிரஸில் நீ சேருவதை நான் தடுக்க முயன்றேன், அது தவறு. நான் இப்பொழுது என்ன யோசிக்கிறேன் தெரியுமா? சர்க்கார் உத்தியோ

கத்தை ராஜிநாமா செய்துவிட்டு காங்கிரஸில் சேர்ந்து விடலாமா என்று நினைக்கிறேன்."

ஞானபிரகாஷ் திடுக்கிட்டார். "இது என்ன பைத்தியக்காரத்தனமாப் பேசறே! ராஜிநாமா கொடுத்து விட்டு நீ என்ன செய்வாய்? உனக்குப் பெண்டாட்டி குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களைப்பற்றி நீ கவலைப்பட வேண்டும். இன்னும் இரண்டு வருடத்தில் நவல் காலேஜில் சேரவேண்டும். பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டும். எனக்குத் தெரிந்தவரை, இந்த உத்தியோகத்தில் நீ ஒன்றும் மிச்சம் பண்ணவும் இல்லை." "பாங்கில் மொத்தம் சேமிப்பு இரண்டு இரண்டரை ஆயிரம் இருக்கும். அப்பாவிடம் சுமார் நாலாயிரம் தேறும். ஐந்து ஆறு ஆயிரம் ரூபாய் முதலீடு போட்டு அலாகாபாதில் ஏதாவது வியாபாரம் தொடங்கலாமா என்று யோசனை செய்கிறேன்."

ஞானபிரகாஷ் சிரித்தார். "காயஸ்த ஜாதிக்காரன் வியாபாரம் பண்ணுவானாம்! மாஜிஸ்டிரேட் உத்தியோகம் செய்து மிச்சப்படுத்தி வைத்திருக்கும் ரூபாயைக்கூட தொலைத்துவிட்டு நிற்பாய்!"

"வியாபாரம் வேண்டாம் என்றால் விட்டுவிடுவோம். என்னிடம் நகை கொஞ்சம் இருக்குது. அதை விற்றால் சுமார் ஏழாயிரம் ரூபாய் கிடைக்கும். என்னுடைய இந்த வைரமோதிரம் ஆறு-ஏழு ஆயிரம் ரூபாய் பெறும். இந்தப் பத்துப் பனிரண்டு ஆயிரத்தைப் போட்டு பங்களா ஒன்றைக் கட்டி வாடகைக்கு விடுவேன். மாதம் நூறு ரூபாய் கிடைக்கும். இருப்பதற்கு இந்த பங்களா இருக்கிறது. அப்பாவின் பென்ஷன், பங்களா வாடகை இரண்டும் சேர்ந்தால் வாழ்க்கை நடத்தப் போதுமானது!"

"ஆம், மதுவை முற்றிலும் விட்டு, எங்களைப்போல்

சாதாரண வாழ்க்கை நடத்தினல்!" ஞானபிரகாஷ் சொன்னர்: "இன்னும் நாலு அல்லது ஆறு வருஷம் கஷ்டப்பட வேண்டும். சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் அப்புறம் குஷிதான்."

கங்கா பிரஸாதின் இந்த முடிவைக் கேட்டு ஜ்வாலா பிரஸாதுக்கு உள்ளத்தில் பெருவேதனை உண்டாகியது. அவர் கங்கா பிரஸாதுக்கு அறிவுறுத்தப் பல வகையில் முயன்ருர். ஞானபிரகாஷ் கங்கா பிரஸாதின் பக்கமாக இருந்தார். தயங்கியவாறே சொன்னலும் அவன் பக்கமாகப் பேசினர். இரண்டு நாள்வரை வீட்டில் போராட்டம் நடந்தது, மூன்ரும் நாள் ஜ்வாலா பிராஸாத் சரணகதி செய்ய வேண்டி வந்தது.

மாலையில் ஞானபிரகாஷும் கங்கா பிரஸாதும் உட்கார்ந்துகொண்டு கடுமையான. ஆனல் கண்ணியமிக்க சொற்களில் ராஜீனமா கடிதத்தை எழுதினர்கள். அதில் ஜ்வாலா பிரஸாதின் யோசனைக்கிணங்க இங்குமங்கும் சிறிது மாற்றினர். பிறகு ஞானபிரகாஷ் அதை டைப் செய்தார். அதில் கங்கா பிரஸாத் திடசித்தத்துடன் கையொப்பமிட்டார். அவர் கையொப்பம் செய்த போது ஜ்வாலா பிரஸாத் தம் உணர்ச்சியை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அவர் அறையிலிருந்து வெளியே சென்றுவிட்டார். அவர் கண்களில் நீர் நிறைந்தது.

ஜ்வாலா பிரஸாத் அறையிலிருந்து வெளியில் சென்ருரோ இல்லையோ, இதற்குள் பரஹதுல்லா வராந்தாவில் வந்து "ஞானபிரகாஷ் வீட்டில் இருக்கிருரா?" என்று குரல் கொடுத்தார்.

பரஹதுல்லாவின் முகத்தில் பரபரப்புத் தோன்றியது. அவர் கையில் "பயோனியர்" செய்தித் தாள் இருந்தது. அது விசேஷப் பதிப்பு. ஆனல் ஜ்வாலா பிரஸாத் இதைக் கவனிக்கவில்லை. பாராமுகமாகப் பதில் சொன்னர்.

"அறையில் உட்கார்ந்திருக்கிறார், வாருங்கள்!" ஜ்வாலா பிரஸாத் பரஹதுல்லாவுடன் அறைக்குள் நுழைந்தார்.

பரஹதுல்லா வாசலிலிருந்தபடியே கத்திச் சொன்னார்: "ஆபத்து வந்துவிட்டது ஞானபிரகாஷ் ஸாஹப். மூல்தானில் நேற்று ஹிந்து-முஸ்லிம் கலவரம் உண்டாகி விட்டது." "என்ன, ஹிந்து முஸ்லிம் கலவரமா, மூல்தானிலா, என்ன சொல்லுகிறீர்?"

"ஆம், இதோ "பயோனியர்" விசேஷப் பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது. கடவுளே! என்ன நடக்கப் போகிறதோ?"

அனைவரும் செய்தியைப் படித்தனர். அறையில் நிராசை நிரம்பியது. சிறிது நேரம் அனைவரும் மௌன மாக இருந்தனர்.

பரஹதுல்லா சொன்னார்: "முஸ்லிம்களிடையே இந்த நெருப்பை யார் மூட்டினார்கள்? இன்றே இரவு வண்டியில் என்னை மூல்தான் போகும்படி சொல்லியிருக்கின்றனர். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு இது ஒரு அடி."

ஞானபிரகாஷ் சொன்னார்: "சர்க்கார் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்கத் தன் பயங்கர நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டது.

கங்கா பிரஸாதின் பழைய தனித்தன்மை மீண்டும் திடீரென்று விழிப்புற்றது. "சித்தப்பா, நீ தவறு செய்கிறாய்! இந்த ஒற்றுமை ஒருபோதும் நிலவியதில்லை. செயற்கை உபாயங்களினால் இது உருவாக்கப்பட்டது. செயற்கை உபாயங்களினால் இது அழிக்கப்படுகிறது."

பரஹதுல்லா வியப்போடு கங்கா பிரஸாதைப் பார்த்தார். "இது என்ன சொல்கிறீர் அன்பரே!"

கங்கா பிரஸாதிற்கு ஏதோ மருள் வந்துவிட்டது போலாகியது. சரியாகத்தான் சொல்கிறேன் பரஹதுல்

லா ஸாஹப். இந்த அடிமைத்தளையிலிருந்து நமக்கு விடுதலை கிடைப்பதாகத் தெரியவில்லை. இந்தக் கலவரம் இன்னும் வளரும். கட்டுக்கு அடங்காமல் வளரும். இது ஆரம்பம் தான்! அன்று நீங்கள் சொன்னீர்கள், ஹிந்து முஸ்லிம் வேறுபாடு அடித்தளத்திலுள்ள வேறுபாடு என்று! இப்போது நான் அதை ஒப்புக்கொள்ளுகிறேன், இதை ஒழிக்க நூற்றுக்கணக்கான வருடங்கள் ஆகும். யாரை இவ்வளவு நாள் எதிர்பார்த்திருக்க முடியும். ஆகவே சித்தப்பா! நான் மயிரிழையில் பிழைத்தேன். அடிமையாக இருக்கத்தான் வேண்டுமென்றால் சந்தோஷமாக அதை அனுபவிக்கலாமே!" இதைச் சொல்லி கங்கா பிரஸாத் தம் கையிலிருந்த ராஜீனாமாக் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார்.

மூன்றாம் பாகம்

1

நவல் கண்களைத் திறந்தான். எதிரிலிருந்த மேஜை மேல் இருந்த அலாரம் கடிகாரத்தின் மேல் அவன் பார்வை சென்றது. மூன்றரை மணி அடித்துவிட்டது. அறைக்குள் ஜன்னல் வழியாக வெளிச்சம் பரவிக்கொண்டிருந்தது. அவன் எழுந்து உட்கார்ந்தான். அவனுக்கு எழுந்திருக்க மனம் வரவில்லைதான். திடீரென்று அவனுக்கு நினைவுக்கு வந்தது—இன்று காலை அவன் பி.ஏ. பரீட்சை கடைசி பேப்பர் எழுதியாயிற்று. இனி பரீட்சைக்குப் படிக்க வேண்டியதில்லை. இரவு முழுவதும் கண் விழிக்க வேண்டியதில்லை; ஹாஸ்டல் அறையில் அடை

பட்டுக் கிடக்கவேண்டியதில்லை. உள்ளத்தில் ஒரு உல்லாசமும், உற்சாகமும் தோன்றுவதை உணர்ந்தான். அவன் அறையின் கதவைத் திறந்து வைத்துவிட்டுச் சோம்பலுடன் நாற்காலியில் அமர்ந்தான்.

எதிரில் மார்ச் மாதத்திய இதமான வெதுவெதுப்பு நிறைந்த பொன்னிற வெயில் படர்ந்திருந்தது. பசுமை கொண்ட பட்டுப்போன்ற புல் தரையின் ஓரமாக பன்னிறப் பூக்கள் பூத்திருந்தன. நவலின் பார்வை அந்தப் பூக்களின் மீது படிந்து நிலைத்தது. அவன் யோசனையில் ஆழ்ந்தான். ஒரேயடியாக ஆயிரம் ஆயிரம் பூக்கள், பலவித வர்ணங்களில் பூத்துக் குலுங்கின. இந்தப் பூக்கள் எங்கிருந்து வந்தன? இவ் வர்ணங்களின் வெவ்வேறு சாயல்களும் எங்கே உதித்தன ? சின்னஞ் சிறு விதைகளிலா, மண்ணிலா, மண்ணை நனைத்த தண்ணீரிலா அல்லது அம்மலர்கள் மலர்ந்த பருவத்திலா? மலர்கள் பூக்கின்றன, வாடுகின்றன. இந்த மலர்தலும் வாடுதலும் ஏன் ?

இந்தக் கேள்வியும் சந்தேகமும் மலர்களைப் பற்றி மட்டுமா, சிருஷ்டியனைத்தையுமே பற்றியது. மனிதன் பிறக்கிறான், இறக்கிறான். ஆவதும் அழிவதும் இயற்கையின் நியதி. திடீரென நவலின் பார்வை, அவன் பரீட்சை எழுதப் போகும்போது மேஜை மேல் விரித்துப் போட்டுவிட்டுச் சென்ற வரலாற்றுப் புத்தகத்தின் மேல் விழுந்தது. அதைப் பார்த்து அவன் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்தது.

காலையில் எழுதிய பரீட்சைத் தாளில் ஒரு கேள்வி: "முகலாயப் பேரரசு அழிந்துபோனதற்குக் காரணங்களைக் கூறுக?"

நவல் அந்தக் கேள்விக்கு விடை எழுதும்போது சிறிது யோசனை செய்தான். இதற்கு விடையாக

அவன் மனதில் தோன்றியது என்ன? "முகலாயர் பேரரசு அழிந்ததற்குக் காரணம் பிரிட்டிஷ் பேரரசு நிறுவப்பட்டதுதான்." ஆனால் அப்படி எழுதாது புத்தகத்தில் படித்திருந்த காரணங்களை அவன் எழுதினான். புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருந்த காரணங்கள் தவறானவை என்பது நவலுடைய கருத்து. ஆவது அழிகிறது, பழையது அழிகிறது, புதியது உண்டாகிறது. ஆனால் இந்த விடை தத்துவ சாஸ்திரத்தின்பாற் பட்டது. வரலாற்றுச் சார்புடைய மலர்களுக்கு வரலாறு எழுதப்படுவதில்லை. ஒவ்வொரு வருடமும் வசந்த ருதுவில் கணக்கற்ற பூக்கள் மலர்கின்றன. கோடை காலம் தோன்றியதும் அவை அனைத்தும் வாடிவிடுகின்றன. ஆனால் இந்தக் காரணமில்லாத அழகின் சிருஷ்டி, காரணமின்றித் தோன்றும் அழகின் அழிவு—இது நவலுக்குப் புரியவில்லை.

நவல் சோம்பல் முறித்து எழுந்து நின்றான். மூலையில் வைத்திருந்த "ஸ்டவ்வை" மூட்டினான். தேனீருக்காகத் தண்ணீரைக் கொதிக்கவைத்தான். மீண்டும் நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொண்டான். வெளி 'புல்' தரையைப் பார்வையிட்டான். திடீரென எங்கோ தொலைவிலிருந்து வரும் குயிலின் "குஹூ குஹூ" என்ற ஒலி கேட்டது. எவ்வளவு இனிமை இந்தக் குயிலின் குரல்! வசந்தருதுவின் மோகனச் சங்கீதமனைத்தும் குயிலின் அந்த ஒலியில் பொங்கி வழிந்தது போலும். மிக இயற்கையாக குயிலினுடைய அந்த ஒலி 'உஷா'வின் இனிய சங்கீதம் ததும்பும் குரலாக மாறிவிட்டது.

உஷா! எல்லையற்ற அழகை வரப்பிரஸாதத்தைப் பெற்று அவள் வந்திருக்கிறாள். எவ்வளவு இனிமையானது அவளுடைய குரல்! உஷாவின் முன்னிலையில் அவன் தன்னை மறந்தவனாக நினைவிழந்து செல்லுகிறான்.

உஷா நவலை மிக சகஜமாகக் கேட்கிருள். "என்ன யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள்." நவலுக்கு நினைவு திரும்புகிறது. அவன் சொல்லுகிருன்: "உஷா, கடவுள் உன்னைப்போல அழகு படைத்த வேறு யாரையாவது படைத்திருப்பாரா என்று யோசிக்கிறேன்." நவலின் உரை கேட்டு உஷா கலகலவென்று சிரிக்கிருள். எண்ணற்ற மலர்கள் ஒருமிக்கப் பொழிந்தது போன்ற காட்சி! "போங்கள்! நீங்கள் என்னைப் பரிகாசம் செய்கிறீர்கள்!" அவள் ஓடிவிடுகிருள். அவள் ஓடுகிருள், ஆனல் வெகு தூரம் அல்ல, சிறிது தொலேவில் அவள் நின்றுவிடுகிருள். பிறகு அங்கிருந்து திரும்பி வந்து மிகவும் ஆழ்ந்த சிந்தனையோடு அவனைவிட்டுக் கொஞ்சம் எட்டியே அமர்ந்துகொள்ளுகிருள். ஒரு சமயம் வரலாற்றைப்பற்றியும், ஒரு சமயம் இலக்கியத்தைப்பற்றியும் கேள்விமேல் கேள்விகேட்டு அவனைத் தன்னிடத்திலேயே சிக்கும்படி செய்கிருள்!

உஷா இந்த வருடம் இன்டர்மீடியட் பரீட்சை எழுதியிருக்கிருள். பரீட்சை முடிந்து ஒரு வாரம் ஆகியது. சுமார் ஒரு மாதமாக அவன் உஷாவைச் சந்திக்கவில்லை; அவனுக்கும் பரீட்சை இருந்தது; இன்று முடிவடைந்த பரீட்சை!

உஷா ராய்பஹதூர் காமதாநாத்தின் புதல்வி. ராய்பஹதூர் காமதாநாத் கங்கா பிரஸாதின் நெருங்கிய நண்பர். நவல் காமதாநாத் வீட்டுப்பிள்ளை எனவே கருதப்பட்டான். காமதாநாத் உஷாவை நவலுக்குக் கல்யாணம்செய்விக்க விரும்புகிருர் என்று நவலுக்குத் தெரியும். உஷாவும் இதை அறிவாள். நவலுடைய முகத்தில் மெல்லிய நகை தோன்றுகின்றது. அப்போது அவனுடைய பார்வை எதிரில் 'ஸ்டவ்'மேல் விழுகிறது— தண்ணீர் கொதிக்கத் தொடங்கியிருக்கிறது.

நவல் எழுந்து தேனீர் தயாரித்தான். பிறகு தன் பழக்கப்படி அங்கிருந்தபடியே கூவி அழைத்தான்—"பிரேம் சங்கர், அட பிரேம் சங்கர், டீ தயாராகிவிட்டது!"

பக்கத்து அறையின் கதவு திறந்து மூடப்படும் சத்தம் கேட்டது. பிரேம்சங்கர் அவன் அறைக்குள் வந்தான்.

"என்ன நவல், இன்று பேப்பர் எப்படி இருந்தது."

"நன்றாகவே இருந்தது. ஹை ஸெகண்ட் கிளாஸ் கிடைத்துவிடும். பர்ஸ்ட் கிளாஸ் கிடைக்காது!"

"இதுதான் உன்னுடைய தொல்லை! நீ முதல் வகுப்பு எளிதில் பெறலாம், நீ உழைத்தால்தானே, சரி, பரவாயில்லை."

பிரேம்சங்கர் டீ குடித்துக்கொண்டே சொன்னான்: "நவல், உன்னால் உழைத்துப் படிக்க முடியும். ஆனால் முயற்சி செய்யமாட்டேன் என்கிறாய். உனக்கு எல்லாம் முயற்சி இன்றியே கிடைத்து வந்திருக்கிறது." பிறகு சிறிது நேரம் பொறுத்து அவன் கேட்டான். "மேற் கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?"

"என்ன செய்வதா? இப்பொழுது ஒன்றும் சொல்ல இயலாது. ஆனால் அநேகமாக செப்டம்பரில் இங்கிலாந்து போகக்கூடும். அங்கே ஐ.சி. எஸ். பரீட்சை எழுதுவேன். பாஸ்போர்ட் வாங்கியாகிவிட்டது. அங்கே ஜாகை வசதிக்காக அப்பா கடிதம் எழுதியிருக்கிறார்."

பிரேம்சங்கர் புன்னகை செய்தான். "ஆம், நீ ஐ.சி.எஸ். ஆகிவிடுவாய் என்று நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். ஆனால் நான் இப்போது நீ என்ன செய்யப்போகிறாய் என்றுதான் கேட்டேன். உன் புண்ணியத்தால் எனக்கு இந்த மாலை நேரத்து 'டீ' கிடைத்துவிடுகிறது. இனி அது கிடைக்காது."

பிரேம்சங்கர் எல். எல். பீ. பைனலில் படித்துக்

கொண்டிருந்தான். அவன் வயதில் நவலைவிட மிகப் பெரியவன். ஆனால் பார்ப்பதற்கு நவல் வயதுதான் சொல்லலாம். சிவந்த நிறம், அழகுத் தோற்றம், நடுத்தர உயரம், கரிய பெரிய கண்கள், தலைமயிர் நடுவில் வகிடு எடுத்து வாரிவிடப்பட்டிருந்தது. அவனுடைய தோற்றத்தில் ஒருவகை மென்மை இலங்கியது. அவன் குரலில் ஒருவித இனிமை இழையோடியது. கண்கள் ஏதோ தம்மை மறந்தன போன்று இருந்தன. பிரேம்சங்கர் எம்.ஏ. முதல் வகுப்பில் பாஸ் செய்திருந்தான். அதன் பிறகு அவன் சட்டப் படிப்பு படிக்கலானான்.

நவல் சொன்னான்: "இப்போது இன்னும் ஒரு வாரத்திற்கு நான் இங்கே இருப்பேன். அப்பா எழுதியிருக்கிறார்—பதஹ்பூரில் சித்தப்பா பிள்ளைக்குக் கல்யாணமாம். ஆகவே நானும் அப்பாவுடன் பதஹ்பூர் போக வேண்டும். அவர் விரும்புகிறார். 'டீ' பாத்திரங்களை இங்கேயே விட்டுச் செல்கிறேன். நீ சுகயீயை டீ போட்டுத் தரச் சொல். நானும் அவனிடம் சொல்லிவிட்டுப் போகிறேன். நீ போகும்போது இவற்றைச் சுகயீயிடம் கொடுத்துவிடு. அவன் இவற்றைப் பங்களாவில் கொண்டு சேர்த்துவிடுவான்."

பிரேம்சங்கர் புன்னகை செய்தான். "இதெல்லாம் என்னால் ஆகாது. நீதான் டீ சாப்பிடும் பழக்கத்தை எனக்கு உண்டாக்கிவிட்டாய். நீ சென்ற பிறகு நான் இந்தப் பழக்கத்தை விட்டாலும் விடுவேன்."

திடீரென்று நவலுக்கு ஏதோ நினைவுக்கு வந்தது. "நேற்று மாலை நீ யாரோ ஒரு ஆங்கிலேயனோடு சிவில் லைன்ஸ் பக்கம் சுற்றிக்கொண்டிருந்தாயாமே. ஜீவன் இன்று மத்தியானம் என்னிடம் சொன்னார். யார் அது? உன்னுடைய நண்பனை எங்களுக்கும் அறிமுகம் செய்து வையேன்!"

"அவன் ஒரு 'டூரிஸ்ட்'. சிவில் லைன்ஸில் சந்தித்தான். தற்செயலாக ஏற்பட்ட சாதாரண சந்திப்புதான். எந்த ஒரு சிறு நிகழ்ச்சியும் மக்கள் கண்ணிற்குத் தப்ப முடியாது. நடந்ததைப் பற்றி மிகைப்படுத்தியும் பேச்சு அடிபட ஆரம்பித்துவிடுகிறது."

பிரேம்சங்கர் பேச்சை மழுப்புகிறான் என்று நவலுக்கு விளங்கிவிட்டது. மேற்கொண்டு கேட்பது உசிதமல்லவென்று அவனுக்குத் தோன்றியது. பிரேம் சங்கர் டீ குடித்து முடிந்ததும் நவல் சொன்னான்: "சும்மாதான் கேட்டேன். பரீட்சை முடிந்த பிறகு நீ என்ன செய்யப்போகிறாய்?"

பிரேம்சங்கர் தன் பையிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டே "என் புரோகிராம் எனக்கே தெரியாது. எனக்குத்தான் வீடு வாசல் ஒன்றும் கிடையாதே. பரீட்சை முடிந்த அன்று மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசனை செய்வேன். நீ ஒருவேளை இன்று எங்காவது உலாவப் போக எண்ணியிருக்கலாம். நேரமாகிவிட்டது, நான் போய் மீண்டும் புத்தகங்களோடு மல்லாடுகிறேன்."

பிரேம்சங்கர் போட்டிருந்த மெல்லிய ஜிப்பா மூன்று நாட்களாக மாற்றப்படவில்லை. ஒரே அழுக்கு. அவன் போட்டுக்கொண்டிருந்த பைஜாமாவும் சுருக்கம் விழுந்து அழுக்காக இருந்தது. நவல் சொன்னான்: "அது சரி, ஆனால் ஒன்று; முதலில் 'டிரஸ்' மாற்றிக்கொள்."

"ஓ! டிரஸ் மாற்ற நான் மறந்தேபோய்விட்டேன்." பிரேம்சங்கர் சிரித்தான். "நமது தற்கால வாழ்க்கைதான் எவ்வளவு சிக்கலானது! நல்ல துணிமணி வேண்டும். வேலையில் மனதை ஈடுபடுத்த சிகரெட் வேண்டும். இன்னும் என்னென்ன வேண்டுமோ? இந்த 'வேண்டும்' என்பதற்குப்

பின்னால் பணம் நிழலாடுகிறது. பணம்தான் இன்றையப் பிரச்னை எல்லாம். சரி, விட்டுத்தள்ளு. உனக்கு நேரம் ஆகிவிடும், நான் போகிறேன்." பிரேம் சங்கர் போய்விட்டான்.

நவல் குளித்துவிட்டு ஆடை மாற்றிக்கொண்டபோது மணி ஐந்து. சுவரில் மாட்டியிருந்த டென்னிஸ் ராகட்டை எடுத்துக்கொண்டான். ஒரு மாதமாக அவன் அந்த ராகட்டைத் தொடவில்லை. சைக்கிளை எடுத்துக்கொண்டு எல்பிரேட் பூங்காவை நோக்கிப் போனான். டென்னிஸ் இரண்டு 'ஸெட்' விளையாடியதும் அவன் களைத்து விட்டான். ஒரு மாதமாகப் பழக்கம் விட்டுப்போயிருந்த தல்லவா! சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு ராய்பஹதூர் காமதாநாத் வீட்டுக்குப் புறப்பட்டான்.

ராய்பஹதூர் காமதாநாதின் வீடு முட்டீகஞ்சில் இருந்தது. வெளியிலிருந்து பார்க்க அந்த வீடு வெகு சாதாரணமாகத்தான் தோன்றும். ஒரு பெரிய சுவர், அதையொட்டினாற்போல் குடிசைக் கடைகள். சுவரின் மத்திய பாகத்தில் ஒரு பெரிய வாசல். உள்ளே ஒரு தோட்டம். தோட்டத்தில் காமதாநாதின் இரண்டடுக்கு மாளிகை. முற்றத்தில் கல் பாவப்பட்டிருந்தது. இங்கும் ஒரு வாசல் இருந்தது. வாசலுக்கு இரண்டு பக்கங்களிலும் நீண்ட இன்னொரு தோட்டம். தோட்டத்திற்கு அப்பால் பெண்கள் வசிக்கும் பகுதி. வெளிப்புறப் பகுதியில் ஆடவர் வசிக்கும் பாகம்!

காமதாநாத் நவலை உட்காரச் சொன்னார், "நவல், ரொம்ப நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறாய்; பேப்பர் எல்லாம் எப்படிச் செய்திருக்கிறாய்?"

"நன்றாகத்தான் செய்திருக்கிறேன். ஹை செகண்ட் கிளாஸ் கிடைக்கும்."

"வெளிநாட்டுக்கு எப்போது போகிறாய்?" காமதா

நாதுக்கு எதோ நினைவுக்கு வந்தது போலும். "நீயும் எங்களோடுகூட ஸ்விட்ஜர்லாந்து வாயேன். நீ எப்படியும் வெளிநாடு போகத்தான் போகிறாய், என்னோடுகூட இப்பொழுதே வந்துவிடேன்!"

நவல் ராய்பஹதூர் காமதாநாதின் யோசனையைக் கேட்டுத்திடுக்கிட்டான். "இன்றுதான் கடைசிப்பரீட்சை. முதலில் ரிஸல்ட் வரட்டும். பிறகு நான் வெளிநாடு செல்வது பற்றி.

காமதாநாதுக்குத் தன் வார்த்தை சரியெனப் பட்டு விட்டது. "அட, நீ பாஸ் செய்யத்தான் போகிறாய்; ரிஸல்டை கேபிள்கிராம் மூலமாக ஸ்விட்ஜர்லாந்துக்கு அனுப்பச்சொல். நாங்களும் ஏப்ரல் கடைசியில்தான் போவோம். இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் இருக்கிறது."

அப்போது உஷா முகம் கழுவிக்கொண்டு வந்து ஒரு நாற்காலியில் பேசாமல் உட்கார்ந்துகொண்டாள். காமதாநாத் உஷாவிடம் சொன்னார்: "இப்போது எனக்கு ஒரு பெரிய யோசனை தோன்றியது. நவல் ஐ. சி. எஸ்.ஸுக்காக சீமைக்குப் போகவிருக்கிறான். நம்மோடுகூட ஸ்விட்ஜர்லாந்து வரும்படி நான் சொல்லியிருக்கிறேன். அக்டோபர் மாதத்தில் நாம் இந்தியாவுக்குத் திரும்பி வருவோம். இவன் அப்படியே இங்கிலாந்துக்குப் போகலாம்."

உஷாவின் வருத்தமனைத்தும் பறந்துவிட்டது. "ஆஹாஹா, என்ன அருமையான யோசனை! நவல்பாபூ, எங்களோடு நீங்கள் வந்துதான் ஆகவேண்டும், மறுக்கக் கூடாது."

அப்போது காமதாநாதின் மனைவி சொன்னாள்: "குழந்தை நவல்! நீயும் கூடப்போவதாக இருந்தால் நான் நிச்சிந்தையாக இருப்பேன். இவரைத்தான் உனக்

குத் தெரியுமே. உஷா இன்னும் சிறு குழந்தை. உன் துணை கிடைத்தால் மிகவும் நல்லது."

நவல் சங்கடத்தில் மாட்டிக்கொண்டான். இந்த யோசனை திடீரெனத் தோன்றியதால் அவன் தயாராக இல்லை. நான் முதலில் அப்பாவைக் கேட்கவேண்டும். அப்பா அனுமதி அளித்தால் நானும் வருவேன்.

காமதாநாதின் மனைவி கூறினள்: "கேட்டீர்களா, நாளைக்கே கலெக்டருக்குக் கடிதம் எழுதுங்கள். உங்களுடைய பேச்சை அவர் தட்டமாட்டார். நவல் சொல்லுவது சரிதானே, வெளிநாட்டுக்குப் போகிற விஷயம், அவனுடைய அப்பாவின் அனுமதியைப் பெற வேண்டும்."

"அட கடிதம் கிடிதம் எல்லாம் எதற்கு. நானே நேராக நாளைக்கோ, நாளை நின்றோ மிர்ஜாபூர் போகிறேன். எவ்வளவு தூரம் இங்கிருந்து! தவிர, பாபூ கங்கா பிரஸாத் பணத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமுமில்லை.நவல் என்னோடு வருவான். நான் மூன்று பேருக்காக "கப்பல் டிக்கெட்" பதிவு செய்துவிடுகிறேன்."

நவலுக்கு ராய்பஹதூர் காமதாநாதின் உதவியில் பிரயாணம் செய்ய விருப்பமில்லை. அவன் சொன்னான்: "முதலில் நான் அப்பாவைக் கேட்டு அனுமதி பெற்றுக் கொள்ளுகிறேன். அப்புறம் நீங்கள் எனக்காக டிக்கெட்புக் செய்யுங்கள். நீங்கள் வேண்டுமானல் அப்பாவுக்குக் கடிதம் எழுதுங்கள் அல்லது நேராகச் சென்று சந்தியுங்கள்."

"கங்கா பிரஸாதின் அனுமதி உனக்குக் கிடைத்துவிட்டதென்றே எண்ணிக்கொள்." காமதாநாத் தன்னம்பிக்கையோடு கூறினர். "நீ நாளைக்கே உஷாவையும் கூட அழைத்துக்கொண்டு சிவில் லைன்சில் டேவிட்ஸன் கடைக்குப்போ.அங்கு உனக்காக ஸூட் தைத்துக்கொள்.

உஷாவுக்காக ஆடைகளுக்கும் ஆர்டர் கொடுத்துவிடு."

"நல்லது" என்று சொல்லிவிட்டு நவல் உஷா பக்கமாகத் திரும்பினன். "இந்தப் பேச்சுவார்த்தையில், உன் பரீட்சையைப்பற்றிக் கேட்கவே மறந்துவிட்டேன். என் பரீட்சை காரணமாக நான் வரவே முடியவில்லை!"

உஷா சிறிது கோபமடைந்து சொன்னள்: "நீங்கள் வரமுடியாமல் போனல் என்ன? பாடம்தான் சொல்லிக் கொடுத்துவிட்டீர்களே! இந்த முறை இரண்டாம் வகுப்பு கிடைத்துவிடும். ஆனல் பி.ஏ.வில் எனக்கு யார் பாடம் சொல்லிக்கொடுப்பார்கள்!" அவள் கலகல வென்று சிரித்தாள். "புத்தகங்களை ஸ்விட்ஜர்லாந்துக்கு எடுத்து வருகிறேன். அங்கேயே நீங்கள் எனக்குப் பாடம் சொல்லிக்கொடுங்கள்."

நவல் புன்னகை புரிந்தான். "அங்கே நாம் ஊர் சுற்றிப் பார்க்கிற மும்மரத்தில் ஒழிவு கிடைக்குமா? நல்லது. நாளைக்கு மாலை நீ தயாராக இரு. நான்போகிறேன். நேரம் ஆகிவிட்டது" என்று கூறி நவல் எழுந்திருந்தான்.

"சரிதான்; சாப்பிடாமல் எப்படிப் போகலாம் நீங்கள்" உஷா நவலுடைய கையைப் பிடித்து உட்கார வைத்தாள்.

ராய்பஹதூர் காமதாநாத் வீட்டில் சாப்பிட்டுவிட்டு நவல் ம்யோர் ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தபோது பதினேரு மணி அடித்துவிட்டது. இன்றைய தினம் மகிழ்ச்சிமிக்க நாள். அறைக்கு அருகில் வந்தபோது பிரேம் சங்கரின் அறைக்கதவு திறந்திருப்பதைப் பார்த்தான். பிரேம் சங்கர் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தான். நவலைப் பார்த்ததும் பிரேம் சங்கர் எழுந்து நின்முன். "இன்றைய மாலை குஷியாகக் கழிந்தது போல் காண்கிறது!"

பிரேம்சங்கரின் உருவத்திலிருந்து அவன் மாலையில்

எங்கேயோ சென்றிருந்தான் எனத் தோன்றியது.

"நீயும் வெளியே போயிருந்தாய் அல்லவா?"

பிரேம்சங்கர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டான்.

"நவல், மாலையில் நான் உன்னிடம் பொய்தான் சொன்னேன். அந்த ஆங்கிலேயனைச் சந்திக்கவே இன்றும் போயிருந்தேன். அவர்கள் கொஞ்சம் விசித்திரமானவர்கள். ஆங்கிலேயராக இருந்தும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் பெரும் விரோதி."

"அவர்களை நானும் சந்திக்க விரும்புகிறேன் பிரேம் சங்கர். என்னையும் அழைத்துக்கொண்டு போவாயா?"

"இல்லை, நான் உன்னை ஆபத்தில் மாட்டிவைக்கக் கூடாது. அதனால்தான் மாலையில் உன்னிடம் பொய் சொன்னேன். அவர்கள் ஒருவேளை கம்யூனிஸ்டுகளாக இருக்கலாம். அல்லது பிரிட்டிஷ் ஒற்றர்களாக இருக்கலாம். இந்த நட்பு ஆபத்தாக முடியலாம். அதிலும் உனக்கு...."

நவல் பிரேம் சங்கரை உற்றுப் பார்த்தான். "நீ ஏன் இந்த ஆபத்தை ஏற்கிறாய் பிரேம்சங்கர்?"

"என்னுடைய வாழ்க்கை முழுவதுமே போராட்டம் நிறைந்தது. என் தந்தை எப்போது மரணமடைந்தார் என எனக்கு நினைவில்லை. என் தாய் என்னைப் படிக்க வைத்தாள். அதற்காக அவள் எவ்வளவோ அவமதிப்புக்களைத் தாங்கிக்கொள்ளவேண்டி யிருந்தது. அதை நீ கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. என் சித்தப்பா படுத்திய கொடுமையால் அம்மா என்னை அழைத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி விட்டாள். அவள் படித்தவள். ஆசிரியையாக வேலை செய்து காலந்தள்ளினாள். நான் இண்டர்மீடியட்டில் இருந்தபோது என் தாய் இறந்துவிட்டாள். என்

கையில் இரண்டாயிரம் ரூபாய் ரொக்கமும் கொஞ்சம் நகைகளும் இருந்தன. ஹாஸ்டலில் சேர்ந்து படித்து வருகிறேன். எனக்கு உலகத்தில் சொந்தம் என்று யாரும் கிடையாது. செலவானது போக அறுநூறு ரூபாய் மிச்சம் இருக்கிறது. அதுவும் கொஞ்ச நாளில் தீர்ந்துவிடும்,''

நவல் சொன்னான்: "என்னுடைய கேள்விக்கும் இந்தக் கதைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையே!"

''சம்பந்தம் இருக்கிறது, இல்லையென்றும் சொல்லலாம். நான் எம். ஏ. முதல் வகுப்பில் பாஸ் செய்தது உனக்குத் தெரியும். எத்தனையோ இடங்களுக்கு மனு போட்டேன்! உத்தியோகம் கிடைக்கவில்லை. இரண்டு மூன்று தனியார் பள்ளிகளில் வேலை கிடைக்கும்போல் இருந்தது. ஆனால் நிபந்தனை பிடிக்கவில்லை. தொண்ணூறு ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்யவேண்டும். ஆனால் ஐம்பது ரூபாய்தான் கையில் கொடுப்பார்கள். வெறுப்பு உண்டாகி எல். எல். பீ. படிக்கச் சேர்ந்தேன். வக்கீல் தொழிலில் எக்கச்சக்கமான போட்டி இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆபத்தோடு விளையாடுவதில் எனக்குச் சிறிது மகிழ்ச்சியே உண்டாகிவருகிறது."

சிறிது நேரம் மௌனமாக இருந்த நவல் ஒரு பெருமூச்சு விட்டான். "எனக்குப் புரிகிறது, பிரேம்சங்கர். ஆனால் நான் மீண்டும் சொல்லுகிறேன். உனக்கு வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும். நிராசைப்பட்டு ஆபத்தில் குதிப்பது சரியல்ல. அன்னியர்களுடன் தொடர்புகொள்ளுவதை நீ விட்டுவிடு."

பிரேம்சங்கர் சிரித்தான். ''உன் யோசனைக்கு நன்றி. ஆனால் காலை முன் வைத்து இறங்கியாச்சு. அடடே,மறந்தேபோய்விட்டேன். உன் தாத்தா உன்னைத் தேடிக்கொண்டு இரண்டு தடவை வந்தார். நீ வந்ததுமே

உன்னை பங்களாவுக்கு அனுப்பும்படி சொல்லிவிட்டுப் போனார். ஏதோ முக்கியமான ஜோலி இருக்கிறதாம்."

நவல் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். "நேரமாகி விட்டது. நாளைக்குக் காலையில் போய் பார்க்கிறேன்."

"இல்லை, இப்பொழுதே போ. வந்ததுமே அனுப்பும்படி வலியுறுத்திச் சொன்னார்."

"என்ன விஷயம்? அவர் மிகவும் கவலைப்படுவது போல் காணப்பட்டாரா? ஒன்றும் சொல்லவில்லையா?"

"ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ மிகவும் கவலையோடு இருந்தார். போய்ப் பார் என்ன விஷயம் என்று!"

நவல் ம்யோர் ஹாஸ்டலிலிருந்து பங்களாவை நோக்கிச் சென்றான். அவன் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. ஒரு பயம் அவன் உள்ளத்தில் குடிகொண்டது.

அவன் பங்களாவை அடைந்தபோது தாத்தா ஜ்வாலா பிரஸாத் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார். நவலைக் கண்டதும் எழுந்திருந்தார். "வெகு நேரமாக உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், நவல்! நமக்கு மிகப் பெரிய ஆபத்து வந்துவிட்டதடா!"

"என்ன விஷயம்! எல்லாரும் சௌக்கியம்தானே?" நவல் கேட்டான்.

"அதுதானே இல்லை. கங்கா மிகவும் உடல்நலக் குறைவாக இருக்கிறான். நாலு நாள் ஆச்சு. அவனுக்குத் திடீரென்று ரத்த வாந்தி எடுத்தது. சுரமும் அடித்துக் கொண்டிருக்கிறது. டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டினோம், இரண்டு நுரைஈரலும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும். எக்ஸ்—ரே எடுக்கவேண்டுமென்றும் சொன்னார். மிர்ஜாபூரில் சிகிச்சை நடைபெற வசதியில்லை."

நவல் பதற்றம் அடைந்தான். "தாத்தா, முன்னாலேயே

நீங்கள் ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை ?''

"உனக்குப் பரீட்சை நடந்துகொண்டிருந்ததல்லவா? இன்றுதானே அது முடிந்தது! இங்கே டாக்டர் "ஷேர்வுட்"டை அழைத்துப்போக வந்தேன். சிவில் சர்ஜனுக்குக் கட்டுப்படும் வியாதியாகத் தோன்றவில்லை. இன்று நான் ஷேர்வுட்டைப் பார்த்துப் பேசினேன். நாளைக்கு மத்தியானம் அவர் வருவார். நீயும் தயாராக இரு!"

நவல்கிஷோர் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்து விட்டான். ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "மிகப் பெரிய சங்கடம் வந்திருக்கிறது நவல்! கடவுளுடைய சித்தம் என்னவென்பது நமக்குத் தெரியவில்லை! என்ன இருந்து என்ன நடந்துவிட்டது பார்த்தாயா ?"

ஜ்வாலா பிரஸாதின் முகத்தின் சுருக்கங்கள் துடித்துக் கொண்டிருந்தன. அவர் கண்களில் ஒளி குன்றிவிட்டது. அவருடைய முதுமை அதிகரித்துவிட்டதை நவல் கண்டான். "தைரியமாக இருங்கள் தாத்தா. நாளைக்கு டாக்டர் ஷேர்வுட் வந்து பார்த்த பிறகு நோய் இன்ன தென்று தெரியும்!''

ஜ்வாலா பிரஸாத் முணுமுணுத்தார். "என்ன வழி பிறக்கப்போகிறது நவல். உள்ளத்தைக் கல்லாக ஆக்கிக் கொள்ள வேண்டியதுதான். காலையில் உன் சாமான்களை எடுத்துக்கொண்டு வா. அநேகமாக நீதான் டாக்டர் ஷேர்வுட் வீட்டுக்குப் போகவேண்டியிருக்கும். எனக்கு உடம்பில் சக்தி இல்லை.''

டாக்டர் ஷேர்வுட்டை அழைத்துக்கொண்டு நவலும் ஜ்வாலாபிரஸாதும் மிர்ஜாபூர் வந்தடைந்தபோது மணி இரண்டு அடித்துவிட்டது. வித்யா கங்கா பிரஸாதின் அறையிலிருந்து வெளியே வந்து எல்லாரையும் அறைக் குள் அழைத்துச் சென்றாள். கங்கா பிரஸாத் கண்களை

மூடிக்கொண்டு பேசாது படுத்திருந்தார். அவருடைய முகத்தில் பொறுக்க முடியாத வேதனை பதிந்திருந்தது. டாக்டர் கங்கா பிரஸாதை நன்கு பரீட்சித்துப்பார்த்தார் இதற்கிடையில் மிர்ஜாபூரில் உள்ள சிவில் சர்ஜனையும் நவல் அழைத்துவந்தான்.

இரண்டு டாக்டர்களும் தங்களுக்குள் ஆலோசனை கலந்த பிறகு சொன்னார்கள்: "இவரை அலாகாபாத் அழைத்துச் செல்லவேண்டியிருக்கும். மிர்ஜாபூரில் எக்ஸ்—ரே எடுக்க முடியாது. அலாகாபாதில் எல்லா வசதிகளும் உண்டு."

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "கமிஷனருடைய அனுமதி இல்லாமல் கலெக்டர் தலைமை ஸ்தானத்தை விட்டுப் போக முடியாதே."

"நீங்கள் டாக்டர் ஷேர்வுட்டுடன் அலாகாபாத் போங்கள். நான் மெடிகல் சர்ட்டிபிகேட் எழுதித் தருகிறேன். கமிஷனரிடம் நீங்கள் இவருடைய லீவுக்கான மனுவைக் கொடுங்கள். இவர் அலாகாபாத் போவது அவசியம்."

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு ஜ்வாலா பிரஸாத் டாக்டர் ஷேர்வுட்டுடன் அலாகாபாதுக்குப் புறப்பட்டார்.

டாக்டருடன் தாத்தாவைஅனுப்பிவிட்டு நவல்கிஷோர் தன் தந்தையின் அறைக்குள் நுழைந்தான். கங்கா பிரஸாதுக்கு ஜுரம் அதிகமாகியிருந்தது. அவர் நவல்கிஷோரைப் பார்த்ததும் அருகில் உட்காரும்படி சைகை செய்தார். சிறிது நேரம் கங்கா பிரஸாத் மகனைக் கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு அவர் மெலிந்த குரலில் கேட்டார்: "டாக்டர் என்ன சொன்னார்?"

கங்கா பிரஸாதின் குரலில் ஒருவித நடுக்கம்! அவருடைய கண்களில் ஒருவிதபயம்! நவல் சொன்னான்:

"அவர் உங்களுக்கு அலாகாபாதில் சிகிச்சை செய்ய வேண்டுமென்ருர். அங்கு போனல் நீங்கள் நிச்சயமாகக் குணம் அடைய வழியிருக்கிறதாம்." "நிஜமாகவா? எனக்கென்னமோ குணமாகாத ஒரு வியாதி வந்து என்னை அமுக்கிவிட்டது என்றுதான் தோன்றுகிறது. ஆனல், டாக்டர் ஷேர்வுட் பெரிய நிபுணர். என்ன நோய் என்று சொன்ஞர்?" கங்கா பிரஸாத் நாற்புறமும் சூழ்ந்திருந்த இருளில் நம்பிக்கையின் ஒரு ஒளிக்கிரணத்தைத் தேடிக் கொண்டிருந்தார்போலிருந்தது. அவருடைய முகம் வெளுத்திருந்தது. அவரது இதயம் ஒரேயடியாய் உடைந்துவிட்டது. நவல் பொய் சொல்லவேண்டி வந்தது. "நோயின் பெயர் என்னவென்று அவர் சொல்லவில்லை. ஆனல், அலாகாபாத் சென்று மருந்து சாப்பிட்டால் ஒரு மாத காலத்தில் குணம் கிடைக்கும் என்று சொன்ஞர். தாத்தா உங்களுக்கு லீவுக்காக மனு கொடுக்கப் போயிருக்கிருர்."

கங்கா பிரஸாத் ஒரு பெருமூச்செறிந்தார். "எனக்காக லீவுக்கு மனு கொடுக்கப் போயிருக்கிருரா? சரி, நான் லீவ் எடுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒருவேளை ஒரேயடியாகவே லீவு எடுக்கவேண்டியதுதான்." வித்யா ஒரு மூலையில் நின்று இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள். "அப்பா நோயாகப் படுத்தது முதல் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கிருர் அண்ணு. நீ இவருக்குச் சமாதானம் சொல். இப்படி நம்பிக்கை இழப்பது சரி இல்லை."

கங்கா பிரஸாதின் முகத்தில் ஒரு பரிவு நிறைந்த புன்னகை தோன்றியது. "கேட்டாயா நவல், வித்யா என்னைச் சமாதானப்படுத்துகிருள். பதினேழு-பதினெட்டு வயதுக் குழந்தை!" பிறகு அவர் வித்யாவிடம் சொன்ஞர்: "போம்மா, உன் அம்மாவை இங்கே வரச்

சொல். "எல்லாரும் போய் ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கொஞ்ச நாள் எனக்கு இப்படி சேவை செய்ய வேண்டித்தான் இருக்கும்." கங்கா பிரஸாத் கண்களை மூடிக்கொண்டார்.

நவல்கிஷோர் வித்யாவுடன் வெளியே வந்தான். வித்யா நவலைவிட இரண்டு வருஷம் சிறியவள். நல்ல உயரம். நல்ல புஷ்டி கொண்டவள். அகன்ற கண்கள். அந்தக் கண்களில் உறுதிகொண்ட ஒரு வலிமை.மிளிர்ந்து வரும் கோதுமை நிற மேனி! இவ்வருடம் பி. ஏ. முதல் வருடப் பரீட்சை எழுதியிருந்தாள், காசி ஸர்வகலாசாலையில். பரீட்சை முடிந்து மிர்ஜாபூர் வந்திருந்தாள். வித்யா நவலிடம் சொன்னாள்: "அண்ணா, நமக்கு மிகப் பெரிய ஆபத்து வந்துவிட்டது." "ஆபத்து வந்தால் அதை எதிர்த்துத்தான் ஆக வேண்டும் வித்யா." வித்யா பேசாமல் ஒரு விநாடி யோசித்துக்கொண்டு நின்றிருந்தாள். பிறகு அவள் தன் அண்ணனை நோக்கினாள். ஒற்றைநாடியான உயரமான வாலிபன். முகத்தில் தன்னம்பிக்கை ஒளி! பார்ப்பதற்கு அழகன் என்று சொல்லலாம். நல்ல ஆரோக்கியமான உடற்கட்டு. வித்யா சொன்னாள்: "அண்ணா, அப்பாவுக்குப் பிறகு நீதான் எனக்கு எல்லாம். உன் சொற்படியே நடப்பேன். இந்த ஆபத்தோடு போராடித்தான் ஆகவேண்டும்." வித்யாவின் கண்களில் நீர் நிரம்பியது. மெதுவாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளியே போனாள்.

உள்ளே நவல்கிஷோரின் பாட்டி வாடிப்போய் உட்கார்ந்திருந்தாள். நவல் அவள் அருகில் சென்று அமர்ந்தான். யமுனா ஆடாது அசையாது ஏதோ பிரமை பிடித்ததுபோன்று இருந்தாள். "பாட்டி!"

யமுனாவின் மயக்கம் கலைந்தது. "நவல், வந்து

விட்டாயா! டாக்டர் என்ன சொன்னார்?"

"அப்பாவை அலாகாபாத் அழைத்துச் செல்ல வேண்டும் என்று சொன்னார்."

"இப்போது கங்கா பக்கத்தில் யார் இருக்கிறார்கள்?" யமுனா கேட்டாள்.

"அம்மா இருக்கிறாள். அப்பாவுக்குத் தூக்கம் வந்து விட்டது. எங்களைப் போகச்சொல்லிவிட்டார். யமுனா எழுந்து கங்கா பிரஸாதின் அறைக்குள் போனாள். அவள் உடல் தள்ளாடியது.

இரவு சூழ்ந்துகொண்டிருந்தது. பங்களா வராந்தாவில் விளக்கு மினுக்கு மினுக்கென ஒளிபரப்பியது. நாலு புறமும் அடர்ந்த இருட்டு பரவியிருந்தது. நவல் மௌன மாக யோசிக்கலானான்—கடந்தது, நிகழ்வது, நடக்கப் போவது—இவற்றினிடையே என்ன சம்பந்தம்? நடந்து கொண்டிருப்பதனைத்திலும் என்ன நியதி அடங்கி யுள்ளது? வித்யா அவன் அருகில் வந்து உட்கார்ந்ததை அவன் உணரவில்லை.

"அண்ணா!"

நவல் திடுக்கிட்டான். "வித்யா, நீயா? அப்பா தூங்கு கிறாரா, விழித்துக்கொண்டிருக்கிறாரா?"

"அவருக்குத் தூக்கம் எங்கே வருகிறது? ஜ்வர வேகத்தினால் உண்டான மயக்கம்!"

"இப்போது அப்பாவின் அறையில் யார் இருக் கிறார்கள்?"

"பாட்டி இருக்கிறாள், அம்மா சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்போனாள்."

"அப்படியானால் நான் போய்......"

"உட்கார் அண்ணா, நிலைமை அப்படியேதான் இருக் கிறது. சரி, பரீட்சை முழுவதும் எழுதினாயா?"

நவலின் முகத்தில் ஒரு ஏளனச் சிரிப்புத் தோன்றி

யது. "பரீட்சை இப்போதுதான் ஆரம்பமாகிறது வித்யா! அந்த பி. ஏ. பரீட்சை ஒரு விளையாட்டாக இருந்தது. நீ உன்னைப்பற்றிச் சொல்லவில்லையே!"

"சொல்ல என்ன இருக்கிறது அண்ணா. பி. ஏ. முதல் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டிற்கு வந்துவிட்டேன்."

அப்போது ருக்மிணி வந்து "நவல், அவர் கூப்பிடு கிறார் உன்னை" என்றாள்.

"இதோ வருகிறேன் அம்மா!" நவல் எழுந்தவாறே சொன்னான். அவன் கங்கா பிரஸாதின் அறைக்குச் சென்றான். கங்கா பிரஸாத் நவலிடம் கேட்டார்: "நவல், நன்றாக இருக்கிறாயா? பரீட்சை எப்படி எழுதினாய்?"

"கேள்வித் தாள்கள் நன்றாகவே இருந்தன. இந்தத் தடவை முதல் வகுப்பு கிடைக்கக்கூடும்."

கங்கா பிரஸாத் மகனைக் கண்கொட்டாது சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு மெலிந்த குரலில் சொன்னார்: "லண்டனில் நீ தங்குவதற்கு ஏற்பாடு ஆகிவிட்டது. செப்டம்பர் முதல் வாரத்தில் நீ அங்கு போகவேண்டியிருக்கும்."

"அதற்கு இப்பொழுதே என்ன அவசரம்? முதலில் உங்களுக்குக் குணமாகட்டும், பிறகு போகிறேன்."

"என் நோய் குணமாவதா? இது ராஜரோகம். இது குணமாகாது. என்னை உத்தேசித்து நீ தங்குவது வீண்! நான் ஒடிந்துகொண்டிருக்கிறேனடா! நான் ஒடிவதற்கு முன் நீ உருவாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்." கங்கா பிரஸாதின் பேச்சில் ஒரு நிர்ப்பந்தமான குழைச்சல் இருந்தது. குடும்பத்தலைவன் என்ற எண்ணம் அதிகாரத்தின் அகங்காரப் பெருமை எல்லாம் அவர் உள்ளத்தை விட்டு நீங்கிவிட்டன. கங்கா பிரஸாத் சிறிது களைப்பாறி மீண்டும் தொடர்ந்தார்: "நவல், நான் வாழ்க்கையில் பயங்கரமாகத் தோல்வியுற்றேன். இந்தப்

பதவி உயர்வு, மானம், மதிப்பு இதெல்லாம் வெறும் மேற்போக்கான தோற்றம். அவ்வளவுதான். இவற்றில் ஒன்றுமில்லை. ஒன்றுமே இல்லை. அந்த ஒன்று எங்கு எதில் இருக்கப்போகிறது?"

கங்கா பிரஸாதுக்குப் பேசுவது சிரமமாக இருந்தது. "அப்பா, கொஞ்சம் தூங்க முயற்சி செய்யுங்கள். இந்தப் பேச்சினல், உங்கள் வேதனைதான் அதிகமாகும். என்னைப்பற்றியவரையில் உங்களுக்கு எவ்வித அதிருப்தியும் ஏற்படாது. இந்தாருங்கள், மருந்து. நேரம் ஆகிவிட்டது."

"கொடு. மருந்து சாப்பிடுவது என் கடமை, மருந்தினல் பயன் ஏதுமில்லை என்று எனக்குத் தெரியும். மருந்து சாப்பிட்ட பிறகு தூங்குவதற்கு முயற்சி செய்வதும் என் கடமை. எனக்குத் தூக்கம் வராது. ஒருவேளை வந்தாலும் அது விட்டுவிட்டு வரும், கெட்ட கனவு நிறைந்து வரும்."

கங்கா பிரஸாதுக்கு மருந்து கொடுத்துவிட்டு நவல் அறையிலிருந்து வெளியே வந்தபோது இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. இறுக்கம் மிக அதிகமாக இருந்தது. வித்யா வராந்தாவில் அமர்ந்து நவலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அண்ணு, வா, சாப்பிடு!"

"வருகிறேன்." எங்கும் நிசப்பம் சூழ்ந்திருந்தது. பஞ்சமிச் சந்திரன் வானத்தில் தூரத்தில் ஒரு ஆல மரத்தில் சிக்கிக்கொண்டிருந்தான். "வித்யா, பார்த்தாயா அந்த சந்திரனை, எவ்வளவு மங்கிப்போயிருக்கிறது. மெள்ளமெள்ள வானத்தைவிட்டுக் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறது. அதன் பிரகாசம் எவ்வளவு தேய்ந்துவிட்டது!"

வித்யா சொன்னுள்: "சந்திரன் மறையத்தான்

போகிறது. ஆனால் என்ன? நாளைக்கு மீண்டும் தோன்றும்பொழுது பிரகாசம் இதைவிட அதிகமாக இருக்கும்.''

நவல் பெருமூச்செறிந்தான். ''ஆம். அதெல்லாம் நாளைக்குத்தான். என் முன்னே இருப்பது இன்றையப் பிரச்னை.''

''அண்ணா, நாளை நாளை என்ற ஆதாரத்தைக்கொண்டு தானே வாழ்க்கை இருக்கிறது? நாம் நாளையைப்பற்றிக் கற்பனை செய்ய இயலாதுபோனால் நம்முடைய ''இன்றையத் தினம் ஒரே பயங்கரமாகத் தோன்றும்!''
''ஒருவேளை நீ சொல்லுவது சரிதான், வித்யா!'' நவல் மீண்டும் வானத்தைப் பார்த்தான். சந்திரன் இப்போது ஆலமரத்தின் உச்சாணிக்கிளை அருகேயிருந்தான். நவல் பார்த்துக்கொண்டிருந்தபோதே மெள்ளமெள்ள முழு சந்திரனும் ஆலமரத்திற்குப் பின்னால் மறைந்து போய்விட்டது. சிறிது நேரம் வரை அந்த மரத்தின் இடையிலிருந்து ஒளி வடிந்து வந்தது. பிறகு அந்த ஒளியும் மறைந்துவிட்டது. அவன் எதிரில் இப்போது கோரமான, ஊடுருவ முடியாத இருள் படர்ந்தது. நவல் எழுந்து நின்றான். ''வா, வித்யா!''

2

கங்கா பிரஸாத் கேட்டார். ''நவல், ஞான சித்தப்பாவைப்பற்றி ஏதாவது தெரியுமா? எப்போது திரும்பி வரப்போகிறார் சீமையிலிருந்து?''

''மே மாதம் கடைசி வாரத்தில் வருவதாகத் தெரிந்தது.

ஏன் கேட்கிறீர்கள்?"

"வெறுமனே தான் கேட்டேன். இரண்டு வருஷமாச்சு அவரைப்பார்த்து. திடீரென்று அவர் நினைவு வந்தது."

அப்போது ஜ்வாலா பிரஸாத் டாக்டர் ஷேர்வுட்டுடன் உள்ளே வந்தார். டாக்டர், கங்கா பிரஸாதைப் பரீட்சிந்தார். பிறகு ஆழ்ந்த சிந்தனையோடு கூறினார்: "விசேஷமாக குணம் ஒன்றும் தெரியவில்லை. இங்கு கோடை அதிகமாக உள்ளது. இவரை மலைப்பாங்கான இடத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும்." கங்கா பிரஸாத் சொன்னார்: "நீங்கள் சொல்லுவது சரிதான் டாக்டர். இந்த வெயில் என்னால் தாள முடியவில்லை."

டாக்டர் ஷேர்வுட் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தார். "புவாலீ ஸேனடோரியத்திற்கு நான் எழுதுகிறேன். அங்கு ஒரு காட்டேஜ் ஏற்பாடு செய்துவிடலாம். செப்டம்பர் வரை அங்கு இருந்தால் இவர் பூரணமாகக் குணமடைந்து விடுவார்."

ஜ்வாலா பிரஸாத் மெல்லிய குரலில் சொன்னார்: "புவாலீ ஸேனடோரியமா? அங்கு இவரை அழைத்துப் போகவேண்டுமா? வேறெங்கும் ஏற்பாடு செய்ய இயலாதா?"

"எல்லா மலைவாச ஸ்தலங்களிலும் ஏற்பாடு செய்ய இயலும்; ஆனால் மற்ற இடங்களில் சிகிச்சை வசதி கிடையாது."

கங்கா பிரஸாத் இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார், ஏதோ அதில் தமக்குச் சம்பந்தம் இல்லாதது போல்! டாக்டர் சென்ற பிறகு அவர் நவலிடம் சொன்னார்: "நவல், உன் தாத்தாவிடம் புவாலீதான் சரியென்று சொல்லிவிடு. அங்கு சிகிச்சைக்கு நல்ல வசதி உண்டு. அங்கு என்னோடு ஒருவரும் வரவேண்டிய அவசியம் இல்லை."

"நீங்கள் தனியாக எப்படி இருப்பீர்கள் அப்பா! டாக்டர் ஷேர்வுட் ஒரு 'காட்டேஜ்' ஏற்பாடு செய்வதாகச் சொன்னரே; நான் உங்களோடு வருவேன் அப்பா!"

"நீ என்னேடு வருவாயா? கூடாது. நீ இங்கிலாந்து போகவேண்டும். உன் தாத்தா என்னேடு வருவார்."

"நீங்கள் பூரணமாகக் குணமடையும்வரை நான் இங்கிலாந்து போகப்போவதில்லை" நவல் உறுதியாகச் சொன்னன்.

கங்கா பிரஸாத் பேச்சை மேலே தொடரவில்லை. அவர் கண்களை மூடிக்கொண்டார். நவல் அறையிலிருந்து வெளியே வந்துவிட்டான். அவன் மனம் வருத்தம் தோய்ந்திருந்தது. அவனுடைய அப்பா தனக்கு ராஜ ரோகம் வந்திருப்பதாகச் சொன்னது சரிதான். மிர்ஜா பூரிலிருந்து அலாகாபாத். அலாகாபாதிலிருந்து புவாலீ.

கங்கா பிரஸாத் அலாகாபாதுக்கு வந்து ஒரு மாதமாகியது. ஆயினும் இந்த ஒரு மாதத்தில் அவருடைய நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. உலர்ந்துபோய் எலும்புக்கூடாகிவிட்டார். எழுந்து நடமாடுவதுகூட கஷ்டமாகப்போய்விட்டது. அவருடைய நிலையைப் பார்த்து நவலுடைய உள்ளம் கண்ணீர் விட்டது. ஆனல் அவன் என்ன செய்ய முடியும்? அறையிலிருந்து வெளியே வந்தான். வெயில் கடுமை தாங்க முடியவில்லை ஜ்வாலா பிரஸாத் டாக்டர் ஷேர்வுட்டை அனுப்பிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார்.

தழுதழுத்த குரலில் ஜ்வாலா பிரஸாத் சொன்னர்: "குழந்தே, கடவுளை வேண்டிக்கொள். கங்கா புவாலீ போய்த்தான் ஆகவேண்டும். அங்கிருந்து குணமடைந்து திரும்புகின்றவர்கள் மிகக் குறைவு. டாக்டரும் அதிக நம்பிக்கை சொல்லவில்லை."

"எப்போது புவாலீ புறப்படவேண்டும் தாத்தா!"

"அடுத்த வாரத்துக்குள் போய்விடவேண்டும். நாளை அல்லது நாளை நின்று 'காட்டேஜ்' நிச்சயமாகிவிடும். கங்கா தூங்கிக்கொண்டிருக்கிருரு?"

இருவரும் அருகே வந்ததும் கங்கா பிரஸாத் கண்ணைத் திறந்தார். "அடுத்த வாரம் நீ புவாலீ போகவேண்டும் என்று டாக்டர் சொல்கிருர். அவர் காட்டேஜுக்காக எழுதிவிட்டார், தந்தியும் கொடுத்திருக்கிறது."

கங்கா பிரஸாத் சொன்னுர்: "என்னுடன் ஒருவரும் வரவேண்டிய அவசியம் இல்லை. பீக்கூ மட்டும் வரட்டும்."

"உன்னுடைய சாப்பாட்டுக்கு யார் ஏற்பாடு செய்வார்கள் அங்கே? உன் அம்மாவும் நானும் வருகிறேம். மருமகள் குழந்தைகளைக் கவனித்துக்கொண்டு இங்கேயே இருக்கட்டும்."

"இல்லை தாத்தா. பாட்டியுடன் நான் போகிறேன். நீங்கள் இங்கே இருந்து வீட்டை கவனித்துக்கொள்ளுங்கள்."

கங்கா பிரஸாத் நவலைப் பார்த்தார்—அவருடைய சாமர்த்தியமிக்க, தன்னம்பிக்கை பொருந்திய மகன், வருங்காலத்தின் சின்னம்! அவர் புன்னகை செய்ய முயன்றவாறு ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னுர்: "ஆம், நவல் சொல்வது சரி. என்னேடு இவன் வரட்டும். ஜூலை மாதத்தில் நீங்கள் அங்கே வாருங்கள். நவல் அங்கிருந்து வந்து தனது மேற்படிப்புக்கான ஏற்பாடுகள் செய்வான்."

ஜ்வாலா பிரஸாத் ஒன்றும் பேசவில்லை. அந்த தொத்து நோய் ஸேனடோரியத்தில் நவல் போய் இருப்பது அவருக்கு இஷ்டமில்லை. ஆனல் அதைச் சொல்ல அவருக்குத் துணிவு உண்டாகவில்லை. அவருடைய பிள்ளையே அந்த பயங்கர நோய்க்குப் பலியாகிருனே, சொல்வ

தென்றால், அவர் எதைச் சொல்லுவார், யாரிடம் சொல்லுவார்? பேசாமல் வருத்தத்தோடு அவர் அந்த அறையிலிருந்து போய்விட்டார். அவர் போன பிறகு கங்கா பிரஸாத் நவலிடம் சொன்னார்: "நவல், புவாலீ செல்ல ஏற்பாடு செய்துகொள்! இனி இங்கு இந்த உஷ்ணத்தை என்னால் பொறுக்க இயலாது. சாகத்தான் வேண்டுமென்றால் சுகமாக ஏன் சாகக்கூடாது!"

"இப்படியெல்லாம் பேசாதீர்கள் அப்பா. அங்கே போய் நீங்கள் குணமடைந்துவிடுவீர்கள். ஏன் இவ்வளவு நம்பிக்கையற்றுவிடுகிறீர்கள்?" கங்கா பிரஸாத், "இல்லை, நம்பிக்கையற்றுவிடுவதல்ல. நம்பிக்கையின்மேல்தான் உலகம் நிலைத்திருக்கிறது. சும்மா சொன்னேன்."

மூன்றும் நாள் ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன. அன்று காலையிலிருந்தே அனற்காற்று வீசத் தொடங்கி விட்டது. கங்கா பிரஸாதுக்குக் கஷ்டம் அதிகமாகியது. "திங்கட்கிழமையன்று பரேலிக்கு ஒரு இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்ட் ரிஸர்வ் செய்துவிடு. பரேலியி லிருந்து காட்கோதாம் வரையில் ரிஸர்வேஷனுக்காகத் தந்தி கொடுக்கவேண்டும். மாலை ஐந்து அல்லது ஆறு மணிக்கு ஸ்டேஷனுக்குச் சென்று இதையெல்லாம் செய்யலாம். இனிமேல் இங்கு அதிக நாட்கள் தங்குவது வீண்."

மாலையில் நவல் ஸ்டேஷனுக்குப் போனான். ரிஸர்வேஷன் செய்துவிட்டு அவன் ஸ்டேஷனிலிருந்து திரும்பியபோது அவன் மனம் சிறிது சுமை நீங்கி இருந் தது. அவன் தன்னுடைய சைக்கிளை ராய்பஹதூர் காமதாநாதின் வீட்டை நோக்கித் திருப்பினான்.

காமதாநாத் உட்புறத் தோட்டத்தில் அமர்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தார். "அடே நவல், நீயா!

உன் அப்பாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது ?"

"டாக்டர் புவாலீ போகவேண்டும் என்று யோசனை கூறி இருக்கிறார். அவர் நிலைமையில் இன்னும் குணம் ஏற்படவில்லை."

"எப்படி குணம் ஏற்படும்? வெய்யில் அடிக்கிற அடியைப் பார்த்தாயா! மே ஆறும் தேதி கப்பலில் இடம் கிடைத்திருக்கிறது. ஆகவே நாம் மே மாதம் மூன்றாம் தேதி இங்கிருந்து பம்பாய்க்குப் புறப்படுவோம். இன்று ஏப்ரல் இருபத்திரண்டாம் தேதி. நீயும் மே மூன்றாம் தேதி இங்கிருந்து செல்ல ஏற்பாடு செய்துகொள். மூன்று "பெர்த்" "புக்" பண்ணியாச்சு. எனக்கு, உனக்கு, உஷாவுக்கு.

"உங்களோடு நான் வர முடியாது. திங்களன்று நான் அப்பாவுடன் புவாலீ போகிறேன்."

"என்ன? புவாலீ போகிறாயா? கங்கா எப்படி இதற்கு சம்மதித்தார்? ராய்பஹாதூர் காமதாநாத் வியப்புடன் கூறினார். நடக்காத காரியம். நீ என்னோடு ஸ்விட்ஜர்லாந்து வருகிறாய். பாபூ ஜ்வாலா பிரஸாத் கங்காவுடன் போகவேண்டும்."

அப்போது உஷா உள்ளே இருந்து வந்தாள். "வந்துவிட்டீர்களா நவல் பாபூ! நேற்றுத்தான் பம்பாயிலிருந்து அப்பாவுக்குக் கடிதம் வந்தது. நாமெல்லாரும் மே ஆறும் தேதி கப்பலில் செல்லவேண்டும். இங்கிருந்து மே மாதம் மூன்றாம் தேதி புறப்படவேண்டும்."

"நான் உங்களோடு வர இயலாது உஷா. அப்பாவின் நோயின் காரணமாக நிலைமை அடியோடு மாறிவிட்டது. டாக்டர் அவரை புவாலீ அழைத்துப் போகும்படி சொல்லி இருக்கிறார். நான் அவரோடு புவாலீ போகிறேன்."

"நீ க்ஷயரோகக் கிருமி நிரம்பிய அந்த புவாலீ

ஸேனடோரியத்துக்குப் போகக்கூடாது. கங்கா உன்னைத் தன்னோடு அழைத்துச் செல்ல எவ்வாறு சம்மதித்தான் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பிறகு நீ இங்கிலாந்தில் ஐ.சி.எஸ். ஸூக்காகப் படிக்க வேண்டியிருக்கிறது, பரீட்சை எழுதவேண்டியிருக்கிறது.''

''அதற்கு இன்னும் நிறைய நாள் இருக்கிறதே. ஜூன் வாக்கில் தாத்தா அங்கே வந்துவிடுவார்.''

உஷா நவலுக்கு யோசனை சொல்ல ஆரம்பித்தாள். ''நான் எவ்வளவு ஆசையாக இருந்தேன் நீங்கள் வருவீர்கள் என்று. விபத்து என்பது ஒவ்வொருவருக்கும் வந்துகொண்டுதான் இருக்கும். ஆனால் இந்த விபத்துக்களை நினைத்து ஒருவன் தன்னை இழந்துவிடுவதா? இது எனக்குப் புரியவில்லை. நீங்கள் இங்கு இருப்பதினாலோ, வெளி நாட்டுக்குப் போவதினாலோ உங்கள் தந்தையின் வியாதி பாதிக்கப்படப்போவதில்லை. நீங்கள் எங்களோடு வராது போனால் ஒரு வேளை நீங்கள் சீமைக்குச் செல்வதே நின்றுவிட்டாலும் நின்றுவிடும்."

நவல் உஷாவைப் பார்த்தான். அவள் முகத்தில் எவ்வகை உணர்ச்சியும் இல்லை. விபத்தைப்பற்றி எவ்வித அனுதாபமும் இல்லை. நவல் கொதித்தான். ''ஆமாம், உஷாராணி. அனேகமாக நான் சீமைக்குப் போவதே நின்றுவிடக்கூடும். இது எனக்குத் தெரியும். ஆனால், என் தந்தையை இவ்வாறு வியாதியாக விட்டுவிட்டு நான் எப்படிச் செல்ல முடியும்? இந்நிலையில் நான் அருகில் இல்லாமற் போனால், அவருக்குக் கஷ்டமாக இருக்கும். இதை நீ சிறிது கற்பனை செய்து பார். உணர்ச்சிகளை விட்டுவிட்டு நாம் உயிர் வாழ முடியுமா?''

ராய்பஹதூர் காமதாநாத்: ''இந்த உணர்ச்சியே உன்னை அழித்துவிடும் நவல். நான் சொல்லுகிறேன்.

எனக்குத் தெரியும். ஜ்வாலா பிரஸாதோ, கங்கா பிரஸாதோ உன்னை புவாலீ வரச் சொல்லியிருக்க மாட்டார்கள். அவர்கள் தடுத்துத்தான் இருப்பார்கள். உண்டா இல்லையா ?"

"தாத்தா நான் புவாலீ போவதை விரும்பவில்லை. ஆனால் அப்பா என்னைத்தடுக்கவில்லை."

கடுமையான குரலில் காமதாநாத் சொன்னார்: "உன் அப்பாவுக்கு அறிவு தடுமாறிவிட்டது. அதற்கு நோய் தான் காரணம். நான் அவரிடம் சொல்லிப்பார்க்கிறேன். நீ எங்களோடு ஸ்விட்ஜர்லாந்து வந்தாலும் வராவிட்டாலும் புவாலீக்குப் போவது சரியில்லை. அதையாவது தடுத்தாக வேண்டும். இது தொத்து நோய். நீ உன் அப்பாவை விட்டு விலகி இருக்கவேண்டும்."

காமதாநாதின் இந்தப் பேச்சினால் நவல் பேரதிர்ச்சி அடைந்தான். தந்தையை விட்டு விலகி இருக்கவேண்டும். ஏனெனில், அவருக்கு வந்திருப்பது தொத்து நோய். அவன் தந்தைக்கு யார் துணையாக இருப்பார்கள் ? பெற்ற பிள்ளையே துணையாக இருக்க மறுத்துவிடுவதா ? இதுதான் உலகியல் அறிவா ? இதுதான் உலகத்தின் நியமமா ? அவன் உடைந்த குரலில் சொன்னான்: "நான் அப்பாவை விட்டு விலகி இருக்கவேண்டும் என்று சொல்லுகிறீர்கள் ? இவ்வளவு நீசத்தனமான பாவச் செயலை செய்யவா போசனை கூறுகிறீர்கள் ? அப்படியானால் இனி உலகில் நம்மவர் பிறர் என்று யாருமே இருக்கமாட்டார்கள். அது உலகமாக இராது. நரகமாகி விடும். கடைசிவரை நான் அப்பாவுடன் இருப்பேன். திங்கட்கிழமையன்று நான் அவருடன் செல்கிறேன். இதைச் சொல்லத்தான் இங்கு வந்தேன். நான் போகிறேன். அப்பா எதிர் பார்த்துக்கொண்டிருப்பார்.

உஷா நவலைத் தடுத்தாள். "சிறிது நேரம் உட்காருங்

கள். எவ்வளவு நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள் நீங்கள். வித்யாவும் வந்திருப்பாளே; அவள் படிப்பதற்காக பனாரஸ் போனதிலிருந்து சந்திக்கவே இயலவில்லை. அவளைப் பார்க்க ஆசையாக இருக்கிறது." "அப்பாவின் பணிவிடையில் அவளும் ஈடுபட்டிருக்கிறாள். இருபத்தி நாலு மணி நேரமும் அவளுக்கு வேலை சரியாக இருக்கிறது. நான் அவளிடம் சொல்லுகிறேன். எங்கள் வீட்டிற்கு நீ வருவதை, உன் அப்பா விரும்பமாட்டார். திங்கட்கிழமை நாங்கள் புறப்பட்ட பிறகு வித்யாவுக்கு ஒழிவிருக்கும்."

நவலுடைய இந்தப் பேச்சில் அடங்கியிருந்த மறை பொருளான குத்தலை உஷா உணரவில்லை. ஆனால், ராய்பஹாதூர் காமதாநாத் உணர்ந்துகொண்டுவிட்டார். "நான் நாளைக்கோ, நாளை நின்றோ உஷாவை அழைத்துக்கொண்டு வருவேன். உஷா அவளைப்பற்றி மிகவும் கேட்டதாக வித்யாவிடம் சொல்." பிறகு அவர் உஷாவிடம் சொன்னார்: "பார், சாப்பாடு தயாராகிவிட்டதா என்று! நவலைச் சாப்பிட்டுவிட்டுப் போகும்படிச் சொல்."

நவலுக்கு அந்த வீட்டில் மூச்சுத் திணறுவதுபோல் இருந்தது. அவன் எழுந்துவிட்டான். "மன்னியுங்கள் பாபா. அப்பா என்னை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார். நான் சாப்பிட இயலாது."

காமதாநாதின் வீட்டில் நவல் அடைந்த அனுபவம் பயங்கரமும் கொடூரமுமானது. அது அவனைக் கலக்கி விட்டது. வித்யா அவனுடைய வாடிய முகத்தைப் பார்த்துக் கேட்டாள்: "என்ன விஷயம் அண்ணா, மிகவும் வருத்தமாக இருக்கிறாய்? எங்கே போயிருந்தாய்?"

"உஷா வீட்டுக்குப் போயிருந்தேன் வித்யா! அவள்

உன்னைப்பற்றிக் கேட்டாள். வெகு நாளாக உன்னைப் பார்க்கவில்லையென்று சொல்லிக்கொண்டிருந்தாள்."

"என்ன செய்வது, நான் வந்ததிலிருந்து இங்குள்ள சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் புவாலீ போன பிறகு அவகாசம் கிடைக்கும். அப்போது அவளைப் போய்ப் பார்க்கிறேன். ஆனால் இதில் நீ வருத்தமடையும் படியாக என்ன இருக்கிறது?"

"இல்லையே, நான் ஒன்றும் வருத்தமடையவில்லையே வித்யா." பிறகு சிறிது பொறுத்து நவல் சொன்னான்: "உனக்குத் தெரியுமா வித்யா 'காமதாநாத் சொல்லு கிறார், நான் அப்பாவை விட்டுவிட்டு சீமைக்குப் போக வேண்டுமாம். அவர் ஸ்விட்ஜர்லாந்து போக எனக்கும் சேர்த்து டிக்கட் வாங்கிவிட்டாராம்."

வித்யா திடுக்குற்றாள். "அண்ணா, நீயும் அவர்களோடு போகப்போகிறாயா?"

"பைத்தியக்காரி!" நவல் புன்முறுவல் செய்தான். "நான் அப்பாவை இந்த நிலையில் விட்டுவிட்டு வெளி நாட்டுக்குப் போவேனா? முடியாது என்று சொல்லி விட்டு வந்துவிட்டேன். ஆனால் அவர் பிடிவாதத்தோடு வற்புறுத்திக் கூறுவதுதான் எனக்குப் புரியவில்லை."

வித்யாவின் கண்களில் நீர் நிரம்பியது. "நீ மறுத்து விட்டாய் அல்லவா, அண்ணா! உன்னிடமிருந்து எதிர் பார்க்கக்கூடியது இதுதான்! நம் தந்தை நோய்வாய்ப்பட் டிருக்கிறார். பெரிய விபத்து இது. அவர்களுக்கு நம் முடைய உணர்ச்சிகள் என்ன தெரியும்? அவர்கள் வீட்டில் நீ சாப்பிடவில்லை என்று தோன்றுகிறது. முகம் வாடியிருக்கிறது! வா அண்ணா, சாப்பிடு வந்து!"

சனிக்கிழமையன்று நவல் புவாலீ போவதற்குத் தேவைப்படும் சாமான்கள் வாங்க காலையிலேயே கடைத் தெருவுக்குப் போனான். பத்து மணிக்கே வீடு திரும்பி

விட்டான். அவன் வந்தபோது வரவேற்பு அறையில் காமதாநாதின் குரல் கேட்டது. அவர் ஜ்வாலா பிரஸா திடம் சொல்லிக்கொண்டிருந்தார். "உங்களைப் போன்ற அனுபவமுள்ளவர்கள் இந்தமாதிரி செய்யலாமா? நவலை கங்காவுடன் நீங்கள் புவாலிக்கு அனுப்புகிறீர்கள். இதன் விளைவு என்னவாகும் என்று கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தீர்களா?"

ஜ்வாலா பிரஸாத் பலவீனமான குரலில் சொன்னார்: "நான் அவனை ரொம்பவும் தடுத்தேன் ராய்பஹாதூர் ஸாஹப்! அவன் கேட்கவில்லை. கங்காவுக்கும் ஏனோ அவனிடம் இவ்வளவு பற்று வந்திருக்கிறது. இதை யெல்லாம் நான் கங்காவிடம் சொல்ல விரும்பவில்லை."

"இந்தக் கோழைத்தனத்தினால் குடும்பத்தின் அழிவையே தேடிக்கொள்கிறீர்கள். நான் சொல்கிறேன், என்ன ஆனாலும் சரி, நவல் புவாலீ போகக்கூடாது. ஒரு ஆபத்து தலைக்கு மேல் வந்தேவிட்டது. ஆனால் மற்றொரு ஆபத்தை வராது தடுத்துக்கொள்ளலாம்."

"இந்த ஆபத்தை எப்படித் தடுத்துக்கொள்ளுவது என எனக்குப் புரியவே இல்லை!" "இதைத்தான் சொல் கிறேன். நாங்கள் ஸ்விட்ஜர்லாந்து செல்கிறோம். நவலை எங்களோடு அழைத்துச் செல்லுகிறோம். அங்கிருந்தே அவன் இங்கிலாந்துக்குப் போகட்டும்."

ஜ்வாலா பிரஸாத் சிறிது தயங்கியபடி சொன்னார்: "ராய்பஹாதூர் ஸாஹப், கங்காவின் நிலைமை உங்களுக் குத் தெரியும். இங்கிலாந்து போய்ப் படிப்பதற்கு ஆகும் பணச் செலவைப்பற்றி கங்காவிடம் இப்போது பேசுவது சரியில்லை."

ராய்பஹாதூர் காமதாநாத் உரக்கச் சிரித்தார். "டிப்டீ ஸாஹப், நவல் எப்படி கங்காவுக்கு அருமை மகனோ, அதேபோலத்தான் எனக்கும்! இவனை உங்கள் செலவில்

அழைத்துப்போகிறேன் என்று நினைக்கிறீர்கள்? இங்கிலாந்து போக, அங்கு தங்க, அங்கிருந்து படித்து விட்டுத் திரும்பி வர ஆகும் செலவெல்லாம் என்னுடையதாக இருக்கட்டும்!"

ஜ்வாலா பிரஸாதுக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலாகியது. "நீங்கள் கங்காவிடம் பேசிப் பாருங்கள். நவல் என் வார்த்தையைக் கேட்கமாட்டான். கங்கா உறுதியாகச் சொன்னால் அவன் மறுக்கமாட்டான். நான் கங்காவுக்கு நீங்கள் வந்திருப்பதைத் தெரிவிக்கிறேன்."

ராய்பஹதூர் காமதாநாத் ஜ்வாலா பிரஸாதுடன் அறைக்குள் சென்றார். கங்கா பிரஸாத் பலவீனமான முறுவலோடு காமதாபிரஸாதை வரவேற்றார். "வாருங்கள் ராய்பஹதூர் ஸாஹப்!"

ராய்பஹதூர் கங்கா பிரஸாதின் கட்டிலை விட்டுச் சிறிது எட்டியே நாற்காலியில் அமர்ந்தார். பிறகு தொண்டையைக் கனைத்துச் சரி செய்துகொண்டு சொன்னார்: "நீங்கள் நாளை நின்று புவாலீ போவதாக நான் கேள்விப்பட்டேன். நீங்கள் முன்னமேயே போயிருக்கவேண்டும் என்பது என் கருத்து. இந்தக் கோடையில் மருந்து எங்காவது வேலை செய்யுமா?" டாக்டரும் இதைத்தான் சொல்கிறார். செப்டம்பர் வரை என்னை அங்கு தங்கச் சொல்லியிருக்கிறார்.

"ஆமாம், குறைந்தது செப்டம்பர் வரை இருந்தாக வேண்டும். குணமடைந்த பிறகு கூட நீங்கள் சில வருடங்கள் கோடைக்காலத்தை மலைப் பிராந்தியத்தில் கழிக்க வேண்டும். இது மிகவும் சிரமமான நோய். இதற்கு மருந்து சுத்தமான மலைக்காற்றும் நல்ல ஓய்வும்தான்."

சிறிது நின்று காமதாநாத் மீண்டும் சொன்னார்: "கலெக்டர் ஸாஹப், நான் நவலைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் ஸ்விட்ஜர்லாந்து

போகிறோம். நவலேயும் கூட அழைத்துக்கொண்டு போக எண்ணுகிறேன். அவன் ஐ.சி.எஸ். படிக்க எப்படியும் இங்கிலாந்து போகவேண்டும். அங்கிருந்தே இங்கிலாந்துக்குப் போகட்டுமே. அவனுடைய படிப்பைப் பொறுத்த மட்டில் நீங்கள் யாதொரு கவலேயும் படவேண்டாம். உங்களுக்கு எப்படியோ அவன் எனக்கும் அப்படியே. செலவு எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்.''

நோய்வாய்ப்பட்ட பிறகு இப்போதுதான் முதல் தடவை கங்கா பிரஸாதின் முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி தோன்றியது. காமதாநாதின் பேச்சைக் கேட்டு அவருக்கு சந்தோஷம் உண்டாகியது. ஏற்கனவே குடும்பத்தினரைப் பற்றிய கவலே அவருக்கு அதிகமாகியிருந்தது. கிடைத்த வருமானத்தை எல்லாம் அவர் தாராளமாகச் செலவு செய்துவிட்டார். சாவின் நிழல் அணுகிய போதுதான் அவருக்கு உண்மை நிலே புரிந்தது.

ராய்பஹதூர் காமதாநாதிடம் அவர் உடைந்த குரலில் சொன்னார்: ''ஆம், நீங்கள் நவலே உங்களோடு அழைத்துச் செல்லுங்கள். என்னோடு அப்பாதான் இருக்கிறாரே. என்று நீங்கள் நவலுக்கு உஷாவைக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்று நிச்சயித்தீர்களோ அன்றே அவன் உங்களுடையவன் ஆகிவிட்டான்.'' பிறகு கங்கா பிரஸாத் தன் தந்தையைப் பார்த்தார். ''கொஞ்சம் நவலேக் கூப்பிடுங்களேன் இங்கே; அவனிடம் சொல்லுகிறேன்.''

ஜ்வாலா பிரஸாத் நவலே அழைத்து வந்தார். நவல் தலே குனிந்துகொண்டு அப்பாவின் எதிரே வந்து நின்றான்.

கங்கா பிரஸாத் சொன்னார்: ''நவல், ராய்பஹதூர் காமதாநாத் உஷாவுடன் ஸ்விட்ஜர்லாந்து செல்கிறார். உன்னுடைய 'பேஸேஜை'யும் அவர் புக் செய்து

விட்டார்!"

"ஆம், எனக்குத் தெரியும்" நவல் சொன்னான். "நீயும் இவர்களுடன் போ, அங்கிருந்து நீ இங்கிலாந்துக்குப் போகலாம்."

"ஆம், நான் எல்லாம் கேள்விப்பட்டேன். இதுமட்டும் அல்ல. வெளிநாட்டில் என் பொருட்டு ஆகும் செலவையும் ஏற்க விரும்புகிறார். ஆனால் நானோ உங்களோடு புவாலி வர வேண்டும் என்று நினைக்கிறேன். நீங்கள் குணமடைந்த பிறகுதான் மற்ற யோசனை எல்லாம்!"

நவல் சொன்னது கங்கா பிரஸாதுக்குத் தவறெனப் படவில்லை. அவர் காமதாநாதைப் பார்த்தார்.

காமதாநாத் நவலைப் பார்த்து "நவல், இந்தமாதிரி பிடிவாதம் செய்யக்கூடாது. இது உன்னுடைய பிழைப்பைப் பற்றிய பிரச்னை."

நவல் அமைதியுடன் விடையளித்தான்: "பாபா, பிழைப்பு என்பது மனிதனுடைய வாழ்க்கையில் அன்பு உணர்ச்சியைவிடப் பெரியதல்ல. அப்பாவை இந்த நிலையில் விட்டு நான் அயல்நாடு செல்லக் கற்பனைகூட செய்ய முடியாதவனாக இருக்கிறேன். நீங்கள் என்னைக் கடமையிலிருந்து நழுவச் செய்ய வீண் முயற்சி செய்கிறீர்கள். நான் வரமாட்டேன் என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்."

காமதாநாதுக்கு நவலின் இந்தப் பிடிவாதத்தைப் பார்த்துக் கோபம் வந்துவிட்டது. "நவல், சாஸ்திரத்தில் சரியாகத்தான் சொல்லியிருக்கிறது, விநாச காலம் விபரீத புத்தி" என்று. நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

காமதாநாதின் இந்தக் கூற்றுக்குக் கடுமையாக பதில் கூற முடியுமாயினும் நவல் அப்படிச் செய்யவில்லை.

வேகத்தை அடக்கிக்கொண்டு "ஆபத்துக் காலத்தில் சொந்த அறிவே எனக்குப் போதுமானது. பெற்ற தந்தையிடமிருந்து என்னை அகற்ற நீங்கள் முற்படுவது உசிதமுள்ள காரியமல்ல. வருங்காலத்துப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் நான் ஐ.சி.எஸ். ஆகாமலேயே பிழைக்க முடியும்." நவல் இவ்வாறு சொல்லிவிட்டு வேகமாக வீட்டுக்குள் சென்றுவிட்டான்.

கங்கா பிரஸாத் காமதாநாதை சாந்தப்படுத்த முற்பட்டார். "அவன் சொன்னதைப் பற்றித் தவருக நினைத்து விடாதீர்கள் ராய்பஹதூர் ஸாஹப். அவனுக்கு என்னிடம் அளவு கடந்த அன்பு. நான் அவனை ஜூலையிலேயோ, ஆகஸ்டிலேயோ அவசியம் இங்கிலாந்துக்கு அனுப்பப்போகிறேன்; நீங்கள் நம்புங்கள்."

நவல் நாள் முழுதும் புவாலீ போக ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். மாலையில் அவன் கங்கா பிரஸாதின் அறைக்குள் சென்றபோது, கங்கா பிரஸாத் அவனிடம் சொன்னார்: "உட்கார் நவல், இன்று எனக்கு உடம்பு மிகத்தெம்பாக இருக்கிறது."

நவல் கங்கா பிரஸாத் அருகில் நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

"நவல், உனக்கு ஆச்சரியமாக இருக்கக்கூடும். ஆனல் இன்று காமதா நாதின் முன்னிலையில் உன் உருவத்தைக் கண்டு நான் வியப்படைந்தேன்."

"நான் அடக்கமற்ற முறையில் நடந்துகொண்டிருந்தால், என்னை மன்னித்து விடுங்கள் அப்பா!"

கங்கா பிரஸாத் சிரித்தார்—சோகம் நிறைந்த விபத்தில் தோன்றும் சிரிப்பல்ல. ஆனல் தம்முடைய சகஜமான, மனம்விட்டுச் சிரிக்கும் சிரிப்பு. "இல்லை நவல், மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் இல்லை. உன்னுடைய அந்த உருவத்தைப்பார்த்து எனக்குப் பெருமிதம் உண்டாச்சு.

என்னுள் நிறைந்திருந்த பெரிய பயம் ஒரே கணத்தில் மறைந்து போய்விட்டது."

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை அப்பா!"

நான் சொன்னது புரியவில்லையா! உனக்குத் தெரிந்திருக்கும். எனக்கு "துரித டி.பி. வந்திருக்கிறது. இதற்கு மருந்தே கிடையாது. ரத்த வாந்தி ஆன அன்றே எனக்குத் தெரிந்துவிட்டது. அப்போதே ஒரு பெரிய பயம் என்னுள் தோன்றியது. நான் கவலைப்படலானேன். உனக்கு என்னவாகுமோ? வித்யாவுக்கு என்னவாகுமோ? ஸுதாவுக்கு என்னவாகுமோ? கேவலுக்கு என்னவாகுமோ? நீ இன்னும் படித்துக்கொண்டிருக்கிறாய் வித்யாவுக்குத் திருமணம் செய்ய வேண்டும். ஸுதாவும் கேவலும் இன்னும் சிறியவர்கள். அந்த பயம் எப்படிப் பட்டதென நீ கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அப்பாவோ கிழவர் ஆகிவிட்டார்; அவர் இன்னும் எத்தனை நாள்தான் இருப்பார்? ஆதலால்தான் நான் இறக்க விரும்பவில்லை. வாழ்க்கையில் நான் சேமித்து வைத்தது ஒன்றும் இல்லை. உங்களுக்காக நான் ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. என் குழந்தைகளுக்கு என்னவாகும் என்றே நான் நினைக்க முடியவில்லை. அந்த பயத்தினால் என்னுடைய பிராணன் துடித்துக்கொண்டிருந்தது."

நவல் பேசாமல் கங்கா பிரஸாதின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். "எனக்குக் கொஞ்சம் ஒரு தம்ளர் தண்ணீர் கொடு; பேசுவதற்குக்கூட சக்தியில்லாமல் போய்விட்டது."

நவல் எழுந்திருந்து கங்கா பிரஸாதுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொடுத்தான்.

தண்ணீர் குடித்துவிட்டு கங்கா பிரஸாத் மீண்டும் பேசலானார். "இன்று நான் உன்னை அந்த உருவத்தில்

பார்த்ததனுல் என்னுடைய பயம் போன இடம் தெரியாமல் போய்விட்டது. நீ தன்னபிமானம் உள்ளவன், திறமைசாலி, வாழ்க்கையின் வசதிகளை உதைத்துத் தள்ளக்கூடிய தைரியம் உன்னிடம் இருக்கிறது. நீ மலை போல் எந்த ஆபத்துக்களையும் தாங்கக்கூடியவன் என்று தெரிந்துகொண்டேன்." நவலுக்குத் தன்னைப்பற்றிய இந்தப் புகழ்ச்சி பிடிக்கவில்லை. "போதும் நிறுத்துங்கள் அப்பா. நீங்கள் மிகவும் களைத்துவிட்டீர்கள்."

"நான் சொல்வதை முழுவதும் கேள். தடுக்காதே. உனக்குத் தெரியாது. என் பிராணனுடைய களைப்பு போய்விட்டது. இனி எனக்கு ஒரு கவலையும் இல்லை. எந்தக் கஷ்டமும் இல்லை. நான் அமைதியோடு இறப்பேன். நீ எல்லாவற்றையும் சமாளித்துக்கொள்வாய். எனக்குத் தெரிந்துவிட்டது. என்னைவிட மிக நன்றாக நீ சமாளிப்பாய்." சிறிது நின்று மீண்டும் அவர் சொன்னார்: "நவல், உனக்குத் தெரியுமா, நான் ஏன் உடைந்துவிட்டேன், எப்படி உடைந்துவிட்டேன் என்று? நீ இதைக் கேட்டு ஆச்சரியப்படுவாய். நானேதான் என் உள்ளம் உடைந்ததற்குக் காரணம். என்னுள் இருக்கும் கோழைத்தனமும், இந்தக் கோழைத்தனத்தின் புழுக்கமும்தான் என்னை உடைத்துவிட்டது."

நவலுடைய ஆர்வம் இப்போது விழித்தெழுந்தது. அவன் கேட்டான்: "எப்படி அப்பா?"

"அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஒரு நாள் நான் என்னுடைய உத்தியோகம், அடிமைத்தனம் —இவற்றை எதிர்த்துப் போராட்டம் நடத்தினேன். என்னுள் தோன்றிய அந்தப் போராட்டம் உண்மையானது. இதை ஞான சித்தப்பா அறிவார். நான் ராஜினமா கொடுக்க நிச்சயித்துவிட்டேன். ஆனல் திடீரென என்னுள் குடிகொண்டிருக்கும் கோழைத்தனத்

திற்கு ஒரு சிறிது பிடிப்பு கிடைத்துவிட்டது. அதனால் என் கோழைத்தனம் வீறு பெற்று மேலோங்கி என்னை அடக்கிவிட்டது. நான் அந்த ராஜீனமா கடிதத்தைக் கிழித்தெறிந்தேன். அவமானம் என்னும் விஷத்தைக் குடித்துவிட்டேன் நான். விஷம் எவ்வளவு கசப்பாக இருந்தது! எவ்வளவு மெதுவாக உயிரை வாங்கியது! அந்த ராஜீனமாவைக் கிழித்தபோதே நானும் உடைந்து விட்டேன். கடந்த பத்து வருடமாக நான் வெறுமனே வாழ்க்கையை இழுத்துக் கடத்திக்கொண்டிருந்தேன். இனி அதற்கும் ஒரு முடிவு வந்துவிட்டது. இன்று நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்."

நவல் ஞானபிரகாஷிடம் அந்த மகிழ்ச்சியைப் பற்றி விவரமாகக் கேட்டிருந்தான். அப்படியானால் அந்த நிகழ்ச்சி இந்த அளவுக்கு அப்பாவைத் தாக்கி இருக்கிறதா! கங்கா பிரஸாத் மீண்டும் சொன்னார்: "நவல், நான் சொல்லும் ஒரு வார்த்தையை ஏற்றுக்கொள். நீ கடவுளைத் தவிர வேறு யாரிடமும் பணிந்துவிடாதே. உன் ஆன்மாவின் குரலுக்கு விரோதமாக எதையும் செய்யாதே. தன்னை மறப்பதற்காக மதுவை ஒருபோதும் உட்கொள்ளாதே."

உணர்ச்சி ஆவேசத்தோடு நவல் சொன்னான்: "நான் உங்களுக்காக வாக்களிக்கிறேன் அப்பா. இந்த மூன்றையும் நான் செய்யமாட்டேன். இனி நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள்."

"ஆம், இன்று என் உடம்பு தெம்பாக இருக்கிறது. கொஞ்சம் பசிகூட எடுக்கிறது. சாப்பிட்டுவிட்டு தூங்குவேன். இன்று தூக்கம் நன்றாக வரும்."

அடுத்த நாள் காலையில் கங்கா பிரஸாத் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அவருடைய ஜுரம் ஒரு டிகிரி குறைந்திருந்தது. நவலிடம் அவர் சொன்னார்: "நவல்,

என் உடம்பு குணமடைந்துவிடும் என்று எனக்குத் தோன்றுகிறது. புவாலீ போவதற்கு என்ன அவசியம் இருக்கிறது?"

"எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட்டேன். அங்கே உங்களுக்கு விரைவாக குணம் உண்டாகும்."

"ஆம், போகத்தான் வேண்டும்! மேலும் இங்கே உஷ்ணமும் அதிகமாக இருக்கிறது. புவாலீயில் நான் பூரணமாகக் குணமடைந்து திரும்புவேன் என்று நினைக்கிறேன்."

நவல் அவர் முகத்தில் ஒருவகை ஒளியைக் கண்டான். மகிழ்ச்சி பொங்கும் மனத்தோடு அவன் வரவேற்பு அறையில் வந்து உட்கார்ந்துகொண்டான். சாமான்களை எல்லாம் கட்டச் செய்து முடித்தான். அடுத்த நாள் காலை புவாலீக்குப் புறப்படவேண்டி யிருந்தது. அப்போது சத்தியவிரதனோடு கூட மாயா வந்தாள்.

"ஐயோ, என்ன ஆகிவிட்டதடா நவல்? என்ன மாதிரி இடிவிழுந்ததடா? எங்கே இருக்கிறார் அவர்? கான்பூரில் எங்களுக்கு மிகத்தாமதமாக இவருடைய உடல் நிலையைப்பற்றித் தெரிந்தது. அங்கிருந்து நேராக நாங்கள் மிர்ஜாபூர் போனோம். அங்கு போன பிறகு அலாகாபாத் வந்திருக்கிறார் என்று தெரிந்து இங்கு வந்தோம். எப்படி இருக்கு உடம்பு அவருக்கு?"

நவல் இருவரையும் உட்காரச் சொன்னான். "டாக்டர் புவாலீ போகச் சொல்லியிருக்கிறார். நாளைக்குக் காலையில் புவாலீக்குப் புறப்படுகிறார்."

"ஐயோ கடவுளே! புவாலீ போகவேண்டுமா, அந்த நிலை வந்துவிட்டதா!" மாயா கூக்குரலிட்டாள். "நவல், எங்களை அழைத்துச் செல் அவரிடம். என் கண்கண்ட கடவுளை நான் தர்சனம் செய்கிறேன்!"

"நீங்கள் உட்கார்ந்திருங்கள், நான் இப்போதே வரு

கிறேன்.''

நவல் திரும்பி வந்து சொன்னன்: ''வாருங்கள், உங்களைக் கூப்பிடுகிருர்.''

கங்கா பிரஸாதைப் பார்த்ததும் மாயா கூக்குரலிட்டாள். ''ஈசுவரா! உங்களுக்கு என்ன ஆகிவிட்டது! இந்த கதியை எல்லாம் நான் பார்க்கவேண்டும் என்று தலையில் எழுதியிருந்ததே.'' அவள் ஓடிச் சென்று கங்கா பிரஸாதின் கால்களைக் கட்டிக்கொண்டு பெரிதாக அழத் தொடங்கினுள்.

கங்கா பிரஸாத் பெரிதும் கஷ்டப்பட்டு மாயாவை விடுவித்துக்கொண்டார். பிறகு அவர் மாயாவிடம் சொன்னுர்: ''உட்கார் மாயாதேவீ, எப்படி இருக்கிருய்? குழந்தைகள் சௌக்கியமா? இங்கே எப்போது வந்தாய்?''

ஆனுல் மாயா அழுதுகொண்டிருந்தாள். அவள் பைத்தியம் பிடித்தவள் போல் சொல்லிக்கொண்டிருந்தாள். ''இது என்ன வந்துவிட்டது உங்களுக்கு? எப்படி வந்தது, சொல்லுங்களேன்? எங்களுக்கு நீங்கள் தகவல் ஏன் கொடுக்கவில்லை? நாங்கள் மிர்ஜாபூர் போனேம். கான்பூரில் நீங்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதாகச் சொன்னுர்கள். மிர்ஜாபூரிலிருந்து நேராக வருகிறேம்.''

சத்தியவிரதன் கண்கொட்டாமல் கங்கா பிரஸாதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இனம் தெரியவில்லையோ? அவன் எதிரில் எலும்பும் தோலுமான ஒரு உருவம் இருந்தது—துர்பலமான, சக்தியற்ற, தளர்ந்துவிட்ட உருவம்! இது அதே மனிதர்தாஞ? இவருடைய அதிகாரத்திற்கு மக்கள் நடுநடுங்குவார்களே, பெரிய பெரிய ஆங்கிலேயர்களுடன் போராடக்கூடியவர். இவர்தானே ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியிலிருந்து மாயாவை விடுதலை செய்வித்தார்? அந்த ஆர்வம், உற்சா

கம், சக்தி, மற்றும் செயல் திறன்—அதெல்லாம் எங்கே போய்விட்டது? இப்போது ஒரு நோயாளி—சக்தியற்ற மனிதர் படுத்திருந்தார். இந்த மனித அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. "என்ன சத்தியவிரதா, என்ன யோசிக்கிறாய்? நீங்கள் சைமன் கமிஷனை மிகவும் தீவிர மாக எதிர்த்தீர்கள்; இனி, மேற்கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?" சத்தியவிரதன் அந்த மனித உடலில் இன்னும் உணர்வு இருக்கிறதென்று அறிந்து கொண்டான். "இப்போது ஒன்றும் செயல் திட்டம் இல்லை. எங்களுடைய அரசியல் வாழ்க்கையை ஹிந்து-முஸ்லிம் கலவரங்கள் ஒருவாறு உருக்குலைத்து விட்டன. ஆனால், நாட்டின் வறுமை அதிகமாகிவிட்டது. வறுமையோடு மக்களின் அதிருப்தியும் வளர்ந்து விட்டது."

கங்கா பிரஸாத் புன்முறுவல் செய்தார். "இவை எல்லா வற்றையும் விட நாட்டின் சைதன்யம் பெரியது சத்தியவிரதா. இனி அண்மையிலேயே ஏதாவது இயக்கம் தொடங்கும் என்று நினைக்கிறாயா?"

சிறிது நிராசை கொண்ட குரலில் சத்தியவிரதன் சொன்னான்: "எனக்கொன்றும் தோன்றவில்லை. இவ்வளவு ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் இருக்க, மக்களிடையே எதிர்ப்புப் போராட்டத்தின் உணர்ச்சியே காணப்படவில்லை. என் உள்ளத்தில் ஒருவகை நிராசை குடிகொண்டுவிட்டது. ஒரு விசித்திர மான புழுக்கம், எல்லாம் அழுகிப்போனது போன்ற தொரு சூழ்நிலை சுற்றிச் சூழக் காணப்படுகிறது."

"இந்தப் புழுக்கத்திலும் குமைச்சலிலும்தான் எதிர்ப்புப் போராட்டத்தின் விதை இருக்கிறது சத்தியவிரதா! வாழ்க்கையின் நியதி, செய்கை, கருமம், வினைசெய்தல், எங்கு செயல் இருக்குமோ அங்கு எதிர்ச்செயல்

என்பதும் இருக்கும். இந்த எதிர்ச் செயல் முடிவடைந்து தான் ஆகவேண்டும்." இப்போது கங்கா பிரஸாத் மாயாவின் பக்கம் திரும்பினர். "ஏன் மாயாதேவீ, நீ காங்கிரஸ் தலைவியாகவில்லையே, என்ன விஷயம்? பத்திரிகைகளில் எங்கும் உன் பெயர் வரவில்லையே? சத்தியவிரதனுக்கு உன்னிடம் பொருமை என்று தோன்றுகிறது!"

"இந்த தலைமைப் பதவி வாழ்வில் தீயை வைக்க! குழந்தைகளை வைத்துக்கொண்டு எனக்கு எங்கே ஒழிவிருக்கிறது! ஓய்வுள்ளபோது கொஞ்சம் சர்க்கா வில் நூல் நூற்கிறேன். ஆனால் இதெல்லாம் வீணை காரியம் என்று எனக்குத் தோன்றுகிறது. விட்டுத் தள்ளுங்கள். உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்."

"என்னைப் பற்றி என்ன சொல்வது. பார்த்துக் கொண்டிருக்கிருயே நீ. நேற்றிலிருந்து கொஞ்சம் குணம் காண்கிறது. செப்டம்பர் மாதத்திற்குள் முழுவதும் குணமடைந்துவிடுவேன் என்று நினைக்கிறேன். நாளைக் காலை வண்டியில் புவாலீ போகிறேன். இங்குள்ள பயங்கர வெயிலில் குணம் ஆக முடியாது."

"நாங்களும் நாளைக் காலை ஸ்டேஷனுக்கு வருகிறோம்." சத்தியவிரதன் எழுந்திருந்து சொன்னன்: "இனி ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். பேசப் பேச உங்களுக்குக் களைப்புத்தான் அதிகமாகும்."

சத்தியவிரதன் சொன்னது சரியே. கங்கா பிரஸாத் உண்மையிலேயே களைத்துப்போயிருந்தார். திரும்பிப் படுத்தவாறு சொன்னர்: "ஆம், களைப்பு வந்துவிட்டது. மிகவும் பலவீனம். சரி, நாளைக்கு ஸ்டேஷனில் பார்ப் போம்." அவர் கண்களை மூடிக்கொண்டார். நாள் முழுவதும் ஒரே கூட்டம். கங்கா பிரஸாதைப் பலர் வந்து பார்த்து விசாரித்துச் சென்றர்கள். இரவு சுமார்

எட்டு மணிக்கு கங்கா பிரஸாத் நவலைக் கூப்பிட்டார். "நவல், நாளைக் காலை நாம் புவாலீ போவது அவசியம் தானா!"

"நவல் ஆச்சரியத்தோடு கேட்டான்: "ஏன், என்ன விஷயம் அப்பா. சாமான் எல்லாம் கட்டியாகிவிட்டது. படுக்கை மட்டும் கட்டவேண்டும்!"

"ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தேன். நேற்றும் இன்றும் என் உடல்நிலை இவ்வளவு அபிவிருத்தியாகி விட்டதே, ஒருவேளை இங்கேயே நன்றாக ஆகிவிடலாமே என்று." பிறகு சிறிது யோசித்துவிட்டுச் சொன்னார்: "இல்லை. அங்குதான் போகவேண்டும். உண்மையில் வித்யாவின் திருமணத்தைப் பற்றி எனக்குக் கவலை. நவம்பர் மாதத்தில் அவளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். நான் புவாலீயில் இருந்தால் திருமணத்திற்கு ஏற்பாடு யார் செய்வார்கள்? மிர்ஜாபூரில் பாபூ விந்தேச்வரி பிரஸாதின் கடிதம் வந்தது. அவர் நவராத் திரியின் போது நிச்சயதார்த்தம் செய்யவேண்டும் என்கிறார்."

"நீங்கள் இதையெல்லாம் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் ஜூலை மாதத்தில் இங்கு வருவேன். அப்போது எல் லாம் ஏற்பாடாகிவிடும். திருமணத்தைக் கொஞ்சம் தள்ளிப்போடவும் கூடும். உங்களுக்கு உடம்பு சரி இல்லை என்று அவர்களுக்கு எப்படியும் தெரிந்துபோய்விடும்."

கங்கா பிரஸாத் சிறிது யோசனை செய்துவிட்டுச் சொன்னார்: "நான் அவர்களுக்கு இன்னும் பதில் எழுத வில்லை. புவாலீ சென்று எழுதுகிறேன்." திடீரென கங்கா பிரஸாதின் முகத்தில் ஒருவித சுருக்கம் தோன்றியது. "கொஞ்சம் எச்சில் பாத்திரத்தை எடு."

"நவல் சீக்கிரமாக எச்சில்துப்பும் பாத்திரத்தை எடுத் தான். ஆனால் அவன் அதை எடுப்பதற்குள்ளேயே

கங்கா பிரஸாத் பெரிதாக இரும ஆரம்பித்தார். அந்த இருமலோடுகூட ரத்தம் விழுந்தது. படுக்கை முழுவதும் நனைந்துவிட்டது.

நவல் பதறிவிட்டான். அவன் அங்கிருந்தபடியே உரக்கக் கூவினான். "தாத்தா, இங்கே கொஞ்சம் வாருங்களேன்."

அப்போது கங்கா பிரஸாத் இரண்டாம் முறை வாந்தி எடுத்தார், கக்கலும் ரத்தமுமாக. கங்கா பிரஸாதின் முகம் கறுத்துவிட்டது. அவருக்கும் மூன்றும் தடவை வாந்தி வந்தது. அதேபோல அழுகிய, துர்நாற்றம் கொண்ட வாந்தி. கங்கா பிரஸாத் மூர்ச்சை அடைந்துவிட்டார்.

வீடு முழுவதும் அழையில் குழுமிவிட்டது. ஜ்வாலா பிரஸாத் டாக்டரை அழைத்துவர ஓடினார்.

டாக்டர் ஷேர்வுட் வந்து கங்கா பிரஸாதைப் பார்த்தார். பரீட்சை செய்துவிட்டு அவர் சொன்னார்: "இனி ஒன்றும் செய்ய முடியாது. எந்த நேரத்திலும் இறந்துவிடக்கூடும். அதிக பட்சம் காலைவரையில் பிழைத்திருக்கக்கூடும்."

ஜ்வாலா பிரஸாத் ஓவென்று அழுதார். "எப்படியாவது காப்பாற்றுங்கள் டாக்டர்! ஏதாவது மருந்து கொடுங்கள்."

"மருந்தாக நினைத்து இவருக்கு கங்கா ஜலத்தைக் கொடுங்கள். துரித டி.பி. வந்த பிறகு யார் காப்பாற்ற முடியும்! எல்லாம் முடிந்துவிட்டது!" இதைச் சொல்லிவிட்டு டாக்டர் போய்விட்டார்.

வீடு முழுவதும் ஒரே கூச்சல். ஜ்வாலா பிரஸாதும் நவலும் சேர்ந்து கங்கா பிரஸாதைக் கட்டிலிலிருந்து இறக்கித் தரையில் படுக்கவைத்தனர். பிராமணர்களை அழைத்து கோதானம் செய்வித்தனர். வெளியில்

பண்டிதப் பிராமணர்கள் மஹா மிருத்யுஞ்சய மந்திர ஜபம் செய்யத் தொடங்கினர். அந்த வீட்டில் சாவு அதிகாரம் செய்யத் தொடங்கிவிட்டது என்று நவலுக்குத் தோன்றியது. அறைக்கு வெளியே வராந்தாவில் யமுனு மூர்ச்சை அடைந்து கிடந்தாள். ருக்மிணி தன் தலையில் அடித்து அழுதுகொண்டிருந்தாள். ஜ்வாலா பிரஸாதும் நவலும் அறைக்குள் உட்கார்ந்திருந்தனர்சாவின் பிடியிலிருந்து கங்கா பிரஸாதைத் தப்புவிக்கப் போவது போல. வித்யா ஸுதாவையும் கேவலேயும் அழைத்துக் கொண்டு வெளிப்புறத்து அறைக்குப் போய்விட்டாள். பீக்கூ இங்குமங்கும் ஓடியாடிக்கொண்டிருந்தான்.

காலை மூன்று மணிக்கு கங்கா பிரஸாத் கண்ணைத் திறந்தார். கண்ணைத் திறந்ததும் பார்வை நவல் மேல் விழுந்தது. "நீ...நீயா!" பிறகு அவர் தம் தந்தையைப் பார்த்தார். "அப்பா, நவல் மேல் நீங்கள் நம்பிக்கை வையுங்கள்! இவன் வித்யாவுக்குத் திருமணம் செய்து வைப்பான்." அவர் நாற்புறமும் பார்த்தார்.சைகைசெய்து யமுனவை அருகில் அழைத்தார். "உன் கால்களை என் கையில் படச்செய்." பிறகு அவர் ருக்மிணியை அழைத்தார். "உனக்கு ரொம்ப கஷ்டம் கொடுத்தேன். மன்னித்துவிடு." அவர் தன் குழந்தைகளைப் பார்த்தார். ஆனல் விரைவில் அவருக்குப் பேசும் சக்தி அற்றுவிட்டது. நவலைப் பார்த்து அவர் அந்தக் குழந்தைகளைக் குறித்துச் சைகை செய்தார், அந்தக் குழந்தைகள் அனைவருடைய பாரமும் அவன் மேல் சுமத்துவதாகச் சொல்வது போல. பிறகு அவர் பார்வை ஒரேயடியாக வித்யாவின் மேல் வந்து தங்கியது. அப்போது ஒரு விக்கல் வந்தது. அவ்வளவுதான். தலை சாய்ந்துவிட்டது. வீடு முழுவதும் அழுகைக் கூக்குரல் எழுந்தது.

3

மூன்று நாட்களாக ஒரே மழை. ஒரே பிரவாகம். அன்று மேகம் விலகத் தொடங்கியது. மாலை நேரம். நவல் தேநீரைச் சாப்பிட்டுவிட்டு வராந்தாவிற்கு வந்தபோது வானம் வெளுத்துவிட்டது. அஸ்தமனக் கதிரவனின் வாடிய செங்கிரணங்கள் வராந்தாவில் விழுந்தன. ஜூலை மாதக் கடைசி வாரம். நாற்புறமும் பசுமை படர்ந் திருந்தது. நவல் சிறிது நேரத்திற்கு முன்தான் சர்வகலா சாலையிலிருந்து வந்தான், களைத்துப்போய்! வரும்போது சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டது. ஆங்கிருந்து அவன் சைக்கிளை ரிப்பேர் செய்ய கர்னல்கஞ்ச் போகவேண்டி யிருந்தது.

நவலுடைய களைப்பு, மனதில் தோன்றிய களைப்பு. ஒரு வாரம் முன் அவன் வித்யாவை "ஹாஸ்டலில் சேர்த்துவிட்டு வந்தான். அவள் பி. ஏ. பைனலில் இருந்தாள். ஜ்வாலா பிரஸாதுக்கு வித்யாவை மேற் கொண்டு படிக்க வைக்கும் நோக்கம் இல்லை. ஆனால் வித்யா பி. ஏ. பாஸ் செய்வேன் என்று பிடிவாதம் பிடித்தாள். நவல் வித்யாவின் கட்சியை ஆதரித்தான். இவ்விருவருடைய பிடிவாதத்தின் முன் ஜ்வாலா பிரஸாத் தலைவணங்கவேண்டி வந்தது. வயதில் வித்யா நவலைவிட இரண்டு வருஷம் சின்னவள். ஆனால் நவலுக்கு வித்யா பெரும் ஆதரவாக இருந்தாள். நவல் மௌனமாக வராந்தாவில் வந்து உட்கார்ந்து யோசித் துக்கொண்டிருந்தான். என்ன யோசித்துக்கொண்டிருந்

தான் என்று அவனுக்கே தெரியவில்லை. ஒன்றன் பின் ஒன்ருகப் பல யோசனைகள் தொடர்பற்று அவன் மூளையில் வந்து வந்து போய்க்கொண்டிருந்தன. கடந்த மூன்று மாதங்களாக அவனுடைய உலகம் மாறிவிட்டது. அவனுடைய கொள்கைகள் மாறிவிட்டன. அவனுடைய கண்ணேட்டம் மாறிவிட்டது. இதுமாத்திரமல்ல, அவனே மாறிவிட்டதாக அவன் உணர்ந்தான்.

அப்போது ஞானபிரகாஷின் குரல் கேட்டது. ''என்ன நவல், என்ன யோசனை ?"

நவல் திடீரென விழித்தெழுந்தான். ஞானபிரகாஷ் புன்னகை செய்தவாறு நின்றுகொண்டிருந்தார். அவர் முகத்தில் அதே அமைதி, அதே சாத்துவிகத்தன்மை, அதே உறுதிப்பாடு இருந்தது. "ஒன்றுமில்லை ஞான் தாத்தா. கொஞ்சம் சோர்வாக இருந்தது, இங்கு வந்து உட்கார்ந்துகொண்டேன். பல நாட்களுக்குப் பிறகு இன்றுதான் வெய்யில் தோன்றியது. ரொம்ப நாளாக வெளியே உலாவப் போகவில்லையே, இன்று போகலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தேன். இன்று நீங்கள் காங்கிரஸ் ஆபீஸிலிருந்து சீக்கிரமாக வந்துவிட்டீர்களே !"

"ஆமாம். இன்று முழுவதும் பறக்கப் பறக்க வேலை செய்யவேண்டி யிருந்தது. மிகவும் களைத்துவிட்டேன். நீ டீ சாப்பிட்டு விட்டாயா ?"

"ஆமாம், இப்போதுதான் குடித்துவிட்டு வந்தேன். நீங்கள் உட்காருங்கள், நான் இங்கேயே டீ கொண்டு வருகிறேன்." உள்ளே சென்று நவல் பீக்கூவிடம் சொன்னன்.

ஜ்வாலா பிரஸாத் அறையில் உட்கார்ந்து கீதை படித்துக்கொண்டிருந்தார். நவல் சொன்னன்: ''தாத்தா, டீ தயார். ஞானதாத்தாவும் வந்திருக்கிருர். நீங்களும்

வராந்தாவுக்கு வந்துவிடுங்கள்."

"இதோ, இந்த அத்தியாயத்தை முடித்துவிட்டு வருகிறேன்."

நவல் ஞானபிரகாஷிடம் போய் உட்கார்ந்துகொண்டான்.

ஞானபிரகாஷ் கேட்டார்: "நீ எல்.எல்.பீ.யில் சேர்ந்துகொண்டாயா; வெளி நாடு போகும் நோக்கம் இல்லையா?"

"அறவே இல்லை ஞானதாத்தா; வீட்டு நிலைமையை நீங்கள் அறிவீர்கள். தவிர, இந்த வருஷம் வித்யாவுக்குத் திருமணம் செய்யவேண்டும். செலவு ஏகப்பட்டது ஆகும். எப்படி முடிக்கப்போகிறோமோ தெரியவில்லை!"

"நவல், ஒரு வார்த்தை சொல்லுகிறேன், தவருக நினைக்காதே! நீ ரூபாய் காசைப் பற்றிக் கவலைப்படாதே என் செலவில் நீ சீமைக்குப் போய்விட்டு வா. இது உன்னுடைய பிழைப்புத் தொழிலைப் பற்றிய பிரச்னை. கங்கா நோயுற்றுக் கிடந்தபோது நான் வெளி நாட்டில் இருந்தேன். நீங்கள் எனக்குச் சமாசாரம் கூட அறிவிக்கவில்லை."

"நாங்கள் எப்படி சமாசாரம் தெரிவிப்பது தாத்தா. நீங்கள்தான் 'அபெண்டிக்ஸ்' ஆபரேஷன் செய்துகொண்டு ஆஸ்பத்திரியில் இருந்தீர்களே."

"சரி, நடந்தது நடந்துவிட்டது. உன்னுடைய பாஸ்போர்ட் தயாராக இருக்கிறது. நீ செப்டம்பர் மாதத்தில்தான் போகவேண்டும். இப்பவும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நான் சொல்லுகிறேன், நீ சீமைக்குப்போ, எதற்கும் கவலைப்படாதே!"

"இல்லை ஞானதாத்தா, நான் இங்கே இருந்துகொண்டு குடும்பத்தைக் கவனித்துக்கொள்ளவேண்டும். அப்பா வித்யாவின் திருமணம் நிச்சயம் செய்துவிட்டுப்

போயிருக்கிறார். அவளுக்கு இந்த டிசம்பரில் கல்யாணம் செய்ய வேண்டும். தவிர, எனக்கும் ஐ.சி.எஸ். ஆகும் விருப்பம் இனி இல்லை." அப்போது ஜ்வாலா பிரஸாத் வராந்தாவிற்கு வந்து சேர்ந்தார். அவர் மிகவும் கவலை நிறைந்து காணப்பட்டார். பீக்கூ இதற்குள் டீயைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான். ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "கேட்டாயா ஞானா. இன்று விந்தேச்வரீ பிரஸாதிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. இவ்வருஷம் கல்யாணத்தை ஒத்திப்போடக் கூடாதாம்; நவராத்திரியின் போது நிச்சயதார்த்தம் நடத்திவிட வேண்டுமாம்."

ஞானபிரகாஷ் பதில் அளித்தார். "கல்யாணம் செய்யத்தான் வேண்டும். ஒத்திப்போடுவானேன்? அது தான் சரி! நவராத்திரியின்போது நிச்சயதார்த்தத் தாம்பூலம் அனுப்பிவிடுங்கள்; நவம்பரில் முகூர்த்தத்தை நடத்திவிடுங்கள்."

ஜ்வாலா பிரஸாத் தளர்ந்த குரலில் சொன்னார்: "அது சரிதான். ஆனால் எண்ணாயிரம் ரூபாய் வேண்டுமே. நிச்சயதார்த்தம் என்றால் விளையாட்டு இல்லையே."

ஞானபிரகாஷ் நாற்காலியில் இருந்து குதித்தேவிட்டார்; "எண்ணாயிரமா? பைத்தியம் பிடித்துவிட்டதா உங்களுக்கு! வீட்டு நிலைமை என்ன; அப்படியிருக்க நிச்சயதார்த்தத்தில் எட்டாயிரம் தருவதா?"

"கங்காதான் இப்படி ஏற்பாடு செய்துவிட்டான். சித்தேச்வரி மாகாண சிவில் சர்வீஸில் வந்திருக்கிறான். மே மாதம் அவன் அப்பா எழுதிய கடிதத்தில் கல்யாணத்தைப் பற்றிச் சொல்லி ராஜா ஜஸ்வந்த்ராயிடமிருந்து பிரஸ்தாபம் வந்ததாகவும், இருபத்தைந்து ஆயிரம் ரூபாய் வரதட்சிணை கொடுப்பதாகக் கூறியதாகவும் எழுதியிருந்தார். கங்காவிடம் வாக்களித்துவிட்டதால்

ராஜா வீட்டு வரனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லையாம். நவலுக்கு நான் அந்தக் கடிதத்தைக் காட்டினேன்."

"அப்படியா, நிச்சயதார்த்தத்திற்கே எண்ணாயிரம் என்றால், பிறகு பதினைந்தாயிரம் கொடுக்கவேண்டும் என்று அர்த்தம். என்ன நவல், விந்தேச்வரீக்குப் பதினைந்தாயிரம் கொடுத்து இந்தத் திருமணம் செய்யப் போகிறாயா ?"

"ஞானு தாத்தா, திருமணம் அப்பா நிச்சயித்திருக்கிறார். ஆகவே, என்ன வழி செய்தாவது நடத்தித்தான் ஆகவேண்டும்."

ஜ்வாலா பிரஸாத் டீ சாப்பிட்டுக்கொண்டே சொன்னார்: "ஞானூ, உனக்கு விந்தேச்வரீ பிரஸாத் நன்றாகத் தெரியும். பணத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளும்படிச் சொல்லேன்! பதினைந்தாயிரம் வரதட்சிணை என்றால், மேற்செலவு மூவாயிரமாவது ஆகும். அதாவது மொத்தம் பதினெட்டாயிரம். பெரிய தொகை. கல்யாணத்தை ஒத்திப்போடவும் சம்மதிக்கமாட்டேன் என்கிறார்."

ஞானபிரகாஷ் வறண்ட குரலில் சொன்னார்: "அண்ணா, இந்த விந்தேச்வரீ பிரஸாத் மனிதன் இல்லை; பணப் பிசாசு! பைஜாபாதில் டிஸ்ட்ரிக்ட் செஷன்ஸ் ஜட்ஜ்! பெரிய சம்பளம். மகன் டிபுடி கலெக்டர்! பைசாக் காசுக்கு உயிரை விடக்கூடியவன்! நீங்கள் இந்தச் சம்பந்தத்தைச் செய்யாமல் இருப்பது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது. இதைவிட நல்ல வரன் வரும்." ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "ஞானூ, சம்பந்தத்தை விடுவது என்பது இப்போது சாத்தியம் இல்லை. நான் ஒருவேளை இதற்கு ஒப்புக்கொண்டாலும் நவல் ஏற்கமாட்டான். கங்கா நிச்சயித்துவிட்டுப் போனது. அது இவனுக்கு கல்லில் எழுதிய எழுத்து."

ஞானபிரகாஷ் நவலேப் பார்த்தார். நவல் தலேயைக் குனிந்துகொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான். சிறிது யோசித்து ஞானபிரகாஷ் கேட்டார்: "உங்களிடம் மொத்தம் எவ்வளவு பணம் இருக்கிறது?"

"என்னிடம் பாங்கில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. கங்காவின் கடனெல்லாம் போக அவனிடமிருந்து கிடைத்தது ஆயிரத்து இருநூறு ரூபாய். கங்கா போட்டிருந்த வைர மோதிரத்தைக் கல்கத்தாவில் விற்றதில் கிடைத்தது ஐந்தரை ஆயிரம். ஆக மொத்தம் எட்டே முக்கால் ஆயிரம் தேறும்."

"ஒன்பதாயிரம் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆக இப்போது வரதட்சிணைக்கு ஆருயிரம் குறைகிறது. ஒருவேளை இப்போது நிச்சயதார்த்தத்தைச் சமாளித்துக் கொள்ளலாம். பிறகு கல்யாணத்திற்கு எட்டு-ஒன்பது ஆயிரத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டுமே, அதைப்பற்றி என்ன யோசனே?"

"அதைப்பற்றி ஒன்றும் யோசிக்கவில்லே. யோசிக்க வேண்டியிருக்கும். கங்காவின் காரை விற்ருல் ஒரு ஆயிரம் கிடைக்கும். மிகுதிக்குக் கடன் வாங்கவேண்டியிருக்கும்."

"ஞானு, சத்தியபிரகாஷுக்கு எழுதி நீ இரண்டாயிரத்துக்கு ஏற்பாடு செய். லட்சுமீசந்திடமிருந்து ஐயாயிரம் கிடைக்கக்கூடும் என்று நான் நினேக்கிறேன். எப்படியோ ஒருவிதமாகத் திருமணம் நடத்தித்தான் ஆகவேண்டும்."

ஞானபிரகாஷ் பதில் ஏதும் கூறவில்லே. டீயைக் குடித்துவிட்டு அவர் பேசாமல் தம்முடைய அறைக்குப் போய்விட்டார்.

ஞானபிரகாஷ் சென்ற பிறகு ஜ்வாலா பிரஸாத் நவலேக் கேட்டார்: "நவல் என்ன செய்யலாம்

சொல்லு !"

" தாத்தா, நாம் வாக்கு கொடுத்திருக்கிறோம். எப்படி யாயினும் வித்யாவுக்கு அங்கேதான் திருமணம் செய்ய வேண்டும்."

"நல்லது. நான் அவர்களுக்கு எழுதிவிடுகிறேன், நவராத்திரியின் போது, அவர்கள் விருப்பப்படியே எட்டாயிரத்துக்குத் தாம்பூலம் அனுப்புகிறோம் என்று."

வெயில் மறைந்துவிட்டது. நவல் வெளியே சுற்றி வருவதற்காகத் தன்னறையில் சென்று ஆடை மாற்றிக் கொண்டான். அவன் வராந்தாவிற்கு வந்தபோது ஞான பிரகாஷின் குரல் கேட்டது "நவல் கொஞ்சம் இங்கே வா !"

நவல் போய்ப் பார்த்தான். ஞானபிரகாஷ் மிக வேக மாக அறையில் உலாத்திக்கொண்டிருந்தார். "நவல், என் னிடம் இப்போது மூவாயிரம் இருக்கிறது. நீ இரண்டா யிரம் வாங்கிக்கொள். ஆனால் இதை உன் தாத்தாவிடம் கொடுக்காதே, உன் அம்மாவிடம் கொடு. நான் சத்திய பிரகாஷ் அண்ணாவுக்கு எழுதுகிறேன். ஆனால் சமயத் திற்கு அவர் ரூபாய் அனுப்புவார் என்று எனக்கு நம்பிக்கை இல்லை."

" இப்பவே என்ன அவசரம் ஞானு தாத்தா ?"

ஞானபிரகாஷ் சிறிது சிடுசிடுப்போடு சொன்னார்: "நான் சொல்கிறபடி செய். என்னைப்பற்றி மாத்திரம் என்ன நிச்சயம்? எப்போது எப்படி இந்தப் பணம் செலவழிந்துவிடுமோ, முதலில் இந்தப் பணத்தை உன் அம்மாவிடம் கொடுத்து வைத்துவிட்டு அப்புறம் போ !" ஞானபிரகாஷ் மீண்டும் உலாத்தத் தொடங் கினார்.

தசரா விடுமுறைக்கு வித்யா பனாரஸிலிருந்து அலாகாபாத் வந்திருந்தாள். ஆனால் அவள் சந்தோஷ

மாக இல்லை. தாம்பூலம் அனுப்புவதற்கு ஒரு நாள் முன்னால் வித்யா நவலிடம் "அண்ணா, கொஞ்சம் ஏல் பிரேட் பார்க்வரை போய்விட்டு வரலாம் வா. வீட்டில் அடைபட்டிருப்பதால் மூச்சுத்திணறுவதுபோல் இருக்கிறது."

வித்யாவின் வார்த்தையைக் கேட்டு நவலுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. இருவரும் பூங்காவிற்குச் சென்றனர். மழை காலம் முடிந்துவிட்டது. ஆனாலும் இறுக்கம் தணியவில்லை. ராம்லீலா ஊர்கோலத்தைப் பார்க்க ஜனங்கள் டவுண் பக்கம் போயிருந்தனர். வித்யா சொன்னாள்: "அண்ணா, ஒரு வார்த்தை கேட்க விரும்புகிறேன். என் கல்யாணத்திற்கு எவ்வளவு வரதட்சிணை கொடுக்கப்படுகிறது?"

"இதைப்பற்றி உனக்கென்ன? அப்பா எப்படி நிச்சயம் செய்துவிட்டுப் போனாரோ அப்படியே கொடுக்கப்படும்!"

"எனக்கு சம்பந்தம் இருக்கிறது. இது என்னுடைய கல்யாணத்தில் கொடுக்கிற வரதட்சிணை. விவரம் எனக்குத் தெரியத்தான் வேண்டும்."

"நிச்சயதார்த்தத்தில் எட்டாயிரம். பின்னால் நாலாயிரம் ரொக்கமும் நாலாயிரத்துக்குச் சாமான்களும் அனுப்பப்படும்."

"நாலாயிரம் ரொக்கமும் நாலாயிரத்துக்குச் சாமானும்" வித்யா திருப்பிச் சொன்னாள். "அதாவது மொத்தம் பதினைந்தாயிரம் ரூபாய்?"

"ஆமாம், அப்பா ஒப்புக்கொண்ட தொகை."

"நீ சீமைக்குப் படிக்க ஏன் போகவில்லை என்று இப்போது எனக்குப் புரிந்தது அண்ணா, அப்பா ஒன்றும் வைத்துவிட்டுப் போகவில்லையே, இந்த ரூபாய் எப்படி வந்தது?"

நவல் சிடுசிடுத்துச் சொன்னான்: "வக்கீல் பரீட்சைக்குப் படிப்பது நான். என்னிடமே குறுக்குக் கேள்வி போடுகிறாயே நீ. விடு இந்தப் பேச்சை! தாத்தா பணத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதெல்லாம் கேட்கத் தான் என்னை இங்கு அழைத்து வந்தாயா?"

"ஆமாம் அண்ணா, இதெல்லாம் கேட்கத்தான். அப்படியானால் என் கல்யாணத்தால் இந்த வீடு இந்தக் குடும்பம் அழியப்போகிறது. தாத்தா விந்தேச்வரிக்கு வரதட்சிணையைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளும்படி எழுதினாராம். ஆனால் அவர் மறுத்துவிட்டாராம். இது உண்மையா?" நவல் புன்னகை செய்தான். "மாமனாருடைய பெயரைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை? ஆம், அது சரிதான்!"

சிறிது மௌனமாக இருந்தாள் வித்யா. "அண்ணா, அங்கே எனக்குக் கல்யாணம் செய்து வைக்காதே. எனக்குக் கல்யாணம் செய்துகொள்ள விருப்பமில்லை." இதைச் சொல்லும்போதே வித்யா அழுதுவிட்டாள்.

நவல் வித்யாவின் கையைப் பிடித்துக்கொண்டான். "வித்யா, எல்லா ஏற்பாடுகளும் செய்தாச்சு. அப்பா சொன்ன வாக்கை நிறைவேற்றத்தான் வேண்டும். அழிவோ, ஆக்கமோ அது பகவான் செயல். இந்தக் கல்யாணத்தினால் வீடும் அழிந்துவிடாது, நானும் அழிந்துவிடமாட்டேன். இவ்வளவு நம்பிக்கை இல்லையா உனக்கு?"

"ஆனால் நான் அழிந்துவிடுவேன் அண்ணா! கைகூப்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னை அந்தப் பணப் பிசாசுகளிடம் கொண்டுபோய் தள்ளிவிடாதே. இன்னும் நேரம் இருக்கிறது."

தியாகம், பெருந்தன்மை, கடமை உணர்ச்சி என்னும் மயக்கத்தில் மூழ்கியிருந்த நவல், வித்யாவின் உள்ளத்து

உணர்வுகளைப் புரிந்துகொள்ளவில்லை. அவன் வித்யாவை அடக்கிவிட்டான். "இனிமேல் இந்த வார்த்தை பேசாதே வித்யா! அப்பாவின் வாக்கு எனக்குப் பெரிது. உன் பொறுப்பனைத்தையும் என்னிடம் விட்டுப் போயிருக்கிறார். உண்மையில் நான் சீமைக்குப் போக விரும்பவில்லை. இல்லாவிட்டால் ஞானா தாத்தாகூட என்னைத் தன் சொந்தச் செலவிலேயே சீமைக்கு அனுப்புவதாகச் சொல்லுகிறார். வா, வீட்டுக்குப் போகலாம். நாழிகையாகிறது. இனிமேல் இதைப்பற்றி யெல்லாம் ஒரு வார்த்தைகூட உன் வாயிலிருந்து வரக் கூடாது!"

வித்யா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு "நீ நான் சொல்வதைப் புரிந்துகொள்ளவில்லை அண்ணா. உனக்குப் புரியவே புரியாது" என்றாள். "நீ எப்படிச் சொல்லு கிறாயோ அப்படியே செய்கிறேன். ஆனால் அண்ணா, இது என்னுடைய பி. ஏ. இறுதி ஆண்டு. திருமணத் தினால் என் படிப்புக்கு பங்கம் ஏற்படக்கூடாது. நீ எனக்கு வாக்குக் கொடு."

நவல் வித்யாவின் இந்த நிலையைப் பார்த்து உருகி விட்டான். "வித்யா, நான் உனக்கு வாக்களிக்கிறேன். நீ பி. ஏ. பாஸ் செய்வதற்குத் தடங்கல் இராது."

நவமி அன்று காலை நவல் நிச்சயதார்த்தத் தாம்பூலம், திலகம் எடுத்துக்கொண்டு பைஜாபாத் போனான். பாபூ விந்தேச்வரீ பிரஸாத் நவலை அழைத்துப் போக ஸ்டேஷ னுக்கு வந்திருந்தார். எவ்வளவு சுமுகமாக இருந்தார் அவர்! விந்தேச்வரீ பிரஸாத் கேட்டார்: "சுகமாக வந்தாயா அப்பா? ரயில் பிரயாணத்தில் சிரமம் ஒன்றும் இல்லையே?"

நவல், விந்தேச்வரீ பிரஸாதின் இந்தப் பெருந்தன்மைப் போக்கைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். மாலையில்

நிச்சயதார்த்தத்துக்கான திலகம் எடுப்பதற்கு முன்னால் விந்தேச்வரீ பிரஸாத் நவலிடம் சொன்னார்: "கொஞ்சம் அந்த நிச்சயதார்த்தத்துச் சாமான்களைப் பார்க்கலாமே." நவல் டிரங்கைத் திறந்து தட்டுகளில் சாமானையெல்லாம் எடுத்து வைத்தான். விந்தேச்வரீ பிரஸாதின் முகம் கோணிவிட்டது. "ரொக்கம் நாலாயிரம் சரிதான். ஆனால், பாக்கி சாமான் நாலாயிரம் பெறாது. இது சரி அல்ல!"

நவல் சாமான்களுடைய விலைக் கணக்குப் பட்டியலை விந்தேச்வரீ பிரஸாதின் கையில் கொடுத்து "இதோ, இந்தச் சீட்டைத் தாத்தா அனுப்பியிருக்கிறார்" என்றார்.

விந்தேச்வரி குத்தலாகப் பேச ஆரம்பித்தார். "சீட்டை வாங்கி நான் என்ன சாப்பிடுவதா?" "ஒவ்வொரு பொருளுடைய விலையும் நூற்றுக்கு இருபத்தைந்துரூபாய் அதிகம் போட்டு எழுதியிருக்கிறது. எனக்குத் தெரியும்." நவல் விந்தேச்வரீயின் சுய ரூபத்தைக் கண்டுகொண்டான். "இவ்வளவு அந்தஸ்து இல்லாதபோது என் வீட்டில் கல்யாணத்திற்கு நிச்சயிப்பானேன்?"

பட்டியலில் சாமான்களுடைய விலையை அதிகப்படுத்தி எழுதியிருக்கிறது என்று நவலுக்குத் தெரியும். ஆனால், அந்தஸ்து பற்றிய வார்த்தை அவனுக்குச் சரியாகப் படவில்லை. "ஆமாம், பெண்வீட்டுக்காரர்களுக்கு அந்தஸ்து எங்கே இருக்கும்? தவிரவும், அந்தஸ்து உள்ளவர் உயிரோடு இல்லை. நாங்கள்தான் முன்பே இதையெல்லாம் எழுதியிருந்தோமே! இதில் யாரை நொந்து கொள்ள முடியும் நாங்கள்!"

விந்தேச்வரீ பிரஸாத் நவலுடைய இந்த விநயமான பேச்சினாலெல்லாம் மாறிவிடவில்லை. "எங்களுடைய மூக்கை அறுத்துவிட்டீர்கள். ஊர் ஜனங்கள் இந்த சாமானைப்பார்த்தால் என்ன சொல்லுவார்கள்? பெரிய பெரிய ஆபீஸர்களும், தாலூகாதார்களும், செல்வந்தர்களையும்

அழைத்திருக்கிறேன். என்னிடம் இந்த ஏமாற்று வித்தை எல்லாம் நடக்காது என்று உன் தாத்தாவிடம் சொல்லி விடு. கல்யாணத்தில் எனக்கு நாலாயிரம் ரொக்கம்தான் வேண்டும். சாமான் ஒன்றும் வேண்டியதில்லை. என் வீட்டில் வேண்டியது இருக்கிறது.''

நவல் கோபத்தை அடக்கிக்கொண்டான். நிச்சயதார்த்தம் செய்த பிறகு அடுத்த நாள் காலையிலேயே அவன் அலாகாபாதுக்குப் புறப்பட்டுவிட்டான். ஜ்வாலா பிரஸாதிடம் எல்லா விவரமும் தெரிவித்தான். "தாத்தா, எப்படிப்பட்ட பணப் பிசாசுகளிடம் போய் நாம் மாட்டிக் கொண்டுவிட்டோம் தெரியுமா? ஞானு தாத்தா சரியாகத்தான் சொன்னார். அந்தக் குடும்பத்தில் வித்யாவைத் திருமணம் செய்து கொடுத்து நாம் பெரிய தவறு செய்கிறோம்.''

ஜ்வாலா பிரஸாத் அதிர்ந்து போனார். அவரிடம் இப்போது இருந்தது மூவாயிரம். கல்யாணத்திற்கு இன்னும் இரண்டு மாதம்தான் இருக்கிறது. "நடந்தது நடந்து விட்டது நவல். இனி நமக்குச் சுமார் ஒன்பதினாயிரம் செலவாகும். என்னிடம் இருப்பதோ இரண்டாயிரம் தான். ஆறாயிரத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.''

நவல் மங்கிய குரலில் சொன்னான்: "ஆமாம் தாத்தா, இன்னும் ஆறாயிரத்துக்கு ஏற்பாடு செய்து ஆக வேண்டும். வேறு வழி இல்லை."

"ஞானபிரகாஷிடம் சத்தியபிரகாஷிடமிருந்து இரண்டாயிரம் வாங்கித் தரும்படி சொன்னேன். நானும் சத்திய பிரகாஷுக்கு இரண்டு கடிதங்கள் எழுதினேன். ஆனால், சத்தியபிரகாஷும் கடிதம் போடவில்லை. ஞானபிரகாஷும் இது சம்பந்தமாக என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை."

நவல் ஞானபிரகாஷ் கொடுத்த பணத்தைப் பற்றி

மறந்தேபோய்விட்டான். அது நினைவு வந்தது. "தாத்தா, ஞானு தாத்தா எனக்கு இரண்டாயிரம் ரூபாய் இரண்டு மாதத்திற்கு முன் கொடுத்தார். அதை நான் அம்மா விடம் கொடுத்து வைத்தேன். இப்போது நாலாயிரத்துக் குத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்."

ஜ்வாலா பிரஸாதின் முகம் மலர்ச்சியுற்றது. "கடவுள் அருளினால் அதுவும் கிடைத்துவிடும். நான் இன்றே லட்சுமீசந்துக்குக் கடிதம் எழுதுகிறேன். அவனிடமிருந்து ஐயாயிரம் கிடைக்கக்கூடும்."

ஞானபிரகாஷின் குரல் கேட்டது. "நீங்கள் லட்சுமீ சந்தைப் பற்றி நம்பிக்கை வைக்காதீர்கள் அண்ணா. வேறு ஆள் பாருங்கள்! சத்தியபிரகாஷ் அண்ணாரும் கையை விரித்துவிட்டார்."

"ஞானு, நீ இரண்டாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறாய். மிகப் பெரிய உதவி. இந்தத் தருணத்தில் லட்சுமீசந்த் உதவி செய்வான் என்று எனக்குப் பெரிய நம்பிக்கை இருக்கிறது. நானே நேரில் கான்பூர் சென்று அவனைப் பார்க்கலாம் என நினைக்கிறேன்."

"ஆமாம், நீங்களே நேரில் சென்று பார்த்தால் தாட்சிண்யத்துக்காக ஆயிரம்-ஐந்நூறு கொடுத்தால் கொடுக்கக்கூடும்."

அன்று மாலை வித்யா நவலிடம் சொன்னாள்: "அண்ணா, இனிமேல் உன்னிடம் நான் ஒன்றும் சொல்லமாட்டேன். நடந்ததை நீ பார்த்துவிட்டாய். இனிமேல் நடக்கப் போவதை நான் அனுபவிப்பேன். நாளைக்கு என்னை பனாரஸ் கொண்டுபோய் விடு."

நவலுக்கு அழுகை வந்தது. "வித்யா, என்னை மன்னித்துவிடு. பெரும் தவறு நிகழ்ந்துவிட்டது."

"தவறென்னமோ நிகழ்ந்துவிட்டது அண்ணா. இனி மேல் அதைத் திருத்த இயலாது. ஆனால் நான் உனக்கு

உன் வாக்கை நினைவுபடுத்துகிறேன். நான் பி. ஏ. பாஸ் செய்ய வேண்டும். நீ வாக்களித்திருக்கிறாய்."

"ஆம் வித்யா, நான் என் வாக்கைக் காப்பாற்றுவேன். நாளைக்கு உன்னை பனாரஸ் கொண்டுபோய் விடுகிறேன். நீ கவலையற்றுப் படி. உன் படிப்பிற்கு எந்தவிதத் தடையும் வராது. அது என் பொறுப்பு."

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஜ்வாலா பிரஸாத் பணத்துக்கு வகை செய்ய இயலாமல் இருந்தார். ஞான பிரகாஷ் சொன்னதுபோலவே லட்சுமீசந்த் கடன் கொடுக்க இயலவில்லை என்று மறுத்து ஜ்வாலா பிரஸாதிடம் சொன்னான்: "சித்தப்பா, இங்கு நிலைமை சரியாக இல்லை. இருந்தாலும் நீங்கள் வந்துவிட்டீர்கள். ஓராயிரம் கொடுக்கிறேன். கல்யாணத்திற்கு நான் வர முடியாமல் போகும்" என்றான். இன்னும் வேண்டுமே மூவாயிரம்! கல்யாண ஆசீர்வாதத்தில் ஆயிரம் ரூபாய் கிடைக்கக்கூடும். ஜ்வாலா பிரஸாத் இதை அறிவார். ஆனால், அது இனி கிடைக்கப்போவதைப்பற்றிய விஷயம். அதுவும் நிச்சயமற்றது; அதை நம்பியிருக்க முடியாது.

நவம்பர் மூன்றாம் வாரம் கழிந்துவிட்டது. ஜ்வாலா பிரஸாதுடைய உறவினர்கள் வரத் தொடங்கினர். வீட்டில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரமாக இருந்தது. நவல் வித்யாவை நவம்பர் இருபத்து மூன்றாம் தேதி அழைத்து வந்தான். வித்யாவுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்விக்கும் சடங்கு செய்யப்பட்டது.

ஜனவாஸத்தின் ஏற்பாடுகள் நவலின் பொறுப்பில் இருந்தன. அவனுக்கு ஒரே வேலை, வேலை, வேலை! ஞான பிரகாஷ் வீட்டு ஏற்பாடுகளைக் கவனித்தார். ஆனால், பெயருக்கு மட்டும்தான். ஆனால் உண்மையில் பீக்கூதான் பொறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தான். கல்யாணச் சாமான்களை வாங்கி வண்டியில் ஏற்றிக்கொண்டு

நவல் திரும்பி வந்தபோது பீக்கூ நவலிடம் சொன்னான்: "குழந்தை, முன்னறையில் தம்பி ஞானுவோட பேசிக் கிட்டிருக்கு; இரண்டு பேருக்கும் ஏதோ சண்டை ஆயிடுச்சுபோல் தோணுது. கொஞ்சம் போய்ப் பார்."

நவல் வரவேற்பறையில் போய்ப் பார்த்தான். ஞான பிரகாஷ் சொல்லிக்கொண்டிருந்தார்: "நான் உங்களைக் கடன் வாங்க விடமாட்டேன். இப்பொழுது இரண்டா யிரம் தொகை கொடுக்காதீர்கள். இந்தப் பணம் பிறகு அனுப்பப்படும் என்று சொல்லிவிடுங்கள்."

"மிகவும் அனர்த்தம் ஆகிவிடும் ஞானூ. உனக்குத் தெரியாது." இந்த இரண்டாயிரத்துக்கு நான் ஏற்பாடு செய்துதான் ஆகவேண்டும்."

"நாளை நின்று திருமணம்! இப்போது ஏற்பாடு செய்யக் கிளம்புகிறீர்கள் நீங்கள். ரூபாய் கடைத் தெருவில் கொட்டிக் கிடக்கிறதா, போனோம், திரட்டிக்கொண்டு வந்தோம் என்பதற்கு! இருப்பதை வைத்துக்கொண்டு எல்லாவேலையையும் நிறைவேற்றுங்கள். பெண்ணுக்குத் திருமணம் செய்கிறீர்கள், மானத்தை விற்றுவிடவில்லை."

ஜ்வாலா பிரஸாத் ஒரு கடுமையான சிரிப்பு சிரித்தார். "பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதும் தன்மானத்தை விற்பதும் இரண்டும் ஒன்றுதான் ஞானூ! இந்த பங்களாவை அடமானம் வைத்துவிடு, ஆயிரம் ரூபாய் கிடைக்கத்தான் செய்யும் ஞானூ, யாரிடமாவது முடிவு பண்ணு."

"பங்களாவை அடமானம் வைப்பது, பத்தாயிரம் தயார் செய்வது, கடன் கொடுக்கும் வட்டி வியா பாரியைத் தேடுவது—அண்ணே, உங்களுக்கு அறிவு மாடு மேய்க்கப் போய்விட்டதா என்ன? கண்ணுபின்னு வென்று வட்டி கொடுக்கவேண்டும் இல்லை. இப்படி எல்லாம் நடக்கக்கூடாது, நம்மிடம் நேரமும் இல்லை."

ஜ்வாலா பிரஸாத் சிறிது நேரம் யோசித்துக்கொண்டிருந்தார். பிறகு அவர் நவலிடம் சொன்னார்: "கொஞ்சம் உன் பாட்டியைக் கூப்பிடு." நவல் யமுனையை அழைத்து வந்தான். "தேவி பூஜை நடக்கிறது. நான் சீக்கிரமாகப் போகவேண்டும். என்ன விஷயம்" என்றாள் யமுனை.

"விஷயம் என்னவென்றால், இரண்டாயிரம் குறைபடுகிறது. எங்கேயாவது ஏற்பாடு செய்யக்கூடுமா?"

"நான் என்ன செய்ய? இது ஆண் பிள்ளைகள் வேலை. நீங்கள் இருக்கிறீர்கள். ஞானூலாலா இருக்கிறார்..."

ஜ்வாலா பிரஸாத் சிடுசிடுத்துக் கூறினார்: "நாங்கள் செய்யக்கூடுமானால் உன்னை ஏன் கூப்பிடுகிறோம்?"

யமுனை சந்தேக நோக்கத்தோடு கேட்டாள் "என்னை ஏன் கூப்பிட்டீர்கள்?"

"அதைத்தான் சொல்ல வந்தேன். உன்னுடைய நகையும் மருமகளுடைய நகையும் கொஞ்சம் வேண்டும். அவற்றை ஈடு வைத்து ரூபாய் வாங்கவேண்டியிருக்கிறது."

"ஐயோ பகவானே, இந்த நிலைமை வந்துவிட்டதா!"

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "வேறு வழியில்லை. கையில் இருந்த பணம் ஆகிவிட்டது. வீட்டை அடமானம் வைக்க நேரம் இல்லை. இந்த ஒரு வழிதான் தோன்றுகிறது. நாளைக் காலை எனக்கு நகையைக் கொடு. நாளை நின்று பிள்ளை வீட்டார் வருகிறார்கள்."

யமுனையின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. "எந்த முகத்தை வைத்துக்கொண்டு மருமகளிடம் சொல்வேன்! எனக்கு நகைநட்டு வேண்டாம். ஆனால் மருமகள்? அவள் பெண்ணுக்குக் கல்யாணம்! அவள் உடம்பில் நகை இல்லாமல் நிற்பாளா! ஏ கடவுளே, பெரும் பழிச் சொல் உண்டாகுமே."

அது பிரச்னை இல்லை. செய்துதான் ஆகவேண்டியிருக்

கிறது. நாளைக்குக் காலை நகையைக் கொண்டுவந்து கொடு."

கண்ணில் நீர் ததும்ப யமுனா சென்றாள். முற்றத்தில் சடங்கு நடந்தது; பெண்கள் கூடி மகிழ்ச்சியோடு சிரித்துப் பரிகாசம் பேசிக்கொண்டிருந்தனர். யமுனா மௌனமாகச் சென்று அதில் கலந்துகொண்டாள். ருக்மிணி யமுனாவின் நிலைமையைக்கண்டு அருகில் வந்து கேட்டாள்: "அம்மா, என்ன விஷயம்? உடம்பு ஒன்று மில்லையே?" யமுனா ருக்மிணியைத் தனியாக அழைத்துச் சென்று நிலைமையைச் சொன்னாள்.

அப்போதிலிருந்து வீட்டில் ஒருவகை வருத்தம் நிலவி விட்டது. சடங்குகளெல்லாம் ஒழுங்காகவே நடந்து கொண்டிருந்தன. ஆனால், உற்சாகம் திடீரென்று மறைந்து விட்டதென்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தனர். இதெல்லாம் ஏன், எப்படி என்று விருந்தினருக்குத் தெரியவில்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஒரு விசித்திர மான பரபரப்பை மட்டும் உணர்ந்தனர்.

மாலை நேரத்தில் வீட்டின் சூழ்நிலை முற்றிலும் மாறி விட்டது. சூழ்நிலையின் மாறுதலை அதிகமாக உணர்ந்தது பீக்கூதான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருப்பும் கொள்ளவில்லை. யமுனையைப் பண்டக அறைக்கு அழைத்து வந்து அவன் விசாரித்தான். "அண்ணி, இதெல்லாம் என்ன நடக்குது? திடுதிப்புன்னு ஏன் சந்தோஷமெல்லாம் அடங்கிடிச்சு."

யமுனாவின் கண்களில் நீர் பெருகியது. "பகவா னுடைய மாயை, விளையாட்டு பீக்கூ. கடவுள் நம்மைக் கைவிட்டு விட்டார். பிள்ளையைப் பறித்துக்கொண்டு போய்விட்டார். இப்போது எங்கள் நகைகளையும் பறிக்கிறார்."

"இவ்வளவுதானா சமாசாரம்!" பீக்கூவின் முகத்தில்

ஒரு புன்னகை தவழ்ந்தது. "உன் நகை போய்விடாது. போய் சந்தோஷமா குழந்தைக்குச் செய்யவேண்டியதே செய். தம்பி வீட்டிலேதான் இருக்குதா?"

"ஆம். ஞானு லாலாவுடனும் நவலுடனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்."

நவலும் ஞானபிரகாஷும் உட்கார்ந்து "பராத்" பார்ட்டியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பிள்ளை வீட்டார் நூறு பேர் வருவதாக இருந்தனர். ஆனால் உறவினர், இனத்தார், நண்பர் எல்லாரும் சேர்ந்து சுமார் நானூறு பேர் எதிர்பார்க்கலாம். ஜ்வாலா பிரஸாத் சிறிது தூரத்தில் உட்கார்ந்துகொண்டு இவர்கள் பேச்சை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந் தார். அவரிடம் உற்சாகமும் இல்லை. அப்போது பீக்கூ கையில் ஒரு 'டின்' எடுத்துக்கொண்டு வந்தான். 'டின்'னை ஜ்வாலா பிரஸாதுக்கு முன்னே வைத்துச் சொன்னான்: "தம்பி, குழந்தை வித்யாவுக்கு கன்யாதானத்துக்காக இதோ என் அன்பளிப்பு."

ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். "என்ன சொல்லு கிறாய்? இதில் என்ன இருக்கிறது?"

"எனக்கு எண்ணத் தெரியாது. ஆனா இதிலே நெறைய பணம் இருக்கு. அண்ணியிேடேயும், மருமகளோ டேயும் நகையை அடகு வைக்கவேண்டியதில்லே. கடேசி யிலே குழந்தை கிட்ட எனக்குக்கூட கொஞ்சம் உரிமை இருக்கு! அத்தே நான்தான் வளர்த்தேன். என் மடியிலே போட்டு சாப்பாடு ஊட்டினேன்."

ஞானபிரகாஷும் நவலும் எழுந்து பீக்கூ அருகில் வந்தனர். "இதில் எவ்வளவு பணம் இருக்கும்?"

"அதான் சொல்லிவிட்டேனே. எனக்கு எண்ண வராது. ஆனால், இதிலே என்னோட சொத்து சேமிப்பு எல்லாம் இருக்கு. இந்த வீட்டிலேதானே என் வாழ்நாளெல்லாம்

கழிச்சேன். எனக்குக் கெடச்சதை இதிலே போட்டு வெச்சேன். அம்மா எனக்குக் கொடுத்துட்டுப் போனதும் இதிலே இருக்கு. நீங்க எடுத்துப் பாருங்க."

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "பீக்கூ, இது நீ வாழ்க்கை முழுவதும் சம்பாதித்த பணம். இதை நாங்கள் எடுத்துக்கொள்வதா?"

பீக்கூ சொன்னான்: "என்னை வித்தியாசமா நெனைக்காதிங்க தம்பி. எனக்கென்ன வேறே குடும்பமா பசங்களா! எனக்கிருப்பது இந்தக் குழந்தைங்கதானே. இதுகளே நான் தோளிலேயும் மாரிலேயும் தூக்கி வளர்த்தேன், பெரிசாக்கினேன்!" பீக்கூ அழுதுவிட்டான். "தம்பி, கங்காவுக்கு எங்கிட்டே உன்னைவிட அதிக மதிப்பு! எனக்கும் அதுபோலே எவ்வளவு பெருமை இருந்திச்சு! கருணை இல்லாத அந்த தெய்வம்தான் அத்தே எங்கிட்டேருந்து பிரிச்சுட்டுதே!" பீக்கூவுக்கு விம்மல் வந்தது. "கங்காவோட பெண்ணு கல்யாணத்தைப் பார்க்கணும்னு எனக்கு ஆசை! கடவுள் அந்த நாளையும் காட்டிட்டான். நான் குழந்தை வித்யாவுக்குன்னு நெனச்சு இத்தே கொண்டுவந்தேன். இந்தப் பெட்டியை வாங்கிக்க—இது என்னுடைய காணிக்கை."

ஜ்வாலா பிரஸாதின் கண்களில் நீர் பெருகியது. அவர் பீக்கூவைப் பார்த்தார். அந்தக் கிழடு தட்டிய, குரூபமான முகத்தில் அளவு கடந்த அன்பும், பரிவும் காணப்பட்டது. தழுதழுத்த குரலில் அவர் நவலிடம் சொன்னார்: "நவல், எனக்கு இந்தப் பெட்டியைத் தொடக்கூட உரிமை கிடையாது. நீ இதைத் திற."

நவல் பெட்டியைத் திறந்தான். அதில் சில வெள்ளி நகைகள் இருந்தன. அவை பீக்கூவுக்கு சின்கீ கொடுத்தது. ஆயிரத்தைந்நூறு ரூபாய் ரொக்கமும், ஐம்பது தங்கக் காசுகளும் இருந்தன.

ஞானபிரகாஷ் ஆயிரத்திருநூறு ரூபாயையும் ஐம்பது தங்கக் காசுகளையும் தனியாக எடுத்து வைத்தார். பிறகு அவர் பீக்கூவிடம் சொன்னார்: "இந்தக் கல்யாணத்தில் துண்டு விழுந்த தொகை இவ்வளவுதான். பாக்கி உன்னிடமே இருக்கட்டும். நவல் கல்யாணத்திற்கும் நீ ஏதாவது கொடுக்கவேண்டி யிருக்கும். இன்னும் ஸுதாவுக்கும்தான் கல்யாணம் நடக்கும்."

பீக்கூவின் முகத்தில் புன்னகை வந்தது. "ஏன் இல்லே. பிழெச்சிருந்தா அதெல்லாம் கூடத்தான் செய்ய ணும்." பீக்கூ தன் "டின்"னை எடுத்துக்கொண்டு விரை வாகப் போய்விட்டான்.

சூழ்நிலையில் மீண்டும் சிரிப்பும் உல்லாசமும் திரும்பி விட்டன, ஏதோ மந்திரம் நிகழ்ந்துவிட்டது போல! முப்பதாம் தேதி பிள்ளை வீட்டார் வந்தனர். நல்ல முறை யில் திருமணம் நிறைவேறியது. விந்தேச்வரிக்கு எங்கும் எந்தவிதக் குறைபாடும் காணவில்லை. பிரயாணம் நடந்த அன்று நவல் விந்தேச்வரி பிரஸாதிடம் சென்று கைகூப்பி வணங்கிக் கூறினான்: "உபசாரங்களில் ஏதாவது குறை பாடுகளிருந்திருக்குமானால் அதற்காக என்னை மன்னிக்கவேண்டும்."

வந்தவர்களை உபசரித்த முறையைக் கண்டு விந்தேச்வரீ பிரஸாத் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தார். அவர் சொன்னார்: "எங்களுக்கெல்லாம் ரொம்ப திருப்தி, ரொம்ப சந்தோஷம் நவல். நீ யோக்கியமான பிள்ளை. உன் உதாரகுணமும் ஆர்வமும் ரொம்பப் பெரிசு."

"உங்களிடம் ஒரு வேண்டுகோள்—எளிமையான வேண்டுகோள்: அதாவது வித்யா இந்த வருஷம் பி.ஏ. இறுதி ஆண்டு படிக்கிறாள். அவள் பி.ஏ. முடிக்கவேண்டும்.

விந்தேச்வரீ சிரித்துக்கொண்டே சொன்னார்: "அடே, அவள் என்ன ஏதாவது உத்தியோகம் செய்யப்

போகிறாளா என்ன பீ.ஏ. பாஸ் செய்வதற்கு!"

"உங்கள் மருமகள் எங்கேயாவது உத்தியோகம்செய்ய வேண்டுமா என்ன? ஆனால், சித்தேச்வரீ பாபூ டிபுடி கலெக்டர்; கலெக்டர் ஆகக்கூடியவர். ஆகவே அவரு டைய மனைவி 'க்ரேஜுவேட்'டாக இருந்தால் நல்ல தல்லவா. அதனால் சமூகத்தில் மதிப்புப் பெருகும்."

நவல் சொன்னது சரிதான். விந்தேச்வரீ பிரஸாத் சித்தேச்வரீ பிரஸாதைப் பார்த்தார். "கேட்டுக்கொண் டிருக்கிறாயா நவல் சொல்வதை? உன் கருத்தென்ன?"

"அவள் பி.ஏ. பாஸ் செய்வது நல்லதுதான், நாலைந்து மாதங்கள்தானே இன்னும் இருக்கின்றன!"

விந்தேச்வரீ பிரஸாத் சிரித்தார். "புதிய உலகம் அல்லவா! எல்லாரும் ஒரேமாதிரி யோசிக்கிறீர்கள். சரி, ஒரு வாரத்துக்குப் பிறகு நான் அவளை அனுப்பிவிடு கிறேன். ஆனால், பெண் பனாரஸ்ஸில் அல்லவா படித்துக் கொண்டிருக்கிறாள், போர்டிங் ஹௌஸில் இருந்து கொண்டு!" "ஆமாம்," நவல் பதில் சொன்னான்.

"அப்படியானால் போர்டிங் ஹௌஸின் செலவை நீங்கள் ஏற்கவேண்டியிருக்கும். என்ன சித்தேச்வரீ, நான் சொல்வது தவறல்லவே?"

சித்தேச்வரீ பிரஸாத் சொன்னார்: "இதுகூட சொல்ல வேண்டுமா என்ன லாலாஜீ. இத்தனை நாள் இவர் தன் தங்கையைப் படிக்கவைத்தபோது, இன்னும் ஐந்தாறு மாதம் படிக்கவைக்கமாட்டாரா!" சித்தேச்வரீ பிரஸாத் உரக்கச் சிரித்தார்.

சித்தேச்வரீயின் அந்தச் சிரிப்பு எவ்வளவு விகாரமாக இருந்தது, எவ்வளவு கிருத்திரிமம் நிறைந்தது! எவ்வளவு தன்னலம் பொருந்திய பேச்சு அவரது! ஆனால் நவலுக்கு, தான் தங்கைக்கு அளித்த வாக்கை நிறை வேற்ற முடிகிறது என்ற திருப்தி.

4

"ஆம், அவர்கள் சுயராஜ்யம் கொடுக்க வந்திருக்கிறார்கள். இவர்கள் அவர்களோடு பேசமாட்டார்கள்—எவ்வளவு பெரிய முட்டாள்தனம்" ராய்பஹதூர் காமதாநாத் கடுகடுப்பான குரலில் சொன்னார். "இந்தியாவுக்கு சுயராஜ்யமா? சுரைக்காய் தான் கிடைக்கும்!"

ஞானபிரகாஷ் புன்னகை செய்தார். "ராய்பஹதூர் ஸாஹப்! சுரைக்காய்தான் கைக்குக் கிடைக்கும் ஆதலால்தான் நாங்கள் சைமன் கமிஷனைப் பகிஷ்காரம் செய்தோம். அவர்களைச் சந்திப்பதால் ஏதாவது பயன் இருக்குமென்று நினைத்திருந்தால் நாங்கள் கட்டாயம் சந்தித்திருப்போம்!"

"ஐயா, ஒரு வார்த்தை. நாம் நமது பழைய பண்பாட்டையே மறந்துவிட்டோம். ஏழு கடலைத் தாண்டிக் கமிஷன் நம் நாட்டுக்கு வந்திருக்கிறது. நம்முடைய கடமை என்ன? விருந்து கொடுத்து, நாட்டைச் சுற்றிக் காண்பித்து, அவர்களோடு மிகவும் சுமுகமாகப் பேசிக் கேட்பதைக் கேட்டிருந்தால் விஷயம் சட்டுப்புட்டென்று முடிந்துவிட்டிருக்கும். ஒன்று கேட்டால் ஒன்றேகாலாகக் கொடுத்திருப்பான். அதற்கு எதிராக இந்தக் காங்கிரஸ்காரர்கள் வசை புராணம் பாட ஆரம்பித்து விட்டார்கள். ஒரு வருஷ முழுவதும் அவர்கள் இங்கே இருந்தார்கள், இவர்களுக்குக் கொஞ்சமாவது புத்தி வந்தால், கலந்து பேசியிருக்கலாமே." ஆனால் நடந்தது

வேறு. அப்பாவிகள் வந்த வழியே போய்விட்டார்கள்! அவர்களும், "என்னடா இது, எப்படிப்பட்ட காட்டு மிராண்டிகளுடனும், பட்டிக்காட்டு முட்டாள்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டிவந்ததே என்று நினைத்திருப்பார்கள்."

ஞானபிரகாஷுக்கு காமதாநாத் சொன்ன வார்த்தைகள் வேடிக்கையாக இருந்தன. "ராய்பஹதூர் ஸாஹப், எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்களை அந்தக்கமிஷன் கூப்பிடவில்லையே! உங்களுக்கு இவ்வளவு பெரிய பட்டம் பதவி இருக்கிறது, இவ்வளவு சொத்து இருக்கிறது. கௌரவம் மதிப்பு பெருந்தன்மை எல்லாம் இருக்கிறது. ஆனால், அவர்கள் உங்களை ஏன் என்றுகூட கேட்கவில்லை!"

"என்னத்தைச் சொல்வது? இந்த நன்றி கெட்ட இங்கிலீஷ் ஆபீஸர்கள் ஆயிரக்கணக்காக சந்தா வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆனால் கமிஷனோடு சந்திக்க வாருங்களென்று காங்கிரஸ்காரர்களிடம் போய் காலில் விழுகிறார்கள். நான் போயிருந்தால் கமிஷன்காரர்களை இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்கும்படி ஒப்பவைத்திருக்கமாட்டேனா! லெப்டினெண்ட் கவர்னருக்கு எழுதியிருந்தேன். ஆனால், என் கடிதத்துக்குப் பதில்கூட கொடுக்கவில்லை அவர்கள்! இனிமேல் சந்தா வாங்க வரட்டும் அவர்கள், ஒரு பைசாகூட கொடுக்கமாட்டேன் எந்த நன்றி கெட்டவனுக்கும்!" "ஸாஹப், நீங்கள் யூரோப்பிலிருந்து திரும்பி வரத் தாமதம் ஆகிவிட்டதே! அக்டோபரில் வருவதாக இருந்தீர்கள். ஆனால் டிஸம்பரில் வந்தீர்கள். யூரோப் முழுவதும் சுற்றிவிட்டு வந்தீர்கள் போலிருக்கிறது!" ஜ்வாலா பிரஸாத் சொன்னார்.

ராய்பஹதூர் காமதா பிரஸாத் புன்முறுவல் செய்தார். "உஷா பிடிவாதம் பிடித்தாள். அவள் யூரோப்பி

லிருந்து திரும்பிவரவே விரும்பவில்லை. ஆனால் எனக்குத் தான் குளிர் தாங்க முடியவில்லை. இங்கு வந்த பிறகு உங்களைச் சந்தித்துப் பேச ஓய்வே கிடைக்கவில்லை. உஷாவுக்கும் ஒரு வருஷம் வீணாகிவிட்டது. அவள் இனி அடுத்த வருஷம்தான் யூனிவர்ஸிடிக்குப் போவாள்."

இதற்குள் நவல் அறைக்குள் வந்தான். அவனுடன் பீக்கூ நான்கு கிளாஸ் ஷர்பத் 'ட்ரே'யில் வைத்து எடுத்து வந்தான்.

ஞானபிரகாஷ் கேட்டார். "இம்முறை கோடையில் எங்கு போவதாக உத்தேசம்?"

"மஸூரியில் ஒரு பங்களா வாங்கி இருக்கிறேன். ஒவ்வொரு வருஷமும் கோடையில் எங்காவது போக வேண்டித்தான் இருக்கிறதே; ஆதலால் எப்போதைக்கு மாக ஒரு பங்களா ஏன் வாங்கக்கூடாது என்று நினைத் தேன். மிகவும் மலிவாகக் கிடைத்துவிட்டது. ரூபாய் பனிரண்டாயிரம்தான்." பிறகு அவர் ஜ்வாலா பிரஸா திடம் சொன்னார்: "என்னிடமிருந்து உங்களுக்கு இதோ அழைப்பு! மே மாதம் ஆரம்பித்துவிட்டது. மூன்று நான்கு நாட்களில் நான் போவதாக இருக்கிறேன், தனியாக! நீங்களும் வாருங்களேன்!"

ஜ்வாலா பிரஸாத் புன்னகை புரிந்தவாறு சொன்னார்: "நான் எங்கே வரப்போகிறேன் மஸூரி! எனக்கு இங்கே அலாகாபாதில் கொஞ்சம்கூட கஷ்டம் இல்லை!"

காமதாநாத் ஷர்பத் குடித்துக்கொண்டு சொன்னார்: "நவல், எங்கள் வீட்டுக்கு வருவதையே நிறுத்தி விட்டாய்! என்ன விஷயம்? நீ சீமைக்கு எப்போது போகிறாய்? இந்த வருடம் வீணாகவே போய்விட்டது உனக்கு!"

"இப்போது எனக்கு சீமைக்குப் போகும் எண்ணமே இல்லை. எல்.எல்.பீ. ப்ரிவியஸ் பரீட்சை எழுதியிருக்

கிறேன்."

"அப்படியானால் வக்கீல் பிராக்டீஸ் செய்ய உத்தேசமா உனக்கு?"

பதில் ஞானபிரகாஷ் கொடுத்தார். "ஆம், வக்கீல் தொழில் செய்வதில் ஏதாவது தீங்கு இருக்கிறதா என்ன? உங்கள் பிள்ளை கௌரீநாத்கூட வக்கீல் தானே?"

"அட, அவன் என்ன பிராக்டீஸ் செய்கிறான். காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறான். மாதம் ஐம்பது அறுபது ரூபாய் கிடைக்கிறது! வக்கீல் தொழில் வீண் நவல்! நான் சொல்கிறேன், நீ வெளிநாட்டுக்குப் போ!" பிறகு அவர் ஜ்வாலா பிரஸாதைப் பார்த்தார். "என் குடும்பத்தில் யாராவது பெரிய ஆபீஸர் ஆகவேண்டும் என்பது என் ஆசை. கௌரீநாதோ சுத்த கழுதையாகி விட்டான். மிகவும் கஷ்டப்பட்டு அழுது அலமந்து வக்கீல் பரீட்சை பாஸ் செய்தான். மூன்று வருடம் கழித்து இப்போதுதான் ஐம்பது-நூறு கிடைக்க ஆரம்பித்திருக் கிறது. சீதாநாத் பிஸினஸ் பார்க்கிறான். அதாவது அவன்தான் குடும்பத்தைத் தாங்குகிறான் என்று சொல்ல வேண்டும். இந்த வருஷம் ஒன்றேகால் லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. ஆகவே, நான் நினைத்தேன், பிள்ளை இல்லை என்றால், மாப்பிள்ளையாவது கலெக்டர் ஆகட்டுமே என்று. என் உள்ளத்துள்ள ஒரு ஆசை பூர்த்தியாகுமே! செலவைப் பற்றிக் கவலை இல்லை."

நவல் காமதாநாதின் இந்தப் பேச்சில் வெறுப்புக் கொண்டான். "எல். எல். பீ. இறுதிவரை நான் பாஸ் செய்துதான் ஆகவேண்டும். இதைத் தவிர,நான் எங்கள் குடும்பத்தில் சர்க்கார் உத்யோகம் செய்யும் சம்பிர தாயத்தை உடைக்கப்போகிறேன். வக்கீல் தொழிலில் நல்ல வெற்றி பெற முடியும் என்று நான் நினைக்கிறேன்."

காமதாநாத் எழுந்து நின்ருர். "எனது கடமை எதுவோ, அதை நான் செய்யத் தயார். பிறகு அமைதி யாக நான் சொன்னதைப் பற்றி யோசித்துப் பார். நீங்களும் இவனுக்கு அறிவுரை சொல்லுங்கள், வக்கீல் தொழிலில் ஒன்றும் இல்லை என்று! நான் இரண்டு மாதங்களுக்கு மஸூரி போகிறேன். ஆம் நவல், உஷா உன்னை எவ்வளவு தூரம் நினைக்கிருள் தெரியுமா? எப்போதாவது எங்கள் வீட்டுக்கும் வந்துகொண்டிரு; அவளுக்குச் சந்தோஷமாக இருக்கும்! சரி, கொஞ்சம் உஷாவைக் கூப்பிடு, ரொம்ப நேரமாகிவிட்டது!"

உஷா வித்யாவுடன் வீட்டுக்குள் பேசிக்கொண்டிருந் தாள். வித்யா மூன்று நாட்களுக்கு முன் பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டு பனாரஸிலிருந்து திரும்பி வந்தாள்.உஷாவை அனுப்பிவைத்த பிறகு வித்யா சொன்னாள்: "அண்ணா, நீ சீமைக்கு ஏன் போகமாட்டேன் என்கிருய்? நான் உன்னிடம் வற்புறுத்திச் சொல்லவேண்டும் என்று உஷா சொன்னாள்."

நவல் சிடுசிடுப்புடன் சொன்னான்: "நான் போக மாட்டேன், போகமாட்டேன், போகமாட்டேன். எனக்கு காமதாநாதின் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமே தவிர, காமதாநாதுக்கு அடிமைத் தொழில் செய்யவேண்டியதில்லை."

"அப்படியானல் உன் விருப்பம் நடக்காது! உஷா வுக்கும் சொந்தக் கனவுகள் உண்டு, சொந்த ஆசைகள் உண்டு"!

வித்யா ஒரு பெருமூச்செறிந்தாள். "அண்ணா, சரி சமானமற்ற எண்ணங்களும் கொள்கைகளும் உள்ளவர் களிடையே திருமணம், சரிசமம் இல்லாத குடும்பங்க ளிடையே சம்பந்தம்—இது மிகவும் பயங்கரமானது! என்னையே எடுத்துக்கொள். நான் புக்ககம் போக

வேண்டிய நாள் நெருங்க நெருங்க என்பதற்றமும் அதிக மாகிக்கொண்டு வருகிறது."

நவல் வித்யாவின் வார்த்தையைக் கேட்டுக் கவலை கொண்டான். "வித்யா, நீ உன் புக்ககத்தைப் பற்றி என்னிடம் ஒருபோதும் ஒன்றுமே சொல்லவில்லை. அங்கே உனக்கு ஏதாவது கஷ்டமா? நிஜத்தைச் சொல்!"

வித்யா சிரித்தாள். "மொத்தம் ஏழு நாள்தான் அங்கே இருந்தது நான்! சொன்னால் என்னத்தையெல்லாம் சொல்வது? ஒன்று நிச்சயம். நான் எனது புக்ககத்தினரிடம் வெறுப்புக் கொண்டுவிட்டேன். என் குடும்பத்தை அழித்துவிட்டவர்களிடம் நான் எப்படி அன்பு காட்ட முடியும்? அந்தக் குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் எனக்கு ஒரு பிசாசுபோல் தெரிகிறது. என்னுள் இருக்கும் இந்த எண்ணத்தை அகற்றிவிட நான் மிகவும் முயற்சி செய்கிறேன். ஆனால், அதில் வெற்றி பெறவில்லை. அந்தக் குடும்பத்தைப் பற்றி பயங்கரமானதொரு வெறுப்பு என்னுள் நிரம்பிவிட்டது!"

வித்யாவின் இந்த வார்த்தையைக் கேட்டு நவல் அதிர்ந்து போனான். "வித்யா, வாழ்க்கை என்பது ஒப்பந்தமாகும். இந்த எண்ணத்தை உன் மனதிலிருந்து அகற்றிவிடு! எனக்கு வாக்குக் கொடு! நீ ஏதாவது ஆவேசத்தில் தகாத சொல் சொல்லிவிடமாட்டாயே?"

"அண்ணா, உனக்கு என்னால் எப்போதும் எந்தவித சிரமமும் நேராது! நான் உனக்கு வாக்களிக்கிறேன். வாழ்க்கை என்பது பல சூழ்நிலைகளோடு நாம் செய்து கொள்ளும் ஒரு சமாதான ஒப்பந்தம் என்று நானும் நினைக்கிறேன். ஆனால், ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் இரண்டு கட்சிகள் இருக்கும். என் கட்சியைப் பொறுத்த மட்டில் நான் மான மரியாதையை அனுசரித்து உறுதியாக இருப்பேன்." இதைச் சொல்லிவிட்டு வித்யா

வீட்டுக்குள் போய்விட்டாள்.

வித்யாவுக்கு சாந்தி கல்யாணம் ஜூன் மாதம் மூன்றும் வாரத்தில் நிச்சயமாகியது. சித்தேச்வரீ 'உன்னுவ்' ஜில்லாவில் நியமிக்கப்பட்டார். அவருக்கு இதற்கு முன்னதாக லீவ் கிடைக்கவில்லை. சித்தேச்வரீ வித்யாவை அலாகாபாதிலிருந்து நேராக உன்னுவ் ஜில்லாவுக்கு அழைத்துச் செல்லுவதென நிச்சயமாகியது. வித்யா பைஜாபாத் போகவேண்டியிராது என்பதில் நவலுக்கு ஒரு திருப்தி. அவனுக்கு விந்தேச்வரீ பிரஸாதிடம் வெறுப்பு.

வித்யா உன்னுவ் போய்விட்டாள். நவல் அரசியல் கிளர்ச்சியில் மனம் செலுத்தினன். இப்போது ஞான பிரகாஷுடன் நாட்டின் அரசியலைப் பற்றிப் பேசுவதில் நேரம் கழிந்தது. நாடு முழுவதிலும் அடக்குமுறை நடந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு மூலையிலிருந்தும் மக்களைச் சிறைப்படுத்திய செய்திகள் வந்துகொண்டிருந்தன. நவல் இதற்கு முன் எப்போதும் அரசியலில் கவனம் செலுத்தியதில்லை. இப்போது அவனுக்கு அரசியலில் விருப்பம் உண்டாகத் தொடங்கியது.

ஜூலை மாதம் மழை பெய்யத் தொடங்கியது. நவலுக்கு எல்.எல்.பீ.யில் முதல் வகுப்பு கிடைத்தது. வித்யாவும் பி.ஏ. முதல் வகுப்பில் தேர்வு பெற்றுள். வித்யாவிட மிருந்து கடிதம் வந்தது. அதில் அளவற்ற வருத்தமும் வேதனையும் நிரம்பியிருந்தன. உன்னுவில் சித்தேச்வரீ யின் ஒரு விதவை அத்தை வீட்டைக் கவனித்துக்கொண் டிருந்தாள். வீட்டில் அவளுடைய அதிகாரம்தான். அது தன் வீடு என்ற உணர்வே வித்யாவுக்கு உண்டாக வில்லை. ஆயினும் வித்யா பொறுமையாக இருந்தாள். எப்பொழுதும் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தாள். ஒரு டிபுடிகலெக்டருடைய மனைவியானபோதிலும் ஒரு

சாதாரணக் குடும்பத்தின் பெண்ணைப்போல முட்டாக் கிட்டுக்கொண்டு 'பர்தா'வில் இருக்கவேண்டி யிருந்தது.

அன்று நவல் தூங்கி எழுந்தபோது அவன் மனம் வருத்தம் நிரம்பியிருந்தது. வராந்தாவில் ஞானபிரகாஷ் உட்கார்ந்து டீ குடித்துக்கொண்டே அன்றைய செய்தித் தாளைப் படித்துக்கொண்டிருந்தார். நவல் "லீடர்" பேப்பரைக் கையில் எடுத்துக்கொண்டான். விசேஷமான செய்தி ஒன்றும் அதில் இல்லை—அரசியல் புரட்சிக்காரர் களின் மேல் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. சட்டசபையில் சர்க்கார் தரப்பினருக்கும் எதிர்க்கட்சி யினருக்கும் இடையே விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நவல் பேப்பரை வைத்துவிட்டு ஞானபிரகாஷைப் பார்த்தான். "ஞானு பாபா, இதனாலெல்லாம் இந்தியா வுக்கு லாபம் உண்டாகும் என்று நீங்கள் நினைக்கிறீர் களா? அடக்குமுறை இவ்வளவு தீவிரமாக நடைபெறு கிறது, மக்கள் கிளர்ச்சி செய்யாமல் இருக்கும்போதே சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர். நாட்டின் பிரஜைகள் பேசாமல் இருக்கிறார்களே."

ஞானபிரகாஷ் புன்சிரிப்புடன் சொன்னார்: "ஆம், நவல். இதனால் எல்லாம் ஒரு உண்மை விளங்குகின்றது. அதாவது, நாட்டின் உணர்வு விழித்துக்கொண்டுவிட்டது. நடுத்தரவர்க்கத்தில் பரவிவரும் வேலையின்மை சும்மா இராது."

"நடுத்தரவர்க்கத்தின் வேலையின்மைக்கும் சுதந்திரத் திற்கும் என்ன சம்பந்தம்? எனக்குப் புரியவில்லையே."

"மிக எளிய விஷயம், நவல். உனக்குத் தெரியும், நம் நாட்டில் தொண்ணூற்றிரண்டு சதவீதம் மக்கள் படிப் பில்லாதவர்கள். அவர்களுக்குச் சிந்திக்கவோ விஷயங் களை அறியவோ சக்தியில்லை. அது தலைமையை விரும்பு

கிறது. தலைமை என்பது எப்போதும் படித்தவர்க்கத்தின் கையில்தான் இருக்கும். படிப்புள்ளவர்கள் செல்வந்தர்கள், ஜமீன்தார்கள், உயர்ந்தபதவியில் இருப்பவர்கள். அவர்களுடைய நலனும் சாதாரண உழவர்களுடைய நலனும் ஒன்றுபோல அல்ல. புரிந்ததா?"

"ஆமாம், இது விளங்குகிறது!"

"ஆனால் இன்று நாட்டில் ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். புரட்சி என்பது வேலையில்லாத் திண்டாட்டத்தின் விளைவான சாபக்கேடுதான்! பல நாட்கள் வரை ஆங்கிலேயர்கள், படித்தவர்களின் வேலை யின்மைப் பிரச்னையை ஹிந்து-முஸ்லிம் பிரச்னையை எழுப்பிவிட்டுக் கவனிக்காமலிருந்தனர். ஆனால் இந்த சில்லறை சிசுருஷையினால் உண்மையான பிரச்னைகள் தீர்ந்துபோவதில்லை. இன்று ஹிந்து-முஸ்லிம் பிரச்னை அடங்கிவிட்டது போல் இருக்கிறது. வேலையின்மையும் அதிருப்தியும் ஹிந்துக்களிடையிலும் முஸ்லிம்களிடை யிலும் ஒன்றுபோலவே இருக்கின்றன. நாட்டின் அரசியல் நிலையில் இந்தப் புழுக்கம் அதிக நாள் நிலைத்து நிற்காது என நான் நினைக்கிறேன்."

"அப்படியானால் ஆங்கிலேயர் இந்திய நிர்வாகத்தில் சீர்திருத்தம் ஏதாவது செய்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

ஞானபிரகாஷ் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னார்: "நவல், உண்மை என்னவென்றால், பிரிட்டிஷ் சர்க்கார் கட்டாயப்படுத்தப்பட்டாலன்றி இந்தியாவுக்கு ஒன்றும் கொடுக்கப்போவதில்லை. கூடிய சீக்கிரமாக நாட்டில் ஒரு மாபெரும் கிளர்ச்சியை எழுப்பவேண்டி யிருக்கும்."

"நாடு எந்தக் கிளர்ச்சிக்கும் ஆயத்தமாகிக்கொண் டிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எந்தப்பக்கத்

திலும் ஒருவகை ஆற்றுமையும், . புழுக்க நிலையும்தான் காணப்படுகிறது தாத்தா. மகாத்மா காந்தி முதல் கிளர்ச்சியை வாபஸ் வாங்கிப் பெரும் தவறு செய்து விட்டார்."

"யாருக்குத் தெரியும் நவல். அவர் செய்தது சரி என்று எனக்குப் படுகிறது. அந்தச் சமயத்தில் அரசியல் உணர்வு நமது கிராமங்களில் இல்லை; காங்கிரஸின் செல்வாக்கு நகரங்களில் மட்டுமே இருந்தது. ஆனால் கடந்த ஏழெட்டு வருஷங்களில் காங்கிரஸ் இயக்கம் கிராமங்களிலும் பரவி வேரோடியிருக்கிறது. ஒருசில படித்தவர்கள் மட்டும் கிளர்ச்சி செய்து வெற்றி காண முடியாது.நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்க முன்வந்தால்தான் கிளர்ச்சி வெற்றி பெறும்."

நவல் மௌனமாக இருந்தான். ஞானபிரகாஷ் தொடர்ந்தார். "இந்தக் கோடிக்கணக்கான மக்களுக்குத் தலைமை வகிக்கும் தலைவன் ஒருவன் வேண்டும். நன்னடத்தையும், நம்பிக்கையும் வாய்ந்த மனிதருடைய ஒத்துழைப்பு வேண்டும். நம் நாட்டில் இந்த இரண்டு தகுதிகளும் படைத்த மனிதர்கள் வெகு குறைவு."

நவல் ஒரு பெருமூச்செறிந்தான். "நீங்கள் சொல்வது சரி தாத்தா." அவன் மெதுவாகத் "தேநீர்" பருகத் தொடங்கினான்.

5

லார்டு இர்வின் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து 1929 அக்டோபர் முப்பத்தொன்றும் தேதி யன்று விடுத்த அறிக்கையைப் பற்றி எங்கும் பேச்சாக இருந்தது. யூனிவர்ஸிடி-யூனியனில் பட்டமளிப்பு வாரத்தில் ஒரு விவாதம் நடைபெறவிருந்தது. விவாதத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயம்"குடியேற்ற நாட்டு அந்தஸ்து பெறுவதால் நாட்டின் பிரச்னைகள் தீர்ந்து விடுமா?" என்பதே. நவல் தனது உரையைத் தயார் செய்துகொண்டிருந்தான். இதைப்பற்றி ஞானபிரகா ஷிடம் யோசனை கேட்க நினைத்தான்.

ஞானபிரகாஷை அவன் காலையிலேயே போய்ப் பிடித் தான். காலை உணவு முடித்து காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகத்திற்குப் போகக் கிளம்பிக்கொண்டிருந்தார் ஞானபிரகாஷ். அவர் நவலுக்குத் தம் கருத்துக்களைச் சொன்னார். திடீரென்று அவருக்கு ஏதோ நினைவிற்கு வந்து சொன்னார்: "அடடே, இங்கே அலாகாபாதில் நவம்பர் பதினாறும் தேதி சர்வகட்சி மாநாடு நடை பெறப் போகிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இங்கு கூடப்போகிறது. அதில் இதைப்பற்றி மிகவும் முக்கிய மான விஷயங்கள் யோசிக்கப்படும்."

"ஆமாம், ஞானு தாத்தா. ஆனால் அதில் வந்து கலந்து கொள்ளுவதற்கு எனக்கு எங்கே வாய்ப்பு கிடைக்கப் போகிறது?"

"அதைத்தான் சொல்ல வந்தேன். சர்வ கட்சி

மாநாட்டில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தலைவர்கள் வருவார்கள். எங்களுக்குப் பண்புள்ள, படித்த தொண்டர்கள் வேண்டும். சர்வகலாசாலையிலிருந்து நீ பதினைந்து இருபது இளைஞர்களை அழைத்துக்கொண்டு வர முடியுமா?''

நவல் உற்சாகத்தோடு சொன்னான்: "பலே, ஞானு தாத்தா. பேஷாக முடியும். நீங்கள் முன்னரே என்னிடம் ஏன் சொல்லவில்லை? நாளை மாலைக்குள் நான் உங்களுக்குத் தொண்டர்கள் ஜாபிதா கொடுத்துவிடுகிறேன். தொண்டர்கள் ஏதாவது விசேஷ உடுப்பு அணிந்து வர வேண்டுமா?''

ஞானபிரகாஷ் சிறிது யோசித்துச் சொன்னார்: "உடுப்பு விஷயத்தில் ஒரு நிபந்தனை. கதர் சட்டை, கதர் வேட்டி அல்லது பைஜாமா, காந்தி தொப்பி இவை வேண்டும். குளிர் கொஞ்சம் இருக்கிறபடியால் கம்பளி ஜாக்கெட் அணிந்தால் நல்லது. இந்த உடுப்புக்கு ஐந்து ஆறு ரூபாய் செலவாகும். இதைப் பொருட்படுத்தாதவர்கள் பேஷாக வரலாம்."

சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. நம்பிக்கை ஒளியற்ற சூழ்நிலையில் எல்லாம் நடந்தன. வைஸ்ராயின் அறிக்கை பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நடந்த விவாதத்திலும், பிரிட்டிஷ் மந்திரிகள் அளித்த விளக்கத்திலும் நாட்டில் வாலிப சமுதாயத்தில் மிக அதிகமாகக் கொந்தளிப்பு உண்டாகிவிட்டது. இளைஞர் சமுதாயம் பிரிட்டிஷ் அரசின் ஏமாற்றுக்கும் மோசடி நிரம்பிய கொள்கைக்கும் ஆளாகத் தயாராக இல்லை. இளைஞரிடையே உற்சாகமும் போராட்ட ஆர்வமும் இருந்தன. உயிரையும் பணயம் வைக்கும் துணிச்சலும் இருந்தது. இந்த வாலிப வர்க்கத்திற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை ஜவாஹர்லாலும் சுபாஷ்சந்திர போஸும்

ஏற்றிருந்தனர்.

நவலின் உள்ளத்தில் சைதன்யம் விழித்தெழுந்தது. போராட்டம் தவிர்க்க இயலாதது என்பதை உணர்ந்தான். தானும் அதில் பங்கு கொள்ளவேண்டி யிருக்கும் என்று நினைத்தான். தன்னையறியாமலேயே அவனுடைய எண்ணம் செயல்படத் தொடங்கிவிட்டது.

நவம்பர் பிறந்தது. குளிரும் அதிகமாயிற்று. ஜ்வாலா பிரஸாத் குடும்பத்திற்கு வேண்டிய கம்பளித்துணி, போர்வை, மெத்தைகளுக்கு ஏற்பாடு செய்தார். "நவல், போன வருஷம் வித்யாவின் திருமணம் காரணமாக நான் உனக்கு "டிரஸ்" தைத்துக்கொடுக்க இயலாமல் போய்விட்டது. உன் துணி எல்லாம் பழசாகிக் கிழிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். இந்த வருஷம் நீ ஒரு "ஸர்ஜ்" சூட் தைத்துக்கொள். சில சட்டைகளும், பைஜாமாக்களும் தைத்துக்கொள்." ஜ்வாலா பிரஸாத் நவலுக்குப் பணம் கொடுத்தார்.

நவல் சொன்னான்: "தாத்தா, நான் என் இஷ்டம் போல் "டிரஸ்" தைத்துக்கொள்ளுகிறேன். இதில் உங்களுக்கு ஆட்சேபம் ஒன்றும் இருக்காதே?"

"இன்றைய உலகம் தன் இஷ்டம்போல் போய்க் கொண்டிருக்கிறது. ஆட்சேபம் செய்து என்ன ஆகப் போகிறது! எல்லாம் உன் பிரியம்போல் தைத்துக் கொள். அணியப்போவது நீ, நான் இல்லையே!"

நவல் பஜாருக்குப் போனான். சிறிது நேரத்தில் "கதர் பண்டா"ரில் வந்து நிற்பதை உணர்ந்தான். அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. மெதுவாக நழுவிவிடலாமா என்று நினைத்தான். ஆனால் கால் எழவில்லை. பட்டுத் துணி ஒரு "தானில்" ஒரு கோட்டும், ஒரு ஜாக்கெட்டும் வரும் என்று விற்பனையாள் சொன்னான். நவலுக்குத் தேவையும் அவ்வளவுதான். இரண்டு "தான்" கதர்

வாங்கிக்கொண்டான். ஆறு 'ஜிப்பா', இரண்டு பைஜாமா, நான்கு வேட்டி ஆயிற்று. இன்னும் இருபது ரூபாய் மிச்சம் இருந்தது. கடைக்காரன் கேட்டான்: "இங்கேயே 'தாஜீ'யும் இருக்கிறான். தைக்கக் கொடுக்கலாம். பத்து ரூபாய் தையற்கூலி ஆகும்." நவல் துணிகளைத் தைக்கக் கொடுத்தான். நவல் "கதர் பண்டாரி"லிருந்து காங்கிரஸ் கமிட்டி ஆபீஸுக்குப் போனான். ஞானபிரகாஷ் காங்கிரஸ் அறிக்கைகளைத் தயார் செய்துவிட்டு டீ அருந்திக்கொண்டிருந்தார். "காங்கிரஸ் கமிட்டி ஆபீஸுக்கு எப்படி வந்தாய். உட்கார், டீ குடி நவல்."

நவல் உட்கார்ந்து 'டீ' கலந்தான். "ஞானு தாத்தா, ஒரு முக்கிய காரியத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறேன்."

"அதுதான் உன் முகத்தின் ஆழ்ந்த நிலையைப் பார்த்தாலே தெரிகிறதே. சொல்லு, என்ன செய்திருக்கிறாய்?"

"இன்று முதல் நான் கதர் அணியத் தொடங்கிவிட்டேன். தாத்தா 'ஸர்ஜ்' ஸூட் தைக்க ஐம்பது ரூபாய் கொடுத்தார். அதில் நான் கதராடைகள் தைக்கக் கொடுத்து வந்திருக்கிறேன். நாற்பது ரூபாயில் ஆறு சட்டை, இரண்டு பைஜாமா, நான்கு வேட்டி, ஒரு கோட்டு, ஒரு ஜாக்கெட், ஆறு காந்திக் குல்லாய்! தையல் கூலியும் இதில் அடக்கம்."

"இதெல்லாம் சரிதான். ஆனால் முதலில் நீ எல். எல். பி. பாஸ் செய்யவேண்டும். நினைவில் வைத்துக்கொள். வக்கீல் பரீட்சை பாஸ் செய்கிற வரையில் நான் உன்னை நேரடி அரசியலில் நுழைய விடமாட்டேன். இல்லாது போனால் அண்ணா என்னைக் குற்றம் சாட்டுவார்."
"அரசியலில் வரும் எண்ணம் இப்போது எனக்குச் சிறிதும் இல்லை. ஆனால் கதர் உடுத்த ஆரம்பிக்கலாமே!"

"ஆனால் சி.ஐ.டி. காரர்களின் கண்ணில் பட்டுவிடுவாய். அந்த ஆபத்து இருக்கிறது. செயலில் இறங்காத வரையில் போலீஸ் உன்னை ஒன்றும் செய்துவிட முடியாது. உனக்குத்தான் சர்க்கார் உத்தியோகம் செய்யும் உத்தேசம் இல்லை."

டிசம்பர் மாதத்தில் குளிர் மிகவும் கடுமையாகி விட்டது. ஒரு சனிக்கிழமை மாலை ராய்பஹதூர் காமதாநாத் ஜ்வாலா பிரஸாதைச் சந்திக்க வந்தார். அன்று காமதாநாத் மிகவும் கம்பீர சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். "என்ன விஷயம் ராய்பஹதூர் ஸாஹப், இன்று நீங்கள் சிந்தனையாக இருக்கிறீர்களே ?"

"ஒன்றுமில்லை, ஏதோ வேலைக்கவலை. சீதாநாத் வேலையை ஒரு வரம்பின்றிப் பரப்பிவிட்டிருக்கிறான். நானும் ஓடியாடி வேலை செய்யவேண்டி யிருக்கிறது. இன்று நாள் முழுவதும் வேலை செய்துகொண்டிருந்தேன். இன்று உங்களைப் பார்த்து வரலாமே என்று நினைத்தேன். உங்களைச் சந்தித்து ரொம்ப நாளாச்சு."

ஜ்வாலா பிரஸாத் பீக்கூவிடம் டீ கொண்டுவரச் சொன்னார். பிறகு காமதாநாதிடம் "வியாபாரத்தில் உழைக்கவேண்டி யிருக்கிறது. ஆனாலும் இப்படி தலைமேல் சங்கடம் வந்து நிற்குமளவுக்கு என்ன வியாபாரம் வேண்டியிருக்கிறது ?" என்று சலித்துக்கொண்டார்.

"டிப்டீ ஸாஹப், இந்த வாழ்க்கையே ஒரு சங்கடம். நாம்தான் நிறைய சம்பாதித்து விட்டோமே என்று நினைத்தேன். எட்டு கிராமங்கள் வாங்கியாச்சு. நகரத்தில் ஐந்து பங்களா இருக்கிறது. ஆனால் இந்த சீதாநாத்... இவனால் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. நிலத்தை எல்லாம் கௌரீநாத்தினிடம் ஒப்படைத்துவிட்டு வியாபாரத்தை சீதாநாத் கையில் கொடுத்துவிட்டு நான் நிச்சிந்தையாக இருந்தேன். ஆனால் இந்த சீதாநாத்,

வியாபாரத்தை இவ்வளவாக விஸ்தரித்துவிடுவான் என்று நான் நினைக்கவே இல்லை. இப்போ ஒரு மாதமாச்சு, அவன் ஒரு மாவு மில் வேறு வாங்கிப்போட்டிருக்கிறான்."

காமதாநாதுக்குத் தமது வாழ்க்கை வைபவத்தைப் பற்றிப் பெருமை பேசுவதில் ஏக மகிழ்ச்சி. ஜ்வாலா பிரஸாதுக்கு இது நன்றாகத் தெரியும். சில வேளைகளில் ஜ்வாலா பிரஸாதுக்கும் இது வெறுப்பளிக்கும். அவர் சொன்னார்: "விடுங்கள் இந்தக் கவலையை! இது வியாபார யுகம். ஜமீன்தாரி நடத்துவதிலும் ராஜ்யம் ஆளுவதிலும் ஒன்றுமே கிடையாது. ஜமீன்தார்கள், தாலூகாதார் எல்லாம் அழிந்துகொண்டிருக்கிறார்கள்.

காமதாநாத் டீ குடித்துக்கொண்டே கேட்டார்: "டிபுடி ஹாஹப், நீங்கள் நவல் விஷயமாக என்ன யோசித்தீர்கள்?"

"நான் யோசிப்பதையே விட்டுவிட்டேன். மனிதன் நினைத்தது போல் நடக்கிறதா? தவிர, நவல் சிறுபிள்ளை அல்ல. அவன் நான் சொல்வதைக் கேட்பதில்லை. உண்மையில் அவன் எதற்கும் என்னைக் கேட்பதே இல்லை. தன் மனதிற்குத் தோன்றிய மாதிரி நடந்து வருகிறான்."

"இது அவ்வளவு சரியில்லையே. அவன் காங்கிரஸ் தொண்டனாக இருந்தானாமே! கதர் துணி உடுக்கத் தொடங்கிவிட்டானாம், நான் கேள்விப்பட்டேன்."

"ஆமாம். சர்வகட்சி மாநாடு நடந்ததல்லவா! அதில் அவன் தொண்டனாகப் போயிருந்தான். நான் தடுக்கவில்லை. அது ஒன்றும் தகாத காரியம் அல்லவே. மேலும் காலம் மாறிப்போச்சு. எல்லாம் புதுயுகம். நான் அவனைத் தடுத்து அவன் என் பேச்சைக் கேட்காது போனால் எனக்கு மிகுந்த மனக் கஷ்டம் உண்டாகும். ஒரு திருப்தி.

அவனுடைய போக்கு நல்ல விஷயம் பற்றியது. நல்ல நடத்தையும் நம்பிக்கை நாணயமும் இருந்தால் எந்தக் காரியமும் உசிதம்தான். உலகத்தில் எல்லாவற்றையும் விட பெரிய செல்வம் அது."

''ஆமாம், ரொம்ப சரி! ஆனல் உலகத்தில் வாழவேண்டு மென்ருல், நாமும் உலகத்தோடு ஒட்டியே நடக்க வேண்டும். நன்னடத்தை, நம்பிக்கை, நாணயம் என்று பார்த்துக்கொண்டிருந்தால் பணம் சம்பாதிக்க முடியாது! உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, சி. ஐ. டி. இலாகாவில் நவல் பெயரும் குறிக்கப்பட்டிருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அதை அடித்துவிடச் செய்தேன். இருநூறு ரூபாய் செலவு."

ஜ்வாலா பிரஸாத் திடுக்கிட்டார். "நவல், சர்க்காருக்கு எதிராக ஒருபோதும் ஒரு வேலையும் செய்யவில்லையே!"

''விட்டுத்தள்ளுங்கள். நான்தான் சொல்லிவிட்டேனே, நான் அவனுடைய பெயரை அடிக்கச் செய்துவிட்டேன் என்று! நவலுக்கு புத்திமதி சொல்லலாம் என்றுதான் வந்தேன். அவன் கொஞ்சம் நிதானமாக எதையும் செய்யவேண்டும். பிரிட்டிஷ் சர்க்கார் மிகவும் கடுமை யாக இருக்கிறது. ராணுவத்துக்குத் தயாராக இருக்கச் சொல்லி உத்தரவு போயிருக்கிறது. அந்தக் கர்னல் டிக்வீ இருக்கிருனே, நல்லவன். இப்போதான் முந்தா நாள் எனக்கு இரண்டரை லட்சத்துக்குக் காண்டிராக்ட் கொடுத்திருக்கிருன். அந்தக் கர்னல் டிக்வீ சொன்ஞன், இங்கிலாந்திலிருந்து இரண்டு லட்சம் துருப்பு வந்து கொண்டிருக்கிறதாம், பீரங்கி, மெஷின் கன் சகிதமாக! கல்கத்தா, பம்பாய், கராச்சி இங்கெல்லாம் வந்து குவிந்திருக்கிறதாம்!" ஜ்வாலா பிரஸாத் பதற்றம் அடைந்துவிட்டார். '' ராய்பஹதூர் ஸாஹப், பொல்லாத செய்தியாக இருக்கிறதே நீங்கள் சொல்வது. ஆங்கி

லேயர்கள் இவ்வளவு பெரிய முஸ்தீபு செய்து வைத்திருக்கிறார்கள் என்றால், அப்புறம் குடியேற்ற நாட்டு அந்தஸ்து, அது இது என்று ஏன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும்?"

"அதெல்லாம் மோசடி, வஞ்சகம், ஏமாற்று வேலை. உண்மை என்னவென்றால், நமக்கு ஒன்றும் கிடைக்காது, கிடைக்கவும் கூடாது. இந்தியாவுக்குக் குறைந்தபட்சம் இன்னும் ஐம்பது ஆண்டுகள் வரை சுயராஜ்யம் கூடாது. ஐம்பது வருஷத்திற்குப் பிறகு என்ன நடக்குமோ யாருக்குத் தெரியும்?"

ஜ்வாலா பிரஸாத் காமதாநாதின் இந்தப் பேச்சுக்குப் பதில் ஏதும் கூறவில்லை.

காமதாநாத் மீண்டும் சொன்னார்: "நான் நவலுடைய கல்யாணத்தைப் பற்றிப் பேச வந்தேன். உஷாவுக்கும் பதினெட்டு வயது முடிந்து பத்தொன்பது நடக்கிறது. இந்த வருடம் கோடையில் அவளுக்குத் திருமணம் செய்துவிடவேண்டும் என்று நான் நினைக்கிறேன். உங்களுக்கு அசௌகரியம் ஒன்றும் இல்லையே!"

"சௌகரியம், அசௌகரியம் எல்லாம் எப்படி என்று நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெண் வீட்டுக் காரர்கள். எனக்கென்ன, "பராத்"தை அழைத்துக் கொண்டு வந்து நின்றுவிடுவேன் உங்கள் வீட்டில்!"

"நான் ஆசைப்பட்டது நடக்காதுபோல் தோன்று கிறது. நவல் ஐ.சி.எஸ். ஆவான் என ஆசைப்பட்டேன். ஆனால் அவனோ ஒரே பிடிவாதம் பிடித்து உட்கார்ந்து கொண்டிருக்கிறான். கௌரீக்கு நவலுடைய இந்தப் பிடிவாதம் அடியோடு பிடிக்கவில்லை. சீமைக்குப் போய் வரச் செலவு, அங்கு தங்கும் செலவு, படிப்புச் செலவு, எல்லாச் செலவும் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால், நவல் மறுக்கிறானே!"

"இதெல்லாம் பகவான் செயல்!"

"ஆமாம், டிப்டீ ஸாஹப், யாரோ சரியாகத்தான் சொல்லியிருக்கிறுன், லாப நஷ்டம், பிறப்பு இறப்பு, புகழ் பழி—இவை எல்லாம் விதிவசம் என்று."

அந்த நேரத்தில் ஜ்வாலா பிரஸாதின் பார்வை வராந்தா பக்கம் சென்றது. அங்கு நவல் கையில் துணிக் கட்டு ஒன்றை எடுத்து வருவதைப் பார்த்தார். "நவல், கொஞ்சம் இப்படி வா. டிரஸ் தைத்துக் கொண்டு வந்திருக்கிறுயா?"

நவல் காமதாநாதைப் பார்க்கவில்லை. இல்லாவிட்டால் அவன் அறைக்குள் அந்தப் புதிய உடுப்புக்களை எடுத்துக் கொண்டு போயிருக்கமாட்டான். ஜ்வாலா பிரஸாத் நவலுடைய கையினின்று அதை வாங்கிக்கொண்டார். "பார்க்கலாம் உன் டிரஸை! நிறைய தைத்துக் கொண்டுவந்திருக்கிறுயே!"

ஜ்வாலா பிரஸாத் துணிக் கட்டைப் பிரித்துப் பார்த்தார். திடுக்கிட்டார். ஆனுல், அவரைவிட அதிக மாகக் காமதாநாத் திடுக்கிட்டார். "சரிதான், கதர் ஆடைகளைத் தைத்துக்கொண்டு விட்டாயா நீ! காங்கிர ஸில் சேர்ந்துவிட்டாய்போலிருக்கிறது!"

நவலுக்கு அந்த அறையில் காமதாநாத் இருப்பது இப் போதுதான் தெரிந்தது. "இல்லையப்பா, காங்கிரஸில் சேரவில்லை. ஆனுல் கதராடை உடுத்தத் தொடங்கு கிறேன்."

முகத்தைச் சுளித்துக்கொண்டு காமதாநாத் சொன்னுர்: "இந்த சாக்குத் துணி உடம்பில் குத்தவில்லையா! நன்ருக இருக்கிறது. கதர் உடுத்த வேண்டுமென்று எப்படித் தோன்றியதோ உனக்கு?"

"சும்மாதான். மோதிலால் நேரு, ஜவாகர்லால், இவர் களெல்லாம் கதர் உடுத்தும்போது நானும்தான்

உடுத்திப் பார்க்கலாமே என்று நினைத்தேன். சரி, இதை வைத்துவிட்டு வருகிறேன்!" நவல் துணிகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போய்விட்டான்.

காமதாநாத் சிறிது நேரம் ஏதோ அடி பட்டவர்போல் பேசாது உட்கார்ந்திருந்தார். "பையன் பிடியிலிருந்து நழுவிவிட்டான், டிப்டீ ஸாஹப்!"

ஜ்வாலா பிரஸாத் பெருமூச்சு விட்டார். "அப்படித் தான் தோன்றுகிறது! கடவுள் விருப்பம் எப்படியோ! மனிதனால் என்ன செய்ய முடியும்?" காமதாநாத் கொதித்தெழுந்தார். "கடவுளாவது ஒன்றாவது! அந்த வார்த்தையைக் கொண்டுபோய் அடுப்பிலே போடுங்கள்! நான் சரிப்படுத்துகிறேன் இவனை! கல்யாணம் ஏப்ரல் மாதத்தில் நடந்துதான் தீரும். ஜனவரி மாதத்தில் நல்ல முகூர்த்தம் ஒன்றும் இல்லை. பிறகு அவனை உஷாவுடன் சீமைக்கு அனுப்பிவிடுகிறேன். உஷாவின் பெயரில் நான் பாங்கில் ரொக்கமாக ஐம்பதினாயிரம் போட்டுள்ளேன். ஒரு தடவை ஐயா திண்டாட்டத்தில் மாட்டிக் கொண்டால் அப்புறம் இந்த தேசபக்தி எல்லாம் பறந்து விடும்!"

ஜ்வாலா பிரஸாதுக்கு காமதாநாதின் இந்தப் பேச்சு பிடிக்கவில்லை. காமதாநாதின் தந்தை ராம்ஸஜீவன் கம்ஸேரியட்டில் ஸ்டோர் குமாஸ்தாவாக வேலை செய்தவர். ஏமாற்று வித்தையிலும் மோசடி செய்வதிலும் கைதேர்ந்தவர். பர்மா யுத்தத்திலும் ஆப்கனிஸ்தான் யுத்தத்திலும் அவர் கணக்கில்லாமல் சம்பாதித்தார். அவர் தன் பிள்ளை காமதாநாதை ராணுவ காண்டிராக்டராக நியமனம் செய்வித்தார். 1814-18-ல் நடந்த உலகப்போரின் போது காமதாநாத் சுமார் ஐந்து லட்சம் ரூபாய் சம்பாதித்தார். அதோடு ராய்பஹதூர் விருதும் கிடைத்தது. முன்ஷி ராம்ஸஜீவன் ஜ்வாலா பிரஸாதின் முன்னால் எப்போதும்

கையைக் கட்டிக்கொண்டுதான் வருவார். இன்று காமதாநாத் ஜ்வாலா பிரஸாதின் பேரனைப் பணத்தினல் விலைக்கு வாங்க முற்பட்டிருக்கிறார். காமதாநாதின் வார்த்தையைக் கேட்டு ஜ்வாலாபிரஸாதுக்குப் பெருத்த வேதனை உண்டாகியது. ஆனல் ஜ்வாலா பிரஸாத் பதில் ஒன்றும் கூறவில்லை.

காமதாநாத் எழுந்து நின்றார். "இனி நான் போகிறேன். கௌரீநாத்துடன் ஆலோசனை செய்து நான் கல்யாணத்திற்கு நாள் நிச்சயிக்கிறேன். நீங்கள் ஆயத்தமாக இருங்கள்!"

நடந்த பேச்சைப்பற்றி ஜ்வாலா பிரஸாத் நவலிடம் குறிப்பிடவில்லை. "நவல், ஏப்ரல் மாதத்தில் உஷாவுக்குக் கல்யாணம் செய்ய விரும்புவதாக ராய்பஹதூர் காமதா நாத் சொல்லிக்கொண்டிருந்தார். நாள் நிச்சயித்து அவர் தெரிவிப்பார்."

"இவ்வளவு அவசரம் எதற்கு தாத்தா. முதல் நான் எல்.எல்.பி. பாஸ் செய்கிறேன். பிறகு பார்க்கலாமே!"

நவல் தலையிலிருந்து கால்வரை கதர் துணி அணிந்து கொண்டு வீட்டிலிருந்து கிளம்பினன். ஜ்வாலா பிரஸாத் நவலைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் புன்னகை தோன்றியது. "அழகாகக் காணப்படுகிறாய் இந்த ஆடையில். கடவுள் உன்னை ரட்சிப்பாராக!"

அடுத்த நாள் காலை ஞானபிரகாஷ் நவலிடம் "லாகூர் காங்கிரஸில் இளைஞர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டு ஜவாகர்லாலின் சக்தியைப் பெருக்கவேண்டும். நீ அலாகாபாத் சர்வகலாசாலையிலிருந்து பத்து மாணவர் களை லாகூர் செல்வதற்குத் தயார் செய்ய முடியுமா?"

"என் பெயரை நீங்கள் எழுதிக்கொள்ளுங்கள். ஒரு வாரத்துக்குள் நான் பத்து பெயர்களையும் கொடுக்

கிறேன்." நவல் உற்சாகமாகச் சொன்னான்.

"இது அவ்வளவு சுலபமானதல்ல நவல்! லாகூர் போய் வர ஒவ்வொருவனுக்கும் சுமார் நாற்பது ஐம்பது ரூபாய் பிடிக்கும். செலவு செய்யக்கூடிய செல்வந்தர் அங்கு போக விரும்பமாட்டார்கள். போவதற்குத் தயாராக இருக்குமவர்களிடம் பணம் இருக்காது. என்னிடம் ஒரு தனிப்பட்ட "நிதி" இருக்கிறது. அதிலிருந்து பாதி செலவு ஏற்றுக்கொள்ளப்படும்."

"காரியம் சுளுவாக முடிந்துவிடும்" என்றான் நவல்.

"இல்லை நவல், உனக்கும் சங்கடம் ஏற்படும். ஆதலால் இன்றையிலிருந்தே பேசிப்பார். லாகூர் மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். டிசம்பர் இருபத்து மூன்றாம் தேதி டில்லியில் லார்டு இர்வினுடன் மகாத்மா காந்தியும் பண்டித மோதிலாலும் பேச்சு நடத்தப் போகின்றனர். அந்தப் பேச்சு வார்த்தையினால் என்ன விளைவு நேரப்போகிறதென்று பார்க்கலாம். எப்படியும் லாகூர் காங்கிரஸ் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்!"

நவல், ஞானபிரகாஷ் கொடுத்த பணியை நிறைவேற்றக் கிளம்பினான். வேலை உண்மையில் கடினமானதே. அன்று மிகவும் கஷ்டப்பட்டு அவன் இரண்டு மாணவர்களை லாகூர் காங்கிரஸுக்குப் போகச் சம்மதிக்கச் செய்தான். இந்த முயற்சியில் அவன் மிகவும் களைத்துவிட்டான். சுமார் ஒன்பது மணிக்கு வீட்டுக்குத் திரும்ப முடிந்தது.

வீட்டில் ஒரு விசித்திரமான சூழ்நிலையைக் கண்டான். வரவேற்பு அறையில் குடும்பம் முழுவதும் குழுமியிருந்தது. ஜ்வாலா பிரஸாதின் கையில் ஒரு தந்தி இருந்தது. யமுனா அழுதுகொண்டே சொல்லிக்கொண்டிருந்தாள். "நீங்கள் எப்படிப்பட்ட கசாப்புக்காரன் வீட்டிற்கு வித்யாவை அனுப்பிவிட்டீர்கள்! அவர்கள்

நம் குடும்பத்தையே நாசம் பண்ணிவிட்டார்கள். அது போதாதென்று இது வேறே! நவலை அனுப்ப வேண்டாம், நீங்களே போய்ப் பாருங்கள் என்ன விஷயம் என்று!"

நவல் வந்ததும் ஜ்வாலா பிரஸாத் தந்தியை அவனிடம் கொடுத்தார். அது உன்னுவிலிருந்து சித்தேச்வரி அனுப்பியது. தந்தி நவல் பெயருக்கு வந்தது. அதில் "உடனே வந்து உன் தங்கையை அழைத்துப்போகவும்" என்று எழுதியிருந்தது.

நவல் இரண்டு மூன்று தரம் அந்தத் தந்தியைப் படித்தான். "ஒன்றும் புரியவில்லையே!"

ருக்மிணி சொன்னாள்: "இதில் புரியாதது என்ன இருக்கிறது! அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து வித்யாவை வெளியேற்றுகிறார்கள். வித்யாவிடமிருந்து நேற்று கடிதம் வந்தது. குடும்பம் முழுவதும் உன்னுவ் போய்ச் சேர்ந்திருக்கிறதல்லவா! ஒவ்வொருவனும் யமனாக மாறி என் பெண்ணைப் படுத்துகிறான்."

ஜ்வாலா பிரஸாத் நவலிடம் சொன்னார்: "நாளைக்குக் காலை வண்டியில் போ! வித்யாவுக்கு எல்லாம் எடுத்துச் சொல்! பெண் கொஞ்சம் துடுக்கான சுபாவம் கொண்டவள். ஆனால், புக்ககத்தில் அடங்கித்தான் இருக்க வேண்டும்."

ருக்மிணி சொன்னாள்: "நவல், வித்யாவை உன்னுடன் அழைத்துக்கொண்டு வந்துவிடு. என் வித்யா செய்த குற்றம் ஒன்றுமில்லை. அவர்கள்தான் எல்லாரும் சண்டாளப் பாவிகள். அவர்கள் அவளுடைய உயிரை வாங்க வந்திருக்கிறார்கள்! ஐயோ ராமா!" ருக்மிணி விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

அப்போது ஞானபிரகாஷ் வந்தார். ருக்மிணி முக்காடிட்டு மூடிக்கொண்டு ஒரு ஓரமாக நகர்ந்துவிட்டாள்.

ஞானபிரகாஷ் கேட்டார்: "என்ன விஷயம் அண்ணு, என்ன அழுகை? ஏன்?"

நவல் தந்தியை ஞானபிரகாஷிடம் கொடுத்தான். தந்தியைப் படித்தார் ஞானபிரகாஷ். "ம், விஷயம் இந்த அளவுக்கு வந்துவிட்டதா? நவலே அனுப்புவது சரியில்லை. அண்ணு, நீங்களேதான் போகவேண்டும்!"

ஜ்வாலா பிரஸாத் மெலிந்த குரலில் சொன்னர்: "என்னை அனுப்பாதே ஞானு. நவல் போவதுதான் சரி. நாளைக்குக் காலை வண்டியில் நவலை அனுப்பிவிடு கிறேன்."

"நாளைக் காலை வண்டியில் அல்ல, நவல் இன்றைய இரவு வண்டியிலேயே போகவேண்டும். இப்போது ஒன்பது மணி. பதினெரு மணிக்குக் கான்பூருக்கு ஒரு பாஸஞ்சர் போகிறது. இந்த விவகாரத்தில் தாமதம் செய்யக்கூடாது. நவல், போய் தயார் பண்ணு." ஞான பிரகாஷ் அறையிலிருந்து வெளியே போய்விட்டார். நவல் கிளம்பியபோது ஞானபிரகாஷினுடைய படுக்கை யும் கட்டப்பட்டு வைத்திருப்பதைக் கண்டான். "நவல், உன்னல் தனியாக விவகாரத்தைச் சமாளிக்க இயலாது. நானும் உன்னுடன் வருகிறேன். நீ குழந்தை, அதுதான் நானும் புறப்பட்டேன்."

ஞானபிரகாஷும் நவலும் உன்ளுவ் ஸ்டேஷனில் வந்து இறங்கியபோது வெயில் வந்துவிட்டது. சாமான்களை "வெயிட்டிங் ரூமி"ல் போட்டுவிட்டு இருவரும் 'இக்கா' வண்டியில் ஏறிக்கொண்டனர். சித்தேச்வரீ பிரஸாதின் பங்களாவை அடைந்து காவல்காரனிடம் ஞானு சொன்னர்: "சித்தேச்வரீ பாபூவிடம் சொல், அலாகா பாதிலிருந்து வந்திருக்கிருர்களென்று!"

"சின்ன எசமான் தூங்கருரு. பெரிய எசமான் கிட்ட சொல்றேன்" என்று கூறி அவன் வீட்டுக்குள்

சென்றான்.

இருவரும் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டனர். இரண்டு நிமிஷம் கழித்தே விந்தேச்வரீ பிரஸாத் வீட்டிலிருந்து வெளியே வந்தார். "அடேடே, நீங்கள் வந்துவிட்டீர்களா? ரொம்பத் துரிதமாக வந்துவிட்டீர்கள். நல்லவேளை. உங்களுடைய சாமான்கள் எங்கே?"

"ஸ்டேஷனில் வைத்துவிட்டு வந்தோம்" என்றான் நவல்.

"நல்ல காரியம் செய்தீர்கள். இங்கு வீணில் சாமானைக் கொண்டுவருவதும், அப்புறம் எடுத்துப்போவதும் சிரமம். சரி...பிசாசை அழைத்துக்கொண்டு போகலாம். நாங்கள் உயிர் தப்பிப் பிழைக்கிறோம்."

"விஷயம் என்ன?" ஞானபிரகாஷ் தயக்கத்தோடு கேட்டார்.

"விஷயம் என்னவா? அவளையே கேளுங்கள். அறையை உட்புறம் சாத்திக்கொண்டு அடம் பண்ணிக்கொண்டிருக்கிறாள். அவள் எதற்கும் தயாராக ஆகிவிட்டாள்." இப்படிச் சொல்லி அவர் உரத்த குரலில் மகளைக் கூப்பிட்டார். "சித்தேசுவரீ, அலாகாபாதிலிருந்து வந்திருக்கிறார்கள்."

அதே நேரத்தில் வித்யா அந்த அறைக்குள் ஓடி வந்தாள். "அண்ணா, என்னைக் காப்பாற்று. இந்தப் பிசாசுகள் என்னைக் கொன்றுவிடும். நீங்களும் வந்தீர்களா தாத்தா, என் உயிர் தப்பியது!"

வித்யாவின் உடம்பில் பல இடங்களில் காயம்; சிராய்ப்பு. ஞானபிரகாஷ் பார்த்தார். விந்தேச்வரீ கடுமையான குரலில் கத்தினார். "நவல், இந்த நன்றி கெட்டவளை உள்ளே அழைத்துப்போய் மூட்டை கட்டச் சொல். அதுவரை நான் ஞானபிரகாஷிடம் பேசுகிறேன்."

நவல் வித்யாவின் கையைப்பிடித்துக்கொண்டு

அவளுடைய அறைக்குப் போனன். ஞானபிரகாஷ் சித்தேசுவரியிடம் கேட்டார். "என்ன நடந்தது சித்தேசுவரி பாபூ, கொஞ்சம் நானும்தான் தெரிந்து கொள்ளுகிறேன்!''

சித்தேசுவரி மிகவும் ஆவேசம் கொண்டிருந்தார். "என் அம்மாவையும் தங்கையையும் திட்டிக்கொண் டிருந்தாள். அதற்கெல்லாம் நான் சும்மாதான் இருந் தேன். ஆனல், அப்பா இவளை அதட்ட, இவள் எதிர்த்துத் திட்ட ஆரம்பித்தாள். எனக்குக் கோபம் வந்துவிட்டது. என் கையும் நீண்டுவிட்டது."

"இவன் லேசாக ஒரு அடி அடித்தான் தவடையில்'' என்ருர் விங்தேசுவரி.

"அந்த ஒரு அடியிலேயே அவள் உடம்பெல்லாம் காய மாகிவிட்டது" என்ருர் ஞானபிரகாஷ்.

"நடந்தது இவ்வளவுதான். உடனே கையையும் காலையும் போட்டு அடித்துக்கொள்ள ஆரம்பித்தாள். ஆடி அமர்க்களம் பண்ணி ரகளையாயாக்கிவிட்டாள். இதற்குப் பிறகு சித்தேசுவரி இன்னொரு அடி கொடுத் தான். உடனே பத்ரகாளி மாதிரி அவள் துடித்தெழுந்து சித்தேசுவரியை ஓங்கி அடித்துவிட்டாள். பெண்ணாய்ப் பிறந்தவள் அகமுடையானை அடித்தாள் என்று முதல் தடவை நான் என் வாழ்க்கையில் கண்டது இதுதான். இப்படிப்பட்ட பெண்ணைத் துப்பாக்கியை எடுத்துச் சுட்டுவிட வேண்டும் என்று சொன்னேன். ஓடிப்போய் அறையில் புகுந்துகொண்டாள். உள்ளே தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு விட்டாள். இல்லாது போனல் இவளை அன்றைக்கே உயிரோடு கொன்று போட்டிருப் பேன். உடனே இவளை அழைத்துப் போய்விடுங்கள். இல்லாதுபோனல் பெரிய அனர்த்தமாகிவிடும்" என்று பொரிந்துதள்ளினர் மாமனர் விங்தேசுவரி.

ஞானபிரகாஷ் மிகவும் சாந்தமாகச் சொன்னார்: "அழைத்துப் போகத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். அவள் உயிர் அன்றைக்கு மாத்திரம் போயிருந்தால், உங்களுக்குக் கூட தூக்குத் தண்டனை கிடைத்திருக்கும். வித்யா கங்கா பிரஸாதின் மகள் என்பதை மறந்துவிட வேண்டாம்."

"கங்கா பிரஸாத் போனார் நரகத்துக்கு! இந்த நன்றி கெட்டவளையும் அனுப்பியிருப்போம் நரகத்துக்கு." விந்தேசுவரீக்கு சினம் பொங்கிவிட்டது.

ஞானபிரகாஷ் நிமிர்ந்து விறைந்து நின்றார். "விந்தேசுவரீ பிரஸாத், கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேசு; கங்கா பிரஸாத் இல்லை என்றால் இந்தப் பெண் அநாதையாகிவிட்டாள் என்று நினைத்துவிடாதே."

சித்தேசுவரீ தன் தந்தையைத் தடுத்தார். "அப்பா, இவர்களோடு ஏன் வீண்வம்பு."

அப்போது நவல் வித்யாவின் இரண்டு டிரங்குப்பெட்டிகளுடன் அங்கு வந்தான். "இவ்வளவுதான் சாமான்! நாம் இனிப் புறப்படலாம்."

ஞானபிரகாஷ் சித்தேசுவரீயைப் பார்த்தார். வண்டி ஏதாகிலும் கிடைக்குமா? வரவழைக்க முடியுமா?"

விந்தேசுவரீ இப்போது சாந்தமாகி விட்டார். வேலையாளைக் கூப்பிட்டு "பவானீ, டிரைவரிடம் காரைக் கொண்டுவரச் சொல்லு" என்றார். "வித்யா, நீ இனிமேல் இந்த வீட்டில் கால் எடுத்து வைக்க முடியாது, நினைவில் வைத்துக்கொள். உன் நகைகளைக் கழற்றிக் கீழே வை முதலில்."

வித்யா விதிர்த்தெழுந்து சொன்னாள்: "இந்த நரகத்திற்குள் இனி நான் காலடி எடுத்து வைக்கப்போவதில்லை. எங்கள் அப்பா மீது ஆணை. இந்தாரும், உம் நகைகளை எடுத்துக்கொள்ளும்" என்று சொல்லி வித்யா டிரங்குப்

பெட்டி சாவியை சித்தேசுவரி முன்னால் வீசி எறிந்தாள். சித்தேசுவரி சாவியை எடுப்பதற்கு முன்னால் ஞானேசுவரி அதை எடுத்துக்கொண்டுவிட்டார். "நகைகள் எல்லாம் நாங்கள் போட்டது. உங்களுக்கு யாதொரு உரிமையும் கிடையாது."

விந்தேசுவரி கர்ஜித்தார். "ஞானபிரகாஷை, மூனும் மனுஷன் நீ யார் பேச? கொடு சாவியை இப்படி."

"நான் இந்தப் பெண்ணுக்குத் தகப்பனார் முறை. நான் தான் கார்டியன்" என்று ஞானபிரகாஷ் சாவியைத் தன் பையில் வைத்துக்கொண்டார்.

விந்தேசுவரி மகனைப்பார்த்து "என்னடா பார்க்கிறே, உள்ளே எடுத்துக்கொண்டு போ இந்த டிரங்கை" என்று உத்தரவிட்டார்.

ஞானபிரகாஷ் இடி இடித்ததுபோல் சொன்னார்: "ஜாக்கிரதை. அந்த டிரங்கில் கை வைக்காதே. பதினைந்தாயிரம் வரதட்சிணை வாங்கியிருக்கிறாய் நீ விந்தேசுவரி பிரஸாத்! இப்போது பெண்ணை நீ வீட்டிலிருந்து விரட்டுகிறாய். எவனாவது டிரங்கைத் தொட்டால், அப்புறம் நன்றாக இராது." ஞானபிரகாஷ் தன் சட்டைப்பையினின்று கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டார். "நீ போலீஸைக் கூப்பிடலாம் விந்தேசுவரி பிரஸாத்! நீ டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்! சட்டம் என்னவென்று உனக்குத் தெரியும்! நவல், டிரங்கை எடுத்துக்கொண்டு காருக்குப் போ. ஏன் விந்தேசுவரி பிரஸாத், போலீஸைக் கூப்பிடுவதானால் பேஷாகக் கூப்பிடு. நான் இருக்கிறேன். டாகுர் குஷல் சிங் இங்கே போலீஸ் சூபரின்டென்டெண்ட்; கங்கா பிரஸாதுக்கு வேண்டிய நண்பர், அதை நினைவில் வைத்துக்கொள்!"

"விந்தேசுவரி பிரஸாத் பற்களை நறநறவென்று கடித்தார். "நான் உன்னைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

உன்னை ஒழித்துக்கட்டாவிட்டால் பார்!''

'' ஹா, வேண்டிய அவகாசம் தருகிறேன். என்னை ஒரு கை பார்த்துக்கொள்ள! மறுபடியும் சொல்லுகிறேன், உனக்குத் தைரியம் இருந்தால் போலீசைக் கூப்பிடு; கொள்ளைக் குற்றம் சாட்டிக் கைது செய்யச் சொல்லடா பாவிப்பயலே!''

சித்தேசுவரி மிரண்டுவிட்டாள். ''உள்ளே வாருங்கள் அப்பா! இந்தக் கயவர்களோடே நமக்கு என்ன பேச்சு?'' அப்பாவின் கையைப் பிடித்து உள்ளே இழுத்துப் போய்விட்டாள்.

ஞானபிரகாஷ் நவலையும் வித்யாவையும் அழைத்துக் கொண்டு அடுத்த வண்டியில் உன்னாவிலிருந்து அலாகாபாதுக்குப் புறப்பட்டார்.

6

'' நவல், மொத்தம் எத்தனை பேர் ஆச்சு?'' ஞானபிரகாஷ் கேட்டார்.

'' என்னைச் சேர்த்து ஏழு பேர். நீங்கள் சொன்னது சரிதான். நான் நினைத்ததுபோல வேலை எளிதானதல்ல. சரி, எப்பொழுது புறப்பட வேண்டும்? டிஸம்பர் இருபத்தைந்தாம் தேதி காங்கிரஸ் கூட்டம் ஆரம்பமாகிறது. அதற்குள் இன்னும் மூன்று பேரையாவது திரட்டப் பார்க்கிறேன்.''

ஞானபிரகாஷ் புன்னகை செய்தார். ''வேண்டாம், இதுவே போதும். நான் இரண்டு நாள் முன்னதாகவே போய்ச் சேரவேண்டும். இருபத்திரண்டாம்

தேதியே இங்கிருந்து கிளம்புகிறேன். நீங்கள் எல்லாரும் இருபத்து நாலாம் தேதி புறப்பட்டு வாருங்கள். உங்கள் ஜாகைக்கு நான் ஏற்பாடு செய்து வைக்கிறேன்.''

வித்யா அன்றைய செய்தித்தாளைப் படித்துக்கொண்டிருந்தாள். அவள் சொன்னாள்: ''அண்ணா, நானும் வருவேன் உங்களோடு. ஞானு தாத்தா, நம்பர் எட்டு ஆகிவிட்டது.''

வித்யா உன்னாவிலிருந்து வந்ததிலிருந்து மௌனமாக இருந்து வந்தாள். தன் அறையை விட்டு வெளியே வருவது அபூர்வம். அறையில் ஏகாந்தத்தில் மூழ்கி யோசித்துக்கொண்டிருப்பாள். நவலுக்கு வித்யாவின் பேச்சைக் கேட்டு ஆச்சரியம் உண்டாகியது. ''நீ காங்கிரஸுக்கு வரப்போகிறாயா? என்ன சொல்லுகிறாய் வித்யா?''

''ஆம் அண்ணா, நானும் வருவேன். எனக்கும் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துவிட்டது. வாழ்க்கையே வெறுப்பாகிவிட்டது. ஏன் ஞானு தாத்தா. லாகூர் காங்கிரஸுக்கு நான் போவதால் கெடுதல் ஒன்றும் இல்லையே? சொல்லுங்கள், ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?''

ஞானபிரகாஷ் வித்யாவைச் சிறிது நேரம் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார். அவள் முகத்தில் ஓர் உறுதிப்பாடும், கண்களில் ஆழ்ந்த தீர்மானமும் ஒளிவிடக் கண்டார். எவ்வளவு சாந்தமாக இருந்தாள்! எவ்வளவு அழகாக இருந்தாள்! அவருக்கு ''மண்டோனா''வின் ஓவியம் நினைவு வந்தது. ஒரு பெருமூச்செறிந்து அவர் சொன்னார்: ''இல்லை பெண்ணே, நீ வருவதினால் எவ்வித மான கெடுதலும் இல்லை. ஆனால், இந்தத் தருணத்தில் நீ வருவது அவ்வளவு நன்றாக இராது. ஜனங்கள் என்ன

சொல்லுவார்கள் ?''

வித்யா சிறிது நேரம் பேசாது இருந்தாள். பிறகு அவள் பரிதாபமான குரலில் சொன்னாள்: "தாத்தா, ஜனங்கள் என்ன சொல்லுவார்கள் ? சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டுமே! ஆனால், நான் உங்களைக் கட்டாயப்படுத்தமாட்டேன். நான் இங்கிருந்தபடியே கொஞ்சம் கொஞ்சமாகப் புழுங்கிச் சாக வேண்டுமென்றால் செத்துவிட்டுப் போகிறேன். பெண் வாழ்வு புண் வாழ்வு. ஏன் அண்ணா, நான் சொல்வது சரிதானே ?''

வித்யாவின் குரலில் இருந்த நிர்ப்பந்தமும் தீட்சண்ய மான குத்தலும் ஞானபிரகாஷின் உள்ளத்தில் தைத்து விட்டது. அவர் தம்முடைய கோழைத்தனத்தைப்பற்றி வெட்கமுற்றார். தலையைக் குனிந்துகொண்டார். "இல்லை பெண்ணே, நீ அடிமையாகவும் இருக்கவேண்டாம், புழுங்கியும் சாகவேண்டாம். நீயும் வா. என்னோடு புறப் படு. இவர்கள் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வார் கள். உனக்குக் கஷ்டமாக இருக்கும்."

வித்யா புன்னகை புரிந்தாள். "ஞானு தாத்தா, நீர் எவ்வளவு நல்லவர்! நீங்களும் அண்ணாவும்தான் எனக்கு ஆதரவு! தாத்தா, நான் நவல் அண்ணாவுடன் மூன்றாம் வகுப்பில்தான் வருவேன். வாழ்க்கையில் போராட வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டது. இந்த அற்ப வசதி களுக்காகக் கவலைப்படப்போதில்லை நான்."

வித்யா லாகூர் போகப்போகிறாள் என்ற செய்தி பரவியது. வீடு முழுவதும் ஒரே குழப்பம். யமுனா ருக்மிணி யிடம் சொன்னாள்: "மருமகளே, வித்யாவை லாகூர் போகவிடாமல் தடுத்து நிறுத்து! உன்னுவ்காரர்கள் என்ன சொல்வார்கள் ? அவர்களுடன் சமாதானம் ஏற்படும் நம்பிக்கை ஒரு சிறிது இருப்பதும் அடியோடு

போய்விடும். பெரிய வீட்டுப் பெண், பர்தா இல்லாமல் ஊர் சுற்றுவதும், ஆண்களோடு கலந்து பேசுவதும் நன்ருக இல்லை. உலகம் காரித்துப்பும்!"

"ஆம் அம்மா, வித்யா லாகூர் செல்வது எனக்கும்தான் சரியென்று படவில்லை. ஆனல், வித்யாவின் கதி இப்படியே இருந்தால் அவள் அதிக நாள் பிழைக்கமாட்டாள். நீங்கள்தான் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே அவள் நிலைமையை. மெலிந்து கரைந்து பாதியாகிவிட்டாள்." ருக்மிணி கண்ணீர் பெருக்கினள்.

"அது எனக்குத் தெரியும். ஆனல், குடும்ப கெளரவம் ஒன்று இருக்கிறதே! இந்த அபாக்கியவதி பிறந்ததுமே செத்துப்போயிருந்தால் எவ்வளவோ நன்ருக இருந்திருக்கும். குடும்ப மானத்தைக் குலைத்துவிடுவாள் போல் தோன்றுகிறது." யமுனவின் குரல் கடுமையாகிவிட்டது.

"நான் உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன். இப்படியெல்லாம் சொல்லாதீர்கள். வித்யா காதில் விழுந்தால் ஏதாவது செய்துவைப்பாள், எனக்குத் தெரியும், அவள் பிசகு ஒன்றும் செய்யமாட்டாள்."

"பிசகு ஒன்றும் செய்யமாட்டாளா, அகமுடையான் மேலே கையை ஓங்கினளே, அது சரியா?"

ருக்மிணி சொன்னள்: "புக்ககத்தில் எது செய்தாலும் சரி என்று உயிரை விட்டுவிட வேண்டுமா! நீங்கள்தான் பார்த்தீர்களே, எப்படி உடம்பெல்லாம் ரணமாகப் போயிருந்தது! குடும்பம் பூராவும் ஒன்று சேர்ந்து அடித்திருக்கிருர்கள். கிளியாய் வளர்த்த பெண்ணைக் கசாப்புக்காரனிடம் அனுப்பியிருந்தோம். உயிரோடு திரும்பி வந்தாளே அதுவே பெரிது." யமுனவுக்குக் கோபம் வந்தது. "நீதான் அவளைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொள்ள வேண்டும். என்னல் இதெல்

லாம் பார்த்து சகிக்கவில்லை! அவரிடம் போய் சொல் கிறேன்; அவரால்தான் தடுக்க முடியும்!"

ஜ்வாலா பிரஸாத் பூஜையை முடித்துக்கொண்டு வரவேற்பறையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். வித்யா லாகூர் போகும் செய்தி அவருக்கும் சரியாகப் படவில்லை. அவர் ஞானபிரகாஷிடம் சொல்லிக்கொண்டிருந்தார். "வித்யா லாகூர் செல்வது எவ்விதத்திலும் சரியல்ல! நாம் அவள் வீட்டாரிடம் அனுமதி கேட்கவேண்டும்."

ஞானபிரகாஷ் சொன்னார்: "அவள் வீட்டாரா? அது யார்? அவளை வீட்டிலிருந்து துரத்தியடித்தவர்களா அவள் வீட்டார்?"

ஜ்வாலா பிரஸாத் மனம் குழம்பினார். ஞானபிரகாஷ் தொடர்ந்தார். "நீங்கள் ஒரு காலத்தில் வித்யாவுக்குச் சொந்தக்காரராக இருந்தீர்கள். அந்தப் பிசாசுகளிடம் அவளை ஒப்படைத்த பிறகு வித்யாவுக்கு யாருமே இல்லை உலகத்தில்! இனிமேல் ஒரு பிச்சைக்காரிபோல் அவள் ஊரார் தயவில் வாழவேண்டியதுதான். அவளுக்குக் கொடுத்துவைத்தது அடிமைத்தனம் அல்லது சாவு!" இந்த சமயத்தில் யமுனா அறைக்குள் நுழைந்தாள். "ஞானுலாலா, வித்யாவுக்கு லாகூர் போக நீர்தான் யோசனை சொன்னீரா?"

"இல்லை அண்ணி. இங்கு அவள் கடந்த பத்து பன்னிரண்டு நாட்களாகச் சாவுடன் நடத்திய போராட்டம் தான் வித்யாவுக்கு இதைக் கற்றுக்கொடுத்திருக்கிறது. அவள் உன்னைவிலிருந்து வந்ததிலிருந்து யாருடனும் பேசாமல் முகத்தை மூடிக்கொண்டு தன்னுடைய அறையில் விழுந்து கிடக்கிறாள். அவள் புன்னகை போய்விட்டது. அவள் சதா கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். முதல் தடவையாக இன்று அவளது வாழ்வு துடித்தெழுந்து என்னுடைய ஆதரவை நாடியது,

நவலுடைய ஆதரவை நாடியது. நீயே சொல் அண்ணி, நாங்கள் என்ன செய்யவேண்டும்? அவள் லாகூர் வருவேன் என்ருள், நாங்கள் ஒப்புக்கொண் டோம். இத்தனை நாட்களுக்குப் பிறகு அவள் முகத்தில் சிறிது சிரிப்புத் தோன்றியது. அவள் கண்களில் ஒளி பிறந்தது. அண்ணி, வித்யா செத்துப்போய்விடவேண்டும் என விரும்புகிருயா ?"

யமுனை அழுதுவிட்டாள். "ஐயோ, என் குழந்தை! எவ்வளவு ஆசையோடு வளர்த்தேன். எப்படிப்பட்ட சண்டாளன் கையிலே கொண்டுபோய் கொடுத்தேன்! ஞானு லாலா, நான் அவளைத் தடுக்கமாட்டேன். அவள் விருப்பம்போல செய்யட்டும்." யமுனை உள்ளே சென்று விட்டாள்.

இதற்குப் பிறகு ஜ்வாலா பிரஸாத் பேச்சே எடுக்க வில்லை.

டிசம்பர் இருபத்து மூன்ரும் தேதி மாலை அலாகா பாதில் ஒரே பரபரப்பு உண்டாகியது. 'லீடர்', 'பயோனியர்' இரண்டு நாளிதழ்களிலும் செய்தி வெளி வந்திருந்தது. காலையில் வைஸ்ராய் டில்லி திரும்பி வரும் போது "புராணகிலா" அருகே அவருடைய ஸ்பெஷல் ரயிலுக்கு வெடி வைக்கப்பட்டது. வைஸ்ராய் மயிரிழை யில் தப்பினர். ஆனல், சமையல் பெட்டி சேதமடைந்தது. ஒரு வேலையாளுக்குக் காயம் பட்டது.

ஜ்வாலா பிரஸாத் மிகவும் கவலை கொண்டார். இரவு நேரத்தில் அவர் நவலையும் வித்யாவையும் அழைத்தார். "இன்றையச் செய்தியை நீ படித்திருப்பாய். உன் கருத்தென்ன நவல் ?"

"நவல் பதில் சொன்னன் : செய்தி கெடுதலானது தான் தாத்தா. இதன் விளைவு நல்லதாக இருக் காது. லார்ட் இர்வினுக்கும் மகாத்மா காந்திக்கும்

இடையே நடக்கவிருக்கும் சமாதான வார்த்தை பலிக்காது என்று நினைக்கிறேன்."

"நான் அதைக் கேட்கவில்லை. நீயும் வித்யாவும் இனியும் லாகூர் போவது உசிதமா?"

"சர்க்கார் காங்கிரஸைத் தடைசெய்து சட்டம் ஏதும் போடவில்லை. தடை விதிக்கப்படமாட்டாது என்றுதான் நினைக்கிறேன். இந்த வேலை நிச்சயமாக ஹிம்சையாளர்களின் புரட்சி வேலை. மகாத்மா காந்தியும் காங்கிரசும் மேற்கொண்டுள்ளது அஹிம்சை வழி."

"அப்படியானால் நீங்கள் எல்லாரும் லாகூர் போகத்தான் போவீர்களா?"

"இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு லாகூர் காங்கிரஸ் மிக முக்கியமாகிவிட்டது தாத்தா. வேடிக்கையாக இருக்கும்!"

"என்ன வேடிக்கை என்று எனக்குத் தெரியும்! ஆனால், உங்களுக்கெல்லாம் யார் எடுத்துச் சொல்லுவது! சரி, துணிமணிகளை நிறைய எடுத்துச் செல். குளிர் அதிகமாக இருக்கிறது. லாகூர் குளிர் பிரசித்தமானது. கங்காவினுடைய அந்த ஓவர்கோட்டையும் எடுத்துக் கொள். வித்யா, எனக்குக் கவலை உன்னைப்பற்றித் தான்!"

வித்யா புன்முறுவலுடன் சொன்னாள்: "எனக்கு அப்பா ஒரு "ஃபர்" கோட்டு தைத்துக் கொடுத்தார். அது இருக்கும்போது குளிர் என்ன செய்யும்?"

டிசம்பர் இருபத்து நான்காம் தேதி காலை நவல் வித்யாவை அழைத்துக்கொண்டு ரயிலடிக்கு வந்தபோது குளிர் பயங்கரமாக இருந்தது. இரவு முழுவதும் பெய்த மழை நின்றுவிட்டது. ஆனால், வாடைக்காற்று வேகமாக வீசியது. ஸ்டேஷனில் வந்து பார்த்தபோது வருவதாகச் சொன்ன தொண்டர்கள் எட்டுப்பேரில் ஐந்துபேர்

மட்டுமே இருந்தனர்.

வண்டியில் நிறைய இடம் காலியாகக் கிடந்தது. அந்தக் குளிரில் யார் பிரயாணம் செய்வார்கள்? மூன்றும் வகுப்பில் மிகச் சௌகரியமாக ஐந்துபேர்களும் உட்கார்ந்துகொண்டனர், உல்லாசம் கொண்ட உள்ளத்தோடு.

ஞானபிரகாஷ் லாகூர் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். "பனி மிகப் பயங்கரமாக இருக்கிறது இங்கே. முன்னரே தெரிந்திருந்தால் இங்கு உங்களை வரச் சொல்லியிருக்க மாட்டேன்."

நவல் புன்னகை செய்தான். "இப்போது நாங்கள் வந்தேவிட்டோம், தாத்தா; கொஞ்சம் இங்கே உள்ள குளிரையும் அனுபவித்துப் பார்த்துவிடலாமே!"

நவலும் அவனுடைய தோழர்களும் ஒரு கூடாரத்தில் இடம் பிடித்தனர். வித்யாவை அவர் தம் கூடாரத்தில் தங்கச் செய்தார்.

மாலையில் மாநாடு முடிந்தபோது குளிர் வெடவெட வென்று நடுக்கி எடுத்தது. ஆனால் வித்யாவுக்குக் குளிரின் உணர்ச்சியே இல்லை. அன்று அவள் ஒரு புதிய உலகத்தைக் கண்டாள். அதில் செயல் நிறைந்திருந்தது. அதில் போராட்டம் இருந்தது. இந்தச் செயலும் போராட்டமும் அவளுடைய வாழ்க்கையின் அங்கமாகிவிட்டன. அவள் கண்கூடாகக் கண்டாள். ஆயிரக்கணக்கான பெண்களும் ஆடவர்களும் அனைத்தையும் விட்டுத் தியாக வாழ்க்கையை ஏற்பதற்குச் சித்தமாகியிருந்தனர். அவளுக்குத் தனது வாழ்க்கைத் துயரம் மிகவும் அற்பமாகத் தோன்றியது. காங்கிரஸ் மாநாட்டிலிருந்து திரும்பியபோது வித்யா சொன்னாள்: "அண்ணா, நேரம் இருக்கிறது. எனக்கு லாகூர் நகரத்தைச் சுற்றிக் காண்பியேன்."

நவலுக்குப் பனி நிறைந்த அந்த இரவில் வெளியே போகத் துணிவில்லை. ஆனால் வித்யாவின் முகத்தில் தோன்றிய உல்லாசத்தைக் கண்டபோது முடியாது என்று சொல்ல அவனுக்கு மனம் வரவில்லை. ஆயினும் அதைத் தவிர்ப்பதற்குச் சிறிது முயற்சி செய்தான். "வித்யா, பனி கடுமையாக இருக்கிறதே. இந்தக் குளிரில்..."

"ஆம் அண்ணா, ஆனால் புழுக்கம் இல்லை, நீ உன்னுடைய ஓவர்கோட்டை அணிந்துகொள். எவ்வளவு அழகான இரவு! எனக்கு வாழ்க்கையில் ஒருவிதப் பற்று உண்டாகிறது! ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்துவிடலாம், வா அண்ணா!"

நவல் வித்யாவின் வேண்டுகோளை மறுக்கவில்லை. இருவரும் கிளம்பினார்கள். ரஸ்தாக்கள் ஜனநடமாட்டமின்றி வெறிச்சென்றிருந்தன. இங்குமங்கும் ஒருவரோ இருவரோ போய் வந்துகொண்டிருந்தனர். சினிமாத் தியேட்டர்களின் முன்னால் கொஞ்சம் கலகலப்பு இருந்தது. ஹோட்டல்களில் சிலர் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். மால் ரோடுக்கருகில் நவலும் வித்யாவும் 'தாங்கா'வை விட்டு இறங்கி நடக்க ஆரம்பித்தனர்.

வித்யா நவலிடம் கேள்விமேல் கேள்வி போடுவது வழக்கம். ஆனால், இப்போது கேள்வி பதில்களுக்கு அவசியமில்லை என்று அவளுக்குத் தோன்றியது. அவள் வாழ்க்கையின் முழு வடிவத்தைத் தரிசித்தாள்—அந்தப் பனி நிறைந்த இரவைப்போலவே கடிக்க வருவதும், குத்துவதுமான வாழ்க்கை! ஆனால் அவளுக்குக் குளிர் தெரியவில்லை. அவளுடைய நரம்புகளில் உஷ்ண ரத்தம் பாய்ந்துகொண்டிருந்தது. அந்தக் குத்தீட்டிப் பனி இரவில் அவளுக்கு மயிர்க்கூச்சல் எடுத்து மகிழ்ச்சி உண்டாகியது. அந்தக் குத்தீட்டி பாய்கின்ற வாழ்க்கையை

எதிர்க்கும் சக்தி இருதய உஷ்ணத்திலும். நரம்புகளில் ஓடும் உஷ்ண ரத்தத்திலும் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

அன்று அவள் காங்கிரஸ் மாநாட்டில் இளஞ் சமுதாயத் தலைவர் ஜவாஹர்லால் நேருவின் தலைமையுரையைக் கேட்டாள். அந்த உரையின் பெரும் பகுதி அவளுக்குப் புரியவில்லை. சிக்கலான அரசியல் பிரச்னைகள் அலசப்பட்டிருந்தன. ஆனாலும் அவள் நிறையவே புரிந்துகொண்டாள் என்று சொல்ல வேண்டும். மனிதன் சுதந்திரமானவன். அநியாயத்தை எதிர்த்தல் மனிதனுடைய கடமை. வாழ்க்கை என்பது போராட்டம், செயலூக்கம். இந்த உரையைக் கேட்டு அவள் மயங்கினாள்.

வித்யா அண்ணனைப் பார்த்தாள். அவன் முகத்திலும் உறுதி இருந்தது; தன்னம்பிக்கை இருந்தது. "அவளுடைய அண்ணனும் ஜவாஹர்லால் போன்று ஆவானா?"

வித்யாவின் முகம் வாடியது. ஜவாஹர்லாலுக்குத் தந்தை இருக்கிறார். அவர் ஜவாஹர்லாலுக்கு ஆதரவாக இருக்கிறார். ஆனால் நவலோ, தந்தையை இழந்தவன். இவ்வளவு சிறிய வயதில் ஒரு பெரிய குடும்பத்தின் பாரம் அவன் தோள்களில் வந்து சுமந்திருக்கிறது. திடீரென அவள் நவலுடைய கையைப் பிடித்துக் கொண்டாள். "அண்ணா, நீ எப்போதாவது யோசித்துப் பார்த்தாயா. நான் என் புக்ககத்தை விட்டு வந்து விட்டேன். நான் உனக்கு ஒரு பெருஞ்சுமையாக வந்து விட்டேன்?"

நவல் புன்முறுவல் செய்தான். "என்ன பைத்தியக்காரத்தனமாகப் பேசுகிறாய் வித்யா? நீ யாருக்குச் சுமை? உன்னிடத்தில் துணிவும் சக்தியும் இருக்கிறது. நீயே பிறருக்கு ஆதரவு தரக்கூடியவள். நீ உன் வருத்த

உணர்ச்சியினால் தன்னை அறிந்துகொள்ளாமல் இருக்கிறாய். ஆனால் உன்னை எனக்குத் தெரியும்."

வித்யாவின் கலக்கம், வருத்தம் அனைத்தும் நொடியில் அகன்றுவிட்டன. இப்போதுதான் ஒரு க்ஷணகாலத்திற்கு அவள் வாழ்க்கையின் பனி படர்ந்த தன்மையை உணர்ந்தாள். ஆனால், அடுத்த கணமே அவள் உள்ளிருந்த உஷ்ணமானது அந்தத் துயரத்தை மகிழ்ச்சி மிக்க மயிர்க்கூச்சலாக மாற்றிவிட்டது. "உண்மையா அண்ணா! நான் வாழ்வில் தனியாகச் சமாளிக்கக்கூடியவள் என்று நீ நினைக்கிறாயா! நான் இந்த வெறுப்பும் அடிமைத்தனமும் நிரம்பிய சூழ்நிலையை உடைத்தெறிந்து என் வழியை நானாகவே கண்டுகொள்ள முடியுமா? இதில் நீ எனக்கு உதவி செய்வாயா அண்ணா? சொல்! இந்த முயற்சியில் நீ எனக்கு உதவி செய்யவேண்டும்!"

"நான் உனக்கு வாக்களிக்கிறேன் வித்யா! சரி, இனி திரும்பலாம் வா. கடுமையான குளிர். இதில் அதிகம் நடக்கக்கூடாது."

லாகூர் காங்கிரஸ் சூழ்நிலை பதற்றம் நிரம்பியிருந்தது. மகாத்மா காந்திக்கும், லார்ட் இர்வினுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. நாட்டில் நிராசையும் கோபமும் நிரம்பியதொரு சூழ்நிலை பரவியது. சண்டையிடவேண்டியிருக்கும், போராடவேண்டியிருக்கும். மன்றாடுவதால் ஒன்றும் கிடைக்காது. வாங்கவேண்டியதை வலிமையோடு வாங்கவேண்டும். ஆனால், இதற்கெல்லாம் யார் தலைமை தாங்கி நடத்துவது?

காந்தி மௌனமாக இருக்கிறார், சாந்தமாக இருக்கிறார், திடமாக இருக்கிறார், அசையாமல் இருக்கிறார். காந்திதான் தலைமை வகிக்க முடியும். ஆனால், காந்தி பல நிபந்தனைகள் விதிக்கிறாரே! நிபந்தனைகள் மிகக் கடுமையாக இருக்கின்றன. இவற்றை ஏற்றுக்கொள்ள

முடியுமா?" அன்பு, அஹிம்சை, தியாகம் இவற்றை அனுசரி. யாரையும் வெறுக்காதே. ஆனால் திட உறுதியோடு எதிர்த்து நில்! ஹிம்சை செய்யாதே. ஆனால், வாழ்வா, சாவா என்ற முறையில் யுத்தம் நடத்து. எல்லாவற்றையும் துறந்துவிடு. ஆனால், உன் உரிமைகளுக்காக வன்மையோடு போராடு. இந்த ஷரத்துக்களை ஏற்றுக் கொள்ள இயலுமா? சிறைக்குச் செல், தடியடியைத் தாங்கிக்கொள், துப்பாக்கிக் குண்டுகளுக்கு மார்பைக் காட்டு. ஆனால் ஒரு விரலைக்கூட உயர்த்தாதே! இது சாத்தியமா? நடக்கக்கூடியதா? மக்கள் ஒப்புவார்களா?

ஆயிரம் ஆயிரம் மக்கள் ஆண், பெண், வாலிபர், வயது வந்தோர் யாவர் முகத்திலும் உறுதிப்பாடு.

தன்னம்பிக்கை சுடர்விட்டது. எண்ணத்திலே ஊக்கம் இருந்தது. இவர்கள் காந்தி போதிக்கும் அன்பு அஹிம்சையின் வழியில் செல்லுவார்களா? காந்தி எல்லாரையும் கேட்டுக்கொண்டிருந்தார் — "இது நடக்குமா? இது சாத்தியமா?"

காந்தியின் இந்தக் கேள்விக்கு விடை ஜவாஹர்லால். ஜவாஹர்லால் காங்கிரஸின் தலைவர். அவர், இது நடக்கும் நடக்கவேண்டும் என்கிறார். ஹிம்சையினால் பயனில்லை. எங்கு ஹிம்சை முறையில் புரட்சி தோன்றுகிறதோ அங்கு அதிக வலிமையில் மிஞ்சிய, அதிகத் தந்திரமுள்ள ஹிம்சைதான் வெற்றி பெறமுடியும். காந்தி சொல்லும் யோசனை நீதியைத் தழுவியது, ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்கம் குலைந்து சிதறிக் கிடக்கும் தேசத்தில் ஹிம்சை முறைப் போராட்டம் சாத்தியமில்லை. இந்தக் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலிலேயே நம்மிடையே எத்தனை உளவாளிகளும், சண்டை பூசல் மூட்டிவிடுவோரும், ஒற்றர்களும் இருக்கிறார்களோ யாருக்குத் தெரியும்! நாம் இவர்களை அடையாளம்

கண்டுகொள்ள முடியாது. இவர்கள் நம் சொந்த அண்ணன்-தம்பிகள், இந்தியர்கள்!

ஜவாஹர்லால் சொல்லுகிறார்—நாம் அஹிம்சையை ஏற்றுக்கொள்ள வேண்டும்—நம்பிக்கை என்ற முறையில் அல்ல, நடைமுறைக்குகந்த கொள்கை என்ற முறையில். ஜவாஹர்லால் பிரத்யட்ச நிலைமையை அறிவார். அவர் நாட்டினுடைய ஆன்மாவுக்கு, சைதன்னியத்திற்குப் பிரதிநிதி. அவர் காந்தியைப்போல் தெய்வ புருஷர் அல்ல. இறந்த காலத்தை மீண்டும் ஸ்தாபிப்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அவர் ருஷி முனிகளது தொடர்பில் நம்பிக்கை கொண்டவரல்ல. அழிந்து விட்டது "அசத்"—இல்லாதது—அது சத்தியமாக இருந்தால் அழிந்திருக்காது. ஜவாஹர்லால் இன்றைய பௌதிக யுகத்தின் சிருஷ்டி. அவர் சமதர்மக் கொள்கையை ஊன்றிப் படித்திருக்கிறார். சமதர்மக் கொள்கையின் அடிப்படையில்தான் வருங்காலம் அமைக்கப்பெறும். ஆனால், ஜவாஹர்லாலின் ஆன்மாவோ, இந்திய கலாசார பரம்பரையில் காலூன்றி நிற்பது. அதற்கு ஹிம்சையில் வெறுப்பு, அஹிம்சை அதற்கு வெறும் நடைமுறைக் கொள்கை மட்டுமல்ல; அஹிம்சை என்பது அதன் நம்பிக்கை. ஜவாஹர்லால் காந்தியை முழுமையாக்குகின்ற வியக்தி. உணர்ச்சி பொங்கிச் செயலாற்றத் துடிக்கும் குருதிபாயும் இளைஞர்களுக்கு ஜவாஹர்லால் பிரதிநிதி. இந்தியச் சுதந்திரத்தின் அஹிம்சை முறைப் போராட்டத்தை யுவ பாரத சமூகமே நடத்தப்போகிறது. ஏனெனில், அவர்கள் வருங்காலத்துக் கனவுகளில் லயித்திருக்கின்றனர். அக்கனவுகளை நனவாக்கும் செயல் திறன் இருக்கிறது, அவர்தம் கரங்களிலே!

நம்பிக்கை சிதறிவிட்டது. ஒரு பயங்கரமான குழப்பம். இனி என்ன நடக்கும்? யாருக்கும் தெரியாது. ஆனால்

ஏதாவது நடந்தே தீரும், நடந்தே தீரும்! லாகூர் காங்கிரஸ் மாநாடு ஒரு உணர்ச்சிக் கடல்! அங்கு வந்த தலைவர்களிடம் அறிவுபூர்வமாகச் செயல்படக்கூடிய திட்டம் ஏதும் இல்லை. போராட்டம் தவிர்க்க இயலாத தென்று தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அந்தப் போராட்டத்தின் திட்டம் என்ன? ஒருவருக்கும் தெரியாது.

லாகூர் காங்கிரஸில் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன. விவாதங்கள் நடைபெறுகின்றன. பேருரைகள் ஆற்றப்படுகின்றன. நாட்டின் செய்தித்தாள்களில் இவையெல்லாம் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. ஆனால் தீர்மானம், உரை, பிரசாரம்—இதெல்லாம் காங்கிரஸின் வழக்கம். லாகூர் காங்கிரஸிடம் எவ்விதமான, விளக்கமான செயல், திட்டமும் கிடையாது. நாட்டின் பார்வை லாகூரின் மீது கவிந்திருந்தது. ஆனால் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளினால் நாட்டில் நம்பிக்கையின்மையே ஏற்படக் கூடும்!

ஆயினும் லாகூர் காங்கிரஸில் உணர்ச்சிப் பெருக்கம் இருந்தது. செய் அல்லது செத்து மடி என்ற ஒரு உறுதி இருந்தது. எல்லாரும் விறைத்துவிடுவார்களோ என்று ஐயுறத்தக்க குளிர் நிலவிய லாகூரில் ஒவ்வொருவனுடைய இதயத்திலும் உஷ்ண ரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. ஒவ்வொருவனுடைய மூச்சிலும் சுதந்திரத் துடிப்பிருந்தது.

நவல் இதையெல்லாம் கண்டான். வித்யா இதையெல்லாம் கண்டாள். புதிய உலகம், புதிய சூழ்நிலை, புதிய கண்ணோட்டம்.

நவலும் வித்யாவும் டில்லி வழியாக அலாகாபாத் வந்து சேர்ந்தனர். ஞானபிரகாஷ் சில நாட்கள் டில்லியில் தங்கினார். வீட்டில் யமுனை நோய்வாய்ப்பட்டிருந்

தாள். ஜலதோஷமும் இருமலும் உண்டாகிப் பின்னர் நிமோனியாவில் கொண்டுவிட்டிருந்தது. நவலும் வித்யாவும் அவளுடைய அறைக்குச் சென்றனர். நல்ல ஜுரம். யமுனா வேதனையால் கண்களை மூடியவாறு முனகிக் கொண்டிருந்தாள். ருக்மிணி பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ஜ்வாலா பிரஸாத் டாக்டரைக் கூப்பிடப் போயிருந்தார். ருக்மிணி சொன்னாள்: "அம்மா, நவலும் வித்யாவும் லாகூரிலிருந்து திரும்பி வந்துவிட்டனர்."

யமுனா கண்ணைத்திறந்தாள். அவளுக்கு ஒருவகையில் சாந்தி கிடைத்தது போல் தோன்றியது. தீனமான குரலில் அவள் இருவரையும் பார்த்துச் சொன்னாள்: "திரும்பி வந்துவிட்டீர்களா? உங்களைத்தான் எதிர் பார்த்திருக்கிறேன் நான்! உங்களைப் பார்க்காமலேயே போய்விடுவேனோ என்று நினைத்துக்கொண்டிருந்தேன்."

வித்யா சொன்னாள்: "இல்லை பாட்டி, என்ன இப்படியெல்லாம் பேசுகிறாய், நீ குணமடைந்துவிடுவாய் பாரேன்."

யமுனா ஒரு வறண்ட சிரிப்பு சிரித்தாள்.

"யாருக்குத் தெரியும் மகளே! இங்கே என் தலை மாட்டில் வந்து உட்கார். என் தலைமேலே கையை வைத்துப்பார்! அம்மா! எவ்வளவு இதமாகயிருக்கிறது." யமுனா கண்களை மூடிக்கொண்டாள்.

ருக்மிணி நவலுடைய கையைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்தாள். "கேட்டாயா நவல், விந்தேசுவரீ பிரஸாத் சித்தேச்வரிக்கு இரண்டாவது கல்யாணம் செய்யப்போகிறாராம். ஜனவரி மாதம் இருபத்தெட்டாம் தேதி கல்யாணம். அம்மா, என்று இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து நோயாகப் படுத்துவிட்டாள். நவல், இதெல்லாம் என்ன தலைவிதியோ? அவர்களோடு எப் படியாவது சமாதானம் செய்துகொள்ள முடியாதா?"

நவல் வருத்தமடைந்தான். சிறிது யோசித்துவிட்டு அவன் சொன்னான்: "என்ன சமாதானம் அம்மா! நடக்க வேண்டியது நடந்தது. நடப்பதெல்லாம் ஏதோ நன்மைக்காகவே நடக்கிறது."

"ஐயோ கடவுளே! இதென்னடா சொல்லுகிறாய் நீ? இந்தப் பெண்ணுக்கு வாழ்வு இவ்வளவுதானா? யாரடா இவளைக் காப்பாற்றுவார்கள்?"

"இவளைக் கடவுள் காப்பாற்றுவார்! இவள் தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ளும் அளவுக்குக் கடவுள் இவளுக்கு சக்தி கொடுப்பார்! தாத்தா எங்கே?"

டாக்டரை அழைத்துவரப் போயிருக்கிறார். அவருக்குக் கல் நெஞ்சு! மலைமலையாக விபத்துகள் வந்து விழுகின்றன அவர்மேல். ஆனால் மௌனமாக இமைகொட்டாமல் கடமையைச் செய்துகொண்டு போகிறார்! அம்மாவின் உடல் நிலையில் துளிக்கூட குணம் கிடையாது! நான்கு ஐந்து நாளாகத் தூங்கவில்லை. சரி போ, பீக்கூவை விட்டு வென்னீர் போடச் சொல்லி, குளி. அலுத்துக் களைத்துப்போய் வந்திருக்கிறாய்!"

யமுனா கண்ணை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டிருந் தாள். அவள் தூங்குவதுபோலத் தோன்றியது. ருக்மிணி வித்யாவிடம் சொன்னாள்: "போய் குளி, நான் உட்கார்ந் திருக்கிறேன்."

யமுனா கண்ணைத்திறந்து "என் குழந்தை இன்னும் கொஞ்சம் நேரம் என் கிட்டேயே உட்கார்ந்திருக்கட்டும் என்றாள். யமுனாவின் கண்களில் கண்ணீர் நிரம்பியது. ருக்மிணி பார்த்தாள். "குழந்தே நாங்கள் ரொம்ப அநியாயம் செய்துவிட்டோம் உனக்கு! என்னை மன்னித்துவிடு பெண்ணே! இல்லாது போனால் நான் நிம்மதியாகக் கண்ணை மூட முடியாது. பெரிய தவறு நேர்ந்துவிட்டது என்னால்! என்னை மன்னித்துவிட்ட

தாகச் சொல்."

வித்யா ஆச்சரியத்தோடு தன் அம்மாவைப் பார்த்தாள். "என்ன விஷயம் அம்மா! பாட்டி இதெல்லாம் என்ன சொல்லுகிறுள் ?"

ருக்மிணி தலையைக் குனிந்துகொண்டு சொன்னுள்: "சித்தேசுவரி இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ளப் போகிருள். ஜனவரி இருபத்தெட்டாம் தேதி கல்யாணம்." வித்யாவின் முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது. "நிஜமாகவா அம்மா! அப்படியானுல் என்னுடைய கட்டு அறுபட்டுவிட்டது. விடுதலை கிடைத்துவிட்டது." இதைச் சொல்லி வித்யா யமுனுவின் கையைப் பிடித்துக் கொண்டாள். "பாட்டி, இது மிகவும் நல்ல செய்தி. எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது, என் கட்டுகள் அறுபட்டுவிட்டன. கடவுள் காப்பாற்றினுர். இதில் வருத் தப்பட என்ன இருக்கிறது பாட்டி ?"

யமுனு பரிவு நிறைந்த குரலில் சொன்னுள்: "உனக்குப் புரியாது பெண்ணே; அதிலும் இந்த வயதில் புரியாது! ஐயையோ! இதெல்லாம் எப்படி நடந்துவிட்டது ?"

"பாட்டி! ஒன்றும் புதிதாக நடந்துவிடவில்லை! எல்லாம் தினந்தோறும் நடக்கிறதுதான். யார் குற்றமும் இல்லை; இது கடவுளுடைய லீலை! எனக்கு இதைக் கேட்டு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா ?"

யமுனு முனகினுள். "பெண்ணே! உன் வாயாலே சொல்லிவிடு என்னை மன்னித்துவிட்டாய் என்று!"

ருக்மிணி வித்யாவிடம் சொன்னுள்: "ஏன் சொல்ல மாட்டேன் என்கிருய் வித்யா ? அம்மாவுக்குச் சாந்தி கிடைக்கும் !"

வித்யா யமுனுவின் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு சொன்னுள்: "பாட்டி, கடவுள் இதற்கெல் லாம் சாட்சி; நீங்கள் செய்ததெல்லாம் என்து நன்மைக்

காகவே செய்தீர்கள். எனக்காக வீட்டையே அழித்துக் கொள்ளும் அளவிற்குச் செய்தீர்கள். உங்களை அறியாமல் நீங்கள் எனக்கு ஏதாவது தீமை செய்திருந்தால் நான் உங்களை மன்னித்துவிட்டேன். நீ குணமடைந்து விடவேண்டும் பாட்டி. இதுதான் என் பிரார்த்தனை.''

யமுனைவுக்கு ஆவேசத்தில் விக்கல் எடுத்து மூர்ச்சை அடைந்துவிட்டாள். அவ்வளவுதான். மூர்ச்சை தெளியவில்லை.

ஞானபிரகாஷ் டில்லியிலிருந்து பம்பாய் சென்று விட்டார். அவர் மீண்டும் அலாகாபாத் வந்தடைந்த போது இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. நவல் அறையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தான். தாங்கா வண்டியின் சத்தத்தைக் கேட்டு அவன் வெளியே வந்தான். சாமான்களை இறக்கி வைத்தான். தாங்காக்காரனை அனுப்பிவிட்டு ஞானபிரகாஷ் நவலைக் கேட்டார்: ''வீட்டில் இவ்வளவு நிசப்தம் ஏன் நவல்? நீ ஏன் வருத்தமாக இருக்கிறாய்?''

நவல் மெல்லிய குரலில் சொன்னான்: ''ஞானு தாத்தா, பாட்டி போய்விட்டாள். இன்று எட்டாம் நாள்.''

''என்ன சொன்னாய்? அண்ணி போய்விட்டாளா? அவளுக்கு என்ன செய்தது?'' ''நாமெல்லாரும் லாகூர் போன பிறகு அவளுக்கு நிமோனியா வந்திருக்கிறது. நாங்கள் திரும்பி வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் போலும். நாங்கள் வந்த அன்றே இரவு இறந்து விட்டாள்.''

ஞானபிரகாஷ் சாமான்களைத் தன் அறையில் கொண்டு வைக்கச் செய்தார். பிறகு அவர் நவலுடன் ஜ்வாலா பிரஸாதின் அறைக்குள் போனார். ஜ்வாலா பிரஸாத் தரையில் கம்பளியைப் போர்த்துக்கொண்டு படுத்திருந்தார். இன்னும் பத்தாம் நாள் சடங்கு முடியவில்லை. அவருக்குத்

தூக்கம் வந்தது. ஆனால் ஆழ்ந்து உறங்கவில்லை. ஞானபிரகாஷும் நவலும் வந்த காலடி ஓசையில் அவர் தூக்கம் கலைந்து. ஞானபிரகாஷைப் பார்த்து ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "ஞானு, நீ மிகவும் தாமதம் பண்ணிவிட்டாய்! உன் அண்ணி போய்விட்டாள்! இதை எல்லாம் அவளால் தாங்க முடியவில்லை. நான் எவ்வளவோ சொன்னேன், எவ்வளவோ தைரியமூட்டினேன். ஆனால், முடிவில் அவள் தைரியம் இழந்து விட்டாள்!"

ஞானபிரகாஷ் சிறிது தள்ளி உட்கார்ந்துகொண்டார், மௌனமாக! அவரால் ஒன்றும் பேச முடியவில்லை!

"சித்தேசுவரிக்கு இரண்டாம் கல்யாணம் நடைபெறுகிறது என்ற செய்தி வந்தது. இது அவளுக்குப் பெரிய அதிர்ச்சி. அன்று விழுந்தவள் மீண்டும் எழுந்திருக்கவே இல்லை!" ஜ்வாலா பிரஸாதின் குரல் மங்கியது. சிறிது நேரம் இருந்து ஞானபிரகாஷ் சொன்னார்: "அண்ணா! தைரியமாக இருங்கள்! நீங்கள் தைரியம் இழந்துவிட்டால் ஒன்றுமே நடக்காது!"

ஜ்வாலா பிரஸாத் தன் வருத்தத்தை பலவந்தமாக அடக்கிக்கொண்டார். "தெரியும் ஞானு. எனக்கு எல்லாம் தெரியும். தைரியமாக இருந்துதான் ஆக வேண்டும். ஆனால், வாழ்க்கை நெடுக இருந்த துணை போய்விட்டது. கடவுள் அவளுக்குச் சாந்தி அளிப்பாராக!"

அவருடைய சொற்களில் எவ்வளவு வேதனை நிரம்பியிருந்தது! அறுபத்தேழு வயதுக் கிழவர்! முகத்தில் சுருக்கங்கள்! எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைப் பார்த்தவர்!

"ஞானு, யமுனா குடும்ப வீழ்ச்சியைப் பார்த்தாள், உடைந்துவிட்டாள். இந்தத் தாழ்வுக்குப் பிறகு உயர்ச்சி

வரும் என்பதை அவளால் அறிய இயலவில்லை." ஏதோ திடீரென்று ஆவேசம் கொண்டவர்போல் அவர் சொன்னார்: "நீ ஸ்டேஷனிலிருந்து நேராக வருகிறாய்போலும்! போ, போய் முகத்தைக் கழுவி ஆடை மாற்றிக்கொள். நவல், ஞானுவுக்கு ஏதாகிலும் சாப்பாடு இருக்கிறதா? இல்லாவிட்டால் உன் அம்மாவை எழுப்பிசெய்யச்சொல்!"

"வித்யா பூரி செய்துகொண்டிருக்கிறாள் தாத்தா, நீங்கள் இனி தூங்குங்கள்." நவல் எழுந்திருந்தவாறு சொன்னான்: "வாருங்கள் ஞானு தாத்தா, வென்னீர் காய்ந்திருக்கும். குளிக்கவேண்டும்போல் இருந்தால் குளித்துவிடுங்கள். அதற்குள் சாப்பாடு தயாராகிவிடும்."

காலையில் ஞானபிரகாஷ் தூங்கி எழுந்தபோது ஜ்வாலா பிரஸாத் தன் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு கங்கா ஸ்நானம் செய்யப் போய்க்கொண்டிருந்தார். அன்று "சுத்தி." ஞானபிரகாஷும் அவர்களோடு கங்கையில் ஸ்நானம் செய்யப் போனார். அனைவரும் மத்தியானம் திரிவேணியிலிருந்து திரும்பி வந்தனர்.

மாலை நேரத்தில் ஜ்வாலா பிரஸாத் உலாவப் புறப்பட்டார். நவலும் ஞானபிரகாஷும் டீ குடிக்க உட்கார்ந்தனர். வித்யாவும் அங்கேயே இருந்தாள். டீ குடிக்கும் போது ஞானபிரகாஷ் அவளைப் பார்த்தார். அவள் ஒன்றுமே பேசவில்லை. ஞானபிரகாஷ் புன்னகை புரிந்தார். "வித்யா, நீ என்ன செய்வதாக உத்தேசம்? உனக்கு விடுதலை கிடைத்துவிட்டது!"

வித்யாவின் முகத்தில் ஒளி வீசியது. "உண்மையாகவா தாத்தா? எனக்கு விடுதலை கிடைத்ததாக நீங்களும் நினைக்கிறீர்களா?"

"ஆம் வித்யா, உனக்கு விடுதலை கிடைத்துவிட்டது, குறைந்தது, அந்தப் பிசாசுகளிடமிருந்து. இதனால் நீ மகிழ்ச்சியடைய வேண்டும். ஆனால், நீ வருத்தமுற்றிருக்

கிருய். இது சரியல்ல."

"என்ன செய்வது ஞானு பாப்பா. என் காரணமாகத் தான் பாட்டி இறந்துவிட்டாள்." ஞானபிரகாஷ் புன் முறுவல் செய்தார். "யாரும் மற்றவர் காரணமாக இறந்துவிடமாட்டார்கள் வித்யா. ஒருவன் இறக்க வேண்டிய தருணம் வந்ததும் இறந்துவிடுகிருன். என்றைக்காவது உன் தாத்தாவும் இறந்துவிடத்தான் போகிருர். நானும் போய்விடுவேன். நீயும்தான் என்றைக்காவது இறந்துபோவாய். நடந்துவிட்டதைத் தடுக்க இயலாது நடக்கப்போகிறதையும் தடுக்க முடியாது. நீ என்ன செய்ய விரும்புகிருய் என்று சொல். காங்கிரஸ் வேலை செய்கிருயா? பம்பாயிலிருந்து வரும் போது இதைத்தான் யோசித்துக்கொண்டிருந்தேன். லாகூரில், இந்தக் கிளர்ச்சியில் எத்தனை பெண்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்று நீதான் பார்த்தாயே!"

வித்யா சிறிது யோசித்தாள். பிறகு தலையசைத்துச் சொன்னாள்: "இல்லை தாத்தா, இதெல்லாம் என்னல் முடியாது."

"உன்னல் முடியாதா! பின் என்னதான் முடியும்? வீண் பயத்தை நீ விட்டொழிக்க வேண்டும்."

வித்யா சிறிது சங்கோசத்தோடு சொன்னாள்: "தாத்தா, நான் ஆண்களுடைய மத்தியில் இருந்து கொண்டு வேலை செய்வது இயலாது. ஆண்களிடம் வெட்கமோ அல்லது அவர்களிடம் பயமோ என்பதல்ல. உண்மை என்னவென்ருல், எனக்கு என்னிடமே பயமாக இருக்கிறது. நான் மிக்க கடுமையான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்." வித்யாவின் குரலில் அளவற்ற சோகம் இருந்தது.

ஞானபிரகாஷின் உள்ளத்தில் வேதனை தோன்றியது. வித்யாவின் சாந்தமயமான, அடக்கம் ததும்பிய, சாத்து

விகமான எல்லையிலாத அழகை அவர் பார்த்தார்! தெய்வச் செய்கைகள் எவ்வளவு விபரீதமானவை! வித்யா வலியச் சென்று வைதவ்யத்தை ஏற்றுக்கொள்ள நேர்ந்ததே! ஞானபிரகாஷ் சொன்னார்: "நீ சொல்வது சரிதான் பெண்ணே! இங்கு நகரத்தில் "பெண் கல்வி சதனம்" என்று ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. நான் அதன் மானேஜிங் கமிட்டியில் இருக்கிறேன். ஒரு ஆசிரியை ராஜினமா கொடுத்துவிட்டாள். மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து அந்த இடம் காலியாகிவிடும். ஒரு மனுப்போடு. ஆசிரியை வேலை செய்ய முடியுமல்லவா?"

"ஆம் தாத்தா, ரொம்ப சந்தோஷம். சீக்கிரமாக அந்த வேலைக்கு ஏற்பாடு செய்யுங்கள். வேலையில் என்னுடைய மனதை ஈடுபடுத்திவிடலாம், பொழுதும் போகும்."

ஜனவரி இருபத்தாறும் தேதி நாடு முழுவதிலும் "சுதந்திரதினம்" கொண்டாடப்படுவதாக இருந்தது. இதுவரை காங்கிரஸின் கோரிக்கை குடியேற்ற நாட்டுச் சுதந்திரம். ஆனல் இப்போது ஒரு மாறுதல்! சுயராஜ்யத்தின் பொருட்டு போராடவேண்டியதுதான் என்ருல் பூர்ண சுயராஜ்யம் பெறும்பொருட்டு ஏன் போராட்டம் நடத்தக்கூடாது? கல்கத்தா காங்கிரஸில் முதல் முறையாக சுயராஜ்யத்தைப் பற்றிய தீர்மானம் நிறைவேறியது. லாகூர் காங்கிரஸில் இந்தத் தீர்மானத்தைச் செயல் முறையில் கொண்டுவர நிச்சயம் செய்யப்பட்டது. சுதந்திர அறிக்கை தயார் செய்யப்பட்டது. ஜனவரி இருபத்தாறும் தேதி நாடெங்கும் எல்லாரும் சுதந்திர விரதத்தை மேற்கொள்ளவேண்டும். ஞானபிரகாஷ் சுதந்திரதினத் தீர்மானத்தை விநியோகிப்பதிலும் கொண்டாட்ட ஏற்பாடுகள் செய்வதிலும் முனைந்திருந்தார். நவலுக்கும் இந்த வேலையில் ஞானபிரகாஷுக்கு உதவியாக இருப்பது மகிழ்ச்சிகரமாக இருந்தது.

யமுனாவின் பதின்மூன்றாம் நாள் சடங்குகளை முடித்துக் கொண்டு ஜ்வாலா பிரஸாத் கீதை படிப்பதில் ஈடுபட்டார். இதில் வித்யா அவருக்கு உதவி புரிந்துவந்தாள். நவல் நாள் முழுவதும் வேலை காரணமாக வெளியே சென்றுவிடுவான். பகலில் அவன் பல்கலைக்கழகத்துக்குப் போவான். மீதி நேரத்தை அவன் காங்கிரஸ் கமிட்டி ஆபீஸில் கழித்தான். குழந்தைகள் பள்ளிக்குச் சென்று விடுவார்கள். ருக்மிணி வீட்டு வேலையை கவனித்துக் கொள்ளுவாள்!

அன்று மாலை ஜ்வாலா பிரஸாத் வரவேற்பறையில் அமர்ந்துகொண்டு வித்யா கீதை படிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது போர்டிகோவில் ஒரு தாங்கா வந்து நிற்பது தெரிந்தது. "போய் பார், யார் வந்திருக்கிறார்கள்?" வித்யா வராந்தாவில் வந்து பார்த்தாள். விந்தேசுவரீ பிரஸாத் தாங்காவிலிருந்து இறங்கி வராந்தாவில் ஏறிக்கொண்டிருந்தார். வித்யா அமைதியாகச் சொன்னாள்: "தாத்தா வரவேற்பறையில் இருக்கிறார், வாருங்கள்!"

விந்தேசுவரீ வித்யாவின் வார்த்தைக்கு ஒரு பதிலும் கூறவில்லை. ஒரு கடூரமான முகபாவத்துடன் அவர் வரவேற்பறையில் நுழைந்தார்.

ஜ்வாலா பிரஸாத் எழுந்திருந்து விந்தேசுவரீ பிரஸாதை வரவேற்றார். "வாருங்கள், உட்காருங்கள்!"

விந்தேசுவரீ பிரஸாத் மௌனமாக நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். ஜ்வாலா பிரஸாத் வித்யாவிடம் சொன்னார்: "வித்யா, பீக்கூவிடம் சொல். டீ தயார் செய்யட்டும்!"

"வேண்டாம், டீ சாப்பிட்டுவிட்டுத்தான் கிளம்பினேன். உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும். அதற்காகவே உங்களிடம்

வந்தேன். இவளை அனுப்பிவையுங்கள்."

ஜ்வாலா பிரஸாத் வித்யாவைப் பார்த்தார். "பெண்ணே, கொஞ்ச நேரம் நீ உள்ளே போ!"

"வித்யா எழுந்து நின்ருள். பிறகு சிறிது யோசித்து விட்டு அவள் சொன்னுள்: "பேச்சு என்னைப்பற்றித் தான் இருக்கும். ஆகையால் நான் இங்கு இருப்பது மிகவும் அவசியம். இவர் என்ன சொல்ல வந்திருக்கிருர் என்று நானும்தான் கொஞ்சம் கேட்கிறேனே!"

"விந்தேசுவரியின் குரல் கடுமை பெற்றது. உன்னைப் பற்றி எங்களுக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. நான் பாபூ ஜ்வாலா பிரஸாதிடம் பேசவேண்டும். நான் உன்னுடைய முகத்தில் விழிக்க விரும்பவில்லை."

வித்யா துடிதுடிப்புடன் சொன்னுள்: "என்னைப் பற்றி விஷம் கக்குவதாக இருந்தால் அதை என் எதிரிலேயே கக்கிவிடுங்கள். நான் அதைப் பொறுத்துக் கொள்ளுவேன். நீங்கள் இந்த விஷத்தைக் கொண்டு மற்றவர்களைக் கொல்லாதீர். உங்கள் விஷம் பாட்டியைக் கொன்றேவிட்டது."

இப்போது ஜ்வாலாபிரஸாத் விந்தேசுவரீ பிரஸாதிடம் சொன்னுர்: "வித்யாவும் கூட இருக்கட்டும். பேச்சு அவளுடைய தலையெழுத்தைப் பற்றியது. தவிரவும், வித்யா விவரம் தெரியாத சிறு குழந்தையல்ல. தன்னுடைய நன்மை தீமையை அறிந்துகொள்ளக்கூடியவள். என்னைப்பற்றி என்ன, கடவுள் எப்போது என்னை இந்த உலகத்திலிருந்து எடுத்துச் செல்வாரோ? ஏதோ அமிருதம் குடித்துவிட்டு வரவில்லையே நான்!"

"சரி, உங்கள் இஷ்டப்படியே!" குத்தலாக விந்தேசுவரீ பிரஸாத் சொன்னுர்: "அப்படியானுல் இவளும் கேட்டுக்கொள்ளட்டும். நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அடுத்த வாரம் சித்தேசுவரீக்குக்

கல்யாணம்."

"ஆமாம், இது சம்பந்தமாக உங்கள் கடிதம் வந்தது. ஹிந்து லாவின்படி சித்தேசுவரிக்கு எத்தனைக் கல்யாணம் வேண்டுமானாலும் செய்துகொள்ள உரிமையுண்டு. இதற்குமேல் நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?"

"இவள் இந்தக் கல்யாணத்தில் கலந்துகொள்ளுவாளா? இதற்குப் பிறகு சித்தேசுவரியுடன் வாழத் தயாரா?"

ஜ்வாலா பிரஸாத் சொல்லப்போவதற்கு முன்னரே வித்யா சொன்னாள்: "கல்யாணத்திற்கு முன்னாலும் சரி, பிறகானாலும் சரி, உங்கள் வீட்டில் இருப்பது நரகத்தில் இருப்பதைவிட கோரமானது!"

விந்தேசுவரிக்குக் கோபம் பொங்கி வந்தது. "நீங்கள் இந்த துஷ்டப் பெண்ணினுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறீரா? இனி பேசிப் பயனில்லை. இவள் இனிமேல் எங்களிடமிருந்து எவ்விதமான ஜீவனாம்சத்துக்கும் உரிமை உடையவளல்ல. உங்களுக்கு இதைச் சொல்லி விட்டுப் போகவே நான் வந்தேன். முக்கியமாக ஞான பிரகாஷ் ஸாஹப் அவர்களுக்கு. அவர்தான் பெரிய சட்ட நிபுணராக இருக்கிறாரே"

"உங்கள் பாவ சம்பாத்தியத்தில் ஒரு செப்புக் காசுகூட எனக்கு வேண்டாம். இதில் தாத்தாவுடனோ அல்லது ஞானு தாத்தாவுடனோ பேசுவதற்கு ஒன்றும் இல்லை. வேண்டுமானால் நான் எழுதிக்கொடுக்கிறேன் உங்களுக்கு."

"கேட்டீரா? இனிமேல் என்னைக் குறை கூறாதீர்கள். நாங்கள் இவளைப் பராமரிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இவள்தான் வர விரும்பவில்லை."

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "அதுதான் அவள் சொல்லிவிட்டாளே, உங்களிடமிருந்து அவள் எந்தவித

உதவியும் விரும்பவில்லையென்று."

விந்தேசுவரீ பிரஸாத் கைப்பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தார். "நாங்களும் இதைத்தான் எதிர்பார்த்தோம். ஆகவே, நான் கூடவே ஒரு காகிதம் தயார் செய்து கொண்டுவந்திருக்கிறேன். இதில் இவள் கையொப்பமிட்டுக் கொடுத்துவிடவேண்டும் எங்களுக்கு. இனிமேல் எப்போதும் இந்த விவகாரம் கோர்ட்டுக்குப் போகக்கூடாதென்று நான் நினைக்கிறேன். கோர்ட்டு வழக்கு ஏற்பட்டால் இரண்டு குடும்பங்களுக்கும் கெட்ட பெயர்தான் உண்டாகும்." இதைச் சொல்லி அவர் அந்தக் காகிதத்தை ஜ்வாலா பிரஸாதின் கையில் கொடுத்தார்.

ஜ்வாலா பிரஸாத் அதைப் படித்தார். பிறகு அவர் வித்யாவின் கையில் அதைக் கொடுத்துச் சொன்னார்: "எழுதியிருப்பது சரியாகத்தான் இருக்கிறது. இதைப் படித்துப்பார் அம்மா!"

வித்யா அதைப் படித்துவிட்டுச் சொன்னாள்: "இதைக் கொஞ்சம் திருத்தவேண்டும் தாத்தா! இதில் எழுதியிருக்கிறதே, நான் என் விருப்பத்தின் மேல் அவர்களுடைய குடும்பத்தை விட்டு விலகுகிறேன் என்று. அதற்குப்பதிலாக, இவர்களுடைய மனிதத்தன்மையற்ற நடத்தை காரணமாகவே நான் வருந்தமடைந்து இவர்களுடைய வீட்டை நானாகவே விட்டு வந்தேன் என்று எழுத விரும்புகிறேன்."

"அப்படி எழுத முடியாது. உன்னுடைய துஷ்ட சுபாவத்தினால் வாய்ச் சண்டை துடுக்கினால் நாங்கள் உன்னை வெளியேற்றினோம்." வித்யா கடுமையான குரலில் சொன்னாள்: "எழுதுகிறவள் நான்! நான் எது சரியென்று நினைக்கிறேனோ அதைத்தான் எழுதுவேன். காகிதம் வேண்டுமானால் நான் சொல்லுகிறபடி எழுதுங்கள். இல்லையென்றால் புறப்படலாம்."

ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "இந்தக் காகிதம் உங்களிடம் இருக்கப்போகிறது. நீங்களே இதை ஒரு வருக்குக் காட்டினாலோ, அல்லது கோர்ட்டில் கொண்டு போய் கொடுத்தாலோ அன்றி ஒருவருக்கும் தெரியப் போவதில்லை. இந்த நிலையில் இவள் இஷ்டப்படியே எழுதிக்கொள்ளட்டுமே."

விந்தேசுவரீ பிரஸாத் சிறிது யோசனை செய்தார். விஷயம் இவ்வளவு எளிதாக முடிந்துவிடுமென்று அவர் நினைக்கவில்லை. குரலைக் கொஞ்சம் தணித்துக்கொண்டு அவர் சொன்னார்: "இரண்டு குடும்பங்களினுடைய கௌரவத்தைக் காப்பாற்றவே இதையெல்லாம் செய்கிறேன். ஆகவே, இவள் விருப்பப்படியே எழுதட்டும்."

வித்யா அதில் தன் சொந்த வார்த்தைகளையும் சேர்த்து எழுதிக் கையெழுத்திட்டு ஜ்வாலா பிரஸாதின் கையில் கொடுத்தாள். ஜ்வாலா பிரஸாத் அதைப் படித்தார். "சரி! இந்தாருங்கள், பாபூ விந்தேசுவரீ பிரஸாத்! உங்கள் காரியம் இவ்வளவு சுலபமாக எவ்விதச்சிக்கலும் இல்லாமல் முடிந்துவிட்டது. இனிமேலாவது ஒருகப் டீ குடியுங்கள்!"

விந்தேசுவரீ அந்தக் காகிதத்தைத் தம் பையில் வைத்துக்கொண்டார். "வேண்டாம், இனி இந்த வீட்டோடு எனக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது." பிறகு வித்யாவின் பக்கம் திரும்பிச் சொன்னார்: "இதை நினைவில் வைத்துக்கொள். ஹிந்து சட்டப்படி விவாக ரத்து கிடையாது. நீ வாழ்க்கை முழுவதும் சித்தேசுவரீயின் மனைவியாகத்தான் இருப்பாய். எப்போதாவது உன் நடத்தை குறைவைப்பற்றிய செய்தி கிடைத்தால் உன்னை ஜெயிலுக்கு அனுப்பி வைப்போம்."

வித்யாவினால் விந்தேசுவரீ பிரஸாதின் இந்த வார்த்தையைப் பொறுக்கமுடியவில்லை. காலிலிருந்து

செருப்பைக் கழற்றிக்கொண்டு அவள் விந்தேசுவரீ பிரஸாதை நோக்கிப் பாய்ந்தாள். "ராட்சசன்" என்று கத்தினாள்.

விந்தேசுவரீ பிரஸாத் அறையிலிருந்து வெளியே குதித்து ஓடினார். ஜ்வாலா பிரஸாத் வித்யாவைத் தடுத்து நிறுத்தினார். வித்யா அவருடைய கையை உதறி விட்டு விந்தேசுவரீ பிரஸாதின் பின்னால் ஓடினாள். ஜ்வாலாபிரஸாத் வித்யாவைத் தொடர்ந்தார். இதற்குள் விந்தேசுவரீ தாங்காவில் ஏறி உட்கார்ந்துவிட்டார். அவர் தாங்காக்காரனிடம் சொன்னார்: "வேகமாக ஓட்டு. ஓட்டு."

தாங்கா கிளம்பிப் போயிற்று. வித்யா நின்று விட்டாள். "கோழை!" என்று கூறி அழத் தொடங்கினாள்.

7

1930-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதியன்று மகாத்மா காந்தி லார்ட் இர்வினுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். அதனால் நாடு முழுவதிலும் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதுவே சத்தியாக்கிரகப் போராட்டத்தின் அறிக்கைப் பத்திரம்! எல்லா முயற்சிகளும் தோற்றுவிட்டன. பிரிட்டிஷ் சர்க்கார் சுயராஜ்யம் அளிக்கச் சிறிதேனும் சித்தமாக இல்லை. மகாத்மா காந்திக்கு சத்தியாக்கிரகம் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அந்தக் கடிதத்தில் நல்லெண்ணம் இருந்தது. நம்பிக்கை மனப்பான்மை இருந்தது.

அத்துடன் அசையா உறுதியும் இருந்தது.

நவலுடைய படிப்பு செம்மையாக நடைபெற்று வந்தது. ஆனல், அன்றுபல்கலைக்கழகத்தில் அவன் மனம் படிப்பில் செல்லவில்லை. புத்தகத்தை மூடி வைத்துவிட்டு காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தை நோக்கிச் சென்றுன். ஞான பிரகாஷ் அலாகாபாதில் சத்தியாக்கிரகம் செய்ய ஒரு திட்டம் வகுத்துக்கொண்டிருந்தார். நவலைப் பார்த்ததும் அவர் சொன்ஞர்: "நவல், தருணம் வந்துவிட்டது. யுத்தம் தொடங்கப்போகிறது."

"ஆம் ஞானு தாத்தா, உங்களுக்கு எப்போது ஓய்வு கிடைக்கும்?" "இன்று நாள் முழுவதும் இங்கு வேலை இருக்கும். சாயங்காலம் ஆறு-ஏழு மணிக்கு இங்கிருந்து கிளம்ப முடியும் என்று நினைக்கிறேன். மாலையில் வீட்டுக்கு வந்தே டீ குடிக்கிறேன். ஆம், இன்று "பெண்கள் கல்வி சதன"த்தின் கூட்டம் நடைபெற்றது. வித்யாவுக்கு வேலை நியமனம் ஆகிவிட்டது, மார்ச் 15-ந் தேதியிலிருந்து. மாலை வந்து சொல்கிறேன்."

"நல்லது தாத்தா, இன்று பல்கலைக் கழகத்தில் படிப்பே ஓடவில்லை. நான் வீட்டுக்குப் போகிறேன்."

நவல் அங்கிருந்து கிளம்பிவிட்டான். மனதில் ஒரு மகிழ்ச்சி! வித்யாவுக்கு வேலை கிடைத்துவிட்டது. இனி அவள் சுதந்திரமாக வாழ வழி பிறந்துவிட்டது. ஒரு பெரிய பிரச்னையும் தீர்ந்தது. வித்யாவுக்கு இந்த சந்தோஷச் செய்தியை அறிவிக்க அவன் அவசர அவசர மாக வீட்டை அடைந்தான். வித்யா ஜ்வாலா பிரஸாதுக்கு இராமாயணம் படித்துச் சொல்லிக்கொண்டிருந் தாள். நவல் வந்ததும் வித்யாவிடம் சொன்ஞன்: "வித்யா, உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி. இனிப்பு கொண்டுவந்து கொடு! ஞானத் தாத்தா சொன்ஞர்— மார்ச் 15-ந் தேதியிலிருந்து "பெண்கள் கல்வி சதன"த்

தில் உனக்கு நியமனம் ஆகிவிட்டதாம்!"

"உண்மையாகவா!" பிறகு தனது இந்தப் பரபரப்பைக் கண்டு தானே வெட்கமடைந்துவிட்டாள்போலும். "தாத்தா. இந்தப் பாட்டைப் படித்து இன்று ராமாயணத்தை நிறுத்துகிறேன்."

ஜ்வாலா பிரஸாத் புன்னகை புரிந்தார். "சரி அம்மா, இனி உனக்கு இதில் மனம் செல்லாது. கடவுள் கிருபையால் உனக்கு வேலை கிடைத்துவிட்டது. ஆகவே, மனமார பகவானைத் துதிக்க வேண்டும்."

வித்யா ராமாயணத்தை முடித்துவிட்டு நவலைப் பார்த்தாள். "ஆமாம் அண்ணா, என்மேல் பகவான் ராமச்சந்திரனுக்குக் கிருபை இருக்கிறது. பதினைந்தாம் தேதியிலிருந்து நான் வேலைக்குப் போகவேண்டியிருக்கும்."

ஜ்வாலா பிரஸாத் ஒரு பெருமூச்செறிந்து தனக்குத் தானே சொல்லிக்கொள்ளுவதுபோல் கூறினார்: "இந்த நாளையும் பார்க்கவேண்டும் என்று என் தலையில் எழுதியிருந்ததே! குடும்பப் பெண் வெளியே சென்று வேலை பார்ப்பதா, பிறருக்கு அடிமைத் தொழில் செய்வதா!" நவல் இதைக் கேட்டு மௌனமாக இருந்தான். ஆனால் வித்யாவால் இருக்க முடியவில்லை. "தாத்தா, அடிமைத் தொழிலிலிருந்து மனிதனுக்கு எப்போது விடுதலை? வீட்டில் புழுங்கி புழுங்கிச் சாகவேண்டும். தன்னைத் தானே பலவந்தமாக அடக்கிக்கொண்டு கிடக்க வேண்டும்—இது அடிமைத்தனம் இல்லையா?"

ஜ்வாலா பிரஸாத் தலையைக் குனிந்துகொண்டு கூறினார்: "ஆம் அம்மா, நீ சொல்வதும் சரிதான்! ஆனால் வீடு என்றால் அங்கே அன்பு என்று ஒன்று இருக்கிறதல்லவா!"

வித்யாவின் குரல் கடூரமாகிவிட்டது. "அன்பா! என்ன அன்பு? யாரைப்பற்றிய அன்பு? பயங்கரமான

வெறுப்பில் சிக்கித் தவிக்கவேண்டியிருந்தது நான்! அந்த பணப்பிசாசுகளுக்கு நான் பிறந்த குடும்பத்தை ரத்தம் உறிஞ்சி அழித்த அந்தப் பிசாசுகளுக்கு என்னிடம் என்ன அன்பு இருக்கக்கூடும் சொல்லுங்கள்!"

"உனக்குப் புரியாது அம்மா! உலகத்தில் தனிமை என்பது மிகப் பயங்கரமானது; இந்தத் தனிமையைப் போக்கிக்கொள்ளவே குடும்பம் என்று ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்."

வித்யா சிரித்தாள். "தாத்தா! நீங்கள் இருக்கிறீர்கள். என் அண்ணன் இருக்கிறான். அம்மா இருக்கிறாள். பிறகு இந்த உலகம் முழுவதும் இருக்கிறது. இவ்வளவு பெரிய குடும்பம் இருக்க நான் எதற்குக்கவலைப்படவேண்டும்? என்ன அண்ணா, நீ என்னை உன்னுடன் வைத்துக் கொள்ளுவாய் அல்லவா? உன்னிடம் எவ்வளவு அன்பு கொண்டுள்ளேனோ என் அண்ணியிடமும் அவ்வளவு அன்பு கொண்டிருப்பேன்! உன் குழந்தைகளைக் கண்ணில் வைத்துக் காப்பாற்றுவேன்."

நவல் தன் கண்ணீரை அடக்கிக்கொண்டு சொன்னான்: "வித்யா! இதெல்லாம் என்ன உளறல்! நீ எனக்குத் தங்கைதான், சிறியவள்தான். ஆனால், அறிவில் துணிவில், என்னைவிடப் பெரியவள், உன்னை நான் ஆமோதிக்கிறேன்."

நவல் கடிகாரத்தைப் பார்த்தான். மூன்று மணிதான் ஆகி இருந்தது. வீட்டில் அவன் மனம் செல்லவில்லை. தன்னுள் ஒரு விசித்திரமான கொந்தளிப்பு உண்டாகியிருப்பதை அவன் உணர்ந்தான். அதற்குக் காரணம் என்னவென்று அவனுக்கு விளங்கவில்லை. வித்யா கேட்டாள்: "இன்று உனக்கு ஏதோ மன வருத்தம்? என்ன விஷயம்?"

எனக்கே புரியவில்லை. எதிலும் எனக்கு மனம் செல்ல

வில்லை!'' வித்யா எழுந்து நின்றாள். ''பல நாட்களாக உஷாவைப் பார்க்கவில்லை. மூன்று நாலு நாளாகவே அவளைப் போய் பார்க்கவேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். வா என்னோடு. அங்கே போனால் கொஞ்சம் சந்தோஷம் உண்டாகலாம்!"

உஷாவின் பெயரைக் கேட்டதும் நவல் திடுக்கிட்டான். கடந்த பல நாட்களாக அவன் உஷாவையே நினைக்கவில்லை. வித்யா சொல்லியதால் திடீரென்று அவன் மனம் உஷாவை நினைத்து மறுகியது. ஆனால், கவர்ச்சியோடுகூட ஒருவகை சந்தேகமும் அச்சமும் இருந்தது. இந்த சந்தேகத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும் விடுதலை பெறவே அவனுடைய மனம் உஷாவைப் பற்றி உதாசீனமாக இருந்துவிட்டதுபோலும்! இப்போது உஷாவைப் பற்றிய கவர்ச்சியோடுகூட பழைய சந்தேகமும், பயமும் எழுந்தன.

பயம், சந்தேகம்...இவற்றை விலக்கவேண்டும். இவற்றுடன் போராடவேண்டும். இவற்றைக் கண்டு பயந்து ஓடுவதால் பயனில்லை. நவல் சொன்னான்: "நல்லது, வித்யா, உன்னோடு வருகிறேன். ஆனால் சீக்கிரம் கிளம்பு. பத்து நிமிஷத்துக்குள் புறப்படு. ஆறு ஏழு மணிக்குள் திரும்பி வந்துவிடவேண்டும். ஞானு தாத்தா, இங்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவரிடம் நிறையப் பேசவேண்டியிருக்கிறது!"

அவர்கள் இருவரும் ராய்பஹாதூர் காமதாநாதின் வீடு சேர்ந்தபொழுது மணி நான்கு.

உஷா காலேஜிலிருந்து திரும்பி வந்துவிட்டாள். டீ குடிக்க ஆயத்தமாகிக்கொண்டிருந்தாள். நவலுடனும் வித்யாவுடனும் அவள் வெளி ரூமில் உட்கார்ந்து கொண்டு டீயை அங்கேயே வரவழைத்தாள்.

"என்ன உஷாராணீ, படிப்பு எல்லாம் எப்படி?"

"ஒரு வருஷம் ஐரோப்பியப் பிரயாணம் காரணமாக வீணுகிவிட்டது. என்கூடப் படித்த பெண்கள் எல்லாரும பி. ஏ. பைனல் வந்துவிட்டார்கள். எனக்கு ஒரே வெட்கம்!"

"இதில் வெட்கம் என்ன? நீதான் எந்தப் பரீட்சையிலும் "பெயில்" ஆகவில்லையே! அடுத்த வருடம் பி. ஏ. எழுதினுல் போயிற்று."

"ஆம், அடுத்த வருடம் பாஸ் செய்யத்தான் போகிறேன். ஆனுலும் ஏனே தெரியவில்லை, மனதில் ஒருவகையான பரபரப்பு! பொறுமையில்லை. இந்தப் படிப்புச் சங்கடம் எல்லாம் எதற்கு என்றும் தோன்று கிறது. நான் பி. ஏ. பாஸ் செய்து என்ன ஆகவேண்டும்? எங்கே போய் நான் வேலை செய்யவேண்டும்?"

நவல் சொன்னுன்: "வேலை செய்ய வேண்டியதில்லை என்பது சரிதான். ஆயினும் பி. ஏ. பாஸ் செய்துவிடு. வெறும் வேலைக்காகவா படிப்பு? உலகத்தில் சமூகக் கொள்கைகளும் வெகு வேகமாக மாறிக்கொண்டிருக் கின்றன. வருங்காலம் எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது."

உஷா பெருமூச்சு விட்டுச் சொன்னுள்: "ஆமாம், நவல் பாபூ, வருங்காலம் எப்படி இருக்கும் என்று அறிய முடியாது. பிறகு அவள் வித்யாவின் பக்கம் திரும்பினுள்—இந்தப்பேச்சை முடிப்பதற்காகபோலும்— "என்ன வித்யா, நீ எப்படி இருக்கிருய்?" "சந்தோஷமாகவே பொழுது போகிறது. சாப்பிடுகிறேன். படிக் கிறேன். சுகமாகத் தூங்குகிறேன்" வித்யா சிரித்துக் கொண்டே சொன்னுள். "ஆனுல், இந்த சந்தோஷ வாழ்க்கை ரொம்ப நாள் நடக்காது என்றே தோன்று கிறது. ஏனே ஒருவகை வெறுப்பு உண்டாகிறது. வாழ்க் கையில் உருப்படியாக ஏதாவது ஒன்று செய்ய

வேண்டும்.''

"ஏதாவது செய்ய வேண்டுமென்ருல் வேலைக்குக் குறைவில்லை."

''எனக்கு வாழ்க்கை நடத்த வேலை வேண்டும். ''பெண்கள் கல்வி சதன"த்தில் ஆசிரியை வேலை கிடைத்திருக்கிறது. மார்ச் மாதம் பதினைந்தாம் தேதியிலிருந்து வேலையில் சேர்ந்துவிடுவேன்.''

உஷா திடுக்கிட்டாள். ''அப்படியானல் நீ உத்யோகம் பார்க்கப்போகிருயா? ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்? மேலும் உனக்குத்தான் பிடிக்குமா?"

''நிச்சயம் பிடிக்கும். சொந்தக் காலில் நிற்கமுடிகிறதே என்று எனக்குப் பெருமிதமாகவே இருக்கிறது. யாருக்கும் பாரமாக இருக்கவில்லை, ஒருவரை அண்டி இருக்கவில்லை. மற்றவர்கள் சொல்லுவது இருக்கட்டும். அதைப் பற்றிக் கவலைப்படுதல் வீண். மற்றவர்கள் என் வாழ்க்கையில் ஏன் குறுக்கிடவேண்டும்? கொடுக்கவும் போவதில்லை, பறிக்கவும் போவதில்லை. பிறகு ஏன் குறுக்கீடு!"

நவல் வித்யாவின் பேச்சை ஆமோதித்தான். ''உஷா ராணீ! வித்யாவைப்பற்றிக் குறை சொல்பவர்கள், பழங் காலத்துப் பிராணிகளாக இருப்பார்கள். அழிந்து கொண்டிருக்கும் அந்தப் பழைய காலத்தவர்! புதிய உலகத்தினரைப் பொறுத்தமட்டில், அவர்கள் சரி என்றே நினைப்பார்கள்; வித்யாவிற்கு ஆதரவு காட்டுவார்கள். பெண்ணுக்கும் தன்னுடைய இருப்பு என்று சொந்தமாக உண்டு."

நவலுடைய இந்தப் பேச்சைக் கேட்டு உஷா ரோஷமடைந்தாள். ''சரியாகத்தான் சொல்கிறீர்கள் நவல் பாபூ! பெண்ணுக்கும் தனக்கென்று இடம் உண்டு, நிலை உண்டு, உங்களுடைய இந்தப் புதிய உலகத்தில்! அவள்

வீட்டை விட்டு வெளியே சென்று பிறரிடம் அடிமையாக இருக்கலாம், அவள் ஆண்களோடு தோளோடு தோள் நின்று பணியாற்றலாம். குடும்பம், குலம் என்ற வரம்பை உடைத்துவிடலாம்—உங்களுடைய புதிய உலகம் உங்களுக்கே பொருந்தும். ஆனால், நான் கூறுகிறேன், இந்தப் புதிய உலகம் தவறானது, இது நிலைக்காது! ஆண்-பெண், வலியவன்-எளியவன், ஏழை-பணக்காரன் என்ற வேறுபாடெல்லாம் அனாதிகாலமாகவே இருந்து வருகிறது. இனியும் அனந்தகாலம் வரை இருக்கும். நீங்கள் புகழ்ந்து பேசும் கொள்கைகள் எல்லாம் பொய்யானவை. பைத்தியக்காரத்தனமான கனவுகள். எனக்கு அவற்றில் நம்பிக்கை கிடையாது."

நவல் ஆச்சரியத்தோடு உஷாவைப் பார்த்தான். இவள், நான் காதலிக்கும் உஷாதானா? வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ளுபவன் அதிர்ஷ்டக்காரன் என்று கருதுகிற அந்த உஷாதானா? என்ன சொல்கிறாள், இவளுடைய படிப்பெல்லாம் வீணாகப் போய் விட்டதா? இவள் ஐரோப்பா போய் வந்திருக்கிறாள். சுதந்திர நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வந்திருக்கிறாள். அங்கு சென்று இவளுடைய கண்ணோட்டம் இன்னும் குறுகியதாகிவிட்டது போலும்! உஷா அவனுடைய எண்ணத்தை, கண்ணோட்டத்தை நன்கு புரிந்துகொள்வாளோ என்று மீண்டும் முயற்சித்தான். "உஷா, நீதான் ஐரோப்பாவுக்குப் போய் வந்திருக்கிறாய். அங்கு பெண்களுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கிறது என்பதை நீ பார்த்திருப்பாயே."

உஷா சிரித்தாள். ஆனால் அந்த சிரிப்பில் ஒரு இகழ்ச்சி மறைந்திருந்தது. "ஆம், நான் ஐரோப்பா போய்வந்திருக்கிறேன். அங்கு பெண்களை நான் பார்த்திருக்கிறேன். சில பெண்கள் உத்யோகம் செய்கின்றனர். ஏனெனில்,

உத்யோகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நம் நாட்டில் தாழ்ந்த சாதிப் பெண் களுக்குள்ளதுபோலவே அவர்களுக்கும் நிர்ப்பந்தம்! இந்தக் கட்டாயம் இல்லாதவர்கள் சந்தோஷமாக வாழ் கின்றனர். பிரியம்போல் செலவு செய்கின்றனர். அவர் களுக்கு வேலைக்காரர்கள் உண்டு. மிக ஆடம்பரமான கார்கள் இருக்கின்றன. பெரிய மாளிகைகளில் வசிக் கின்றனர். தியேட்டர், சினிமா, விருந்து, வேடிக்கை என்று எல்லா இடங்களுக்கும் போகின்றனர். வைரமும் முத்துமாக சொலிக்கின்றனர். விலை உயர்ந்த ஆடை அணிகின்றனர். அங்கு ஜனங்கள் சுதந்திரம், அடிமை என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில்லை. இதெல்லாம் பணக்காரன், ஏழை என்கிற வேறுபாடு உண்டு. ஏன் வித்யாராணி, நீ உன் வீட்டை விட்டு வராமல் இருந் திருந்தால் நீ உத்தியோகம் செய்வாயா? உனக்கு வேறு ஆதரவு இல்லாமல் போனதினால்தானே நீ உத்தியோகம் செய்ய முற்பட்டாய்?"

வித்யாவுக்கு உஷா இவ்வாறு சொன்னது பிடிக்க வில்லை. ஆனால் அதை மறுக்க அவளால் முடியவில்லை; மௌனமாக இருந்தாள்.

உஷா தொடர்ந்தாள். "பெண்ணின் சுதந்திரம் என் பதற்கு உலகத்தில் அடிமை செய்ய சுற்றிக்கொண்டிருப் பது என்றல்ல பொருள். பெண்ணுக்குச் சுதந்திரம் என்றால் அவள் வீட்டின் நாற்சுவர்களுக்கு வெளியே செல்ல இயலும், அவளுக்கு வீட்டின் கட்டுப்பாடு களினின்று விடுதலை கிடைக்கும், அவள் வெளியே போய் சுற்றிவர முடியும், பர்தாவிலிருந்து வெளி வந்து அவள் உயர் சமுதாய வட்டாரத்தில் பங்கு பெற முடியும் என்று அர்த்தம். இந்தச் சுதந்திரம் வேண்டுமென்றால் செல்வம் வேண்டும் நவல் பாபூ."

அந்த நேரத்தில் சீதாநாத் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார். "அடே நவல், நீயா! ரொம்பநாளுக்குப் பிறகு வந்திருக்கிறாய். தலையிலிருந்து கால் வரை கதர் அணிந்துகொண்டிருக்கிறாயே; முழுக் காங்கிரஸ்காரன் ஆகிவிட்டாய் என்று சொல்."

"உடையைப் பொறுத்தமட்டில் நான் காங்கிரஸ் காரன் ஆகிவிட்டேன். ஆனால் இன்னும் செயல் முறை அரசியலுக்கு வரவில்லை. அவ்வாறு வரும் எண்ணமும் கிடையாது. சீதாநாத் சொன்னார்: "அதுவும் வந்துவிடும் ஒரு நாள்." பிறகு உஷாவை நோக்கி "கௌரி அண்ணா விடம் சொல்லிவிடு, நான் கர்னல் கிரஹாமைப் பார்க்க வேண்டியிருப்பதால், காரை எடுத்துக்கொண்டு போகிறேன். நான் திரும்பி வர நேரமானால் அவர் "தாங்கா" வரவழைத்துக்கொள்ளட்டும்."

உஷா சொன்னாள்: "சின்னண்ணா, நீங்கள்தான் தாங்கா வைத்துக்கொண்டு போவதுதானே?"

"நான் பல இடங்களுக்குப் போகவேண்டும். தாங்கா வில் போனால் நேரமாகிவிடும். சரி, நான் கர்னல் கிரஹாமைச் சந்தித்துவிட்டு காரைத் திருப்பி அனுப்பிவிடுகிறேன், ஆறரை மணிக்குள்." பிறகு அவர் நவலிடம் சொன்னார்: "வருகிறாயா நவல், நான் சாந்தம் லேன்ஸுக்குப் போகிறேன். வழியில் உங்கள் இருவரை யும் இறக்கிவிட்டுப் போகிறேன்."

வித்யா சிறிது நேரம் உட்கார்ந்திருக்க ஆசைப் பட்டாள். ஆனால் நவல் எழுந்து நின்றுவிட்டான். "வருகிறோம் சீதாநாத். வித்யா வா, வீட்டுக்குப் போக லாம். ஞானு தாத்தா வரும் நேரம் ஆகிவிட்டது."

நவலுடைய பங்களாவில் சீதாநாத் வித்யாவை இறக்கி விட்டான். நவலிடம் அவன் சொன்னான்: "வா நவல், என்னோடு கொஞ்ச தூரம் வா, சுற்றிவரலாம். உன்னோடு

கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது."

"போவோம். ஆனால், சீக்கிரமாக திரும்பி வரவேண்டியிருக்கும்."

சாத்தம் லேன்ஸில் சீதாநாதுக்குப் பத்து நிமிஷத்துக்கு வேலை இருந்தது. அங்கிருந்து இருவரும் சிவில் லேன்ஸுக்குப் போனார்கள். ஒரு "ரெஸ்டரான்ட் எதிரில் காரிலிருந்து நவலும் அவரும் இறங்கினர். அவர் டிரைவரிடம் காரை வீட்டுக்குக் கொண்டுபோகச் சொல்லி விட்டார்.

ரெஸ்டரான்டில் சீதாநாத் டீ "ஆர்டர்" செய்தார். பிறகு அவர் நவலிடம் கேட்டார்: "என்ன நவல், நீ ராஜேந்திர கிஷோரைச் சந்தித்திருக்கிறாயா? அவரைப் பற்றி உனது கருத்தென்ன?"

நவல் கொஞ்சம் யோசித்துவிட்டுச் சொன்னான். "அவரை எனக்கு நன்றாகத் தெரியாது. இரண்டு முறை சந்தித்திருப்பேன்! அதுவும் உங்கள் வீட்டில்தான். அவர் பார்க்க மிகவும் தெளிவுள்ளவராகத்தான் தோன்றுகிறார். ஏன், என்ன விஷயம்?"

"உனக்குத் தெரியுமோ இல்லையோ, ராஜேந்திர கிஷோருக்குக் கல்யாணம் ஆகிவிட்டது."

"இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? அவருக்கும் வயது ஆச்சு என்றான் நவல் புன்முறுவலோடு."

"ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அவர் வெளி நாட்டுக்குப் போவதற்கு முன்னரே அவருக்குத் திருமணம் ஆகி விட்டது. விஷயம் என்னவென்றால், அவருக்கு உஷாவைக் கல்யாணம் செய்துவிடலாம் என்று கௌரீ அண்ணா நினைக்கிறார். எனக்கு என்ன தோன்றுகிற தென்றால், அவரேதான் கௌரீ அண்ணாவிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பார்."

நவலுக்கு வானத்திலிருந்து அதலபாதாளத்தில்

விழுந்துவிட்டாற்போலிருந்தது. "ராஜேந்திரகிஷோர் இரண்டாவது கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாரா? எதற்கு?"

"அவருடைய மனைவி அவலட்சணம்; படிப்பு வாசனை கிடையாது. பர்தாவில் இருப்பவள். பட்டிக்காட்டு ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவள். ஒரு ஐ.சி.எஸ். ஆபீஸர் என்றால் அவருக்கு ஏற்ற அழகுள்ள நாகரிக மனைவி வேண்டுமல்லவா?"

இருவரும் பேசாமல் டீ குடிக்கத் தொடங்கினர். சிறிது நேரம் மௌனமாக இருந்து நவல் சொன்னான்: "கிஷோர் கேட்டதும் கௌரீ அண்ணாவுக்கு மகிழ்ச்சி உண்டாகியிருக்கும். அவருக்குப் பதவி, அந்தஸ்து இவற்றில் அளவுகடந்த மோகம்." நவலுக்கு இப்போது உஷாவினிடம் ஏற்பட்டிருந்த மாறுபாடு இன்னதென்று விளங்கிவிட்டது. "சீதாநாத், நீங்கள் உஷாவை ராஜேந்திரகிஷோருக்குக் கல்யாணம் செய்துகொடுப்பது பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை. நான் இருக்கிற நிலையில் உஷாவைக் கல்யாணம் செய்து கொள்ள நினைப்பது சரியாகாது."

"ஆனால் எனக்கு ஆட்சேபம் உண்டு. அதாவது உஷாவை ராஜேந்திரகிஷோருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது தகாது. வீட்டில் அப்பா மட்டும்தான் கௌரீநாத் பக்கம்" என்றார் சீதாநாத்.

"உஷா இதைப்பற்றி என்ன சொல்கிறாள்?"

"அதுதானே சங்கடமாக இருக்கிறது. அவள் மௌனம் சாதிக்கிறாள். இந்த மௌனத்திற்கு சம்மதம் என்றே பொருள் கொள்ளலாம். நான் இப்போது காரை ஏன் திருப்பி அனுப்பினேன் தெரியுமா? இன்று மாலை வண்டியில் ராஜேந்திரகிஷோர் வருகிறார். அவரை அழைத்து வர கௌரீ அண்ணா ஸ்டேஷனுக்குப் போகப்

போகிறார். உஷாவும் அநேகமாக அவருடன் போவாள்."

நவலுடைய கண்கள் இருண்டுவிட்டன. அவன் எழுந்து நின்றான். "சீதாநாத், நீங்கள் என்னுடைய நிலையைத் தெளிவாக உணர்த்திவிட்டீர்கள், நன்றி."

சீதாநாத் நவலுடைய கையைப் பற்றிக்கொண்டார். "நவல், நீ என்னைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டாய். உனக்கு உஷாவின் மேல் உரிமை இருக்கிறது. அதை நீ விட்டுவிடக் கூடாது. எனக்கு ராஜேந்திரகிஷோர் பிடிக்கவில்லை. ஒரு மனைவி உயிரோடு இருக்க, இன்னொரு திருமணம் செய்துகொள்ளக்கூடியவன் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தபோதிலும், ஒரு பதிதன், கயவன் என்றே நான் நினைக்கிறேன்."

நவல் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னான்: "யாரிடமும் யாருக்கும் உரிமையில்லை சீதாநாத். உஷாவிடம் எனக்கும் உரிமை இல்லை; உஷாவுக்கும் என்னிடம் உரிமை இல்லை. உரிமை ஒருவனுக்குத் தன்மேல் தான் இருக்க முடியும்."

சீதாநாதின் முகத்தில் நிராசையின் நிழல் தோன்றியது. "ஒன்றும் நடக்காது! எல்லாம் கைநழுவிவிட்டது என்று தோன்றுகிறது. இதெல்லாம் கௌரீ அண்ணாவின் செய்கை. எனக்குத் தெரியும். அவருக்குப் பதவி, அந்தஸ்து, சொத்து, சுகம், ஆடம்பரம் இவற்றில்தான் மோகம். பிறர் உழைக்கவேண்டும், தான் அதனால் சுகமடைய வேண்டும் என்பது அவருடைய கொள்கை. உன்னிடம் உதவி கிடைக்கும் என நினைத்தேன். ஆனால் நீயோ, ஒரு மகோன்னதக் கொள்கையை மேற்கொள்ளும் லட்சியவாதி. பிரத்தியட்ச உண்மைகளின் அவலட்சணத்தைக் கண்டு தூர விலகிச் செல்வாய். நான் இதைப்பற்றி அப்பாவிடம் பேசவேண்டும்.

நவல் வீட்டுக்கு வந்தான். ஞானபிரகாஷ் காங்கிரஸ்

கமிட்டியிலிருந்து திரும்பி வந்து சோபாவில் படுத்திருந்தார். ஜ்வாலா பிரஸாதும் வித்யாவும் நாற்காலியில் உட்கார்ந்திருந்தனர். ருக்மிணி வாசலில் நின்று கொண்டிருந்தாள். ஜ்வாலா பிரஸாத் யாரிடமோ சொல்லிக்கொண்டிருந்தார்: "நீங்கள் எது சரி என்று நினைக்கிறீர்களோ, அது எங்களுக்கும் சம்மதம். எண்பது ரூபாய் குறைந்த தொகையல்ல என்றுதான் நினைக்கிறேன். ஒரு 'தாங்கா' வைத்துக்கொள்ளவேண்டும். வித்யாவுக்கு வருவதிலும் போவதிலும் கஷ்டமாக இருக்கும்."

"நவல் அண்ணா மாதம் பத்து ரூபாய்க்கு ஒரு தாங்காவை அமர்த்திவிடுவான். காலையில் பள்ளியில் கொண்டு விடுவான். மாலையில் அங்கிருந்து வீட்டுக்கு அழைத்து வருவான். ஏன் ஞானு தாத்தா!"

"ஆமாம், அதுதான் சரி. நான் கொஞ்ச நாளாகவே ஒரு புதுக் கார் வாங்க நினைத்துக்கொண்டிருக்கிறேன். பழைய காரை விற்றுவிட்டேன். ஆனால் என்ன நிச்சயம்? கிளர்ச்சி தொடங்கப்போகிறது. சிறைக்குச் செல்பவர்களில் எனது பெயர் முதலில் இருக்கும்."

அப்போது நவல் அறைக்குள் வந்தான். அவனுடைய முகம் வெளுத்துப்போயிருந்தது. "அட, என்ன அண்ணா விஷயம்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே" என்று கேட்டாள் வித்யா.

நவல் நாற்காலியில் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டான். "உடம்புக்கு ஒன்றும் இல்லை. குடிக்கத் தண்ணீர் கொடு."

தண்ணீர் குடித்துவிட்டு நவல் தேறிக்கொண்டான். ஞானபிரகாஷ் கேட்டார்: "ஏன், என்ன விஷயம்?"

ஒரு வறண்ட சிரிப்புடன் நவல் சொன்னான்: "ஒன்று

மில்லை ஞான தாத்தா! கொஞ்ச நேரத்திற்கு முன்தான் ஒரு கெட்ட கனவு கண்டேன். அதனால் மனதிற்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது, ஆனால் அந்தக் கனவு வந்ததுபோல் போய்விட்டது. நான் இப்போது பூரணமாகத் தேறி விட்டேன்.''

"பகல் வேளையில் விழித்துக்கொண்டிருக்கும்போதே என்ன கனவு?'' ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

''வெறுமனே, வேடிக்கைக்குச் சொன்னேன்.'' நவல் பேச்சை மாற்றினான். பிறகு அவன் ஞானபிரகாஷ் பக்கம் திரும்பினான். ''அப்படியானால் ஞான தாத்தா, மகாத்மா காந்தியின் அந்தக் கடிதத்திற்குப் பிறகு நிலைமை என்ன?''

"நிலைமை என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், மகாத்மா காந்தியின் கடிதத்தினால் ஒன்றும் நடக்கப்போவதில்லை எனத் தோன்றுகிறது. சத்தியாக்கிரஹம் நடந்தே ஆகவேண்டும். சாபர்மதியில் சில பொறுக்கியெடுத்த சத்தியாக்கிரகிகள் திரண்டுகொண்டிருக்கின்றனர். மார்ச் பன்னிரண்டாம் தேதி அவர்கள் அனைவரும் மகாத்மாகாந்தியுடன் ''தாண்டி''யில் உப்புச் சட்டத்தை மீறுவதற்காகக் கிளம்புவார்கள். சாபர் மதியிலிருந்து இருநூறு மைல் தூரத்தில் இருக்கிற ஊர். எல்லா சத்தியாக்கிரகிகளும் கால் நடையாகவே அங்கு செல்வார்கள்.''

நவலுடைய உள்ளத்திலிருந்த வருத்தம் எல்லாம் இதற்குள் மறைந்துவிட்டது. ''நீங்களும்தானே, மகாத்மா காந்தியோடு சத்தியாக்கிரஹம் செய்யப் போவதாகச் சொன்னீர்கள்!"

"நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் அவர் மறுத்துவிட்டார். அவர் ஏப்ரல் ஐந்தாம் தேதி உப்புச் சட்டத்தை மீறப்போகிறார் என்று ஊகிக்கப்படுகிறது,

அன்று இந்தியாவெங்கும் எல்லா விடங்களிலும் உப்புச் சட்டம் மீறப்படும். நாங்கள் எல்லாரும் அவரவர் இடத்திலேயே இருந்துகொண்டு சட்டத்தை மீறவேண்டும் என்று கட்டளை."

சிறிது நேரம் எல்லாரும் பேசாதிருந்தார்கள். பிறகு ஜ்வாலா பிரஸாத் கேட்டார்: "அப்படியானால் நீயும் சத்தியாக்கிரஹம் செய்யப்போகிறாயா ஞானு?"

"ஆம் அண்ணா, முதல் நாள் அலகாபாதில் சட்டத்தை மீறப்போகிறவர்களில் என்னுடைய பெயர் உள்ளது. இது போரின் தொடக்கம்."

"அதன் பிறகு?" ஜ்வாலா பிரஸாத் கேட்டார்.

ஞானபிரகாஷ் சிரித்தார். "அதன் பிறகு மக்கள் சமுதாயம் சட்டத்தை உடைக்க எழுந்து நிற்கும். தவறான சட்டத்தை எதிர்த்துப் போராடுவது நமது தருமம். ஆனால், இந்த எதிர்ப்பு அஹிம்சை முறையில் இருக்கும். நாங்கள் புதியதொரு போராட்டம் நடத்துகின்றோம்."

சாப்பாடு முடிந்த பிறகு வித்யா நவலிடம் கேட்டாள்: "அண்ணா, உண்மையாகச் சொல், சீதாநாத் உனக்கு இவ்வளவு அதிர்ச்சி யுண்டாக்கும் முறையில் என்ன சொன்னார்?"

நவல் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னான்: "மற்றும் ஒரு நிராசை என் முன் தோன்றியிருக்கிறது. ஒரு அதிர்ச்சி! உஷா என்னை விட்டு தூர விலகி விட்டாள்!"

"அண்ணா, தவறாகச் சொல்லுகிறாய்; உண்மை என்னவென்றால், உஷாவை விட்டு நீதான் விலகிவிட்டாய். இதில் உனக்குத் தோல்வி அல்ல, வெற்றி!"

நவல் பைத்தியம் பிடித்தவன்போல் சிரித்தான். "வெற்றி! தோல்வி! இவற்றின் பொருள் என்ன

வென்று யாருக்குத் தெரியும் வித்யா! நான் சிறுகச் சிறுக மறைந்து உடைந்துகொண்டிருக்கிறேன். இவ்வளவுதான் எனக்குத் தெரிகிறது."

வித்யா கடுமையாக நவலேப் பார்த்தாள். "அண்ணு, நீ உடைந்து மீண்டும் உருவாகிருய்! தொலேந்து உன்னே நீ மீண்டும் பெறுகிருய்! இனி, இந்த நம்பிக்கையற்ற நிலேயும், கோழைத்தனமும் எதற்கு? உன்னே நீ தேற்றிக் கொள்; துணிவு கொள்!"

நவல் தங்கையை ஆச்சரியத்தோடு பார்த்தான். பிறகு அவளுடைய கையைப் பற்றிக்கொண்டு திடீரென்று உரக்கச் சொன்னுன்.

"சரியாகச் சொல்லுகிருய் வித்யா, உடைந்துவிட்டது எதுவோ, அது இல்லே என்று ஆகிவிடும் "அஸத்". ஆனல் உண்மை—ஸத்—என்பது என்ன? அதைத் தேடிப் பார்க்கவேண்டும்."

8

"உலகம் எதுவரை வந்திருக்கிறது, இனி எங்கே போகப்போகிறது?" ஜ்வாலா பிரஸாத் தன்னேயே கேட்டுக்கொண்டார். அவரது கண்கள் சிறிது நீர்த்திருந்தன; குரல் நடுங்கியது. எதிரில் தலேயைக் குனிந்து கொண்டு ருக்மிணி நின்றுகொண்டிருந்தாள். "என் வார்த்தையைக் கேட்கமாட்டேன் என்கிருன்! என்னே அறிவற்றவள், உலகம் தெரியாதவள் என்று நினேக்கிருன் அவன். அவனேப் புரிந்துகொள்ள எனக்கு முடியவில்லே. என் அறிவுதான் குறைந்துவிட்டதோ அல்லது

அவனுடைய அறிவுதான் வளர்ந்துள்ளதோ, தெரியவில்லை.''

"பரீட்சை எழுதியிருக்கலாமே நவல். நீங்கள் அவனைக் கூப்பிட்டு நல்லது கெட்டது என்னவென்று சொல்லிக் கொஞ்சம் திருத்தவேண்டும்."

ஜ்வாலா பிரஸாத் என்ன செய்வது என்பதை உணராதவராய் சொன்னார்: "யாரைத் திருத்துவது, யாருக்கு நல்லது கெட்டது சொல்லுவது மகளே! கெட்ட வேலை செய்பவனை அதட்டுவார்கள். அவனோ கெட்ட வேலை செய்யவில்லை. இனி, இந்தக்காலத்தில் நல்லது எது, கெட்டது எது என்று தெளிவாகத் தெரிந்துகொள்ளவும் முடிவதில்லை. நீயே யோசனை செய்து பார். முன் காலத்தில் சிறைவாசம் என்றால், ஜனங்கள் நடுங்குவார்கள். ஆனால் இப்போது சிறைச்சாலையை "கிருஷ்ணன் பிறந்த கோயில்'' என்று சொல்லிக்கொண்டு பெரிய மனிதர்கள் போகிறார்கள். அவனுக்கு நல்லது கெட்டது சொல்லி நான் தோற்று விட்டேன்."

ருக்மிணி தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சொன்னாள்: "எல்லாம் என்னவோ நடக்கிறது? ஏதாவது வழி செய்யுங்கள்!"

ஜ்வாலா பிரஸாத் பதில் எதுவும் சொல்லவில்லை. பதில் சொல்லக்கூடிய நிலையிலும் இல்லை. என்ன நடக்கிறது என்பது புதிய பிரச்னை அல்ல, அவர் வாழ்க்கை முழுவதும் இதே கேள்விதான் இந்தக் கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. எந்தப் பொருளிலும் யாருக்கும் உரிமை கிடையாது. ஒருவரும் ஒன்றும் செய்வதில்லை. செய்யவும் இயலாது. எல்லாம் தானாக நடந்துகொண்டிருக்கிறது.

ருக்மிணி பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். அவள்

ஜ்வாலா பிரஸாதின் பதிலுக்காகக் காத்திருந்தாள். பேதை நிர்பந்தத்தால் செயலற்ற அபலை அவளிட மிருந்து எல்லாமே பறிக்கப்பட்டு விடுவது போலத் தோன்றுகிறது! அவள் எங்கிருந்தாவது உதவியை நாடினாள். அவள் சொன்னாள்: "எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள் அவனை. அவன் ஜெயிலில் எப்படி இருப் பான்? அங்கு போனால் செக்கு இழுக்கவேண்டியிருக் கும். கல் உடைக்க வேண்டியிருக்கும்."

ஜ்வாலா பிரஸாத் பெருமூச்சு விட்டார். "மகளே, எனக்கு இதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால்.... ஆனால்.... இந்த சிறைக்குப் போவதுஎன்பது...ஏதோ விசித்திரமா கத் தோன்றுகிறது. இதெற்கெல்லாம் பொறுப்பு ஞானு தான்." ஜ்வாலா பிரஸாதின் குரலில் ஒரு வகைக் கடுமை தோன்றியது. "தானே தகாத வழியில் சென்று அவன் வாழ்க்கையைப் பாழ்படுத்திக்கொண்டான், இப்போது இந்தப் பிள்ளையின் புத்தியையும் கெடுத்துக்கொண்டிருக் கிறான்."

"அப்படிச் சொல்லாதீர்கள். இதில் மனிதனுடைய குறை ஒன்றும் இல்லை; இதெல்லாம் பகவானுடைய கோபம். நம்மை யெல்லாம் அழிப்பதற்கு முற்பட்டுள் ளான் போலும்!" ருக்மிணி கண்ணீரைத்துடைத்த வாறே அங்கிருந்து சென்றாள். நவல் ஞானபிரகா ஷுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். வித்யா வும் அங்கேயே இருந்தாள். ஞானபிரகாஷ் "நான் முதல் வரிசையிலேயே என் பெயரை எழுதியிருக்கிறேன் நவல். இரண்டாவது வரிசையில் நீ யிருப்பாய்" என்றார்.

நவல் புன்னகை செய்தான். "இல்லை ஞானு தாத்தா, நானும் முதல் வரிசையிலேயே போவேன். நீங்கள் இன்னும் குறைந்தது ஒரு வாரமாவது ஜெயிலுக்கு வெளியே இருக்கவேண்டியிருக்கும். இந்த இயக்கத்தைக்

கட்டுதிட்டமாக நடத்தவேண்டுமே! ஏன் வித்யா ?"

"நீ, வித்யா என்ன உப்பு தயாரிக்கப்போவதில்லையா ?"

"இல்லை அப்பா, என்னை மறந்துவிடுங்கள். ஜெயிலுக்குப் போவது, சண்டைக்குப் போவது, சச்சரவு செய்வது எல்லாம் ஆண்களுக்குத்தான் தகும்! ஆனால் ஒன்று; அவசியம் ஏற்பட்டால் நானும் வெளியே கிளம்ப வேண்டியிருக்கலாம் !"

"இல்லை வித்யா, நீ வெளியே கிளம்பவேண்டியிருக்காது, நான் சும்மா வேடிக்கைக்காகக் கேட்டேன்."

அப்போது ஜ்வாலா பிரஸாத் உள்ளே வந்தார். ஆழ்ந்த சிந்தனையோடு அவர் வந்ததும் இங்கே பேச்சு நின்றுவிட்டது. சிறிது நேரம் மூவரையும் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார் ஜ்வாலா பிரஸாத். பிறகு அவர் நவலிடம் சொன்னார்: "நவல், நாளை நின்று மறுநாள் உப்பு சத்தியாக்கிரஹம் செய்யப்போகும் நபர்களில் உன் பெயரும் இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன். அப்படியானால், நீ படிப்பைத் துறந்துவிட்டு சிறைக்குப்போவதாகத் தீர்மானம் செய்துவிட்டாய்!"

"ஆமாம் தாத்தா. நான் ரொம்பநாளாகவே யோசித்துக்கொண்டிருந்தேன் — என்னுடைய வாழ்க்கைப்பாதை எவ்வாறு இருக்கும் என்று. இந்த வக்கீல் தொழிலில் எனக்கு வெற்றி கிடைக்காது என்று தோன்றுகிறது. பொய், முகஸ்துதி, ஏமாற்று — இவை வக்கீல் தொழிலுக்குத் தேவை. இவை என்னிடம் கிடையாது. வக்கீல் தொழிலிலிருந்து விலகி இருப்பதே எனக்கு நன்மை பயக்கும். வக்கீல் தொழில் வேண்டாம் என்று தள்ளிய பிறகு பரீட்சை எழுதுவது வீண்."

"அப்படியானால் உன்னுடைய இரண்டு வருடங்கள் வீணாகிவிட்டன !"

"இல்லை தாத்தா, இந்த இரண்டு ஆண்டுகளில் நான் பார்த்தும், கேட்டும் நிறையக் கற்றுக்கொண்டேன். எத்தனை வாலிபர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளம் கசந்துவிட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான வாலிபர்கள் வக்கீல் ஆகிவிட்டனர். ஆனால் அவர்களுக்கு வயிற்றுப் பாட்டுக்குக்கூட கிடைக்கவில்லை. ஆயிரம் ஆயிரமாக வாலிபர்கள் பி. ஏ., எம்.ஏ., பாஸ் செய்துவிட்டு அலுவலகங்களைச் சுற்றிச்சுற்றி வருகின்றனர். வேலை கிடைக்கவில்லை. நான் குறைந்தபட்சம் இந்த மனக்கசப்பு, நிராசை—இவற்றிலிருந்து தப்பிவிட்டேன் அல்லவா. என்ன ஞானு தாத்தா, நான் சொல்வது சரி தானே?"

ஜ்வாலா பிரஸாத் சிறிது சிடுசிடுத்துச் சொன்னார்: "ஞானு நீ சொல்வதைச் சரியென்றுதான் தலையாட்டுவான். இந்த ஞானுவுக்குத்தான் சிஷ்யனாக இருக்கிறாய் நீ; இவனோ கல்யாணம் செய்துகொள்ளவில்லை. ஒரு வேலை, ஒரு பிரவிருத்தி கிடையாது."

ஞானபிரகாஷ் சொன்னார்: "அண்ணா, திருமணம் செய்துகொண்டு யார் என்ன சுகம் கண்டுவிட்டார்கள்? கவலை, பயம், சந்தேகம் இதிலிருந்தெல்லாம் நான் விடுதலை பெற்றிருக்கிறேனே. எனக்கு சிஷ்யனாக இருப்பதைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லுவேன். யாருமே பிறருக்கு சிஷ்யனாவது கிடையாது. எல்லாரும் தம் தம் உள்ளத்து உணர்வினால் உந்தப்பட்டுத்தான் வேலை செய்கிறார்கள்."

"ஆம் தாத்தா, ஞானு தாத்தா சரியாகத்தான் சொல்லுகிறார். கீதையிலும் இதுதான் எழுதியிருக்கிறது" வித்யா சொன்னாள்.

ஜ்வாலாபிரஸாத் உலகம் முழுவதும் அவரை எதிர்த்து

நிற்பதைக் கண்டார். ஒருவரும் அவருடைய வார்த்தையைக் கேட்கவோ, புரிந்துகொள்ளவோ தயாராக இல்லை. அறையிலிருந்து வெளியே வராந்தாவுக்கு வந்தார். தோல்விக் களைப்பில் அப்படியே அயர்ந்து உட்கார்ந்துவிட்டார். வெயில் இன்னும் கொஞ்சம் இருந்தது. காற்றில் அனல் வேகம் குறையவில்லை. இதற்குள் பீக்கூ 'ட்ரே'யில் டீ எடுத்துக்கொண்டு வந்தான். அங்கிருந்தே அவன் சொன்னான்: "தம்பி, முதல்லே டீ குடிச்சுட்டு அப்பாலே சுந்தரத்துக்குப் போ. இப்போதான் டீ போட்டுக் கொண்டாரேன்."

ஜ்வாலா பிரஸாத் பீக்கூவுக்குப் பதில் அளிக்கவில்லை. பேசாமல் இரண்டு கையையும் தலைமேல் வைத்துக்கொண்டு யோசனை செய்துகொண்டிருந்தார். என்ன நடக்கப்போகிறதோ? அவருக்கு ஒன்றும் புரியவில்லை. சூழ்நிலை அவருக்கு மிகவும் புதியதாகத் தோன்றியது. அவருடைய கடந்தகாலக் காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக அவருடைய கண்களுக்குத் தோன்றின—மங்கிய, விளங்காத காட்சிகள். சிவலால், கங்கா பிரஸாத், யமுனா—எல்லாரும் போய் விட்டார்கள். இவர்கள் வாழ்ந்ததே ஒரு வேளை பொய்யான கானல்தோற்றம்தானா? ஒரு நாள் அவரும் போய் விடுவார். இதேபோல வாழ்ந்த சுவடே இல்லாமல் மறைந்து போவார். அப்படியானால் வாழ்க்கை ஒரு மாயைதானா, பிரமையா? பொய்த் தோற்றமா?

எண்ணத்தின் ஓட்டம் தடைபட்டது. பீக்கூ அவர் முன் கோப்பையில் டீயை வைத்தான். "எடுத்துக்கோ! என்ன யோசனை?" பீக்கூ ஜ்வாலா பிரஸாதின் கையில் கோப்பையை எடுத்துக் கொடுத்துவிட்டு அங்கேயே தரையில் உட்கார்ந்துகொண்டான்.

ஜ்வாலா பிரஸாத் பீக்கூவைப் பார்த்தார். பீக்கூ

ஒரு பித்தளைத் தம்ளரில் டீ ஊற்றித் தானும் குடித்துக் கொண்டிருந்தான். புல் தரையை நோக்கிக்கொண்டே ஏதோ யோசித்துக்காண்டிருந்தான். ஜ்வாலா பிரஸாதுக்கு அப்போது தனக்கு மிக நெருங்கிய உறவினன் பீக்கூ ஒருவன்தான் எனத் தோன்றியது. "பீக்கூ, கேட்டியா நீ, நாளை நின்று நவல் உப்புத் தயாரிக்கப் போகிறான்!"

"ஆமா, கேள்விப்பட்டேன். ஆனா, நம்ம குழந்தே இவ்வளவு படிச்சுப் பரீட்சை பாஸ் செஞ்சிருக்கே, ஏதுக்கு உப்பு செய்யப்போவுது! இந்த உப்பு செய்யற வங்க உப்புக்காரங்க! சீமையிலேந்து உப்பு வர்றத்தாலே அவுங்க தொழிலும் படுத்துப்போச்சு. அவுங்க பட்டினியா சாவுறாங்க! நம்ப நவல் உத்யோகம் செய்யறதே விட்டுட்டு உப்பு செய்யப் போறதுன்னா நீ ஏன் அத்தே தடுத்துச் சொல்லமாட்டேங்கிறே?"

"உனக்குப் புரியவில்லை பீக்கூ! அவன் உப்புத் தொழிலைச் செய்யப்போவதில்லை. அவன் உப்பைத் தயார் செய்து உப்புச் சட்டத்தை மீறப்போகிறான். சர்க்காருடைய சட்டத்திற்கு எதிராக வேலை செய்யப் போகிறான். அப்படிச் செய்து ஜெயிலுக்குப் போவதற்காக!" பீக்கூ ஆச்சரியத்தோடு கேட்டான்: "குழந்தே நவல் ஜெயிலுக்குப் போவப்போவுதா? அப்பாடியோ! ஜெயிலுக்குப் போற பைத்தியம் எப்படி வந்தது இதுக்கு? நீங்க எல்லாம் ஏன் தடுக்க மாட்டேங்கிறீங்க!"

"என்னத்தைச் சொல்வது பீக்கூ. அவன் என் வார்த்தையைக் கேட்டால்தானே! ஞானு கூடத்தான் ஜெயிலுக்குப்போகத் தயாராகிக்கொண்டிருக்கிறான்."

பீக்கூ ஒரு பெரு மூச்செறிந்தான். "அதுதான் சொல்றேனே! அவுங்க அறிவும் கெட்டுப்போச்சு! இப்போ என்ன செய்யறது? கடவுள் நம்ம பையனைத்

தூக்கிட்டுப்போயிட்டான். இல்லாட்டி நவலே ஜெயிலுக்குப் போக விட்டிருப்பானா அவன்?"

பீக்கூவின் கண்களில் நீர் பெருகியது.

பீக்கூ கங்கா பிரஸாதின் பேச்சை எடுக்கும்போதெல்லாம் அவனுடைய கண்களில் நீர் பெருகியது. ஜ்வாலா பிரஸாத் சொன்னார்: "யாரும் எதுவும் செய்வதற்கில்லை பீக்கூ, உலகத்தில் யாரும் யாரையும் தடுக்க முடியாது!" ஜ்வாலா பிரஸாத் தன் உள்ளத்தில் நிகழ்ந்த போராட்டத்தைக் கண்டு வெறுத்துவிட்டவர் போல, எழுந்து நின்றார்.

பீக்கூவும் எழுந்து நின்றான். ஒரு பெருமூச்செடுத்து விட்டுச் சொன்னான்: "ஆமாம் தம்பி, சரியாத்தான் சொல்றே. நம்ம பையனே தன் சாவைத் தடுக்கமுடியாமே போயிடுச்சின்னா, இன்னொருத்தனே எப்படி நடுத்திருக்கும்!"

உள்ளத்தில் பெரும் சுமையுடன் பீக்கூ வீட்டுக்குள் போய்விட்டான். ஜ்வாலா பிரஸாத் கவலே தோய்ந்தவராக உலாவப் புறப்பட்டார். அவருடைய மனம் கலங்கியிருந்தது. மனக்களைப்பு அவருடைய கால்களிலும் படிந்தது. இன்று அவர் திரிவேணி கரைக்குச் செல்லாது 'கடரா' பக்கமாகச் சென்றார். "ஆனந்த பவனு"க்கு முன்னால் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். கூட்டம், "பாரத மாதாவுக்கு ஜே", "மகாத்மா காந்திக்கு ஜே", "மோதிலால் நேருவுக்கு ஜே" "ஜவாகர்லாலுக்கு ஜே" என்று கோஷம் செய்தவண்ணம் இருந்தது. மகாத்மா காந்தி சத்தியாக்கிரஹம் செய்யும் தன் தோழர்களோடு கூட 'தாண்டி'க்கு அருகில் வந்துவிட்டார் என்ற செய்தி அன்றையப் பத்திரிகைகளில் வந்திருந்தது. அவர்கள் நாளை மறு நாள் உப்புக்காய்ச்சி சத்தியாக்

கிரஹம் நடத்துவார்கள். நாளை மறு நாள் நாடு முழுவதும் இந்த உப்புசத்தியாக்கிரஹம் ஆரம்ப மாகிவிடும்.

இந்த சத்தியாக்கிரஹம் அலாகாபாதில்கூட ஆரம்பமாகும். நவல் நாளைக்கு மறு நாளோ, முதல் நாளோ சத்தியாக்கிரஹத்தில் பங்கு கொள்வான். முதல் நாள் சத்தியாக்கிரஹம் செய்பவர்கள் கைது செய்யப்படுவார்கள். பிறகு இரண்டாம் நாள் சிலர் கைதாவார்கள். மூன்றும் நாளும் சிலர் கைதாவார்கள், நீண்ட காலம் வரை இந்த சத்தியாக்கிரஹக் கிளர்ச்சி நடைபெறும். இந்தக் கிளர்ச்சியும் 1920-ம் ஆண்டு நடந்த கிளர்ச்சியைப் போலவே இருக்குமா? அந்தக் கிளர்ச்சி எவ்வளவு சுலபமாக அடக்கப்பட்டுவிட்டது. அதேபோல இந்தக் கிளர்ச்சியும் அடக்கப்பட்டுவிடும். பிரிட்டிஷ் அரசாங்கம் கவலைப்படாமல் இருக்கிறது. அதிகாரிகளிடம் எவ்வகை பதற்றமும் இல்லை, ஆவேசமும் இல்லை.

ஜ்வாலா பிரஸாதின் பார்வை, சத்தியாக்கிரஹத்தைப் பார்ப்பதற்காக தூரத்திலிருக்கும் கிராமங்களிலிருந்தும் வந்து அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான கிராமவாசிகளின் மேல் விழுந்தது. அந்தக் கிராமவாசிகள்தான் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர். அவர்கள் உள்ளத்தில் வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற ஆவல் மட்டுமல்ல, அதற்கும் மேற்பட்ட ஒரு உணர்ச்சி இருந்தது. அவர்கள் உற்சாகம், செயலிலும் இறங்கி வரக்கூடியதாக இருந்தது!

திடீரென ஜ்வாலா பிரஸாதின் சிந்தனை திசை மாறியது. சுதந்திரத்தின் அறைகூவல் இந்தியாவின் இலட்சக்கணக்கான கிராமங்களில் போய் ஒலிக்கிறது என்று அவருக்குத் தோன்றியது. லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கிராமவாசிகள் அநேகமாக இந்த இயக்கத்தில் சேர்ந்துகொள்ளுவார்கள். அவர்கள்

இவ்வாறு சேருவது வெறும் உணர்ச்சியால் உந்தப் பட்டுத்தான்! ஆனாலும் இந்தக் கிளர்ச்சியை அடக்கு வதற்கு ராணுவப் படையின் உதவி வேண்டியிருக்கும். சேனை, துப்பாக்கி, மெஷின் கன் இவற்றை எதிர்த்து இந்தக் கிளர்ச்சி தொடர்ந்து நிற்க முடியுமா? ஜ்வாலா பிரஸாதினல் மேலே செல்ல முடியவில்லை. அவர் வீட்டை நோக்கித் திரும்பினர். அங்கு ஞானபிரகாஷ் தன் அறையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண் டிருப்பதைக் கண்டார். ஆனல் நவல் வீட்டில் இல்லை. அவர் வித்யாவிடம் கேட்டார்.

"இப்போதுதான் டவுன் பக்கம் போனன். ஒருவேளை ராய்பஹதூர் வீட்டுக்குப் போனனே என்னமோ! அதைப்போலத்தான் ஏதோ சொல்லிக்கொண்டிருந் தான்."

ஜ்வாலாபிரஸாதின் உள்ளத்தில் சூழ்ந்திருந்த இருளில் நம்பிக்கையின் ஒரு ஒளி தோன்றியது. நவலைத் தடுக்கக் கூடியது ஒன்று இருக்குமானல், அது உஷாவிடத்தில் நவலுக்கு உள்ள மோகம்தான்! அந்த மோகம் நவலைத் தடுக்கக்கூடுமா?

நவலுக்கு நாளை மறுநாள்வரை விடுதலைதான்! அதற் குப் பின் அவன் போராட்டத்தில் குதிப்பான். வருங் காலத்தோற்றம் எப்படியிருக்குமென்று அவன் கொஞ்சம் கொஞ்சம் உணருகிறன். ஆனல், இப்போது அவன் உணராதது எவ்வளவோ இருக்கிறது. இந்தப் போராட் டத்தில் ஈடுபடுவதற்கு முன் அவன் உஷாவைச் சந்திக்க விரும்பினன். உஷா அவனை விட்டு தூர விலகிவிட்டாள் என்று அறிந்தும், அவன் அவளுடைய வீட்டுக்குச் சென்றன்.

உஷாவின் வீட்டில் ஒருவகையான மனஸ்தாபம் தோன்றியிருந்தது, கௌரீநாதுக்கும் சீதாநாதுக்கும்.

இதில் காமதாநாதின் நிலை மிக விசித்திரமாக இருந்தது. அவர் சில சமயம் கௌரீநாதின் பக்கமும், சில சமயம் சீதாநாதின் பக்கமும் சேர்ந்திருந்தார். ஆனால், உஷா தன் பெரிய அண்ணாவின் வார்த்தையில் கட்டுண்டு இருந்தாள். ஆதலால் காமதாநாத் கௌரீநாதின் பக்கமாகவே அதிகம் சாய்ந்திருந்ததாகத் தோன்றியது.

நவல் ராய்பஹாதூரின் வீட்டை அடைந்தபோது காமதாநாத் தன் அறையில் வருத்தத்தோடு மௌனமாக உட்கார்ந்திருந்தார். அன்று மத்தியானம்தான் அவருடைய இரண்டு பிள்ளைகளுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டிருந்தது. "வா நவல், ரொம்ப நாளாச்சு நீ இங்கே வந்து! உன் படிப்பு எல்லாம் எப்படி இருக்கிறது?"

"நன்றாகவே இருக்கிறது" என்றான் நவல்.

"எல். எல். பி. பரீட்சை எழுதிவிட்டு முன்ஷீப் பரீட்சையும் முடித்துவிடு. ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸிடம் எனக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருக்கிறது. உன்னைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்."

"ஆமாம், உங்களால் இது செய்ய முடியும். ஆனால், எனக்கு முன்ஷீப் பரீட்சை எழுதும் எண்ணமில்லை."

ராய்பஹாதூர் காமதாநாத் கோபமடைந்தார். "நீ ரொம்பப் பிடிவாதக்காரன். கௌரீ சொன்னது சரிதான். ஆனால், பிறகு வக்கீல் வேலைதான் செய்யப் போகிறாயா? வக்கீல் தொழிலும் மோசமான நிலையில் இருக்கிறது. கௌரீயே கஷ்டப்படுகிறான்."

நவல் புன்னகை புரிந்தான். "நான் என்ன செய்யப் போகிறேனோ எனக்கே தெரியாது. மனிதன் செயல் எல்லாம் அவன் இச்சைப்படி இன்றித் தானாகவே நடக்கிறது. நான் இவை எல்லாவற்றையும் விட மிக நல்ல காரியமாக ஏதாவது செய்யக்கூடும்! யார்

கண்டது ?"

"நவல், நீ தத்துவஞானி ஆகிவிட்டாய்." காமதாநாத் உரக்கச் சிரித்தார். பிறகு அவர் உரத்த குரலில் உஷாவைக் கூப்பிட்டு "உஷா, நவல் வந்திருக்கிறான்" என்றார். அவள் அறைக்குள் நுழைந்தவாறே சொன்னாள்: "அடடே நீங்களா, நவல் பாபூ! ரொம்ப நாளுக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள்! வாருங்கள், வெளியே வராந்தாவில் உட்கார்ந்துகொள்ளலாம். இன்று இறுக்கம் அதிகமாக இருக்கிறது, இல்லையா அப்பா ?"

"ஆம் ஆம். நீங்கள் அங்கேயே போய் உட்காருங்கள், நான் இங்கேயே இருக்கிறேன். சிலர் என்னைச் சந்திக்க வரப்போகிறார்கள்."

உஷா நவலை அழைத்துக்கொண்டு வராந்தாவுக்குப் போனாள். "இப்போது படிப்பு எல்லாம் மும்முரமாக நடந்துகொண்டிருக்கும்."

"நடந்துகொண்டும் இருக்கிறது, நடக்கவும் இல்லை!" நவல் உட்கார்ந்தவாறே சொன்னான். "இன்று படிப்பில் மனம் செல்லவில்லை. ஆகவே, உன்னைப் பார்த்து வரலாம் என்று தோன்றியது. எப்படி இருக்கிறாய்? உன்னுடைய படிப்பு எப்படி நடக்கிறது ?"

"அவ்வளவு சுகம் இல்லை. உண்மையில் படிப்பில் என் மனம் செல்லவில்லை." பிறகு சிறிது மௌனமாக இருந்துவிட்டு உஷா மீண்டும் பேசினாள்: "இப்போதெல்லாம் காங்கிரஸ் ஆபீஸிலேதான் அதிகமாக இருக்கிறீர்களாமே நீங்கள்!"

நவலுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அப்படியென்றால், உஷா நவலின் நடமாட்டங்களைப் பற்றி கவனித்து வருகிறாள். காமதாநாத் வீட்டில் இன்னும் நவலைப்பற்றி அக்கறைகாட்டியே வருகின்றனர். அவன் சொன்னான்:

"ஆம் உஷா, நீ கேள்விப்பட்டது சரிதான். உனக்கு யார் சொன்னார்கள்?"

"கௌரீ அண்ணாதான் சொல்லிக்கொண்டிருந்தார். நீங்கள் காங்கிரஸ் தலைவர் ஆகிவருகிறீர்கள் என்று அவர் எண்ணுகிறார்."

"காங்கிரஸ் தலைவன் ஆவதில் ஏதாவது தவறு இருக்கிறதா என்ன?" நவல் கேட்டான்.

"எனக்கு என்ன தெரியும்! ஆனால், காங்கிரஸ் தலைவனானால் ஜெயிலுக்குப் போகவேண்டியிருக்கும் என்று."

நவல் உஷாவின் கண்களை உற்று நோக்கி "உஷா, உனக்குத் தெரியுமா? சொல் பார்க்கலாம், இப்போது நான் ஏன் வந்திருக்கிறேன்?" என்று கேட்டான்.

"என்னைச் சந்திக்க வந்திருக்கிறீர்கள். ஏதோ பேசவும் நினைத்தீர்கள். அப்படித்தானே?"

பேசவும் வேண்டியிருந்தது, சந்திக்கவும் வேண்டியிருந்தது. உஷா, நான் உன்னை விடுதலை செய்ய வந்தேன்.

உஷா கொதிப்படைந்தாள். "எனக்கு நீங்கள் வெகு நாளைக்கு முன்னரே விடுதலை கொடுத்துவிட்டீர்கள், ஒன்றும் சொல்லாமலேயே! இப்போது அந்தப் பேச்சை எடுப்பானேன்? உண்மையைச் சொல்லப்போனால் நானே எனக்கு விடுதலை பெற்றுக்கொண்டுவிட்டேன்."

உஷா சொன்னது உண்மை. இருந்தபோதிலும் அதை அவள் வாயிலாகக் கேட்பது நவலுக்குப் பிடிக்கவில்லை. "தெரியும் உஷா, நீ விடுதலை பெற்றுவிட்டாய். இந்த விடுதலைக்குப் பிறகு நீ மற்றோரிடத்தில் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், அந்தக்கட்டு பயங்கரமானது, கொடுமையானது!"

"அதைப்பற்றி உங்களை யார் கேட்டார்கள்? கருத்துத்

தெரிவிக்க நீங்கள் யார் ?"

நவல் புன்னகை செய்தான். "ஆமாம், என் கருத்தை ஒருவரும் கேட்கவில்லைதான், இது உண்மை; ஆனல், கருத்துத் தெரிவிக்கும் உரிமை எனக்கு இருக்கிறது, இனியும் எப்போதும் இருக்கும்; ஏனெனில், நான் உன்னோடு சொந்தம்கொண்டாடியிருக்கிறேன் - சொந்தக் காரர்கள் தவருன பாதையில் செல்லும்போது மனதில் வருத்தம் ஏற்படுகிறது. உனக்குத் தெரியுமல்லவா, ராஜேந்திரகிஷோருக்கு ஏற்கனவே கல்யாணமாகியிருக்கிறது."

உஷா இரைந்து கத்தியேவிட்டாள். "இதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. இது என்னுடைய தனிப் பட்ட விஷயம் !"

நவல் எழுந்து நின்முன். "நான் இதையெல்லாம் உன்னிடம் சொல்ல நேர்ந்ததைப் பற்றி வருந்துகிறேன். நாம் இனிமேல் நிரந்தரமாகப் பிரிந்து விலகிவிட்டோம். உன்னிடம் எதையோ சொல்ல வந்தேன், எதையோ சொல்லிவிட்டேன்."

"நீங்கள் எனக்கு விடுதலையளிக்க வந்தீர்கள்" குத்தலான குரலில் உஷா சொன்னுள். 'அதைத்தான் நீங்கள் சொல்லிவிட்டீர்களே ! இதுக்கு மேலே வேறு ஏதாவது சொல்லவேண்டுமா ?"

"ஆமாம், ஒரே ஒரு விஷயம். நாளை மறு நாள் நான் உப்புச் சத்தியாக்கிரஹம் செய்யப்போகிறேன். அன்று மத்தியானத்துக்குள் அநேகமாக நான் ஜெயிலுக்குப் போய்விடுவேன். ஜெயிலுக்குப் போவதற்கு முன் உன்னை ஒரு முறை பார்க்கவும், உனக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளவும் வந்தேன். ஆனல் இங்கு வந்ததும் என் உள்ளக்கசப்பு ஒரு சிக்கலிலே மாட்டி வைத்துவிட்டது. என்னை மன்னித்துவிடு

உஷா." நவல் போவதற்குத் திரும்பினான்.

உஷா நவலுடைய கையைப் பிடித்துக்கொண்டாள். "என்ன சொன்னீர்கள்? நாளை நின்று நீங்கள் ஜெயிலுக்குப் போகப்போகிறீர்களா?" நவலை இழுத்து வந்து அவள் நாற்காலியில் உட்காரவைத்தாள். "வேண்டாம், இதைச் செய்யாதீர்கள். ஜெயிலுக்குப் போகாதீர்கள். என்னுடைய இந்த வேண்டுகோளை நிராகரிக்கக் கூடாது."

"இல்லை உஷாராணீ. நான் அடியெடுத்து வைத்து விட்டேன். இனிப் பின்வாங்க முடியாது. எல்லாம் தயார் பண்ணிக்கொண்டு விட்டேன்."

"நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்! எனக்கு ராஜேந்திரகிஷோரிடம் எவ்விதப் பாசமும் இல்லை. நான் அவரைக் காதலிக்கவில்லை. நீங்கள் ஜெயிலுக்குப் போகாதீர்கள். எல்.எல்.பி. பாஸ் செய்யுங்கள். நான் இப்போதே அப்பாவிடம் போய், கிஷோரைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லிவிடுகிறேன். ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?"

"இதெல்லாம் வீண் உஷா! நான் நிராசை அடைந்து ஜெயிலுக்குப் போகவில்லை. நான் ஏற்றுக்கொண்ட வழியின் நேர் விளைவே இது. போராட்டம்—போராட்டம்—போராட்டம். வாழ்க்கை முழுவதும் போராட்டம். இந்தப் போராட்டம் என் உள்ளத்தின் அறைகூவல் உஷா. இதில் நீ எனக்குத் துணை நிற்கமுடியாது என்றும் எனக்குத் தெரியும். ஆகவே தான் உனக்கு விடுதலையளித்துவிட்டேன்."

உஷாவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. "அப்படியானால் நீங்கள் என் காரணமாகச் சிறைக்குச் செல்லவில்லை! அப்படித்தானே?"

"இல்லவே இல்லை. "நான் உன் காரணமாக அல்ல, என் சொந்த உணர்வினால் உந்தப்பட்டே சிறைக்குப் போகிறேன்."

உஷா தன்னையே நொந்துகொண்டாள். தன்னுடைய வெற்றி, தன்னுடைய பெருந்தன்மையைப்பற்றிய அவள் உள்ளத்து நினைவு தூள்தூள் ஆகிவிட்டது. "புரிந்தது! நவல்பாபூ! நீங்கள் என்னைக் கேலி செய்வதற்காக வந்தீர்கள். உங்களுடைய பெருந்தன்மையை என்னிடம் காட்டி என்னை அவமதிப்பதற்காக வந்தீர்கள்."

நவல் மீண்டும் எழுந்து நின்றான். "இல்லை உஷா, நான் உன்னிடம் நிரந்தரமாக விடை பெறுவதற்காக, உனக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக வந்தேன். இனிமேல் நாம் மீண்டும் ஒருபோதும் சந்திக்காமற் போகக்கூடும்."

உஷா துடித்தாள். "உங்களுடைய வாழ்த்துக்களை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எனக்குத் தேவை இல்லை. சிறைக்குச் செல்லுங்கள்; அனுபவியுங்கள்! என்னைப்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லை. எனக்கு என்ன குறை? இதுவரையிலும் குறை இல்லை. இனிமேலும் குறை வராது. நீங்கள் செய்வது உங்களுக்குச் சரியென்று படுகிறது. நான் செய்வதும் எனக்குச் சரியென்று தோன்றுகிறது. போங்கள், போங்கள். நான் உங்களை வெறுக்கிறேன். போங்கள்!" உஷா அழுதுகொண்டே வீட்டிற்குள் சென்று விட்டாள். நவல் சிறிது நேரம் சிலைபோல் நின்றான். அவனுடைய உள்ளத்தில் உணர்ச்சிப் புயல் வீசியது. நினைவு திரும்பியபோது ராய்பஹதூர் குரல் காதில் விழுந்தது. "ஏன் நவல், என்ன நடந்தது? நாளைக் கழித்துத்தானே நீ சிறைபுகப் போகிறாய்?"

"ஆமாம்," நவல் அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

இரவு ரம்மியமாக இருந்தது. எங்கும் வெண்ணிலவின் பால் வெள்ளம். எத்தனை மகிழ்ச்சிகரமான, கவிதாரசம் பொருந்திய சூழ்நிலை! அவன் உள்ளத்தில் தோன்றிய ஆவேசம் தணிந்துவிட்டது. எல்லையற்ற அமைதி பொருந்திய ஒரு தளர்ச்சி அவனுள் அநுபவமாயிற்று. வீட்டில் அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்த வித்யா கேட்டாள்: "போய்வந்தாயா அங்கே அண்ணு?"

"ஆம், போய் வந்தேன். எல்லாத் தளைகளையும் அகற்றி விட்டு வந்தேன் வித்யா. நான் நிறுவப்போகும் புதிய வாழ்க்கை பெரும் பலி கேட்கிறது வித்யா. என் கடந்த கால பந்தங்களனைத்தையும் ஈவிரக்கம் இன்றி அடித்து நொறுக்கிவிடவேண்டியிருக்கிறது. வித்யா புன்னகை புரிந்தாள். "இல்லை அண்ணு, அந்தப் பழமை தானே நொறுங்கிக்கொண்டிருக்கிறது. அதைப் பாதுகாக்க வேண்டுமென்றால், நீ தன்னையே அழித்துக்கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, அதைப்பற்றிக் கவலைப்படுதல் வியர்த்தம். சரி, போய் சாப்பிடு."

அந்த இரவுதான் எத்தனை எத்தனை கனவுகள்! நல்லதும் கெட்டதுமான பலவிதக் கனவுகள். காலையில் நெடுநேரங் கழித்தே கண்விழித்தான் நவல். ஒன்பது மணிக்கு ஒரு காங்கிரஸ் பொதுக்கூட்டம் இருந்தது. அதில் சத்தியாக்கிரகத்தின் நோக்கத்தைப் பற்றியும், அதன் வழிமுறை பற்றியும் அறிவிப்பதாக இருந்தது. ஞானபிரகாஷ் கூட்டத்துக்குப் போகத் தயாராக இருந்தார். நவல் அவசர அவசரமாக அவருடன் புறப் பட்டான்.

இருவரும் கூட்டம் நடைபெறும் திடல் சென்று அடைந்தபோது மக்கள் வெற்றி முழக்கம் செய்து வரவேற்றனர். மேடை மீது சத்தியாக்கிரகிகள் அமர்ந்திருந்தனர். நவலும் அவர்களுடன் போய்

அமர்ந்துகொண்டான். ஆயிரம் பல்லாயிரம் கண்கள் நாட்டிற்காகத் தியாகம் செய்யும் அந்த வீரர்களை நோக்கிக் கொண்டிருந்தன. நவல் தன்னுள் ஒரு புதிய உல்லாசம் சிறுகச் சிறுகத் தோன்றிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். மேடைமீது ஏறியபோது ஏற்பட்ட பதற்றம் தீர்ந்து ஒரு புதிய உறுதி உண்டாகியது. சிறிது நேரத்துக்குள் முற்றிலும் மாறி விட்டதாக ஓர் உணர்ச்சி! எல்லையற்ற உவகையும், தளராத உறுதியும் அவன் உள்ளத்தில் நிரம்பி நின்றன.

அவனுடைய உலகமே மாறிவிட்டது. ஜ்வாலா பிரஸாத், ருக்மிணி, தம்பி, தங்கை அனைவரும் அவனுக்கு மறந்துவிட்டது. காமதாநாதை உஷாவை ஏன் ஞானபிரகாஷைக்கூட அவன் மறந்திருந்தான். முன்னால் கடல் போன்ற மக்கள் கூட்டம்! அதனுடைய பேராதரவு அவனுக்குக்கிடைந்திருந்தது, அதனுடைய நல்லெண்ணம் அவனைச் சூழ்ந்து நின்றது. அதனுடைய நம்பிக்கை அவன் மேல் சுமந்தது.

ஞானபிரகாஷும் நவலும் பொதுக்கூட்டத்திலிருந்து நேராக வீடுதிரும்பினர். வீட்டில் ஒவ்வொருவருடைய முகத்திலும் கவலை குடிகொண்டிருந்தது. ஜ்வாலா பிரஸாத் இருவரையும் அழைத்துச் சென்றார். அனைவரும் சாப்பிட உட்கார்ந்தனர். ஆனால் ஜ்வாலா பிரஸாத் மௌனமாக இருந்தார். அவருக்குச் சாப்பாடு ஓடவில்லை.

"தாத்தா, நீங்கள் ஏன் ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்?"

"நவல் எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. உலகம் எப்படி மாறிப்போய்விட்டது? நீ நாளைக்குச் சிறைக்குப் போய்விடுவாய்! நான்கு நாட்களுக்குப் பிறகு ஞானு போகப்போகிறான். பிறகு நான் தனி."

வித்யா பரிமாறிக்கொண்டிருந்தாள். அவள் புன் முறுவல் செய்தாள். "தனி என்ன தனி? தாத்தா,

நான்தான் இருக்கிறேனே உங்களோடு! நவல் அண்ணா வீட்டில் எப்போதுதான் நிலையாக இருந்தார்? உங்களுக்கு நான் "ஸ்ரீமத் பாகவதம்" படித்துச் சொல்லு கிறேன்!"

வித்யாவின் பேச்சைக்கேட்டு ஞானபிரகாஷ் சிரித்தார். "சபாஷ் பெண்ணே, சரியாகச் சொன்னாய். அண்ணா, இந்த மோகத்தை விடுங்கள். .சந்தோஷமாக எங்கள் கடமையைச் செய்ய விடை கொடுங்கள். எங்கள் பக்கம் தருமம் இருக்கிறது, கடவுள் இருக்கிறார்."

"ஆம் ஞானா, உங்கள் கட்சியில் தருமம் இருக்கிறது, கடவுளும் இருக்கிறார்; ஆகவேதான் நான் உங்களைத் தடுக்கவில்லை. ஆனால் என் மனம்...ம்...அதை என்ன செய்வது?"

"மனதைக் கல்லாக்கிக்கொள்ளுங்கள் தாத்தா. அதிக மாகப் போனால் ஆறு மாதம் சிறைத் தண்டனைகிடைக்கும் எங்களுக்கு. நாங்கள் நடத்தப்போவது அஹிம்சைப் போராட்டம், அதிகம் கெடுதல் எதுவும் நிகழ்ந்து விடாது."

ஜ்வாலா பிரஸாத் ஒரு பெருமூச்செறிந்தார். "நிகழ்ந்து விடாது. ஆனால்...ஆனால்..."

"ஆனால் என்ன?" ஞானபிரகாஷ் கேட்டார்.

"ஒன்றும் இல்லை. மனிதனுடைய கையில் ஒன்றுமே இல்லை. இல்லவே இல்லை. பின் கவலை எதற்காக? நடக்க வேண்டியது நடந்துவிட்டது. அதைத் தடுக்க முடியாது." ஜ்வாலா பிரஸாத் சாப்பிட்டுவிட்டு எழுந்திருந்தபோது அவருடைய மனச்சுமை நீங்கியிருந்தது. வீட்டில் இருந்த வருத்தம் மறைந்தது.

ஏப்ரல் ஐந்தாம் தேதியன்று அதிகாலையில் நாலரை மணிக்கே நவல் தூக்கம் விழித்துவிட்டான். நான்கு புறமும் இருள் அடர்ந்திருந்தது. ஆனால், கிழக்குத்

திக்கில் சிறிது வெளிச்சம் படர்ந்திருந்தது. நவல் எழுந்து உட்கார்ந்தான். வீட்டில் அனைவரும் எழுந்துவிட்டனர். ஐந்தாம் தேதியன்று தாண்டியில் மகாத்மா காந்தி உப்புச் சட்டத்தை மீறுவதாக இருந்தார். அதே நாளன்று நாடு முழுவதிலும் பல இடங்களில் உப்புச் சட்டத்தை உடைப்பதாக இருந்தது. ஒன்பது மணிக்குக் காங்கிரஸ் ஆபீஸிலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டு ஒவ்வொரு சத்தியாக்கிரகியினுடைய வீட்டுக்கும் சென்று அழைத்து வருவதாக திட்டம். இதற்குப் பிறகு ஊர்வலம் ஊரை வலம் வந்து உப்புச் சட்டத்தை மீற சத்தியாக்கிரகிகளை இட்டுச்செல்லும்.

நவலுடைய பங்களாவிற்கு ஏறத்தாழ பத்தரை மணிக்கு ஊர்வலம் வந்தடைந்தது. கூட்டம் சுமார் இருபதாயிரம் இருக்கும். நவலுடைய பங்களாவுக்கு முன்னால் பாதையில் ஊர்வலம் வந்து நின்றது. கோஷங்கள் வானைப் பிளந்தன.

வித்யா காலையிலிருந்தே வெகு சுறுசுறுப்பாக ஆரத்திக்கான ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தாள். ஊர்வலம் வந்ததும் வித்யா நவலுக்கு ஆரத்தி எடுத்தாள். மலர் மாலை அணிவித்தாள். ருக்மிணி அங்கேயே அருகில் நின்றுகொண்டிருந்தாள். வித்யா அவளுடைய கையைப் பிடித்து நவல் அருகில் இழுத்துவந்தாள். "அம்மா, அண்ணாவுக்குத் திலகம் இடு. அவர் கிருஷ்ணன் பிறந்த கோயிலுக்குப் போகிறார். அவருக்கு விடை கொடு."

ருக்மிணியின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அவளுடைய கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. வித்யா வலிந்து தன் தாயின் முகத்தை மூடியிருந்த முட்டாக்கை அகற்றிவிட்டாள். "இது சங்கோசமடைவதற்கு நேரமில்லை அம்மா!" கூட்டம் முழுவதும் ஒரே குரலில் கோஷம் செய்தது. "நவல் கிஷோர் வாழ்க!

நவல்கிஷோருக்கு ஜே!''

ருக்மிணி அந்த வாழ்த்தொலிகளையும் ஜயகோஷத்தையும் கேட்டாள். ஒரு பெரும் கூட்டம் அவளுடைய மகனுக்குவிடை அளிப்பதற்காகத் திரண்டு வந்திருப்பதை அவள் கண்டாள். அவள் தன்னுள்ளத்தில் பொங்கிய பெருமகிழ்ச்சியை உணர்ந்தாள். அவளுடைய வருத்தம் பறந்துபோய்விட்டது. முந்தானையால் அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். தன் பிள்ளையை அணைத்துக்கொண்டு நடுங்கும் கைகளால் அவனுக்கு நெற்றியில் திலகமிட்டு ஆரத்தி எடுத்தாள்.

ஜ்வாலா பிரஸாத் வராந்தாவில் உட்கார்ந்தவாறு இதைப் பார்த்துக்கொண்டிருந்தார். பீக்கூ அவர் அருகில் நின்றுகொண்டிருந்தான். நவல் ஜ்வாலாபிரஸாத் அருகில் வந்து அவருடைய கால்களைத் தொட்டு வணங்கினான். ஜ்வாலா பிரஸாத் அவனை வாழ்த்தினார்.

''கடவுள் உன்னைக் காப்பாராக!''

பிறகு நவல் பீக்கூவின் பக்கம் திரும்பினான். ''பீக்கூ தாத்தா, ராம், ராம்! தாத்தாவைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

''போய் வா குழந்தே, நல்லா இரு. சீக்கிரமா திரும்பி வந்துடு!''

நவல் கூட்டத்தை நோக்கிச் சென்றான். வித்யா நவலுடன் நடந்தாள். ''அண்ணா, நான் கொஞ்சம் தூரம் உன்னுடன் வருகிறேன். அப்படியே நான் பள்ளிக்கூடத்துக்குப் போகிறேன். வித்யாவும் ஊர்வலத்தில் சேர்ந்துகொண்டாள்.

ஊர்வலம் முன்னேறிச் சென்றது. வீட்டில் இருந்த அனைவரும் கூடி நின்று ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுமார் அரைமணி ஆயிற்று ஊர்வலம் வாசலைக் கடந்து செல்ல. இதற்குப் பிறகு

ருக்மிணியால் கண்ணீரை அடக்கிக்கொள்ள முடிய வில்லை. உரக்க அழுதுவிட்டாள். தன் இரண்டு குழந்தை களையும் கையைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஜ்வாலா பிரஸாத் பீக்கூவுடன் வாசல் வரை வந்தார். முன்னேறிச் செல்லும் ஊர்வலத்தைக் கண் கொட் டாது பார்த்துக்கொண்டு நின்றார். ஊர்வலம் சென்று மறைந்துவிட்டது. அவருக்கு நான்குபுறமும் இருள் சூழ்ந்துகொண்டது. ஜ்வாலா பிரஸாத் பீக்கூவைப் பார்த் தார். "பீக்கூ, இதெல்லாம் என்ன நடக்கிறது ?"

"ஒண்ணும் புரியல்லே தம்பி! இந்த நவல் தானா இஷ்டப்பட்டு ஜெயிலுக்குப் போவுது. இந்த வித்யா உத்யோகம் செய்யுது! புரியல்லே தம்பி, இதெல்லாம் என்ன நடந்துகிட்டிருக்கோ."

ஜ்வாலா பிரஸாத் பெருமூச்சு விட்டார். "ஆமாம் பீக்கூ, ஒன்றும் புரியவில்லை. இந்த ஐம்பது வருஷத்தில் என்ன என்னவெல்லாம் நடந்துவிட்டது! எல்லாம் மாறிப்போச்சு! அடையாளம் தெரியாதபடி மாறிப் போச்சு! நீயும் மாறிவிட்டாய் பீக்கூ. நானும் மாறி விட்டேன். எத்தனை புதிய மனிதர் வந்துவிட்டார் களோ, எத்தனை பழைய மனிதர் போய்விட்டார் களோ, யாரறிவார்!" ஜ்வாலா பிரஸாதின் குரல் நடுங்கியது.

பீக்கூ ஜ்வாலா பிரஸாதின் கையைப் பிடித்துக்கொண் டான். "வா தம்பி, வந்து இளைப்பாறு! இதெல்லாம் கடவுளுடைய லீலை! நம்மால் ஒன்றும் ஆகாது! ஒன்றுமே புரியல்லியே!"

"புரியவில்லை பீக்கூ, இதெல்லாம் என்ன நடந்து கொண்டிருக்கிறது, ஏன் நடந்துகொண்டிருக்கிறது என்று! இந்த விதவிதமான காட்சிகள் தாமாகவே

தோன்றித் தாமாகவே மறைந்துவிடுகின்றன. இது ஏன் ?"

இரண்டு கிழவர்கள். அவர்கள் ஒரு யுகத்தைக் கண்டு விட்டனர் ; வாழ்க்கையின் பல ஏற்றத் தாழ்வுகளைக் கண்டனர் ; அவர்களிடம் அனுபவத்தின் ஒரு களஞ்சியம் இருந்தது. அவர்கள் தன்வசமற்றிருந்தனர். அவர்களிடம் எவ்வித விடையும் இல்லை. அங்கு தூரத்தில் ஆயிரக் கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் வாழ்வினால், செயலினால் உந்தப்பட்டு, புதிய தொரு மகிழ்ச்சியும், உவகையும் கொண்டவராய் புதிய தோருலகைப் படைத்திட வீறுநடை போட்டுக்கொண் டிருந்தனர்.